

JL
T5.5 m211N11
N12
160930

மாதர் போதினி

1911

# மாதர் போதினி

No. 157 ஜனவரி 1911 No. 1


## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

விக்டோரியா சக்கரவர்த்தினி அவர்களுக்குத் தங்கள் சொந்த பாஷை சாமானியமாகவல்ல இலக்கண இலக்கிய முறைப்படி வெகு திருத்தமாய்த் தெரியும். முன் மொழிந்தபடி பிரெஞ்சு, ஜர்மன் முதலிய மற்றும் ஐரோப்பிய பாஷைகளையும் நன்றாய்ப் படித்திருந்தார்கள்.

**பதவிக்குந் தகுந்த பயிற்சி.**

லத்தீன் என்னும் இலக்கிய பாஷையையும் பயின்று அதிலிருக்கிற அதி மகத்துவமான காவியங்களைக் கற்றிருந்தார்கள். கணித சாஸ்திரத்திலும் இங்கிலாந்து தேச சரித்திரத்திலும் சங்கீத விற்பனத்திலும் அவர்கள் அடைந்திருந்த தேர்ச்சி மிகவும் அதிகமென்றே சொல்ல வேண்டும். ராஜ்யத்தை ஆளப்போகிற ராணியாதலால் தேச சட்டங்களிலும் நன்றாய்ப் பயின்று அதிற் சிறந்த பாண்டித்தியம் அடைந்திருந்தார்கள். இவைகளோடு சாமானிய ஸ்திரீகள் செய்கிற வேலைகளாகிய சமையல்வேலை தையல்வேலை முதலியவைகளிலும் அவர்களுக்கு விசேஷித்த பயிற்சி இருந்தது. கொஞ்சம் படித்துத் தேறினவுடன் அடுப்புவேலையை அரோசிக்கிறவர்களும் கைவேலையைக் கசப்பாய் எண்ணுகிறவர்களுமாகிய நமது ஸ்திரீகள் இந்த ராஜ சிரோமணியின் நன்மாதிரியைப் பின்பற்றுவார்களாக.

ராஜகுமாரத்தியின் பெரிய தந்தையாகிய 4-ம் உவில்லியம் என்ற அரசன் சிலவேளைகளில் தம்மை மறந்து கோப வார்த்தைகளுக்கு இடங்கொடுப்பதுண்டு. அவருக்கு 1836-ம் ௵ ஜனன மகோற்சவம் நடக்கும்போது ஏறக்குறைய நூறு பிரபுக்களும் பெருமாட்டிகளும்

160930



விக்ரோரியா சக்கரவர்த்தினி.

JL
T55m2.11,N11

19 JAN 191
MADRAS.



விருந்து மேசையில் உட்கார்ந்திருக்கும்போது அவர் விக்ரோரியா ராஜகுமாரத்தியைச் சுட்டிக் காண்பித்து: 'நான் இதுமுதல் ஒன்பது மாசத்திற்குள் இறந்துவிடுவேனென்று கடவுளுக்குள் நம்பிக்கையாயிருக்கிறேன். நான் நல்லுலகமடையும்போது என் ராஜ்யபாரத்தை அதின் சுதந்தரக்காரியாகிய இந்த இளவரசியின் கையில் விட்டு விட்டுப் போவேனேயல்லாமல் அதை அவளுடைய தாயின் கையில் விடமாட்டேன். ஏனென்றால் அவள் தாயைத் துராலோசனைக்காரர் சூழ்ந்திருக்கிறார்கள். அவளுக்கு இவ்வி ராஜ்யபாரத்தைத் தகுதியாய்த் தாங்கும் சாமர்த்தியமுமில்லை. ராஜகுமாரத்தி என் அரமனைக்கு வர அவள் ஒருபோதும் சம்மதியாதிருப்பது எனக்குப் பெரிய நிந்தையாயிருக்கிறது. ராஜகுமாரத்தி என் சமீபத்தில் அடிக்கடி வரவேண்டியது அத்தியாவசியமல்லவா? இனி நான் முன்போல மௌனமாயிரேன். நான் அரசன்; என் கற்பனையை யாவரும் கண்ணியப்படுத்தவேண்டும். இனிமேல் ராஜகுமாரத்தியானவள் என் அரமனைக்கு எப்போதும் வரவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறதுமல்லாமல் கட்டளையிடவும் செய்கிறேன்' என்று கோடைகாலத்து இடிபோல் குமுறிச் சொன்னார். அப்போது ஆதிலையாள் என்னும் அவருடைய ராணியார் துக்கத்தினாலும் வெட்கத்தினாலும் நிறைந்து வாடின செந்தாமரைபோல் சிரசிறங்க, ராஜகுமாரத்தி வெண்மதிபோலும் தன் முகத்திலிருந்து முத்துப்போல் விழிநீர் சொரிய, கென்ற் பெருமாட்டி பொங்கி எழும்பின துயரத்தையெல்லாம் எரிமலையானது தீயை அடக்கினாற்போல உள்ளடக்கி ஒரு வார்த்தையும் உரையாமல் அவ்வரமனையை விட்டுப் போக ரதத்தை ஆயத்தப்படுத்தும்படி உத்தரவுபண்ணினார்கள். ஆனால் அங்கிருந்த மகாத்துமாக்கள் பரிந்துபேசினதால் மறுநாள் வரையும் அவ்விடம்விட்டுப் போகவில்லை. என்றாலும் துயராக்கினியானது நீறுபூத்த நெருப்புப்போல அவர்கள் உள்ளத்தைத் தகித்துக்கொண்டிருந்தது.

சக்கரவர்த்தினியின் தாயாரை அவர்கள் பெரிய தகப்பனார் கோபித்தல்.

மேற்சொன்ன வருஷம் ஜர்மானிய தேசத்துக் கோபர்க் பிரபுவானவர் தம்முடைய இரண்டு குமாரராகிய அர்னெஸ்த் பிரபுவோடும் அல்பட் பிரபுவோடும் இங்கிலாந்துக்கு வந்து ஏறக்குறைய ஒரு மாசம் கென்ற் பெருமாட்டியோடு கென்சிங்றன் அரமனையில் தங்கினார். இவர்தான் விக்ரோரியா சக்கரவர்த்தினியின் மகிமைபொருந்திய மாமனார். இவருடைய இளைய புத்திர ரத்தினமாகிய அல்பட் பிரபுதான் சக்கரவர்த்தினியைப் பிற்பாடு மணம்புரிந்தவர். அல்பட்

வரப்போதும் மணவாளன்.

பிரபுவும் அவர் அண்ணனும் ராஜகுமாரத்தியும் கென்சிங்றன் ராஜ மாளிகையில் நடமாடும்போது இரண்டு பால சிங்கங்களும் அவைகளின் நடுவே மகா அழகு பொருந்தின ஒரு பெண்சிங்கமும் புஷ்பம் நிறைந்த வனத்திலே காலடி மெல்ல வைத்து மகா காம்பீரமாய் நடந்தாற்போலிருக்கும். ராஜகுமாரத்தியின் மனமானது மூத்தவராகிய அர்னெஸ்த் பிரபுவின்பேரிலல்ல இளையவராகிய அல்பட் பிரபுவின்பேரிலேயே சென்றது. இது அவர் அதிர்ஷ்டந்தான். வேதாகமத்திலும் மூத்தவனாகிய காயீன் அல்ல, இளையவனாகிய ஆபேலே பாக்கியம் பெற்றான்; ஏசா அல்ல, யாக்கோபே பரிசுத்த ஜாதிக்குப் பிதாவானான்; யாக்கோபு தன் அந்தியகாலத்தில் 'மனாசேயையல்ல, எப்பிராயீமைத்தான் ஆசீர்வதித்தான்.' அநேக குடும்பங்களில் இளையவர்களே அதிக ஆசீர்வாதங்களை அடைகிறார்கள்.

அரசுபுரியும் பக்குவம் அடைதல்.

ராஜகுமாரத்தி 1837-ளு மேய௴ 24௳ தங்கள் 18-ம் வயசில் தேசப்பிரமாணப்படி ராஜ்யத்தை ஆளத்தக்க பிராயமடைந்தார்கள்.

## THE FOURTH WISE MAN

## நாலாவது சாஸ்திரி

பெத்லெகேமில் பிறந்த இயேசுநாதரைப் பார்க்கப்போன நமது மூன்று சாஸ்திரிகளோடு இன்னொரு சாஸ்திரியும் கிழக்கிலிருந்து புறப்பட்டான் என்பது கர்ணபரம்பரை. அவனும் அநேக திரவியங்களைக் கொண்டுபோய் லோக ராஜாவாகிய அச்சிறு குழந்தைக்குக் கொடுக்க ஆசைப்பட்டான். ஆனால் அவன் ஏன் போய்ச் சேரவில்லை என்பது பின் வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கிலே நட்சத்திரத்தைப் பார்த்து அந்த நாலு சாஸ்திரிகளும் ஊரைவிட்டு ஒட்டகத்தின்மேலேறி வனாந்தர வழியாய்ப் போனார்கள். ஒருநாள் அவர்கள் ஒரு கிராமத்துக்குப் போனார்கள். அங்கே பெரிய ஒரு கலகம் இருப்பதாக அறிந்தார்கள். சில அடிமை வியாபாரிகள் ஒரு வாலிபப் பெண்ணைப் பிடித்து அவளுடைய தகப்பன்பட்ட கடனைத் தீர்க்க அவளை அடிமையாக விற்கப்போனார்கள். அவளைப் பெற்றோரும் அயலாரும், கண்ணீர்விட்டு மிக வருந்தி, அவளை விட்டு விடும்படி வியாபாரிகளை வேண்டிக்கொண்டார்கள். இந்த நாலு சாஸ்திரிகளைக் கண்ட அப்பெண் அவர்களிடம் ஓடிப்போய், காலில் விழுந்து தன்னை இரட்சிக்கும்படியாக அவர்களைக் கெஞ்சிக் கேட்



டாள். ஆனால் அவர்களில் மூன்று பேரும் 'நாங்கள் தூரதேசம் போகிறவர்கள். தங்கமுடியாது,' என்று சொல்லி, ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மற்ற நாலாவது சாஸ்திரியோ அச்சிறு பெண்ணின் வருத்தத்தைப் பார்த்து இரக்கங்கொண்டவனாய்,




ஒட்டகத்தைவிட்டுக் கீழே இறங்கி, வியாபாரிகளைக் கடன்தொகை எவ்வளவென்று கேட்டான். அதுவோ வெகு அதிகமாயிருந்தது. அவனிடம் இருந்த பணம் எல்லாம் கொடுத்தாலும் பாதியும் ஆகாது. அதனால் அதைத் தீர்க்கக் கொஞ்சம் பின்வாங்கினான். மறுபடியும்

யோசித்துத் தான் ராஜாவுக்காகக் கொண்டுபோன விலையேறிய இரத்தினக்கற்களில் ஒன்றைப் பையிலிருந்து எடுத்து வியாபாரிகளுக்குக் கொடுத்துக் கடனைத் தீர்த்து அந்த ஏழைகளை இரட்சித்தான். அதனால் அவர்களுக்குண்டான சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது.

பின் தன் தோழர் மூன்றுபேரும் போன தடத்தைப் பின்பற்றிச் செல்ல இந்த நாலாவது சாஸ்திரியும் புறப்பட்டான். ஆனால் அப்போது மிகுந்த இருட்டாயிருந்தது. அதனால் அவர்களுடைய அடிச்சுவடுகள் தெரியாமல் இராமுழுவதும் அங்கேயே தங்கியிருந்தான். விடிந்ததும் எழுந்திருந்து வெகு தீவிரமாய்ப் போனான். அப்படி அந்த நாள் முழுவதும் ஓடியும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை.

ஆகவே மூன்றாம் நாள் 'இன்றைக்காகிலும் அவர்களைச் சந்திப்பேன்' என்று எண்ணி அடுத்த ஊருக்குப் போனான். அங்கே விசாரிக்க, கலகமே காதுக்கு எட்டியது. சங்கதி இன்னதென்று பார்க்கையில் அன்று காலை ஒரு கூட்டக்கள்ளர் வந்து வீடுகளில் கன்னமிட்டுப் பெண்டுபிள்ளைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டது தெரிய வந்தது. உடனே அந்த சாஸ்திரி மனம் உருகி 'இந்த ஏழைகளுக்கு எப்படியாவது உதவி செய்வேன்' என்று இன்னும் தன்னிடமிருந்த இரண்டு மூன்று இரத்தினக்கற்களை அவர்களுக்குக் கொடுத்து 'இவற்றைக்கொண்டு உங்கள் மனைவி மக்களை விடுவித்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி மறுபடியும் புறப்பட்டுப் போனான்.

இவ்விதமாக ஒவ்வொருநாளும் அவன் போன வழியில் எல்லாம் ஏழைகளுக்கு உதவிசெய்யத் தன் பிரயாணத்தை நிறுத்தி, தான் கொண்டுபோன பொக்கிஷத்தையும் செலவழித்து, அநேக வருஷம் கழித்தான். அவனோடுகூடப் புறப்பட்ட சாஸ்திரிகளோ வெகு நாளைக்கு முன்னதாகவே பெத்லெகேம் போய்ச் சேர்ந்து, தாங்கள் தேடிப்போன ராஜா முன்னணையில் கிடக்கக் கண்டு, தங்கள் காணிக்கைகளைச் செலுத்திவிட்டு, வேறுவழியாய்த் தங்கள் தேசத்துக்குப் போய்விட்டார்கள். நாலாவது சாஸ்திரியோ 'அவர்கள் மூன்று பேரும் ராஜாவைப் பார்த்திருப்பார்கள்! நானும் அவரைப் பார்ப்பேனா? இப்பொழுது அவர் பெரியவராயிருப்பார்' என்று கொஞ்சம் துக்கிப்பான். ஆனாலும் சமயம் கிடைத்தபோது திக்கற்றவர்களுக்கு உதவிசெய்யாமலிருக்க அவனுக்கு மனமில்லை.

இப்படியே முப்பத்து மூன்று வருஷத்தையும் போக்கி, தானும் நரைத்துக் கிடுகிடுத்த கிழவனாய் எருசலேம் போய்ச் சேர்ந்தான். கொண்டுபோன அத்தனை பொக்கிஷத்தில் ஒரு இரத்தினக்கல் மாத்திரமே மிஞ்சியது. 'அதையாவது நம் ராஜாவுக்குக் காணிக்கையாகக்



கொடுத்துக் கும்பிடலாம்' என்று யூதருடைய ராஜா குடியிருந்த இடத்தைத் தேடிப்போனான்.

அன்று யூதருக்கு பஸ்கா பண்டிகை. அதனால் ஜனங்கள் வீதிகளில் கூட்டம் கூட்டமாய்ப் போனார்கள். சாஸ்திரி 'யூதருடைய ராஜா' என்கிற வார்த்தைகளைக் கேட்டு, கூட்டத்தாரோடு சேர்ந்து, 'எங்கே இருக்கிறார் ராஜா? சொல்லுங்கள், சொல்லுங்கள்' என்று வெகு ஆத்திரமாய்க் கேட்டான். அதற்கு அவர்கள் 'அதோ போர்ச்சேவகர் போகிறார்களே! அவர்களுடைய கைதிதான்—அந்த மலையின் மேல் அவனைச் சிலுவையில் அறையப்போகிறார்கள். நாங்களும் அந்த வேடிக்கை பார்க்கத்தான் போகிறோம்' என்று சொல்லிக்கொண்டே வெகு ஆத்திரமாய்ப் போனார்கள். சாஸ்திரி பார்த்தான் 'ஐயோ! பரிதாபம்! நான் இந்த முப்பத்து மூன்று வருஷமாய்த் தேடிய ராஜா இவர்தானோ!' என்று மனவருத்தத்தோடு போய், போர்ச்சேவகர் நடுவில் இருந்த அவரைப் பார்த்தான். அவர் தலையில் கிரீடம் இருந்தது. ஆனால் அது முள்ளினால் பின்னியதாயிருந்தது. அவரது கை இரண்டும் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. வெட்கக்கேடான மரணத்துக்குப் போனார். அவருடைய முகம்மாத்திரம் ஒரு தெய்வத்தின் முகம்போலவே இருந்தது.

அவர்கள் எல்லாரும் பட்டணத்துக்கு வெளியே போய், மலையில் ஏற ஆரம்பித்தார்கள். சாஸ்திரி துக்கக் கடலில் ஆழ்ந்தவனாய், சற்றுப் பின்னால் போனான். அப்பொழுது 'என் அருமைக் கண்மணீ! அவர்கள் உன்னைக் காவலில் வைத்தால் என் ஜீவன் போய்விடுமே! பின் நம்மை ரட்சிப்பவர் யார்?' என்ற சத்தம் கேட்டது. இதைக் கேட்ட சாஸ்திரி கனவு கண்டவனைப்போல் நின்று சுற்றிலும் பார்த்தான். போலீஸ்காரர் மூவர் ஒரு வாலிபனைக் கட்டி ஏதோ ஒரு கடனைத் தீர்க்கும்படியாக அவனை சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் பார்த்தார்கள். அவனுடைய வயதுசென்ற தாய் மார் அடித்துக்கொண்டு அவர்களைக் கொஞ்சம் இரங்கும்படியாகக் கெஞ்சினாள். ஒருவரும் கவனிக்கவில்லை. அவள் வருத்தத்தைப் பார்த்த சாஸ்திரி 'என்னிடத்திலோ ஒரு இரத்தினக்கல் இருக்கிறது; அதுவும் இப்போது நம் ராஜாவுக்கு வேண்டியதில்லை. அதைக் கொடுத்து இந்தக் கடனைத் தீர்க்கலாம்' என்று தீர்மானித்து, தான் எத்தனையோ அருமையாகப் போற்றி வைத்திருந்த கடைசிக் கல்லை எடுத்து போலீஸ்காரருக்குக் கொடுத்துவிட்டான். எல்லாம் பேசிச் சரிப்படுத்தியபிற்பாடு திரும்பவும் மலையில் ஏறிப்போனான்.

முந்தியே போயிருந்த கூட்டத்தார் மலையின் உச்சியில் நின்று, ஏதோ ஒரு பயங்கரமான செய்கையைப் பார்ப்பவர்கள்போலிருந்தார்

கள். மலையின்மேல் சிலுவை மூன்று நட்டிருந்தன. அவற்றில் சாஸ்திரி மத்தியிலிருந்ததைமட்டும் பார்த்தான். 'அதோ தொங்குகிறார்போலிருக்கிறது என் ராஜா!—எப்படியும் முட்கிரீடம் தெரியுமே. அவரைப் பார்த்துப் பேசியே தீர்வேன்' என்று தீர்மானித்தவனாய் சாஸ்திரி ஏறினான்.

ஆனால் மனச்சஞ்சலத்தினால் ஆயாசம் மேலிட்டது. ஏற முடியவில்லை. மூச்சு எடுத்தது. கஷ்டம்! என்ன செய்வான்? கண்களும் மங்கிப்போயின. காலிலும் சக்தியில்லை. தள்ளாடித் தள்ளாடிப் போய்க் கடைசியில் கண்டான். 'ஆ! என் அருமை ராஜாவே! முப்பத்து மூன்று வருஷமாக உம்மைத் தேடி, வெறும் கையோடு வந்துவிட்டேன். உமக்கு யாதொரு உதவியும் செய்ய முடியாதா! நான் உமது சாவையே பார்க்க நேர்ந்ததே!' என்று கத்திக் கதறிக்கொண்டு தரையில் விழுந்தான். மரிக்கும் தருவாயிலிருந்தான். அப்பொழுது 'மிகவும் சிறியவராகிய என் சஹோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீ எதைச் செய்தாயோ, அதை எனக்கே செய்தாய்' என்ற இவ்வருமையான வாக்கியம் அவன் செவியில் பட்டது. அவருடைய திவ்விய குரலைக் கேட்டுக் கொஞ்சம் எழுந்திருந்தான். மரணாவஸ்தையிலிருந்த தனது அருமையான ராஜாவின் முகத்தை வெகு அன்போடும் ஆவலோடும் பார்த்துக்கொண்டே இந்த நாலாவது சாஸ்திரி உயிர் விட்டான்.

## TWO CHRISTMAS SONGS

## இரண்டு கிறிஸ்மஸ் பாட்டுகள்

பல்லவி.


மனுவேலன் மாநிலம் உதித்தது
மங்கள சுபதினமே.

சரணங்கள்.

1. அனுதினம் எங்களை அணுகும் தீமைகளின்றி
கனிவுடன் காத்தவர் — நீ
உனின் மகிமை தனை மறந்தின்னிலம்
உதித்தது மா மகிமை — மனுவேலன்

2. பெத்லேகம் ஊரினில் பக்தி மரியாளிடம்
சுத்தனால் பிறந்தவர் — நீ
முத்தி பெற பக்தருக்காகவே
சித்த மிரங்கினதால் — மனுவேலன்





3. அனுதின மகிழுந்தன் திரை வுரைப்படி
உலக மனைத்தையும் படைத்தவர் — நீ
மனு உருவாய் மரியிடம் வந்த
அரிய போதனனே — மனுவேலன்

4. அலகை வலையில் சிக்கி உலகில் அலைவுபடும்
நிலையோர்க்காகவே — நீ
விலையாகவே நிலம் மீதில் உதித்திட்ட
விண்ணவராகிய பாலகனே — மனுவேலன்

ஆதி ஓலோலமே ஓலோலமே.

பல்லவி.

தாளம் தம், தம், தம், தம்
தாளம் திம், திம், திம், திம்
தாளம் தும், தும், தும், தும்
தாளம் பும், பும், பும், பும்.

1. பிறந்தாரே ஏசு பாலன் — தாளம்
2. ஆபிரகாம் கோத்திரத்தான் — தாளம்
3. கன்னிமரி சேயன் இவர் — தாளம்
4. இவர் நாமம் இம்மானுவேல் — தாளம்
5. தாவீதின் கோத்திரத்தான் — தாளம்
6. தூதர்கள் துதித்தார்கள் — தாளம்
7. உன்னதத்திலே மகிமை — தாளம்
8. தேவனுக்கு மகிமை — தாளம்
9. பூமியிலே சமாதானம் — தாளம்
10. நர்மீது மா பிரியர் — தாளம்
11. சமாதானப் பிரபு இவர் — தாளம்
12. சந்தோஷம் சந்தோஷம் — தாளம்
13. கிறிஸ்து சபை நல்ல சபை — தாளம்

## IT IS MORE BLESSED TO GIVE THAN TO RECEIVE

## வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்

'இதோ! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்' என்று தேவதூதன் இயேசுநாதர் பிறந்த நாளிலே கூறினான். இயேசுநாதர் பிறந்



தார் என்கிற செய்தி மெய்யாகவே மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கும் நற்செய்தியாம். ஏனெனில் இயேசுநாதர் நமது பாவங்களை நீக்கி நமக்கு மனச்சமாதானத்தையும் மனமகிழ்ச்சியையும் நித்திய வாழ்வையும் தருகிற இரட்சகர். இவ்விரட்சகரை யனுப்பியதில், தேவன் நமக்கு மிகுந்த அன்பைக் காட்டுகிறார். இவ்வன்பை நினைத்து கிறிஸ்தவர்கள் இயேசு பிறந்த நாளைச் சந்தோஷ நாளாகக் கொண்டாடி வருகிறார்கள். அதைப் பலவிதமாகக் காட்டலாம். நாம் இயேசு பிறந்த நாளிலே சந்தோஷத்தைக் காட்டக்கூடிய ஓர் நல்ல முறையை ஒரு சிறு சரித்திரத்தைக்கொண்டு உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஓர் பெரிய பட்டணத்தில் ஒரு ஏழை விதவை இருந்தாள். உதவி செய்ய அவளுக்கு உறவின்முறையார் யாருமில்லாததினாலே, அவள் தையல்வேலை செய்து, தனக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்க நேரிட்டது. அவள் சமையல் முதலிய வீட்டுவேலைகளையும் செய்ய வேண்டியதினாலே, அவள் நாள் முழுவதும் வெகு சுறுசுறுப்பாக உழைத்தாள். அவள் முறுமுறுக்காமல் எப்பொழுதும் குளிர்ந்த மனதோடு இருந்தாள். அவள் நாள் முழுவதும் வேலை செய்வதுமாத்திரமல்ல, தன் சிறு அறையின் சன்னல் பக்கத்தில் சட்டிகளில் சில பூச்செடிகளை வைத்து வளர்த்தாள். 'உனக்குப் போதுமான வேலையில்லையா, பூச்செடிகளுக்கும் தூரத்திலிருக்கிற கிணற்றினின்று தண்ணீர் மொண்டுவந்து ஊற்றவேண்டுமோ?' என்று அவளது அயலகத்தார் பரிகாசம்பண்ண, அவள் பூச்செடிகளில்லாமல் இருக்கத் தன்னால் முடியாது என்று சொல்வாள். இந்தியா தேசத்துப் பெண்கள் நகைகளை விரும்புவதுபோல் அவ்விதவை பூக்களை விரும்பினாள். ஒருநாள் அவளுக்கு ஒரு நல்ல ரோஜாப்பூச்செடி கிடைத்தது. ஒரு தாய் தன் குழந்தையைப் பேணி வளர்ப்பதைப்போல் அவள் அந்த ரோஜாப்பூச்செடியைப் பேணி வளர்த்தாள். டிசெம்பர் மாதத்தில் அரும்புகள் கிளம்பின. அவள் அதைப் பார்த்து, இயேசுநாதர் பிறந்த நாளிலே இந்த ரோஜாச்செடி பூத்தால், எனக்கு மெத்த சந்தோஷம், வேறே இனும் தனக்கு வேண்டியதில்லை யென்று நினைத்துக் கொண்டாள்.

டிசெம்பர் மாதம் 24-ம் தேதியும் வந்துவிட்டது. அன்று இராத்திரியில் எல்லா கோயில்களிலும் விசேஷித்த ஆராதனைகள் நடப்பது அத்தேசத்தின் வழக்கம். அவளும் கோயிலுக்குப் போய் தேவனுடைய அன்பைப்பற்றி மனம் இசைந்த ஓர் பிரசங்கத்தைக் கேட்டு தன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். அவள் கதவு திறந்து நுழைந்தபோது ரோஜாச்செடி அநேக ரோஜாப்பூக்களால் பிரகாசித்தது. அவள் அதைப் பார்த்து, அதிக சந்தோஷமடைந்து அன்பைக் காட்டு

கிற தேவனைத் துதித்தாள். அவள் ரோஜாச்செடியின் பக்கத்தில் உட்கார்ந்து சந்தோஷப்பட்டபோது தியானிக்கத் தொடங்கினாள். ‘வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறது பாக்கியமுள்ளது,’ என்று வேதம் சொல்லுகிறதே. அன்பை வாங்குகிறதினால் உண்டாகும் பாக்கியத்தை நான் இப்பொழுது அனுபவிக்கிறேன். எது பெரிய பாக்கியம்? அன்பைப் பெறுவதினால் அவ்வளவு மனச்சந்தோஷம் வந்தால், அன்பைக் காட்டுவதினால் எவ்வளவு பெரிய மனச்சந்தோஷம் வரும் என்று யோசித்து, தன் வறுமையையும், அநேகருக்கு உதவிசெய்யக்கூடிய ஆஸ்திக்காரரையும் நினைத்துப் பொறாமைப்பட்டாள். பொறாமைப்பட்டபோது அவள் கண் பூச்செடிமேல் விழுந்தது. விழவே வெட்கப்பட்டு, ‘பிறருக்குச் சந்தோஷத்தை யுண்டாக்க எனக்கு ஒன்றுமில்லையென்று நான் நினைக்கிறது எப்படி? என்னைச் சந்தோஷப்படுத்துகிற ரோஜாப்பூக்கள் பிறரைச் சந்தோஷப்படுத்த முடியாதா!’ என்று யோசித்து, ரோஜாப்பூக்களைக்கொண்டு அன்பைக் காட்டத் தீர்மானஞ்செய்து படுக்கப்போனாள்.



அடுத்த நாளிலே கோயிலுக்குப் போய் வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு, ஓர் கத்தரிக்கோலை எடுத்து, மனநோவைப் பாராமல், தான் அதிக பிரியப்பட்ட எல்லா ரோஜாப்பூக்களையும் கத்தரித்து, ஓர் பூச்செண்டு செய்து, ஒரு காகிதத்தில் ‘தேவன் அன்பாகவே இருக்கிறார்’ என்று எழுதி அப்பூச்செண்டிலே வைத்து, பெண் வைத்தியசாலைக்குப் போய் அங்கே ரோகிகளைச் சவரக்ஷணை செய்யும் ஒரு அம்மாளைக் கூப்பிட்டு, ‘ஆறுதலில்லாத ஏதாவதொரு வியாதிக்காரிக்கு இந்தப் பூச்செண்டைக் கொடுங்கள்’ என்று சொல்லி, அதை அவ்வம்மாளுடைய கையில் கொடுத்து தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்.

அக்காலத்தில் தாயானவள் ஒருத்தி அந்த வைத்தியசாலையில் அதிக வியாதியாகப் படுத்திருந்தாள். வைத்தியர்கள் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அவள் சாவுக்குத் தப்பிக்கொள்வதற்கு வழியிருந்த



தில்லை. தாயானவள் அதை யறிந்து ‘நான் இறந்துபோனால், என் பிள்ளைகளை அன்பில்லாத இவ்வுலகத்தில் யார் பார்ப்பார். என் அருமையான பிள்ளைகள் தாயின் அன்பைப் பெறாமல் வளர்ந்து கெட்டுப்போனாலும் போவார்களே’ என்று மனம் உடைந்து மயங்கி ஏங்கி பரிதாபப்படத்தக்க நிர்ப்பந்தமுள்ள நிலைமையில் இருந்தாள். ஏழை விதவை கொண்டுவந்த பூச்செண்டை அவ்வம்மாள் இந்தத் தாய்க்குக் கொடுத்தாள். ஓர் ஏழை விதவை, அக்காலத்தில் அத்தேசத்தில் வெகு அபூர்வமாயிருந்து அநேக ரூபாய் பெறக்கூடிய இந்தப் பூக்களை அன்பினால் ஏவப்பட்டுக் கொண்டுவந்த சங்கதியைத் தாயானவள் கேட்க அவள் முகம் குளிர்ந்துபோயிற்று. அவள் அப்பூச்செண்டிலே மறைந்திருந்த காகிதத்தைப் பார்த்து, அதிலே எழுதியிருந்த வார்த்தைகளை வாசித்தபோது மனச்சஞ்சலத்தினால் வாடிப்போன அவளது முகம் முழுவதும் மாறிப்போயிற்று. ‘நான் என் பிள்ளைகளை நினைத்து மயங்குவான் ஏன்? தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் என் பிள்ளைகளைக் காப்பாற்றுவார்’ என்று நம்பி, அன்பான தேவனின் காத்தில் தன் பிள்ளைகளை ஒப்புவித்து, செபித்து மனச்சமாதானத்தையும் ஆறுதலையும் சந்தோஷத்தையு மடைந்தாள். இவ்வாறுதலான நிலைமையில் அத்தாயானவள் 2-ம் நாளில் இறந்தாள். இப்படி விதவை தனக்கு வெகு பிரியமான ரோஜாப்பூக்களைக்கொண்டு அன்பு காட்டவேண்டும் என்று விரும்பி வைத்தியசாலைக்குக் கொண்டு போனது. உலகத்தில் அன்பு இல்லையென்று மயங்கின ஒரு தாயானவள் அன்பு உண்டு என்று கண்டு நம்பிக்கையோடு தன் பிள்ளைகளை விட்டுப் பரலோகத்திற்குப் போவதற்கு ஏதுவாயிருந்தது.

வைத்தியசாலையின் அம்மாள் ரோஜாச்செண்டைக் கொண்டுவந்த விதவைக்கு அச்செண்டினாலுண்டான பெரிய ஆசீர்வாதத்தை அறிவித்தாள். இச்செய்தியை யறிந்த விதவை, ரோஜாச்செடியின் பக்கத்தில் முழங்காற்படியிட்டு தான் ரோஜாப்பூக்களைப் பெற்றுக்கொண்ட பாக்கியத்துக்கும் ரோஜாப்பூக்களைத் தொடுத்த பாக்கியத்துக்கும் தேவனைத் துதித்துச் செபித்து பேரானந்தத்துக்கு மூன்றுசியாகிய மனச்சந்தோஷத்தை யடைந்து, அன்பைக் காட்டுவதற்குச் சமயமிருந்தால், அன்பைக் காட்டத் தீர்மானஞ்செய்து, அதின்படி நடந்து, அடிக்கடி இராசாக்களுக்கும் வராத பாக்கியத்தை அனுபவித்தாள்.

அன்பைப் பெறுவது பாக்கியத்துக்கு ஏதுவாயிருக்கிற தென்பதற்கு அன்பின் பண்டிகையாகிய இயேசு பிறந்த நாளிலே எத்தேசத்திலும் காணப்படும் சந்தோஷமே அத்தாட்சி. நீங்களும் அந்நாளிலே தரிசனமான தேவனுடைய அன்பை உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டு பாக்கியத்தை யடைவீர்களாக. நீங்கள் இப்பாக்கியத்தோடு

இன்னொரு பாக்கியத்தையும் ருசிக்க முயலுங்கள். இப்பாக்கியம் அன்பைப் பெறுதலினின்று உதிக்கும் அன்பைச் செய்தலாம். அன்பைக் காட்ட எல்லாருக்கும் போதுமான பொருள்களுண்டு. பணம் நகைகள் உங்களுக்கிராவிட்டாலும் ஒரு பூ இருக்கும். அதுவுமிராவிட்டால் உங்களுக்கு கை, வாய் முதலியவைகள் இருக்கின்றன அல்லவா? அவைகளை அன்பின் கருவிகளாக எண்ணி இயேசு பிறந்த திருநாளை அன்பைப் பெறுகிற நாளாகவன்றி அன்பைச் செய்கிற நாளாக்கியும் கொண்டாடுங்கள்!

## THE CHRISTMAS TREE

## கிறிஸ்து ஜயந்தி திருநாட் கதை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

திருக்குறள்.

உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.

'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'

சென்னப்பநாயக்கனூர் என்பது மதராஸைப்போல விசேஷித்த ஒரு பெரிய பட்டணம். அதன் வடக்குத் தெருவிலுள்ள ஒரு பெரிய மெத்தை வீட்டுக்குப் பக்கத்தில், ஒருநாட் காலை சிறு பையன்களும் பெண்களும் மண்ணினால் அழகாய் வீடுகட்டி, மண்சோறு சமைத்து வெகு சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் நேர்த்தியான பொம்மைகளை வைத்து விளையாடினர். பையன்கள் கோலியும் பந்தும் ஆடினார்கள். வேறு சிலர் வாத்தியக் கருவிகளை ஊதினர். பலரும் பலபல சாமான்களை வைத்திருந்தார்கள். எல்லாருக்கும் வெகு சந்தோஷம். அன்று பள்ளிக்கூடங்களுக்கு ரஜாவானதால் அநேகர் வந்து விளையாடினர். அப்பொழுது சீனிவாசகம் "'ஹிப், ஹிப், ஹுர்ரா!' பள்ளிக்கூடம் இல்லை; கிறிஸ்மஸ் வரப்போகிறது. என்ன ஆனந்தம்" என்று சொல்லிக்கொண்டு ஆடினான். மற்றப் பிள்ளைகளும் சந்தோஷப்பட்டுக் கூச்சலிட்டார்கள். எல்லாரும் தங்கள் தங்களுக்கு, மிஷனரிமார், பெற்றோர், ஸ்நேஹிதர் முதலாயினோர் கொடுத்த பல பொருள்களைப்பற்றிப் பெருமை பாராட்டினார்கள்.



திடீரென்று இந்த நேர்த்தியான பாட்டுச் சத்தம் பக்கத்துக் கோயிலிலிருந்து வந்தது

'ராஜன் தாவீதூரிலுள்ள
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே
மாதா மரியம்மாள் தான்
பாலன் யேசுகிறிஸ்து தான்'

இதைக் கேட்டதும் எல்லாரும் விளையாட்டை விட்டுவிட்டுப் பாட்டையே உற்றுக் கேட்கலாயினர். பக்கத்தில் வெகு ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் ஞானமுத்து என்னும் ஒரு பையனிடம் ஓடி வந்து 'என் அண்ணா! இதைப் பாடு, எனக்கு விளங்கவில்லை' என்று கேட்டான். அதற்கு ஞானமுத்து 'என்னப்பா! இது உனக்குத் தெரியாது! கிறிஸ்மஸ் ட்ரீ (Christmas Tree) ஆச்சுதே' என்றான். 'எனக்குத் தெரியாதண்ணா' என, ஞானமுத்து 'நீ எந்த ஊரப்பா?— புதிதாயிருக்கிறது. கிறிஸ்மஸ் ட்ரீ உனக்குத் தெரியாது! உன் பேர் என்ன?' என்று கேட்டான். அதற்கு அவன் 'என் பேர் மேகவர்ணம். நான் புதியவன்தான். இதெல்லாம் எனக்குத் தெரியாது; அதனால்தான் கேட்டேன்' என்றான். அப்போது ஞானமுத்து 'அப்பா! வருஷந்தோறும் கிறிஸ்மஸ் அன்று மிஷனரிமார் எங்களுக்கு இனாம் கொடுப்பார்கள். ஒரு மரக்கிளையில் நேர்த்தியான பொருள்கள் பல தூக்கியிருக்கும். அதில் தொங்கவிட்ட பலவர்ண மெழுகுவர்த்திகள் எரியும்போது வெகு அழகாயிருக்கும். பாட்டுகள் பாடுவோம். அப்பியாசமும் நடக்கும். பின் கிளையிலிருந்து சாமான்களை யெடுத்து, பேர்பேராய் அழைத்து அவற்றை அளிப்பார்கள்' என்றான்.

இதற்குள் பாடகர் கோயிலிலிருந்து வந்தார்கள். உடனே ஞானமுத்து அவர்களைக் கூவி யழைத்து 'இதோ பாருங்கள்! இவர்கள் ஊரில் கிறிஸ்மஸ் ட்ரீ கிடையாதாம். இதென்ன வேடிக்கை!' என்றான். இது கேட்ட அவர்களில் முக்கியஸ்தர் துரைசிங் மேகவர்ணத்தைத் தட்டிக் கொடுத்து அவன் ஊரைப்பற்றி விசாரித்தான். அதற்கு மேகவர்ணம் 'ஐயா! எங்கள் ஊர் வெகுதூரம்; சிறு கிராமம்; நாகரீகமற்றது. பிள்ளைகள் சரியானபடி வஸ்திரமுங்கூடக் கட்டார்கள். ஒரு சிறு பள்ளிக்கூடம்தான் உண்டு; பிள்ளைகளும் ஒழுங்காய் வரமாட்டார்கள். ஒரு உபாத்தியாயரும், அவர் குடும்பமும், இன்னும் இரண்டு ஏழைக் குடும்பங்கள்மாத்திரம் கிறிஸ்தவர்கள். ஞாயிற்றுக் கிழமையில் கூட்டம் வைப்பார்கள்; ஆனால் கிறிஸ்மஸ் ட்ரீ என்ன

என்று கூடத் தெரியாது. இந்த பொம்மைகளையும், விளையாட்டுச் சாமான்களையும் கண்ணாற்கூடக் கண்டதில்லை. இந்த மாதிரியெல்லாம் கொடுக்கிறதாய் இருந்தால் எத்தனையோ பேர் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்திற்கு வருவார்களே' என்றான்.

இதையெல்லாம் கேட்ட துரைசிங் 'அப்படியானால் இந்த வருஷம் அந்த ஊருக்கு நாம் சாமான்கள் அனுப்புவோம். நமக்குத்தான் வருஷந்தோறும் கிடைக்கிறதே! இவ்வருஷம் நாம் வாங்காமல் மற்றவர்களுக்கு அனுப்பினால் என்ன? நம் சங்கத்தில் இதைப் பேசுவோம்' என்றான். அதற்குள் நவநீலம் 'என் அண்ணா காத்திருக்கவேண்டும். இப்பொழுதே தீர்மானம் செய்வோம். நான் ஒரு பொம்மை கொடுக்கிறேன். இன்னும் வைத்திருக்கிறவர்கள் யாருங் கொடுக்கலாம். பொருள் இல்லாதவர்கள் அரையணா ஒருஅணா கொடுத்தால் சின்னச் சின்ன சாமான்கள், ஊதி, பொம்மை முதலியவை வாங்கிக் கொடுக்கலாம். இதோ என் பொம்மையை வாங்கிக்கொள்ளுங்கள் அண்ணா' என்று சொல்லி தன் பொம்மையைக் கொடுத்தாள். இதைப் பார்த்த மற்றவர்களும் உற்சாகமடைந்து பேனாக்கத்தி, கைத்துப்பாக்கி, பந்து, வாத்தியக்கருவி, கோலி முதலானவற்றைக் கொடுத்தார்கள். துரைசிங்கின் துண்டு நிறைந்துபோனது. எல்லாருமாகச் சேர்ந்து உபாத்தியாயரிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். உபாத்தியாயர் சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டார்.

இப்படி எல்லாரும் சந்தோஷமாய்க் கொடுத்தபோதிலும் சுந்தரசேனன் என்றவனுக்குத் தன் பொருளைக் கொடுக்க மனமில்லை. பட்டிக்காட்டிலுள்ளவர்களுக்கு இதெல்லாம் என்னத்திற்கு என்று சொன்னான். மற்றப்பிள்ளைகள் இவன் வார்த்தைகளைக் கவனிக்கவில்லை. எல்லாரும் சந்தோஷத்துடன் ஆடிப் பாடிக்கொண்டிருந்தார்கள். இவனோ தன்னயத்தால் மூடப்பட்டிருந்தபடியால் நன்மை செய்வதால் வரும் சந்தோஷத்தை அடையாதிருந்தான். அதோடு மற்றவர்களின் ஆடல் பாடல் இவனுக்கு எரிப்பைக் கொடுத்தது. ஆனதால் அந்த நாள் முழுவதும் நிர்ப்பாக்கியனாயிருந்தான். பம்பரத்தின்மேலும் துப்பாக்கியின் மேலுமுள்ள பிரியம் எல்லாம் போய்விட்டது.

இப்படி அவன் அந்தநாள் முழுவதும் வருத்தப்பட்டபின் தன் தகப்பனிடம் சொல்ல, அவர் மற்றவர்களுக்கு உதவிசெய்வதால் வரும் பாக்கியத்தைப்பற்றிச் சொன்னார். உபகாரம் பெறுபவர்க்கும் செய்பவர்க்கும் பாக்கியத்தையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கிறது என்று போதித்தார். இதைக் கேட்ட பையன் அதிகாலையில் தன் சாமான்களைக் கையில் எடுத்துக்கொண்டுபோய் உபாத்தியாயரிடம் கொடுத்தான். கொடுத்தவுடன் அவனுக்குண்டாகிய சந்தோஷத்தைச் சொல்லி



முடியாது. இவனும் மற்றவர்களும் அன்று ஆனந்தமடைந்தனர். அந்த வாரத்தில் அநேகர் காசு கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைக்கொண்டு புத்தகங்களும் பனியன்களும் வாங்கினர். வெள்ளிக்கிழமை மதியம் எல்லாரும் சேர்ந்து ஒரு பெட்டிக்குள் வைத்து பேர் எழுதி மேசவர்ணம் ஊர் உபாத்தியாயருக்கு காகிதமும் எழுதி அனுப்பிவைத்தனர்.

ஐயா அவர்கள் அறிவது: சென்னப்பநாயக்கனூர்

பாலிய சங்கத்தைச்சேர்ந்த நாங்கள் உங்கள் ஊரில் (Xmas Tree) இல்லையென்றும், பிள்ளைகளுக்கு இனாம் கொடுத்தால் நல்லதென்றும் அறிந்து இவைகளை அனுப்பியிருக்கிறோம். இவைகள் உங்களுக்குப் பிரயோஜனப்படும் என்று நம்புகிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

இப்படிக்கு,

பாலிய சங்கத்தார்.

இந்தக் காகிதத்தைக் கண்டவுடன் உபாத்தியாயருக்கு இருந்த சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. காப்பியும் குடியாமல் ரெயில்வே ரசீதை எடுத்துக்கொண்டு பக்கத்தூர் ஸ்டேஷனுக்கு ஓடி, பெட்டியை வாங்கிக்கொண்டு, ஆனந்தக்கூத் தாடிக்கொண்டு வந்தார். இதை அறியாத அவருடைய மனைவி என்ன என்று கேட்க 'இதோ நேற்றுப் பேசிக்கொண்டது ஞாபகம் இருக்கிறதா? கிறிஸ்மஸ் வருகிறது. அத்துவானக்காட்டில் இருக்கிறதுபோலிருக்கிறோம், ஒருவரும் நம்மை நினைக்கிறதில்லை. பட்டணக்கரையிலுள்ளவர்களுக்குமாத்திரம் சந்தோஷம்; நமக்கு இல்லையென்றோமே, இதோ பார்! கர்த்தர் நம்மையும் சந்தோஷமாக்கியிருக்கிறார். கிறிஸ்மஸ் ட்ரீ நாட்ட இது நிறைய சாமான் அந்த ஊர் சங்கத்தார் அனுப்பியிருக்கிறார்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாளன்றைக்கு இந்தக் கிராமத்துப் பிள்ளைகளுக்கு இனாம் கொடுத்து சந்தோஷப்படுவோம்' என்றார்.

அன்றிரவு புருஷனும் மனைவியும் அதிக சந்தோஷத்தோடு கர்த்தரைத் துதித்தார்கள். வெகுநேரம் தூங்காமல் கிராமத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளின் பேரைக் குடும்ப வரிசைப்படி எழுதிக்கொண்டிருந்தார்கள். அடுத்தநாளில் பெரிய மனுஷர் யாவர்க்கும் அழைப்புக் கடிதம் அனுப்பிவைத்தனர். அன்றிரவில் நல்ல மரக்கிளையொன்றைப் பள்ளிக்கூடத்தில் நாட்டி அதில் மெழுகுவர்த்திகளையும் இனாங்களையும் தூக்கிவைத்தனர்.

விடியற்காலத்தில் இவர்களும் கிறிஸ்தவர்களான இரண்டு குடும்பத்தாரும் தங்கள் வீட்டில் ஒன்றுமில்லாத சந்தோஷத்துடனும், பக்தி

யுடனும் ஆராதனை செய்தார்கள். குறித்தநேரத்திற்கு முன்னேயே ஜனங்களெல்லாம் வந்து சேர்ந்தனர். விளக்கைக் கொளுத்தவும் தகதகவெனப் பிரகாசித்தது. வந்திருந்தவர்களுக்குப் பிரமிப்புண்டாயிற்று. ஆச்சரியப்பட்டனர். பெரிய மனுஷரும் மற்றவர்களும் சந்தோஷமடைந்தனர். ஊர் முதலாளி சங்கரப்பக்கோன் ஒவ்வொருவர் பேராய் வாசித்தார். தேவேந்தரன் ஐயர் பிள்ளைகளுக்கு இனாம் கொடுத்தார். கோவிந்தன் என்று சொன்னவுடன் அவன் பயந்துகொண்டு வந்தான். ஆனால் ஊதியை வாங்கியவுடன் சந்தோஷத்தோடு ஊதிக்கொண்டும் குதித்துக்கொண்டும் ஓடினான். இவ்விதமாய் பால்குடிக்கிற பிள்ளைகள்முதல் பெரிய பையன்கள்மட்டுச்சும் இனாம் வாங்கினர்.

நவநீலம் கொடுத்த தூங்கும் பொம்மையைப் பார்த்த ஒரு பாட்டி ‘அடி யாத்தே! என்ன மாதிரிக் கண்ணை மூடுது, கண்ணைத் துறக்குது, வெள்ளைக்காரன்’ என்றாள். ‘இதெல்லாம் எந்தத் துரை அனுப்பினார்’ என்று ஒருவர் கேட்டார். அதற்கு உபாத்தியாயர் ‘துரைகள் அனுப்பவில்லை, நம்மைப்போலொத்த கறுப்பு மனுஷப் பிள்ளைகள்தான் அனுப்பியிருக்கிறார்கள். பாவிகளாகிய நமக்காக தேவன் தமது ஒரே பேறான குமாரனை அனுப்பினார். அவரை அடைந்த சந்தோஷத்திற்கு நன்றியாக இவைகளை அனுப்பி நமக்கும் சந்தோஷம் உண்டாகச் செய்திருக்கிறார்கள்’ என்றார். ‘‘அப்படியா? இது பெரிய ஆச்சரியமே. நம் நாட்டுப் பிள்ளைகள் இப்படிக் கொடுக்கிறதாயிருந்தால் உங்கள் மார்க்கம் விசேஷமானதுதான். இனி எங்கள் பிள்ளைகளையெல்லாம் உங்கள் பள்ளிக்கூடத்திற்கே ஒழுங்காய் அனுப்புகிறோம்’ என்றார்.

அங்கு வந்திருந்தவர்களெல்லாம் ஆனந்தமடைந்து நன்றிபாராட்டினர். பையன்களுக்குள்ளும் பெண்களுக்குள்ளும் காணப்பட்ட சந்தோஷம் கொஞ்சமல்ல. ஒரு பக்கத்தில் பம்பாச் சத்தமும், இன்னொரு பக்கத்தில் ஊதுகிற சத்தமும், வேட்டுச் சத்தமும் கேட்டது. பெண்பிள்ளைகள் பொம்மைகளை முத்தமிடுவதும், தாலாட்டுவதுமாயிருந்தார்கள். இவைகளையெல்லாம் கண்ட உபாத்தியாயரும் அவர் மனைவியும் ஆனந்தக் கண்ணீர்விட்டுக் கர்த்தருக்கு நன்றிசெலுத்தி பின்வரும் கடிதம் அனுப்பினர்.

பிரியமுள்ள சங்கத்தார் அறிவது:

நீங்கள் அன்பாய் அனுப்பிய இனாங்களுக்காக அதிக நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். எல்லாரும் மறந்துபோனார்களென்று சோர்வுற்ற எங்களை உங்கள் அருமையான பெட்டி தேற்றியது. சந்தோஷத்தால் கண்ணீர்விட்டு கர்த்தருக்கு நன்றிசெலுத்தி எங்களை மறு



படியும் வேலைக்குப் பிரதிஷ்டைபண்ணினோம். ஜனங்களுக்குள் இன்று காணப்பட்ட சந்தோஷத்தை எப்படி எழுத முடியும்! நீங்கள் காட்டிய சுயவெறுப்பினால் எங்கள் வேலைக்கு அதிக உதவிசெய்திருக்கிறீர்கள். இனி அநேகர் பள்ளிக்கூடத்திற்கு வருவதாக வாக்களித்திருக்கின்றனர். அதுமாத்திரமல்ல கிறிஸ்துவின் அன்பைக் கண்டார்கள். நீங்கள் செய்ததுபோல் எல்லாச் சங்கத்தாரும் கிராமங்களில் வேலைசெய்யும் எங்களைப்போலொத்தவர்களை நினைத்து இப்படிப்பட்ட அன்பைத் தங்கள் சுயவெறுப்பினாற் காட்டுவாராகில் சோர்ந்துபோன ஊழியரைத் தேற்றுவதோடு வேலைக்கும் அநுகூலம் செய்வார்கள். உங்கள் எல்லாருக்கும் எங்கள் வந்தனம்.

இப்படிக்கு,

நன்றியுள்ள உண்மையுடையான் உபாத்தியாயர்.

இந்தக் கடிதத்தை வாசித்த சங்கத்தாரும் சந்தோஷம் அடைந்து, சுயவெறுப்பைக் காட்டத் தங்களுக்கு உதவிசெய்த கர்த்தரைத் துதித்து இனி கிராம வேலைக்காக ஜெபிப்பதுடன் வருடந்தோறும் இப்படிப்பட்ட கிறிஸ்மஸ் இனாம் அனுப்பப் பிரயாசப்படுவோமென்று தீர்மானஞ்செய்தார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1911 ௵ ஜனவரி ௴

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஞா. | மத்தேயு | 1. 18—25 | 17 செ. | மத்தேயு | 7. 13—23 |
| 2 தி. | ,, | 2. 1—12 | 18 பு. | ,, | 7. 24—29 |
| 3 செ. | ,, | 2. 13—23 | 19 வி. | ,, | 8. 1—13 |
| 4 பு. | ,, | 3. 1— 6 | 20 வெ. | ,, | 8. 14—22 |
| 5 வி. | ,, | 3. 7—17 | 21 ச. | ,, | 8. 23—34 |
| 6 வெ. | ,, | 4. 1—11 | 22 ஞா. | ,, | 9. 1—13 |
| 7 ச. | ,, | 4. 12—17 | 23 தி. | ,, | 9. 14—26 |
| 8 ஞா. | ,, | 4. 18—25 | 24 செ. | ,, | 9. 27—38 |
| 9 தி. | ,, | 5. 1—12 | 25 பு. | ,, | 10. 1—10 |
| 10 செ. | ,, | 5. 13—26 | 26 வி. | ,, | 10. 11—23 |
| 11 பு. | ,, | 5. 27—37 | 27 வெ. | ,, | 10. 24—33 |
| 12 வி. | ,, | 5. 38—48 | 28 ச. | ,, | 10. 34—42 |
| 13 வெ. | ,, | 6. 1—15 | 29 ஞா. | ,, | 11. 1—11 |
| 14 ச. | ,, | 6. 16—23 | 30 தி. | ,, | 11. 12—19 |
| 15 ஞா. | ,, | 6. 24—34 | 31 செ. | ,, | 11. 20—30 |
| 16 தி. | ,, | 7. 1—12 | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

மாதர் போதினி

17 FEB 1911 MADRAS.

No. 158 பெப்ருவரி 1911 No. 2

## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

### பட்டாபிஷேக காண்டம்

*4-ம் உவில்லியம் அரசனின் மரணம்.*

1837-ம் ௵ ஜூன் ௴ 20௳ இரவில் ராஜகுமாரத்தியின் பெரிய தகப்பனாராகிய 4-ம் உவில்லியம் அரசன் மரணமடைய, ராஜகுமாரத்தி இங்கிலாந்தின் கிரீடத்திற்கு உரித்தாளியானார்கள். அரசன் இறந்த அன்று விடியற்காலம் ராஜகுமாரத்தி இங்கிலாந்தின் ராணியானார்கள் என்ற செய்தியைத் தெரிவிக்கும்படி காந்தர்புரி சிரேஷ்ட அத்தியட்சரும் ராஜகாரியதரிசியும் கேன்சிங்றன் அரமனைக்குப் போனார்கள். போனபோது அங்கே யாவரும் நித்திரையாயிருந்தபடியால், நந்தவனத்திலிருந்து தங்கள் காலைப்பாட்டுக்களைப் பாடின பறவைகளின் இனிய குரலைத்தவிர வேறொரு அரவத்தையும் கேட்கவில்லை. அவர்கள் தோட்டத்துக் கதவைச் சிறிதுநேரம் தட்டவும் வாசல்காக்கிற சேவகன் விழித்துக் கதவைத் திறந்து அவர்களை உள்ளே விட்டான். பின்பு அவன் அவர்கள் வரவை ராணிக்குக் கூறும்பொருட்டு அரமனையின் ஒரு அறையில் படுத்திருந்த சேவகனை எழுப்ப அவன் அவர்கள் உட்காரும்படி ஒரு அறையைக் காண்பித்தான். ஆனால் சிறிதுநேரம் ஒருவரும் வாராமையால் அவர்கள் மணியை அடிக்கவே, இன்னொரு வேலைக்காரன் வரவும், அவனைப் பார்த்து: ‘நீபோய் ராணியின் தாதியிடத்தில் நாங்கள் ராணியாரைக் காண வந்திருக்கிறோம்’ என்று சொல்லென்பதாகச் செய்தி அனுப்பினார்கள். அனுப்பியும் சிறிதுநேரம் ஒருவரும் வரவில்லை. ஆதலால் அந்த மகா புருஷர் இருவரும் திரும்பவும் மணி அடித்தார்கள். அப்போது தாதியானவள் வந்து: ‘இளவரசி இன்பமாய் நித்திரை செய்கிறபடி



THE CORONATION OF QUEEN VICTORIA.

யால் நான் அவர்களை எழுப்புதல் தகுதியல்லவே' என்க, அவர்கள்: 'ராஜ்யவிஷயமாய் ராணியைக் காண வந்திருக்கிறோம். ஆதலால் அவர்களுடைய நித்திரையும் அதற்கு இடங்கொடுக்கவேண்டும்' என்று சொன்னார்கள். உடனே அவள் அவர்கள் வந்த விஷயத்தின் இரகசி



OFFICE REGISTERED BOOKS 17 FEB 1911 MADRAS.

யத்தை உணர்ந்தவளாய் அதிக ஆனந்தத்தோடு ஓடி ராணியாருக்குத் தெரிவித்தாள். ராணியார் உடனேயே மெத்தையைவிட்டுத் துரிதமாய் எழுந்து நித்திரைச் சால்வை வெகு நேர்த்தியாகத் தோளில் தொங்க, தழைத்த கூந்தல் முதுகின்மேல் பரந்துபடிய, பாதங்களில் வீட்டிவிடும் பாதரட்சை விளங்க, கண்களிலிருந்து நீர் வழிந்தோட, தங்கள் சயனவுடையோடே செல்லவும், அந்த மகா புருஷர் தாங்கள் வந்த காரியத்தைத் தெரிவித்தார்கள். உடனே அந்த யௌவன ராணியார், பாலிய ராஜனான சாலொமோனைப்போலத் தங்கள் ஆளுகைக்குத் தேவ சகாயமும் அத்தியாவசியமென்றுணர்ந்து: 'மகா குருவே! தாங்கள் எனக்காக ஜெபிக்கவேண்டும்' என்று அத்தியட்சரை ஆசையாய் வேண்ட, மூவரும் அந்த அறையிலே முழங்காற்படியிட்டார்கள். அத்தியட்சரானவர்: 'கருணைக்கடவுளே, இந்த ராணியார் இவ்விராஜ்யத்தை ஆளுதற்கேற்ற அருளையும் வல்லமையையும் அளித்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார். நமது நேச சக்கரவர்த்தினியினுடைய ஆளுகையின் ஆரம்பம் ஜெபமே. அதினாலேதான் அவர்களுடைய ராஜ்யபாரமானது அவர்களுக்கும் அவர்களுடைய வெற்றிக்கொடிக்குட்பட்ட கோடிக்கணக்கான குடிகளுக்கும் பாக்கியமுள்ளதாயிருந்தது. நாமும் பெரிய காரியங்களையாவது சிறிய காரியங்களையாவது செய்யத் துவக்குமுன் தேவகிருபையைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதற்கு இது சிறந்த திருஷ்டாந்தமல்லவா?

பட்டாபிஷேக உரிமைத்து வருதல்.

ஜெபமே ஆளுகையின் ஆரம்பம்.

விக்றோரியா ராக்கினி தாங்கள் இங்கிலாந்துக்கு ராணியானபோது செய்த முதல் வேலை அவர்களுடைய பெரிய தாயாராகிய ஆதிலையாள் ராணிக்கு அவர்கள் ராஜநாயகனார் காலஞ்சென்று போனதையிட்டுக் கனிவான ஒரு அனுதாபக் கடிதம் எழுதினதேயாம். அதை எழுதி 'மகா ராணியாருக்கு' என்று மேல்விலாசம் இட்டார்கள். இதைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு ஆள்: 'ராக்கினி விதவை (Dowager) என்று மேல்விலாசம் எழுதவேண்டியது' என்று நீதியாய்க் கூற, அவர்கள்: 'அது எனக்குத் தெரியும், ஆனால் அதை அவர்களுக்கு எழுதுகிற முதலாம் ஆள் நானாயிருப்பது நன்றல்ல' என்றார்கள். இவ்வித ஞானம் அவர்களுக்கு இளம்பிராயத்திலேயே இருந்தது அவர்கள் விசேஷித்த தேவகிருபையைப் பெற்றதினாலேதான் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம்.

ஆளுகையில் முதற் கடிதம்.

பிற்பாடு மெல்போர்ன் பிரபு என்ற விசேஷித்த மந்திரியானவர் அவர்களிடத்தில் வந்து அவர்கள் சமுகமாயிருக்கவேண்டிய முதலாம்

கூட்டத்தில், அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைச் சொன்னதுமல்லாமல் அவர்கள் வாசிக்கவேண்டிய விஷயங்களையும் எழுதிக் கொடுத்தார். இந்தக் கூட்டமானது ஜூன்மீ 21உ கென்சிங்றன் மாளிகையிலே நடந்தது. அதிலே கூடின மகான்கள், இரண்டு ராஜப் பிரபுக்கள், இரண்டு சிரேஷ்ட அத்தியட்சர்மார், மெல்போர்ன் மந்திரி முதலியவர்களேயாம். ராணியார் அந்தப் பிரபுக்கள் சபையில் பிரவேசித்தவுடன் தலைகுனிந்து பிரபுக்களுக்கு உபசாரஞ்செய்து ஆசனத்தில் அமர்ந்து தாங்கள் வாசிக்கவேண்டிய விளம்பரத்தை வெகு தெளிவும் தைரியமுமாய் வாசித்தார்கள். அதின் சாராம்சம்: அவர்களுடைய பெரிய தந்தையாரின் மரணமானது ராஜாங்கத்தாருக்குப் பெரிய நஷ்டம் என்பதும், ராஜாங்கத்தின் பெரும்பாரத்தை அந்த இளவயசிலேயே தாங்கள் தாங்கும்படி நேர்ந்தது தங்களுக்கு வருத்தமென்பதும், கடவுளுடைய விசேஷித்த கருணையினாலல்லாமல் அந்தப் பாரத்தைத் தகுதியாய்த் தாங்குதல் தங்களால் இயலாதென்பதும், மந்திராலோசனைச் சங்கத்தாருடைய ஞானமான ஆலோசனையும் பிரஜைகளுடைய ராஜபக்தியும் அன்பும் தங்களுக்கு அத்தியாவசியமென்பதும், புரோத்தஸ்தாந்து மார்க்கத்தை நிலைநிறுத்துதல் தங்களுடைய ஓயாத முயற்சியாயிருக்குமென்பதும், யாவருக்கும் பூரணமான மார்க்க சுயாதீனம் கொடுப்பது தங்கள் கடமை என்பதுமாம். பிற்பாடு அவர்கள் தங்கள் வைதீக கடமைகளைச் செம்மையும் உண்மையுமாய் நிறைவேற்றுவதாக ஒப்பம் வைத்துக்கொடுக்கவே, அங்கு வந்திருந்த மகான்கள் யாவரும் ஒவ்வொருவராய்ப் போய், அவர்கள் கையைப் பிடித்து முத்தஞ்செய்து, அவர்களுக்கு ராஜபக்தி காண்பிப்பதாக வாக்குக் கொடுத்தார்கள்.



**ராஜாங்கம்கைப்பற்றல்.**

ஜூன்மீ 21உ விக்றோரியா ராஜகுமாரத்தியார் மகா பிறித்தானியாவுக்கும் அயர்லாந்துக்கும் ராஜாத்தியானார்கள் என்ற விளம்பரம் பிறந்தது. இந்த விளம்பர மகோற்சவம் ஜேம்ஸ் அரமனை என்கிற மகா மண்டபத்தில் நடந்தது. அதை ஸர் உவில்லியம் வூட்ஸ் (Sir William Woods) என்னும் மகாப் பிரபு பின்வருகிறபடி வாசித்தார்: 'சர்வவல்லமையுள்ள கடவுளின் சித்தத்தின்படி நாலாம் உவில்லி



யம் என்ற ராஜசிகாமணி காலஞ்சென்றுபோகவும், மகா பிறித்தானியா, அயர்லாந்து என்னும் ராஜ்யங்களின் ராஜகிரீடம் அலெக்சந்திரனா விக்றோரியா என்னும் மகத்துவமுள்ள ராஜகுமாரத்திக்கு நியாயப்படி உரித்தாயிருக்கிறபடியால், இந்த ராஜ்யத்தின் வைதீக லௌகீக பிரபுக்களாகிய நாங்கள் இறந்துபோன மகாராஜாவின் தனி ஆலோசனைக் கூட்டத்தாரோடும் மற்றும் பட்டவர்த்தனர் நகரவாசிகள் முதலானவர்களோடும் சேர்ந்து, இந்த வல்லமைபொருந்திய ராஜகுமாரத்தி நம்முடைய ராஜ்யத்திற்கு இன்றுமுதல் மகாராணியாகிறார்கள் என்கிற செய்தியை விளம்பரம்பண்ணுவதுமல்லாமல், அவர்களுக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருப்போமென்றும் உண்மையாயிருப்போமென்றும் வாக்களித்து, ராஜாக்களையும் ராஜமகிஷிகளையும் ஏற்படுத்துகிற ராஜாதிராஜாவாயிருக்கிற கடவுளானவர் இந்த விக்றோரியா மகாராக்கினியார் நம்மேல் நெடுங்காலம் சந்தோஷத்தோடே ஆளுகை செய்யக் கிருபைபுரிவாராக என்று பிரார்த்திக்கிறோம்.'

**ராஜாத்தியான விளம்பரம்.**

இதை வாசிக்கும்போது ஜனசதளங்கள்: 'கடவுளே, ராணியைக் கடாட்சிக்க' என்று கூறின ஆசியானது ஆகாயத்தைப் பிளந்துவிடுமோ வென்று சொல்லத்தக்கதாயிருந்தது. அப்போது ராணியார் தங்கள் பெரிய பாரத்தை உணர்ந்தவர்களாய் உள்ளம் உடைந்து செந்தாமரைபோன்ற தங்கள் இருவிழிகளிலிருந்தும் முத்துப்போலக் கண்ணீர்த்துளிகளை விட்டார்கள்.

**பிரஜைகளின் வாழ்த்துதல்.**

இந்தச் செய்தி ஜர்மானியாவில் எட்டவும் அப்போது கலாசாலையில் கற்றுக்கொண்டிருந்த அல்பட் பிரபுவாகிய அவர்களுடைய வருங்கால மணாளன் அவர்களுக்கு ஓர் கடிதம் எழுதினார். அதாவது: 'இப்போது நீங்கள் ஐரோப்பாவிலுள்ள ராஜ்யங்களிலெல்லாம் வல்லமைபொருந்திய ராஜ்யத்திற்கு ராணியாயிருக்கிறீர்கள். உங்கள் கரத்திற்குள்ளே உலகத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களுடைய பாக்கியம் அமைந்திருக்கிறது. இந்தப் பெரிய உத்தரவாதத்தை உத்தமமாய் நிறைவேற்ற உன்னத கடவுளானவர் உங்களுக்கு உதவிபுரிவாராக. உங்கள் ராஜ்யபாரமானது நீடித்ததாகவும் பாக்கியமும் மகிமையும் பொருந்தினதாகவும் இருக்குமென்றும், உங்கள் பிரயத்தனத்திற்குப் பதிலாய் உங்கள் பிரஜைகளுடைய நன்றியும் அன்பும் உங்களுக்குக் கிடைக்குமென்றும் நம்புகிறேன். ராஜ்யபார வருத்தத்தினால் உங்கள் மைத்துனராகிய எங்களை மறந்துவிடாமல் தயவாய் நினைத்துக்கொள்வீர்கள் என்றும் நம்புகிறேன்' என்பதாம்.

**வருங்கால மணாளனின் வாழ்த்தல் கடிதம்.**

முதலாம் கொலை பாதகனுக்கு மன்னித்தல்

அவர்கள் ராஜ்யபாரம் கையேற்றபின் ஒரு கொலைபாதகனைக் குறித்த மரணத்தீர்ப்பில் ஒப்பம் வைக்கவேண்டியிருந்தபோது அந்தக் குற்றவாளியின்மேல் கிருபைகூர்ந்து, அவனுக்கு விதித்திருந்த மரண தண்டனைப் பத்திரத்தின் மறுபுறத்திலே 'மன்னிப்பு' என்றெழுதி ஒப்பம் வைத்து அவன் ஜீவனை இரட்சித்தார்கள்.

தகப்பனார் கடனைத் தீர்த்தல்.

அவர்கள் ராணியானவுடன் நடந்த வேறொரு விசேஷம் என்னவென்றால்: அவர்கள் தங்கள் முதல் மந்திரியாகிய மெல்போர்ன் பிரபுவை நோக்கி: 'என் தகப்பனார் சிலரிடத்தில் கடன் வாங்கியிருந்தார். அது இன்னும் தீரவில்லை. அதைத் தீர்க்கவேண்டியது அத்தியாவசியம்' என்று சொல்லி, அந்தக் கடன்களைச் செலுத்திவிட்டதுமல்லாமல், கடன்காரருக்கு நன்றிக்கடிதமும் சில வெகுமதிகளும் அனுப்பினார்கள்.

அரமனை உத்தியோகஸ்தரைக் கண்டிப்பும் தயவுமாய் நடத்தல்.

விஸ்தாரமான அவர்களுடைய அரமனையிலுள்ள பலவகையான உத்தியோகஸ்தரையும் ஊழியக்காரரையும் வெகு கராராயும் தயவாயும் நடத்துவது ராணியாரின் வழக்கமாயிருந்தது. இதற்கொரு கதை உண்டு. அரமனை சம்பந்தமான பெரிய ஒரு உத்தியோகம் வகித்து வந்த ஒரு பெருமாட்டி சிலவேளைகளில் சற்றுப் பிந்தி வருவது வழக்கம். ஒரு தினம் இதைக் கவனித்த இராணியார் இதினிமித்தம் விசனமாயிருப்பதைக் கண்டு அந்தப் பெருமாட்டி, 'இன்றைக்கும் நான் சிறிது பிந்திவிட்டதினால் ராணியார் அவர்களுக்குச் சாவகாசக்கேட்டை உண்டுபண்ணிவிட்டேன்' என்று பயப்பட்டு மன்னிப்புக் கேட்க, ராணியார்: 'ஆம்; பத்து நிமிஷம் கடந்துவிட்டது. இனிமேல் இப்படிச் சம்பவிக்கலாகாது' என்க, அந்தப் பெருமாட்டி பயந்து மனக்குழப்பத்தினால் தன் சால்வை விழுவதைப் பார்த்து அதைப் பிடிக்க இயலாமல் வருத்தப்படுவதைக் கண்டு, ராணியார் தாமே அதைத் தூக்கி அந்த அம்மாள்மேலே செம்மையாய்ப்போட்டு, 'நாம் எல்லாரும் நமது கடமைகளை நிறைவேற்றுவதில் பூரணமடைவோம்' என்று தயவாய்ச் சொன்னார்கள். இது நமக்கும் உத்தமமான முன்மாதிரியாயிருக்கிறது. நாம் நமக்குக் கீழ்ப்பட்டவர்களுடைய குறைவுகளைக் கண்சாடையாய் விடாமல் அவைகளைத் திருத்த முயல்வதுமன்றி குற்றஞ்செய்தவர்களுக்கு அன்பும் பாராட்டவேண்டும்.

(இன்னும் வரும்)



## DWELLERS IN THE ABYSS

## பாதாள குடிகள்

நாம் வட இந்தியாவில் பிரயாணம் செய்தால் ரமணீயமான ஹிமயமலைகளின் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு மிகுதியும் களிக்கலாம். பனிமலை என்ற அர்த்தம் தரும் பெயரை அம்மலைகளுக்கு இட்டது சரி என்பது அப்போது விளங்கும். அவற்றின் சிகரங்களில் ஒன்றாகிய எவரஸ்ட் 29,000 அடி உயர்ந்திருப்பதைக் காணப் பிரமை தட்டும்.

இப்படி ஐந்து மைலுக்குமேல் உயர்ந்திருக்கும் உன்னதமான சிகரம் கண்ணைக் கவரும் என்பதில் சந்தேகம் என்ன! இது இப்படிப்பட்டது என்பது பள்ளிக்கூடப் பிள்ளைக்கும் தெரியும். ஆனால் பூமிக்குமேல் மலை உயர்ந்திருப்பதுபோலவே பூமிக்குக்கீழே சமுத்திரங்கள் ஆழ்ந்திருப்பதின் உண்மையை வெகுவாய்ப் பலரும் அறியார். இந்த எவரஸ்ட் சிகரத்தைப் பெயர்த்தெடுத்து சமுத்திரத்தில் வைத்தால் அது தானும் நீர்மட்டத்துக்குக்கீழே 1,000 அடிக்கு அப்பால் இருப்பதாகும். அத்தனை ஆழம் உள்ள பாகங்களும் சமுத்திரத்தில் பல உள. அவற்றுள் ஒன்று பிஜி தீவுகளின் அருகில் இருக்கிறது. அதன் ஆழம் அகாதம். 30,930 அடி.

இடுப்பளவு ஜலத்தில் முழுகினாலே தண்ணீர்ப் பாரம் நம்மால் தாங்கமுடிவதில்லை என்றால் 1,000 அடி ஆழத்தில் ஏற்படக்கூடிய பாரம் எவ்வளவாகும் பாருங்கள். ஆயிரக்கணக்கில் தான் வரும்! இதினால்தான் 'அதிக ஆழத்தில் எந்தவித ஜீவராசியும் இருக்கமுடியாது' என்று எண்ணலாயினர் பலர். பின் சில சேறுவாரி யந்திரங்களினால் ஆழமான கடல்களின் தரையிலிருந்து எடுத்த சேற்றில் அநேக பரிசோதனைகளைச் செய்து அதில் ஏராளமான ஜீவபிராணிகள் இருக்கக்கண்டனர். இப்படியாக இந்தப் பாதாள குடிகளைப் பற்றிய சில விஷயங்கள் இதம் தரும் என்றெண்ணி அவற்றைச் சிறிது விவரிப்போம்.

இவைகளுடைய வாஸஸ்தலம் வெகு விசித்திரமாகவே இருக்கிறது. இவைகள் இப்படி வெகு ஆழத்தில் குடியிருப்பது எதனால் என்று பார்த்தால், இவற்றைக் கொன்று தின்னும் பாதகப்பிராணிகள் பல தண்ணீரின் மேற்பாகத்தில் உளதால், தாங்கள் அங்கிருப்பது துர்லபம் என்றறிந்து இவ்வளவு ஆழத்தில் இறங்கியிருக்கலாம் என்று வெகுவாய் ஊகிக்கலாம். இந்தப் பாதாளத்தில் உள்ள இன்னும் ஒரு விசேஷம் என்னவென்றால், அங்கே வெகு இருட்டு. ஒளி தண்ணீரில் அதிக ஆழம் ஊடுருவிச் செல்லாது. ஆகவே சமுத்திரத்தின் ஆழத்தில் அந்தகாரமே மிகுந்திருக்கும். ஆனால் அங்கே வசிக்கும் பிராணி

களுக்கு அந்த இருட்டுக்குத் தகுந்தபடி சௌகரியங்கள் உண்டு. அவ்விடத்திலுள்ள பிராணிகளின் அவயவங்களிலேயே 'லாந்தர்' ஒவ்வொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவை ஒவ்வொன்றிலும் 'பிரகாசதம்' * (Phosphorous) என்னும் வஸ்துவைப்போல் ஒளி



தரும் ஓர்வகையான உறுப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அமைப்பு வெகு வேடிக்கையாய் இருக்கும். பாதாளத்திலே மீன்கொத்தி மீன் என்ற ஓர்வகை மீன் உண்டு. அதன் தலையில் உணர்வதற்கு மிகுதியும் உதவும் மீசைபோன்ற உருண்ட உறுப்பு ஒன்று இருக்கிறது. அந்த உறுப்பில் பிரகாசதம் சேர்ந்திருக்கிறது.

* (பிரகாசதம் என்பது அக்கினி பாஷாணம் எனவும் வழங்கும். அதைத் தண்ணீரிலேயே வைத்திருக்கவேண்டும்; வெளியே எடுத்தால் அது தீப்பற்றி எரியும். இந்த பிரகாசதம் சேர்ந்துள்ள பாகம் இருட்டில் மினுமினு என ஒளிவீசும்; மின்மினிப்பூச்சி இரவில் மின்னுவது இதன் சேர்க்கையால்தான்.)



அந்த மீசையால் அந்த மீன் பல அற்ப ஜந்துக்களை ஆசைகாட்டி மோசத்திற்குள்ளாக்குகிறது. இப்படியே ஜீவிக்கும் மீன்ஜாதி தண்ணீரின் மேற்பாகத்திலும் உண்டு. ஆனால் மேலே வசிக்கும் மீனுக்குப் பாதாள மீனைப்போல் பிரகாசத மீசையில்லை; நல்ல பிரகாச வர்ண மீசைதான் உண்டு. சிறியதும் அற்பமுமான மீன் பல இப்பாதாள பாதகன் அவயவத்தின் ஆச்சரியத்தை அறிய ஆவலோடு அதன் அருகில் செல்லும். மீன்கொத்தி மீனும் அதை ஆனந்தமாய்த் தின்றுவிடும். இன்னும் பளபள என மின்னும் பிரகாசத உறுப்புக்கள் பல உள்ள சிறகு மீன்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட பிரகாசக் கடற்பிராணி ஒன்று தந்த வெளிச்சத்திலேயே ஜீவப்பிராணி சாஸ்திரி ஒருவர் ஒரு கடிதம் எழுதவும் சாத்தியம் ஆனது. அது அத்தனை ஒளியை அளித்தது என்றால், பாதாள குடிகளின் விநோதம் இப்படிப்பட்டதென்று விவரிக்கவும் வேண்டுமோ!

இத்தனை வெளிச்சம் தரும் பிராணிகள் சமுத்திரத்தின் ஆழத்தில் இருந்தும் பாதாளம் இருள் மூடியதாகவே இருக்கிறது. இதனால் பாதாள குடிகளுக்கு கண்களால் பயன் என்ன? இது விஷயமாய் யோசிக்கையில், அவற்றில் சில, பாதாளத்தில் இருக்கும் மிகக் கொஞ்ச வெளிச்சத்தையும் பயன்படுத்திக்கொள்ளத்தக்க அத்தனை பெரிய கண்ணுள்ளவையென்றும், வேறு சில சிறிதும் உபயோகமற்ற கண்ணுள்ளவை என்றும் தெரியவருகின்றன.

இப்படிக் கண் ஒளி குறையவே அதற்கு ஈடான ஸ்பரிச உணர்ச்சியின் அவசியம் அதிகரிக்கிறது. இதற்கு இசைவாக பாதாள குடிகளுக்குப் பலமான ஸ்பரிசேந்திரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் சிறகுகளில் ஒன்றோ அல்லது பலவோ வெகு உணர்ச்சியுள்ளனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பாதாள குடிகள் உட்கொள்ளும் உணவின் தன்மை என்னவென்பதை அறிய ஆசைப்படலாம். ஆழத்தில் தாவரவர்க்கமே இல்லை என்கிறார்களே! இப்படியானால் அவற்றிற்குத் தின்ன என்னதான் இருக்கிறது? ஏன்! தண்ணீரின் மேற்பாகத்தில் அழியும் அற்ப பிராணிகள் எப்படியும் ஆழ்ந்தே தீரவேண்டும். அவை வரும்வரையில் காத்திருக்கவேண்டியதுதான். அல்லது அவைதாமே ஒன்றையொன்று கொன்று தின்னவேண்டும். இருந்தாலும் பாதாள வாஸிகளுக்குப் போதுமான உணவு கிடைப்பது சகஜமல்ல. ஆனால் அவற்றிற்கு மிகவும் பெரியதாய் விரியும் தன்மையுள்ள வயிறு இருப்பதால், அருமையாய்க் கிடைக்கும் உணவை வேண்டும் வேண்டாம் என்னும்படி அத்தனை அதிகம் தின்றுகொள்ளும். அதனால் பின் வெகுநாளைக்குப் பசியெடுக்காதுபோலும்.

இப்படி ஆழத்தில் இருப்பதால் இவைகளுக்கு யாதொரு அபாயமும் இருக்காது என்று நினைக்கிறீர்களோ? அபாயம் அற்ற வாழ்வு எங்கும் கிடையாது. ஏறக்குறைய எல்லாப் பாதாள பிராணிகளுக்கும் காற்றுப்பை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பையிலுள்ள காற்றின் அமுக்கல் ஆழத்தில் வெகு அதிகமாய் இருக்கும். பாதாள மீன் ஒன்று இரைக்காக மேலே வெகுதூரம் கிளம்பிவிட்டால் அதன் பையிலுள்ள காற்று அதிகமாகப் பரந்து அதிக லேசாய் உயர உயரக் கிளம்புவதனால் மீன் தண்ணீரின் மேற்பாகத்துக்கு வரவேண்டியதாகலாம். இதனால் இவ்வளவாக விரிந்த பை உடைபட்டு பிராணனுக்கு மோசம் ஆய்விடும். அப்படி இறந்த பிராணிகள் சமுத்திரத்தில் மிதப்பதைப் பலமுறை கண்டிருக்கிறார்கள்.

நாம் இதுவரைக்கும் சொல்லியதிலிருந்தே நாம் சாதாரணமாய் எண்ணுகிறபடி சமுத்திர பாதாளம் பிராணிகளற்ற வெறுமையான ஒரு பாழும் பாகமல்ல என்பது விளங்கும் என்று நம்புகிறோம்.

## ST. CHRISTOPHER

## கிறிஸ்தாபரஸ் ஞானி

ஒருகாலத்தில் ஒரு பலத்த ராக்ஷசன் இருந்தான். அவன் பெயர் ‘ஆபரஸ்.’ ஆபரஸ் என்றால் ‘சுமப்போன்’ என்று அர்த்தம். அவன் தான் வெகு பலசாலி என்றும், அதனால் தான் உலகில் உள்ள ராஜாக்களெல்லாரிலும் வலுத்த பெரிய அரசனுக்குத்தான் ஆளாவேன் என்றும் வெகு பெருமை பாராட்டி வந்தான். அப்படியே தான் மிகப் பெரிய ராஜன் எனச் செவ்வையாய் அறிந்த ஒரு மஹாராஜனுடைய வேலையில் அமர்ந்தான். அந்த ராஜனும் தான் இவ்வுலகில் எவனுக்கும் அஞ்சுவதில்லை என்று பெருமையாய்ச் சொல்வதை ஆபரஸ் பலமுறை கேட்டிருந்தான்.

இப்படியிருக்க, ஒருநாள் அரசன் ஒரு விருந்திட்டான். எல்லாரும் சாப்பிட்டுவிட்டுச் சந்தோஷமாக வேடிக்கையிலும், கேலியிலும் களிப்புற்றிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் சாத்தான் என்ற பிசாசின் பேரும் இடையில் வந்தது. அப்போது அரசன் முகம் மனக்கிலேசத்தால் வெளுத்தது.

இதையெல்லாம் தன் எஜமான் பின்னால் கவனித்துக்கொண்டிருந்த ஆபரஸ் ‘இதென்ன இது! எப்படிப்பட்டவனாக இருந்தாலும் தாங்கள் அவனுக்குப் பயப்படலாமா?’ என்றுபசரித்தான்.

‘ஆம். அவன் ஒருவனைக் கண்டால்தான் எனக்குப் பயம்,’ என்றான் அரசன்.



உடனே ஆபரஸ் தான் நிந்திக்கப்பட்டாற்போல் ‘அப்படியானால் அவனை என் எஜமான்முன் கொண்டுவந்து நிறுத்துவேன்’ என்று சொல்லிக்கொண்டு ஒருபுறமாய்த் திரும்பினான். இப்படியாகப் பலவானுக்கே பணிவேன் என்றிருந்தவன் சாத்தானுடைய உற்ற ஊழியக்காரனாயினன்.

இதனால் ஆபரஸும் சாத்தானும் இருவருமாகச் சேர்ந்து சிலகாலம் உழைத்தார்கள். துற்கிருத்யங்களைச் செய்வதிலும் மனுஷர் மனதிலே துர்எண்ணங்களை உண்டுபண்ணுவதிலும் மகிழ்ந்திருந்தார்கள். இவர்கள் போன இடம் பாழ்; பார்த்த இடம் எல்லாம் பரிதாபமாக இருக்கலாயின.

ஒருநாள் இரவு மானக்கேடான ஓர் காரியத்தைச் செய்துவிட்டு தாங்கள் கெட்ட வழியில் சம்பாதித்த லாபங்களையும் பார்த்துச் சிரித்துக்கொண்டு திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். அந்த வழியில் எங்கும் ரம்மியமான பசும்புதர்; நடக்க ஒற்றையடிப் பாதையே இருந்தது: வெளிச்சமும் அதிகம் இல்லை. ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் மேகங்களுக்குள் இருந்து சந்திரன் வெளிப்பட்டு வந்து பிரகாசித்தது. அப்போது வழியின் பக்கத்தில் நிறுத்திவைத்திருந்த மரக்கட்டைச் சிலுவை ஒன்று தெரிந்தது. இதைக் கண்டதும் சாத்தான் பயந்து நடுங்கி ஆபரஸைத் தன் பின்னால் வரச்சொல்லிக்கொண்டே ஓட்டம்பிடித்தான். ஆபரஸும் அதிக ஆச்சரியப்பட்டுத் திகைத்துச் சிலுவையைப் பார்த்தான்; பின் தன் எஜமானைப் பார்த்தான்; பல பல கேள்வி கேட்கலானான்.

‘அதென்ன? அது சிலுவை? அதென்ன செய்யும்? நம்மைக் கெடுக்குமா? நீங்கள் ஏன் அப்படி ஓட்டம் எடுக்கிறீர்கள்?’

அதற்கு சாத்தான் ‘நான் பயப்படும் ஒருவருடைய அடையாளம் இது; அவர் திரும்ப வருவாரானால் என் பலம் அத்தனையும் பறந்துபோம்’ என்றான். இப்படியே சாத்தானிடம் சிலுவையின் விருத்தாந்தத்தை முதல்முதல் அறிந்தான்.

உடனே ஆபரஸ் ‘பலவானுக்கே பணிவிடை பண்ணுவேன்’ என்ற பிரதிக்கினை செய்தவனாகையால் எஜமான் சாத்தான் என்னுமிருவரிலும் பலவானான அவரைத் தேடி அடையும்பொருட்டுப் புறப்பட்டான்.

அநேக வருஷகாலம் காடும் மலையும், நீரும் நிலமும் ஆக வெகு இடங்களில் தேடித் திரிந்தான். வழியில் தான் சந்திக்கும் ஒவ்வொருவனையும் ‘கிறிஸ்துவை எங்கே காணலாம்! கிறிஸ்துவை எங்கே காணலாம்?’ என்ற இந்த விசாரமே விசாரமாயிருந்தான். இவனைக் கண்டு பரிகாசம்பண்ணினார் பலர்; சிரித்தார் சிலர். இன்னும் சிலர்

'கிறிஸ்து இப்பூவுலகைவிட்டு நீங்கிவிட்டார்; அவரை மனுஷருக்குள் காண்பது அரிது' என்று சொன்னார்கள்.

கடைசியாக, கிழச் சந்நியாசி ஒருவனைக் கண்டான். அவனிடம் தன் கதையையெல்லாம் சொன்னான். அதை ஆதியோடந்தமாய்க் கேட்டுச் சந்நியாசி 'அப்பா! கிறிஸ்து இந்த உலகைவிட்டு நீங்கினார் என்பது உண்மைதான். இந்த ஊனக்கண்ணால் அவரைக் காண்பது இயலாதுதான். என்றாலும், நம் சகோதரர்கள் எல்லாருக்கும் உதவுவதால் நாம் அவருடைய அடியார்கள் ஆகலாம். அதோ! அங்கே ஒரு பெரிய வேகமான ஆறு இருக்கிறது. அதைக் கடக்கும் யாத்திரிகள் பலர், அதற்குப் பாலம் இல்லாததால் கஷ்டப்படுகிறார்கள். பலர் ஆழ்ந்தும் போகிறார்கள். ஆதலால், அப்பா! அதன் கரையில் சிறு குடிசை ஒன்று கட்டிக்கொண்டு அக்கரைக்குப் போக வருவோரை நீ உன் தோளில் சுமந்துகொண்டுபோய் விடுவதையே தொழிலாகக் கொள். உன்னைப்போன்ற பலசாலிக்கு இது ஒரு பெரிதா? இப்படிச் செய்வாயானால், நீ அடைய ஆசைப்படும் கிறிஸ்துவுக்கு உண்மை ஊழியன் ஆவாய்' என்று சொன்னார்.

சந்நியாசி சொன்னபடியே ஆபரஸும் அங்கேயே குடியிருந்து கொண்டு இரவு என்றும் பகல் என்றும் பாராமல் எப்போதானாலும் 'ஆபரஸே! ஆபரஸே!' என்று எவராகிலும் கூப்பிட்டால் உடனே போய் அவரை அக்கரை சேர்ப்பான்.

இப்படி இருக்கும்போது ஒருநாள் இரவு பெரும்புயல் அடித்தது. ஏக வெள்ளம்; கரை புரண்டது; குடிசையைச் சுற்றி எங்கும் 'கோ' என்ற சத்தம் ஒலித்துக்கொண்டிருந்தது. படுத்திருந்த ஆபரஸ் சிறிதும் தூங்க முடியவில்லை. இப்படியிருக்கச் சத்தத்தோடு சத்தமாய் ஆபரஸ் தன்னைக் கூவும் சத்தம் ஒன்றும் சிறு குரலாய்க் கேட்டது. 'சரிதான்! உஸ்!' என்று சொல்லிவிட்டுச் சலித்தவன்போல் முணுமுணுத்துக்கொண்டு திரும்பிப் படுத்துக்கொண்டான். பின்னும் ஒருதரம் அந்தக் குழந்தைக் குரல் கேட்டது. உடனே தன் தற்கால எஜமானை நினைத்துக்கொண்டவனாய், எழுந்து ஆற்றங்கரையோரம் போனான். அக்குழந்தை ஒரு சிறு வாலிபனாக இருக்கக் கண்டான். 'ஆ! இவன்தானா!' என்று குனிந்து வெகு சுலபமாய்த் தோளில் ஏற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கினான்.

இறங்கி, ஆற்றில் நடக்க நடக்க, ஆற்றுப் பெருக்கும் அலையும் அதிகரித்தன. அதோடு அற்ப சுமையும் அதிக கனமாகிக்கொண்டு வந்தது. முழங்கால்மட்டுத் தண்ணீர் ஆழம், பின் இடுப்பளவு ஆனது பாரமும் பருத்த பலிஷ்டனான ஒரு புருஷனுடைய பாரமளவுள்ளதாயிற்று. ஆபரஸும் தட்டித்தடுமாறி, அவஸ்தைப்பட்டுக் கரைபோய்ச்



சேர்ந்ததும் சுமையை இறக்கி விட்டுவிட்டு இளைப்பினால் இரைப்பு உண்டாகி வருந்தினான். கண்ணைத் துடைத்துக்கொண்டு இப்புறமும் அப்புறமும் பார்த்தான். அந்தச் சிறுவனை அங்கே காணாமையால் ஆச்சரியம் அடைந்தான்.

பின்பு அருகில் ஆசானுபாகுவாக நின்ற ஒரு தோற்றத்தைக் கண்டு பிரமித்தான். அத்தோற்றம் கிறிஸ்துவின் தோற்றம் என்றும் தான் தூக்கிக்கொண்டுபோன சிறுவன் கிறிஸ்து என்றும் அறிந்து முழங்காற்படியிட்டு அவருடைய ஆசீர்வாதத்தை அடைந்தான். இப்படியாகப் பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டுக் கடைசியில் ஆபரஸ் தன் எஜமானை அடைந்தான்.

இனி, அவனுக்குச் சொல்லப்பட்டவை இன்னின்னவை என்பதின் விபரம் விளங்கவில்லை. இருந்தாலும் 'இதுவரைக்கும் உன்னை ஆபரஸ் என்று அழைத்து வந்தார்கள். இனி உன் பேர் கிறிஸ்தாபரஸ் ஆகும்—கிறிஸ்துவைச் சுமப்போன்' என்ற இந்த ஒரே வாசகம் இருக்கிறது.

## FAITHFUL UNTO DEATH

## மரணபரியந்தம் உண்மையுள்ளவள்

பத்துவருஷங்களுக்குமுன் சீனா தேசத்தில் சௌஷிமாவ் என்னும் பெயர்கொண்ட கிறிஸ்தவனும் அவன் தாயும் அவன் மனைவியும் மூத்த சகோதரியும் இருந்தார்கள்.

கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதிகளாயிருந்த சண்டாளர் சிலர் அந்தக் கிறிஸ்தவனுடைய வீட்டினுட் புகுந்து அங்கிருந்த அவனுடைய பொருட்களை யெல்லாம் அபகரித்ததுமல்லாமல் அவனையும் அவன் தாய், மனைவி, சகோதரி இவர்களையும் பிடித்துக் கட்டி இன்னொரு ஊரிலிருக்கும் தங்கள் தலைவனிடம் இழுத்துக்கொண்டு போனார்கள். அத்தலைவன் இவர்களை இவர்கள் ஊருக்குக் கொண்டு போய், அங்குள்ளவர்களையும் பயமுறுத்தும்படி இவர்களை அங்கே தானே கொன்றுபோடுங்கள் என்று உத்தரவு கொடுத்தான். அந்தச் சண்டாளர் இவர்களைத் திரும்ப ஊருக்குக் கொண்டுபோகும் போது இவர்கள் 'இயேசு நம்மை நடத்துகிறார்' என்ற பாட்டைப் பாடிச் சந்தோஷமாய்ப் போனார்கள். ஊருக்குவந்ததும் எல்லாரும் பார்க்க, அந்தச் சண்டாளர் பட்டையத்தை உருவி அந்தக் கிறிஸ்தவனைச் சிரச்சேதம் செய்தார்கள்.

இதைப் பார்த்து அவனுடைய மாதா பயந்து இயேசுவை மறுதலிப்பாள் என்று நினைத்து அந்தக் கன்னெஞ்சர் அவளைப் பார்த்து,

'நீ இயேசுவை மறுதலிக்கிறாயா இல்லையா?' என்று கேட்க, அவள், 'என் மகனை நீங்கள் கொன்றுபோட்டீர்கள். அந்தப் பயத்தினால் என் இயேசுவை நான் மறுதலிக்கவேமாட்டேன். நீங்கள் என்னைக் கொல்லலாம்' என்று சொன்னாள். அப்பொழுது அவர்கள் பட்டயத்தினால் அவளை வெட்டிப்போட்டார்கள்.



பிற்பாடு அவர்கள் அவன் சகோதரியைப் பார்த்து: 'நீ கட்டாயம் இயேசுவை மறுதலிக்கவேண்டும்' என்றார்கள். அவளோ: 'நீங்கள் என் தாயையும் என் தம்பியையும் கொன்றுபோட்டீர்கள். இவர்கள் இயேசுவிடம் போய் இருக்கிறார்கள். நான் பிழைக்கவேண்டியதேன்? நானும் என் அருமை இரட்சகரிடம் போகவேண்டும். நான் அவரை மறுதலிக்கவேமாட்டேன்' என்று முழுத் தைரியத்தோடும்



சொன்னாள். அவர்கள் இதைக் கேட்டு உக்கிரம்பூண்டவர்களாய் அவளையும் வாளுக்கிரையாக்கினார்கள்.

கடைசியாய் அந்தப் பாதகர் சௌஷிமாவின் மனைவியைப் பார்த்து: 'நீ இப்போது நடந்ததையெல்லாம் கண்டாயே. நீ வயது சென்றவள் அல்ல. இன்னும் பல வருஷம் இருக்கக்கூடிய இளம் பெண். இவர்கள் மரித்ததுபோல் நீயும் மரிக்கமாட்டாய் என்று நம்புகிறோம்' என்று தங்களாற்கூடிய தந்திரோபாயமெல்லாம் செய்து பார்த்தார்கள். அவளுடைய புருஷன், மாமி, புருஷன் சகோதரி இவர்களுடைய திரேகத்திலிருந்து இரத்தம் குபீர் குபீரென்று பாய்கிறதைக் கண்டு அவள் பயந்து இயேசுவை மறுதலிப்பாள் என்றும், எல்லாரும் செத்துப்போனார்கள், இந்தப் பயங்கரக்காட்சி அவளை நடுங்கச் செய்யும் என்றும், இனி அவளுக்கு என்னதான் உறுதி உண்டாகும் என்றும் அந்தத் துஷ்டர்கள் நினைத்தார்கள். அவளோ தன் பரம பராக்கிரம கர்த்தாவாகிய இயேசுவின் வாக்கை நினைவுகூர்ந்து, 'அவரை நான் மறுதலிக்கமாட்டேன். நான் கிறிஸ்தவளாயிருக்கிறேன், கிறிஸ்தவளாய் மரிப்பேன்' என்று சொல்லி மரித்தாள்.

உண்மையும் உறுதியும் உள்ள இந்த ஏழைக் கிறிஸ்தவர்கள் மரிக்கும் தறுவாயில் தமது தொண்டருக்கு எஜமானும் இராஜாவுமாகிய இயேசு பெருமான் நித்திய ஜீவகிரீடத்தை அவர்களுக்குக் கொடுத்தார் என்பதிற் சந்தேகமேயில்லை.

## Reviews of Books

### THE SHEPHERD AND THE SHEEP

**By Mr. C. Arumanayagam**

### 'ஆயனும் ஆடும்'

என்ற புத்தகம் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அருமையான புத்தகம். அதின் ஆக்கியோனை அறிந்தவர்கள் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ள இனிய தமிழ் நடையைப்பற்றி எவ்வளவேனும் சந்தேகப்படவேண்டியதில்லை. கிறிஸ்தவர்களுக்குள்ளும் பிரசங்கிமாருக்குள்ளும் இருக்கப்பட்ட குறைகளை இவ்வளவு தெளிவாய் எடுத்துக் காட்டியுள்ள புத்தகம் தமிழில் இதுவரையிலும் இல்லை. கடமைக்கென்று தங்களுடைய வேலைகளை நடத்திவரும் பிரசங்கிமாரும் போதகர்மாரும் இப்புத்தகத்தை வாசிப்பார்களானால் உண்மையாகவே தங்கள் ஊழியத்தின் உத்தரவாதத்தை உணர்ந்துகொள்வார்கள், அல்லது தங்கள் வேலையை விட்டுவிட்டு லௌகீக வேலையில் பிரவேசிப்பார்கள். சபையில் ஆவியின் எழுப்புதல் வந்தாலும் பிரசங்கிகள்

சிலவேளைகளில் கடின நெஞ்சுடையவர்களாகவே இருக்கிறார்களென்பதற்கு யாக்கோபு பிரசங்கியார் நல்ல திருஷ்டாந்தம். சொற்ப வயசாயிருந்தாலும் மெய்யாய்க் குணப்பட்ட தேவ ஊழியக்காரனின் ஊழியம் ஆசீர்வாதமாகுமென்பதற்கு இஸ்ரவேல் பிரசங்கியார் நல்ல உதாரணம். ஐயோ! நமது நடுவிலிருக்கும் தேவ ஊழியர் எத்தனையோ பேர் சம்பளம் சரியாய்வந்தால் போதுமென்று நினைத்து மிஷனெரிமாரைத் தெய்வமாகக்கொண்டு காலம்கழித்து வருகிறார்கள். இவர்கள் இப்புத்தகத்தைக் கவனத்தோடு படித்துக் குணப்பட்டு இஸ்ரவேல் பிரசங்கியாரைப்போலாவார்களானால் ஆண்டவர் நாமம் மகிமைப்படும்.

சபையாருக்குள் கோவிலுக்குப்போகிறவர் எத்தனைவித நோக்கங்களோடு போகிறார்களென்பதைப்பற்றிக் காட்டியிருப்பது மிகவும் சத்தியம். இந்தக் காலத்தில் அநேக சபைகளுக்குள் அப்படிப்பட்டவர்களுண்டு. கோவிலிலிருக்கும்போது உண்டாகும் நினைவுகளும் பேசிக்கொள்ளும் பேச்சுக்களும் கிறிஸ்தவ சபைகளுக்கு வெட்கத்தை உண்டாக்கத்தக்கவைகள். நமது சபைகளில் எத்தனையோ கெட்டிமுத்துக்களிருக்கிறார்கள். அவர்கள் இன்ப முத்தைப்போலாவார்களானால் சபைகளுக்குப் பெரும்பாக்கியமே.

சபைகளில் பற்பல ஆடுகளைப் பற்பலவிதமாய் ஆதாயம் பண்ணலாமென்று மிகவும் தெளிவாய்க் காட்டியிருக்கிறது. இப்புத்தகத்தை வாசிக்கும் பிரசங்கிமாருக்கும் போதகர்மாருக்கும் சபையாருக்கும் இது தேவ ஒத்தாசையால் மிகுந்த பயனை விளைவிக்கும் என்று ஐயமின்றிச் சொல்லலாம். இதை எழுதிய கனம் அருமைநாயகம் என்பவருக்குத் தமிழ் கிறிஸ்தவர்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஞு பெப்ருவரிமீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | சங். | 1. | 10 | வெ. | சங். | 9. 1—10 | 19 | ஞா. | சங். | 19. |
| 2 | வி. | ,, | 2. | 11 | ச. | ,, | 9. 11—20 | 20 | தி. | ,, | 20. |
| 3 | வெ. | ,, | 3. | 12 | ஞா. | ,, | 11. | 21 | செ. | ,, | 21. |
| 4 | ச. | ,, | 4. | 13 | தி. | ,, | 12,13. | 22 | பு. | ,, | 22. 1—10 |
| 5 | ஞா. | ,, | 5. | 14 | செ. | ,, | 14,15. | 23 | வி. | ,, | 22. 11—21 |
| 6 | தி. | ,, | 6. | 15 | பு. | ,, | 16. | 24 | வெ. | ,, | 22. 22—31 |
| 7 | செ. | ,, | 7. 1—7 | 16 | வி. | ,, | 17. | 25 | ச. | ,, | 23. |
| 8 | பு. | ,, | 7. 8—17 | 17 | வெ. | ,, | 18. 1—18 | 26 | ஞா. | ,, | 24. |
| 9 | வி. | ,, | 8. | 18 | ச. | ,, | 18. 19—36 | 27 | தி. | ,, | 25. 1—10 |
| | | | | | | | | 28 | செ. | ,, | 25. 11—22 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

11 MAR 1911 MADRAS


# மாதர் போதினி

No. 159 மார்ச்சு 1911 No. 3


## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

### பட்டாபிஷேக காண்டம்

நவம்பர் மாசத்தில் சக்கரவர்த்தினியார் முன்போல இரண்டு பெரிய அபாயத்திற்குத் தப்பினார்கள். ஸ்நூபர் என்ற ஒரு ஜர்மானியன் அவர்களையும் அவர்கள் மாதாவையும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொல்ல எத்தனிக்கையில் அவனைப் பிடித்து, பித்தனென்று கண்டு பைத்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். வேறொரு நாள் தெருவில் உலாவும்படி திறந்த ஓர் இரதத்தில் எழுந்தருளிய போது, ஒரு துஷ்டன் அவர்கள் சமீபத்திற் போய் பயங்கரமான தூஷண வார்த்தைகளைச் சொல்லிக் கையை மடக்கி, 'உன்னைச் சிங்காசனத்தினின்று நீக்கிவிடுவேன், உன் தாயையும் தொலைத்துவிடுவேன்' என்று சொல்லிக்கொண்டு ஓடும்போது, அவனைப் பிடித்து, புத்தி ஸ்வாதீனமில்லாதவனென்று கண்டார்கள்.

**இரண்டாபத்துக்குத் தப்புதல்.**

முன்மொழிந்தபடி சக்கரவர்த்தினி பட்டத்துக்கு வரும்போது மெல்போர்ன் பிரபு பிரதம மந்திரியாயிருந்தார். அவர் ராஜ்ய விஷயங்கள் யாவற்றையும் ராணியாரிடத்தில் விவரித்துக் கூறவேண்டும். அவர் கொண்டுவருகிற பத்திரங்கள் ஒவ்வொன்றின் சாராம்சத்தையும் அறிந்தல்லாமல் சக்கரவர்த்தினி அவற்றில் ஒப்பம் வைத்தல் கிடையாது. ஆதலால் மந்திரியானவர், 'பத்து ராஜாக்களோடு காரியங்களை நடத்திக்கொண்டு போகலாம்; ஆனால் இந்த ஒரு ராணிக்கு உத்தரவுகொடுக்க முடியவில்லையே' என்று சந்தோஷமாய்ச் சொல்லுவார். சிலவேளைகளில்

**பத்திரங்களின் சாராம்சத்தை ஆலோசித்து ஒப்பம் வைத்தல்.**

சில பத்திரங்களை வைத்துக்கொண்டு: இவைகள் மிகவும் துரிதத்தில் அனுப்பப்படவேண்டியவைகளாதலால் இவைகளுக்கு ஒப்பம் வைத்துத் தரவேண்டுமென்று திரும்பத் திரும்பக் கேட்டாலும், அவர்கள்: 'நாம் ஆலோசனை செய்தல்லாமல் அவற்றில் ஒப்பம் வைத்தல் தகுதியல்ல' என்று திட்டமாய்ச் சொல்லிவிடுவார்கள். கடவுள் ஒரு வாலிப அம்மாளுக்கு எவ்வளவாய் ஞானத்தையும் தைரியத்தையும் அளித்திருக்கிறார் பாருங்கள்!

தங்கள் நேரத்தை உபயோகித்த விதம்.

பிரதிதினமும் ராஜாங்க வேலைகள் முடிந்தபின் சக்கரவர்த்தினி படிப்பிலும், சங்கீதவாசிப்பிலும், சித்திரம் வரைதலிலும் தங்கள் நேரத்தைச் செலவுசெய்வார்கள். சங்கீத வித்தையில் அவர்களுக்கு ஆச்சரியகரமான சாமர்த்தியமிருந்தது. அதைக்குறித்து முன்னும் மொழிந்திருக்கிறோம். செந்தாமரைபோல் அழகுபொருந்திய அவர்கள் முக காந்தியோடும், கருப்பஞ் சாற்றுக்குச் சமானமான மொழி இனிமையோடும், அமிர்தத்திற்கு நிகரான அறநெறியின்பால் நின்றொழுகும் பெருந்தன்மையோடும் இந்தச் சங்கீத சாமர்த்தியமும் சேர்ந்துகொண்டது பால்பழங்களோடு பஞ்சதாரையும் சேர்ந்தாற்போலிருந்தது.

இனி சக்கரவர்த்தினியின் பட்டாபிஷேக மகோற்சவத்தைக்குறித்துச் சொல்லுவோம். இது 1838-ம் ௵ ஜூன் ௴ 28௳ அதாவது அவர்கள் ராஜ்யபாரம் ஆரம்பித்து ஒரு வருஷத்திற்குப்பின் நடந்தது. இதற்கு நிகரான மகத்துவமான காட்சி சக்கரவர்த்தினியின் ராஜ்யபார காலத்தில் நிகழ்ந்ததில்லை. இந்த மகோற்சவ சம்பந்தமாய் அநேக சடங்குகள் நடந்தேறுவது வழக்கம். அவைகளில் ஒன்று: தேசத்தின் பிரபுக்களெல்லாரும் முடிசூடுகிற ராஜாவின் இடதுகன்னத்தில் முத்தம் கொடுத்தலாம். விக்டோரியா சக்கரவர்த்தினியார் கிரீடம்

பட்டாபிஷேக மகோற்சவம்.

தரித்த அந்தக்காலத்தில் ஏறக்குறைய அறுநூறு பிரபுக்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் அந்த யௌவன சக்கரவர்த்தினியின் கன்னத்தில் முத்தியிட்டால் அவர்கள் தாங்குவார்களா? ஆதலால் ராணியார் அவர்களுக்கு மிகவும் நெருங்கிய பந்துக்களாகிய சில பிரபுக்கள் தவிர மற்றவர்கள் இந்தச் சடங்கை நிறைவேற்ற வேண்டுவதில்லையென்று விளம்பரம் உண்டானது. ராணியார் தரிக்கவேண்டிய பழைய கிரீடம் ஏழு றாத்தல் கனமுடையதாயிருந்தபடியால் அதை மூன்று றாத்தல் கனமுடையதாக மாற்றி இழைத்தார்கள். அது சிறிதாயிருந்தாலும் முந்தினதைவிட அதிக விலையேறப்பெற்றதும் அலங்காரம் பொருந்தியதுமாயிருந்தது.



OFFICE OF ... REGISTRAR
11 MAR 1911
MADRAS.


இந்த கிரீடதாரண மகோற்சவமானது உவெஸ்ட்மின்ஸ்டர் ஆபே என்ற புராதனமும் பேர்போனதுமான ஆலயத்தில் நடந்தேறிற்று. அதில் கூடியிருந்த பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், ராஜமகிஷிகள்,

அது நடந்த ஆலயம்.

பெருமாட்டிகள், குருமார், சாஸ்திரிகள் முதலியவர்களின் தொகைபெரிதாயிருந்தது. சக்கரவர்த்தினி பால்போலும் வெண்ணிறமுடைய எட்டுக் குதிரைகள் பூட்டிய ராஜரதத்தில் அமர்ந்து ஆலயத்திற்குச் சென்றார்கள். அவர்கள் இரதத்தை விட்டிறங்கி ஆலயத்துக்குட் புகுந்து தனிஜெபம் செய்தவுடன் காந்தர்புரி சிரேஷ்ட அத்தியட்சரானவர் அவர்களை ஜனங்களுக்கு முன்பாக நிறுத்தி, 'மகான்களே! இந்த ராஜ்யத்தின் ராணியாராகிய விக்டோரியா மகா ராஜாத்தி இதோ உங்களுக்குமுன் நிற்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு ராஜ மரியாதை செய்ய மனதாயிருக்கிறீர்களா,' என்று கேட்க, 'எல்லாரும் சர்வ சம்மதமாய் 'கடவுளே, விக்டோரியா ராஜமகிஷியைக் கடாட்சித்தருளும்' என்று ஆகாயம் கிழிந்துபோகத்தக்க சத்தத்தோடு ஆர்ப்பரித்தார்கள். பிற்பாடு ராப்போஜன ஆராதனை நடந்தது. அதற்குப்பின் லண்டன் பட்டணத்து அத்தியட்சர் பின்வரும் வாக்கியத்தைப் பிரசங்கித்தார்:– (2 நாளா. 34. 31.). 'ராஜா தன் ஸ்தானத்திலே நின்று, அந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின்படியே தான் செய்வதினாலே, கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணினான்' என்பதாம். சக்கரவர்த்தினி இந்தப் பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் கூர்மையாய்க் கேட்டு உணர்ந்துகொண்டார்கள். இதைக் கவனித்து அவர்களைப் புகழாத ஜனங்கள் அந்த மகா சபையில் இருந்ததில்லை. இதற்குப்பின்

அதின் விபரங்கள்.

சிரேஷ்ட கனகாணியார் சக்கரவர்த்தினியைப் பார்த்து: 'ராஜமகிஷி, இங்கிலாந்தின் அரச முறைமைப்படி நீங்கள் இப்போது சத்தியஞ் செய்யவேண்டியதிருக்கிறது; அது உங்களுக்குச்சம்மதமா' என்று கேட்க, 'அவர்கள் சம்மதந்தான்' என்று விடைபகர்ந்தார்கள். 'உங்கள் சக்திக்குத் தக்கதாகத் தேச சட்டத்தையும் நீதியையும் கிருபையையும் பரிபாலித்து நடப்பீர்களா' என்றுகேட்க, அவர்கள்: 'அப்படிச் செய்ய நான் பயபக்தியாய் வாக்குப்பண்ணுகிறேன்' என்று தெளிவாயும் உறுதியாயும் சொன்னார்கள். 'தேவனுடைய பிரமாணங்களையும் சுவிசேஷத்தையும் தேச சட்டப்படி ஸ்தாபித்திருக்கிற புரோத்தாஸ்



நாந்து சீர்திருத்த மார்க்கத்தையும் தரித்து இங்கிலாந்திலும் அயர்லாந்திலுமுள்ள அத்தியட்சர்களுக்கும் போதகர்மாருக்கும் அவர்கள் ஆதீனத்துக்குட்பட்ட சபைகளுக்கும் தேச சட்டப்படியுள்ள உரிமைகளையும் சிலாக்கியங்களையும் அபிமானித்து வருவீர்களா' என்று கேட்க, 'அப்படிச் செய்துவருவேன்' என்று சொன்னார்கள். பிற்



பாடு சக்கரவர்த்தினி தங்கள் வலதுகையைச் சுவிசேஷங்களில் வைத்து: 'நான் இப்போது வாக்குப்பண்ணின விஷயங்களை உண்மையாய் நிறைவேற்றுவேன்; தேவன் எனக்கு உதவிசெய்வாராக' என்று சொல்லி வேதாகமத்தை முத்தஞ்செய்து ஆணைப் பத்திரத்திலே கையொப்பம் வைத்தார்கள். இது முடிந்தவுடன் சக்கரவர்த்தினி தங்களுக்குமுன் முப்பத்து மூன்று ராஜாக்களும் நாலு ராணிமாரும் உட்கார்ந்து பட்டாபிஷேகம் பெற்ற ராஜ ஆசனத்தில் அமர, நாலு பிரபுக்கள் அவர்கள் சிரசின்மேலே பளபளப்பான பொன் சால்வையை விரித்துப் பிடிக்க, சிரேஷ்ட கண்காணியார் சக்கரவர்த்தினியின் சிரசிலும் கரங்களிலும் தைலாபிஷேகம் செய்து: 'மகா ராணியே, அரசரையும் ஆசாரியரையும் தீர்க்கதரிசிகளையும்போல உங்களையும் பரிசுத்த தைலத்தினால் இப்போது அபிஷேகம் பண்ணுகிறேன். சாலொமோன் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கினாலும் தீர்க்கதரிசியாகிய நாத்தானினாலும் அபிஷேகம் பெற்றதுபோல நீங்களும் தேவன் தந்த இந்த ஜனங்களை ஆளுகை செய்யும்படி அபிஷேகத்தையும் ஆசீர்வாதத்தையும் பரிசுத்தத்தையும் அடைவீர்களாக; பிதா குமாரன் பரிசுத்த ஆவியினாலே இதைச் செய்கிறேன் ஆமென்' என்று மொழிந்தார். இதற்குப் பின்னும் அநேக சடங்குகள் நடந்தன. அவைகளை விவரிக்கப்போனால் விரியும். அவற்றில் சிலவற்றைச் சொல்லுவோம். அவைகளில் ஒன்று: சக்கரவர்த்தினி ராஜாங்க மோதிரம் தரித்தலாம். அந்த மோதிரத்தை அவர்களுடைய சுண்டுவிரலுக்கு இசைவாகச் செய்திருந்தது. ஆனால் சிரேஷ்ட அத்தியட்சர் ராஜ சட்டப்படி அதை நாலாம் விரலிலேதான் தரிக்கவேண்டும் என்க, அவர்கள் அதில் செல்லாதே என்று அந்தப் பெருங்கூட்டத்தில் கிளிபோல் மொழிய, அவர்: அதிலேதான் அதை இடவேண்டும் என்று கூறி, அதில் முன்னிருந்த மோதிரங்களைக் கழற்றிவிட்டு, அதை அதில் சற்றுப் பலவந்தமாய் அணிந்தபடியால் செந்தாமரை இதழ் போன்ற அந்த விரலானது காயப்பட்டுப்போனது. நூற்றுக்கணக்கான சடங்குகளை நடத்துகிற பாரத்தோடுகூட இந்த விரல் வேதனையும் அவர்களுக்கு வெகு வருத்தமாயிருந்தது. ஆதலால் பட்டாபிஷேகச் சடங்குகள் முடிந்தவுடன் அவர்கள் அந்த விரலைப் பனிக்கட்டி நீரில் அமுக்கி அதின் வேதனையைச் சற்று தணித்தார்கள். முடி சூட்டுதற்குமுன் சிரேஷ்ட அத்தியட்சர் ராஜ செங்கோலையும் ராஜ பிரம்பையும் சக்கரவர்த்தினியின் வலதுகையில் எடுத்துக் கொடுத்து: 'ராஜ வல்லமைக்கும் நீதிக்கும் அடையாளமாகிய இந்தச் செங்கோலையும் தர்மத்திற்கும் இரக்கத்திற்கும் அடையாளமாகிய இந்தப் பிரம்பையும் ஏற்றுக்கொள்வீர்களாக' என்று சொல்லிக் கடைசியில் கிரீ

டத்தை எடுத்து மேசையின்மேல் வைத்து ஜெபித்தபின் அதைச் சக்கரவர்த்தினியின் சிரசிலே சூட்டினார். அப்போது அங்கிருந்த கௌரவ சபையார் யாவரும்: கடவுள் ராணியாரைக் கடாட்சிக்கக்கடவரென்று திரும்பவும் பேரொலியிட்டு ஆர்ப்பரித்தார்கள். உடனே நாற்பத்தொரு கௌரவ பீரங்கிச் சத்தம் கேட்டது.

இவைகள் முடிந்தபின் சக்கரவர்த்தினி வணக்க ஆசனம் என்ற பேருள்ள ஓர் ஆசனத்தில் அமரவும் சிரேஷ்ட அத்தியட்சர் அவர்களுக்குமுன் முழங்காற்படியிட்டு வணங்கி, அவர்கள் கையில் முத்தமிட்டார். பின்பு சகல பிரபுக்களும் வரிசை வரிசையாய் வந்து முழங்காற்படியிட்டு: நாங்கள் உங்களுக்கு உண்மையும் நம்பிக்கையுமாயிருப்போம் என்று வாக்களித்து அந்த வாக்குக் குறுதியாக கிரீடத்தின்மேலிருந்த சிலுவை ரூபத்தைத் தொட்டுவிட்டுப் போனார்கள். சக்கரவர்த்தினியின் நெருங்கிய பந்துக்களான பிரபுக்கள் அவர்களை முத்தமும் செய்தார்கள். அவர்களில் வயோதிபரான ஈசக்ஸ் பிரபு என்ற ஒருவர் பலவீனத்தினாலே ராஜ சிங்காசனத்தின் படிகளில் ஏறமாட்டாமல் தடுமாறுவதைக் கண்ட சக்கரவர்த்தினி தாங்களே ஓடிப்போய்த் தங்கள் கரங்களை அவர் தோளின்மேல் போட்டு அவருக்கு முத்தம் கொடுத்தார்கள். இது எவ்வளவோ சிறந்த குணம். இதுபோலவே ஏறக்குறைய தொண்ணூறு வயசுள்ள றேல் பிரபு என்ற ஒருவரைச் சில பிரபுக்கள் கையைப் பிடித்துச் சக்கரவர்த்தினியினிடத்திற்கு நடத்திக்கொண்டு போகும்போது, அவர் படிகளின் கீழே விழுந்துவிட்டார். அப்பொழுது சக்கரவர்த்தினி எழுந்துபோய்த் தங்கள் கையை நீட்டிக்கொடுத்து அவர் தமது சடங்கை நிறைவேற்ற உதவிபுரிந்தார்கள்.

அதில் பிரபுக்கள் பண்ணின வாக்குத்தத்தம்.

(இன்னும் வரும்)

---

## A SOLDIER OF CHRIST

By the Rev. J. H. Jowett M.A., D.D.

## இயேசுகிறிஸ்துவின் போர்ச்சேவகன்

'நீ இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி' என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறான்.

நம்மை நடத்துகிறவர் யார்? என்பதைப்பற்றி, அவன் மனசிலே யாதொரு சந்தேகமுமில்லை. அவனை நடத்தின இயேசுகிறிஸ்து எக்காலத்திலும் அவன் கண்ணுக்கு முன்பாகவே நின்றார். அவரைப்



பற்றி எக்காலத்திலும் அவனுக்கு நினைப்பு இருந்தது. 'நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம். ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.'

### நாம் எதற்காக யுத்தம் செய்கிறோம்?

போர்ச்சேவகராயிருந்தால் நாம் என்னத்துக்காக யுத்தம் செய்கிறோம்? ஏன்! 'தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தும்படியும், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கும்படியும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷிப்பைப் பிரசித்தப்படுத்தும்படியும்தானே.' அதுதான் நம் நோக்கமும், பக்தியும் உண்மையுமுள்ள கிறிஸ்தவ ஊழியக்காரன் ஒவ்வொருவனும் தன் முழு பலத்தோடும் செய்யவேண்டிய ஊழியமுமே.

### தரித்திரருக்குச் சுவிசேஷம்

மங்கலான இடங்களில் உட்கார்ந்து, பொழுது எப்போ வருமோ என்று காத்திருக்கிறவர்கள்; ஐசுவரியவானுடைய மேசையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தங்கள் பசியை ஆற்றிக்கொள்ள ஆசையாயிருப்பவர்கள்; என் தலைவிதி இது என்று நம்பிக்கையில்லாதவர்கள்; நாள்தோறும் பட்டினியாய் இருப்பவர்கள் ஆகிய இவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கும்படி அனுப்பப்பட்டவர்களாயிருக்கிறோம். அந்தச் சுவிசேஷம் என்ன என்று கேட்டால், மேலான கடவுள் இருக்கிறார். அவர் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தம்முடைய குணம் இன்னதென்பதை நமக்குக் காண்பித்திருக்கிறார். அவர் ஏழைகளை நேசிக்கிற நேசத்துக்கும் இரக்கத்துக்கும் அளவில்லை. ஒருவன் இவர்களை வருத்தப்படுத்தும்போது அவரையும் வருத்தப்படுத்துகிறான். இதுதான் நாம் அறிவிக்கவேண்டிய சுவிசேஷம்.

தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கிறதும், பரம பிதாவின் அன்புக்கு அடையாளமாக நாமும் அவர்களுக்கு அன்புகாட்டுவதும், அவர்கள் மனசிலே சந்தோஷம், நம்பிக்கை, வெளிச்சம் வரச்செய்வதும் ஆகிய இவையெல்லாம் மேன்மையான வேலையா இல்லையா? கிறிஸ்துவின் யுத்தவீரரே; சொல்லுங்கள்!

### சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை

அநேகர் உலகப்பொருள்களினால் கட்டுண்ட கைதிகள்; சிலர் ஆசைக்கு அடிமைகள்; இன்னும் சிலர் மாயை, துன்மார்க்கம், பகை, கோபம், மதுபானம் ஆகியவைகளின் அடிமைகளாயிருக்கிறார்கள்.

வேறு சிலர் சிற்றின்பம், உலகவாசையாகிய வலைகளில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்குக் கிறிஸ்துவின் போர்ச்சேவகன் என்ன செய்யவேண்டும்? அவன் இந்தக் கைதிகளிடத்திற் போய், இயேசுகிறிஸ்துமூலமாய் எல்லாருக்கும் இரட்சிப்பு உண்டென்றும், அவர் எல்லா அடிமைகளையும் விடுதலையாக்கக்கூடியவர் என்றும் பிரசித்தப்படுத்தவேண்டும். இதினால் யாதொரு பிரயோசனமுமில்லையா?

## குருடருக்குப் பார்வை

சிலர் ஆத்தும விஷயமாகக் குருடராயிருக்கிறார்கள். மேலான கடவுள் இருக்கிறார் என்று அவர்கள் உணருகிறதில்லை. மேல் உலகத்தைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. அவர்கள் மேலானவைகளைக் கவனிக்கிறதில்லை. பரிசுத்தமானவைகளைப்பற்றி அவர்களுக்கு அச்சமில்லை.

வேறு சிலர் நன்மைதீமைக்கடுத்த காரியங்களிலே குருடராயிருக்கிறார்கள். சன்மார்க்க காரியங்களில் அவர்களுக்கு அழகில்லை. துன்மார்க்கங்களிலும் அவர்களுக்கு அருவருப்பில்லை.

வேறு சிலர் மந்தபுத்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களது விவேகம் தூங்குகிறுப்போலிருக்கிறது. கிறிஸ்துவின் யுத்த வீரராகிய நாம் இவர்கள் பார்வையை அடையும் விதத்தைக் காண்பிக்கவேண்டும். ஆத்துமக் குருடருக்குக் கண் திறந்து அவர்களுக்குக் கடவுளைக் காண்பிக்கவேண்டும். சன்மார்க்கக் குருடருக்குச் சன்மார்க்கத்தின் அழகைக் காண்பிக்கவேண்டும். புத்திக் குருடருக்குத் தேவன் சிருஷ்டித்த இந்த உலகத்தின் சௌந்தரியத்தைக் காட்டவேண்டும்.

## இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குதல்

ஒரு காரியத்தைச் செய்யப் பிரயாசப்பட்டு, அதில் தவறு, ஏமாற்றம், தோல்வி ஆகிய இவைகளினாலே மனுஷர் இருதய நொறுங்குண்டவர்கள் ஆகிறார்கள். குருவிகளைப்போல அவர்கள் ஆகாசத்தில் பறக்கப் பிரயாசப்படுகையில், காயப்பட்டு, இறகு முறிந்து விழுந்துவிடுகிறார்கள்.

சிலர் அன்புக்கடுத்தவைகளில் காயப்பட்டவர்கள். சிலர் நம்பிக்கையில் நொறுங்குண்டவர்கள். சிலர் தீர்மானமில்லாதவர்களாகி நொறுங்குண்டவர்களானார்கள். யுத்தவீரராகிய நாம் இப்பேர்ப்பட்டவர்களிடம் அன்போடு போய் முறிந்துபோன இறகுகளைக் கட்டி, இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கவேண்டும்.

## பொழுது ஆகிறதென்று பிரசித்தப்படுத்துவது

இந்தப் பரிசுத்த யுத்தத்தில் கடைசியாகச் செய்யவேண்டியதென்னவென்றால்: 'கர்த்தருடைய அனுக்கிரக வருஷிப்பைப் பிரசித்தப்படுத்துவது' தான். வரும் காலத்தில் எல்லாருக்கும் சொல்லமுடியாத நன்மைகள் இருக்கின்றனவென்றும் தற்காலத்திலும் நல்ல காலம் வரக்கூடும் என்றும் நாம் அறிவிக்கவேண்டும். 'இது என் தலைவிதி, என் கர்மம், இனி என்ன செய்யக்கூடும், சமயம் போய் விட்டது' என்கிற நம்பிக்கையற்றவர்களிடத்தில் போய் அவர்களை எழுப்பி 'பொழுது ஆகிறது, இதுதான் சமயம்' என்று சொல்லி அவர்களிடம் புதுப் பலனும் புது நம்பிக்கையும் வருவிக்கவேண்டும். இப்பொழுதே அனுக்கிரக காலம்! இப்பொழுதே இரட்சணிய நாள்! இப்படிச் சொல்வது நமது மாட்சிமையான சுவிசேஷம்.



## மேன்மையான போராட்டம்

இது இலேசான போராட்டமல்ல. பலவீனரும் பயங்காளிகளும் செய்யக்கூடிய போராட்டமல்ல. நமது முழு மனதோடும் முழு பலத்தோடும் போராடவேண்டும். ராஜாவின் தூதர்களாக, அன்னிய தேசங்களுக்குப் போய், நமது ராஜா அன்பினாலே கொடுத்த கட்டளைகளை அத்தேசத்தாருக்கு அறிவிக்கவேண்டும். நாம் இயேசு ராஜாவின் வீரராகக் கீட்டுண்டவர்களுடைய சங்கிலிகளைக் கழற்றி அவர்களை விடுதலையாக்கவேண்டும். நாம் தீர்க்கதரிசிகளாகக் குருடருக்குக் கண் திறந்து, பரலோகத்தின் ஆச்சரியத்தையும் கடவுளுடைய கிருபையையும் காட்டவேண்டும். நாம் மத்தியஸ்தராக, நம்பிக்கையில்லாத ஆத்துமாக்கள் சஞ்சலக்கடலில் அமிழ்ந்து கெட்டுப்போகாதபடி உதவிசெய்து அவைகளைத் தூக்கி எடுக்கவேண்டும். இதுதான் நமது ராஜா கொடுத்த வேலை. இதுதான் அவருடைய ராஜ்யத்துக்கு வேண்டிய சகாயம்.

## நமக்கு வேண்டிய ஆயுதங்கள் எவை?

அந்தப் பரிசுத்த போராட்டத்திலே நமக்குச் சகாயம் எது? நமக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதங்கள் எவை? நல்ல போர்ச்சேவகனாகத் தீங்கநுபவி என்று எழுதியிருந்தபோதிலும் அது முக்கியமான காரியமல்ல. 'நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.' இது முக்கியமானது. முதலாவது நாம் பலப்படவேண்டும்; அப்புறம் தீங்கு அனுபவிக்கக்கூடும். முதலாவது பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்; அப்புறம் பிசாசோடு யுத்தம்பண்ணு. முதலாவது தியானம்; இரண்டாவது வேலை.

கிருபை.—நமக்கு ஆயுதம் கிருபையின் பலம். கிருபை என்னவென்று கேட்டால் கடவுளுடைய பரிசுத்த அன்புதான். அந்தப் பரிசுத்த அன்பு அவருடைய பிள்ளைகளின் இருதயங்களில் பிரகாசித்து, அவர்களுடைய குணங்களை மாற்றி, பாவமும் வருத்தமும் நிறைந்த இவ்வுலகத்தில் அவர்கள் பரிசுத்த அன்பு மூலமாகச் செய்யவேண்டிய

வேலைக்கு ஏற்ற ஆயுதமாயிருக்கும். 'கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.'

விசுவாசம்.—நாம் கிருபையின் பலத்தினால் யுத்தம்செய்யவேண்டுமானால் நமக்கு விசுவாசமும் வேண்டும். நமக்கு விசுவாசமில்லாவிட்டால் தேவனுடைய கிருபை காணப்படமாட்டாது. நாம் விசுவாசத்தினாலே அவருடைய பரிசுத்த அன்பைப் பெற்றுக்கொண்டு, அதின் பரிசுத்தத்தினாலே பரிசுத்தமுள்ளவர்களும், அதின் அன்பினாலே அன்புள்ளவர்களுமாகி நம்முடைய நடக்கையினாலே நல்ல போராட்டம் செய்யவேண்டும்.

தீங்கநுபவி.—நாம் கஷ்டத்தைப் பாராமல் அதில் சந்தோஷப்படவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் தீங்கு அநுபவிக்கிறோமா? அநேகம் பேர் மற்றவர்களை அழைக்கும்போது, கிறிஸ்துவின் ராஜ்யத்துக்காக அநுபவிக்கவேண்டிய கஷ்டங்களைக் காட்டாமல், அதற்குரிய சந்தோஷங்களைமாத்திரம் காட்டுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சேர்ந்து அவருக்காக யுத்தம் செய்யுங்கள் என்று சொல்லாமல், பண்டிகைக்குச் சந்தோஷத்தோடு வாருங்கள் என்று அவர்களை இசையச் செய்கிறார்கள். நமது இரட்சணிய தலைவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையை எடுத்துக்கொள்ளும்படியாகத் தம்முடைய சீஷர்களை அழைத்தார். தற்காலத்திலும் அதே அழைப்பு. கழிந்துபோகிற சிற்றின்பமல்ல, நித்திய சந்தோஷம் நமக்குக் கொடுக்கப்படும். பிசாசையும் அவன் கிரியையையும் ஜயிக்கிறதினால் உண்டான பரிசுத்த சந்தோஷத்துக்கு அளவு உண்டா?

## JAPAN

## ஜப்பானியர்

ஜப்பானியர் உடை, ஆண் பெண், சிறியோர் பெரியோர் ஆகிய எல்லோருக்கும் ஒரே மாதிரியானது. அதில் குழந்தைகளின் உடைமாத்திரம் பிரகாசமாயும், பலவர்ணமுடையதாயும் இருக்கும். பெரியவர்கள் நல்ல நீலமோ, பழுப்பு, சாம்பல் ஆகிய மங்கல் நிறமோ உள்ள உடையை உடுப்பார்கள். புருஷர்களில் பலர் முழு ஐரோப்பிய உடைகளையாவது, மேல்ஜோடு போட்டும்போடாமலும் சப்பாத்துடன் தங்கள் கிமானோவையும், விகாரமான ஒருவித ஐரோப்பிய தொப்பியையும் ஆபாசமாய்க் கலந்து தரிப்பர்.

ஜப்பானிய ஸ்திரீகள் தங்கள் தலையை வாரி முடிப்பது வெகு விசித்திரம். அதை அவர்கள் மூடுவதில்லை. அவர்கள் ஆசையுடன்




அலங்கரிக்கும் குழந்தைகள் கோமாளிகளைப்போலக் காணப்படுவார்கள். எப்படியும் இவர்கள் தங்கள் சொந்த நடை உடை பாவனைகளையே அநுசரிப்பது மிகவும் அழகாகவே இருக்கும். ஆனால் மேலைத்தேச வாசிகளைப்போல எதையாவது செய்ய ஆரம்பித்தால் அந்த அந்நியருடைய வர்ணம், உருவம், மாதிரி முதலியவைகளில் அவலக்ஷணமானதும் இழிவானதுமாக இருப்பதையே பின்பற்ற ஆசைப்படுகிறார்கள்போலும். ஆனால் சில விஷயங்களில் அந்நிய வழக்கத்தை



மேற்கொண்டது சௌகரியம்பற்றி என்று சொல்ல இடம் உண்டு. உதாரணமாக, ஜப்பானிய மூங்கிலாலும் எண்ணெய்க் காகிதத்தாலும் செய்த பழைய குடை போய் இப்போது அல்பாகா குடை வந்துவிட்டது; வர்ணக் காகித வெயில்விலக்கி போய், பட்டுக் கைக்குடை ஆயிற்று. கண்ணாடி மறைப்புக்களுக்குப் பதிலாக அவர்கள் காகிதத்தையே பல நூற்றாண்டுகளாக உபயோகித்து வருகிறார்கள். பார்ஸல் கட்டுவதுமுதல் அதினாலேயே ஆகிறது. இப்படி இவர்கள் எண்ணெய்க் காகிதத்தைப் பற்பல வேலைகளுக்கு உபயோகப்படுத்துவதால் ஜப்பானியர் அதின் உபயோகத்தைக் கைவிட வெகுகாலம் ஆகவேண்டும்போலும்.

சைனாவிலும் ஜப்பானிலும் புருஷர் ஸ்திரீகளை உடையால் பிரித்தறிதல் முடியாது. இது எவருக்கும் புதுமையே. சைனாவில் இருபாலாரும் தளர்த்தியான குட்டைச் சட்டைகளும், ஒட்டிய நீண்ட காற்சட்டைகளும் தரிப்பது, வேலைசெய்ய வெகு பொருத்தமானதே. ஜப்பானில் புருஷர்கள் கிமானோ கௌனைப்போட்டு, அதின்மேல் இடுப்பில் சாதாப் பட்டுக்கச்சை ஒன்றைச் சுற்றிக்கொள்வார்கள்;



பெண்களும், ஸ்திரீகளும் கிமானோவோடு முதுகில் தடித்த தலையணை போன்ற சதுரத்துண்டு ஒன்றைப் பெரிய நாடாக்கொண்டு கட்டிக் கொள்கிறார்கள். இது அசங்கியமும் அசௌகரியமும் ஆனது.

முற்காலத்தில் எல்லாம் ஜப்பானிய ஸ்திரீகள் கலியாணம்வரைக்கும், புருவங்களைச் சிரைத்துவிடுவதும் பற்களைக் கறுப்பாக்கிக்கொள்வதும் வழக்கம். இப்போது தலைமுடி மாறுதலும் மங்கல்நிற உடைகளுமே கன்னிகைப் பருவக் குறிகள். கொஞ்சகாலத்துக்குமுன்னே



ஒரு ஸ்திரீயைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளுடைய வயதையும், குலநலனையும் அவளது தலைமுடியும் ஆபரணங்களும் தெரிவிக்கக்கூடியனவாக இருந்தன. ஆனால் இப்போது முடியாது. சாதாரணமாய் அவர்கள் அணியும் நகைகள் அழகிய கொண்டை ஊசிகளும், விநோதமான சீப்புக்களுமேயாம்.

காப்பு, மோதிரம், சங்கிலி முதலிய இத்தனை சாதாரண நகைகளை அணிந்த ஒரு அந்நியரைக் கண்டால், உடனே அவரை அநேக ஜப்பானியர் சூழ்ந்துகொள்வார்கள். ஆச்சரியத்தோடு பார்த்து ஆனந்திப்பார்கள். கடிகாரத்தைக் கண்டு களிப்பார்கள். ஐரோப்பியரது தொப்பியும் அவர்களுக்கு அதிசயமாம். ஜப்பானியர் மேல்ஜோடு போடுவதுண்டு. ஆனால் அது ஸாக்ஸைப்போல இராது; ஒவ்வொரு விரலுக்கும் தனித்தனி சந்திருக்கும். இதற்குமேல் பாதரக்ஷை அணிவார்கள்; அது மரக்கட்டையே. அதையும் வீட்டுக்குள்ளாவது கோவிலுக்குள்ளாவது நுழையும்போது வெளியே வெகு சுலபமாய் விட்டுவிடுவார்கள். இப்படியில்லாத கரும்பாதரக்ஷைகள் ஜப்பானியருக்கு வெகு புதுமை. ஆனால் வரவர அந்நியரைப் பார்த்து வண்டியிழுக்கும் பையன்களும், நாடகசாலை கோவில் இவற்றின் காவற்காரர்களும் கான்வாஸ் ஷூஸ் தரித்து வருகிறார்கள்.

ஜப்பானியர் வீடுகள் நம் வீடுகளைப்போன்றன அல்ல. நாம் வைக்கும் ஜன்னல் கதவு முதலிய எதையும் அவர்கள் அமைப்பதில்லை. தரைக்குமேல் இரண்டொரு அடி உயரத்தில் பரப்பும் மரப்பலகைதான் தளம். அதின்மேல் மூலைகளில் தூண் நிறுத்தி அவைகளுக்கு இடையில் பொருத்தும் காகிதத்தட்டிகளே சுவர். கூரையாக எண்ணெய்க் காகிதத்தை மேலே வேய்வார்கள். இரவில் அந்தத் தட்டிகளின் வெளிப்பக்கத்தில் பலகைகளை நன்றாய்க் கட்டிவிடுவார்கள். அப்படிக் கட்டாவிட்டால் இரவில் நகர்வலம் வரும் போலீஸ்காரன் அதையெல்லாம் கீழே தள்ளிவிடுவான். அத்தனை அஜாக்கிரதையுள்ளவர்களுக்கு அபராதமும் விதிக்கப்படுமாம். முன்னெல்லாம் அவ்வீடுகள் காற்றும் உள் நுழையாதபடி அத்தனை ஒடுக்கமாய் இருந்துவந்தன. ஆனால் இப்போது வரவர தாழ்வாரங்களின்கீழ் சுத்த ஆகாயம் உள்ளே வரவும், அசுத்த ஆகாயம் வெளியே போகவும் சந்து விட்டு வருகிறார்கள்.

சாதாரணமாய் ஜப்பானியர் குரிச்சி மேசைகளை உபயோகிப்பதில்லை. தரையில் மெத்தென்றிருக்கும் பாய் ஒன்று விரித்து இருக்கும். உறை தரித்த பாதத்தோடு அதன்மேல் நடக்க வெகு நன்றாயிருக்கும். சொருகு பலகைச் சுவர்களுக்குப் பின்னால் மறைவாக ஒருவித அலமாரி இருக்கும். அதிலேதான் பகலில் தங்கள் படுக்கை

பாய்களைச் சுருட்டி வைப்பார்கள். இரவில் அவற்றை எடுத்து, தரையில் விரித்து ஒருவிதத் தலையணையையும் வைத்து—தற்காலத் தலைகத்தரித்த—புருஷர்கள் படுப்பார்கள். ஸ்திரீகள் தங்கள் தலை மூடி சிறிதும் கலையாதிருக்கவேண்டி, கழுத்தில் ஒரு சிறு மரக்கட்டையை அணையாக வைத்துப் படுப்பார்கள்.

(இன்னும் வரும்)

## ST. MARTIN

## மார்ட்டின் ஞானியார்

முன்னொரு காலத்தில் ஹங்கேரி தேசத்தில் மார்ட்டின் என்று ஒரு வாலிபன் இருந்தான். அவன் கிறிஸ்து மார்க்கத்தின் உண்மைகளை அறிந்து, அதுவே மெய்ச்சமயம் என்று தேர்ந்து, கிறிஸ்தவன் ஆய்விடவேண்டும் என்ற ஆசை அதிகம் கொண்டான். ஆனால் அவனுடைய தாய்தகப்பன்மார் கிறிஸ்தவர்கள் அல்ல ஆதலால் அவன் கிறிஸ்தவன் ஆகாதிருக்கும்படி ஆனமட்டும் தடுத்து வந்தார்கள். பின்னும் மார்ட்டின் வயது வந்தவன் ஆனபோது அவனது பெற்றோர்கள் தம்மகன் சந்நியாசி ஆய்விடுவான் என்று பயந்து அவனை ஒரு சிப்பாய் ஆக்கினார்கள். அப்படியே அவனும் பிரான்ஸ் தேசத்தில் சிப்பாய் வேலையிலும் தன்னோடொத்த சிப்பாய்களின் சேர்க்கையிலும் மிகப் பிரியம் உள்ளவனாகவே இருந்துவந்தான். இருந்தாலும் கிறிஸ்துவுக்கு அடிமையாகவேண்டும் என்ற ஆசை மாத்திரம் அவனைவிட்டுப் போகவே இல்லை. இப்படி நாள் பல கழிந்தன.

பின் ஒருநாள் இரவு மார்ட்டின் கோட்டையைக் காவல் செய்பவனாய் ஜாக்கிரதையோடு இங்கும் அங்கும் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது குளிர் சொல்லிமுடியாததாக இருந்தது. அதற்காக சிப்பாய்கள் சிலர் சிறிது அப்பால் அனல் மூட்டிக் குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள். மார்ட்டின் இதைப் பார்த்தும் கடமையிலேயே கண்ணாய்க் காவல் புரிந்தான். இப்படியிருக்க வயது முதிர்ச்சியாலும் குளிராலும் கிடுகிடு என்று நடுங்கும் பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்து உட்கார்ந்து குளிர்காயக் கையை நீட்டினான். ஆனால் அந்த முரட்டு சிப்பாய்கள் அந்த ஏழைக் கிழவனைத் திட்டித் தள்ளிவிட்டார்கள். அவனும் பயந்து வருந்தி விலகிப்போய்விட்டான். இதையெல்லாம் பார்த்த மார்ட்டின் அந்த நிர்ப்பாக்கியனான கிழவனுக்கு இரக்கமும், அந்த இரக்கமில்லா சிப்பாய்களின்மேல் கோபமும் கொண்டவனாய், உடனே தன் வாளை உருவி, தான் தரித்திருந்த நீண்ட சட்டையை இரண்டு துண்டாக்கி, ஒன்றைத் தான் அரைகுறையாகப் போர்த்துக்கொண்டு, மற்றதை அங்கே நடுங்கிய கிழவனுக்கும் போர்த்தான்.



அடுத்த நாள் இரவு தூங்கும்போது மார்ட்டின் ஒரு உபதரிசனம் கண்டான். அதில் கர்த்தரான கிறிஸ்து பாதி சிப்பாய்ச் சட்டை தரித்து பரலோகத்தில் உட்கார்ந்திருக்கக் கண்டதாகவும், பின்னும் அதையே சற்று உற்றுப்பார்க்க ' இதோ பார்! இச்சட்டையை மார்ட்டின் எனக்குக் கொடுத்தான்—இதற்கும் அவனுக்கு இன்னும் ஞான ஸ்நானம் ஆகவில்லை ' என்ற சத்தம் கேட்டதாகவும் உணர்ந்தான்.

பிறகு மார்ட்டின் கொஞ்சமும் காலதாமதம் செய்யாமல் தன்னைக் கர்த்தருக்கு மகிழ்வுடன் ஒப்புக்கொடுத்து ஞானஸ்நானமும் பெற்றான். அப்புறம் வெகுநாள் அவருக்கு அடிமையாய் இருந்து கடைசியில் நல்ல வைராக்கியம் உள்ள ஞானகுரு ஆனான்.

## CONSCIENCE

## மனச்சாக்ஷி

அமெரிக்க நூலாசிரியர் ஒருவர் தாம் தம் நாலாவது வயதில் செய்ததைப் பின் வருமாறு ஒரு கதையாகச் சொல்லுகிறார்:—

' ஒருநாள் ஒரு புள்ளி ஆமை ஆழமில்லாத தண்ணீர்க் குட்டையின்மேலே வெயில் காய்ந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்து நான் அதை அடிக்கலாம் என்று என் கையில் இருந்த தடியை ஓங்கினேன். இதற்குமுன் நான் எந்த ஜந்துவையும் கொன்றதேயில்லை. என்றாலும் விளையாட்டுக்காகப் பறவை முதலிய தீங்கற்ற பிராணிகளைக் கொல்லும் வேறு பிள்ளைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆதலால் நானும் அவர்களது கெட்ட வழக்கத்தைக் கையாட எண்ணலானேன். ஆனால் இருந்தாற்போல் இருந்து என் உள்ளே சத்தமாகவும் தெளிவாகவும் எழுந்த ஒரு வாக்கு ' அது தப்பிதம் ' என்று சொல்லி என் சிறு கையைத் தடுத்தது.

' நான் ஆச்சரியமடைந்து இப்புது உள்ளக்கிளர்ச்சி இன்னதென்றறியாமல் அந்த ஆமை என் கண்ணுக்குத் தெரியாமல் மறையும் வரைக்கும் என் ஓங்கிய தடியை அப்படியே நிறுத்திக்கொண்டு நின்றேன்.'

' உடனே வீட்டுக்கு ஓடி இக்கதையை என் தாயாருக்குச் சொல்லி ' அது தப்பிதம் ' என்று எனக்கு உணர்த்தியது எது என்று கேட்டேன். அவள் தன் கண்களில் நீரைச் சொரிந்து என்னை மார்போடு அணைத்துக்கொண்டு ' சிலர் அதை மனச்சாக்ஷி என்பார்கள். ஆனால் அதை நான் ஆத்துமாவில் கடவுளின் சத்தம் அல்லது குரல் என்றே சொல்வேன். அதை நீ நன்றாய்க் கவனித்துக் கேட்டு அதின்படியே நடப்பாயானால் அது வரவர வெகு தெளிவாகி உன்னையும் சரியான

வழியில் நடத்தும். அப்படியில்லாமல் அச்சத்தத்திற்கு நீ செவிகொடாமலும் கீழ்ப்படியாமலும் இருப்பாயாளுல் வரவர அது குறைந்துபோய் உன்னை நல்வழியில் நடத்த எதுவுமின்றி இருட்டில் இருத்தும். உன் வாழ்க்கையின் இன்பதுன்பங்கள் நீ இச்சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதைப் பொருத்திருக்கும்.'

கடவுள் நம் எல்லாரோடும் நம் மனச்சாக்ஷியின்மூலமாய்ப் பேசும் சிருஷ்டி கர்த்தா. அவருக்கு நாம் உத்தரவாதம் உள்ளவர்கள்; அவரது ஆக்ஞைக்கு உள்ளடங்கி நடந்ததை நாம் அவருக்கு உத்தரம் சொல்ல வேண்டியவர்கள். கடவுளே நம் பிதா. அவர் நம்மை நேசிக்கிறூர். ஆதலால் நாமும் நேசர்களாய் அவர் நமக்குச் சொல்வதைக் கேட்டு மகிழ்ச்சியோடு அதின்படி செய்யவேண்டும்.

எவன் ஒருவன் தன் உள்ளே எழும் கடவுளின் ஆக்ஞைப்படி நடக்கிறூனே அவன் மகிழ்ச்சியடைவான். அவன் செல்வவந்தனுய் இருக்கவேண்டியதில்லை; வெகு கஷ்டப்பட்டே ஜீவனம் பண்ணுபவனுயிருக்கலாம்; ஆனூல் நல்ல மனச்சாக்ஷியால் உண்டாகும் சமாதானத்தை அடைந்து உண்மையான மகிழ்ச்சியை அடைவான். இவன் மற்றவர்களுக்கு இதம்செய்யத் தயாராகவே இருப்பான். இவனை முன்மாதிரியாகக் கொண்டு மற்றவரும் தங்கள் தங்கள் மனச்சாக்ஷிக்கு உண்மையாய் இருப்பார்கள்.

இங்கிலிஷ் கவிராயர்களில் மிகச் சிறந்தவரான ஷேக்ஸ்பியர் பின்வரும் அருமை வாக்கியங்களில் நமக்கு மனச்சாக்ஷி விஸ்வாஸத்தைக் கற்பிக்கிறூர்;—

'உன் மனச்சாக்ஷிக்கு உண்மையாய் இரு; அப்போது நீ வேறெவருக்கும் பொய்யன் ஆகாய். இது திண்ணம்.'

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ளு மார்ச்சுமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | மத். | 12. | 1—8 | 11 | ச. | மத். | 13. | 36—43 | 21 | செ. | மத். | 16. | 13—20 |
| 2 | வி. | ,, | 12. | 9—21 | 12 | ஞா. | ,, | 13. | 44—52 | 22 | பு. | ,, | 16. | 21—28 |
| 3 | வெ. | ,, | 12. | 22—37 | 13 | தி. | ,, | 13. | 53—58 | 23 | வி. | ,, | 17. | 1—8 |
| 4 | ச. | ,, | 12. | 38—45 | 14 | செ. | ,, | 14. | 1—12 | 24 | வெ. | ,, | 17. | 9—20 |
| 5 | ஞா. | ,, | 12. | 46—50 | 15 | பு. | ,, | 14. | 13—21 | 25 | ச. | ,, | 17. | 22—27 |
| 6 | தி. | ,, | 13. | 1—9 | 16 | வி. | ,, | 14. | 22—36 | 26 | ஞா. | ,, | 18. | 1—14 |
| 7 | செ. | ,, | 13. | 10—17 | 17 | வெ. | ,, | 15. | 1—20 | 27 | தி. | ,, | 18. | 15—20 |
| 8 | பு. | ,, | 13. | 18—23 | 18 | ச. | ,, | 15. | 21—31 | 28 | செ. | ,, | 18. | 21—35 |
| 9 | வி. | ,, | 13. | 24—30 | 19 | ஞா. | ,, | 15. | 32—39 | 29 | பு. | சங். | 26. | |
| 10 | வெ | ,, | 13. | 31—35 | 20 | தி. | ,, | 16. | 1—12 | 30 | வி. | ,, | 27. | 1—6 |
| | | | | | | | | | | 31 | வெ. | ,, | 27. | 7—14 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS


# மாதர் போதினி

No. 160 ஏப்பிரல் 1911 No. 4


APR 1911 MADRAS.

## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

**ஆரயினைத்துப் பவனிபோதல்.**

சகல சடங்குகளும் மிகவும் சிறப்பாய் முடிந்தபின் சக்கரவர்த்தினியின் தேகத்தில் ரத்தாம்பரப் பட்டுடை பிரகாசிக்க, சிரசில் கிரீடம் இலங்க, வலதுகாரத்தில் செங்கோலும் இடதுகாரத்தில் ராஜசின்னப் பொன்னுண்டையும் துலங்க, சக்கரவர்த்தினி ரதத்தில் ஏறி, வாத்தியங்கள் முழங்க, தெருக்களில் பேராற்றில் வெள்ளம் பாய்ந்தாற்போல் ஜனங்கள் நெருங்க, கடவுளே, ராணியைக் காடாட்சிக்க என்ற வாழ்த்துதல் ஆகாயத்தை நிறைக்க அரமனை சென்றூர்கள்.

பட்டாபிஷேகத்திற்குப்பின் சக்கரவர்த்தினி தங்கள் காலத்தை எப்படிக் கழித்தார்கள் என்றறிவது நல்லது. காலையில் நித்திரை நீங்கிக் காலைச் சாப்பாடுண்டு பன்னிரண்டு மணிவரையும் ராஜ்யவிஷயமான பல காரியங்களையும் பார்ப்பார்கள். பன்னிரண்டு மணிக்கு மெல்போர்ன் மந்திரி வந்து முக்கியமான ராஜ்ய விஷயங்களைக்குறித்துப் பேசி, ஒப்பம் வாங்கவேண்டிய பத்திரங்களில் ஒப்பம் வாங்குவார். இரண்டு மணிக்கு ஒரு பரிவாரத்தோடு இடதுபக்கத்தில் மெல்போர்ன் மந்திரி

**சமயத்தைச் செலவிட்ட விதம்.**

யும் வலதுபக்கத்தில் மெய்காவல் அதிபதியும் குதிரைகளில் ஏறிவர, தாங்களும் சவாரிசெய்வார்கள். ஏறக்குறைய இரண்டு மணிநேரம் சவாரிபோனபின் திரும்பிவந்து சங்கீதம் பாடுவதிலும், பிள்ளைகளோடு விளையாடுவதிலும் சாயங்காலத்தைக் கழிப்பார்கள். இவ்விதமாய் அவர்களுடைய விவாகம்வரையிலும் நடந்தது.

1839-ம் ளு மேமீ 7உ மெல்போர்ன் மந்திரியானவர் ராசிநாமா கொடுத்து உத்தியோகத்தைவிட்டு நீங்கவேண்டியதானது. இந்த மந்திரியார் சக்கரவர்த்தினிக்குத் தகப்பனுரைப்போலிருந்து சகல

**றாபட் பீல் என்னும் புதிய மந்திரி.**

காரியங்களையும் வெகு நீதியும் நிதானமுமாய் நடத்திவந்தார். அவர் மாத்திரம் சக்கரவர்த்தினியோடு பழக்கமுடையவராயிருந்தபடியால் அதைக்குறித்துச் சில மந்திரிமார் பொறாமையுடையவர்களாயிருந்தார்கள். அவருக்குப்பின் மந்திரிப் பட்டத்திற்கு வந்தவருக்கு ஸர் றாபட் பீல் (Sir Robert Peel) என்று பெயர். இவர் உத்தியோகம் ஆரம்பித்த உடனேயே சக்கரவர்த்தினிக்கு ஒரு விசனத்தை உண்டு பண்ணினார். அதென்னவென்றால்: நீங்கிப்போன மந்திரிமாரைச் சம்பந்தித்தவர்களும் சக்கரவர்த்தினியின் அரமனையில் பெரிய உத்தியோகம் வகித்தவர்களுமான சில பள்ளியறைப் பெருமாட்டிகளை நீக்கிவிடவேண்டுமென்று சக்கரவர்த்தினியை நிர்ப்பந்தித்ததுதான். ஆனால் ராணி அம்மாள் அதற்குச் சம்மதியாமல் அதிக தைரியமுடையவர்களாய் விளங்கினார்கள். இது அவர்கள் மெல்போர்ன் பிரபுவுக்கு எழுதின ஒரு கடிதத்தினால் விளங்குகிறது. அதில்: 'அவர்கள் என் பெருமாட்டிகளை என்னைவிட்டு நீக்கிவிடவேண்டுமென்று பிரயத்தனிக்கிறார்கள். அவர்களை நீக்கினபின் அரமனையிலிருக்கிற என்னுடைய சாதாரண உத்தியோகஸ்தரை நீக்குவார்கள்; அதற்குப்பின் என் வேலைக்காரரை நீக்குவார்கள். அவர்கள் என்னை ஒரு சிறு பெண்ணைப்போல நடத்த யோசிக்கிறார்கள். ஆனால் நான் இங்கிலாந்தின் ராணி என்பதை அவர்களுக்குக் காண்பிப்பேன்' என்று எழுதினார்கள். இந்த வீரதீரத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட அவர்களுடைய பிரஜைகளுக்கு உண்டான ஆனந்தத்தை அளவிடல் முடியாது. மேலும் பீல் மந்திரியிடத்தில்: 'நான் என் பழைய மந்திரியாகிய மெல்போர்ன் பிரபுவையும் என் மனம்போல என் அரமனையில் அழைப்பித்துக்கொள்ளுவேன்' என்று சொல்ல, அவர் அதற்கு ஆட்சேபிக்கவில்லை. சக்கரவர்த்தினியுடைய ராஜ்யபார வருத்தமானது அதிகப்பட்டபடியால் அவர்களுக்கு மந்திரிமார் அரமனைப் பெருமாட்டிகள் முதலியவர்களைப்பார்க்கிலும் அதிக பிரியமும் சமீபமுமான ஒரு பிராணநாயகர் அத்தியாவசியமாயிருந்தார். கடவுளும் அவர்களுக்கு அவ்வித பிராணநாயகனை அருளிச்செய்தார்.

## விவாக காண்டம்

சக்கரவர்த்தினியார் பிறந்த 1819-ம் ௵ ஜர்மனியிலே அவர்களுடைய தாய் மாமனும் கோபர்க் பிரபு என்னும் பெயருடையவருமான மகானுக்கு ஒரு குமாரன் பிறந்தார். அவர்தான் ஆல்பட் பிரபு. அவருடைய அண்ணனுக்கு எர்னஸ்ற் பிரபு என்று பெயர். அவர்களைக்குறித்து இதற்கு முன்னும் எழுதியிருக்கிறோம். சக்கர



வர்த்தினியின் மாமனாராகிய லியோபோல்ட் என்னும் பெல்ஜியம் தேசத்து அரசன் விக்றோரியா ராஜகுமாரத்திக்கும், ஆல்பட் பிரபுவுக்கும் மணமுடித்து வைக்கவேண்டுமென்று ஆரம்பமுதலே ஆசையுடையவராயிருந்தார்; ஆனால் அது சக்கரவர்த்தினியின் பெரிய தந்தையாகிய நாலாம் உவில்லியம் அரசனுக்குப் பிரியமில்லை. 1839-ம் ௵ எர்னஸ்ற், ஆல்பட் என்னும் பிரபுக்கள் இங்கிலாந்துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் இதற்குமுன் 1836-ம் ௵ வந்ததும் நமக்குத் தெரியும். சக்கரவர்த்தினி அப்போது 17 வயசுடையவர்களும் புதிதாய் மலர்ந்த அலங்கார ரோஜா மலருக்குச் சமானமான யௌவன அழகு பொருந்தினவர்களுமாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் இளைய மைத்துனனைப் பார்த்தபோது அவர் தேகத்தில் வளர்ந்தும் அழகில் சிறந்தும் புத்தியில் தேறியும் இருப்பதைக் கண்டு பரமானந்தமடைந்து தங்கள் மாமனாராகிய லியோபோல்ட் ராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் ஆல்பட்டின் அழகு ஆச்சரியகரமாயிருக்கிறதென்றும், அவர் இணக்கமும் இன்பமும் தாழ்மையுமுடையவராயிருக்கிறாரென்றும், சுருக்கிச் சொன்னால் அவர் வசீகர ரூபியாய் விளங்குகிறார் என்றும் எழுதினார்கள். சக்கரவர்த்தினியும், அவர்கள் தாயாரும், ஆல்பட் எர்னஸ்ற் என்னும் பிரபுக்களும், மெல்போர்ன் மந்திரியும், அரமனைக்குச் சம்பந்தப்பட்ட பல பெருமாட்டிகளும் சேர்ந்து சாயங்காலங்களில் சவாரி போவார்கள். சக்கரவர்த்தினியும் ஆல்பட் பிரபுவும் தனிமையாய் உலாவும்போது ஒருநாள் சக்கரவர்த்தினி அவரிடத்தில்: 'நீர் இங்கிலாந்தை விரும்புகிறீரா' என்று கேட்க, அவர்: 'நான் மிகவும் விரும்புகிறேன்' என்று விடை பகர்ந்தார். மறுநாளும் அந்தக் கேள்வியையே கேட்டார்கள். ஆனால் மூன்றாம் நாள்: 'நீர் இங்கிலாந்தில் வாசம்பண்ண விரும்புகிறீரா' என்று கேட்க, அவர் தைரியமடைந்து: 'இந்தப் பிரகாசமான பெரிய நட்சத்திரம் இருக்கிற இடத்திலே நான் வாசம்பண்ண விரும்புகிறேன்' என்றார். ஆனால் இவைகளெல்லாம் பொதுவாய்க் கூறிய வார்த்தைகளாய்மட்டும் இருந்தன; உறுதியான வாக்கு இன்னும் உண்டாகவில்லை. ஆதலால் சக்கரவர்த்தினி தங்கள் தாயாரிடத்தில் ஆலோசித்து ஒருநாள் ஆல்பட் பிரபுவைத் தங்கள் அறைக்குள் அழைப்பித்துத் தங்கள் உள்ளத்தை அவர் கொள்ளைகொண்டதாகவும், ஆதலால் தாங்கள் அவரை மணக்க விரும்புவதாகவும், அது அவருக்குச் சம்மதந்தானா என்றும் கேட்க, அவர்: 'சம்மதந்தான்' என்று ஒப்புக்கொண்டார்.

**விவாக தீர்மானம்.**


பிற்பாடு சக்கரவர்த்தினியும் தங்கள் சம்மதத்துக்கு அடையாளமாக அவருக்குக் கை கொடுத்தார்கள். செங்கோல்களில் சிறந்த செங்கோலைப் பிடித்த

அவர்கள் கை, பிரபுக்களும் பெருமான்களும், வீரரும் சூரரும் பிடித்து, இதற்குக் கீழ்ப்பட்டிருப்போம் என்று முத்தஞ் செய்த கை, உலகத்தின் பெரும்பாகத்தின் வல்லமைகளைப் பிடித்திருந்த மகத்துவமான அந்தக் கை தன் நேசரைப் பிடித்திருந்தபோது கிடுகிடென்று ஆடினது. அந்தக் கரத்தை வல்லமையுள்ள ஒரு புருஷன் பிடித்து நடத்திப் பலப்படுத்தவேண்டியது அத்தியாவசியமாயிருந்தது. ஏனென்றால் ஸ்திரீயானவள் எவ்வளவு உயர்ந்த ஸ்திதியிலிருந்தாலும் அவள் புருஷனுடைய உதவியில்லாமல் தனிமையாயிருத்தல் அவளுக்குப் பலக்குறைவென்றே சொல்லவேண்டும். ஆல்பர்ட் பிரபுவும் அவர் தமையனாரும் உவின்ஸர் மாளிகையில் சிறிதுகாலம் தாமதித்தபின் ஜர்மனிக்குத் திரும்பினார்கள்.

சக்கரவர்த்தினி தங்கள் விவாக விஷயத்தைத் தங்கள் ராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்கவேண்டியது அவசியமாயிருந்தபடியால் அவர்கள் தங்கள் அரமனையில் ஒரு சபை கூட்டி, பின்வரும் பத்திரத்தை அவர்கள்முன் வாசித்தார்கள்: என்னுடைய பிரஜைகளின் க்ஷேமத்திற்கும் என் க்ஷேமத்திற்கும் அவசியமான ஒரு காரியத்தை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களைச் சபையாகக் கூட்டுவித்தேன். அந்தக் காரியம் என்னவென்றால்: 'நான் ஜர்மனி தேசத்து ஆல்பர்ட் பிரபுவை மணக்கத் தீர்மானித்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை நான் ஆழ்ந்த ஆலோசனையோடும் தேவாசீர்வாதம் அதில் இருக்குமென்ற நம்பிக்கையோடும் செய்திருக்கிறேன். எனக்கும் என் ராஜ்யத்திற்கும் முக்கியமாயிருக்கிற இந்த விஷயத்தை நீங்கள் அறியவேண்டியது தகுதியும் அவசியமுமாயிருக்கிறது. இது உங்களுக்கும் என் நேசப் பிரஜைகள் யாவருக்கும் உத்தம செய்திதான் என்று நம்புகிறேன்' என்பதாம். இந்த விவாகமானது ராஜ்ய தந்திர சம்பந்தமாகவல்ல, அன்பின் மூலமாகவே ஏற்பட்டுள்ளதென்று பிரஜைகள் யாவரும் அறிந்து ஆனந்த பரவசரானார்கள். மேலும் சக்கரவர்த்தினி மந்திராலோசனைச் சபையிலும் இந்தக் காரியத்தை வெளியிட்டு: 'சபையாராகிய நீங்கள் என் தெரிந்துகொள்ளுதலை அங்கிகரிப்பீர்களென்று நம்புகிறேன்' என்று பிரஸ்தாபித்தார்கள். பிற்பாடு மந்திராலோசனைச் சபையார் ஆல்பர்ட் பிரபுவின் செலவுக்கு வருஷவாரி முப்பதினாயிரம் பவுண் கொடுக்கத் தீர்மானித்தார்கள். ஆல்பர்ட் பிரபுவுக்கு ராஜ்யத்தில் எவ்வளவு செல்வாக்கிருக்கலாம் என்பதைக்குறித்து மந்திராலோசனைச் சபையில் பெருந்தர்க்கம் உண்டானது. கடைசியில் அவருக்கு மந்திராலோசனைச் சபையில் தவிர மற்ற இடங்களில் சக்கரவர்த்தினிக்கு அடுத்த சிரேஷ்

அதைச் சக்கரவர்த்தினி ராஜாங்கத்திற்குத் தெரிவித்தல்.





டத்துவம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். சக்கரவர்த்தினியும் தமது நாயகனுக்குத் தமக்கு இரண்டாவதான தலைமை சகல இடங்களிலும் கிடைக்கவேண்டு மென்று எழுதி முத்திரையிட்டார்கள்.

மிகவும் மகிமைபொருந்தின இந்த ராஜ விவாகத்தைப் பெப்ருவரிமீ

ஆல்பட் பிரபு சக்கரவர்த்தினிக்குப் போட்ட பரிசம்.

10உ நிறைவேற்றவேண்டுமென்று ஒழுங்கு செய்தார்கள். ஆல்பட் பிரபு தமது தகப்பனாரோடும் தமயனாரோடும் 8உ பக்கிங்ஹாம் அரமனை வந்து சேர்ந்தார். அவர் தமது நாயகிக்கு விவாக ஆபரணமாக நீல ரத்தினங்களும் வைர மணிகளும் பதித்த மார்பாபரணம் (Brooch) ஒன்று கொண்டுவந்தார்.

இந்த விவாக சம்பந்தமாய் இன்பமான ஒரு கதை சொல்லுவார்கள். அதென்னவென்றால்: விவாகத்திற்குமுன் காந்தர்புரி பிரதம கண்காணியார் சக்கரவர்த்தினியினிடத்தில் வந்து: 'ஆலயத்தில் நடக்கும் உங்கள் விவாகச் சடங்கு சம்பந்தமாய் நீங்கள் உங்கள் நாயகனுக்குச் சகல காரியங்களிலும் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குக்கொடுக்க வேண்டுமே. ராணியாகிய நீங்கள் உங்கள் புதிய பிரஜையாகிய ஆல்பட் பிரபுவுக்கு அப்படியெல்லாம் கீழ்ப்படிந்து நடக்க இயலுமா?

சக்கரவர்த்தினி சாதாரண ஸ்திரீயைப்போலவிவாகம் முடிக்கச் சம்மதித்தல்,

ஆதலால் உங்கள் விஷயத்தில் வாக்குத்தத்த வாசகத்தை மாற்றிவிடுவோமா' என்று கேட்க, அவர்கள்: 'நான் ராணியாகவல்ல, மற்ற எல்லா ஸ்திரீகளையும்போல ஒரு ஸ்திரீயாகவே விவாகச் சடங்குக்குள் பிரவேசிக்கிறபடியால், ஜெபப் புஸ்தகத்தின் ஒழுங்குக்கிசைய வாக்குக்கொடுப்பதே என் இஷ்டம்' என்று மகத்துவமாய் விடை பகர்ந்தார்கள்.

1840-ம்௵ பெப்ருவரிமீ 10உ சக்கரவர்த்தினியவர்களின் விவாகச் சடங்கு பரிசுத்த ஜேம்ஸ் ஆலயத்தில் நிறைவேறினது. சக்கரவர்த்தினியார் மணமகளாக ஆலயத்திற்குப் பவனிபோகும்போது அவர்களுடைய சிரசில் ரேந்தாத்தையல் முக்காடு பிரகாசித்துக் கொண்டிருந்தது; அவர்கள் கூந்தலில் நாரத்தமாலை நறுமணம் வீசிக் கொண்டிருந்தது; கழுத்திலும் காதிலும் ரத்தின ஆரமும் வைரமணியும் ஜொலித்துக்கொண்டிருந்தன; அரையில் அதிசோபிதம் பொருந்திய வெண்பட்டாடை விளங்கிக்கொண்டிருந்தது. பரலோகமும் பூலோகமும் பரமானந்திக்கக்கூடிய அவர்கள் சற்குணமும், அப்போது

விவாக உடை முதலியன.

தான் மலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்தைப்போன்ற அவர்கள் யௌவனமும், ஆச்சரியகரமான அவர்களுடைய அழகும், உலகத்தின்



மூன்றிலொரு பாகத்தை ஆட்சிசெய்கிற அவர்களுடைய அரச மகத்துவமும், அன்று நடக்கப்போகிற அவர்களுடைய அன்பின் மணமுமாகிய யாவும் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தின் ஜனங்களுடைய மனதைக் கவர்ந்தபடியால் அவர்கள் யாவரும் தெருக்களின் இருமருங்கிலும் நெருங்கி நின்று ஆலயத்திற்குப் போகிற ராஜ மகிஷியைப் பார்த்து: 'ராணியாரே, நீங்கள் வாழ்க வாழ்க' என்று ஆர்ப்பரித்தார்கள்.

ஆலயத்திலே காந்தர்புரி பிரதம அத்தியட்சரும் லண்டன் அத்தியட்சரும் விவாக ஆராதனையை நடத்தினார்கள். சக்கரவர்த்தினியும் ஆல்பட் பிரபுவும் பிரசங்க பீடத்திற்குமுன் சாமானிய கிறிஸ்தவர்களைப்போல வெகு தாழ்மையாய் நின்றார்கள். ஆராதனை ஆரம்பிக்குமுன் சக்கரவர்த்தினி தங்கள் சிரசைத் தங்கள் கையிலிறக்கிச் சில நிமிஷம் தனிஜெபம் பண்ணினார்கள். அத்தியட்சர் விவாகச் சடங்கை நிறைவேற்றும்போது ஆல்பட் என்றும் விக்றோரியா என்றும் அவர்கள் பேர்களைமாத்திரம் சொன்னாரேதவிர, அவர்களுடைய பட்ட நாமங்களை உபயோகிக்கவில்லை. சிரேஷ்ட அத்தியட்சர்: இந்த ஸ்திரீயைக் கைபிடித்துக் கொடுக்கிறதார் என்று கேட்டபோது, சசக்ஸ் பிரபு எழுந்து சக்கரவர்த்தினியின் கையைப் பிடித்துக்கொண்டு: 'நான்தான் கைபிடித்துக் கொடுக்கிறவன்' என்க, கண்காணியார் பிரபுவின் கையிலிருந்த சக்கரவர்த்தினியின் கையைப் பிடித்து ஆல்பட் பிரபுவின் கரத்திலே கொடுத்தார். பிற்பாடு ஆல்பட் பிரபு விவாக மோதிரத்தை எடுத்து அத்தியட்சருடைய கையில் கொடுக்க, அவர் அதைத் திரும்பவும் பிரபுவின் கையில் கொடுக்க, பிரபுவானவர் அதைத் தமது ராணி நாயகியின் விரலிலே போட்டார். அந்தச் சுப சமயத்திலே அநேக பீரங்கிகள் வெடிதீர்ந்தன; காலாட் படையின் துப்பாக்கிகள் ஆச்சரியமான பிரகாரமாய்ச் சப்தித்தன; லண்டன் பட்டணத்திலுள்ள மணிகளெல்லாம் அதிக இன்பமான தொனியுடனே

விவாகச் சடங்கு

ஆடின. இதனால் லண்டன் நகரிலுள்ள சகல ஜனங்களும், இப்போதுதான் எங்கள் ராணியார் மணமகளானார்கள் என்ற மகிழ்ச்சியான சோபன சங்கதியை அறிந்துகொண்டார்கள். விவாகம் முடிந்தவுடன் சசக்ஸ் பிரபு சக்கரவர்த்தினியின் கன்னத்தில் அதிக அன்பும் மரியாதையுமாய் முத்தமிட்டார். பிற்பாடு சக்கரவர்த்தினி காலஞ்சென்ற தங்கள் பெரிய தகப்பனாரின் ராணியாகிய ஆதிலையாள் அம்மாளிடத்திலே போய் அவர்களை அன்பாகத் தழுவி முத்தமிட்டார்கள். ஆல்பட் பிரபுவும் அந்த வயோதிக ராணியாரின் கரத்தைப் பிடித்து முத்தஞ்செய்தார். பின்பு சக்கரவர்த்தினியும் அவர்கள் நாயகனும் மற்றும் ராஜபரிவாரத்தாரும் உவின்ஸர் மாளிகைக்கு ஜனங்களின் ஆர்ப்பரிப்பின் இடையிலே வெகு சந்தோஷமாய்

ரதமேறிச் சென்றார்கள். அவர்கள் சென்ற வீதிகளிலே ஜனங்கள் தோரணங்களும் கொடிகளும் கட்டித் தீபாலங்காரம் செய்து இது தேவலோகமோவென்று சொல்லத்தக்கதாகத் தங்கள் நகரத்தை அதிமகத்துவமாய்ச் சிங்காரித்திருந்தார்கள்.

(இன்னும் வரும்)



## JAPAN (*Cont.*)

## ஜப்பானியர் உண்ணல்

(தொடர்ச்சி)


ஜப்பானில் சாப்பிட உட்காரும் ஒவ்வொருவருக்கு முன்னாலும் பெட்டிபோன்ற ஒருவித நாற்காலி இருக்கும். அதன்மேல் ஒரு தட்டத்தை வைத்து, அதில் அந்தஸ்துக்குத்தக்கபடி பல சிறுக் கிண்ணங்களில் சோறு, குழம்பு, பலவகைப் பதார்த்தங்கள் ஆகிய இவை இருக்கும். ஜப்பானியரது பிரதான போஜன பதார்த்தம் அரிசியே.



அதோடு மீன், கடற்கீரை, கடற்புழு, மூங்கில்முளை, தாமரைக் கிழங்கு முதலிய இன்னும் பலவித விபரீத பதார்த்தங்களைக் கடிப்பானாகத் தொட்டுக்கொள்வார்கள். ஆனால் இவைகளில் மீனையும் புழுவையும் புத்தர்களில் கண்டிப்பான வைதீகர்கள் விலக்கியிருக்கிறார்கள். மற்றப்படி எல்லாருமே அதைத் தின்பவர்கள்தாம். ஜப்பானியர் சாப்பிடும் விதம் வெகு விந்தையானது;—இடதுகையில் சோற்றுக்கிண்ணத்தை வைத்துக்கொண்டு வலதுகையில் இரண்டு அழகிய சிறு குச்சிகளைப் பிடித்துக்கொண்டு அவற்றால் சோற்றை வாயில் தட்டுவார்கள்; வெகு சிறு துண்டையும் எடுத்துவிடுவார்கள்: கிண்ணியில் ஒரு பருக்கையும் நின்றுவிடாதபடி அவ்வளவு சுத்தமாய் வாரிவிடுவார்கள். சாப்பிடும்போதும் தேயிலைக் கஷாயம் குடித்தே தீர்வார்கள். இன்னும் அதை இப்போதுதான் குடிப்பது என்பது கிடையாது; எந்த நேரத்திலும் பருகுவார்கள். அது இல்லாத ரெயில்வே ஸ்டேஷன் இல்லை; அதற்கு விலையும் அதிகம் இல்லை. கோப்பை ஒன்று நாலே ஸென். (ஜப்பான் ஸென் ஒன்று நம் கால் அணாவுக்குச் சரி.) வெகு மலிவு. ஜப்பானில் எல்லாப் பாகங்களிலுமே தேயிலை பயிராகிறது. அறுத்த இலையை, கொஞ்சம் பசுமை நிறம் இருக்க உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்வார்கள். கஷாயம் வேண்டும்போது அந்த இலையை வெதுவெதுப்பாயிருக்கும் தண்ணீரில் போட்டுவிட்டால் பானம் ஆய்விட்டது. சர்க்கரை வேண்டுமா! பால் வேண்டுமா! ஒன்றும் தேவையில்லை. ஆகவே அதில் ருசி அதிகம் இராது; தாகத்தைத் தணித்து சுறுசுறுப்பைத் தரும். இப்படிப்பட்ட கஷாயத்தைக் கடைக்காரர்கள் தங்களிடம் சாமான் வாங்க வருகிறவர்களுக்குச் சும்மா கொடுப்பார்கள். ஜப்பானில் தேயிலைமாத்திரமே அல்லாமல் சுடுகிற அரிசிக் கஞ்சியையும் பானமாகப் பருகுவதுண்டு. அத்தேசத்துக் கலியாணச் சடங்கும் இந்தக் கஞ்சியைப் பெண்ணும் மாப்பிள்ளையும் மாறி மாறி மூன்றுதரம் குடிப்பதிலேயே அடங்கியிருக்கிறது.

ஜப்பானியரில் வயதுவந்த ஒவ்வொருவனும் சுருட்டுப் பிடிப்பது வழக்கம்போலும். தேயிலைக் கஷாயத்தைப்போல இதுவும் தீங்கற்றதுதான். அவர்கள் புகையிலை மணம் இல்லாதது; வெகு சீக்கிரம் புகைந்துவிடும்; சாம்பலை அப்போதைக்கப்போதே தட்டிவிடுவார்கள். இப்படியானதால் நாடகக் கொட்டகையில் சதா சுருட்டுப் பிடித்துக்கொண்டேயிருந்தாலும் அவ்விடத்திய ஆகாயத்திற்கு யாதொரு கெடுதியும் ஏற்படுவதில்லை. நாடகம் பார்க்க வருவோர்களுக்கு அவர்கள் ஆசனங்களில் அமர்ந்ததும் ஒரு ஆள் ஒரு பெட்டி தருவான். அதில் கொஞ்சம் கரியும், சாம்பலைத் தட்ட ஒரு மூங்கில் சிறு தட்ட

மும், கொஞ்சம் தேயிலைக் கஷாயமும் இருக்கும். இப்படியாக அத்தேசத்தில் மனுஷர்முதல் எல்லாம் சிறுத்தும் சிங்காரமாயும் இருக்கும். ஜப்பானியர் உட்காரும் மாதிரி வெகு விசித்திரமானது;—மண்டியிட்டு, கணுக்கால்களை ஒன்றின்மேல் ஒன்றாகக் குறுக்கே போட்டு, குதிங்கால்களின்மேல் பாரத்தை விட்டு அமர்வார்கள். காற்சட்டை முதலிய யூரோப்பிய உடை உடுப்பவர்கள் நம் பாட்டிமார்களைப் போலக் காலை முன்னால் நீட்டிக்கொண்டு உட்காருவார்கள். ஆனால் இப்போது வரவர அந்நியரோடு ஊடாடிப் பழகப் பழகத் தங்களை ஆசானுபாகுகள் ஆக்கிக்கொள்ள முயலுகிறார்கள். இதற்கு இணங்க முன்போல் காலை மடித்துத் தரையில் உட்காருவது ஆகாது; அதைத் தவிர்க்கவேண்டும் என்ற கட்டளை பிறந்திருக்கிறது.



ஜென்ரிக்ஷா

ஜப்பானியர் தங்கள் ஸ்திரீகளை மதிப்பதில்லை. அங்கே வெந்நீர், தேயிலைக் கஷாயம் ஆகிய இவைபோன்ற அற்பமான பொருள்களையும் சொல்லும்போது நம் தேசத்திய 'திரு' போன்ற அடைமொழி ஒன்றைச் சேர்த்தே சொல்லுவார்கள். ஆனால் ஸ்திரீகளை அவற்றினும் கேடாகவே கருதுகின்றார்கள்போலும். அங்கே ஸ்திரீகள் ஏழுதும் விதம் புருஷர்களைப்போல் அல்ல; அதைச் சுலபமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். பருத்துப் பலிஷ்டராயுள்ள மேற்குத் தேசத்தார் மாமிசத்தையும் பாலையும் மிகுதியாக உபயோகிப்பதைப் பார்த்துத் தாங்க



ளும் பாலை ஏராளமாய்க் குடிக்கவேண்டும் என்று சொல்லி அதற்கு
ஒரு ராஜாங்க உத்தரவும் பிறந்திருக்கிறது. இதற்கு முன்மாதிரியாக
அத்தேச ராணுவத்தில் வீரன்முதல் பேரிகைப் பையன்வரைக்கும்
உள்ள எல்லாருக்கும் பாலை அநுதினமும் கொடுத்துவருகிறார்கள்.
ஜப்பானில் பிராணி வர்க்கங்கள் அநேகம் கிடையா. ஆடு என்
பதே அங்கில்லை; குதிரைகளும் மிகச் சொற்பம்; மாடுகளும் சிலவே.
ஆதலால் வண்டிகளை மனுஷர்களே இழுக்கவேண்டியிருக்கிறது.
வண்டியைப் புருஷன் ஒரு பக்கமும் ஸ்திரீ மற்றப் பக்கமும் பிடித்து
இழுத்துச் செல்வார்கள். ஒவ்வொருவர் தோளிலும் ஒவ்வொரு
கயிறு இருக்கும். பல சமயங்களிலும் கிழவி ஒருத்தி தன் சிறு பெண்
ணின் உதவியையே கொண்டு பாரம் ஏற்றின வண்டி ஒன்றை இழுப்
பாள். இது என்ன பரிதாபம் பாருங்கள்!
ஜப்பானிய ஸ்திரீகளும் குடியானவர்களும் மிகுந்த கஷ்ட ஜீவ
னமே செய்வதால் அவர்களுடைய ஆயுள் அற்ப ஆயுளாகவே முடி
கிறது. தலைச்சுமை என்பது ஜப்பானிலே இல்லை. குழந்தைகளைப்
படத்தில் காட்டியிருக்கிறபடி முதுகில் கட்டிக்கொள்வார்கள். இந்
தச் சுமையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் சிறுவர்கள் வெகு நன்
றாய் ஓடியாடி விளையாடுவார்கள். பின் வயதுவந்த காலத்தில் கனத்த
சுமைகளை எடுக்க நேர்வதுபற்றித்தானோ இந்தப் பழக்கம். அக்குழந்
தைகளும் அந்த நிலையில் வெகு சௌஸ்தமாகவே இருக்கின்றன.
இப்படியிருந்தாலும் ஜப்பானியர்கள் தங்கள் குழந்தைகளை அத்தனை
கண்ணும் கருத்துமாய்ப் போற்றி வளர்க்கிறார்கள். அந்தக் குழந்தை
களும் பெரியவர்களாகும்போது தங்கள் பெற்றோர்களை வெகு பக்தி
சிரத்தையுடன் பாராட்டுகிறார்கள். பெரியவர்களுக்காகத் தாங்கள்
எந்தவிதக் கஷ்டத்தையும் மகிழ்வுடன் தாங்கத் தயாராயிருப்பார்கள்.

## A GREEN RAVEN

## பச்சைக் காக்கை

ஒருநாள் சுலோசனை என்னும் கிழவி ஒருத்தி கவலையால் வாடிய
முகத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அதைக் கண்ட அவள்
புருஷன் தேவதாசன் அவளைப் பார்த்து 'ஏ! சுலோசனா! நீ என்
அத்தனை விசனப்படுகிறாய்?' என்று கேட்டான். அதற்கு அவள்
'பிராண நாதா! என் வருத்தத்தின் காரணம் தங்களுக்கு வெகு நன்
றாய்த் தெரியுமே! நமக்கோ வயசாய்விட்டது. அதிலும் தங்களுக்கு
நோய் ஒரு பக்கம், வேலை எதையும் செய்யமுடியாது. வயிறோ கடிக்

கிறது, இந்த நிலையில் இருக்க யாருக்குத்தான் பிடிக்கும்?' என்று சொல்லி இன்னும் அதிக வருத்தத்தையே காட்டினாள். 'சரி, போதும் நிறுத்து. நாம் தேவனைக் குற்றங்கூறுவதாக ஏற்பட்டுவிடப்போகிறது. அவர்தாமே தம் ஜனங்களைச் சாப்பாட்டிற்காக இரக்கச் செய்வதில்லை என்று வாக்களித்திருக்கிறாரே' என்று சொல்லி அவளது துயரை ஆற்றப் பார்த்தான். உடனே சுலோசனையும் 'சரி! சரி! நாமும் இப்போது அதற்குக் கிட்டத்தட்ட வந்துவிட்டோமே. இந்த வயசு காலத்தில் அடைக்கலான் குருவிக்கும் போதுமான உணவு நம்மிடத்தில் இல்லையே; நான் எப்படிச் சகிப்பேன்' என்றாள். இதைக் கேட்ட கிழவன் தேவதாசன் சிரித்து 'ஆ! நல்ல சமயத்திலேயே அந்தச் சிறிய அடைக்கலான் குருவியை எனக்கு ஞாபகப்படுத்தினாய். ஏ! என்னுயிர்க் காதலியே! இயேசுகிறிஸ்துவானவர், நம் பராபரனுடைய கிருபையைப்பற்றி நமக்குச் சொல்ல வந்தபோது எடுத்துக் காட்டியதும் அதுதான் அல்லவா?' என்று தேவ கிருபையை விஸ்தரித்தான்.

ஆனால் அந்தக் கிழவி இதிலும் திருப்தி அடையாமல் 'ஆ! அந்தக் கதை இங்கே எல்லாருக்கும் தெரியும். சாப்பாட்டிற்கு வழி என்னவென்றால் கருணாகரக் கடவுளாம், வேதாகமங்களாம், என்ன இதே பேச்சாயிருக்கிறதே உங்களுக்கு!' என்று அதட்டினாள். பிறகு கொஞ்சநேரம் மௌனமாயிருந்த கிழவன் 'சரி, பாத்திரங்களை எல்லாம் தயாராய் வை' என்றான். அப்படியே அவளும் செய்தாள். பிறகு 'ஹ ஹ ஹா! இதோ பாருங்கள் இந்த வெறுங் கிண்ணியையும் கோப்பையையும். இனி ஒரு காகத்தை வரவழையுங்கள்' என்று கேலிபண்ண ஆம்பித்தாள். உடனே தேவதாசன் 'ஓ! ஹோ! கேலியா? நம் பரம பிதாவின் கருணை அதுவானால் 'காகம்' வாராதா என்ன? பக்தன் எலியாவுக்கு கறுப்புக் காகம் வந்து உணவளிக்கவில்லையா? நமக்கு வரும் தேவதூதன் எந்த நிற இறகுள்ளவனோ! நமக்கு போஜனம் வந்து சேரும் என்பது என்னவோ திண்ணம்! பாத்திரத்தைச் சரியாய் வைத்துவிட்டாய் அல்லவா? சரி. இனி இப்புறம் வா; பிரார்த்திப்போம்' என்றான்.

அப்படியே பக்தனை கிழவனும் முழங்காற்படியிட்டு வெகு இரக்கமாயும் கனிவாயும் பிரார்த்தித்தான். அதில் தன் வெறுங் கிண்ணிகளைக் காட்டுவதும், அவற்றில் தனக்குச் சாப்பாடு வந்துசேரும் என்றதற்காகத் தான் செய்துள்ள ஏற்பாடுகளையும், தேவன் தன் குழந்தைகளைப் போஷிக்க மறப்பதில்லை என்ற வாக்கையும் இடையிடையே குறிப்பிடுவதுமாயிருந்தான். சுலோசனையும் தான் நம்பிக்கை இல்லாதிருந்ததற்காக வெட்கமடைந்து பின்பு கூட முழங்காலிட்டுக் கடைசியில் இருவரும் எழுந்தார்கள்.



அப்போது இருந்தாற்போலிருந்து ஜன்னலண்டை பஸ் பஸ என்ற சத்தம் கேட்டது. உடனே கிழவியும் 'ஆ! அதென்ன! தேவ காகமா?' என்று சொல்லிக்கொண்டே மகிழ்ச்சியாய்ப் பார்க்க ஜன்னல் சுவர்மேல் வெளியே ஒரு பச்சைக்கிளி இறகை அடித்துக்கொண்டிருக்கக் கண்டாள். ஜன்னலைத் திறக்க அதுவும் உள்ளே வந்து ஒரு மூலையில் உட்கார்ந்தது. 'பார்த்தீர்களா! கறுப்புக் காகமாம், தேவதூதனாம், என்னென்னவோ சொன்னீர்களே! நமக்குக் கிடைத்திருப்பது பச்சைக்கிளி பாருங்கள்' என்றாள். அதற்குக் கிழவனும் 'இது யாரோ ஒரு ராஜகுமாரத்தியின் கைக்கிளியாயிருக்கும். சரி. ஒரு ஈர்க்கங்கூடை போட்டு அதை மூடிவை; பறந்துவிடப்போகிறது' என்று எச்சரிக்கை செய்தான். அப்படியே அவளும் செய்துவிட்டு 'சரி. சோறெங்கே? இந்தக் கிளியையோ தின்ன முடியாது' என்று பழைய பாட்டையே ஆரம்பித்தாள். 'அடடா! என்ன அவசரம்! கொஞ்சந்தான் பொறேன்' என்று அவளைச் சமாதானப்படுத்தினான்.

இதற்குள்ளாக, தெருவில் பறைச்சத்தம் கேட்டது. அதை சுலோசனை விசாரிக்க அந்தப் பறையடித்தவன் 'ராஜா மகள் வளர்த்த பச்சைக்கிளி பறந்தோடிவிட்டது. அதைப் பிடித்துக் கொடுப்போருக்குத் தக்க வெகுமதி கிடைக்கும்' என்றான். அதைக் கேட்ட சுலோசனை 'ஏ! அது என்னிடம் இருக்கிறது; இனி பறை அடிக்கவேண்டாம்' என்றாள். அவனும் அதோடு நிறுத்திவிட்டுப் போய்விட்டான்.

உடனே சுலோசனை தன் புருஷனைப் பார்த்து 'தேவன் நம்மை மறக்கவே இல்லை; நமக்கு வெகுமதி அளித்தேவிட்டார். இனி நான் போய் இந்தக் கிளியைக் கொடுத்துவிட்டு, பணம் வாங்கிக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லி எழுந்துபோனாள். கிழவன் தனித்து ஆழ்ந்த ஜெபத்திலிருந்தான்.

போன சுலோசனையும் பணம் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தாள். வரும்போதே ஐந்தாறு அப்பமும் வாங்கிக்கொண்டாள். வந்ததும் 'நமக்குக் கிடைத்திருப்பது சுமார் எத்தனை ரூபா சொல்லுங்கள் பார்க்கலாம்' என்று தன் புருஷனைக் கேட்டாள். புருஷனும் 'ஐந்து ரூபா' என்றான். 'சரிதான்! இத்தனைதானா? இன்னும் அதிகம்' என்றாள் கிழவி. பின் பக்தன் தேவதாசன் 'பத்து' என்றான். 'ஊஹூம்! இன்னும் மேலே' என்று இப்படி வெகுநேரம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் 'முப்பது ரூபா' என்றாள். உடனே கிழவன் ஆனந்தக் கண்ணீர்விட்டு 'சரி. நாம் அதற்காக அவருக்குத் துதிபாடலாம். முழங்காலிடு. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று நான் முன்னேயே சொல்லவில்லையா? பார், முப்பது ரூபா!' என்றான். 'ஐயோ! என் அவநம்பிக்கையைக்

கடவுள் மன்னிப்பாராக' என்று பலவிதமாகக் கிழவி பிரலாபித்துப் பிரார்த்தித்துவிட்டு எழுந்து, 'இம்முறை தேவன் பச்சைக் காக்கையின் மூலமாய் நமக்கு உணவளித்தார்' என்று சொல்லிக்கொண்டே இருவரும் அப்பங்களைத் தின்றார்கள்.

இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் தேவன் தம்முடைய வாக்கைப் பரிபாலிக்கத் தவறுவதில்லை என்பதை ஞாபகத்தில் வைப்பார்களாக.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

## THE BRINGING UP OF CHILDREN

## தாய் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம்

**(By Mrs. Jane William, Pasumalai.)**

'இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்' என்றபடி பிள்ளைகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டவர்கள். ஆகையால் அவர்கள் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். 'இதை எனக்கு வளர்த்திடு' என்று சொல்லி பார்வோனின் மகள் மோசேயை அவன் தாயிடம் ஒப்புவித்ததுபோலவே கர்த்தரும் அவருக்காக வளர்க்கும்படி பிள்ளைகளைத் தாய்மாரிடம் ஒப்புவிக்கிறார். பிள்ளைகள் விலைமதிக்கப்படாதவர்கள். அவர்கள் வளர்ந்த தன்மைக்குத்தக்கதாக அநேக ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் உத்தம ஊழியர் ஆவார்கள், அல்லது தங்களையும் கெடுத்து மற்றனேகரையும் கெடுக்கிறவர்களாவார்கள். சகல நல்ல விஷயங்களிலும் நாம் பின்பற்றுகிற இயேசுவானவரே இவ்விஷயத்திலும் ஒரு நல்மாதிரியாயிருக்கிறார். இயேசுவானவர் ஞானத்திலும், வளர்ச்சியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிக விருத்தியடைந்திருந்தார். இயேசுவைப்போலவே மேற்கண்ட நாலு விஷயங்களிலும் தன் பிள்ளைகளும் வளரும்படி தாய் முயற்சிசெய்யவேண்டும்.

ஆத்துமாவும் மனமும் தங்கள் கடமைகளைச் சரியாய்ச் செய்வதற்கு, சரீரம் சுகமும் பலமுமுள்ளதாயிருக்கவேண்டும் என்பது அத்தியந்த அவசியம். பிள்ளைகள் வியாதிக்காரரும் பலவீனருமாய்த் தங்களுக்கும் பிறருக்கும் ஓயாக்கவலையும் குறையாப் பாரமுமாயிருப்பது கடவுளுடைய பிரியமல்ல. பிள்ளைகளை ஒடுக்கமான தொட்டில்களில் தூங்கச்செய்வதும், மிதமிஞ்சி மூடவயித்தியம் செய்வதும், அம்மைகுத்தப் பயப்படுவதும், பருவத்துக்குமுன் நடைபழக்கலும், நெடுநாள் பால் மறக்கடிக்காமலிருப்பதுமான கெட்ட பழக்கங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. 'கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக்



கட்டு' என்றபடி பிள்ளைகளின் சரீரமும் உடுப்பும் எப்போதும் சுத்தமாயிருக்கவேண்டும். 'அசுத்தம் நோய்க்குத் தாய்.' பிள்ளைகள் சுத்த ஆகாயத்தைச் சுவாசித்து, மட்டாய்ச் சாப்பிட்டு, தேகாப்பியாசம் செய்து, ஒழுங்காய் நித்திரைசெய்யப் பழகவேண்டும். தாய் தன் சுகத்தைப் பேணுதல் பிள்ளைகள் சுகபலமுள்ளவர்களாயிருப்பதற்கு அவசியமானது.

'ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, எதைச் சம்பாதிக்காவிட்டாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்' என்றபடி, பிள்ளைகளின் மனது கல்வியினால் ஞானமடையவேண்டியது அவசியம். பெண்பிள்ளைகளும் படிக்கவேண்டும். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்துக்கு' என்று சொல்லும் காலம் போய்விட்டது. பிள்ளைகளின் ஐம்புலன்களும் விருத்தியடையத்தக்க கிண்டர்கார்ட்டன் முறைகளை அனுசரிப்பது உசிதம். கைத்தொழிலை அற்பமாய் எண்ணாமல் யூதப்பெற்றோரைப்போலப் பையன்களுக்கு ஏதாவதொரு கைத்தொழில் கற்றுக்கொடுப்பது நலம். இயேசுவானவர் தச்சுவேலையும், பவுல் கூடாரவேலையும் கற்றிருந்தார்கள் அல்லவா? பெண்கள் சமைக்கவும், தைக்கவும், குடித்தனம் நடத்தவும் பழகவேண்டும்.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்றபடி சிறு பிராயப் பழக்கமே ஜீவியப் பழக்கமாகிறது. பிள்ளைகளிடத்தில் உண்டாக்கவேண்டிய முதல் குணம் கீழ்ப்படிதல். கீழ்ப்படிதல் உண்டாகிவிட்டால் மற்றெல்லா நற்குணங்களும் வெகு லேசாய் வந்தமையும். நமது நாட்டில் பொய் பேசும் தீயகுணம் வெகு சாதாரணமாயிருக்கிறதென்றும், தாய்மார் பிள்ளைகளுக்குப் பாலூட்டும்போதே பொய்யூட்டி வளர்க்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். எப்போதும் சிறு காரியங்களிலும் உண்மையையே பேசப் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். பெரியோருக்கு வந்தனம் செய்யவும், அந்நியரை உபசரிக்கவும், ஏழைகளுக்கு அன்பாய் தர்மம் செய்யவும், பெற்றுக்கொண்ட நன்மைக்கு நன்றி வார்த்தை கூறவும், விண்ணப்பம் செய்யும்போது 'தயவுசெய்து' என்று ஆரம்பிக்கவும் பழக்கவேண்டும். பிள்ளைகள் உடையின்றித் திரியவும் அநாகரீகமான நகைகளை அணியவும் (ஐரோப்பியரைப்போல உடுக்கவும்) கூடாது. அவசியமானபோது பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதும், அன்பாய்க் கண்டிப்பதும், பிரம்பால் தண்டிப்பதும், அவர்களோடு தனித்து ஜெபிப்பதும் தாயின் கடமை. 'தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சேலை.' ஆகையால் தாயின் முன்மாதிரி மிகச் சிறந்ததாயிருக்கவேண்டும்.

'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்' என்றபடி பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படும்படி வளர்க்கவேண்டும். பிள்ளை

கள் குணப்படுதலே தாயின் முதல் நோக்கமும் வாஞ்சையுமாயிருக்க வேண்டும். சிறு பிராயமே குணப்படுவதற்கு ஏற்றகாலம். சிறுவயதில் தன் இருதயத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடாத பிள்ளை ஒருபோதும் குணப்படப்போகிறதில்லை. ‘அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?’ நாள்தோறும் குடும்ப ஜெபம் வைத்து, வேதவாக்கியங்களையும் சரித்திரங்களையும் பாட்டுகளையும் கற்றுக்கொடுத்து, இயேசுவின் அன்பைப்பற்றி அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் அவரை நோக்கி ஜெபிக்கப் பழகவேண்டும். தீமோத்தேயுவைப்போலப் பிள்ளைகள் பரிசுத்த வேதத்தை இளமைப் பிராயமுதல் நேசித்துக் கற்றுக்கொள்ளவும், சாமுவேலைப்போலக் கர்த்தரோடே சம்பாஷித்து அவருக்கு உத்தம பணிவிடை செய்யவும் பழக்கவேண்டியது தாயின் விசேஷித்த கடமை. சிறு பிள்ளைகளைத் தம்மிடம் அழைத்து அவர்களை அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்த பாலர் நேசனிடம் தங்கள் பிள்ளைகளைக் கொண்டுவந்து, அவர் அவர்களை ஆசீர்வதிக்கவும், அவர்கள் அவரைத் தங்கள் நேசனாக ஏற்றுக்கொள்ளவும் பிரயாசப்படவேண்டும். ‘கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா’ என்பதை உணர்ந்து தங்கள் சொந்த அறிவையும் கெட்டிக்காரத்தனத்தையுமே நம்பியிராமல் தேவனுடைய உதவியை அடிக்கடி தேடி, பிள்ளைகளோடும் பிள்ளைகளுக்காகவும் முழங்காலில் நிற்கப் பழகியதாய், பிள்ளைகளால் வரும் பாக்கியத்தையும் கர்த்தரால் வரும் ஆசீர்வாதத்தையும் அடைவாள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ௵ ஏப்பிரல்௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | சங். | 30. | | 11 | செ. | சங். | 37. | 1—11 | 21 | வெ. | சங். | 45. | 1—6 |
| 2 | ஞா. | ,, | 29. | | 12 | பு. | ,, | 37. | 12—26 | 22 | ச. | ,, | 45. | 7—17 |
| 3 | தி. | ,, | 31. | 1—13 | 13 | வி. | ,, | 37. | 27—40 | 23 | ஞா. | ,, | 46. | |
| 4 | செ. | ,, | 31. | 14—24 | 14 | வெ. | ,, | 38. | | 24 | தி. | ,, | 47. | |
| 5 | பு. | ,, | 32. | | 15 | ச. | ,, | 39. | | 25 | செ. | ,, | 48. | |
| 6 | வி. | ,, | 33. | 1—9 | 16 | ஞா. | ,, | 40. | 1—11 | 26 | பு. | ,, | 49. | 1—12 |
| 7 | வெ | ,, | 33. | 10—22 | 17 | தி. | ,, | 42. | | 27 | வி. | ,, | 49. | 13—20 |
| 8 | ச. | ,, | 34. | 1—10 | 18 | செ. | ,, | 43. | | 28 | வெ. | ,, | 50. | 1—15 |
| 9 | ஞா. | ,, | 34. | 11—22 | 19 | பு. | ,, | 44. | 1—8 | 29 | ச. | ,, | 50. | 16—23 |
| 10 | தி. | ,, | 36. | | 20 | வி. | ,, | 44. | 9—26 | 30 | ஞா. | ,, | 51. | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE 10 MAY 1911 MADRAS


# மாதர் போதினி

No. 161 மே 1911 No. 5


## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

அந்த வருஷம் பெப்ருவரி௴ 28௳ ஆல்பட் பிரபுவின் தகப்பனார் ஜர்மனிக்குப் புறப்படவும், ஆல்பட் பிரபு தமது தகப்பனாரை விட்டு எப்போதும் பிரிந்திருக்கவேண்டுமே என்ற எண்ணத்தினால் மிகவும் துக்கமுடையவராயிருந்தார். இதைக்குறித்துச் சக்கரவர்த்தினி தங்கள் நாளாகமக் குறிப்புப் புஸ்தகத்திலே: ‘என்னுடைய பாசமுள்ள பர்த்தாவின் மனமானது எவ்வளவோ பரிதபிக்கிறது.

ஆல்பட் பிரபு தம்து தந்தை முதலியவர்களை விட்டுப் பிரிதல்.

அவர் எனக்காகத் தமது பிதாவை விட்டார், தமது சகோதரனை விட்டார், தமது சிநேகிதர்களை விட்டார், தமது தேசத்தையும் விட்டார். நான் அவருக்கு என்ன செய்யப்போகிறேனோ! நான் அவருக்குப் பாக்கியமும் பரிசுத்தமும் அன்பும் ஆதரவுமான மனைவியாயிருப்பேனாக. ஆசீர்வாதம் நிறைந்த என் நாயகரை நான் சந்தோஷிப்பித்துத் திருப்தி செய்வேனாக. அவர் ஜீவியத்தைப் பாக்கியமுள்ளதாக்க என்னால் இயன்றதையெல்லாம் இன்பமாய்ச் செய்வேனாக’ என்று எழுதியிருக்கிறார்கள். பிற்பாடு ஆல்பட் பிரபுவின் சகோதரனாகிய எர்னஸ்ற் பிரபுவும் தமது சகோதரரைவிட்டு விடைபெற்றுத் திரும்பினார். அப்போது ஆல்பட் பிரபுவின் கண்களிலிருந்து தாரைதாரையாய்க் கண்ணீர் வடிந்தது.

விக்டோரியா சக்கரவர்த்தினியையும் ஆல்பட் பிரபுவையும்போல ஜோட்டுக்கு ஜோடும், ஈட்டுக்கு ஈடும், அன்புக்கு அன்பும், ‘ஆதரவுக்கு

ஆதரவுமான நாயகர் நாயகிகள் அநேகம் பேர் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால் சக்கரவர்த்தினி இல்லற இன்பத்திலேயே முற்றிலும் மூழ்கிப்போனார்களென்று எண்ணலாகாது. அவர்கள் இருதயமானது விஸ்தாரமான நேசமுடையது. அது சகல ஜனங்கள் பேரிலும் சென்று சகலருக்கும் உதவிபுரிய அவர்களை ஏவிக்கொண்டிருந்தது. ஆதலால் அவர்கள் இல்லற தர்மத்தோடு ராஜ்ய தர்மத்திலும் அதிக சிரத்தையுடையவர்களாயிருந்து, தங்கள் ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட ஜனங்களின் வாழ்வை விருத்தி செய்யத் தங்களால் இயன்ற சகல சிரமங்களையும் பட்டார்கள். இவ் விஷயத்திலே ஆல்பட் பிரபுவும் தமது ஆலோசனையினாலும் முயற்சிகளினாலும் ராணிக்கு அதிக உதவிபுரிந்தார்.

*ஈட்டுக்கு ஈடும் ஜோட்டுக்கு ஜோடும்.*

## இல்லற காண்டம்

ராஜ மகிஷியும் அவர்கள் நாயகனும் தினந்தோறும் ஒன்பது மணிக்குக் காலைச் சாப்பாடு சாப்பிட்டு உலாவப் போவார்கள். அவர்கள் அதிகமாய் உலாவுவது பக்கிங்ஹாம் அரமனையைச்சேர்ந்த நந்தவனத்திலேதான். அந்த வனத்திலே பிரபுவானவர் அநேகவிதமான ஜந்துக்களையும் நீர்ப்பறவைகளையும் வளர்த்து வந்தார். அவைகளுக்கு இரைபோடுதலும் அவைகளை அழைத்தால் வரும்படி பழக்குதலும் அவருடைய இன்பமான வழக்கமாயிருந்தது. உலாவித் திரும்பி வந்தபின் தத்தமக்குரிய வேலைகளைப் பார்ப்பார்கள். பிற்பாடு பிரபுவானவர் தமது ராஜநாயகி கேட்கத்தக்கதாக நல்ல பத்திரிகைகளையும் நூல்களையும் இன்பப்பட வாசிப்பார். பகல் இரண்டு மணிக்கு மத்தியானச் சாப்பாடு நடக்கும். அதற்குப்பின் முதல் மந்திரி ராஜ்யபார விஷயமான காரியங்களையும் ஒப்பம் வைக்கவேண்டிய பத்திரங்களையும் கொண்டுவருவார். சாயந்திரம் ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடையில் சக்கரவர்த்தினியும் அவர்கள் பர்த்தாவும் ரதத்திலேறி மீண்டும் உலாவப் போவார்கள். இரவு எட்டு மணிக்குப் பிரபுக்களோடுகூட இராச்சாப்பாடு நடந்தேறும்.

*விவாகத்திற்குப் பின் சமயத்தைச் செலவு செய்த விதம்.*

ஆல்பட் பிரபுவானவர் தரித்திரருக்கும், தனவான்களுக்கும், கற்றோருக்கும், மற்றோருக்கும், மந்திராலோசனைச் சபையிலுள்ள இருகட்சியாருக்கும் ஒன்றுபோலவே நிர்ப்பட்சபாதமுடையவராயிருந்தார். அவருடைய இல்வாழ்க்கையின் ஆரம்பத்தில் மந்திராலோசனைச் சபையிலுள்ள ஒரு கட்சிக்காரர் அவர்மேல் பிரியமற்ற

*ஆல்பட் பிரபுவை யாவரும் நேசித்தல்.*



OFFICE OF ... OF BOOKS
REGISTERED
10 MAY 1911
MADRAS.

வர்களாயிருந்தாலும் பிற்பாடு அவருடைய தாழ்மையான சிந்தையையும் தயவான குணத்தையும் நீதியான நடபடிகளையும் கண்டு அவரை அதிகமாய் மதிக்கவும் சிநேகிக்கவும் ஆரம்பித்தார்கள்.

விக்றோரியா சக்கரவர்த்தினி சகல பாக்கியங்களும் பொருந்தினவர்கள் என்று பலரும் சொல்லுவது மெய்தான். அவர்களுக்கு அறிவின் பாக்கியமும் அறநெறியின் பாக்கியமும் உண்டு; அன்பின் பாக்கியமும் அந்தஸ்தின் பாக்கியமும் உண்டு; சரீர சுக பாக்கியமும் தகுந்த புருஷ பாக்கியமும் உண்டு. இவைகளோடு அவர்கள் அதிகமான புத்திர பாக்கியமுடையவர்களாகவுமிருந்தார்கள். 1840-ம் ௵ நவம்பர் ௴ 21௳ அவர்களுடைய ஜேஷ்ட புத்திரியாகிய ஆதிலையாள் என்னும் ராஜ பெருமாட்டி பிறந்தார்கள். பிரசவ அறையிலே சக்கரவர்த்தினியுடைய தாயாராகிய கென்ற் பெருமாட்டியும், ஆல்பட் பிரபுவும் சில வைத்தியர்மாரும், ரட்சைத்தாயாகிய (Nurse) லில்லி அம்மாளும், வேறு சில பெருமாட்டிகளும் இருந்தார்கள். அதற்கு அடுத்த மகா அறையிலே ஸஸெக்ஸ் பிரபுவும், காந்தர்புரி பிரதம அத்தியட்சரும், லண்டன் அத்தியட்சரும், மந்திரியாகிய மெல்போர்ன் பிரபுவும், மற்றும் சில பெருமான்களும் கூடியிருந்தார்கள். அவர்கள் அப்படி இருந்தது இங்கிலாந்தின் சிங்காசனத்திற்கு ஒரு உரித்தாளி பிறக்கும்போது அவர்கள் அங்கு சமுகமாயிருக்க வேண்டுமென்ற உத்தியோகக் கடமையினாலேதான். ராஜகுமாரத்தி உலகத்தில் தோன்றினவுடன் பட்டணத்து மணிகளெல்லாம் பேரொலியிட்டுச் சப்தித்தன; பட்டாளத்துப் பீரங்கிகளெல்லாம் ஏகோபித்து முழங்கின. ஆல்பட் பிரபு சக்கரவர்த்தினியிடத்தில்: பட்டத்திற்குப் புத்திரன் ஜனனமாகாததினாலே பிரஜைகள் ஏமாந்துபோவார்களே என்று சொல்ல, சக்கரவர்த்தினி மாறுத்தரமாக: 'காரியமில்லை, அடுத்த குழந்தை ஆணாயிருக்கும்' என்று மொழிந்தார்களாம். சக்கரவர்த்தினி பிரசவ அறையிலிருக்கும்போது ஆல்பட் பிரபு அவர்களுக்குச் செய்த உதவியைக்குறித்து அவர்கள் தங்கள் குறிப்புப் புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதாவது: என்னுடைய இருண்ட அறையில் எப்போதும் வந்திருந்து எனக்கு வாசிப்பதும் எனக்காகக் கடிதங்கள் எழுதுவதும் அவருடைய வழக்கம். என்னை என் படுக்கையிலிருந்து தூக்கிச் சோபாவில் படுக்க வைப்பதும், என் கட்டிலை ஒரு அறையிலிருந்து மறு அறைக்கு உருட்டிச் செல்வதும் அவருடைய இன்பமான வேலையாயிருந்தன. எனக்கு ஏதாவது அவசரம் இருக்கும் போது நான் ஆள் அனுப்பின உடனே வெகு துரிதமாய் வருவார். அவர் எனக்காக எடுத்துக்கொண்ட கவலையானது தாயின் கவலையை

*முதலாம் ராஜகுமாரத்தியின் பிறப்பு.*

விடப் பெரிதாயிருந்தது. என் அறையிலே அவர் என்னைப் பாது காத்த சாமர்த்தியமானது தயவும் பெலனுமுள்ள ஒரு ரட்சைத்தாயின் சாமர்த்தியத்தைவிட அதிகமாயிருந்தது என்பதாம்.

**பிரசவ மண்டபத்திற்குள் ஒரு பித்தன் பிரவேசித்தல்.**

சக்கரவர்த்தினியின் பிரசவ தினத்தன்று ஜோன்ஸ் என்னும் ஒரு பைத்தியக்கார இளைஞன் எப்படியோ பிரசவ அறைக்குள் பிரவேசித்து ஒரு சோபாவுக்குக் கீழே மறைந்துகொண்டான். அவனைக் கண்டுபிடித்து: 'நீ இங்கே எப்படி வந்தாய்' என்று கேட்டபோது, அவன்: 'நான் இங்கே முன்னே ஒருதரம் வந்திருக்கிறேன்; அந்த வழியாகத்தான் இப்போதும் வந்தேன்; நான் சிறிது நேரத்திற்குமுன் ராணியாரும் ஆல்பட் பிரபுவும் சம்பாஷித்ததைக்கூடக் கேட்டுக்கொண்டிருந்தேன்' என்று கர்வமாய்ச் சொன்னான். அவனைப் பிடித்து மூன்று மாசம் காவலில் வைத்தார்கள். பிற்பாடு அவன் புத்தி சுவாதீனமடைந்து சாமர்த்தியமுள்ள ஒரு கப்பற்காரனானான்.

**ஆல்பட் பிரபு ஒரு ஆபத்துக்குத் தப்புதல்.**

சக்கரவர்த்தினி பிரசவித்து இரண்டு மாசமானபின் ஆல்பட் பிரபு பக்கிங்ஹாம் நந்தவனத்தில் பனிக்கட்டியில் சறுக்கி விளையாடும்போது, பனிக்கட்டி உடைந்து பயங்கரமான ஒரு ஜலக்கேணிக்குள்ளே விழுந்து அமிழ்ந்து போகத்தக்க ஸ்திதியிலே நீந்தி நீந்திக் கரையேறமாட்டாமல் அவஸ்தைப்பட்டார். அப்போது சக்கரவர்த்தினிமாத்திரம் சமீபத்திலிருந்தார்கள். அவர்கள் தங்கள் பிராணநாயகனுடைய ஆபத்தைக் கண்டவுடன் தங்கள் சொந்த உயிரைத் துரும்பாக எண்ணி, தைரியத்தோடே அந்தக் கேணிக்கரையிலே போய் அவருக்கு உதவிசெய்து அவரைக் கரையேறப் பண்ணினார்கள். இவ்வீரச்செயலானது கிணற்றில் விழுந்த ஒரு மதயானையை ஒரு மானானது கரையேற்றினதற்குச் சமானமாயிருக்கிறதல்லவா?

**ராஜகுமாரத்தியின் ஞானஸ்நானம்.**

1841-ம் ௵ பெப்ருவரி௴ 10௳ சக்கரவர்த்தினியுடைய குமாரத்திக்கு ஞானஸ்நானச் சடங்கு நிறைவேறிற்று. ஞானஸ்நானத்திற்குத் தண்ணீர் யோர்தான் நதியிலிருந்து கொண்டுவந்தார்கள்.

சக்கரவர்த்தினி தங்கள் பர்த்தாவினிடத்தில் முன்னே பகர்ந்தது போல அவர்கள் பெற்ற இரண்டாம் பிள்ளை ஆணாகவே இருந்தது. அந்தப் பிள்ளைதான் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி. அவர் 1841-ம் ௵ நவம்பர்௴ 9௳ பட்டத்துக் குமாரனாகப் பிறந்தார். அன்று அரமனையில் நடந்த ஆரவாரங்களுக்கும் ஆனந்த கோஷங்களுக்கும் அளவு கிடையாது. அவர் ஜனனமாகும்போது அவருடைய அக்காளுடைய



ஜனனகாலத்திற்போலவே பிரசவ மண்டபத்திற்கு அடுத்த அறையில் காந்தர்புரி பிரதம அத்தியட்சரும் முதல் மந்திரியும் மற்றும் பல உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் கூடியிருந்தார்கள். சக்கரவர்த்தினி அதிக பலவீனமாயிருந்தபடியால் ஆல்பட் பிரபு மிகவும் வருத்தமுற்றிருந்தார். என்றாலும் காலையில் 11-மணிக்கு அவருடைய பிரதம புத்திரன் பிறந்ததைக் கண்டு களிகூர்ந்து கடவுளை வாழ்த்துகிற பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. பிள்ளை பிறந்தவுடன் தாதியானவள் அதை எடுத்து அடுத்த அறையிலிருந்த மகான்களிடத்திலே கொண்டுபோய்க் காண்பிக்கவே அவர்கள் தங்களை ஆளப்போகிற பட்டத்துக் குமாரனைப் பார்த்துப் பரமானந்தத்தில் மூழ்கினதுமல்லாமல் பிரித்தானிய கிரீடத்திற்குச் சுதந்தரவாளியாக ஒரு புத்திரன் பிறந்திருக்கிறார் என்று ராஜாங்க நடபடிப் புஸ்தகத்தில் எழுதி ஒப்பம் வைத்தார்கள். சக்கரவர்த்தினி மகனைக் கண்ட மகா சந்தோஷத்தினாலே சிறைச்சாலைகளிலும் கப்பல்களிலும் மரியாதையாய் நடந்துகொள்ளுகிற குற்றவாளிகளை விடுதலைபண்ணவேண்டுமென்று ஆக்கியாபித்தார்கள். மேலும் அடுத்த மாசம் வந்த கிறிஸ்மஸ் பண்டிகையன்று அவர்கள் தங்கள் நாளாகமப் புஸ்தகத்தில்: இப்போது எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்; அவர்களில் ஒருத்தி கிறிஸ்மஸ் வெகுமதிகள் தொங்குகிற மரத்தைப் பார்க்கக்கூடியவளாயிருக்கிறாள்; இதை நினைக்கையில் எனக்குக் கனாக்கண்டாற்போலிருக்கிறது என்று எழுதிவைத்தார்கள்.

அத்தினத்தில் ஆல்பட் பிரபு தமது தகப்பனாருக்கு எழுதின கடிதத்திலும்: கிறிஸ்மஸ் வெகுமதிகள் தொங்கும் மரத்தைக் காணும்படி என்னைக் கூட்டிக்கொண்டுபோக நீர் எப்போது வருவீர் வருவீர் என்று நான் என் அறையிலே ஆசையோடே காத்து நிற்பேன்; உம்முடைய காலடிச் சத்தம் கேட்டவுடன் களிப்பினால் துள்ளுவேன்; இன்றைக்கு எனக்கும் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்; அவர்களில் ஒருத்தி அந்த வெகுமதி மரத்தைக் காணக்கூடியவளாயிருக்கிறாள்; நீர் என்னைக் கூட்டிக்கொண்டு போனதுபோல நானும் அவர்களை அதினண்டை கூட்டிக்கொண்டு போகிறேன் என்று எழுதினார். அங்கிலேய அரசரின் பட்டத்துக் குமாரருக்கு உவேல்ஸ் நாட்டு இளவரசர் என்பது பட்டப்பெயர். அந்தப் பெயர் சக்கரவர்த்தினி மரணமடைந்து அவர்கள் குமாரன் முடிசூடும்வரையும் அவருக்கு வழங்கி வந்தது. அவருக்கு உவின்ஸர் மாளிகையைச் சேர்ந்த பரிசுத்த ஜியார்ஜ் ஆலயத்தில் 1842-ம் ௵ ஜனவரி௴ 25௳ ஞானஸ்நானச் சடங்கு நிறைவேறிற்று. காந்தர்புரி பிரதம அத்தியட்சர் அவருக்கு ஆல்பட் எட்வர்ட் என்ற நாமத்தைச் சூட்டி ஞானஸ்நானம்

கொடுத்தார். ஆல்பர்ட் என்பது அவர் தந்தையின் பெயரும், எட்வர்ட் என்பது அவர் தாய்வழிப் பாட்டனின் பெயருமாம்.

மற்றைப் பிள்ளைகளின் பிறப்பு.

சக்கரவர்த்தினியின் மற்றைப் பிள்ளைகளின் விவரமாவது: ஆலிஸ் பெருமாட்டி 1843-ம் ஞூ எப்பிரல்மீ 25உயிலும், ஆல்பர்ட் என்னும் எடின்பரோ பிரபு 1844-ம் ஞூ ஆகஸ்ற்றுமீ 6உயிலும், ஹெலினு என்னும் கிறிஸ்தியான் பெருமாட்டி 1846-ம் ஞூ மேமீ 25உயிலும் லூயிஸ் என்னும் லோர்ன் பெருமாட்டி 1848-ம் ஞூ மார்ச்சுமீ 21உயிலும், ஆர்தர் என்னும் கானுட் பிரபு 1850-ம் ஞூ மேமீ 1உயிலும், லியோபோல்ட் என்னும் அல்பானி பிரபு 1853-ம் ஞூ எப்பிரல்மீ 7உயிலும், பியாற்றிரிஸ் பெருமாட்டி 1857-ம் ஞூ எப்பிரல்மீ 14உயிலும் பிறந்தார்கள். இவ்விதமாய்ச் சக்கரவர்த்தினிக்கு 4 பிள்ளைகளும் 5 பெண்களுமாகிய 9 மக்களுக்குத் தாயாயிருக்கிற பாக்கியம் கிடைத்தது.

(இன்னும் வரும்)

## BEAUTIFUL CLOTHES

### நல்ல ஆடை

ரத்தினம்மாள் என்னும் ஒரு பணக்காரி இருந்தாள். அவளுக்கு ஒரே மகன் இருந்தான். ஆக்க அரைக்க வேலைக்காரர்கள் உண்டு. ஆதலால் அவளுக்கு வேலை ஒன்றும் இல்லை; எப்போதும் சாவகாசமே. இளமையில் படிக்கக் கற்ருள்; ஆனல் பின் புஸ்தகத்தைக் கண்ணுல் கண்டதும் இல்லை. தன் நகைப்பெட்டிகளைத் திறந்து நகைகளைச் சுத்திசெய்வதும், அவைகளைப் பார்த்து மகிழ்வதும்தான் அவளுக்கு வேலை. நேர்த்தியானதும் விலையுயர்ந்ததுமான ஆடைகள் அநேகம் உண்டு. அவற்றில் எதை எந்த நகையோடு தரிப்பது என்று யோசிப்பாள். இப்படித் தன் பெட்டிகளைத் திறந்து வைத்துக்கொண்டு இருக்கையில் அயல் வீட்டுச் சிநேகிதிகள் யாராவது சும்மா பேச வருவார்கள். அவர்களில் ஒருத்தி 'அம்மா! எத்தனை நகை! எத்தனை சீலை! எனக்கு இதில் பாதி இருந்தால் போதும்' என்ருல், அதைக் கேட்டு ரத்தினம்மாள் அதிக கர்வங்கொள்வாள்; மகிழ்வாள்; ஆனந்திப்பாள். சாதாரணமாகவே ஸ்திரீகளுக்கு மற்றவர்களைக்காட்டிலும் நல்ல உடை இருக்கவேண்டும் என்ற ஆசை வெகு அதிகம்போலும்.

அதே கிராமத்தில் இடைச்சி ஒருத்தி மிகவும் சிறிய சிசு ஒன்றை விட்டுவிட்டு இறந்துபோனுள். அதன் தகப்பனும் வேறோர் ஊருக்குப் போயிருந்தான். இந்தப் பச்சைப் பிள்ளையைக் காப்பாற்றுவார்



எவருமில்லை. அதனைக் கண்டு அனுதாபங்கொண்ட சிலர் பணக்காரி ரத்தினம்மாளிடம் போய் அக்குழந்தைக்கு பால் வாங்கிக்கொள்ள, கொஞ்சம் பணம் உதவும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். ஆனல் அந்த இரக்கமில்லாத ரத்தினம்மாள் 'அது இருந்தால் என்ன, இறந்தால்தான் என்ன? அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்; போ! போ!' என்று மறுத்துவிட்டாள். ரத்தினம்மாளிடம் பணம் மாத்திரம் இருந்ததேதவிர மற்றவர்களுக்கு இரங்கும் இரக்கம் சிறிதும் இல்லை; எவருக்கும் எதுவும் உதவியதே கிடையாது. ஆதலால் அக்குழந்தை இறந்திருக்கும்; ஆனல் நல்ல வேளையாய் வேறோர்



இடத்திலிருந்து உதவி கிடைத்தது. ரத்தினம்மாளுக்கு வண்ணாத்தி ஒருத்தி இருந்தாள். அவள் பேர் சற்குணம்மாள். வாஸ்தவத்திலேயே அவள் சற்குண அம்மாள்தான். அவள் இந்தக் குழந்தைக்கு இரங்கி 'எனக்கு முன்னமேயே ஐந்து பிள்ளைகள் இருக்கின்றன. நான் வெகு ஏழை. ஆனல் அந்தக் குழந்தை அழுவதைப் பார்க்க முடியவில்லை. அதையும் நானே வளர்க்கிறேன். ஸ்வாமி இரண்டு குழந்தைகளுக்குப் போதியளவு பால் தருவார்' என்று சொல்லி அந்த அனுதைக் குழந்தையையும் தன் குழந்தைகளுடனே வளர்ப்பாளாயினுள். அது வெகு கஷ்டமாகவே இருந்தது. ஓய்வா ஒழிவா?

ஒன்றுமில்லை. ஒன்று தூங்கும்போது மற்றது அழும்; அதை எடுத்துக்கொண்டு உலாவவேண்டும். சீ! என்றாய்விடும். பாவம்! என்ன செய்வாள்! வீடுகளுக்குப் போய் அழுக்கு எடுத்து வந்து, ஆற்றிற்குக் கொண்டுபோய் அவற்றைத் துவைக்கவேண்டும்; தன் வீட்டில் இத்தனை பேருக்கும் சோறு ஆக்கவும் வேண்டும். இத்தனையையும் பொறுமையோடு செய்துகொண்டு ஒருவாறு மகிழ்ந்தே இருந்தாள்.

இதோடு நின்றதா! அவளது இளைய குழந்தைகள் மூன்றும் காய்ச்சலால் அவஸ்தைப்படலாயின. அதுவும் வெகுநாள் இருந்தது. மூத்த குழந்தைகள் இரண்டும் கூடுமானமட்டும் தக்க உதவியே புரிந்தன. இருந்தாலும், அவை சிறு பிள்ளைகள்தானே; வீட்டுவேலை எல்லாவற்றையும் செய்யமுடியுமா; அவர்களை வீடுவீடாய்ப் போய் அழுக்கு எடுத்துவர அனுப்பமுடியாது. மூன்றிற்குக் காய்ச்சல், இரண்டு அழுங் குழந்தைகள்; வேலையோ அதிகம். அவ்வெளிய சர்க்குணம்மாள் பட்ட பாட்டை என்ன என்பது! இதைக் கண்ட அயலாள் ஒருத்தி 'இந்த இடைப்பிள்ளையைத்தான் எறிந்துவிடேன்; இதென்ன கஷ்டம்!' என்றாள். அதற்கு சர்க்குணி 'ஐயோ பாவம்! அது சாகுமே! பார்! அதுவும் என் குழந்தைகளைப்போலவே இருக்கிறது. எனக்கும் அதன்மேல் பிரியம் அதிகம், அதைப் பார்; அதன் சிரிப்பைப் பார்; அதன் ஆட்டத்தைத்தான் பார்; அதைப் பிரிந்து இருக்க நான் சகியேன்' என்றாள். இதையெல்லாம் அயலார் கேட்டுச் சிரிப்பார்கள். அவளிடம் இருந்த சர்க்குணங்களில் அன்பும் ஒன்று. அன்புக்குத் தன் குழந்தையென்றும் பிறர் குழந்தையென்றும் வித்தியாசம் ஏது!

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'—திருக்குறள்.

ஒருநாள் தொந்தரை வெகு அதிகமாயிற்று. காலையில் துவைத்த துணிகளைக் கொண்டுவர ஆற்றிற்குப் போனாள். மாலையில் அவற்றை வீட்டுக்கு வீடு கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். ஆனால் முந்திய ராத்திரி குழந்தைகளோடு அவஸ்தைப்பட்டதால் இவள் புறப்படுகையில் குழந்தைகள் அழுதன. ஒன்று 'ஏனம்மா! இந்தக் குழந்தைகளையும் எடுத்துக்கொண்டு போவேன், அழுகின்றன பார். எனக்கும் தலை வலிக்கிறது, தாங்கவேணும்; அக்காளாலும் அந்த அழும் குழந்தை இரண்டையும் வைத்திருக்க முடியாது. கூடவே எடுத்துக்கொண்டு போ' என்றது. அந்த உதவியற்ற சர்க்குணம் என்ன செய்வாள்! துணி மூட்டையை எடுப்பாளா? குழந்தைகளை எடுப்பாளா? ஆனால் தான் முதலில் போகவேண்டிய வீடு பணக்காரி ரத்தினம்மாள் வீடு



என்பதை நினைத்துக்கொண்டு 'சரி! அவர்களுக்கு அத்தனை பெரிய வீடு இருக்கிறது. குழந்தைகளை அங்கே விட்டுவிட்டுப்போனால் துணிகளைக் கொடுத்துவிட்டுத் திரும்ப வரும்போது எடுத்துக்கொள்ளலாம். அவைகள்தான் பாவம் தூங்கட்டுமேன்' என்று தீர்மானித்துக் குழந்தைகளிரண்டையும் துணி மூட்டையையும் எடுத்துக்கொண்டு போய், ரத்தினம்மாளைக் கண்டு 'அம்மா! தாயே! வீட்டில் மூன்று மக்களுக்குக் காய்ச்சல்; அவை கொஞ்சம் இளைப்பாறவேண்டும் என்கின்றன. இந்த இரண்டுமோ சும்மா இருக்கா; நானும் வெள்ளை கொண்டுபோகவேண்டும். இந்த இரண்டையும் இங்கே தங்கள் வேலைக்காரர்களிடம் விட்டுப்போக உத்தரவு தாருங்கள். கொஞ்ச நேரத்தில் நான் திரும்ப வந்து எடுத்துக்கொண்டு போகிறேன். உங்களுக்கு நிரம்பப் புண்ணியம் உண்டு; குழந்தைகளையும் கூட எடுத்துக்கொண்டு போவதென்றால் என்னால் எப்படியாகும் பாருங்கள்' என்று கெஞ்சினாள். ஆனால் அந்த இரக்கமில்லாத ரத்தினம்மாள் 'சீ! சீ! அந்தப் பீடைகளை இப்போதே கொண்டுபோய்விடு. அவற்றைப் பார்க்க இங்கே யாருக்கு நேரம் இருக்கிறது? அவைகளை இங்கே கொஞ்சமும் பயமில்லாமல் எப்படிக் கொண்டுவந்தாய். அது சரி. போன வாரம் போட்ட ரவிக்கைகள் மூன்றும் எங்கே? இப்போதே அவற்றைக் கொண்டுவா. இல்லாவிட்டால் இந்த மாசம் சம்பளம் தரமாட்டேன்' என்று துரத்தினாள். அதனால் சர்க்குணம் வெகு வருத்தத்தோடு தன் குழந்தைகளை மார்போடணைத்துக்கொண்டு 'திக்கற்றார்க்குத் தெய்வமே துணை. என் பாடு அவருக்கே வெளிச்சம்; அவர் என்னைக் கைவிடார்' என்றெண்ணிக்கொண்டு வீட்டுக்குப் போனாள். 'ஆ! இன்றைக்கு ஒருநாள் போகாவிட்டால் என்ன! ஜனங்கள் கண்டிப்பார்களோ' என்று யோசிக்கையில் சுரங் கண்டிருந்த குழந்தைகள் தூங்கிவிட்டன. அதுகண்டு சர்க்குணம் சிறிது சந்தோஷமடைந்தாள்.

அந்த இரவு ரத்தினம்மாள் ஒரு அதிசயமான கனவு கண்டாள். அதில் அவள் செத்து மறு உலகத்தில் இருக்கக் கண்டாள். அங்கே குளிர் அசாத்தியமாய் இருந்ததாக உணர்ந்தாள். ஜில் என்ற காற்று ஒருபக்கம் நடுக்கம் ஒருபக்கம்; அவளால் தாங்க முடியவில்லை. போர்த்துக்கொள்ளத் துணியைப் பார்த்தாள். நல்ல துணியையும் காணோம். இருந்ததும் மெல்லிய பழைய கந்தை, அது உடம்பை அரைகுறையாய் மூடவும் போதாது. 'ஐயோ! என் நல்ல பட்டு உடைகள் எல்லாம் எங்கே?' என்று அழுதாள். 'அடடா! என் விலையேறிய நகைகள் எங்கே! ஒன்றை விற்று ஒரு நல்ல போர்வை வாங்கலாம்; குளிர் நடுக்குகிறதே!' என்று அலறினாள். ஆனால் அப்போது நல்ல உடையும் இல்லை நகையும் இல்லைப்போல் இருந்தது.

பெரிய வனாந்தரத்தில் தான் தனித்துப் பரிதபிப்பதாக நினைத்தாள். யாராகிலும் இருப்பார்களோ என்றெண்ணிக்கொண்டு அப்படியே நடுக்கத்தோடு நடுக்கமாய் உலாவினாள். வெகு நேரத்திற்கு அப்புறம் தன்னிடம் யாரோ வருகிறதுபோலிருந்தது. வரவர அந்த ஆள் நல்ல சரிகைப் புடவைகட்டிய ஒரு ஸ்திரீபோலிருந்தது. அப்போது தன் பரிதாப நிலைமை தனக்கே வெட்கக்கேடாயிருந்தாற்போலாயிற்று. அந்தக் கந்தையை இழுத்து இழுத்து மூடினாள். 'அவளைக் கேட்டாகிலும் நல்ல துணி வாங்கலாம், குளிர் பொறுக்க முடியவில்லை' என்றெண்ணினாள். இன்னும் கிட்ட நெருங்க அந்த ஸ்திரீ வண்ணாத்தி சர்க்குணம் என்பதை யறிந்து அடைந்த வெட்கத்திற்கு அளவே இல்லை. அந்த வண்ணாத்தியின் அருமையான ஆடைகளையும் தன் தாழ்ந்த கந்தைத் துணியையும் பார்க்கப் பார்க்க அவள் ஆத்திரமும் ஆங்காரமும் பொறுக்க முடியவில்லை. 'கொண்டுவா உன் சேலையை' என்று கடுத்துச் சொன்னாள். 'சீ! போ, அவள் அதைக் கொடுக்க மாட்டாள்' என்றொரு சத்தம் அவள் பக்கத்திலிருந்து புறப்பட்டது. இவ்வுலகத்தில் நீ பூமியிலிருந்தபோது ஆக்கிக்கொண்ட சேலையையே கட்டவேண்டும். அதை அறியாயோ? உன் இருதயத்திலே அன்பு இருந்திருந்தால் இப்போது வெகு அழகானது கிடைத்திருக்கும். பார் சர்க்குணத்தை. நீ அவ்வுலகத்தில் செய்தது அத்தனையும் பாவம்; அதனால் உனக்கு இந்தக் கந்தைதான் கிடைக்கும்.' பூமியில் உன் இருதயம் எப்படியோ அப்படியே இங்கே உனக்கு ஆடை; அப்போது உன் அன்பு எவரையும் மூடவில்லை. இங்கே உன்னை உன் உடை மூடுவதில்லை. மற்ற எவருக்கும் நீ துணி உதவவில்லை; இங்கும் உனக்கு அப்படியே. உன் சேலை நீ ஆக்கிக்கொண்டது தானே; உனக்கு எவரும் இங்கே சேலை கொடார். சர்க்குணம்மாள் தன் அன்பினால் தன் நல்ல உடையைச் செய்துகொண்டாள். அதை எவரும் வாங்கிக்கொள்ள முடியாது என்று பின்னும் விஸ்தரித்தது போலிருந்தது. அதை உணர்ந்த ரத்தினம்மாள் பயந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்து 'நான் போய் என் ஆத்துமாவுக்கு நல்ல ஆடை செய்துகொள்ளப் படிக்கிறேன்' என்று அழுதாள்.

பிறகு விழித்துக்கொண்டாள், இன்னும் அழுகைமட்டும் நிற்கவில்லை. 'நல்ல கனவு, இன்னும் நான் சாகாததேபோதும். அன்பாயிருக்கப் படித்துக்கொள்ள இனிச் சமயம் கிடைத்ததே' என்று நன்றி சொல்லலானாள்.

அடுத்தநாள் அதிகாலையில் சர்க்குணம்மாளுக்கு ஆள் அனுப்பினாள். அவள் வந்தவுடன் 'அம்மா! நேற்று நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். என் கடின சித்தத்தைக் கடவுள் எனக்குக் காட்டிவிட்



டார். இனி உன் குழந்தைகள் சுகப்படும்வரையில் நான் ஆகாரம் மருந்து முதலியவையெல்லாம் அனுப்புகிறேன். நீ வேலைக்குப் போகும்போது உன் குழந்தைகளை இங்கே என்னிடம் விட்டுவிட்டுப் போ; நானே அவர்களைப் பார்த்துக்கொள்ளுகிறேன்; நான் அன்பு உள்ளவளாயிருக்கவேண்டும்; நீ அதற்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டும்' என்று வேண்டிக்கொண்டாள். சர்க்குணம்மாள் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்து 'சரி, அம்மா! நான் என்ன உதவி செய்யப் போகிறேன்' என்றாள். உடனே ரத்தினம்மாள் 'அப்படி அல்ல; இப்போது நீதான் அம்மா, தாய். தேவன் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதை நான் அறிந்தேன்' என்று வெகு பணிவாய்ச் சொன்னாள்.

இனி, ரத்தினம்மாளைப் போன்றவர்களும் சில இருக்கிறார்கள். அவர்கள் இதை அறிந்து மேன்மை பெறுவார்களாக.

'' நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாய் இருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறையுமில்லையென்றும் சொல்லுகிறபடியால், நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலக்ஷணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும் நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.'

## ALCOHOL AS A MEDICINE—SOME MEDICAL OPINIONS

## மதுசார பானங்களை மருந்தாக உபயோகித்தல்

### (சில பெரிய வைத்தியர்களின் அபிப்பிராயங்கள்)

1. சாராயம் முதலிய மதுசார பானங்கள் எல்லாம் பாஷாண பதார்த்தங்களே. ஆனால் அவற்றைச் சிலர் ஆகாரமாக உட்கொள்ளக் கூடிய போஷண பதார்த்தங்களாக மதிக்கிறார்கள். அப்படியானாலும் அந்த ஆகாரம் விஷங் கலந்ததாய்விடுகிறது. விஷங் கலந்த சோறு சோறாகுமா?

2. வைத்திய சாஸ்திரம் அறியாத பாமர வைத்தியர்கள் சிலர் நோயாளிகளுக்கு உற்சாகத்தை உண்டாக்குவதற்காக சாராயத்தைக் குடிக்கச் சொல்லுகிறார்கள். இது குருட்டு வைத்தியம்; சாஸ்திர

முறைப்படி செய்வது அல்ல. அப்பேர்ப்பட்டவர்களை நாம் செவ்வையாய் விசாரிக்காமல் யாரோ வைத்தியர் என்று ஏற்றுக்கொள்ளல் ஆகாது. சாராயத்தை நன்றாய்ப் பரிசோதித்தால், அது உடலுக்குப் பலந்தருவதும் அல்ல, போஷிக்கும் உணவும் அல்ல, உற்சாகத்தைத் தருவதும் அல்ல, தேகம் அழிவதைத் தடுப்பதும் அல்ல என்பன தெரியும். எந்தவிதத்திலும் சாராயத்தை உபயோகிப்பது அபாயத்துக்கிடமானது என்பதே அனுபவ சித்தாந்தம். அப்படியல்லாமல் அது நன்மை தரத்தக்கது என்று சொல்லப் போதுமான ஆதாரம் எதுவுமே கிடையாது. ஆகவே, சாஸ்திரப்படி பரிசோதிக்காமல் 'இதற்கு நல்லது' 'அதற்கு நல்லது' என்று சும்மா சொல்லிக்கொண்டு சாராயத்தையோ அல்லது அதுபோன்ற வேறு மதுசாரத்தையோ உபயோகிப்பது மன்னிக்கத்தக்கதல்ல.

3. ரோகிகள் சாராயம் முதலிய மதுசார பானங்களை விரும்புவதாலும், வைத்தியர் சொல்லும் வேறு மருந்துகளை வெறுப்பதாலும்தான் அந்த மதுபானங்களை வைத்தியர்கள் பலர் உபயோகிக்கிறார்கள்.

4. அவசரநிமித்தம் இச்சாராயத்தை நோயாளிக்குக் கொடுக்கலாம் என்றாலும், ரணவைத்தியத்திற்காகட்டும், வேறு விதத்திற்காகட்டும் சாராயத்தைத்தவிர வேறே நல்ல மருந்து இல்லாமற் போகக்கூடிய சமயம் இருப்பதாகக் காணோம்.

5. ரசாயன சாஸ்திரம் இத்தனை விருத்தியடையாதிருந்த முற்காலத்தில் எந்தவித ரணவைத்தியத்திற்கும் சாராயம் முதலிய மதுபானங்களைச் சர்வ சாதாரணமாய் உபயோகித்து வந்தார்கள். இப்போது வரவரப் பாஷாண வைத்திய முறையை மிகுதியாகப் பரிசோதித்து அப்பழக்கம் சரியான வைத்திய சாஸ்திரப்படி இல்லாமல், ஏதோ வழக்கத்தில் வந்துவிட்டதொன்று என்றும், அறியாமையால் அதற்கு அத்தனை மகிமை ஏற்பட்டுவிட்டதென்றும் தெரிந்து வெகுகாலமாக மதுபானங் கலந்த மருந்து வெகு தூரத்திலே தள்ளப்பட்டிருக்கிறது.

6. வெகுநாளாக ஜுரத்தினாற் பீடிக்கப்பட்டவர்களுக்கும் சாராயத்தைக் கொடுப்பது ஜீவ நாசத்திற்கு ஏதுவானதாகும். தீவிர நோய்களுக்கே அதைக் கொடுத்தல் தீங்கை வருவிக்கும் என்று அதைத் தொடுவதில்லை என்றால் சாதாரண ரோகத்திற்குக் கேட்பானேன்.

7. சாராயம் பாம்பைப்போலப் பதுங்கியிருந்து ஜனங்களைக் கொல்லும் என்று சொல்வது சரியே. வேதாகமங்கள் முறையிடுவதும் இதுவே. வியாதியைத் தீர்க்க நினைத்துச் சாராயத்தைக் குடிப்பது எலியைப் போக்க வீட்டைச் சுடுவதுபோலாகும்.

8. ஒரு வைத்தியசாலையில் சென்ற நாற்பத்திரண்டு வருஷங்களில் வெகு கொஞ்ச மதுசாரத்தையே உபயோகித்திருக்கிறார்கள்.



அதுவும் பலத்திற்காகவும் ஆகாரத்திற்காகவும் அல்ல. எப்போதாவது தற்சமயத்துக்குமாத்திரம் சிறிது வெறி வேண்டியிருக்கும்; அப்போது எட்டிக்கொட்டை முதலிய பாஷாண பதார்த்தங்களைப் போல சாராயத்தைச் சிறிது தொடுவார்கள். ஆனால் வியாதிப்பட்டுச் சுகமடைந்துகொண்டு வருபவர்களுக்கு சாராயம் வெகு மோசமானது; பெருத்த கேட்டையே தரும்.

9. 'உன்னால் நன்மைசெய்ய முடியாவிட்டால் பாதகம் இல்லை; தீமை ஒன்றும் செய்யாதே' என்ற கொள்கையைக் கைப்பிடித்து வைத்தியனாகவுள்ள ஒவ்வொருவனும் நடக்கவேண்டும்; அப்படியிருந்தால் சாராயத்தை நூற்றுக்கு ஒன்றாகவும் தொட மனம் வராது. அமெரிக்கா தேசத்திலுள்ள வைத்தியசாலை ஒன்றில் தீவிர நோய்களையும் வெகுகாலத்து ரோகங்களையும் மதுசாரஞ் சேர்க்காமலேயே குணப்படுத்தியிருக்கிறார்கள். மதுசாரம் தீமையையே தரும்; நன்மையை ஒரு சிறிதும் தராது. அல்லாமலும் அது ரோகங்களின் உண்மை நிலையை அறிய முடியாதபடி அவற்றின் சேஷ்டைகளை முற்றிலும் மூடிவிடும்.

10. சாராயப் பிரயோகத்தால் தீர்க்கலாம் என்று தோன்றும் எந்த நோயையும் வேறே நல்ல க்ஷேமகரமான ஔஷதத்தால் போக்கலாம். சாராயம் போஷிக்கக்கூடியது என்பது யாதொரு ஆதாரமுமின்றி ஏற்பட்ட கொள்கை. ஆராய்ந்து அறிந்து அனுபவத்தில் வந்ததல்ல. வெறிக்காகக் குடித்துப் பழகியவனுக்கு இது ஒருவேளை போஷணை பதார்த்தம் ஆகலாம் என்றாலும் அதை அப்படி அனுபவத்தில் காணத்தக்கதாக இல்லை. மதுசாரத்தையும் கொழுப்பு முதலிய போஜன பதார்த்தங்களோடு சேர்த்து ஒப்பிடப் பார்ப்பது பொருத்தமானதல்ல; க்ஷேமகரமானதும் அல்ல.

## SARASVATHI

## சரஸ்வதி

நாகரீகம் மிகுந்த ஒவ்வொரு தேசத்தாரும் கல்வியை அதிகமாய் மதிக்கிறார்கள். இப்போது ஆண்களுக்குப்போலவே பெண்களுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். முற்காலத்தில் அப்படியல்ல. அப்போதெல்லாம் ஸ்திரீகள் புருஷர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்றும், அதனால் அவர்கள் சோறு சமைக்கவும், வீட்டு வேலைகளைச் செய்யவும், அழகிய வஸ்திரங்களினாலும் நகைகளினாலும் தங்களைச் சிங்காரித்துக்கொள்ளவும், பிள்ளைகளைப் பெறவும், அவற்றை வளர்க்கவும் இப்படி இருக்கவேண்டுமேதவிர மற்றைப்படி படிக்கவும், படித்தவை

களை மனதில் வைக்கவும், படிப்பில் ஆசைகொள்ளவும் கூடாது என்றும் எண்ணியிருந்தார்கள். இன்னும் ஜனங்கள் பல கடவுள்களையும் தேவதைகளையும் நம்புகிறவர்களாகவும் இருந்தார்கள். இப்படிக்கெல்லாம் இருந்தும் அவர்கள் படிப்பானது ஒரு தேவதையைச் சேர்ந்தது என்றே எண்ணினார்கள்.



இந்தியாவில் பெண்களுக்கு ஒரு எழுத்தும் கற்பிக்கிறதில்லை. ஆனால் படிப்புமட்டும் 'சரஸ்வதி' என்ற பெண் தெய்வமாக வழங்குகிறது. இது வெகு அதிசயமாகவே இருக்கிறது; படிப்பு தேவதை, பெண்கள் படிக்கப்படாது. ஆனால் இப்போது வரவரப் பெண்களுக்



குக் கல்வி கற்பிப்பது நல்லது என்பதை உணர்ந்து பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வருகிறார்கள். சில சமயங்களில் கற்றுத் தேர்ந்த ஸ்திரீகளுக்கு 'சரஸ்வதி' என்ற கௌரவமான பட்டமும் தருகிறார்கள்.

இப்படிப்பட்ட பட்டத்தை ஒரு இந்திய மாது அடையும் பாக்கியத்தைப் பெற்றாள். இத்தனைக்கும் அவள் வெகு கஷ்ட நிலைமையிலேயே இருந்தவள். அவளுடைய தகப்பனார் ஒரு பிராமணர். அவர் பெண்களுக்கு என் கல்வி பயிற்றல் ஆகாது என்று தன் மனைவிக்கு ஸமஸ்கிருதம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். ஆனால் அவருடைய சொந்தக்காரர்கள் இதற்கு ஆக்ஷேபித்தார்கள். அதனால் அவர் தம் பெண்சாதியை அழைத்துக்கொண்டுபோய் ஒரு காட்டில் வன மிருகங்களுக்கு இடையில் வீடு கட்டிக்கொண்டு அங்கே தன் பெண்சாதிக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வந்தார்.

பின்பு அவர்கள் குழந்தைகளைப் பெற்றார்கள். அவர் தன் மகனுக்கும் மூத்த மகளுக்கும் கல்வி கற்பித்தார். ஆனால் கடைசிப் பெண் பிறந்தபோது அவருக்கு அலுவல் அதிகமாய் இருந்ததால் அவளுக்குப் போதிக்க நேரம் இல்லாமற்போயிற்று. தாய்க்கோ தன் மகள் படிக்காமல் அவிவேகத்தில் வளர்வது சமாதானப்படவில்லை. ஆகையால் அந்த நல்ல தாய் விடியற்காலத்திலே தன் மகளை எழுப்பி அவளுக்கு ஸமஸ்கிருதம் கற்றுக்கொடுத்தாள். அந்தச் சிறு பெண்ணும் மனோமுயற்சியுடையவளாய் வெகு சீக்கிரம் நன்றாய்ப் படித்துக் கொண்டாள்.

அவளுடைய தகப்பனார் யோசனை இல்லாமல் கடனாளியாய்விட, குடும்பச் சொத்தையெல்லாம் விற்கவேண்டி வந்தது. உடனே அவர் தம் பெண்டு பிள்ளைகளுடன் யாத்திரை புறப்பட்டு இங்குமங்குமாக அலைந்து திரிந்தார். ஆனால் அதிகாலைப் பாடத்தைமட்டும் நிறுத்தவில்லை. அவளும் ஆசையுடன் கஷ்டப்பட்டுப் படித்து வெகு கெட்டிக்காரியானாள்.

அவளுக்கு அவளைப் பெற்றோர்கள் குழந்தைக் கலியாணம் செய்யவில்லை. அவள் பதினாறு வயதானபோது அவளுடைய தாயும் தகப்பனும் அக்காளும் இறந்துபோனார்கள். அடுத்தாற்போல் தரித்திரமும் அதிகரித்தது. அவளது தகப்பன் செத்தபோது பிணத்தைச் சுமக்கவும் கூலி கொடுக்க முடியாமலிருந்தது. அவளுக்கும் அவள் சகோதரனுக்கும் இரங்கி இரண்டு பிராமணர்கள் உதவிசெய்து உத்தரகிரியையை முடித்தார்கள்.

அவளும் அவளுடைய சகோதரனும் ஊர்ஊராய்ப் போவதும் பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்வதுமாக விருந்

தார்கள். அவர்கள் இருவரும் பல சமயங்களிலும் வெகு பரிதாப நிலைமையில் இருந்ததுண்டு. ஆனால் தங்கள் கடமையைச் செய்வதில் பின்வாங்கவே இல்லை.

கடைசியில் இருவரும் கல்கத்தா போய்ச் சேர்ந்தார்கள். இதற்குள் அவளுடைய படிப்பு ஒழுக்கம் முதலிய எல்லாம் பிரசித்தமாயிருந்தன. பிரபல பண்டிதர் பலர் சேர்ந்து அவளை ஸமஸ்கிருதத்தில் பரீக்ஷித்தார்கள். அதில் அவளை வெகு பாண்டித்தியம் உள்ளவள் என அறிந்து அவளுக்கு 'சாஸ்வதி' என்ற கம்பீரமான பட்டமும் பகிரங்கமாய்க் கொடுத்தார்கள்.

இப்படியாக முன்னே காட்டில் விடியற்காலம் எழுப்பிப் பாடம் கற்பிக்கப்பட்ட சிறு பெண் இப்போது கீர்த்திபெற்ற பண்டிதை ஆனாள். அவள் இன்றும் இருக்கிறாள். அவள் கல்வியிற்போலவே ஒழுக்கத்திலும் சிறந்தவளாக இருக்கிறாள். அவள் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் யாத்திரை செய்திருக்கிறாள். அவள் தன் தேச ஜனங்களை வெகு அதிகமாய் நேசிக்கிறாள்; விதவைகளுக்கும் அனாதக் குழந்தைகளுக்கும் ஒரு பெரிய பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்திருக்கிறாள்.

இப்படிப்பட்டவளை உங்களுக்குத் தெரியுமா? அவள்தான் ராமபாய். இப்போது அவள் பூனாவுக்குச் சமீபத்தில் கேட்கான் என்னுமிடத்தில் இருக்கிறாள். விடாமுயற்சி, கல்வி, கடமையில் கருத்து, கிருபை, தேவநேசம், தேச சகோதர வாஞ்சை ஆகிய நற்குணங்களுக்கு இவளே நல்ல முன்மாதிரி. ராமபாயை இப்படி ஆக்கியது எது? கல்வியே அன்றோ!

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஹு மேமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | மத். | 19. | 1—12 | 11 | வி. | மத். | 21. | 23—32 | 21 | ஞா. | மத். | 24. | 29—51 |
| 2 | செ. | ,, | 19. | 13—22 | 12 | வெ. | ,, | 21. | 33—46 | 22 | தி. | ,, | 25. | 1—13 |
| 3 | பு. | ,, | 19. | 23—30 | 13 | ச. | ,, | 22. | 1—14 | 23 | செ. | ,, | 25. | 14—30 |
| 4 | வி. | ,, | 20. | 1— 7 | 14 | ஞா. | ,, | 22. | 15—22 | 24 | பு. | ,, | 25. | 31—46 |
| 5 | வெ | ,, | 20. | 8—16 | 15 | தி. | ,, | 22. | 23—46 | 25 | வி. | ,, | 26. | 1—13 |
| 6 | ச. | ,, | 20. | 17—19 | 16 | செ. | ,, | 23. | 1—12 | 26 | வெ. | ,, | 26. | 14—19 |
| 7 | ஞா. | ,, | 20. | 20—28 | 17 | பு. | ,, | 23. | 13—26 | 27 | ச. | ,, | 26. | 20—35 |
| 8 | தி. | ,, | 20. | 29—34 | 18 | வி. | ,, | 23. | 27—39 | 28 | ஞா. | ,, | 26. | 36—46 |
| 9 | செ. | ,, | 21. | 1—11 | 19 | வெ. | ,, | 24. | 1—14 | 29 | தி. | ,, | 26. | 47—56 |
| 10 | பு. | ,, | 21. | 12—22 | 20 | ச. | ,, | 24. | 15—28 | 30 | செ. | ,, | 26. | 57—75 |
| | | | | | | | | | | 31 | பு. | ,, | 27. | 1—10 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

# மாதர் போதினி

No. 162 ஜூன் 1911 No. 6

OFFICE OF THE REGISTRAR MADRAS 26
600 008
160930

## VICTORIA THE QUEEN EMPRESS (Cont.)

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)


1842-ம் ஹு சக்கரவர்த்தினி இரண்டு ஆபத்துக்களுக்குத் தப்பினார்கள். அவர்களை அடிக்கடி சதியாகக் கொலைசெய்ய யோசித்த சண்டாளர்களுக்கு அவர்கள் தப்பிக்கொண்டது அற்புதத்திலும் அற்புதமென்றே சொல்லவேண்டும். சக்கரவர்த்தினி ஒருநாட் சாயங்காலம் ரதத்திலேறி உலாவப் போகும்போது ஜான் பிரான்சிஸ் என்ற ஒரு பிராண சத்துரு கைத்துப்பாக்கியினால் அவர்களைப் பார்த்துச் சுட்டான். ஆனால் நல்லவேளை குண்டு அவர்கள்மேல் படவில்லை. அவனைப் பிடித்து விசாரணைசெய்து அவனுக்குக் கொலைத்தீர்ப்புக் கொடுத்தபோது சக்கரவர்த்தினி மனம் இரங்கி: அவனைக் கொல்லவேண்டாம்; ஜீவபரியந்தம் நாட்டைவிட்டு அகற்றிவிடுங்கள் என்று கற்பித்ததின்படி அவனை ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த தாஸ்மானியா தீவுக்கு அனுப்பிவிட்டார்கள். இது சக்கரவர்த்தினி எவ்வளவோ மன்னிக்கும் குணமும் மகத்துவ இரக்கமும் பொருந்தினவர்கள் என்பதற்கு அத்தாட்சியா யிருக்கிறது.

சக்கரவர்த்தினி பின்னும் இரண்டாபத்துக்குத் தப்புதல்.

ஆனால் அவர்கள் இந்தத் தாட்சண்யம் காண்பித்ததற்கு அடுத்த நாள் ஓய்வுநாளாதலால் அவர்கள் ஜேம்ஸ் ஆலயத்திற்கு ரதமேறிச் செல்லும்போது கூனனான ஒரு இளைஞன் அவர்கள் நேரில் ஒரு துப்பாக்கியை நீட்டி வில்லை இழுத்தும் வெடி தீரவில்லை. அவனையும் பிடித்துப் பதினெட்டு மாசம் கடுஞ்சிறையிட்டார்கள். ஒரு உயிரைக் காக்கவேண்டுமென்பது கடவுளின் சித்தமானால் அதற்கு அடுக்கடுக்காய் ஆபத்து வந்தாலும் ஒருமோசமும் நேரிடமாட்டாது என்பதற்கு சக்கரவர்த்தினிக்கு நேர்ந்த அநேக ஆபத்துக்கள் பலமான அத்தாட்சிகளாயிருக்கின்றன.

VOL. XXVI.

JL
TSS M 211/N11
N12



சக்கரவர்த்தினி தங்கள் பிள்ளைகளின் சுகவிர்த்திக்கும் கமத்தொழிற் பயிற்சிக்கும் மனோவிர்த்திக்கும் ஏதுவாக, சுகத்திற்கேற்றதும் மிக்க சுந்தரமுடையதுமான ஐல் ஆவ் ஒயிற் என்னும் தீவிலே ஆஸ்போர்ன் என்னும் விஸ்தாரமான பூமியை 1846-ம் வருட தங்கள் பேருக்கே



விலைக்கு வாங்கி அதிலே ஆஸ்போர்ன் என்னும் அலங்காரமான மாளிகையைக் கட்டி, அந்த மாளிகையைச்சார்ந்த ஓர் அழகிய தோட்டத்தைத் தங்களுடைய பிறந்தநாள் இனமாகத் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள். அந்தத் தோட்டத்தின் மத்தியிலே ஒரு சிறு மண்டபமும் கட்டியிருந்தது. அந்த மண்டபத்தின் முன்னே ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு தோட்டமாக ஒன்பது தோட்டங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தத் தோட்டங்களில் தோட்டக்காரர் சொல்லிக் கொடுக்கிறபடி ராஜ பிள்ளைகள் தினம் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் வேலைசெய்வார்கள். அத்தோட்டங்களில் பூஞ்செடிகள், மரக்கறி வகைகள், பழச்செடிகள் முதலியவைகளை நட்டு வளர்ப்பார்கள். அவைகளிலே அவர்கள் வேலை செய்யும்படி ஒவ்வொருவருடைய பேரும் தீட்டிய பிரத்தியேகம் பிரத்தியேகமான மண்வெட்டி, கத்தி முதலிய கருவிகளும் அவர்களுக்கிருந்தன. ராஜகுமாரர் தச்சுவேலையில் பழக ஒரு தொழிற்சாலையும் அங்கே நிருமித்திருந்தது. மேலும் அவர்கள் அங்கே தங்கள் கையினாலேயே ஒரு சிறு கோட்டையையும் கட்டினார்கள். அந்தக் கோட்டைக்குச் செங்கல் அறுத்ததும், சாந்து குழைத்ததும், அவைகளைச் சுமந்துபோனதும், கொற்றவேலை செய்ததும் அவர்கள்தான்.

ஆஸ்போர்ன் அரமனை.

அதின் தோட்டத்தில் ராஜகுமாரர் வேலைசெய்தல்.

இளவரசிகள் ஸ்திரீகளுக்குரிய வேலை பயிலும்படி அந்தத் தோட்டத்துக் கட்டடத்தின் பக்கமாக ஒரு மடைப்பள்ளி கட்டியிருந்தது. அதிலே அவர்கள் தங்கள் கையினால் பயிரிட்ட மரக்கறிகளைச் சமைப்பார்கள்; மாப்பிசைந்து மதுரமான பலகாரம் செய்வார்கள்; பலவிதமான காய்களைப் பறித்து ஊறுகாய் போடுவார்கள்; பழங்களைப் பறித்துத் தித்திப்பான குழம்பு செய்வார்கள். அந்த மடைப்பள்ளியிலே அவர்களுக்கு எவ்வளவோ சந்தோஷமும் வேடிக்கையும் களியாட்டும் இருந்திருக்கும். அவர்கள் சமைத்தவைகளை தாங்களும் சாப்பிடுவார்கள்; மிக்க ஏழை ஜனங்களுக்கும் கொடுப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் குழந்தைகளாயிருக்கும்போதே ஏழைகளைக் கவனிக்கும்படி சக்கரவர்த்தினி அவர்களைப் பழக்கியிருந்தார்கள். நமது தேசத்திலிருக்கிற தாய்மார் இப்படிச் செய்வதுண்டா? மேலும் ஜனனதினம் முதலான விசேஷ தினங்களில் ராஜகுமாரர் குமாரத்திகள் தங்கள் பெற்றோரைத் தங்கள் கட்டடத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து அவர்களுக்குத் தாங்கள் சமைத்த போஜனங்களைக்கொண்டு விருந்து செய்வார்கள். சக்கரவர்த்தினியும் அவர்கள் நாயகரும் அந்த விருந்தைத் தேவாமிர்தத்தைப்போல வெகு சந்தோஷமாய் உண்பார்கள்.

ராஜகுமாரத்திகள் வேலைசெய்தல்.

அந்த ராஜ பிள்ளைகளுடைய கட்டடத்தில் ஒரு சிறு நூதன சாலையும் (Museum) இருந்தது. அதிலுள்ள வஸ்துக்களையெல்லாம் அவர்களே சேகரித்து வைத்திருந்தார்கள்.

**அந்தத் தோட்டத்தின் பல பொருட் சாலை.**

புஷ்பங்களை உலர்த்தித் தாவர சாஸ்திர ஒழுங்கின்படி வரிசைப்படுத்தியிருந்தார்கள்; பூபந்த சாஸ்திரத்தை விளக்கும்படி வெவ்வேறு விதமான பாறைத் துண்டுகளையும் பார்மண்களையும், பறவைகள் முதலான ஜீவ ஜந்துக்களை விளக்கும்படி தோலுரித்து உள்ளே உமியடைந்த பட்சி முதலியவைகளையும் வெகு அழகாய் வைத்திருந்தார்கள். இவ்விஷயங்களில் பெரிய மனுஷர் அவர்களுக்குச் சிறிது உதவி புரிந்த போதிலும் வேலைகளை அநேகமாய் அவர்களே செய்தார்கள். ஆஸ்போர்ன் மாளிகையும் அதின் தோட்டமும் ராஜகுமாரருக்கும் ராஜகுமாரத்திகளுக்கும் பரமானந்தமான ஸ்தலமாயிருந்ததென்று பகர்வதற்குச் சற்றும் சந்தேகமில்லை. அந்தத் தோட்டத்தையும் அதிலுண்டாயிருந்த சந்தோஷமான வேடிக்கைகளையும் நமது காருண்ய சக்கரவர்த்தியாயிருந்த ஏழாம் எட்வர்ட் ராஜா அவர்களும் அவர்களுடைய சகோதரர் சகோதரிகளும் பலதடவைகளிலும் நினைவுகூர்ந்து ஆனந்திப்பதுண்டு.

சந்தோஷத்தை வெல்லுகிற சந்தோஷம் தாரணியில் அதிகமாயுண்டு. ஆஸ்போர்ன் மாளிகையின் சந்தோஷம் ராஜ குடும்பத்தாருக்கு அதிக பெரிதாயிருந்தபோதிலும் அதையும் வெல்லுகிற ஆனந்தம் அவர்கள் ராஜ்யத்தின் வடபாகமாகிய

**ஸ்கோத்லாந்திலுள்ள பல்மோரல் மாளிகை.**

ஸ்கோத்லாந்திலே உண்டானது. 1842-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 24-ஆம் தேதி சக்கரவர்த்தினியும் அவர்கள் நாயகரும் ஸ்கோத்லாந்துக்கு முதல்முதல் போனார்கள். அங்குள்ள பிரபுக்களும் பெரிய சாஸ்திரிமார்களும் மற்றும் பிரஜைகளும் அவர்களுக்கு அதிமகத்துவமான ராஜ மரியாதைகள் செய்து அவர்களை ஏற்றுக்கொண்டார்கள். ஸ்கோத்லாந்தானது சிறிதும் பெரிதுமான மலைகள் நீலவர்ணம் பூண்டு நிமிர்ந்தெழும்ப, சிறப்பும் செழிப்புமான பல பள்ளத்தாக்குகள் பச்சைக் கம்பளம்போல் பசுமையாய்ப் பரந்து விளங்க, அழகிய ஆறுகளும் சிற்றோடைகளும் அதிக இன்பமாய் இன்னிசை செய்து அங்குமிங்கும் ஓட, சுகமான தென்றற்காற்று சுகிர்தமாய் வீசப்பெற்ற விசேஷித்த நாடு. அதிலே அவர்கள் சுகத்திற்காக வருஷத்திற் கொருதரம் போய் வாசம்பண்ண ஆசைகொண்டு அதற்கேற்ற ஒரு ஸ்தலத்தையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அது பல்மோரல் என்னும் ஸ்தலந்தான். அங்கு ஒரு சிற்றாற்றங்கரையில் அலங்காரமான ஒரு கோட்டையையும், அதைச் சுற்றிலும் இன்பமான ஓடைகளையும் எழில[illegible]களையும் பார்த்து, அதில் வாசம்பண்ணவேண்டுமென்று தீர்மானித்து, அக்கோட்டையையும் அதைச் சுற்றி ஏழு மைல் நீளமும் நாலு மைல் அகலமுமுள்ள விஸ்தாரமான பூமியையும் ஆல்பர்ட் பிரபுவின்பேரிலே விலைக்கு வாங்கினார்கள். அதிலே 1853-ம் வருஷம் பல்மோரல் என்னும் பேர்போன மாளிகையைக் கட்டி அம்மாளிகையில் ஆண்டுக்கொருமுறை போய் வாசம்பண்ணிவந்தார்கள். அவ்விடமானது சக்கரவர்த்தினியுடைய பிள்ளைகளாகிய இளவரசர்களுக்கும் மகா இன்பமானதாயிருந்தது. இளவரசர் அங்குள்ள பள்ளத்தாக்குகளில் உலாவி ஆறுகளில் நீந்தி, குன்றுகளில் ஏறி மிகவும் குதூகலிப்பார்கள். அந்த மலைப்பிரதேசத்தின் மகிழ்ச்சியான காற்றைச் சுவாசிப்பதும், பறந்து திரியும் பலவர்ணமான பட்சிகளைப் பார்ப்பதும், அவைகளுடைய இன்பமான கீதங்களைக் கேட்பதும் அவர்களுக்கு மிகவும் ஆனந்தமாயிருந்தன. இளவரசிகளும் அங்குள்ள ஏரிகளைச் சுற்றி உலாவி அவைகளில் வாழும் மீன்களைப் பார்த்தும், பள்ளத்தாக்குகளிலே போய் அவைகளில் படர்ந்து நிற்கும் செடிகளின் புஷ்பங்களைக் கொய்தும், செடிகளுக்குள்ளிருந்தோடும் மான்களையும் மான் குட்டிகளையும் கண்டும், சொல்லமுடியாத மகிழ்ச்சியடைவார்கள். சக்கரவர்த்தினி அவர்கள் இவ்விடத்தைக்குறித்து: இங்கே எல்லாம் அமைதியும் ஆறுதலும், இன்பமும் இணக்கமுமாயிருக்கிறது; ஜனமடர்ந்த நகரங்களுக்குரிய இரைச்சலும் இடையூறுகளும் தர்க்கங்களும் சண்டைகளும் இங்கே எள்ளளவும் கிடையா. சகல வருத்தங்களையும் மறந்து இங்கே சமாதானமும் சந்தோஷமுமாயிருக்கலாமென்று தங்கள் நாளாகமக் குறிப்புப் புஸ்தகத்தில் எழுதிவைத்தார்கள்.



OFFICE OF ... 28 JUN 1911 MADRAS

அவர்களும் அவர்கள் நாயகனும் பிள்ளைகளும் பல்மோரல் மாளிகையில் வாசம்பண்ணுகிற காலங்களில் அங்குள்ள ஏழைப் பிரஜைகளுக்கு அநேக இரக்கமான காரியங்களைச் செய்வார்கள்.

**அவ்விடத்திலுள்ள ஏழைகளுக்கு ராஜ குடும்பத்தார் இரக்கஞ் செய்தல்.**

சக்கரவர்த்தினி தங்களைக்கேவலம் ஒரு மனுஷிதான் என்றும், எவ்வித ஸ்திதியிலுள்ள மனுஷரும் அநேக முக்கிய விஷயங்களில் தங்களைப்போன்றவர்கள்தானென்றும், உணர்கிற உன்னத ஞானமுடையவர்களாயிருந்தபடியினாலேதான் அப்படிச் செய்தார்கள். இந்தப் பெரிய ஞானம் அநேக மனுஷருக்கில்லை. அவர்கள் அங்குள்ள ஏழை ஜனங்களுக்குப் புரிந்த நன்மைகள் எவையெனில்: அவர்களுக்குள்ளே சரியான வேலை இல்லாதவர்களுக்கு வேலை உண்டுபண்ணிக் கொடுப்பார்கள்; அநேகருக்குத் தோட்டம் போடவும் மாடு மேய்க்கவும் பூமி கொடுப்பார்கள்; அவர்கள் பிள்ளை

களுக்கென்று விசேஷித்த பள்ளிக்கூடம் ஏற்படுத்தி அதற்கு அடிக்கடி போய்ப் பாடம் சோதித்து வெகுமதி கொடுத்துப் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் அருமையான அநேக புஸ்தகங்களடங்கிய ஒரு புஸ்தகசாலையும் ஏற்படுத்தினார்கள்.

(இன்னும் வரும்.)

## HOW TO READ A BOOK

## ஒரு புஸ்தகத்தைப் படிப்பது எப்படி?

ஒரு புஸ்தகத்தின் குற்றம் குறைகளை அறிவதற்காக அல்லாமல் வாஸ்தவத்திலேயே அதில் ஆனந்தம் அடைய விரும்பினால், அப்போதைக்கு அவரவருடைய சொந்த அபிப்பிராயம் முதலியவற்றை அறவே அகற்றிவிட்டு அதின் ஆசிரியரோடு மிகுதியும் ஒத்த கருத்தினராய்விடவேண்டும். ஆசான் எவ்வழி அவ்வழி படிப்போரும் அமைந்திருத்தல் தகும். அப்போதுதான் விசனம் எங்கே வருகிறதோ அங்கே துக்கிக்கவும், எங்கே சந்தோஷம் வருகிறதோ அங்கே களிக்கவும் இடம் ஏற்படும். என் மனோபாவத்திற்கு நேர்விரோதமான போக்குள்ள ஆசானுடைய அருமை பெருமைகளையும் என் புத்தி சாமர்த்தியத்தால் நான் உணரலாம் என்றாலும், அதில் உண்மையான இன்பம் உண்டாகாது.

கண்டது கற்கப் பண்டிதனாவான்.
புஸ்தகம் அஸ்த பூஷணம்.
பாடமேறினும் ஏடது கைவிடேல். பழமொழிகள்.

## THE THIEVES AND THE DIAMOND

## திருடர்களும் மாணிக்கமும்

ஒரு கிராமத்தில் ஓர் எளிய குடியானவன் இருந்தான். அவன் பெரியதும் அழகியதும் ஆயிரக்கணக்கான ரூபா பெறக்கூடியதுமான ஓர் மாணிக்கக் கல்லை வைத்திருந்தான். அவனுக்கும் அது அத்தனை அருமையானது என்று தெரியும். இருந்தாலும் அவன் அதை மற்றவர்களுக்குக் காட்டவாவது அதைப்பற்றிப் பேசவாவது அதன் கிரயம் இத்தனையிருக்கலாம் என்ற மதிப்பை அறியவாவது கொஞ்சமும் சிரமம் எடுத்துக்கொள்ளவேயில்லை. அதற்கென்று ஒரு சிறு பெட்டி செய்து அப்பெட்டிக்கு நல்ல நல்ல வர்ணம் பூசினான். இப்படி அழகாய்ச்செய்த பெட்டியைப் பார்ப்பதில் அவனுக்கு வெகு ஆனந்தம்; அதற்குள் இருக்கும் மாணிக்கத்தைப் பார்ப்பதிலுங்கூட அத்தனை ஆசை இல்லை. அப்பெட்டிக்கு ஒரு சாவியிருந்தது; ஆனால் அதை ஒருநாள் எங்கேயோ போக்கடித்துவிட்டான். பின்பு அதற்கு



வேறே சாவி போடவேண்டிய கவலையும் இல்லை. 'அதைத் திறந்து பார்க்கவேண்டுமோ! அந்த அழகிய பெட்டிமாத்திரம் பக்கத்தில் இருந்தால் போதும்; அதுவே எனக்கு திருப்தி' என்று தனக்குள் சொல்லிக்கொள்வான். அவன் அப்பெட்டியைப் பிரிந்து எங்கும் போகான். தனித்திருந்தபோதெல்லாம் அதை அடிக்கடி பார்த்து 'ஆ! என்ன அழகிய பெட்டி!' என்றெண்ணி மகிழ்வான்.

இப்படியிருக்க இந்தக் கிராமத்திற்கு இருபது மைலுக்கு அப்பாலுள்ள ஓர் ஊரில் நடந்த விசேஷத்திற்கு அவன் காட்டு வழியாய்ப் போகவேண்டி வந்தது. அவ்வூருக்குப் போகக் கட்டுச்சோறுங் கட்டிக்கொண்டு பெட்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். கொஞ்சத்தூரம் போனதும் வெயில் அதிகமாய்விட்டது. அதனால் அவன் காட்டிலே ஒரு மாத்தடியில் தங்கி, வெகுநேரம் இருந்துவிட்டான். அதினால் அவன் மறுபடியும் புறப்பட்டுப்போவதானால் அந்த ஊர் சேர்வதற்குள் இருட்டாய்விடும். அன்று நிலா கிளம்பவும் வெகு நேரமாகும். அங்கே காட்டில் அவன் தனியாய் இருந்தான். அப்படி இருக்கும்போது இருந்தாற்போலிருந்து அருகில் ஒரு கிணற்றையும் அதனண்டை ஒரு சத்திரத்தையும் கண்டான். 'சரி. இங்கேயே நிலா கிளம்பும்வரைக்கும் இருக்கலாம்' என்று தன் கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான்.

அந்தச் சத்திரம் பிரயாணிகளை மோசம்பண்ணுவதற்கென்றே திருடர்கள் கட்டியது. ஆனால் அச்சங்கதி பாவம் குடியானவனுக்குத் தெரியாது. ஜாமத்தில் திருடர்கள் வந்து தூங்குகிற குடியானவனை மெள்ளத் தடவி ஏதாவது பணம் இருக்கும் என்று பார்த்தார்கள். மாணிக்கம் வைத்திருந்த பெட்டி தென்பட்டது. அதை வெளியே எடுத்துக்கொண்டுபோய் உடைத்துப் பார்க்க அந்த நல்ல மாணிக்கம் இருந்தது. 'ஸ்வாமி கிருபையால் நமக்கு இன்றைக்கு நல்ல யோகம் வந்திருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே போனார்கள்.

இதற்குள்ளாகத் தூங்கிக்கொண்டிருந்த குடியானவன் தன் பக்கத்தில் யாரோ வந்ததாக உணர்ந்து விழித்தான். உடனே தன் பெட்டியை நினைத்துக்கொண்டு இங்குமங்கும் தடவித்தடவிப் பார்த்தான்; காணோம். 'ஐயோ! யாரோ அடித்துக்கொண்டு போய்விட்டார்களே' என்று கதறினான். நிலாவும் வந்துவிட்டது; பார்க்கும்போது யாரோ சிலர் கொஞ்சத்தூரத்தில் ஓடுவதைக் கண்டு அவர்கள் பின்னே ஓடினான். 'என் அழகிய பெட்டியை எடுத்துக்கொண்டீர்களா! ஐயோ! என் அருமைப் பெட்டியைக் கொடுத்துவிடுங்கள்' என்று கூவி அழுதான்.

அதைக் கேட்ட திருடர்கள் சிறிது நின்று 'என்ன இவன் மாணிக்கத்தைப்பற்றி ஒன்றுமே சொல்லக்காணோம். ஒருவேளை இவனுக்

குப் பயித்தியமோ!' என்று எண்ணினார்கள். பின்னும் அவர்களில் ஒருவன் ஓடி வந்து 'உனக்கென்ன பெட்டி வேணுமோ அல்லது மாணிக்கம் வேணுமோ!' என்று கேலிபண்ணினான்.

அதற்கு அந்த அறியாமையுள்ள குடியானவன் 'அந்த மாணிக்கத்தை நான் பார்க்கிறதே இல்லை; பெட்டியைத்தான் பார்ப்பது வழக்கம்; அது போய்விட்டால் எப்படி நான் பிழைப்பேன். அந்த அழகிய பெட்டியை நான் அனுதினமும் அடிக்கடி பார்க்கவேண்டுமே. அதில் எதாவது இருக்கிறதோ இல்லையோ! அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தப் பெட்டியைமாத்திரம் திரும்பக் கொடுத்துவிட்டால் நான் சுகமாயிருப்பேன். ஐயா! தயவுசெய்து அந்தப் பெட்டியைக் கொடுத்துவிடுங்கள்' என்று சொன்னான்.

திருடர்கள் சிரித்து 'சரி! இவனுக்குப் பயித்தியந்தான். அந்த மாணிக்கம் அநேகம் ஆயிரம் ரூபா பெறும்.' அந்தப் பெட்டி ஐந்தாறு அணாவும் பெறாது. அது வேண்டாமாம், இதுவே வேண்டுமாம். பாருங்கள்! சரி! நமக்குத்தான் என்ன! அந்த அற்ப பெட்டியைக் கொடுத்துவிடலாமே' என்றெண்ணினார்கள்.

அப்படியே குடியானவனும் வெறும் பெட்டியை வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியோடு மறுபடியும் புறப்பட்டுப்போனான். தான் அடைந்த நஷ்டத்தைக் கொஞ்சமும் கருதவேயில்லை. அவன் சர்வமுட்டாள் என்பதில் என்ன தடை பாருங்கள்!

நாமும் இந்தக் குடியானவனைப்போலத்தானிருக்கிறோம். நம்மி[ட]த்திலும் ஒரு அருமை மாணிக்கம் இருக்கிறது. அதை நாம் பார்த்ததேயில்லை. அது நம் உடம்பாகிய பெட்டிக்குள் இருக்கிறது. ஆனால் நாம் எதைப்பற்றி அதிகமாக நினைக்கிறோம்? நித்திய ஜீவிய வாழ்வுக்கு ஆதாரமான ஆத்துமாவையா? அற்ப உடம்பின் க்ஷேமத்தையா? ஏன்! நாமும் அந்த அறியாக் குடியானவனைப்போலவே நம் அருமை மாணிக்கத்தைக் கவனியாமல் அற்ப பெட்டியையே கவலையோடு கவனிக்கிறோம். இனியாகிலும் அப்படிச் செய்யாமலிருப்போமாக.


## ECLIPSES

## கிரஹணங்கள்


காரண காரியங்களை இக்காலத்தைப்போல் அவ்வளவு நன்றாய் அறியாத முற்காலத்தில் கிரஹணம் என்றால் வெகு பயம். நம் இந்து தேசத்தாரும் அப்படியே. சில சமயங்களில் சூரியனும் சந்திரனும் ராகு என்னும் மகா பெரிய பாம்பால் விழுங்கப்படுவதாகவும், அதனால் அவர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் பெருத்த கஷ்டங்கள் நேரிடுகிற



தென்றும் இந்துக்கள் நினைத்து, பற்பல சடங்குகளைச் செய்து அந்தத் துன்பங்களைத் தவிர்க்கப் பார்க்கிறார்கள். ஆனால் உலகத்தில் சம்பவிக்கும் காரியங்கள் பலவற்றிலும் வெகு நன்றாய்க் காரணங் கண்டது இந்த் கிரஹணம். கிரஹணம் எப்போது உண்டாகும் என்று முன்னமேயே நாம் தெரிந்துகொள்ளலாம். இன்னும் அது எதனால் உண்டாகிறது என்பதையும் விளக்கலாம். எப்படியும் கிரஹணத்திற்கு





அத்தனை மூடபயம் அனாவசியம். பூமி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேராய் அமைந்து பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சந்திரன் இருக்க நேர்ந்தால் சூரிய கிரஹணம் ஏற்படுகிறது. அல்லது சந்திரனுக்கும் சூரியனுக்கும் மத்தியில் பூமி வந்தால் சந்திர கிரஹணம் உண்டாகும். பூமி கண்ணாடியைப்போல் ஒளியை ஊடுருவிச் செல்லவிடாது. ஆகையால் அது குறுக்கே இருக்கும்போது இருட்டான நிழல்படும். அதனால் சந்திரன் நமது கண்ணுக்குத் தெரியாமல் மறையும்.




இந்தப் படத்தில் A B சூரியன்; M பூமியைச் சுற்றிச் சந்திரன் ஓடும் வழி; E பூமி; 2 என்ற சிறிய மொக்குளுக்குள் சந்திரன் இருக்க முழு கிரஹணம்; அப்படி இல்லாமல் 1-க்கும் 2-க்கும் இடையிலாவது 2-க்கும் 3-க்கும் மத்தியிலாவது இருந்தால் அசம்பூர்ணமான

சந்திர கிரஹணம் உண்டாகும். ஆகவே சந்திரனும் சூரியனும் பூமிக்கு முன்னும் பின்னும் இருக்கும் பௌர்ணமையில்தான் சந்திர கிரஹணம் உண்டாகும் என்பதாயிற்று. இதுபோலவே சந்திரனும் சூரியனும் பூமிக்கு ஒரே பக்கத்தில் இருக்கும் அமாவாசையில்தான் சூரிய கிரஹணம் உண்டாகும்.

இப்படியானால் ஒவ்வொரு அமாவாசை பௌர்ணமையிலும் என் கிரஹணங்கள் வருவதில்லை? பூமி சூரியனைச் சுற்றுகிறது. E என்ற தன் மேலும் கீழும் இழுத்துள்ள கோடு அந்த வழி. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. அந்த வழி M. ஆனால் சந்திரன் பூமிக்கு எப்போதும் சமதூரத்திலேயே சுற்றுவதில்லை. சிலவேளையில் பூமி செல்லும் வழிக்கு மேலும் இன்னுஞ் சிலவேளையில் கீழும் இருக்கும். ஆதலால் வருஷத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகளில்தான் சந்திரன் நிழலுக்குள் வரக்கூடும் என்ற இதுவே காரணம்.



இருபது அல்லது அதற்கு மேற்பட்ட வருஷங்களின் பஞ்சாங்கங்களைப் பார்த்தால் கிரஹணங்கள் திரும்பத் திரும்ப உண்டாவதை அறியலாம். இன்றைக்கு வந்த கிரஹணம் 18 வரு 11 நாள் கழிந்த பிறகு மறுபடியும் வரும். இந்தக் கணக்கு ஆதிகாலத்தாருக்குத் தெரிந்திருந்தது. அதைக்கொண்டு கிரஹணம் வருங்காலங்களைக் கணித்து வந்தார்கள். முழுச் சூரிய கிரஹணம் ஒவ்வொரு வருஷமும் குறைந்தது இரண்டு கிரஹணங்கள் வரவேண்டும். அவையிரண்டும்



சூரிய கிரஹணமே. கிரஹணங்கள் ஒரு வருஷத்தில் வெகு அதிகமானாலும், அவை ஏழுக்குமேல் வரா;— சூரிய கிரஹணம் ஐந்தும் சந்திர கிரஹணம் இரண்டும் ஆகவாவது சூரிய கிரஹணம் நான்கும் சந்திர கிரஹணம் மூன்றும் ஆகவாவதுதான் வரும். ஒரு சூரிய கிரஹணம்—தொட்டதுமுதல் விடும்வரைக்கும்— நாலரைமணி நேரத்திற்குமேல் இருக்காது. அதில் சூரியன் கொஞ்சமும் தெரியாமல் இருக்கக்கூடிய நேரம் எட்டு நிமிஷங்களுக்கு அதிகப்படாது.

## MARRIAGES IN CHINA


## சைன தேசத்தில் கலியாணம்

சைனாவிலும் கலியாணத்திற்குமுன் நிச்சயதாம்பூலம் பிடிப்பதுண்டு. அதில் இரண்டு குடும்பத்தாரும் ஒரு குடும்பத்தின் பெண்ணுக்கு மற்றொரு குடும்பத்தின் மாப்பிள்ளை புருஷனாவானாக என்று உடன்படிக்கை செய்துகொள்வார்கள். இப்படி ஒப்பந்தம் செய்வதற்குமுன் வதுவரர்களை 'சம்மதமா?' என்று கேட்பதில்லை. வேண்டுமானால் ஒருவேளை பெண்ணுடைய இஷ்டத்தை அவளை அதிக அருமையாய் வளர்த்த தகப்பன் கேட்பான். ஆனால் இப்போது வரவர ஒருவன் தான் விரும்பிய பெண்ணை விவாகம்செய்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் தன் தாயைக்கொண்டு செய்விக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. கலியாணத்திற்குமுன் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அவ்வளவு அதிகமாய்ச் சந்திப்பதில்லையானாலும் ஒரு கலாசாலையில் படிக்கும் மாப்பிள்ளைக்கும் அவனுக்குத் தீர்மானமான மற்றொரு கலாசாலையில் படிக்கும் பெண்ணுக்கும் சிநேகத்திற்கு அடையாளமான கடிதப் போக்குவரவு இருக்கலாம்.

குடும்பத்தார்களும் நேரில் விவாக நிச்சயம் செய்துகொள்ளாமல் மூன்றாவது மனுஷன் ஒருவனை இருவருக்கும் மத்தியஸ்தனாக வைத்து நிச்சயார்த்த ஏற்பாடுகளைச் செய்வார்கள். இதுவே சைனாவில் நெடுங்காலத்து வழக்கம். கிராமாந்தரங்களில் ஒரு கிராமத்துப் பெண்குழந்தைக்கும் மற்றொரு கிராமத்து ஆண்குழந்தைக்கும் சிறு வயசிலேயே நிச்சயார்த்தம் செய்துவிடுவார்கள். இப்படி நிச்சயமான பெண் மாப்பிள்ளைக் குழந்தைகளை ஸ்வீகாரம் செய்துகொண்டு இருவரையும் ஒரே வயிற்றுப் பிள்ளைகளைப்போல வளர்த்து வருவார்கள். இவர்களுக்குக் கலியாணம் நடப்பதுமாத்திரம் தக்க வயது வந்தபின்தான். நம் தேசத்தில் நடப்பதுபோல் பாலிய விவாகம் சைனாவில் கிடையாது. கலியாணத்திற்குச் சைனாவில் குறைந்தது மாப்பிள்ளைக்குப்

பதினாறு அல்லது பதினேழு வயதும், பெண்ணுக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயதுமாயிருக்கவேண்டும். ஆனால் கலியாணம் செய்யும் பெண்களுக்கு சராசரி வயது இருபதாகவே இருந்து வருகிறது.

இப்படி நடக்கும் நிச்சயார்த்தத்திற்குமுன் செய்யவேண்டிய காரியம் இரண்டு. பெண்ணுக்கு ஸ்ரீதனம் கொடுக்கவேண்டும். இது இத்தனை என்பதை முன்னதாகவே தீர்மானித்திருப்பார்கள். அப்



பெண்ணின் பிற்கால சம்ரக்ஷணையை உத்தேசித்து இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. சைனாவிலும் பொருத்தம் பார்ப்பதுண்டு. பெண் மாப்பிள்ளைகளின் பிறந்த வருஷம், மாசம், தேதி, நாழிகைகளை ஒரு ஜோசியனிடம் சொல்லி இந்த எட்டும் பொருந்தியிருக்கின்றனவா என்பதை முதலில் தெரிந்துகொள்வார்கள். பின்தான் ஸ்ரீதனம் கொடுத்தல் அல்லது பரியம் வாங்குதல் நடக்கும். இப்படி ஒருதரம் சம்மதித்துப் பரியமும் வாங்கிக்கொண்டால் பின்பு அந்தக்



கலியாணத்தை முடித்தே தீரவேண்டும்; எந்தக் காரணத்தாலும் நிறுத்த முடியாது. ஒரு பண்டிதனுக்கு நிச்சயதாம்பூலம் பிடித்தான ஒரு பெண் வெகு ஏழையாயும் குருடாயும் போனபின்னும் அவன் அதைக் கட்டிக்கொண்டு மற்றவர்களைக்காட்டிலும் மிகுந்த மகிழ்ச்சியோடும் பாக்கியத்தோடும் இருந்ததாக சைனா தேச புஸ்தகங்கள் தெரிவிக்கின்றன.

சரி, இனி சைனாவின் சாதாரண விவாக வழக்கத்தைப் பார்ப்போம். ஒரு நாளைக்குறித்துப் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்ணின் சேலைகள் முதலியவற்றைச் சிவப்புத் தட்டத்தில் வைத்து தீவர்த்தி மேளதாளங்களுடன் அனுப்புவார்கள். பெரிய சிவப்பு உறைகளில் சிநேகிதர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்புவார்கள். அன்றே மாப்பிள்ளையின் சகோதரர்கள் புதுப்பெண்ணை எடுத்துவர ஒருவித சப்பரத்தைக் கொண்டுபோவார்கள். பெண்வீட்டிற்குப்போக அது மூடியிருக்கும்; அதைத் திறக்க இடிப்பதுபோல் பாவனை பண்ணுவார்கள். இது இந்தியாவின் சோட்டா நாகப்பூரிலுள்ள ஒராஹா ஜாதியார் இன்னும் நடத்தும் பெண் பிடிக்கும் புராதன வழக்கம்போலிருக்கிறது. அங்கே வாயில்காப்போனுக்குச் சிறிது பணம் தரக் கதவு திறக்கும். உடனே உள்ளேயிருந்து பெண் வரும். அப்பெண் வெகு நேர்த்தியான ஆடை தரித்திருக்கும்; சில சமயங்களில் நாலாபக்கத்திலும் தொங்கும் ஒருவித கிரீடம் வைத்துக்கொண்டும், எப்போதும் தடித்த சிவப்பு முக்காடு போட்டுக்கொண்டும், வெளியே வந்து அப்போதைக்கு வாடகைக்கு வாங்கிய கலியாண சப்பரத்தில் உட்காரும். அந்த சப்பரம் மரத்தாலானது; கனமாயிருக்கும். அதை நாலு பேர் சுமக்கவேண்டும். அதன் நாலு பக்கங்களும் மேற்பக்கமும் சிவப்புச் சாயமும் தங்கமுலாமும் பூசிச் சித்திரமாயிருக்கும். அதற்குள் பெண்ணை உட்காரவைத்துப் பூர்த்தியாய் மூடியிருக்கும்; வெளியே பார்ப்பவர்களுக்குத் தெரியாது.

இந்த சப்பரத்தில் உட்கார்ந்துகொண்டே போய் அந்தப் பெண் மாப்பிள்ளை வீட்டில் இறங்கும். அப்போது புத்திரர்களைப் பெற்றெடுத்த ஸ்திரீகள் இருவர் எரியும் நெருப்பின்மேல் வைத்திருக்கும் ஒரு தட்டின்மேல் அந்தப் பெண்ணைத் தூக்கி நிறுத்துவார்கள். மாப்பிள்ளை வாயிலில் அந்தப் பெண்ணைச் சந்திப்பான். பிறகு பெண்ணை உள்ளே அழைத்துக்கொண்டு போவார்கள். அங்கே அவள் மணமகனை வணங்கி நமஸ்கரிக்கவேண்டும். உள்ளே கலியாணக்கூடத்தின் மத்தியில் 'மோக்ஷம், பூமி, ராஜன், பெற்றோர், உபாத்தியாயர்' என்ற இவைகள் எழுதிய காகிதச் சுருள் ஒன்று இருக்கும். அல்லது மாப்பிள்ளையின் மூதாதைகளின் பேர் எழுதிய சிறு மேஜை இருக்கும்.

இதன்முன் பெண் மாப்பிள்ளை என்னும் இருவரும் முழங்காற்படியிடுவார்கள். இங்கிருந்து தாழ்வாரத்திற்குப் போய் அங்கே விரித்திருக்கும் சரிகை வேலைசெய்த சிவப்பு ஜமுக்காளத்தின்மேல் இருவரும் உட்காருவார்கள். இங்கேதான் பெண் தன் முக்காட்டை நீக்குவாள். மாப்



பிள்ளையும் அப்போதுதான் பெண்ணின் முகத்தை முதல் முதலாகப் பார்ப்பான். இருவரும் மௌனமாய் இரண்டு சிறிய கோப்பை திராக்ஷாரசம் குடிப்பார்கள். அங்கே வந்திருக்கும் ஜனங்கள் தங்களுக்குத் தோன்றியதையெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

பின் கலியாண விருந்து நடக்கும். அதற்கு அயலாரும் வழியில் போவார் வருவாரும் கலியாணக்கூடத்தில் வந்து திரண்டிருப்பார்கள். விருந்தாளிகளுக்குத் தரவேண்டிய ஆசனம் முதலியவற்றில் உயர்ந்தோர் தாழ்ந்தோருக்குத் தகுந்தபடி நடந்துகொள்வதற்காக மிகுந்த சிரமம் எடுத்துக்கொள்வார்கள். 'இப்படி இருங்கள்' என்று உயர்ந்த இடத்தைக் காட்டினால் அதை வகிக்கத் தகுந்த பெரிய மனுஷனும் 'பாதகம் இல்லை; இதுவே போதும்' என்று அதற்கு அடுத்த தாழ்ந்த ஆசனத்திலிருக்கவே பிரியப்படுவான். ஒவ்வொரு மேஜை



யிலும் எட்டுப்பேர் உட்காரத்தக்கதாயிருக்கும். ஆகையால் அவற்றிற்கு 'அஷ்ட சிரஞ்சீவி' களின் மேஜைகள் என்று பேர். அப்போது பெண் அந்தத் தாழ்வாரத்திலேயே இருக்கும்; மாப்பிள்ளை மட்டும் விருந்தாளிகளுக்குப் பணிவிடை செய்வான். அடிக்கடி 'என்ன சாப்பாடு! வெகு அற்பம். ஏதோ சக்தியனுசாரம் ஏற்றுக்கொள்ளவேணும்' என்று தன் விருந்தை இகழ்ந்து பேசுவான். அதற்கு அவர்களும் சிறிது எழுந்து மரியாதையாய்ப் புகழ்ந்து பதில் சொல்வார்கள். போஜன பதார்த்தங்கள் பல இருக்கும். அவற்றில் முதலில் வருவது சின்னக் கோப்பையில் ஒன்று அல்லது இரண்டு கோப்பை திராக்ஷாரசம்; பின் கொஞ்சம் பன்றிக் கொழுப்பும், அரிசிச் சோறும் வரும். இவற்றோடு போஜனமும் முடியும்.

முதல்நாள் சாயந்திரம் பெண்ணைப் பார்க்க எல்லாரும் வருவார்கள். வந்து பார்த்து 'பெண் இப்படி இருக்கிறது; அப்படி இருக்கிறது' என்று பலவாறாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்வதில் எதுவும் கெடுதல் இருக்காது. ஆனால் அந்த வார்த்தை ஒன்றும் பெண்ணுக்குப்• பிடிக்காது. அடுத்தநாள் அதிகாலையில் மாப்பிள்ளை நாற்காலிபோன்ற ஒருவிதப் பல்லக்கில் ஏறிக்கொண்டு தன் மூத்த சிநேகிதர்களைப் போய்ப் பார்ப்பான். இப்படியே மூன்று நாள் விவாக சடங்குகள் நடக்கும். பிறகு பெண்ணை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து அவளுடைய பெற்றோர்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவார்கள். இனிமேல் அவள் புகுந்த வீட்டிற்கே உரியவள் ஆய்விட்டாள். அங்கும் அவளது மாமியார் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டே தான் ஒரு புத்திரனைப் பெறும்வரைக்கும் நடக்கவேண்டும்.

இப்படிக் கட்டிய புருஷன் இறந்துபோனால் மறுபுருஷனைக் கட்டாமலே இருக்கலாம். சைனாவில் விதவா விவாகம் அவ்வளவு சாதாரணமானது அல்ல. மறுபுருஷனை மணக்காமல் இருப்பதே பொருத்தமானது. அப்படி மறுவிவாகம் செய்துகொள்வதைவிடத் தற்கொலை செய்துகொள்வதே மேல் என்று சில ஸ்திரீகள் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வைராக்கியமுள்ள ஸ்திரீகளின் ஞாபக சின்னமாக நாட்டிய கல் வளைவுகள் உண்டு.

• சைனா பாஷையில் 'பு' என்ற சப்தம்போன்ற ஒரு வார்த்தையுண்டு. புருஷனுக்கு அடைமொழியாகும்போது ஆதரி என்றும் பெண்சாதிக்கு ஆகும்போது கீழ்ப்படி என்றும் அதற்குப் பொருள் தருகிறார்கள். இப்படி ஸ்திரீகள் புத்திசாலிகளாயும் மனோதிடமுள்ளவர்களாயும் இருந்தாலும் தங்கள் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டிருக்கிறார்கள். அவளுடைய நடத்தையைப் பார்த்தே குடும்பத்தில் அவளுக்கு மரியாதை கிடைக்கும். நல்லதாயிருந்தால்

நல்ல மரியாதை, இல்லையானால் இல்லை. இன்னும் அவள் புத்திரர்களைப் பெறப்பெற அவளது பதவி உயரும். சைனாவில் தகப்பன்மாருடைய பேர்களைப்பார்க்கிலும் தாய்மாருடைய பேர்களையே மேஜைகளில் எழுதி பின்வரும் மக்கள் ஆராதனை செய்வார்கள்.

கெட்டிக்கார ஸ்திரீகளின் செல்வாக்கைக்கொண்டே சைனா தேச சரித்திரத்தின் போக்கு நிதானிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சைனா தேசத்துச் சக்கரவர்த்தினியாயிருக்கும் மாதரசியின் ஒழுக்கம் மேன்மை முதலியவற்றைப்பற்றிச் சொல்லிமுடியாது. இதற்குமுன் இவரைப்போன்ற செல்வாக்குள்ள சக்கரவர்த்தினி இருந்ததே இல்லை.

சைனாவில் ஒருவனுக்குச் சரியான மனைவி ஒருத்தியேதான். அவ்விடத்துச் சட்டமும் அதுதான், வழக்கமும் அதுதான். அப்படியே இப்போதிருக்கும் சக்கரவர்த்திக்கு ஒரே சக்கரவர்த்தினி. ராஜாவுக்கும் பணக்காரர்களுக்கும் இரண்டாந்தாரப் பெண்சாதிகளும் உண்டு. முதல்தார மனைவிக்கு மகனில்லையானால் இரண்டாந்தாரப் பெண்சாதிகளைக் கொள்ளலாம். புத்திரர்கள் எல்லாருக்கும் ஒரே மரியாதை; அந்தஸ்து வித்தியாசப்படாது. இப்படியிருந்தும் இந்த இரண்டாந்தாரப் பெண்சாதிகள் தங்கள் அந்தஸ்தையும் தங்கள் மக்களின் அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்ள நினைத்து மற்றவர்களின்மேற் பொறாமைகொண்டு செய்த துர்க்கிருத்தியங்கள் பல இருந்திருக்கின்றன. சைனாவிலும் மற்றைத் தேசத்திலும் ஏகதாரக் குடும்பமே இன்பமாய் இருக்கிறது. ஒன்றுதான் தாரம், இரண்டு பாரம் இன்னும் மேற்பட்டது கோரம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1911 ௵ ஜூன் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | மத். | 27. 11—26 | 11 | ஞா. | 2 சாமு. | 5. 1—12 | 21 | பு. | 2 சாமு. | 14. 12—24 |
| 2 | வெ | ,, | 27. 27—44 | 12 | தி. | ,, | 7. 1—17 | 22 | வி. | ,, | 15. 1—12 |
| 3 | ச. | ,, | 27. 45—66 | 13 | செ. | ,, | 7. 18—29 | 23 | வெ. | ,, | 15. 13—23 |
| 4 | ஞா. | ,, | 28. 1—20 | 14 | பு. | ,, | 9. 1—13 | 24 | ச. | ,, | 15. 24—37 |
| 5 | தி. | 2 சாமு. | 1. 1—16 | 15 | வி. | ,, | 10. 1—19 | 25 | ஞா. | ,, | 16. 1—14 |
| 6 | செ. | ,, | 1. 17—27 | 16 | வெ. | ,, | 11. 1—13 | 26 | தி. | ,, | 17. 1—14 |
| 7 | பு. | ,, | 2. 1—7 | 17 | ச. | ,, | 11. 14—27 | 27 | செ. | ,, | 17. 15—29 |
| 8 | வி. | ,, | 3. 12—27 | 18 | ஞா. | ,, | 12. 1—14 | 28 | பு. | ,, | 18. 1—18 |
| 9 | வெ. | ,, | 3. 28—39 | 19 | தி. | ,, | 12. 15—25 | 29 | வி. | ,, | 18. 19—33 |
| 10 | ச. | ,, | 4. 1—12 | 20 | செ. | ,, | 14. 1—11 | 30 | வெ. | ,, | 19. 1—15 |
| | | | | | | | | | | | 40—43 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

# மாதர் போதினி

OF THE REGISTRAR OF
24 JUL 1911
MADRAS.

No. 163 ஜுலை 1911 No. 7

## THE CORONATION OF THE KING EMPEROR

## நமது அரசரின் மகுடாபிஷேகம்

பெண்பாலார்க்கும், சிறுவர் சிறுமிகட்கும் உபயோகமாகும் பொருட்டு நாம் பிரசுரித்து வெளியிடும் மாதர் போதினியின் இந்த மாதத்துப் புத்தகத்தின் முகப்பில், ராஜாதி ராஜனும், இங்கிலாந்தின் அரசரும் நமது காருண்ய சக்கரவர்த்தியுமாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் மேரி ராணியும் கிரீடதாரண உடைதரித்து நிற்கும் பாவனையாக ஓர் படத்தைச் சேர்த்திருப்பது இப்பத்திரிகையை வாசிப்போர் யாவருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. எட்வர்ட் அரசர் இறந்தவுடன் இவரே இராச்சியபாரம் தாங்கி அரசாண்டு வந்தாலும் இவருடைய மகுடாபிஷேகம் சென்ற மாசம் 22உ வியாழக்கிழமைதான் நடந்தேறிற்று. ஆகையால் இச்சஞ்சிகையில் நமது அரசரின் மகுடாபிஷேக வைபவத்தைப்பற்றிக் கூறுவது நமது கையொப்பக்காரருக்கு மிக்க பிரீதியைத் தருமென்று நம்புகிறோம்.

மகுடாபிஷேகமென்பது அரசன் தன் வசம் கடவுளால் ஒப்புவிக்கப்பட்ட பிரஜைகளை நீதி தவறாது ஆண்டு வருதற்குரிய ராஜபதவிக்குத் தன்னைத் தேவ சன்னிதானத்தில் தத்தம்செய்தலாம். இம்மகத்தான வைபவம் லண்டன்மாநகரில் பல ஆண்டுகளின்முன் இயற்றப்பட்டு, பற்பல அரசர் அரசிகளின் முடிசூட்டு ஸ்தலமாக விளங்கும் உவெஸ்ட் மினிஸ்டர் ஆபி என்னும் இங்கிலாந்தின் சிரேஷ்ட தேவாலயத்தில் பற்பல தேசத்து அரசர் அரசிகள், ராஜகுமாரர் ராஜகுமாரத்திகள், இராசாங்கத்துப் பிரதம அத்தியக்ஷகுருமார், ஸ்தானாபதிகள், மந்திரத்தலைவர், சேனைத்தலைவர், பிரபுக்கள், துரைமக்கள், துரைபன்னியர், நிறைந்த மகா சபையில் மிக்க ஆடம்பரமாய் நடந்தது. ஒரு சிலுவையின் சாயலாய் இயற்றப்பட்டு, ஆகாயத்தை யளாவி

நிற்கும் கோபுரங்களும், நாற்புறமும் தயங்கும் மிக்க அலங்காரமான ராஜ வாயில்களும், அடுக்கடுக்காய் அமைக்கப்பெற்ற சாளர வாயில்களும், அழகிய தூபபீடம் பலிபீடம் முதலியவைகளும், பொற்சிலுவை நாட்டிய பரிசுத்த கர்பக்கிருகமும், இரத்தினகசிதமாய் விளங்கும் சிம்மாசன மேடையும் பொருந்திய இம்மகத்தான கட்டடத்திலேதான் ஏறக்குறைய அங்கிலேய மன்னர் யாவரும் முடிசூட்டப்பட்டனர். அவ்வழக்கப்படியே நமது அரசரும் அங்கு முடிதரிக்கப்பெற்றார்.

மகுடாபிஷேக தினத்தன்று லண்டன் நகரத்துக் காட்சியையும் அது கொண்ட கோலத்தையும் எடுத்துரைப்பது அசாத்தியம். அநேக வாரங்களாக அந்நகரத்து ஜனங்கள் மகுடாபிஷேக மகோற்சவத்தின்பொருட்டுத் தத்தம் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரிப்பதே தொழிலாய்க் கொண்டனர். வீதிகள் யாவும் அதிஅழகாய்ச் செப்பனிடப்பட்டன. மகா தோரணங்களும், பச்சிலைகளும், புஷ்பமாலைகளும், பற்பல வர்ணத் துணிகளும், கொடிகளும், மாடமாளிகை, கூடகோபுரம், சாதாரண வீடு, குடிசை, மரம், செடி என்னும் பேதமின்றி எங்கும் தொங்கி இளந் தென்றற்காற்றில் இன்பமாய் அசைந்துகொண்டிருந்தன. பலவர்ணந் தீட்டிய கொடிகளும், புஷ்ப ஆரங்களும் ஆகாயத்தில் அசைந்துகொண்டிருப்பது, காருண்ய சீலராம் எம் அரசர் மகுடாபிஷேகத்தைக் கண்ணாரக் கண்டு களிகூர வாருங்கள்! வாருங்கள்!!' என்று அனைவரையும் அழைப்பதுபோலிருந்தது. விநோதமாயமைத்த வீதிகளின் இருபுறத்தும் பாதசாரியாய்ச் செல்வோர்க்கென்று இயற்றப்பட்டுள்ள ஒற்றடிப் பாதைகளினழகும், உட்கார்ந்து அரசன் பவனிபோவதைப் பார்ப்பதற்கென்று ஏற்படுத்திய சிங்காரமேடைகளின் சொகுசும், மிக்க விசித்திரமாயியற்றிய தீபங்களைத் தாங்கி நிற்கும் கணக்கில்லாத தீபஸ்தம்பங்களின் சிறப்பும், அத்தீபங்கள் ஆகாயத்தினின்றும் படிகமாலைகள் அணியணியாய்த் தொங்குவதுபோலவும், வானத்திலுள்ள நட்சத்திரங்கள் யாவும் அங்கு இறங்கி வந்தாற்போலவும், கோடி சூரியர் ஒருங்கே பிரகாசித்தாற்போலவும் பிரகாசித்து இரவைப் பகலாக்கும் சிறப்பும், மகுடாபிஷேகத்திற்கென்று செய்யப்பட்டு ஆங்காங்கு விளங்கும் அதிமனோகர அலங்காரங்களைப் பார்க்கும்பொருட்டு ஜனங்கள் கும்புகும்பாய்ச் செல்லும் சிறப்பும், குதிரைகள் ஒன்றும் இரண்டும் பலவுமாய்ப் பூட்டிய ரதங்களின் சிறப்பும், பளீர் பளீர் என்றொளிவிட் டெறியும் வாளும் ஈட்டியும் தரித்துக் குதிரையின்மீது அங்குமிங்கும் விரைந்துசெல்லும் யுத்தவீரரின் சிறப்பும், ஜனங்களுக்கு இடையூறொன்றும் நேரிடா வண்ணம் ஆங்காங்கு நின்று தங்கடமையைச் செலுத்தும் நகரகாவ



லரின் தொகுப்பும், பார்க்கப் பார்க்கப் பரமானந்தத்தை விளைத்தன. எங்குச் சென்றாலும் எப்பக்கம் பார்த்தாலும் லண்டன் நகரம் முழுவதும் கொடி ஸ்தம்பங்களடர்ந்த ஓர் காடுபோலவும், புஷ்பங்களும் பச்சிலைகளும் நிறைந்த ஓர் நந்தவனம்போலவும், மன்னர் மன்னனின் மகுடாபிஷேக உற்சவத்தைக் கொண்டாடும்படி அந்நகரத்தார் இயற்றிய ஓர் அலங்கார மண்டபம்போலவும் காணப்பட்டது.

லண்டன் நகரமோ இயல்பாகவே மிக்க அழகு வாய்ந்தது. அவ்வாறாகிய இயற்கை யழகோடு மேற்கூறிய செயற்கையழகும் சேர்ந்த அந்நகரம் மண்டலாதிபதியும் ராஜாதி ராஜனும் எம்மனைவரையும் அன்புடன் ஆண்டுவரும் சற்குண சீலருமாகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடைய பட்டாபிஷேக வைபவத்தை மிக்க அவாவுடன் எதிர்பார்த்திருந்தது.

ஜூன் மீ 22உ பொழுதுவிடியுமுன்னரே பீரங்கிகள் நானுபக்கங்களிலுமிருந்து முழங்கி அந்நாள் அரசன் மகுடாபிஷேக தினமெனக் குறிப்பித்தன. லண்டன் நகரத்து ஜனங்கள் கடந்த இராத்திரியெல்லாம் தூக்கமென்பது இல்லாமல் அலங்கார விநோதங்களையும் இதர வேடிக்கைகளையும் பார்ப்பதில் தங்காலத்தைக் கழித்தனர். எள்ளிட இடமின்றித் தெருக்கள் யாவும் ஜனக்கூட்டத்தால் நிறைந்தன. பேட்டைகளிலிருந்து ஜனங்கள் வெள்ளம் புரண்டுவந்தாற்போல அதிகாலையில் வந்து குவிந்தனர். அரசனும் அரசியும் அதியுன்னத அலங்கார வைபவத்துடன் பவனிவரும் மார்க்கத்தின் இருபுறத்தையும் உலகத்தின் பற்பல பாகத்திலுமிருந்து வந்த பிறித்தானிய சைனியங்கள் நிறைத்தன. ஜன நெருக்கமாயுள்ள விடங்களில் குதிரைப் பட்டாளங்கள் நிறுத்தப்பட்டன. இந்திய இராணுவத் தலைவராகிய கிச்சினர் பிரபுவும், அவருடைய சைனியங்களும் ஆயிரக் கணக்கான போலீஸ் வீரரும் ஜனங்களுக்கு யாதொரு விக்கினமும் நேரிடாவண்ணம் அங்கங்கு நின்று எல்லாவற்றையும் நடப்பித்தனர். லண்டன் நகரம் அன்று ஓர் பெரிய கடல்போல் தோன்றிற்று. காலை ஆறரைமணிக்குத் தேவாலயத்துத் திருக்கதவுகள் திறக்கப்பட்டன. உடனே ஆயிரக் கணக்கான வண்டிகளில் அழைக்கப்பட்ட விருந்தாளிகள் வந்து நெருங்கினார்கள். இச்சிறந்த காட்சியைக் கண்ணுறும் வண்ணம் சூரியனும் உதயமானான்.

உவெஸ்ட் மினிஸ்டர் ஆபி என்னும் திருக்கோயிலுள் அன்று ராஜராஜாக்கள், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர், ராசப்பிரதிநிதிகள், ஸ்தானாபதிகள், சேனாபதிகள், அத்தியக்ஷகுருமார், மந்திரிமார், அங்கிலேய மகா மந்திராலோசனைச் சபையின் அங்கத்தவர், நீதியதிபர், நியாயதுரந்தரர், பண்டிதர், பாவலர், நகரகாவலர் முதலிய ஏறக்

குறைய ஏழாயிரம் பேர் தத்தம் அந்தஸ்துக்குரிய உடை தரித்தவராய் ராஜனுடைய வரவை எதிர்பார்த்திருந்தனர். காலை பத்தரைமணியளவில் நமது அரசரும் அவர் பத்தினியும் பக்கிங்காம் மாளிகையை விட்டு மகுடாபிஷேகம் நடக்கும் திருக்கோயிலுக்கு எழுந்தருளச் சித்தமாயினர். அரசனும் பரிவாரமும் மூன்று பிரிவாக ஊர்க்கோலக் காட்சி தந்தனர். பக்கிங்காம் மாளிகை தொடக்கம் உவெஸ்ட்மினிஸ்டர் ஆபி வரையிலுமுள்ள வீதியின் இருமருங்கினும் பற்பல வர்ணமுடைய அழகிய உடைதரித்த இராணுவவீரர் நெருங்கிநின்றனர். வானுறவோங்கி நின்ற கொடி ஸ்தம்பங்களும் பிரகாசிக்கின்ற கொடிகளும், பொன்னிறச் சீலைகளும், மகா தோரணங்களும், வில்வளைவாயமைத்த அலங்காரப் பந்தர்களும், படிக மாலைகளும் அவ்வீதி சுவர்க்கலோக வீதியோவென்று ஐயுறச்செய்தது. முதலாவது ஊர்க்கோலத்தில் புறதேச அரசர் ராஜகுமாரர் ஸ்தானாபதிகள் முதலியோர் அழகிய ரதங்களில் ஏறி, குதிரைவீரர் காலாட்படைகள் முன்னும் பின்னும் தொடர, மெய்க்காப்பாளர் ஆயுதந் தரித்தவராய்ச் சூழ்ந்து செல்ல, தேவாலயத்தை நோக்கிச் சென்றனர். இரண்டாவது ஊர்க்கோலத்தில் ஐந்து அழகிய ரதங்கள் சென்றன. இதில் ராஜகுடும்பத்தைச்சேர்ந்தவர்களும் ஜார்ஜ் மன்னருடைய பிள்ளைகளும் பவனி சென்றனர். ஐந்தாவது வண்டியில், நமது அரசருடைய செல்வக் குமாரராகிய உவேல்ஸ் நாட்டு இளவரசரும் மற்றப் பிள்ளைகளும் இருந்தனர். அவர்களைக் கண்டதும் வீதியின் இருபுறத்திலும் நெருங்கிநின்ற ஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தது அவர்களை மிகவும் சந்தோஷிப்பித்தாலும், சிறிது மழை வருவித்தமையால் ராஜகுழந்தைகள் ரதங்களின் ஜன்னல்களை மூடிக்கொண்டு செல்லவேண்டியதாயிற்று.

மூன்றாவது ஊர்க்கோலம் ஜார்ஜ் மன்னருடையது. ராஜன் ராணி சகிதமாய் அரமனையை விட்டுப் புறப்பட்டதற்கு அடையாளமாக அஷ்டதிக்கும் கிடுகிடுக்கும்படி பீரங்கிகள் வெடி தீர்ந்தன. கோவில்களிலுள்ள மணிகள் கணீர் கணீரென்று அடித்தன. தெய்வச்செயலாய் மழையும் நின்றுவிடச் சூரியன் மறுபடியும் பிரகாசித்தான். இவ்வேளையில் அங்குகூடிய ஜனங்கள் விழித்த கண் மூடாமல் அரசன் வரும் திசையைப் பார்த்தவண்ணமாய் நின்றனர். அப்பொழுது பொற்சரிகை இழைத்துப் பொன்மயமாய் விளங்கும் உடைதரித்த ராணுவவீரர் வாத்தியகோஷம் செய்துகொண்டு முன்செல்ல, ஜயபேரிகை முழக்க, எக்காளம் எத்திசையும் தொனிசெய்ய, குதிரைவீரர் வாளும், வேலும், கொடியும் பிடித்து முன்னும் பின்னும் நெருங்க, பீரங்கிப்பட்டாளம், காலாட்படை முதலிய சைனியங்கள் எப்புறமும் தயங்க, பொற்கொடி, குடை, ஆலவட்டம், கட்டியக்



கோல், வெண்சாமரை ஆதியாம் ராஜ சின்னங்களும், விருதுகளும் எப்புறமும் துலங்க, மெய்க்காப்பாளர் கட்கதாரிகளாய்ச் சூழ்ந்துவர, மன்னர் மன்னனும், மகாராணியும் பொற்சரிகை யிழைத்த அதிவிசித்திர ஆடையும் பொற்பணி யமைத்த உடுப்புக்களுமிட்டு அலங்கரித்த எட்டுக் குதிரைகள் பூட்டிய ராஜரதத்தில் அமர்ந்து, சூரியனும் சந்திரனும் பல்லாயிர நட்சத்திரங்கள் மத்தியில் ஒருங்கே தோன்றினாற்போல, பற்பல ரதங்களில் சமஸ்தான உத்தியோகஸ்தர் மன்னர் மண்டலாதிபர் தொடர்ந்துவர, ஜகஜோதியாய் விளங்கும் ராஜவீதியில் எழுந்தருளிய திருக்கோலச் சிறப்பை யாரோ எடுத்துரைக்க வல்லார்? இதோ நம் அரசன் அதோ எம் ராணி என்று ஜனக்கூட்டத்திலிருந்து எழுந்த பேரொலி முழங்க, வழி நெடுகத் தேங்கி நின்ற ஜனங்கள் கைக்குட்டைகளையும் தொப்பிகளையும் அசைத்துக்கொண்டு ஆனந்த பரவசத்தராய் ‘ஜார்ஜ் மன்னரும் மேரி அரசியும் நீடூழி வாழ்க’ என்று ஆசிகூற, சாளர வாயில்களினின்றும் ஆங்கிலமாதர் பூமாரி பொழிய ஜார்ஜ் மன்னரும் மேரி ராணியும் புன்சிரிப்போடு இருபுறமும் திரும்பித் திரும்பித் தலையசைத்து ஜனங்களின் ஆசீர்வாதத்தை அங்கிகரித்த வண்ணமாய், அதிபுன்னத கோலாகல வைபவத்துடன் பவனிசென்று திருக்கோயிலை அடைந்தார். அரசனும் அரசியும் ஆலயத்துட் செல்லவே அங்கு கூடியிருந்த அனைவரும் எழுந்து மரியாதை செய்தபின் ஓர் கீதம் பாடப்பட்டது. உவெஸ்ட் மினிஸ்டர் வித்தியாசாலைமாணவர் ‘ராணி நீடூழி வாழ்க, அரசன் நீடூழி வாழ்க’ என வாழ்த்தினர். அரசனும் அரசியும், ராஜபரிவாரத்தவர், உவேல்ஸ் இளவரசர், பட்டவர்த்தனர், குருமார், பிரபுக்களாதியோர் தொடர்ந்துவர, கிரீடம் செங்கோல் முதலிய ராஜசின்னங்களோடு அத்தியக்ஷகுருமார் முன் செல்ல, கோயில் மண்டபம் வழியாய்ச் சென்று அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட ஆசனங்களில் உட்கார்ந்தபின், காண்டர்பரி அத்தியக்ஷகுரு எழுந்து, ‘பிரபுக்களே! நான் மாட்சிமைதங்கிய ஜார்ஜ் அரசனை இவ்விராச்சியத்து அரசனாக உங்களுக்கு ஒப்புவிக்கிறேன். ஆகையால் நீங்கள் இவருக்கு அடங்கி நடக்க மனதுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? என்றார். உடனே ‘ராஜனைக் கடவுள் காக்க’ என்று ஜனங்கள் கூவ, எக்காளங்கள் தொனித்தன. பின்னர் இராப்போசன ஆராதனையின் முதற்பாகம் நடைபெற்றது. அப்பால் அரசன் தம் பிரசைகளோடு செய்யவேண்டிய உடன்படிக்கையைச் செய்தபின் ‘மகாராஜா அவர்கள் சத்தியம் செய்ய மனதாயிருக்கிறீர்களா’ என்று அத்தியக்ஷகுரு கேட்க, ‘ஆம்’ என்று அரசர் கூறினார். உடனே அவர் தாம் இங்கிலாந்தையும் அதைச் சேர்ந்த புறநாடுகளையும் அங்கிலேய மகா மந்திராலோசனைச் சபையாரின் சட்டப்படி ஆள ஒப்புக்கொள்வதாகவும், தம்

முடைய தீர்மானங்கள் எல்லாவற்றிலும் சம்மதம் கூடியவனாயினும் நீதியையும் இரக்கத்தையும் செலுத்தப் பிரயாசப்படுவேனாகவும், கடவுள் ஏற்படுத்திய சட்டங்களையும் சுவிசேஷ பிரபல்லியத்தையும் புரொட்டெஸ்டாந்து மதத்தையும் பாதுகாப்பதாகவும் வாக்குக் கொடுத்தார். நான் வாக்குக் கொடுத்தவைகளை தவறாது நிறைவேற்றுவேன்' என்று அரசன் தெளிவாயும் உறுதியாயும் சத்தியம் செய்துகொடுத்தார். அவர் அபிஷேகம் பண்ணப்பட்டதின்மேல் அவருக்குச் சில பரிசுத்த உடைகள் அளிக்கப்பட்டன. பின்னர் பொற்றுகிறள், ராஜகடிகள், சிலுவை பதித்த கோளம், ராஜமோதிரம், செங்கோல் முதலிய ராஜசின்னங்கள் அரசனுக்குக் கொடுக்கப்பட்டன. கோளத்தைக் கொடுக்கும்போது காண்டர்பரி அத்தியக்ஷகுரு அரசனை நோக்கி 'நீர் இந்தச் சிலுவை பதித்தகோளத்தைப் பார்க்கும்போது உலகம் முழுதும் கிறிஸ்துவுக்குள் அடக்கம்' என்பதை அறிவீராக' என்று கூறினார். ராஜபதவிக்கு அறிகுறியான அதிகார மோதிரம் அவர் வலதுகை விரலில் அணியப்பட்டபின், வலிமைக்கும் நெறிக்கும் அடையாளமாகச் சிலுவை வைத்த செங்கோல் ஒன்றும், கருணைக்கும் அருளுக்கும் அடையாளமாகப் புறாவைத்த செங்கோல் ஒன்றும் அவர் கைகளில் கொடுக்கப்பட்டன. இவையெல்லாம் முடிந்தபின் காண்டர்பரி அத்தியக்ஷகுரு பலிபீடத்தினின்றும் இறங்கி ராஜகிரீடத்தை யெடுத்துப் பிரதிஷ்டை செய்தபின் 'ஈசன் இறைவனைக் காக்க' என்னும் பேரொலி எங்கும் முழங்க, மிக்க பக்திவினயத்துடன் அரசன் சிரசிற் சூட்டினார். உடனே பட்டவர்த்தனர் தத்தம் முடிகளைச் சூடிக்கொள்ள எக்காளங்கள் தொனித்தன. அத்தியக்ஷகுருவும் ராஜனுக்கு சில புத்திமதிகள் கூறி 'நீர் உம்முடைய உயர்ந்த பதவியில் உறுதியாயும் தைரியமாயுமிருந்து தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய பரிசுத்தமான வழியில் நடக்கவேண்டும்; விசுவாசத்தின் உத்தம யுத்தத்தை நடத்தி நித்தியானந்த வாழ்வை அடையவேண்டும்' என்று கூறி முடித்தார். பலிபீடத்திலிருந்த வேதாகமம் ஒன்று அவருக்குக் கொடுக்கப்பட்டபின் அத்தியக்ஷகுருமார், குருமார், பட்டவர்த்தனர் முதலியோர் கைகொடுக்க எம்மன்னர் நவரத்தின கசிதமாய் விளங்கும் சிங்காசனத்தின்மீது அமர்ந்தனர். உடனே ராச்சியத்துப் பிரதம பிரபுக்களும் உவேல்ஸ் நாட்டு இளவரசரும் தத்தம் முறைப்படி சென்று பணிந்தனர். இத்துடன் ராஜன் மகுடாபிஷேகம் பூர்த்தியாயிற்று.

மேரி ராணியும் மேற்கூறிய ஆசாரப்படியே முடிதரிக்கப் பெற்றாராயினும் சில விஷயங்களில் ராணி மகுடாபிஷேகம் வித்தியாசப்பட்டது. ராணிக்கு, அரசனுக்குக் கொடுத்த பிரகாரம் ராஜசின்னங்கள் கொடுக்கப்பட்டன. அரசர், பண்டைக்காலந்தொட்டு வழங்கிவரும் மகுடாபிஷேக நாற்காலியில் உட்கார்ந்தபடி முடிதரிக்கப் பெற்றார். ராணி பலிபீடத்தின்முன் முழங்காற்படியிட்டு நிற்க முடிதரிக்கப் பெற்றார். அத்தியக்ஷகுரு ராணி தலையில் கிரீடத்தை வைத்தவுடன் உயர்குல சீமாட்டிகள் தத்தம் முடிகளைச் சூடிக்கொண்டனர். பின்னர் இராப்போசனத் திருவிருந்து கொண்டாடப்பட்டது. அது முடிந்தபின் அரசனும் அரசியும் திருமுடி புனைந்து கோளமும் செங்கோலும் கையிற்பிடித்து முன்னைய ஆடம்பரத்துடன் தம் பிரசைகட்குக் காட்சி தந்து தம் அரமனைக்குச் சென்றனர். மங்களம்! மங்களம்!!

ஈசன் இறைவனைக் காக்க!



### வாழி

வாழிநம் சக்கர வர்த்திநற் ஜார்ச்செனு மன்னர்மன்னன்
வாழிநம் சக்கர வர்த்தினி மேரி மகிமைதங்கி
வாழிய வேல்ஸ்வள நாட்டினர் வேந்தன் மகிதலத்தில்
வாழிய வாழிய செங்கோல் நிலைநின்று வாழியவே.

T. A. R.

## CORONATION SONG

## இராஜ வாழ்த்து

இராகம்—'மங்களம் மங்களமே.'

இராஜாதி ராஜரே! எங்கள் ஜியார்ஜ் அரசரைக் கண்
பாரும் தாரும் ஆசீர்வாதம், ஆயுள் சுகம் இவர்க்கே.

1. அங்கிலேய ராஜாங்க—முடி
தங்கி வளர்ந்துயர
சங்கையுள்ள சிங்கக் கொடி
எங்கும் பறந்திலங்க— இராஜாதி.

2. பகைவர் கீழடங்க—படைத்
தலைவரும் வணங்க
சபைஜன சங்க மிணங்க
சமையம் காத்திரங்க— இராஜாதி.

3. மங்களமாக—ஜியார்ஜ்
ஐந்தாவதாக
மங்கை மேரி ராணியோடு
இங்கிதமாக வாழ்க— இராஜாதி.

4. திருச்சபைக்கு நன்மை
திரியேகருக்கு மகிமை
பெருக பிரஜை தனிலே க்ஷேமம்
வருக தினம் பணிய — இராஜாதி.

5. சூரியன் மறையா—ஜெய
வீரியம் குறையா
தாரணியில் காரியம் கை
கூடச் சரி நிறைவாய்— இராஜாதி.

6. காசினி தனிலே—யேசு
நேசரின் கொடியே
வீச உனி ஞசி யளித்தாள்
சுகராஜர் முடியே— இராஜாதி.

7. அரசரோ டமைச்சர்—இள
வரசரும் வாழ்க
சிரசாம் எசு சபையும் வாழ்க
குருதேசிகர் வாழ்க.— இராஜாதி.

அ. [illegible] தேவதாஸ்.

## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)


மேலும் அவர்கள் அந்த ஜனங்களுடைய வீடுகளுக்குப் போய் அவர்களைச் சந்தித்து அவர்களோடு அன்பாய்ப் பேசி அவர்களுக்கு அவசியமான உதவிகளைச் செய்வது வழக்கமாயிருந்தது; அவர்களுடைய பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பண்டங்களும் வயசு சென்றவர்களுக்குக் கம்பளி உடுப்புக்களும் கொடுப்பது அவர்களுடைய இன்பமான வேலையாயிருந்தது. அவர்கள் பால்மோரல் மாளிகையில் வாசம்பண்ணின வரலாறுகளை எழுதிவைத்த ஒரு புஸ்தகத்திலே பின்வரும் குறிப்புக்களைக் காணலாம்: 'நானும் சர்ச்சில் பெருமாட்டியும் என் குமாரத்திகளும் பாத்தன்பர்க் அம்மாளும் ஏழைகளைச் சந்திக்கும்படி அவர்கள் குடிசைகளுக்குப் போயிருந்தோம். அங்கே ஒரு குடிசையில் ஒரு ஏழை வயோதிக ஸ்திரீயைக் கண்டு அவளுக்கு ஒரு கம்பளி உடுப்புக் கொடுக்கவும், அவள் நன்றியறிதலோடே என் கையைப் பிடித்துக் குலுக்கி: 'தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக



ஏழைஸ்திரீகளை சக்கரவர்த்தினி சந்தித்துத் தயவு புரிதல்.

அம்மா' என்று மகா மதுரமாய் அன்பொழுகச் சொன்னாள். அவளுக்குச் சமானமான வயசுடைய வேறொரு வயோதிக ஸ்திரீயின் குடிசைக்குள்ளும் பிரவேசித்தோம். அப்போது அவள் நூல் நூற்றுக்கொண்டிருந்தாள். அவள் வெகு மரியாதையோடு எங்களை ஏற்றுக்கொண்டு உள்ளே வரக் கேட்டுக்கொண்டாள். அவளுக்கும் ஒரு கம்பளி உடுப்புக் கொடுத்தோம். அவளும்: 'கடவுள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் எப்பொழுதும் கடாட்சித்தருளக்கடவர்; அவரே உங்களை வழிநடத்தி உங்களை எல்லா ஆபத்துக்களுக்கும் விலக்கிப் பாதுகாக்கக்கடவர்' என்று பிரார்த்தித்தாள். எண்பது வயசுடையவளும் வயோதிகத்தினால் முதுகு கூனிப்போனவளுமான இன்னொரு மாதையும் போய்ப் பார்த்தோம். அவள் அவ்வளவு வயசு சென்றவளாயிருந்தும் அழகிய முகக்களையுடையவளும் சந்தோஷமுடையவளுமாய் எங்களை அங்கீகரித்து, என்னை யாரென்று விசாரித்தறிந்து, அதிக ஆனந்தத்தோடு வாழ்த்தினாள். அன்று வேறு மூன்று குடிசைகளுக்கும் சென்றோம். ஒரு குடிசையில் ஒரு சிறுவன் நோய்ப்பட்டிருப்பதையும், வேறொன்றில் ஒரு வயோதிக ஸ்திரீயையும், இன்னொன்றில் வீணை வாசிப்பதில் மிகவும் சாமர்த்தியனான பிளையர் என்னும் வயோதிகனையும் கண்டோம். அதின்பின் எப்போதும் சுத்தமாயிருக்கிறவளான கிராண்ட் என்ற வயோதிக மாதைச் சந்தித்து அவளுக்கு ஒரு உடுப்பும் அழகிய ஒரு கைலேஞ்சியும் கொடுத்தோம்' என்று எழுதியிருக்கிறார்கள். சக்கரவர்த்தினியவர்கள் அந்த ஏழை ஜனங்களுக்கு மேற்சொன்ன உதவிகள் புரிந்ததுந்தவிர அவர்களுக்குள்ளே வியாதியாயிருக்கிறவர்களைச் சந்தித்து அவர்களுக்கு அவசியமாய் வேண்டிய வஸ்திரம், ஆகாரம், மருந்து முதலியவைகள் கொடுப்பதும், அவர்களுக்குச் சிலவேளைகளில் வேதாகமத்தை வாசித்துக் காண்பித்து மேல்லோக மேன்மைகளை விவரித்து அவர்களது துயரை ஆற்றுவதும் வழக்கம். சக்கரவர்த்தினி என்றால் இவர்களல்லவோ சக்கரவர்த்தினி. குடிகளைக் கொடுமையாய்க் கசக்கி இறைகொள்ளும் கொடுங்கோலரைக் குறித்து வாசிக்கிற நாம் குடிகளுக்குத் தாய்போலிருந்து அவர்களைத் தாங்கி ஆதரித்த இந்த ராஜமகிஷியைக்குறித்து வாசிக்கும்போது நிர்க்கானகத்தைவிட்டுச் சிறந்த நீர்வளம்பொருந்திய திவ்விய சோலையில் வந்தாற்போலவும், வேப்பெண்ணெயைக் குடித்து மிகவும் கசந்த வாயினால் தேனமிர்தத்தைக் குடித்துத் தித்திப்படைந்தாற்போலவும், நரகலோகத்தைவிட்டு மோட்சலோகத்தில் பிரவேசித்தாற்போலவும் இருக்கிறதல்லவா?

சக்கரவர்த்தினி பல்மோரல் மாளிகையில் சுகம் அனுபவித்துக் கொண்டு சோம்பலிலும் சௌக்கியத்திலும் தங்கள் காலத்தைக் கழித்தார்களென்று எண்ணலாகாது. அங்கேயும் பற்பலவிதமான தங்கள்



பல்மோரல் மாளிகை

ராஜ்ய கடமைகளைப் பரிபூரணமாய் நிறைவேற்றிவந்தார்கள். மந்திராலோசனைச் சபையிலுள்ள செய்திகளையும் தீர்மானங்களையுங்குறித்து



அந்தந்த உத்தியோகஸ்தர்கள் அந்தந்தச் சமயங்களில் தங்களுக்கு எழுதித்தெரிவிக்கும் ராஜாங்கப் பத்திரங்களை வெகு கவனத்தோடே வாசிப்பதுமல்லாமல், ராஜ்யபார சம்பந்தமான மற்றும் பத்திரங்களையும் வாசிக்கக் கேட்டு அவைகளுக்கேற்ற தீர்மானங்கள் செய்வார்கள். இதற்கென்று ஒவ்வொருநாளும் குறித்த சமயம் உண்டு. மேலும் அவர்களுக்குத் தினம் சராசரி 50 கடிதங்கள் தந்திவழியாய் வருவது வழக்கம். அவைகளைப் பார்ப்பதற்கும் தினந்தோறும் சிறிது நேரம் செலவு செய்வார்கள். அன்றியும் சேவகன் ஒருவன் காலைதோறும் ஒரு பெரிய தபால்மூட்டையைச் சுமந்து வருவான். அரமனை உத்தியோகஸ்தர்கள் அந்தக் கடிதங்களை எடுத்து ஒழுங்காய் வைத்தபின் அவர்கள் வந்து அவைகளைப் பார்த்துத் தங்கள் சொந்தப் பிள்ளைகளிடத்திலிருந்தும் அன்னிய தேச அரசரிடத்திலிருந்தும் அவர்களுக்குப் பிரியமான பிரஜைகளிடத்திலிருந்தும் வரும் கடிதங்களைத் தங்கள் கையாலேயே திறந்து வாசிப்பார்கள். இந்தக் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்கு வாரத்தில் ஒருநாள் செலவு செய்வார்கள். மேலும் அவர்கள் ராஜ்யத்தின் காரியதரிசியாகிய பெரிய உத்தியோகஸ்தர் பல்மோரல் மாளிகையிலே தாமதித்து ராஜாங்க சம்பந்தமாய் வாசிக்கவேண்டிய பத்திரங்களை வாசித்துப் பேசவேண்டிய காரியங்களைப் பேசி, ஒப்பம் வாங்கவேண்டிய பத்திரங்களில் ஒப்பம் வாங்குவார். சக்கரவர்த்தினி தங்கள் குடும்ப விஷயமாயுள்ள காரியங்களையும் அரமனைச் செலவு முதலிய பணக்கணக்குகளையும் பார்ப்பதற்கு வாரத்தில் ஒரு தினம் செலவு செய்வார்கள். இவ்விதமாய் அவர்கள் ராஜ்யபார சம்பந்தமான காரியங்களைப் பார்ப்பதற்கு வாரத்தில் ஐந்து நாளும், தங்கள் சொந்தக் குடும்ப சம்பந்தமான காரியங்களைப் பார்ப்பதற்கு ஒருநாளும் நியமித்திருந்த விஷயமானது அவர்களுடைய சுய ஒறுப்புக்கு அதிக அழகான அத்தாட்சியாயிருக்கிறது. சுகத்துக்குப் போயிருக்கிற இடத்திலேயும் இவ்வளவு வேலையானால் தங்கள் ராஜமாநகரில் இருக்கும்போது அவர்களுக்கு எவ்வளவோ வேலைகள் இருந்திருக்கும்!

**பல்மோரல் மாளிகையிலும் ராஜாங்க வேலை செய்தல்.**

அவர்களுக்கும் அவர்களுடைய நாயகருக்கும் 'விக்டோரியாளும் ஆல்பட்டும்' என்று பேருள்ள இன்பமான ஒரு சிறு கப்பலுண்டு. அவர்கள் அதிலேறிக் கரையோரமாய்க் கடற்பிரயாணஞ் செய்து பற்பல இடங்களுக்குப் போவார்கள். ஒருதரம் அதிலேறி அவர்களும், அவர்களுடைய மூன்று மூத்த மக்களாகிய ஆதிலையாள் ராஜகுமாரத்தி, உவேல்ஸ் இளவரசர், ஆலிஸ் பெருமாட்டி என்பவர்களும் அயர்லாந்

**ராஜ குடும்பத்தின் சிறு கப்பல்.**

துக்குப் போயிருந்தார்கள். அங்குள்ள ஜனங்கள் ராஜபிள்ளைகளைக் கண்டு அதிக ஆனந்தமும் ஆச்சரியமு மடைந்ததுமல்லாமல் சக்கரவர்த்தினியும் ராஜகுடும்பமும் ரதத்திலேறிச் செல்லும்போது, அயர்

அதிலேறி அயர்லாந்துக்குப் போதல்.

லாந்திலுள்ள ஒரு வயோதிக ஸ்திரீ ரதத்தின் சமீபத்திலே நின்றுகொண்டு: ஓ ராக்கினி, பிரியமான பிராட்டி, உங்கள் நேசப் பிள்ளைகளில் ஒன்றுக்குப் பாற்றிக் (Patrick) என்று பேரிடுங்கள்; அப்பொழுது அயர்லாந்து முழுதும் உங்களுக்காக மரிக்கும் என்று பெருஞ் சத்தமாய்ச் சொன்னாள். சக்கரவர்த்தினி இதைக் கேட்டுத் தங்கள் மனதிலே வெகு பத்திரமாய் வைத்திருந்தது மல்லாமல் அடுத்த வருஷம் அவர்களுக்கு ஒரு ராஜகுமாரன் ஜனனமானபோது அவருக்குப் பாற்றிக்கென்று நாமகரணஞ் செய்தார்கள். அயர்லாந்திலுள்ளவர்களுக்குப் பாற்றிக் என்ற பெயர் ஏன் பிரியமானதென்று கேட்டால், அவர் அங்குள்ள முதலாம் அப்போஸ்தலனாகவும் அங்கே கிறிஸ்துமார்க்கத்தை நாட்ட அதிசிரத்தையாய் உழைத்தவராகவுமிருந்ததினாலேதான்.

'தலை பெரியவனுக்கு வியாதியும் பெரிது' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அரசர்களாகவும் அரசிகளாகவும் ராஜ்யபாரஞ் செய்

கிறிமியா யுத்தத்தினால் வந்த மனக்கவலை.

வது வெகு மகிமையும் மகிழ்ச்சியுமான விஷயமென்று அநேகர் எண்ணிக்கொண்டபோதிலும் அவ்வெண்ணமானது சுத்தப் பிசகென்றே சொல்லவேண்டும். கிரீடத்தின் மேன்மையானது குளம்போலவும் அதின் வருத்தமானது கடல்போலவும் இருக்கிறது. இந்த வருத்தம் நமது சக்கரவர்த்தினிக்கும் அவர்கள் ஜீவகால முழுவதிலும் இருந்தது. இந்தக் கஷ்டங்களில் 1854-ம் வரு அவர்களுடைய ராஜாங்கத்திற்கும் ருஷிய ராஜாங்கத்திற்கும் உண்டான கொடிய யுத்தம் ஒன்றும். இதைக் கிறிமியா யுத்தம் என்று சொல்லுவார்கள். கிறிமியா என்பது ருஷியாவின் தென்பாகத்திலே கருங்கடலுக்கு வடக்கே இருக்கிற ஒரு சிறு நாடு. அந்தப் போருக்குக் காரணம்: ருஷியருக்கும் துருக்கருக்கும் உண்டான ஒரு யுத்தமானது பிரான்சுக்காரருக்கு அனுகூலமாயிருந்தபடியினாலும், இங்கிலிஷ்காரர் எப்போதும் ருஷியரைச் சத்துருக்களாக எண்ணினதினால் பிரான்சுக்காரரோடே சேர்ந்து ருஷியருக்கு விரோதமாய்ப் போனதினாலும் உண்டானதேயாம். இந்தப் போருக்கு இங்கிலிஷ் சேனையானது புறப்படுகிற துயர சமயத்திலே சக்கரவர்த்தினியாரும் ஆல்பாட் பிரபுவும் சேனைகளைப் பார்வையிட்டு அவைகளைத் தைரியப்படுத்தி அவைகளுக்கு விடைகொடுத்து அவைகளுக்காக அனலும் ஆவலுமாய் ஜெபித்



துவந்தார்கள். இங்கிலிஷ் போர்வீரர் அதிக வீரதீரமாய் யுத்தம் பண்ணி அநேக ஜயங்களை அடைந்தபோதிலும் அவர்களில் பலர் போர்க்களத்தில் பட்டு விழுந்தும் பனியினாலும் பசியினாலும் மாண்டும் போனார்கள். இதினால் சக்கரவர்த்தினி அவர்களுக்கு உண்டான துக்கமானது சொல்லி முடியாததாயிருந்தது. கருங்கடற் கரையிலிருக்கிறதும் கிறிமியாவின் கடல் ராணுவ ஸ்தானமுமாகிய செபஸ்த்தபூல் என்னும் ருஷியருடைய அரணான பட்டணத்தை அங்கிலேயர் ஒன்றரை வருஷகாலமாய் முற்றுகைபோட்டும் அதைப் பிடிக்காமல் மகா வருத்தத்தோடே யுத்தத்தை நடத்திவந்தார்கள். அச்சமயத்தில் அங்கிலேய வீரரை நடத்தின ராக்லான் என்னும் தளபதி இங்கிலாந்துக்கு வந்து சக்கரவர்த்தினியைக் கண்டு பேச உவின்ஸர் மாளிகைக்குப் போனபோது அவர்களுடைய பிள்ளைகள் அவரிடத்தில் போய்: நீர் செபாஸ்த்தபூலைச் சீக்கிரமாய்ப் பிடிக்கவேண்டும்; இல்லாவிட்டால் எங்கள் தாயார் இறந்துபோவார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொன்ன காரணம் யாதெனில்: அவர்களுடைய ராஜமாதாவானவர்கள் அக்காலத்தில் அரமனையிலே எப்போதும் துயர ஆழியில் மூழ்கியிருந்ததை அவர்கள் கண்ணுற்று வந்ததேயாம். அங்கிலேயர் சேனாபதி மீண்டும் யுத்தகளத்திற்குச் சென்று யுத்தத்தைத் துரிதமாய் நடத்தினபோதிலும் ஓர் அறுதியும் வரவில்லை. தினந்தோறும் கப்பல்கள் காயப்பட்டவர்களும் சுகவீனருமான போர்வீரரை ஏற்றிக்கொண்டு லண்டன் பட்டணத்துக்கு வந்தன. அவர்களைச் சிகிச்சை செய்த ஆஸ்பத்திரிகளுக்கு சக்கரவர்த்தினியார் சென்று காயப்பட்ட வீரர்களைப் பார்த்தும், அவர்களுக்கு அன்பும் அனுதாபமுமான வார்த்தைகள் சொல்லியும், அவர்களில் சிலருக்குப் பரிசுகள் கொடுத்தும் வந்தார்கள். 1855-ம் வரு செப்டெம்பர் மீ அங்கிலேய சேனைகள் அதிக கஷ்டநஷ்டத்தின்பேரில் செபாஸ்த்தபூலைப் பிடித்துக்கொண்டன. இந்தச்

அவ்வியுத்தத்தின் ஜெய சந்தோஷம்.

செய்தியானது சக்கரவர்த்தினி ஸ்கோத்துலாந்திலே பல்மோரல் மாளிகையிலே சுகத்திற்காகப் போயிருக்கும்போது அவர்களுக்குச் சென்றது. இது அவர்கள் செவிக்குத் தேவாமிர்தம் போலிருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? இந்தச் சந்தோஷத்தினால் ஆல்பாட் பிரபுவானவர் அரமனை உத்தியோகஸ்தர்களோடும் பணிவிடையாட்களோடும் அங்குள்ள ஒரு மலைச் சிகரத்திலேறி அங்கே வெகுதூரம் காணக்கூடிய பெரிய தீபமேற்றினார். அதைக் கண்ட சுற்றிலுமுள்ள கிராமத்தார் பெருங் கூட்டமாக அங்கே வந்து கூடி, ஆடிப் பாடி எக்காளம் ஊதி, ஆனந்த பரவசரானார்கள். இதைச் சக்கரவர்த்தினி அவர்கள் தங்கள் மாளிகையில் நின்று

கண்குளிரப் பார்த்துக் களிகூர்ந்து, தங்கள் மன்றாட்டுகளைக் கேட்டு ஜயமளித்த கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

(இன்னும் வரும்.)

## POLONIU'S ADVICE TO HIS SON

## தந்தை சொன்மிக்க மந்திர மில்லை

இங்கிலிஷ் கவிராஜரான ஷேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட் நாடகத்தில் பொலோனியஸ் தன் மகனுக்குச் சொன்ன புத்திமதிகள் பின்வருமாறு:—

மனதில் எண்ணுவதையெல்லாம் வாய் திறந்து சொல்லிவிடாதே. நன்றாய் முன்யோசனை செய்யாமல் எந்தக் காரியத்தையும் செய்யத் துணியாதே. அந்நியோந்நியமாய் இருந்தாலும் அநாகரீகமாய் நடவாதே. நன்றாய்ப் பரிசோதித்துப் பார்க்காமல் சிநேகிக்காதே; சிநேத்தபின் நண்பனைவிட்டு எந்நாளும் விலகாதே. ஆராய்ந்து பார்க்கிகாமல் கண்டவனையெல்லாம் நேசன் எனக் கருதி உன் நாணயத்தைக் கெடுத்துக்கொள்ளாதே. சச்சரவில் புகுவதில் ஜாக்கிரதையாயிரு; புகுந்தபின் பின்வாங்காதே; எதிரி எங்கிட எதிர்த்துநில். எல்லோர் சொல்வதையும் கேள். நீ சிலருக்கே வார்த்தையைக் கொடுப்பாய். எவன் சொல்லும் குறையையும் கேள், ஆனால் உன் தீர்மானத்தை வெளியிடாதே. வருமானத்துக்குத் தக்கபடி உடு; உள்ளம் செல்லுமாறு உடுக்காதே; ஆடம்பரமாய் உடுக்காதே! அந்தஸ்துக்கு ஏற்றபடி உடைதரி; உடையினாலேயே ஒருவனை உலகம் அறியும். கடன் வாங்கவும் வேண்டாம், கொடுக்கவும் வேண்டாம். கடன் கொடுத்தால் கொடுத்த பணம் போவதுமாத்திரமல்லாமல் சிநேகமும் போய்விடும். கடன் வாங்கினாலோ அந்தக் கவலையால் கருத்து மழுங்கும். கடைசியில் உனக்கே நீ உண்மையாயிரு; அப்படியிருந்தால் இந்த உலகத்தில் நீ ஒருவனுக்கும் பொய்யன் ஆகமாட்டாய். இது திண்ணம்.

## BLOTTING-PAPER

## மை ஒத்துங் காகிதம்

இந்த 'பிளாட்டிங் பேப்பர்' அல்லது மை ஒத்துங் காகிதம் கண்டுபிடிப்பதற்குமுன் எழுதிய ஈரத்தைப் போக்க மணலைப் போட்டுவந்தார்கள். இந்தவிதமான காகிதம் ஒன்றைக் கண்டுபிடிக்க ஒருவரும் பிரயாசப்படவே இல்லை. அது தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்



*Photo by W. Downey*

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் மேரி ராணியும்

பட்டாபிஷேகவுடை தரித்து நிற்றல்



டது. ஒருநாள் ஒரு யந்திரத்தில் எப்போதும்போல வெகு சுறுசுறுப்பாய்க் காகிதம் செய்தார்கள். அப்போது அவசரத்தில் நல்ல காகிதம் செய்வதற்கு வேண்டிய கந்தைத்துணிக் குழம்பில் பசையைச் சேர்க்க மறந்துவிட்டார்கள். அந்தப் பசை இல்லாமலே யந்திரம் வெகு உக்கிரமாய் வேலைசெய்து காகிதமும் குவியல் குவியலாக ஆய்விட்டது. பிறகு அந்த யந்திரசாலையின் சொந்தக்காரன் ஏதோ குறிப்பு எழுத அங்கே கிடந்த ஒரு துண்டுக் கடுதாசியை எடுத்து எழுதினான். உடனே எழுதிய மை அந்தக் காகிதம் முழுமையும் பாவிக்கொண்டது. பாவியதும் பார்த்தான் அந்தச் சொந்தக்காரன் 'சரி! சரி! இந்தக் காகிதம் எழுதிய மையை ஒத்த வெகு நல்லதாய்விட்டது. இனி மணல் போட்டு ஒத்தவேண்டியதில்லை; வெகு நேர்த்தி' என்று யோசித்து அப்படியே இந்தக் காகிதத்தைப்பற்றி 'மை ஒத்துங் காகிதம்—மை ஒத்துங் காகிதம்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தான். எல்லாரும் அதை அதிக ஆவலுடன் வாங்கினார்கள். அதனால் அவன் தன் யந்திரசாலையில் சாதாரணக் காகிதம் செய்வதை நிறுத்தி இந்த மை ஒத்துங் காகிதமே செய்யலானான். தக்க லாபமும் கிடைத்தது. பிறகு இதன் உபயோகம் ஊரெங்கும் பாவியது. இப்போதும் அந்தச் சாலைச் சொந்தக்காரன் வம்சத்தான் ஒருவன் மை ஒத்துங் காகிதம் செய்யும் அனேக பெரிய யந்திரசாலைகள் வைத்திருக்கிறான். இந்த மை ஒத்துங் காகிதத்தில் மயிரிழைபோன்ற சிறு சிறு துவாரங்கள் அனேகம் இருக்கின்றன. அவைகள் மையை உறிஞ்சிக் கொள்ளுகின்றன.

எழுதுங் காகிதம், மை ஒத்துங் காகிதம் இரண்டும் கந்தைத் துணிகளைக்கொண்டே ஆகின்றன. ஆனால் அக்கந்தைக் குழம்பிற்குப் பசை சேர்க்காவிட்டால் மை ஒத்துங் காகிதமும் பசைசேர்த்தால் சாதாரணமாய் எழுதுங் காகிதமும் ஆகும். அதிலும் சிவப்புநிறக் கந்தைத்துணிகள் சாதாக் காகிதம் செய்ய உபயோகப்படா. ஏனென்றால் அவற்றின் செந்நிறத்தைப் போக்கமுடியாது. ஆனால் மை ஒத்துங் காகிதம் செய்ய அது ஆகும். இப்படி உபயோகமற்றதைக்கொண்டு நல்ல உபயோகம் உள்ள மை ஒத்துங் காகிதம் செய்வதால் இது ஒருவித சௌகரியம் ஆயிற்று. இதனால் தான் முன்னெல்லாம் சிவப்புநிற மை ஒத்துங் காகிதமே செய்துவந்தார்கள். ஆனால் பலர் பலவேறு நிறமான மை ஒத்துங் காகிதத்தை இச்சிப்பதால், இப்போது பலநிற மை ஒத்துங் காகிதம் செய்யப்படுகிறது. உதாரணமாக, அலுவல் மிகுதியாக உள்ளவர்கள் கொஞ்சம் கறுப்பான மை ஒத்துங் காகிதத்தையே அதிகமாக விரும்புகிறார்கள். ஏனென்றால் அப்போதுதான் மை ஒத்துங் காகிதத்தையும் எழுதுங் காகிதத்தையும் வெகு சீக்கிரம் சிறிதும்

யோசனை இல்லாமல் பகுத்தெடுக்கலாம். இந்தவிதக் காகிதத்தையே இத்தேசத்தில் அதிகமாக உபயோகிக்கிறார்கள். அதிக உஷ்ணமான தேசத்தார்கள் பச்சைநிறம் கண்ணுக்குக் குளிர்ச்சி என்று பச்சை நிறமான மை ஒத்துங் காகிதத்தை வாங்குகிறார்கள்.

இப்படி மை ஒத்துங் காகிதம் வெவ்வேறு நிறமுள்ளவைகளாய் இருந்தாலும் அவை மையை உறிஞ்சுவதில் வித்தியாசம் இல்லவே இல்லை. நிறத்திற்கும் உறிஞ்சுந் தன்மைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. கறுப்புநிற மை ஒத்துங் காகிதம்தான் புதியது. இந்தக் காகிதத்தால் எழுதியதை ஒத்தினால், ஒத்தின காகிதத்தில் கொஞ்சமும் உருவம் தெரியாது. ஆகையால் தாங்கள் எழுதியது மற்றவர்களுக்குத் தெரியப்படாது என்னும் எண்ணமுடையவர்கள் கறுப்பு மை ஒத்துங் காகிதத்தையே உபயோகிக்கிறார்கள். நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி தமது கையெழுத்தை ஒத்திய மை ஒத்துங் காகிதத்தை உடனேயே கிழித்து நாசமாக்கிவிடுகிறார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ௵ ஜூலை௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | 2 சாமு. | 23. | 1—7 | 11 | செ. | ரோ. | 5. | 1—11 | 21 | வெ. | ரோ. | 9. | 19—33 |
| 2 | ஞா. | ,, | 23. | 8—23 | 12 | பு. | ,, | 5. | 12—21 | 22 | ச. | ,, | 10. | 1—12 |
| 3 | தி. | ரோ. | 1. | 1—12 | 13 | வி. | ,, | 6. | 1—11 | 23 | ஞா. | ,, | 10. | 13—21 |
| 4 | செ. | ,, | 1. | 13—25 | 14 | வெ. | ,, | 6. | 12—23 | 24 | தி. | ,, | 11. | 1—15 |
| 5 | பு. | ,, | 2. | 1—16 | 15 | ச. | ,, | 7. | 1—13 | 25 | செ. | ,, | 11. | 16—36 |
| 6 | வி. | ,, | 2. | 17—29 | 16 | ஞா. | ,, | 7. | 14—25 | 26 | பு. | ,, | 12. | 1—9 |
| 7 | வெ. | ,, | 3. | 1—18 | 17 | தி. | ,, | 8. | 1—11 | 27 | வி. | ,, | 12. | 10—21 |
| 8 | ச. | ,, | 3. | 19—31 | 18 | செ. | ,, | 8. | 12—25 | 28 | வெ. | ,, | 13. | 1—14 |
| 9 | ஞா. | ,, | 4. | 1—12 | 19 | பு. | ,, | 8. | 26—39 | 29 | ச. | ,, | 14. | 1—12 |
| 10 | தி. | ,, | 4. | 13—25 | 20 | வி. | ,, | 9. | 1—18 | 30 | ஞா. | ,, | 14. | 13—23 |
| | | | | | | | | | | 31 | தி. | ,, | 15. | 1—7 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

8 - ... 1911 MADRAS


# மாதர் போதினி

No. 164 ஆகஸ்டு 1911 No. 8


## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

**மூத்த ராஜ குமாரத்தியின் விவாகம்.**

கடவுளானவர் மனுஷருக்குக் கொடிய துக்கங்களைக் கொடுத்து முடித்தவுடன் அவர்களுக்குப் பெரிய சந்தோஷத்தைக் கொடுப்பது உலகத்திலே சகஜமாயிருக்கிறது. அப்படியே சக்கரவர்த்தினியின் விஷயத்திலும் இருந்தது. எப்படியெனில்: **கிறிமியா** யுத்தத்தின் துயரங்கள் தீர்ந்தபின் அவர்களுடைய சிரேஷ்ட புத்திரியாகிய ஆதிலையாள் ராஜகுமாரத்திக்கு விவாகம் வந்தது. 1856-ம் ௵ ராஜகுடும்பத்தார் **பல்மோரல்** மாளிகையிலிருக்கும்போது ஜர்மனிய சக்கரவர்த்தியின் ஏக புதல்வனாகிய **பிரேடறிக் உவில்லியம்** என்னும் ராஜகுமாரன் அங்கே வந்து ராஜகுமாரத்தியைத் தமக்கு மணம்முடித்துக் கொடுக்கவேண்டுமென்று விரும்ப, அவ்விருப்பத்திற்கு ராஜகுமாரத்தியும் அவர்கள் ராஜ பிதா மாதாக்களும் இணங்கினார்கள். இந்தக் காரியத்தை மந்திராலோசனைச் சபையாருக்குத் தெரிவித்தபோது அவர்கள் ராஜகுமாரத்திக்கு 40 ஆயிரம் பவுன் ஸ்ரீதனமாகவும் வருஷவாரி 8 ஆயிரம் பவுன் நன்கொடையாகவும் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இந்த விவாகமானது 1858-ம் ௵ ஜனவரி௴ 25௳ பரிசுத்த ஜேம்ஸ் ஆலயத்தில் நிறைவேறினது. அப்போது ராஜகுமாரத்தி 17 வயசுள்ளவர்களாகவும் அவர்கள் நாயகன் 26 வயசுள்ளவராகவும் இருந்தார்கள். 'விரையொன்று போட்டால் சுரையொன்று முளையாது' என்ற பழமொழிப்படி இந்த ராஜகுமாரத்தியும் தங்கள் ராஜ மாதாவைப்போலவே தேவபயமும் ஜாக்கிரதையும் சிறப்பான தாழ்மையுமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களும் அவர்கள் ராஜநாயகனும் ஜர்மனிதேசத்துக்குப் புறப்படும்போது அவர்க

ளுடைய மாதா பிதாக்களின் கண்களிலும், சகோதரர் சகோதரிகள் கண்களிலுமிருந்து கண்ணீரானது தாரைதாரையாய் வடிந்தது. ராஜ



குமாரத்தியும் மிகவும் அழுது துக்கித்துக்கொண்டு, தங்கள் மன்னவன் ராஜ்யத்திற்குப் புறப்பட்டார்கள். நம்முடைய நாட்டிலே ஒரு பெண்ணை



விவாகஞ்செய்து கொடுத்து அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்புகிற போது இவ்விதசங்கடமும் கண்ணீரும் உண்டாவது சகஜமாயிருந்த போதிலும் சிலர் அதைத் துற்சகுனமென்று தூஷிக்கிறார்கள். இது அவர்கள் மனுஷ சுபாவ தத்துவத்தை அறியாததினாலே உண்டாகிற மதியீனமேதவிர வேறல்ல.

இந்த ராஜகுமாரத்தியின் குடும்பத்தைக்குறித்த சில சுருக்கமான குறிப்புக்களைச் சொல்லுவோம்: இவர்களுக்கு எட்டுப் பிள்ளைகள் பிறந்தார்கள்; இந்தப் பிள்ளைகளில் காலஞ்சென்றுபோன சிலரைத் தவிர மற்றவர்கள் மணமுடித்து மகா சிறப்பாய் இல்லறம் நடத்தி வருகிறார்கள். இவர்களுடைய அரமனை நடபடிகள் இவர்கள் தாயாரின் அங்கிலேய அரமனை நடபடிக்கு ஒத்ததாயிருக்கின்றன. இவர்கள் தங்கள் அரமனையிலே எந்தத் தாழ்மையான வேலையையும் வெகு ஜாக்கிரதையாய்ச் செய்வார்கள். அவர்களுடைய அரச நாயகனுக்கு அநேக கைவேலைகளோடு அச்சடி வித்தையும் தெரியும். அவர் 1888-ம் வூ தமது தகப்பனாருக்குப்பின் சிறிதுகாலம் ராஜ்ய பரிபாலனம்பண்ணிப் பின்பு இறந்துபோனார். ராஜகுமாரத்தியைப் பிரேடறிக் சக்கரவர்த்தினி என்று அழைத்துவருகிறார்கள். அவர்களுடைய மூத்த குமாரனை இரண்டாம் உவில்லியம் என்பவரே இப்போது ஜர்மனிய சக்கரவர்த்தியாயிருக்கிறார்.

இந்த ராஜகுமாரத்தியின் குடும்ப விபரம்.

## துயர காண்டம்

1861-ம் வருஷமானது நமது காருண்ய விக்ரோரியா சக்கரவர்த்தினி அவர்களுக்கு மிகவும் துக்ககரமான வருஷமாயிருந்தது. ஏனென்றால், அவ்வருஷத்தில் அவர்கள் அருமையான மாதாவும் அன்புக்குரிய நாயகனும் காலஞ்சென்றுவிட்டார்கள். தாயார் மரணமடைந்தபோது அவர்களை ஆற்றித் தேற்ற நாயகனார் இருந்தார்; ஆனால் நாயகனார் பிரிந்துபோனபோது அவர்களுக்குத் தேறுதல் சொல்லத்தக்கவர்கள் ஒருவருமில்லை. ஒருவருமில்லையா? ஒருவரிருந்தார். அவர் ஒருபோதும் நீங்காத உத்தம நண்பராகிய இயேசுகிறிஸ்துவேயாம். சக்கரவர்த்தினியாருடைய மாதாவானவர் 75-ம் வயசில் மரணமடைந்தார்கள். சக்கரவர்த்தினி மரணதுயரத்தைக் கண்டிராதவர்களாதலால் அதிகமான துக்கமடைந்து உடல் மெலிந்து அவதிப்பட்டார்கள். ஆனால் 'பட்ட காலிலே படும்' என்றாற்போல அந்த வருஷம் டிசம்பர்மீ ஆல்பட் பிரபுவுக்கு ஜுரம் கண்டு 8உ அதிக பலவீனம் அடைந்தார். அந்தக்காலத்தில் அவ

சக்கரவர்த்தினியின் தாயாரின் மரணம்.

ருடைய நேச குமாரத்தியாகிய ஆலிஸ் பெருமாட்டி அவரோடு எப்போதும் இருந்து அவருக்கு அருமையான நூல்களை வாசித்தும், அதிமாதுரியமான ராகங்களை வாத்தியப்பெட்டியில் அமைதியாய்ப் பாடியும், அவர் அதிகமாய் ஆசித்த ஞானப்பாட்டுக்களை அவர் காது கேட்கச் சொல்லியும் அவரைச் சந்தோஷப்படுத்துவார்கள். 'பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே' என்ற ஞானப்பாட்டு அவருக்கு அதிக பிரியமானதாம். அவருடைய நோயானது ஆரம்பத்தில் அதிக மோசமில்லாததாய்த் தோன்றினபடியால் அவரைப் பார்த்த வைத்தியர்களில் ஒருவர்: 'நீர் சில தினங்களுக்குள் சுகமடைவீர்' என்று எண்ணுகிறேன் என்க, அவர்: 'இல்லை, இல்லை, நான் பிழைக்கமாட்டேன்; ஆனால் எனக்குப் பயமில்லை; நான் ஆயத்தமாயிருக்கிறேன்' என்றார்.

**சக்கரவர்த்தினியின் பர்த்தாவின் வியாதி.**

சாதாரணமாய் அரசர் பிரபுக்கள் மரணகாலத்திலே இப்படித் தைரியமாய்ச் சொல்வது கிடையாது. ஆனால் ஆல்பட் பிரபு இயேசுவின் மெய்த்தொண்டனாயிருந்தபடியால் அப்படிச் சொல்லக்கூடிய தைரியமுடையவராயிருந்தார். ஒரு மனுஷன் அதிக ஐசுவரியவானாயிருப்பது பெரிய காரியமல்ல; அவன் அகன்ற அறிவாகரனாயிருப்பது பெரிய காரியமல்ல; அவன் அநேக யுத்தங்களை வென்று வெற்றிவேந்தனாய் விளங்குவது பெரிய காரியமல்ல; அவன் உலகப் பிரசித்தம்பெற்ற உன்னத சக்கரவர்த்தியாயிருப்பதும் பெரிய காரியமல்ல; ஆனால் அவன் மரிக்கும்போது: நான் மரணத்திற்குப் பயப்படுகிறதில்லை, நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று உண்மையாய்ச் சொல்லக்கூடியவனாயிருப்பானானால் அதுதான் ஓ! அதுதான் பெரிய காரியம். பிரபுவானவர் நோயினால் அதிக அவஸ்தைப்படுகிறபோது அவருடைய ராஜநாயகியானவர்கள் குனிந்து அவரை உற்றுப் பார்க்கவும் அவர் அவர்களை அன்பாய்ப் பிடித்து ஜர்மன் பாஷையிலே: 'நீ என் நல்ல சின்ன மனைவியல்லவா' என்று சொல்லிக்கொண்டு அவர்களை முத்தியிட்டுத் தமது சிரசை அவர்களுடைய தோளிலே சாய்த்தார். அவர்களுடைய கலியாண தினத்திலே சக்கரவர்த்தினி தங்கள் சிரசை அவர் தோளிலே சாய்த்தார்கள் என்று வாசித்தோமல்லவா? அதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! 'மனுஷனுடைய ஆயுள் புல்லுக்கொப்பாயிருக்கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான்; காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும். அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்குமுள்ளது.' பிரபுவானவர்



மரிப்பதற்குச் சில நிமிஷங்களுக்குமுன் சக்கரவர்த்தினியவர்கள் அவர் காதுக்குள்ளே: 'நான் உம்முடைய சின்ன மனைவியல்லவா' என்று ஜர்மன் பாஷையிலே சொல்ல, அவர் அவர்கள் சத்தத்தை அறிந்து: 'ஆம்' என்று தமது சிரசை அசைத்து அவர்களை முத்தியிட்டார். அப்போது சக்கரவர்த்தினி தங்கள் துக்கத்தை அடக்கமுடியாதவர்களாய் அழும்படி அடுத்த அறைக்குள் போனார்கள். ஆனால் அவர்களைச் சீக்கிரம் மரண மண்டபத்திற்குத் திரும்பவும் அழைத்துக்கொண்டுவந்தார்கள். அப்போது அவர்கள் திரும்பி வந்து தங்கள் நாயகனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு அவர் பக்கமாய் முழங்காலில் நிற்க, அப்படியே அவர்கள் பிள்ளைகள் எல்லாரும் கட்டிலைச் சுற்றிலும் முழங்காலில் நின்றார்கள். மேலும் சில பட்டவர்த்தனரும், படைவீரரும், போதக சிகாமணிகளும், பிரபுவின் நண்பனாகிய ஜர்மனிய சங்கீத வித்துவானாகிய லோலீன் என்பவரும் அவரைச் சுற்றி நின்றார்கள்.

**அவருடைய மரணம்.**

டிசம்பர்மீ 14உ இரவு பத்தேமுக்கால் மணிக்குப் பிரபுவானவர் பரலோக பிராப்தியானார். இவ்விதமாய் ராணியார் தங்கள் 42-ம் வயசில் விதவையானார்கள். அர்த்த ராத்திரியில் பவுல் ஆலயத்தின் மணியானது பிரபுவின் மரணத்தின் துயர செய்தியை லண்டன்மாநகரத்தாருக்குத் தெரிவித்தது.

பிரபுவின் சரீரத்தை டிசம்பர்மீ 23உ அடக்கம்பண்ணினார்கள். அடக்க ஆராதனையானது பரிசுத்த ஜியார்ஜ் ஆலயத்தில் நிறைவேறினது.

**அவரது அடக்க கருமம்.**

அதில் அங்கிலேய மந்திரிமாரும், புறதேச ஸ்தானாபதிகளும், அரமனை உத்தியோகஸ்தர்களும், இங்கிலாந்தின் சகல பிரபுக்களும், அன்னிய தேசத்து அரசரில் அநேகரும், இந்தியாவிலிருந்து போயிருந்த டுலீப் சிங் மகாராஜாவும் சமுகமாயிருந்தார்கள். ஆல்பட் பிரபுவின் மரணமானது சக்கரவர்த்தினிக்கும், அவர்கள் ராஜ பிள்ளைகளுக்கும், அங்கிலேய ராஜாங்கத்தாருக்கும் உண்டுபண்ணின நஷ்டத்தைச் சொல்லி முடியாது. சக்கரவர்த்தினி தங்கள் நாயகனுடைய பிரிவாற்றாமையால் இறந்துபோவார்கள் என்று சொல்லத்தக்க அவ்வளவு பலவீனமாயிருந்தபோதிலும் 'காலம் குணமாக்கும் கடும் புண்ணையும்' என்றாற்போல அவர்கள் வரவரத் தேறிப் பலமடைந்தது யாவருக்கும் உற்சாகமாயிருந்தது. என்றாலும் அவர்கள் தங்கள் ஜீவகாலம் முழுவதிலும் தங்கள் பூரண சந்திரன் அடைந்துபோனதென்றே எண்ணியிருந்தார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவாகிய நீதிச் சூரியன் மங்காத வெளிச்சமாய் அவர்கள் உள்ளத்தில் ஒளி செய்துகொண்டிருந்தபடியால் அவர்களுக்கு நல்ல ஆத்தும ஆறுதலும் இருந்தது. இதைக்

குறித்து அவர்கள் தங்கள் ஞாபக புஸ்தகத்தில்: என் தாயார் இறந்து போனபோது என் மனசுக்குள்ளே பெருங்குழப்பமும் முறுமுறுப்பும் கிரியை செய்தது; ஆனால் என் பிராண நாயகனை இழந்த இந்தச் சமயத்திலே கடவுளானவர் என்னோடு அதிக பட்சமும் பரிதாபமு முடையவராயிருக்கிறார் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

சக்கரவர்த்தினி அவர்கள் தங்கள் பர்த்தாவைச் சாகக் கொடுத்து ஒரு மாசத்திற்குள் ஒரு நிலக்கேணியில் பார் இடிந்து விழுந்து ஏறக்குறைய இருநூறுபேர் கொடிய மரணமடைந்ததைக் கேள்விப்பட்டு: என்னையும் என் பிள்ளைகளையும்போல என் பிரஜைகளில் அநேகர் விதவைகளும் அனாதர்களுமானார்களே என்று பெருந்துயரமுற்று அவர்களுக்காகச் சங்கடப்படுகிறதாகத் தந்தி அனுப்பி, அவர்களுக்குப் பொருட்சகாயமும் செய்தார்கள்.

*அக்காலத்தில் நிலக்கேணியில் இறந்தோர் நடையபந்துக்களுக்குச் சக்கரவர்த்தினி உதவிபுரிதல்.*

பிரபு இறந்த காலத்தில் சக்கரவர்த்தினியார் ராஜ்யபார விஷயங்களைக் கவனிக்கத் திராணியற்றவர்களாயிருந்தபோதிலும் வரவரப் பலமடைந்து, தங்கள் உத்தரவாதமான ராஜ கடமைகளையும் வழக்கம்போல வெகு சாமர்த்தியமாய் நடத்திவந்தபடியால் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரஜைகளுக்கும் அதிக உற்சாகமுண்டானது.

*அவர்கள் தேறுதல் அடைதல்.*

1862-ம் வரு இங்கிலாந்திலுள்ள அநேக விதவைகள் சேர்ந்து ஒரு வேதாகமத்தை வெகு அலங்காரமாய்க் கட்டுவித்து அதைச் சக்கரவர்த்தினிக்கு வெகுமதியாக அனுப்ப அவர்கள் அதை அதிக ஆனந்தத்தோடு அங்கீகரித்துக்கொண்டது மல்லாமல் அவர்களுக்கு அனுப்பின கடிதத்தில்: கடவுளானவர் எனக்கு அனுக்கிரகித்திருக்கும் ஆறுதலையும் சமாதானத்தையும் இங்கிலாந்திலுள்ள எல்லா விதவைகளுக்கும் அருளவேண்டுமென்பதே துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிற என்னுடைய விண்ணப்பமாயிருக்கிறது என்றெழுதினார்கள்.

*அவர்களுக்கு அங்கிலேய விதவைகள் ஒரு வேதாகமம் இனாம் அளித்தல்.*

(இன்னும் வரும்.)



## CORONATION SONG

மகா மண்டலாதிபதியும் அரசர்க் கரசனும்

நமது சக்கரவர்த்தியுமாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மகுடாபிஷேக

## கீர்த்தனம்

இராகம், பியாகு. ரூபகதாளம்.

### பல்லவி

வாரும்மனோ வைக்யத்தோடெம் மகிபனைப் பாடி—அக
மகிழ்வோம் கொண்டாடி.

### அநுபல்லவி

ஆரும்புகழு மதிபனெட் வேட்மன்ன னன்பின்குமாரன்—சிங்க
ஆங்கில ராச்சிய செங்கோல் கரம்பற்றி
ஆளுமொய்யாரன்—தயை
அருளுபகாரன்.— வாரும்.

### சரணங்கள்

1

சீரொடிம்மகு டாபிஷேகமாம் தினமதிற் சேர்ந்து—எங்கள்
செம்மலாம் ஜார்ஜெனு மன்னுதி மன்னன்றன்
சீர்த்திகள் தேர்ந்து—துதி
செப்புவோம் நேர்ந்து.— வாரும்.

2

ரத்நம்நவமணி மிகக்குயிற்றிய எழின்முடி புனைந்து—மகா
ராஜன்ஜார்ஜ் பூபதி வீற்றிருக்கும் ஒயில்
இதய நினைந்து—மிக்க
இசைகள் புனைந்து.— வாரும்.

3

மிக்கமனோகர ரஞ்சிதபூபதி விஜய கம்பீரம்—இந்த
மேதினி மீதெங்கு மென்றும் விளங்குமே
மிக வலங்காரம்—அணி
மேவார வாரம்.— வாரும்.

4

மத்தளம், எக்காளம், கைத்தாளம், பீரங்கி ஒத்துமுழங்க—மன்னன்
இத்தலத் திற்செய்த கோலத்தைக் கண்ணுற்று
இராசர்கள் கூட,—பல
தாசர்கள் பாட.— வாரும்.

5

நித்யசுகம், இன்பம், நீடியஆயுள் நிருபனைச்சேர—என்றும்
நின்மலனே வரந் தந்தரு ளீகுவாய்
நெறி அன்புகூர—ராஜ்ய
நிதி யின்னும்சேர.— வாரும்.

T. A. R.

## SEA WATER
## கடல் நீர்

சிறிது கடல்நீரை வாயில் ஊற்றினால் அது வெகு உவர்ப்பாய் இருக்கிறது. அல்லது அதை நன்றாய்க் கொதிக்கவைத்தால் தண்ணீர் ஆவியாய்ப் போய்விட வெண்மை நிறமான உப்பே தங்குகிறது. உப்பு எடுக்கும் விதங்களில் இதுவும் ஒன்று. கடலில் ஏது இத்தனை உப்பு?

அநேகமாய் இது நிலத்திலிருந்தே போய்ச் சேருகிறது என்னலாம். ஒவ்வொரு இடத்து மண்ணோடும் உப்புக் கலந்தே இருக்கிறது. காய் கறி பதார்த்தங்களிலும் சிறிது உப்பு இருக்கிறது. நம் உடம்பிலும் அப்படியே. நம் கண்ணீரில் ஒரு சொட்டையாவது உடம்பிற்பட்ட காயத்திலிருந்து வரும் ரத்தத்தில் ஒரு துளியையாவது ருசி பார்த்தால் அது விளங்கும். ஆற்றுநீரும் உவர்ப்பானதுதான்; ஆனால் அதில் வெகு கொஞ்சம் உப்பு இருப்பதால் அது நம் நாவிற்குத் தெரிவதில்லை.

இப்படி மண்ணோடு கலந்திருக்கும் உப்பை நதிகள் அடித்துக் கொண்டுபோய்க் கடலிற் சேர்க்கின்றன. இப்படி சதா கடலுக்கு உப்பு வந்து சேர்ந்துகொண்டே இருக்கின்றது. சூரிய உஷ்ணத்தால் நல்ல தண்ணீர்மட்டும் ஆவியாய்ப் போய்விட உப்பே மிஞ்சி நிற்கிறது. ஆகையால் கடல்நீர் வெகு உவர்ப்பாயிருக்கிறது.

கடல்நீரில் அத்தனை உப்பு இருப்பதால் நாம் அடையும் பயன் இத்தனை அத்தனை அல்ல. அதில் நாம் சுலபமாய் நீந்தலாம்; அதில் கலந்துள்ள உப்பு நம்மை எளிதில் மிதக்கும்படி செய்கிறது. அதிலிருந்து நம் போஜனத்திற்கும், உணவுப் பண்டங்களை அநேக நாள் அழுகாமல் வைத்திருப்பதற்கும் அவசியமான உப்பு ஏராளமாய் அகப்படுகிறது. பூமியிலிருப்பதுபோலவே கடலிலும் அநேகவிதமான தாவரங்களும் பிராணிகளும் உண்டு. அவை நல்ல தண்ணீரில் போட்டால் உயிரோடிருக்கமாட்டா; மாண்டேபோம். அன்றியும் அவையிரண்டும் அங்கே இருப்பதால்தான் கடல் எப்போதும் சுத்தமாயிருக்கிறது. உவர்நீர் சாமானியத்தில் இறுகிப் பனிக்கட்டியாகாது. கடலை அடுத்த ஏரி, குளம் முதலானவைகள் உறைந்து பாறைபோல்



ஆனபோதிலும் கடல்நீர் அப்படியே தெளிவாயிருக்கும். கடலும் இறுகிப்போமானால் நம் ‘மாதர்போதினியில்’ முன் ஒரு முறை ‘பாதாள குடிகளை’ப்பற்றி வாசித்தபடி அதிலுள்ள பல்கோடி பிராணிகளும் என்ன ஆகும்! கப்பல்கள் தாம் எப்படிப்போகும்! கடவுள் நம்மெல்லார்பேரிலும் வைத்துள்ள கருணையின் மிகுதியாலேயே கடல் நீரை அத்தனை உவர்ப்பாக அமைத்திருக்கிறார்.

## THE LOST RING
## காணமற்போன மோதிரம்

ஒருநாள் ஒரு சீமாட்டி குளிக்கத் தன் ஸ்நான அறைக்குள் போய் நகைகளைக் கழற்றி ஒரு தட்டத்தில் போட்டு அதை மேற்படியின்மேல் வைத்துவிட்டு ஸ்நானம் செய்தாள். குளித்து முடிந்த பிறகு சிறிது வேலையாய் இருந்துவிட்டாள். அடுத்த நாள் தட்டத்தை எடுத்து நகைகளைப் போட்டுக்கொள்ள உட்கார்ந்தாள். அப்போது எல்லா ஆபரணங்களும் இருந்தன; ஒரே ஒரு வைர மோதிரத்தை மட்டும் காணோம். உடனே மேற்படியில் பார்த்தாள். அங்கே பாசிப்பயற்றுப் பொடி டப்பிதான் இருந்தது. சிறிது பொடியும் சிந்தியிருந்தது. அத்தனைதான். மோதிரத்தைக் காணோம். ‘மற்ற நகைகள் எல்லாம் இருக்க, இது மாத்திரம் எங்கே போய்விடும்! மற்றவைகளுடனேதானே இதையும் வைத்தேன்’ என்று தன் பெரிய வீட்டில் நாலாபக்கத்திலும் தேடித் தேடிப் பார்த்தாள். மோதிரத்தைக் காணவே காணோம்.

இது நடந்த மூன்று வருஷத்திற்குப்பின் வீட்டில் போனது வந்ததையெல்லாம் செப்பனிட்டார்கள். அப்போது ஒரு சந்தில் செத்த சுண்டெலியொன்று தன் கழுத்தில் சிக்கிய மோதிரத்துடன் இருக்கக் கண்டார்கள். அப்போது ‘சரி! அன்றைக்கு ஒருநாள் மேற்படியில் வைத்துக் காணமற்போன மோதிரம் இது. ஒருவேளை அங்கே சிந்தியிருந்த குளிக்கிற மாப்பொடியைத் தின்ன வந்த எலி இப்படி அப்படி ஓடும்போது கழுத்தில் அந்த மோதிரம் மாட்டிக்கொண்டிருக்கலாம். முதலில் அது யாதொரு தொந்தரவும் இல்லாமல் இருந்திருக்கும்; பின் எலி பெரியதாகவாக குரல்வளையை இறுக்கிக் கடைசியில் கொன்றுவிட்டதுபோலும்’ என்று எண்ணிக்கொண்டார்கள்.

இதைப் படிக்கும்போது ‘பாவம் பலப்படுகிறது’ என்ற வசனத்தின் உண்மை புலப்படும். பாவமும் அதைச் செய்யும் பாவியை இறுக்கிக்கொண்டே வந்து கடைசியில் மீளா நரகத்தில் தள்ளிவிடும்.

அந்தச் சுண்டெலி முதலில் முயன்றிருந்தால் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் முதலில் அந்த மோதிரம் இம்சை செய்யாதிருந்ததால் சும்மா இருந்து கெட்டது. பாவத்தைப் போக்க முதலில் கொஞ்சம் முயற்சி செய்தால் லேசில் நீக்கிவிடக்கூடும். அப்படியில்லாமல் அதை வளரவிட்டுவிட்டால் அந்தப் பாவம் நாளடைவில் பலப்பட்டு நெருக்கி நம்மை அழித்துவிடும்.

## HOW TO TEACH

### BY MISS ARNOLD,

### Inspectress of Girls' Schools

## பள்ளிக்கூடத்தின் வேலையில் காட்டிய நடவடிக்கை

உபாத்தியாயர்கள் போதனாமுறைப் பாடசாலைகளில் மாணவ உபாத்தியாயர்களாக இருக்கும்போது நல்ல உபாத்தியாயர்களுக்குச் சில நற்குணங்கள் இருக்கவேண்டும் என்று படிக்கிறார்கள். ஆனால் பாடசாலையைவிட்டு வெளிப்பட்டவுடன், மிகவும் விசேஷமான இந்த உபாத்திமைத் தொழிலை அநேகமாய்ச் சிறப்பானதாக்கும் அந்த நற்குணத்தை அவர்கள் முழுமையும் விட்டுவிடுகிறார்கள். சிறந்த மனத்தோற்றமே அந்த நற்குணம். அது இல்லையானால் போதனையில் யாதொரு உற்சாகமும் இராது; கஷ்டமே மேலிடும். பெண்களின் குணங்களை நல்ல மாதிரிக்குக் கொண்டுவரவும் முடியாது. கல்வியைக் கற்கவேண்டும் என்ற எண்ணத்தை அவர்களில் உண்டாக்குவதும் கூடாது. நன்றாய் அறியாத ஏதேதோ விஷயங்கள் பல அவர்கள் மூளைகளை நிரப்புகின்றன. பாடசாலையில் கற்பது முடிவானதல்ல; ஆரம்பம்தான்.

பாடசாலையில் படிக்கிற பெண்கள் நாம் என்ன கற்கிறோம் என்று கவனிப்பது விசேஷித்தது அல்ல. அதை எப்படிக் கற்கிறோம் என்பதைக் கவனிப்பதுதான் விசேஷித்தது. ஏனென்றால், இந்தத் தேசத்தில் ஒரு பெண் தன் ஜீவதிசையின் வெகு கொஞ்ச பாகத்தைத்தான் பாடசாலையில் கழிக்கிறாள். அந்த அற்பகாலத்தில் கணக்குகளை ஏன் அப்படிச் செய்யவேணும் என்கிற காரணத்தை அறியாமல் செய்வதாலும், சரித்திரம் முதலிய பாடங்களிலுள்ள சங்கதிகளைக் குருட்டுப்பாடம் பண்ணுவதாலும், அர்த்தம் தெரியாமல் செய்யுள்களை மனப்பாடம் செய்வதாலும், அவைகள் பிற்காலத்தில் உபயோகமில்லாமற்போகின்றன. தாங்கள் தெரிந்துகொண்ட சங்கதிகளை வெகு சீக்கிரத்தில் மறந்துவிடுகிறார்கள். அறிவை விர்த்தி



பண்ணவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமையால் புத்தி கட்டையாய்விடுகிறது. ஆனால் ஒரு பெண்ணுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடங்களில், அவள் தன் புத்தியை உபயோகிக்கத்தக்கவிதமாய்க் கற்பிப்பதால் அவள் ஆலோசிக்கவும், ஒவ்வொரு நடவடிக்கையிலும் 'அது ஏன்?' 'யாது காரணத்தால் அப்படிச் செய்யவேண்டும்?' என்று யோசிக்கவும் அப்பியாசம் செய்துவந்தால், தன் பின்நாளில் சம்பவிக்கும் எந்த விஷயத்தையும் ஆலோசித்துச் செய்யக் கொஞ்சம் தகுதியுடையவளாயிருப்பாள். அவளுடைய குணமும் மேன்மை அடையும். இப்படிச் செய்யாத படிப்பு உபயோகமாய் இராது.



ஒரு ஸ்திரீ உபாத்தியாயனியாய் இருப்பதின் காரணம் இன்னது என்று விசாரிக்கும்போது அவள் தன் ஜீவனத்திற்காக அந்தத் தொழிலைச் செய்கிறாள் என்று நாம் காண்கிறோம். அது தன்மட்டில் ஒரு கெட்ட எண்ணம் அல்ல. ஆனால், ஜீவனத்திற்காகமாத்திரம் என்கிற எண்ணத்தோடு வேலைசெய்கிற ஸ்திரீ உபாத்திமைத் தொழிலின் மேன்மையை அறிவாளா என்பதுதான் சந்தேகம். உபாத்தியாயனியாய் இருப்பதற்கு முக்கிய காரணம் உபாத்திமைத் தொழிலில் ஆசையிருப்பதும், மற்ற வேலைகளைவிட இது ஒன்றே தான் நன்றாய்ச் செய்யக்கூடியதாயிருப்பதும் ஆகவன்றோ இருத்தல்வேண்டும். வித்துவானிடத்தில் சுபாவத்திலேயே வித்துவத் தன்மை பொருந்தியிருப்பதுபோல ஒருத்தி சுபாவத்திலேயே உபாத்தியாயனியாக இருக்கவேண்டும். போதனாசக்தி நாம் செய்துகொள்ளக் கூடியதல்லவென்று நான் நினைக்கிறேன். ஒரு விஷயத்தை அநேகர் அறிந்திருக்கலாம்; ஆனால், அந்த விஷயத்தை இன்னொருவருக்கு அவர் புத்தியில் படும்படி போதிக்கும் திறமை இருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதம். இது சிலரிடம்தான் உண்டு. ஆகையால்

நாம் உபாத்தியாயனியாக இருப்பது அசாத்தியம் என்று அதைரியப்படவேண்டுவதில்லை. ஜாக்கிரதையாய்ப் பாடங்களை ஆயத்தம் பண்ணி அவைகளைத் தகுந்தவிதமாகக் கற்பிக்கவேண்டும் என்கிற ஆவல்மாத்திரம் இருந்தால் யாரும் நல்ல உபாத்தியாயர் ஆய்விடலாம்.

இந்த இராஜதானி உபாத்தியாயனிகளுக்கு நான் ஒரு நீதிமொழி சொல்லக்கூடும். எதையும் 'பூரணமாய்ச் செய்' என்பதே அது. வேலையைச் சரிவரச் செய்யாமல் உங்கள் வேலையைத் தாழ்த்திக்கொள்ளாதேயுங்கள். என்ன கற்பிக்கவேண்டுமோ அதை முதலில் நீங்களே பூர்த்தியாய் அறிந்து பின்பு பிள்ளைகளுக்கு அதை எந்த நல்ல வழியில் போதிக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். பூரணம் என்பதை விவரிக்க ஓர் உதாரணம் சொல்லுகிறேன். நான்கு வெவ்வேறு பாடசாலைகளில் நான்கு உபாத்தியாயர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒவ்வோர் உபாத்தியாயரும் மூன்று ஸ்தானப் பெருக்கல் கற்பிக்கவேண்டி இருக்கிறது. ஒருவர் எதையும் முன்னால் ஆயத்தம் செய்வதும் இல்லை; எழுதுவதும் இல்லை. பாடசாலைக்குப் போய்க் கணக்குப்பாட நேரம் வந்தவுடன் கணித புஸ்தகத்தை எடுத்து, அதில் ஒரு கணக்கைப் பார்த்தெடுத்து, அதைக் கறுப்புப் பலகையில் எழுதி, பிள்ளைகளை முகத்துக்குமுகம் திரும்பச் செய்து 'இந்தக் கணக்கைப் போடுங்கள்' என்று சொல்லுகிறார். பின்பு கொஞ்சநேரம் சும்மா உட்கார்ந்து, அரிசியின் அதிகவிலை, தன் வீட்டுக் குழந்தைகளுக்குச் சொக்காய் தைக்கவேண்டியிருப்பது, தன் கைக்குழந்தைக்கு ஆஸ்பத்திரி வைத்தியம் ஆகிய இவைகளையும் இவைபோன்ற இன்னும் அநேகவற்றைப்பற்றியும் நினைத்துக்கொண்டிருக்கிறார். உடனே பிள்ளைகளும் கணக்கைப் போட்டாய்விட உபாத்தியாயரும் கையில் சுண்ணாம்புக்கட்டி எடுத்துக்கொண்டு பலகையில் கணக்குச் சரியாயிருந்தால் 'மார்க்' நேராயும், தப்பாயிருந்தால் குறுக்காயும் போடுகிறார். அநேகர் கணக்கைத் தப்பாய்ப் போட்டு இருந்தால் அதைக் கறுப்புப் பலகையில் ஆலோசனை இல்லாமல் போடுகிறார். பிள்ளைகளில் அநேகர் கணக்கைச் சரியாய்ப் போட்டுவிட்டால் வேறொரு கணக்கைக் கொடுத்துவிட்டு மேலே சொன்னபடி நேரத்தைப் போக்குவார். இதனால் தாம் கணிதம் கற்பித்ததாக நினைத்துக்கொள்ளுகிறார். ஆனால் உண்மையில் இது கணிதம் கற்பித்தது ஆகாது. வகுப்பில் ஏதோ எண்களால் செப்பிடு வித்தை நடந்தது: அவ்வளவுதான்.

அடுத்த உபாத்தியாயர் தாம் கற்பிக்கவேண்டிய பாடத்தை ஏதோ கொஞ்சம் ஆயத்தம்செய்கிறார். கணித புஸ்தகம் எடுத்து அதிலிருந்து மூன்று கணக்குகளைத் தம் நோட் புஸ்தகத்தில் பார்த்து எழுதிக்கொள்ளுகிறார். ஆனால் இந்த மூன்றையும் எவ்வாறு போதிக்க நினைக்கிறாரோ அந்த முறையைக் காண்பிக்கிறதில்லை. பாடசாலையில் இருக்கும்போது அவர் நடவடிக்கையும் எறக்குறைய முதல் உபாத்தியாயரைப்போலவே இருக்கிறது.



இனி மூன்றாம் உபாத்தியாயர் தம்முடைய 'நோட்' புஸ்தகத்தில் சில கணக்குகளை எழுதிக்கொண்டு கணக்குப்பாட நேரம் வரும்போது தமது முதல் கணக்கைக் கறுப்புப் பலகையில் எழுதிப் பின்வருமாறு கற்பிக்கிறார். 7426 ஐ 247ஆல் பெருக்குக. அவர் எழு எடுத்து 'எழு ஆறு 42' என்று சொல்லி, இரண்டை எழுதி 'மிச்சம் நான்கு,' 'எழு இரண்டு 14' பதினாலும் நாலும் 18, எட்டு எழுதி 'மிச்சம் 1,' 'எழு நான்கு 28' இருபத்தெட்டும் ஒன்றும் 29, ஒன்பது எழுதி 'மிச்சம் 2,' 'எழேழு 49' நாற்பத்தொன்பதும் இரண்டும் 51, ஐம்பத்தொன்று எழுது—என்று சொல்லுகிறார். இந்தவிதம் செய்ததைப் பார்த்து நான் 'மொத்தம் என்ன?' என்று கேட்கிறபோது அவர் 'ஐம்பத்தோராயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டு' என்று சொல்லுகிறார். நான் 'நீங்கள் சொன்னதின் மொத்தம் 140' (42+18+29+51) என்று அவருக்குச் சொல்லுகிறேன். ஆகையால் அவர் சொன்னதும் செய்ததும் வித்தியாசப்படுகின்றன. உண்மையை என்னவோ வகுப்புக்குச் சொல்லவில்லை. இதனால் உபாத்தியாயராவது பிள்ளைகளாவது பெருக்கல் இன்னது என்று தெரிந்துகொண்டதாக எற்படவில்லை.

நல்ல கடைசி உபாத்தியாயரோ தாம் கற்பிக்கவேண்டிய பாடத்தைச் சரியாய் ஆயத்தம்பண்ணி அதில் வகுப்புக்கு உண்டாகும் கஷ்டங்களை அறியும்படியாக வீட்டில் அதைச் செய்கிறார். அப்போது அவர் (1) கொடுக்கப்பட்ட எண்ணைச் சில தடவைகளில் எடுக்கவேண்டும் (2) எத்தனை தடவைகளால் எடுக்கவேண்டும் என்பதைத் தனித்தனியாயும் உண்மையாயும் கொள்ளவேண்டும் (3) எடுக்கப்பட்ட ஒவ்வொரு எண்ணின் சரியான பெயரைச் சொல்லி அததற்குத் தக்கபடி செய்யவேண்டும் என்ற மூன்று முக்கியமான சங்கதிகளைக் கவனிக்கிறார்.

இந்த உபாத்தியாயர் தாம் நிஜமாகவே கற்பிக்கிறவர். தாம் கற்பிக்கவேண்டியவைகளைத் தாமே சரியாய் அறிந்திருக்கிறபடியால் அவர் கற்பிப்பது புத்தியில் படுவதாயிருக்கிறது. இவர் வெகு நல்ல பாடங்கள் கற்பிக்கிறார். இதுவே ஒரு நீதியான பாடம். இந்த மாதிரியாகக் கற்பிப்பதினால்தான் நான் முன் சொன்னபடி மூன்று விஷயங்களை இவர் போதிக்கிறார். போதனை பூர்த்தியாய்ச் செய்யவேண்டும். இதற்காகப் போதிக்கவேண்டியவைகளை முன்னமேயே ஜாக்கிரதையாய் நினைத்துப் பார்க்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

## SOME SAYINGS OF MAHOMET

## முஹம்மது தீர்க்கதரிசியின் ஞானோபதேசங்களிற் சில

'நான் ஒரு களஞ்சியமாயிருந்தேன். அதை ஒருவரும் அறியவில்லை. அவர்களுக்கு என்னைத் தெரிவிக்க விரும்பினேன். அதற்காக நான் மனிதனைப் படைத்தேன்' என்று கடவுள் சொன்னார்.

கடவுளை நம்பிக் கடமையைச் செய்.

கல்லறையே நித்தியவாழ்வின் முதற்படி.

கூலிக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய கூலியை உடனுக்குடனேயே தந்திடு.

இவ்வுலக சுகத்தின்பின் நரகம் மறைந்திருக்கிறது; உழைப்புக்கும் தரித்திரத்துக்கும் பின்னாலோ சுவர்க்கம் இருக்கிறது.

கஷ்டப்பட்டு வேலைசெய்து ஜீவனோபாயம் நடத்துகிறவர்களைக் கடவுள் நேசிக்கிறார்.

'ஒரு தாய் தன் குழந்தையை நெருப்பில் தள்ளுவாளா?' 'தள்ளவே மாட்டாள்.' 'ஆனால் கடவுள் தம்முடைய ஜீவகோடிகளுக்கு அத்தாயைப்பார்க்கிலும் அதிகமாக இரங்குகிறார்.'

'ஒருவன் நன்மை செய்தால் அவனுக்கு அதிலும் பத்து மடங்காகவும் அதிகமாகவும் நான் திரும்பக் கொடுப்பேன். தீமை செய்கிறவனும் என் மன்னிப்பைப் பெறாவிட்டால் தப்பாமல் துன்பப்படுவான். என்னை நோக்கி ஒருவன் ஒரு சாண் வருவானானால் நான் அவனை நோக்கி அஞ்சு சாண் போவேன். என்னை நோக்கி ஒருவன் மூன்று அடி வைத்தால் நான் அவனை நோக்கி முப்பதடி போவேன். என்னிடம் நடந்து வருகிறவனை நான் ஓடிப்போய்ச் சந்திப்பேன். என்னை நம்பி என்னிடம் வரும் பாவியை உடனே மன்னிப்பேன்' என்று தேவன் சொன்னார்.

கடவுளுக்குப் பயந்து கோபவார்த்தை ஒன்றை விழுங்கியவனைக் காட்டிலும் மேலான பானம்பண்ணினவன் எவனும் இல்லை.

ஒரு மணிநேர தியானம் ஒரு வருஷ ஜெபத்தைக்காட்டிலும் மேலானது.



## MALARIA

## குளிர் சுரம் (மலேரியா)

இதைக் குளிர்காய்ச்சல் என்றும், முறைக்காய்ச்சல் என்றும் சொல்லுவார்கள். இது மலையடிவாரங்களிலும் தண்ணீர் கிடையாய் நின்று கொசுகுகள் விசேஷமாய்ச் சஞ்சரிக்கிற ஸ்தலங்களிலும் சாதாரணமாய் வியாபிக்கக்கூடியது. இதற்குக் காரணம் ஒரு கிருமி. இக்கிருமியானது 'அனொபெலீஸ்' (Anopheles) என்ற ஒரு கொசுகின் மூலமாய்க் குளிர் சுரம் பிடித்த நோயாளிகளின் ரத்தத்தினின்று சுகதேகிகளின் ரத்தத்தினுட் செலுத்தப்பட்டு இவர்களையும் குளிர் சுரத்துக்காளாக்கிவிடுகிறது. ஆகையால் இச்சுரம் வாராமல் தடுப்பதற்குக் கையாடவேண்டிய முக்கிய முறை என்னவென்றால் கொசுகுக் கடியினின்று தப்புவித்துக்கொள்ளுவதற்குத் தகுந்த வழிவகைகளைச் சம்பாதித்துக்கொள்வதே. முன் சொன்னபடி தண்ணீர் கிடையாய் நின்றுகொண்டிருக்கிற ஸ்தலங்களில் கொசுகுகள் ஏராளமாய் பலுகிப் பெருகும். இப்பேர்ப்பட்ட தண்ணீர்க் கிடைகளை நாம் அநேக வீட்டுப் புறக்கடைகளில் சாதாரணமாய்ப் பார்க்கலாம். சமையல் பாத்திரங்களைக் கழுவிய ஜலமும் மற்றவிதமாய் உபயோகிக்கப்பட்டுக் கழிந்துவிடப்பட்ட ஜலமும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து எத்தனையோ நாள் கிடையாய் நின்று நாறிக்கொண்டிருக்கிற நீர்த்தொட்டிகளை நாம் பல இடங்களில் பார்த்திருப்போம். இப்பேர்ப்பட்ட நீர்த்தொட்டிகளைத் தினந்தோறும் கழுவித் துப்புரவு செய்யாவிட்டால் அவைகள் கொசுகுகள் வாசமாயிருப்பதற்குத் தகுந்த தாபரமாகும். அக்கம்பக்கங்களிலுள்ள குட்டைகளில் கொசுகுகள் நடமாடுவதைக் கண்டால் அக்குட்டைகளில் கிரோசின் எண்ணெய் ஊற்றவேண்டும். கிரோசின் எண்ணெய் பட்ட இடத்தில் கொசுகுகள் நடமாடா.

### குளிர் சுரத்தின் முக்கிய குறிகள்

முதலாவது குளிரோடும் நடுக்கத்தோடும் ஆரம்பிக்கும். எத்தனை கம்பளியால் போர்த்து மூடினாலும் குளிரும் நடுக்கமும் ரோகியை வெட வெட என்று ஆட்டும். சில நிமிஷங்களுக்குள் குளிரும் நடுக்கமும் தணிந்து உஷ்ணம் ஏறும். இச்சமயத்தில் தேகத்தைத் தொட்டுப் பார்த்தால் அது அக்கினி மயமாய்த்தானிருக்கும். அதற்கப்புறம் ஒரு பெருத்த வியர்வையோடு சுரம் இறங்கிவிடும்.

### சிகிச்சை

முன் சொன்னபடி கொசுகுகளை அப்புறப்படுத்துவதற்கேற்ற வழிவகைகளைக் கையாடவேண்டும். கொசுகுகள் விசேஷித்து நடமாடுங்

காலம் இராக்காலமானதால் கூடுமானவரையில் படுக்கையைச்சுற்றி கொசுகுவலையைக் கட்டி நித்திரைசெய்வது உசிதம். 'குவினீன்' குளிர் சுரத்துக்குக் கைகண்ட மருந்து. இதைப் பொடியாயாவது, எலுமிச்சைச்சாற்றில் கலந்தாவது மாத்திரையாயாவது கொடுக்கலாம். வயதுக்குத் தக்கபடி ஒரு அரிசி எடையிலிருந்து 10 அல்லது 15 அரிசி எடைவரையில் கொடுக்கலாம். கொடுக்குமுன் உப்பு அல்லது சிற்று மணக்கெண்ணெய் பேதிக்குக் கொடுத்து வயிற்றைச் சுத்தம்பண்ணிக் கொள்வது நன்று. காய்ச்சல் இருக்கும்பொழுது லகுவான போஜனம் புசிக்கவேண்டும்.

குளிர் சுரம் பிரதிதினம் வந்தாலும் வரும், அல்லது இரண்டு நாளுக் கொருதரமாவது மூன்றுநாளுக் கொருதரமாவது வந்தாலும் வரும்.

குளிர் சுரத்தைத் தகுந்த சமயத்தில் சிகிச்சைக்குட்படுத்தாததினால் வருங்கேடுகள் பல. இரத்தங் குறைந்து தேகம் பலஹீனப்பட்டுப் போகும். மண்ணீரல் பெருக்கும். இருதய பலவீனம், தலைவலி, தலைபாரம், மலக்கட்டு அல்லது இரத்தபேதி, சீதபேதி உண்டாகலாம். பித்தம் அதிகரிக்கும். மகோதரம் (வயிற்று வீக்கம்) காணும். கர்ப்பஸ்திரீகளுக்கு அகாலப் பிரசவம் உண்டாகும்.

ஆகையால், குளிர் சுரந்தானேயென்று ஏனோதானோவென்றிராமல் அப்போதைக்கப்போது தகுந்த முறைகளைக் கையாடி சுகத்தைப் பேணிக்கொள்வது உத்தமமானதாகும்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஆகஸ்டு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | ரோ. | 15. 8—16 | 11 | வெ. | 1 இரா. | 5. 1—9 | 21 | தி. | 1 இரா. | 9. 10—28 |
| 2 | பு. | „ | 15. 17—24 | 12 | ச. | „ | 5. 10—18 | 22 | செ. | „ | 10. 1—13 |
| 3 | வி. | „ | 15. 25—33 | 13 | ஞா. | „ | 6. 1—14 | 23 | பு. | „ | 10. 14—29 |
| 4 | வெ. | „ | 16. 1—10 | 14 | தி. | „ | 7. 1—12 | 24 | வி. | „ | 11. 1—13 |
| 5 | ச. | „ | 16. 11—20 | 15 | செ. | „ | 8. 1—11 | 25 | வெ. | „ | 11. 14—25 |
| 6 | ஞா. | „ | 16. 21—27 | 16 | பு. | „ | 8. 12—21 | 26 | ச. | „ | 11. 26—35 |
| 7 | தி. | 1 இரா. | 1. 32—46 | 17 | வி. | „ | 8. 22—36 | 27 | ஞா. | „ | 11. 36—43 |
| 8 | செ. | „ | 3. 1—15 | 18 | வெ. | „ | 8. 37—53 | 28 | தி. | „ | 12. 1—11 |
| 9 | பு. | „ | 3. 16—28 | 19 | ச. | „ | 8. 54—66 | 29 | செ. | „ | 12. 12—24 |
| 10 | வி. | „ | 4. 21—34 | 20 | ஞா. | „ | 9. 1—9 | 30 | பு. | „ | 12. 25—33 |
| | | | | | | | | 31 | வி. | „ | 13. 1—10 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

மாதர் போதினி

No. 165 செப்டெம்பர் 1911 No. 9

## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

### ராஜ குடும்ப காண்டம்


சக்கரவர்த்தினி அவர்களின் மூத்த குமாரத்தியாகிய விக்டோரியா ஆதிலையாள் ராஜபெருமாட்டியின் பிறப்பு, வளர்ப்பு, விவாகம் முதலியவைகளைக்குறித்து முன்னே மொழிந்தோம். இனி மற்ற ராஜகுமாரரையும் ராஜகுமாரத்திகளையும் குறித்த விபரம் சிறிது கூறுவோம்:

**ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி.** இவர்தான் சக்கரவர்த்தினி அவர்களுடைய ஜேஷ்ட புத்திரரும் சிங்காசனத்திற்கு உரித்தாளியுமாய் ஜனனமானவர். முன் கூறியபடி இவர் 1841-ம் வரு நவம்பர்மீ 4உ பிறந்தார். இவருக்கு உவேல்ஸ் இளவரசர் என்று பட்டப் பெயர். பிள்ளைப்பிராயத்தில் அரமனையிலேதானே இவருடைய ராஜமாதாவும் மற்றவர்களும் இவரைப் படிப்பித்துவந்தார்கள். பிற்பாடு எடின்புரிக் கல்விச்சாலையிலும் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் என்னும் சர்வகலாசாலைகளிலும் சாஸ்திராப்பியாசமடைந்தார். 1863-ம் வரு மார்ச்சுமீ 10உ அலக்சந்திரா என்னும் டென்மார்க் தேசத்து ராஜகுமகாத்திக்கும் அவருக்கும் மணம்முடிந்தது. இவருக்கு 1864-ம் வரு ஜனவரிமீ 8உ ஆல்பட் விக்டரும், 1865-ம் வரு ஜூன்மீ 3உ ஜியார்ஜ் பிரடறிக்கும், 1867-ம் வரு பெப்ருவரிமீ 20உ லூயிசா விக்டோரியாவும், 1868-ம் வரு ஜூலைமீ 6உ விக்டோரியா அலக்சந்திராவும், 1869-ம் வரு நவம்பர்மீ 26உ மாட் சார்லெட்டும் ஆக ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள்.

(Margin note: உவேல்ஸ் நாட்டு இளவரசர்.)

அவருக்கு விஷஜுரம் உண்டாதல்.

1872-ம் வருஷம் உவேல்ஸ் இளவரசருக்குக் கொடிய விஷஜுரம் உண்டானது. இதற்குக் காரணம் அவர் சுகமில்லாத ஓரிடத்திற்குப் போய் வந்ததேயாம். அவரோடுகூடப் போயிருந்த ஒரு பிரபுவுக்கும் ஒரு குதிரைக்காரனுக்கும் அவ்வியாதி கண்டு, அவ்விருவரும் இறந்து



போனார்கள். இளவரசரும் பிழைப்பாரென்று நினைப்பாரில்லை. அவருடைய நாயகியாகிய வேல்ஸ் பெருமாட்டியும், அவருடைய தங்கையாகிய ஆலிஸ் பெருமாட்டியும், இராக்கண் விழித்து அவரை அதிக பத்திரமாய்ப் பார்த்தார்கள். சக்கரவர்த்தினியார் தங்கள் ராஜகுமாரனுடைய வியாதியினால் அதிகமான துயரமுற்றவர்களாய் 'என்



விளக்கு அணைந்துபோகுமோ' என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்தார்கள். பிரஜைகளும் அதிக மனக்கவலையுடையவர்களாய் 'இளவரசரைக் கடவுள் சுகப்படுத்தவேண்டும்' என்று ஆவலாய் ஜெபித்துவந்தார்கள். ஆனால் வியாதியானது வரவர அதிக கடினமானதேதவிர சுகப்பட்டதாகக் காணப்படவில்லை. இளவரசர் போதமற்றிருந்தபடியால் ஆட்களை இன்னார் இன்னாரென்று அறியக்கூடாதவராயிருந்தார். அவருடைய தகப்பனாராகிய ஆல்பட் பிரபு இறந்த தினமாகிய டிசம்பர்மீ 14-உயில் அவர் அதிக பலவீனமடைந்திருந்ததைக் கண்ட யாவரும் அவர் அந்தத் தினத்தை ஜீவனோடு கழிப்பார் என்றெண்ண ஏதுவில்லாதிருந்தது. ஆனால் மனுஷன் தானொன்று நினைக்கக் கடவுள் தாமொன்று நினைத்தாற்போல அன்றுமுதலே வியாதியானது தணியத் துவக்கி நாளுக்குநாள் பூரண சுகம் உண்டானது. அப்போது பரிசுத்த பவுல் ஆலயத்தில் அவருக்காக ஒரு நன்றியறிதல் ஆராதனை நடந்தேறினது.

சுகம் அடைதல்.

அதில் ஆயிரக்கணக்கான அரசரும், பிரபுக்களும், பெருமாட்டிகளும் கூடியிருந்தார்கள். அவரும் அவர் ராஜ மாதாவும் ரதமேறி ஆராதனைக்குச் செல்லும்போது தங்கள் அன்பான ராஜகுமாரனைப் பார்க்கும்படி பிரஜைகள் தோரணங்கள், கொடிகள் முதலியவைகளைக் கட்டித் தெருக்களில் கும்பல்கும்பலாய்க் கூடி நின்று வாழ்த்தினார்கள்.

இந்தியாவில் விஜயம்செய்தல்.

1875, 1876-ம் வருஷங்களில் இளவரசர் இந்தியாவின் பல திசைகளையும் சுற்றிப் பார்த்து இங்கிலாந்துக்குத் திரும்பினார். அவரைக் கண்ட இந்தியாவின் கோடிக்கணக்கான ஜனங்கள் அவரை ராஜபக்தியோடு ஏற்றுக்கொண்டதுமல்லாமல் அவர்நிமித்தம் அதிக சந்தோஷமுமடைந்தார்கள்.

ஆடுமாடுகளை அதிகமாய்ப் பேணுதல்.

இத்தேசத்திலே வேளாண்மை செய்கிறவர்களும், ஆடுமாடுகளை வளர்க்கிறவர்களுமான குடியானவர்கள், அரசர் பிரபுக்கள் முதலியோர், ஏழாம் எட்வர்ட் அரசரும் அப்போது உவேல்ஸ் நாட்டு இளவரசருமான மகானிடத்திலிருந்து நல்ல பாடம் கற்றுக்கொள்ளலாம். அவர்கள் இங்கிலாந்திலே சாந்திரிங்காம் என்னும் காணி பூமியை விலைக்கு வாங்கி அதைத் திருத்தி அதின் நிலவாசியைப் புஷ்டியாக்கி அதில் பல வர்க்கங்களான ஆடுமாடுகளை வளர்த்துவந்தார்கள். இங்கிலாந்தில் நடந்த அநேக பொருட்காட்சிகளில் அவர்களுடைய ஆடுமாடுகளுக்கு அதிகமான இனாம் கிடைத்தது. ஏனென்றால், அவர்களைப்போல அவைகளை அவ்வளவு கண்ணுங்கருத்துமாய் வளர்த்தவர்கள் இல்லை.

அவர் தமது பிள்ளைகளை மிகவும் கவனமும் கருத்தும் தேவபக்தியு
மாய் வளர்த்திருக்கிறார். அவர்களுக்குப் பலவிதமான சாஸ்திரங்
களைக் கற்பித்திருப்பதுமல்லாமல் அவர்களை உலகத்தைச் சுற்றியோடு

**பிள்ளைகளைச் செம்மையாய் வளர்த்தல்.**

கிற கப்பல்களில் பிரயாணம் பண்ணுவித்து
உலக சம்பந்தமான அநேக அறிவுகளையும்
அடையச் செய்திருக்கிறார். அவர்கள் கப்பலி
லிருக்கும்போது கப்பற்காரரின் உடையைத்
தரித்துக் கப்பற்காரரைப்போலவே நடந்துகொள்ளவேண்டும்.

அரசரின் பட்டத்துக் குமாரனாகிய கிளாரன்ஸ் பிரபு என்னும்
ஆல்பட் விக்டர் என்ற ஜேஷ்ட புத்திரன் 1890-ம் ஹு இந்தியா

**அவருடைய மூத்த குமாரரின் மரணம்.**

வுக்கு விஜயஞ்செய்து இங்கிலாந்துக்குத் திரும்
பிப்போய் 1892-ம் ஹு ஜனவரி௴ 14௳
இறந்துபோனார். அவர் வியாதிப்படுதற்குச்
சிறிது காலத்திற்குமுன் அவருக்கு இங்கிலாந்தி
லுள்ள மே என்னும் பெருமாட்டியை விவாகம்பண்ணும்படி ஒழுங்கு
செய்திருந்தது. இந்த மரணமானது சக்கரவர்த்தினியாருக்கும் அவர்
களுடைய குமாரனுக்கும் மருமகளுக்கும் எப்படி இருந்திருக்குமென்
பதை இதை வாசிக்கிறவர்களே கிரகித்துக்கொள்ளவேண்டும். மலை
நகர்ந்தாற்போல இந்தப் பட்டத்துக் குமாரன் நகர்ந்துபோனது உல
கத்தின் மாய்கைக் கோலத்திற்கு மகா பெரிய அத்தாட்சியாயிருக்
கிறது.

மேற்சொன்ன மே என்ற பெருமாட்டியைக் காலஞ்சென்ற கிளா
ரன்ஸ் பிரபுவின் தம்பியாகிய ஜியார்ஜ் பிரடறிக் என்னும் உவேல்ஸ்

**இளையகுமாரரின் விவாகம் முதலியன.**

நாட்டு இளவரசர் 1893-ம் ஹு ஜூலை௴ 6௳
மணம்முடித்தார். இவருக்கு முதலாம் பட்டப்
பெயர் யார்க் பிரபு என்பது; ஆனால் அவர்
தமது சகோதரனுக்குப் பின் பட்டத்துக் குமார
னானபடியால் அவருக்கு உவேல்ஸ் நாட்டு இளவாசர் என்ற பட்டப்
பெயர் கிடைத்தது. இப்போது இவர் நமது சக்கரவர்த்தியாகி நம்மை
ஆள்வது நமக்குத் தெரியும். இவருக்கும் சில பிள்ளைகள் பிறந்திருக்
கிறார்கள். இவ்விதமாய்ச் சக்கரவர்த்தினி அவர்கள் தங்கள் குமாரனை
யும் குமாரனுடைய குமாரனாகிய பேரனையும் பேரனுடைய குமாரனா
கிய பீட்டனையும் காண்கிற பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள். இந்த
நாலு தலைமுறையாரையும் காண்பிக்கிற படத்தை நாம் அடிக்கடி பத்
திரிகைகளில் பார்த்திருக்கிறோம். ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி
1910-ம் ஹு மே௴ 6௳ காலஞ்சென்றுபோன துயரசெய்தி நமக்
குத் தெரியும்.



**ஆலிஸ் பெருமாட்டி.** இந்த அம்மாளின் பிறப்பைப்பற்றி முன்
னே கூறினோம். இவர்கள் அதிக உற்சாகமும் ஊக்கமுமுள்ளவர்
கள். இவர்களுக்கும் 1862-ம் ஹு ஜூலை௴ 1௳ ஜர்மனி தேசத்து
ஹெசி நாட்டுப் பிரபுவுக்கும் விவாகம் நடந்தது. இவர்களுடைய
இல்லற வாழ்க்கையானது ஆரம்பத்தில் அதிக இன்பம் பொருந்
தினதாயிருந்தபடியால் அவர்கள் தங்கள் ராஜமாதாவுக்கு அனுப்பின
ஒரு கடிதத்தில்: உலகத்திலே நாங்கள் அனுபவியாத ஆனந்தம்
யாதொன்றும் இல்லை என்று எழுதினார்கள். ஆனால் அவர்கள் உலக
இன்பத்தில் மூழ்கி பரோபகார இன்பத்தை மறந்துவிட்டார்களோ
என்றால் அப்படி இல்லை. வியாதிக்காரருக்கும், வறிஞருக்கும், அற
நெறி தவறின வாலிபமாதருக்கும் அவர்கள் பாராட்டின அன்பையும்
செய்த உதவியையும் விவரிக்கமுடியாது. மேலும் பிரான்சியருக்கும்
ஜர்மனியருக்கும் நடந்த போரிலே காயப்பட்ட அநேக போர்வீர
ரைப் போய்ப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து
அவர்களை ஆற்றினார்கள். இந்த அம்மாளுக்கும் பலவித மனக்கவலை
களும் உபத்திரவங்களும் உண்டாயின. அவர்களுடைய நாயகன்
இரண்டுதரம் கொடிய யுத்தகளத்திலேபோய் யுத்தாயுதம் பிடித்துப்
போர்புரிய வேண்டியிருந்தது. அந்தக்காலத்தில் அவர்கள் மனம்
என்ன பாடுபட்டிருக்குமென்பதை நாம் நினைத்துக்கொள்ளலாம்.
மேலும் அவர்களுடைய இன்பமும் அழகும் பொருந்திய இளைய குமா
ரன் ஒரு தினம் மேல்மெத்தையிலிருந்து கீழே விழுந்து, உடனே
இறந்துபோனபடியால் நெடுங்காலம் மும்முரமான துயரக்கடலில்
மூழ்கியிருந்தார்கள். இன்னும் அவர்களுடைய நாயகனும் ஐந்து பிள்
ளைகளும் கொடிய வியாதியில் வீழ்ந்தார்கள். அவர்களில் ஒரு பிள்ளை
இறந்துபோனது. அந்த வியாதியில் அதிக ஜாக்கிரதையாய் உதவி
செய்தபடியால் ஆலிஸ் பெருமாட்டியும் வியாதிப்பட்டு, ஐயோ சங்
கடம்! இறந்துபோனார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயசு 46.
சக்கரவர்த்தினியாருடைய பிள்ளைகளுக்குள்ளே முதலாவது காலஞ்
சென்றது இந்தப் பெருமாட்டிதான்.

**எடின்பரோ பிரபு.** இவருக்கு ஆல்பட் இளவரசர் என்பது குடும்பப்
பெயர். இவர் சக்கரவர்த்தினியாரின் குமாரரில் இரண்டாவதானவர்.
கடல் ராணுவச் சம்பந்தமான கல்விகற்று மத்தியதரைக் கடலிலிருக்
கிற அங்கிலேய போர்க்கப்பல்களுக்குத் தளகர்த்தராயிருந்தார். 1869,
1870-ம் வருஷங்களில் இந்தியாவின் வடபாகத்துக்கு விஜயஞ்செய்
தார்; 1874-ம் ஹு ருஷிய சக்கரவர்த்தியின் குமாரத்தியாகிய மேரி
என்னும் பெருமாட்டியை மணம்முடித்தார்.

ஹெலினுள் பெருமாட்டி. இந்த அம்மாளுடைய 21-ம் வயதில் இவர்களுக்கும் ஆல்ஸ்டீறின் பட்டணத்து ராஜ பிரபுவாகிய கிறிஸ்தியான் என்னும் இளவரசருக்கும் விவாகம் நடந்தது.

லூயிசா பெருமாட்டி. இவர்கள் 1871-ம் ௵ ஸ்கோத்லாந்திலுள்ள ஆர்கைல் பிரபுவின் குமாரனை லோர்ன் பிரபுவுக்கு மனைவியானார்கள்.

கானாட் பிரபு. இவருக்கு ஆர்தர் இளவரசர் என்று பெயர். இவர் தைரியமான போர்வீரர்; சிறிதுகாலம் பம்பாய்ப் பட்டணத்துச் சேனைக்கும் தளபதியாயிருந்தார்; 1879-ம் ௵ லூயிசா என்னும் புருஷிய இளவரசியை மணம்புரிந்தார்.

ஆல்பனி பிரபு. இவருடைய சொந்தப் பெயர் லியோபோல்ட் இளவரசர். இவர் பலமான தேகமுடையவரல்ல, அறிவிலும் குணாதிசயங்களிலும் தம் தந்தைக்குச் சமானமானவராயிருந்தார். 1882-ம் ௵ ஹெலினா என்னும் வால்டக் பெருமாட்டியை மணஞ்செய்தார். 1884-ம் ௵ தமது 33-ம் வயதில் தேகவியோகமானார்.

(இன்னும் வரும்.)

## WATER—ITS USES

## தண்ணீர்

### அதின் நன்மை தீமைகளும், அதை உபயோகிக்கவேண்டிய விதமும்

தண்ணீர் மிகவும் பிரயோஜனமான பொருள் என்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயம். நமக்குச் சாப்பாடு எவ்வளவு அவசியமோ, அப்படியே தண்ணீரும் அவ்வளவு அவசியமே. தண்ணீரில்லாமல் மனுஷராவது, மிருகஜீவன்களாவது, செடிகொடிகளாவது பிழைப்பதற்கு மார்க்கமில்லை. தண்ணீர் சரியானபடி கிடையாத இடங்களில் ஜனங்கள் படும்பாடு கொஞ்சமல்ல. அப்படிப்பட்ட இடங்களில் குடியிருந்தால்தான் நமக்குத் தண்ணீரின் அருமை தெரியும்.

தண்ணீரென்றால், எல்லாத் தண்ணீரையும் உபயோகப்படுத்திவிடலாமா? கூடவே கூடாது. நாம் உபயோகப்படுத்தும் தண்ணீர் மிகவும் சுத்தமானதா என்பதைப்பற்றி மிகவும் கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இந்த உலகத்தில் வரும் அசுத்த வியாதிகளிலும், தொத்து வியாதிகளிலும் கொடியது அசுத்தமான தண்ணீரால்தான் வருகிறது. அழுக்குத்தண்ணீரில் கண்ணுக்குத் தெரியாத



மிகச் சிறு ஜீவஜந்துக்கள் வசித்துவருகின்றன. அப்பூச்சிகள் நமது குடலுக்குள் பிரவேசித்தால் தேகத்தில் அநேகவிதமான வியாதிகளை உண்டுபண்ணும். விஷபேதி, வைசூரி, அநேகவிதமான தொத்துக் காய்ச்சல் முதலிய வியாதிகள், இவ்விதப்பூச்சிகளினால்தான் உண்டாகின்றன.

அசுத்தமான தண்ணீரைக் குடிக்கும்போது அதிலுள்ள பூச்சிகளெல்லாம் நமது குடலுக்குள்போய், நம் இரத்தத்தோடு கலந்து, தேகம் எங்கும் பரவி, நம்மைப் பெரிய வியாதிகளுக்கு ஆளாக்குகின்றன. இவ்விஷயம் இந்தியாவில் இன்னும் அநேகருக்குத் தெரியாது. ஆங்கிலேய வயித்தியர்களைக் கேட்டால் இதின் உண்மையைத் தெளிவாய் விவரிப்பார்கள்.

அழுக்குத்தண்ணீரில் வசிக்கும் பூச்சிகளை நாம் காணக்கூடாதபடி அவ்வளவு சிறிதாயிருப்பதால், அவை நமது கண்ணுக்குத் தெரிவதில்லை. அதினால் அழுக்குத் தண்ணீரையும் கொஞ்சங்கூட அருவருப்பில்லாமல் உபயோகப்படுத்திவருகிறார்கள். ஆங்கிலேய வயித்தியர்கள் சிலவிதக் கண்ணாடிகளின் உதவியினால் தண்ணீரில் வசிக்கும் ஆயிரக்கணக்கான இச்சிறு பூச்சிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இப்பூச்சிகளினால் வரும் வியாதிகளைத் தடுக்க முக்கிய வழி யென்னவென்றால், தண்ணீரை நன்றாய் ஆவி வரும்வரை கொதிக்கவைத்தால் அதிலுள்ள சிறு பூச்சிகள் செத்துப்போகும். பின்பு அத்தண்ணீரை நன்றாய் மூடி, ஆறவைத்து, உபயோகப்படுத்தலாம். குளிக்கிற தண்ணீரானாலும் சரி, பாத்திரம் கழுவுகிற ஜலமானாலும் சரி, குடிக்கிற தண்ணீரானாலும் சரி, எதையும் இப்படி உபயோகப்படுத்துவதே நலமாகும். ஆனால் குடிக்கிற தண்ணீரைப்பற்றித்தான் எல்லாவற்றிற்கும் அதிகமாக சர்வ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இக்காரணத்தினாலேதான் அழுக்குத்தண்ணீர் நிறைந்த வாய்க்கால்களிலாவது, ஆறுகளிலாவது, குளங்குட்டைகளிலாவது குளியாமலும் தண்ணீர் எடாமலும் இருக்கவேண்டும் என்று சொல்வது. இதை வாசிக்கிறவர்களுக்கு இது ஒரு புதுச்சங்கதியாய் இருந்தாலும் இருக்கலாம். அவர்கள் இனிமேலாவது தங்கள் தங்கள் வீடுகளில் இந்தப் பிரகாரம் நடந்துவருவார்களென்று நம்புகிறேன். இப்படியே எல்லோரும் செய்துவந்தால், இந்தியாவில் நடமாடும் அநேக தொத்து வியாதிகள் அடியோடே அற்றுப்போகும். இதை வாசிக்கும் பிரிய சிநேகிதிகள் யாவரும் அப்படிப்பட்ட நன்மையை விர்த்திபண்ண ஏதுவாயிருப்பார்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறேன்.

## THE BRICK AND THE DOG

## செங்கல்லும் நாயும்

பூர்வகாலத்திலே பாபிலோன் என்கிற பெரிய பட்டணத்துக்கு வெளியே ஒரு சூளை இருந்தது. செங்கற்சுடுவோர் மண்ணினாலே பெரிய செங்கற்களை உருவாக்கி, வெயிலில் காயும்படியாக அவைகளை வரிசையாக வைத்துவிட்டார்கள். அங்கு வைக்கப்பட்ட செங்கல் ஒவ்வொன்றும் பாபிலோன் ராஜாவினுடையது என்று எல்லாரும் அறியும்படியாக ஒவ்வொரு செங்கல்லின்மேலும் ராஜாவின் பெயர் முத்திரை அச்சடிக்கப்பட்டிருந்தது.

மத்தியான நேரத்தில் வெயில் அதிகரித்தது. செங்கற்சுடுவோர் எல்லாரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தார்கள். எல்லாம் சும்மாவிருந்த சமயத்திலே அவலட்சணமும் சேவலமுமான ஒரு நாய் திருட்டுத்தனமாய் ஆகாரம் தேடிவந்தது. அது அங்குமிங்கும் முகர்ந்து பார்க்கும்போது, வெயிலில் இன்னும் காயாத செங்கல் ஒன்றை மிதித்து ராஜாவின் பெயர் மேலே தன் காலை வைத்தது.

கூலியாட்கள் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் வந்து, காய்ந்துபோன செங்கற்களை எடுக்கும்போது மிருகத்தின் அடையாளம் வைக்கப்பட்ட அந்தச் செங்கல்லைப் பார்த்தார்கள். 'நமது ராஜாவின் பெயர் அழிந்து போச்சுதே, இது நமக்கு வேண்டாம்' என்று அதை எறிந்துவிட்டார்கள். அந்தச் செங்கல் மதிலின் அருகே விழுந்து அநேக வருஷங்களாக அப்படியே கிடந்தது.

அந்தச் செங்கல்லைப் பார்க்கவேண்டுமா? நீங்கள் லண்டன் பட்டணத்துக்குப்போய்ப் பிரிட்டிஷ் மியூசியம் (British Museum) என்கிற விநோதசாலையில், ராஜாவின் பெயர்மேல் மிருகத்தின் அடையாளம் வைக்கப்பட்டிருக்கிற அந்தச் செங்கல்லைக் கண்ணாலே காணலாம்.

ஆனாலும் அவ்வளவு தூரம் போகாமல் நீங்கள் ஒவ்வொருநாளும் அதே காரியத்தைப் பார்க்கலாம். வீதியில் நின்றுகொண்டு வழிப்போக்கர் முகத்தைப் பாருங்கள். அவை அந்தப் பாபிலோன் செங்கல்லைப்போல இருக்கின்றன. ராஜாதி ராஜாவின் பெயர் இருக்கவேண்டிய அவர்கள் நெற்றியில் பாவத்தின் அடையாளமாகிய மிருகத்தின் கால் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய முகத்தைப் பார்த்து, அவன் குடிவெறியினால் கெட்டுப்போயிருக்கிறான் என்றும், இன்னொருவனுடைய முகத்தைப் பார்த்து, அவன் கெட்ட இச்சையினாலும் போகத்தினாலும் மாறிப்போயிருக்கிறான் என்றும் அறியலாம். அதோ ஒரு பெண் 'சுகபோகமாய் வாழ்ந்திருக்கிறபடியால் உயிரோடே செத்தவள்.'



இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் ஒன்றுக்கும் உதவாத செங்கல்லைப்போலிருக்கிறார்கள். பாவத்தின் அடையாளம் நமது மகிமையுள்ள ராஜாவின் நாமத்தைக் கெடுத்துவிட்டது.

பூர்வகாலத்தில் வாசம்பண்ணின அந்தச் செங்கற்சுடுவோர் உதவாத செங்கல்லைச் சரிப்படுத்த முடியவில்லை. மிருகத்தின் அடையாளம் எப்பொழுதும் அப்படியே இருக்கவேண்டும். கெட்டுப்போன ஆத்துமாவோ அப்படியல்ல. பாவத்தின் சங்கிலிகளினாலே கட்டப்பட்டுத் தேவனுடைய சாயலை இழந்துபோன எந்த ஆத்துமாவும் இயேசுகிறிஸ்துவின் திருரத்தத்தினாலே கழுவப்பட்டு இரட்சிக்கப்படலாம். பரிசுத்த ஆவியானவர் பாவத்தின் அடையாளத்தை நீக்கி, அதைக் கழுவி, ராஜாவின் பெயர் நெற்றியில் பிரகாசிக்கச் செய்வார்.

'அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே—பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே.'



## FOOT BINDING IN CHINA

## சைனாக்காரர் சிறு பாதம்

சைனா தேசத்தில் சக்கரவர்த்தி மிங்ஸங் (926-933) அரசு செலுத்திவந்தார். அப்போது அந்தச் சமஸ்தானத்தில் நடனக்காரியாக ஓர் அழகிய கன்னிகை இருந்தாள். அவளுக்குப் பாதம் இரண்டும் வெகு சிறியனவாய் இருந்தன. அவள் வெகு கம்பீரமாய் நடிக்கக் கற்றிருந்தாள். சக்கரவர்த்தியும் அவளை மெச்சி அவளுடைய பாதங்களுக்குத் தங்கக்கவசம் செய்துபோட்டான். அதோடு மிதிக்கும் இடங்களில் இங்குமங்கும் தாமரைப்பூக்களையும் அமைத்துவைத்தான். அவள்

தாமரை மொக்குப்போல் சிறு பட்டுப் பாதரக்ஷைகள் தரித்திருந்தாள். அதையும் பரிசாகப்பெற்ற பொற்கவசத்தோடும் அங்கு அமைக்கப்பட்டிருந்த தாமரைப்பூக்களின்மேல் ஆடுவது வெகு ரம்மியமாயிருந்தது. அதினால் அவளுடைய பாதங்களை 'பொற்றாமரைத் தாள்' என்று சொன்னார்கள். இப்படிக்கெல்லாம் அந்த நடன மாது சிறப்படைந்தது அவளுடைய சிறு பாதங்களால் என்றெண்ணிய சக்கரவர்த்தியின் மனைவிகளும் தங்கள் பாதங்களும் அந்த நடன மாதின்



பாதத்தைக் கட்டப்படும் துன்பம்

பாதங்களைப்போல் சிறியனவாய் இல்லாவிட்டால் சக்கரவர்த்தியின் பிரியம் போய்விடும் என்று பயந்து தங்கள் பாதங்களையும் சிறுக்கச் செய்யும்படி அவற்றைப் பட்டுப் பட்டைகளால் இறுக்கிக் கட்டலானார்கள். இவர்களைப் பார்த்துச் சீமாட்டிகள் பலரும் அப்படியே செய்தார்கள். இப்படியே நாளாவட்டத்தில் சைனாதேசம் முழுமையும் பாதத்தைக் குறுக்கும் இந்தப் பழக்கம் பரவிவிட்டது.

ஒரு குழந்தையின் நாலாவது ஐந்தாவது வயசிலேயே அதின் காலைக் குறுக்க ஆரம்பிப்பார்கள். அதினால் காலின் சிறு விரல் நான்



கும் பாதத்தின் அடியில் மடங்கிப்போகும். அதோடு அந்தப் பாதம் கிழப்பருவத்திலும் அப்படியே மூன்று அல்லது நான்கு அங்குலத்தில் நின்றுவிடுகிறது. இதைவிட நீளமான பாதம் உள்ள ஸ்திரீ ஒருத்தி இருக்க நேரிட்டாலும் அவளுக்கு மதிப்பு இல்லை. இக்கொடுமையான வழக்கத்தினால் உண்டாகும் வலி இவ்வளவு அவ்வளவு அல்ல. 'குறுகிய பாதம் இரண்டுக்குக் குடம் ஒன்று கண்ணீர்' என்பது சைனாப் பழமொழி. இத்தனை கஷ்டப்பட்டுக் குறுக்கும் பாதவிரல்களில் புண்களும் வரும், அவற்றில் இரண்டொரு விரல் அழுகி விழுந்தும்விடும்.

ஆனால் இப்போது வரவர இந்தக் கொடிய வழக்கம் நின்றுவருகிறது. முதலில் சைனாக் கிறிஸ்தவர்கள் தங்கள் பெண்களின் பாதங்களைக் குறுக்குவதை நிறுத்தினார்கள். அப்படியில்லாமல் யாராவது குறுக்குவதானால் அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல என்ற ஒரு விதி ஏற்படுத்தினார்கள். பிறகு இங்கிலீஷ் வியாபாரியின் மனைவி ஒருத்தி ஊர் ஊராய்ப் போய் இதைப்பற்றிப் பிரசங்கம்பண்ணியும், புஸ்தகங்களைப் பிரசுரம்பண்ணியும் 'இயற்கைப் பாதக் கூட்டம்' என்று ஒரு சபை ஸ்தாபனம் செய்தும்வந்தாள். சைனா தேச வர்த்தமானப் பத்திரிகைகளையும் வசப்படுத்தி வழிப்படுத்தி அநேக குடும்பத்தார் அந்தச் சபையில் சேர்ந்தார்கள். கடைசியாக 1906-ம் ௵ நவம்பர் ௴ அச்சபையின் காரியங்களை எல்லாம் சைனா ஜனங்கள் தாங்களே செய்துகொள்வதாக மேற்கொண்டுவிட்டார்கள். அதுமுதல் இக்கொடிய மூடவழக்கத்தை நிறுத்திவிடுவதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன. மேலும் அவர்கள் தங்கள் பாதங்களை வளரவிடத் தீர்மானித்ததுபோலவே தங்கள் மனதையும் விருத்திபண்ணுவதற்கு வேண்டிய பெண்பாடசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

## TEMPERANCE SONG

## மதுபானப் பாடல்

பல்லவி

ஓ மதுபானமே ஓ மதுபானமே உன்னாலே
மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல— ஓ மது.

1

பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்
பாராதே ருசிபாராதே நீ பாம்பைப்போல்
கடிபடுவாய்— ஓ மது.

2

யாருக்குவேதனை யாருக்குச் சண்டைகள்
சாராயத்தை நாடுவோர்க்கும்
சாராயத்தைக் குடிப்போர்க்கும்— ஓ மது.

3

தாறுமாறானதை தவறி உளறிபேசும்
தடியடி யடித்தாலும் நோகவில்லை
என்று சொல்லும்— ஓ மது.

4

குடியனும் பெருந்தீனிக்காரர் இருவரும்
குடிகெட்டு போவார்களே
நிச்சயமே நிச்சயம்— ஓ மது.

## HOW TO TEACH (Cont.)

### BY MISS ARNOLD,

### Inspectress of Girls' Schools

## பள்ளிக்கூடத்தின் வேலையில் காட்டிய நடவடிக்கை

(தொடர்ச்சி)

எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயர்களில் அநேகர் தாங்கள் கற்கவேண்டியது ஒன்றும் இல்லை என்று நினைக்கிறார்கள். இவர்கள் சுமார் இருபது வருஷத்திற்குமுன் பிரைமரியிலோ, லோயர் செக்கன்டரியிலோ தேறி, அதுமுதல் கல்வியை விர்த்திசெய்யாமல் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் தாமே உபாத்தியாயராய் இருந்த ஒரு பெரியவர் 'எவரொருவர் பிரதிதினமும் வாசித்து வருகிறாரோ அவரே உபாத்திமைத் தொழிலுக்குத் தக்கவர். அவருடைய மனது நிலையுள்ளதாய் இருந்தால் அவரால் மற்றொரு மனதுக்கு அறிவைக் கொடுக்கமுடியாது. அது ஒரு குட்டையிலிருந்து நீர் குடிப்பதுபோலுமே ஒழிய ஊற்றிலிருந்து நீர் குடிப்பதுபோல் ஆகாது' என்று சொன்னார். என் அபிப்பிராயமும் அதுவே. மனதை விர்த்திசெய்வதற்கு உபாத்தியாயர்கள் எப்போதும் வாசித்துக்கொண்டே இருக்கவேண்டும். இதினால் அவர்கள் பரீக்ஷைக்கு வாசிக்கவேண்டும் என்பது என் கருத்து



அல்ல. பின் அவர்கள் வாசித்துப் புதிதான விஷயங்களை அறிய வேண்டும் என்பதே என் கருத்து. அவர்கள் வாசிக்கிற புஸ்தகங்கள் பள்ளிக்கூடப் பாட புஸ்தகங்களாக இல்லாமலும் அவைகளால் படிப்புக்கு நேரே சம்பந்தம் இல்லாமலும் இருந்தபோதிலும் உபாத்தியாயனிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் வாசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாய் உபாத்திமைத் தொழிலைச் செய்யலாகும்.

எலிமென்டரி பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் குழந்தைகளின் சுபாவத்தை அறியாமல் வெகு கஷ்டப்படுகிறார்கள். குழந்தையின் மனப்போக்கு இன்னது என்பதை அறியார்கள்; அவர்களின் மனம் எதில் போகாதோ அதில் போக்கவேண்டும் என்கிறார்கள். குழந்தையை எவ்வாறு நடத்தக்கூடுமோ அதற்கு நேர் விரோதமாய் நடத்துகிறார்கள். இதற்காக அவர்கள் மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்கவேண்டும் என்பதில்லை. சாதாரணமாய்க் குழந்தைகள் (1) வஸ்துக்களில் பிரியம் வைக்கின்றன; (2) எப்போதும் ஏதோ ஒன்றைச் செய்துகொண்டே இருக்கப்பார்க்கும்; (3) எப்போதும் நிலைவிட்டு மாறிக்கொண்டிருக்க ஆசைப்படுகின்றன என்ற மூன்று விஷயங்களை நன்றாய் அறிந்து நடப்பார்களானால் அதுவே போதும். அது போதனை முறைக்கும் மிகுந்த உதவியாய் இருக்கும்.

இவற்றையெல்லாம் பார்த்துச் சில உபாத்தியாயர்கள் நாங்கள் பூர்த்தியாய்ச் செய்யவேண்டும். எங்கள் வேலையை நன்றாய் யோசித்து அதை மிக்க ஜாக்கிரதையாய் ஆயத்தம்பண்ணவேண்டும். நாங்களும் எப்போதும் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். குழந்தைகளின் சுபாவத்திற்குத்தக்கபடி போதிக்கவேண்டும். இவைகளெல்லாம் வெகு கஷ்டமானவை என்று சொல்லலாம். ஆம், அது உண்மையேதான். ஆனால் கற்பிப்பது உலகத்திலுள்ள மேன்மையான தொழில்களில் ஒன்று. அப்பேர்ப்பட்ட வேலையைக் கஷ்டமில்லாமல் லேசில் செய்துவிட நினைப்பதெப்படி? பொதுவாய் நம்மில் நல்ல குணங்கள் உண்டாவதற்கு அஸ்திபாரம் கஷ்டவேலையே. அதினாலேயே இப்போது இந்த ஸ்திதிக்கு நாம் வந்திருக்கிறோம். கஷ்டமான வேலை செய்வதற்குச் சில நல்ல குணங்கள் தேவை. அவை, கவனிக்கும் சக்தி, முயற்சி, தன்னடக்கம், தன்னயமறுப்பு, நல்லொழுக்கம், திட்டம், மனோதைரியம் முதலியன. இந்த நல்ல குணங்களை நாம் அடிக்கடி அப்பியாசிப்பதினால் பழக்கங்கள் ஆகின்றன. பிறகு அப்பழக்கங்களால் சுபாவம் ஆகிறது. இதுவும் கஷ்டத்தால் தான் ஏற்படுகிறது. எதுவும் கஷ்டம் இன்றி உண்டாகாது. இவைகளையெல்லாம் யோசித்துப் பார்க்கும்போது 'கஷ்டவேலை இருக்கட்டும்' என்றே தீர்மானிப்போம். நமக்கு அது இருந்தே தீரவேண்டும்.

இனிப்பிள்ளைகளின்மீது உபாத்தியாயர்களுக்கு உள்ள அதிகாரத்தைப் பார்ப்போம். சில உபாத்தியாயர்கள் இந்த அதிகாரத்தின் மேன்மையைச் சரியாய்த் தெரிந்து நடப்பதில்லை. அதைக் காண எனக்கு வெகு வருத்தம் உண்டாகிறது. பாடசாலைக்கு நேரஞ்சென்று வருகிறதும், பாடங்களை ஆயத்தம்பண்ணுமலிருப்பதும், தம் வகுப்பை விட்டு வேறு உபாத்தியாயருடன் வீண்சம்பாஷணை செய்வதும் கிழிந்த அழுக்கான புஸ்தகத்தை வகுப்புக்குக் கொண்டுவருவதும், தம் பார்வையினல் பிள்ளைகளை அடக்காமல், பிள்ளைகளை முகத்துக்கு முகம் திரும்பி நிற்கச் செய்தலும் ஆகிய இவை அந்த அதிகாரம் உபாத்தியாயருக்கு இல்லை என்று காட்டுவனபோல் இருக்கின்றன. நாம் என்ன சொல்லுகிறோமோ அதா அதிகாரம்? அல்ல! நாம் எவ்வாறு இருக்கிறோமோ அதுதான் அதிகாரம். பிள்ளைகள் நாம் எப்படி இருக்கிறோம் என்பதைப் பார்த்து அதின்படி நடப்பவர்கள். நாம் சொல்வதைக் கேட்டு அதின்படி நடப்பார்கள். பிள்ளைகள் யோக்கியமானவர்களாய் இருக்கவேண்டுமானல் நாம் ஜாக்கிரதையாயும் கஷ்டப்படுபவர்களாயும் இருக்கவேண்டியது அவசியம். பார்வையினல் அவர்களை ஆளவேண்டும். இப்படியில்லாமல் நாம் கவலையீனமாயும் சோம்பலாயும் இருந்தால் பிள்ளைகள் அயோக்கியர்கள் ஆவார்கள். ஒருவர் எழுதுவதைப் பார்த்து மற்றொருவர் எழுதுவார். அவர்களை நாமே இப்படிச் செய்யத் தூண்டுபவர்கள்போலாகிறோம். சரியான காரியத்தைச் செய்ய அவர்களுக்கு நாம் உதவிசெய்யவேண்டும்; அவர்களுக்கு அந்தச் சக்தி இல்லை. அவர்கள் தப்பான காரியத்தைச் செய்யப்போகும்முன் 'ஐயோ! உபாத்தியாயர் கண்டுபிடித்துவிடுவார்' என்ற அறிவு ஏற்படவேண்டும். இதினல் அவர்கள் சரியான காரியத்தைப் பலதடவை செய்தால் அதுவே அவர்களுக்குப் பழக்கமாய் விடுகிறது. அதிலே அவர்களுக்கு ஆசையும் ஆகும். அது அவர்களுக்கு நல்லதைச் செய்ய வலிமை தரும்.

இந்தவிதமாய்ச் செய்வதைவிட்டுப் பிள்ளைகளை 'முகத்துக்கு முகம் திருப்புங்கள்' என்பது உபாத்தியாயரிடம் ஆளும் திறமை இன்மையையோ அல்லது சோம்பலையோ அசிரத்தையையோ காண்பிக்கிறது. சரியான வழியில் காரியத்தைச் செய்யும் நல்ல வழியை அறியாத்தனத்தாலேயே உபாத்தியாயர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. மேலும் அது 'பிள்ளைகளே! நீங்கள் எல்லாரும் மோசக்காரர்கள். அதினல்தான் உங்களை இப்படி நிறுத்துகிறேன். அப்போதுதான் நீங்கள் மோசம்செய்யாமலிருப்பீர்கள்' என்று சொல்வதுபோல் காண்கிறது. இப்படியில்லாமல் 'நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் மோசம்செய்வதற்குத்தக்க சந்தர்ப்பம்



கொடுக்கிறேன். ஆனல் அதை உபயோகப்படுத்தாமல் இருக்க நீங்கள் தைரியமுள்ளவர்களாயிருப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன். உங்களில் சிலர் உங்களை ஆளாமல் மோசம்செய்வீர்கள். அப்போது நானும் உங்களை மோசக்காரர்களைப்போல நடத்துவேன்' என்று சொல்வது எவ்வளவு மேன்மையானது. பிள்ளைகளும் வெகு சீக்கிரத்தில் ஒருவர் செய்வதை மற்றவர் பார்த்து எழுதும் கெட்ட வழக்கத்தை விட்டுவிடுவார்கள்.

எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயர்களில் எத்தனைபேர் சரியான காலத்தில் பிள்ளைகள் நல்ல நடத்தையை விருத்திசெய்யும்படி தெளிவான கருத்துக்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாடம் கற்பிக்க நாம் ஜாக்கிரதையாய் ஆயத்தம் செய்யவேண்டியதுபோலவே பிள்ளைகளின் நல்ல நடத்தைப் பழக்கத்திலும் ஜாக்கிரதையாய் ஆயத்தம் பண்ணித் தெளிவான கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். இது வெகு கஷ்டமானது. பாடத்தை எழுதலாம். இதற்கு எழுதவேண்டியது ஒன்றும் இல்லை. வாசிக்கவேண்டியதும் இல்லை. பின் ஆயத்தம் என்பது என்ன? பிள்ளைகள் எப்படி இருக்கவும் செய்யவும் வேண்டுமோ அப்படியே நாமும் இருக்கவும் செய்யவும் வேண்டும். ஆனல் பிள்ளைகள் என்ன சொல்லவேண்டுமென்று விரும்புகிறோமோ என்பதை நான் சொல்வதில்லை பாருங்கள். பாடசாலையில் சரியான நடத்தையைப்பற்றிப் பேசுவதினல்மாத்திரம் அதிக பிரயோஜனம் இராது. அதினல்தான் ஒரு கதையின் நீதியை மனப்பாடம் செய்யும்படி வகுப்புக்குச் சொல்லிக்கொடுத்தல் எனக்கு இஷ்டம் இல்லை. அவர்களுக்கு நல்ல கதைகளைச் சொல்லி, அவைகளை அவர்கள் நன்ருய் அறிந்து, அவைகளைப்பற்றிப் பேசவும் அவ்வாறே நடக்கவும் செய்யுங்கள். பிள்ளைகளே கதையின் நீதியைத் தெரிந்துகொள்ளக்கூடும். சரியான முடிவு அவர்களுக்குத் தோன்றும். இவ்விஷயத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. பிள்ளைகள் கண்டிப்பான நியாயாதிபதிகள். அவர்கள் எப்போதும் கெட்டவர்களைத் தண்டிக்கவேண்டும் என்றும் நல்லவர்களுக்கு வெகுமதி கொடுக்கவேண்டும் என்றும் சொல்லுகிருர்கள். ஒவ்வொரு செய்கையின் பலனையும் அவர்கள் நிச்சயமாய்க் காண்கிருர்கள்.

நான் போகிற பாடசாலையில் உபாத்தியாயர்கள், சிலவேளை பிள்ளைகளுக்குச் சங்கதிகளை நினைப்பூட்டுவதையாவது, கணக்குப் போடுவதில் உதவி செய்வதையாவது, பிள்ளைகள் செய்த வேலைக்குப் பதிலாகத் தாங்கள் செய்த வேலையை மாற்றுவதையாவது காண்கிறேன். 'மோசம் செய்யாதிருங்கள், பொய் பேசாதிருங்கள்' என்கிற இப்பேர்ப்பட்ட நீதிகளை உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் மனப்பாடம்

பண்ணி வெகு சீக்கிரமாய்ச் சொல்லுகிறார்கள். ஆனால் பிள்ளைகள், கதைகளின் முடிவில் கற்பிக்கப்பட்டு நாற்றுக்கணக்காய் ஒப்புவிக்கப் படுகிற நீதிகளைவிட உபாத்தியாயர்களிடம் ஒரே தடவையில் அவர்கள் காண்கிற அயோக்கியதையை அநுசரிக்கிறார்கள்.

உபாத்தியாயர்களே! படிப்பின் நோக்கம் சரியான நடத்தை உண்டு பண்ணுவதும் பெண்களுக்கு யோக்கியதை, பயமின்மை, உண்மை, சுவாதீனம், ஊக்கம் முதலியவைகள் இருக்கும்படி செய்வதும் என்று நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களுக்கு இந்த நல்ல குணங்கள் பிடிபடுவதற்கு நீங்களே அக்குணங்கள் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஆம் செப்டெம்பர்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | 1 இரா. 13. | 11—19 | 11 | தி. | நட. 3. | 1—10 | 21 | வி. | நட. 7. | 1—16 |
| 2 | ச. | ,, 13. | 20—25 | 12 | செ. | ,, 3. | 11—18 | 22 | வெ. | ,, 7. | 17—36 |
| 3 | ஞா. | ,, 13. | 26—34 | 13 | பு. | ,, 3. | 19—26 | 23 | ச. | ,, 7. | 37—60 |
| 4 | தி. | நட. 1. | 1— 8 | 14 | வி. | ,, 4. | 1—12 | 24 | ஞா. | ,, 8. | 1— 8 |
| 5 | செ. | ,, 1. | 9—14 | 15 | வெ. | ,, 4. | 13—22 | 25 | தி. | ,, 8. | 9—13 |
| 6 | பு. | ,, 1. | 15—26 | 16 | ச. | ,, 4. | 23—37 | 26 | செ. | ,, 8. | 14—25 |
| 7 | வி. | ,, 2. | 1—13 | 17 | ஞா. | ,, 5. | 1—11 | 27 | பு. | ,, 8. | 26—40 |
| 8 | வெ. | ,, 2. | 14—24 | 18 | தி. | ,, 5. | 12—27 | 28 | வி. | ,, 9. | 1— 9 |
| 9 | ச. | ,, 2. | 25—36 | 19 | செ. | ,, 5. | 28—42 | 29 | வெ. | ,, 9. | 10—22 |
| 10 | ஞா. | ,, 2. | 37—47 | 20 | பு. | ,, 6. | | 30 | ச. | ,, 9. | 23—35 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

OFFICE ... 12 OCT 1911 ... MADRAS.

மாதர் போதினி

No. 166 அக்டோபர் 1911 No. 10

## VICTORIA THE QUEEN EMPRESS *(Cont.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(தொடர்ச்சி)

பியற்றிஸ் பெருமாட்டி. இந்த மாது சிரோமணிதான் காருண்ய சக்கரவர்த்தினி அவர்களின் கடைசிக் குமாரத்தி. அவர்களுடைய நாயகனுக்கு தேகவியோகமாகும்போது இந்தக் குமாரத்தி மிகவும் சிறு பெண்ணாயிருந்தார்கள். ஆதலால் தாயார் துக்கங்கொண்டிருக்கும் போது அவர்களுடைய மடியில் ஏறி அவர்களை முத்தஞ்செய்து அவர்கள் தொப்பியைப் பிடித்து: 'இது என் அம்மாவுடைய துக்கத் தொப்பி' என்று மழலைப் பேச்சிலே சொல்லுவார்கள். அது தாயாருடைய துயராக்கினியைத் தண்ணீர்விட்டுத் தணிப்பதற்குச் சமானமாயிருந்தது. துன்பகாலத்திலே குழந்தைகளுடைய பார்வையும் புன்னகையும் பேச்சும் தேவதூதர்கள் கொடுக்கிற இன்பத்திற்கு இணையாயிருக்கின்றன.

பியற்றிஸ் பெருமாட்டி குழந்தைப் பருவம்முதல் தாயார் பரலோகஞ் செல்லும்வரையும் அவர்களைவிட்டுப் பிரியாதிருந்தார்கள். 1885-ம் ஆம் அவர்களுக்கும் ஜர்மனியாவிலுள்ள பாட்டன்பர்க் பிரபு என்னும் ஹென்ரிக்கும் மணம்முடிந்தது. சக்கரவர்த்தினியார் இந்தக் கடைசி மகளையும் மருமகனையும் தங்களுக்கு ஆறுதலாகத் தங்கள் அரமனையிலேயே வைத்திருந்தார்கள். ஆனால் ஹென்ரி பிரபு 1895-ம் ஆம் மேல்ஆபிரிக்காவிலே நடந்த ஒரு யுத்தத்துக்குப் போய்த் திரும்பி வரும்போது காட்டிலுள்ள விஷக்காய்ச்சல் கண்டு 1896-ம் ஆம் ஜனவரிமீ 20உ இறந்துபோனார். இது விதவையான பியற்றிஸ் பெருமாட்டிக்கு எவ்வளவு துக்கமோ அவ்வளவு துக்கம் அவர்கள் தாயாருக்கும் இருந்தது. தங்கள் அன்பான கடைசிக் குமாரத்தி இல்லற சந்தோஷங்களைத் தங்கள் சொந்த அரமனையிலே

அனுபவித்துத் தங்கள் வயோதிப காலத்தில் தங்களுக்கு அதிக ஆறுதலாயிருப்பார்கள் என்றெண்ணியிருந்த எண்ணமானது இப்படி வியர்த்தமாய்ப் போனபடியால் அவர்கள் வெகுவாய் மனம் வாடி மெலிந்து சோர்ந்துபோனபோதிலும், விதவையான தங்கள் ராஜ குமாரத்தி தங்கள் ஜீவகாலம் முழுதும் தங்களோடிருக்கும் சந்தோஷத்தை அடைந்து ஆனந்தித்தார்கள்.



## யூபிலி காண்டம்

யூபிலி என்ற வார்த்தையானது ஐம்பதாம் வருஷ மகோற்சவம் என்று அர்த்தப்படும். 1887-ம் ௵ ஜூன் ௴ 21௳ சக்கரவர்த்தினி அவர்கள் தங்கள் ராஜ்யபாரத்தின் ஐம்பதாம் வருஷத்தை முடித்தபடியால், அவர்களுக்கு யூபிலி மகோற்சவம் மகா கம்பீரமும் மகிமையுமாய் நடந்தேறினது. அங்கிலேய அரசருக்குள் அவர்களைத்தவிர மூன்று பேர்மாத்திரம் தங்கள் யூபிலி மகோற்சவம்வரையும் அரசு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மூன்றாம் ஹென்ரி, மூன்றாம் எட்வர்ட், மூன்றாம் ஜியார்ஜ் என்னும் மன்னராம். ஆனால் அவர்களுடைய யூபிலி மகோற்சவங்கள் சக்கரவர்த்தினியின் மகோற்சவத்தைப்போல அவ்வளவு மகிமையும் மகத்துவமுமாயிருக்கவில்லை.

சக்கரவர்த்தினி அவர்களின் யூபிலி மகோற்சவம்.

அந்த மகா தினத்திலே ஸ்தோத்திர ஆராதனை செய்யும்படி சக்கரவர்த்தினி அவர்களும் அவர்கள் ராஜபிள்ளைகளும் அநேக அரசர் பிரபுக்களும் அலங்காரமான ராணுவப் பரிவாரங்கள் புடைசூழப், பக்கிங்ஹாம் அரமனையிலிருந்து புறப்பட்டு, உவெஸ்ட் மினிஸ்தர் ஆபே என்ற மகா ஆலயத்திற்குப் போனார்கள். ஆ! ஐம்பது வருஷங்களுக்குமுன்னே அவர்கள் அந்த ஆலயத்திற்குப்



பட்டாபிஷேகத்திற்குப்போன தினத்திற்கும் இந்தத் தினத்திற்குமிடையிலே எவ்வளவோ மாறுதல்கள் உண்டாயின. 'காலஞ் செய்வது கோலஞ் செய்யாது' என்ற மூதுரை உண்மை. அந்தக் காலத்திலே கறுமை பூண்டிருந்த அவர்கள் கூந்தல் இப்போது வெண்மை பூண்டிருந்தது; அந்தக் காலத்திலே செந்தாமரை மொக்குப்போலச் சிறப்பும் செழிப்பும் பொருந்தியிருந்த அவர்கள் முகம் இப்போது பலவித துக்கங்களினாலும் உத்தரவாதங்களினாலும் வாடி வதங்கியிருந்தது; அப்போது விவாகந்தானு மில்லாதிருந்த அவர்கள் இப்போது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் உடையவர்களாயிருந்தார்கள்; அப்போது பல விர்த்திகளில்லாதிருந்த அவர்கள் ராஜ்யமானது இப்போது ஆச்சரியமான விர்த்திகள், புதிதாய்க் கண்டுபிடித்த பல சூத்திரங்கள், வளர்ந்தோங்கின சாஸ்திராப்பியாசங்கள் முதலியவைகளால் சோபித்து விளங்கினது.

மேலும் அவர்களுடைய ராஜ்யபார வெற்றிக்குடையானது உலகத்தின் பல திசைகளிலும் பரவியிருந்தபடியால் பற்பல கண்டங்களிலுள்ள பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனருமான பலர் அந்த மகோற்சவத்திற்கு வந்திருந்தார்கள். நமது இந்து தேசத்திலுள்ள ஹோல்க்கார் மகாராஜா, கூச்பேகார் மகாராஜா முதலான பல மன்னர்களும் அதற்குப் போயிருந்தார்கள். மேலும் சக்கரவர்த்தினி அவர்கள் பவனி போகும்போது இந்துக்களான போர்வீரர்கள் அவர்கள் முன்னே அலங்காரமான உடைதரித்துச் சென்றது அங்கிலேயர் யாவருக்கும் அதிகமாய் ஆனந்தத்தை உண்டாக்கத்தக்கதாய் இருந்தது.

தேவாலயத்திலே சக்கரவர்த்தினி பட்டாபிஷேக சிங்காசனத்தில் அமர்ந்திருக்க, அவர்கள் பிள்ளைகள் அவர்களைச் சுற்றிலும் சந்திரனைச் சூழ்ந்த நட்சத்திரங்களைப்போல் இலங்க, நூற்றுக்கணக்கான ராஜாக்களும் ராஜமகிஷிகளும், பிரபுக்களும் பெருமாட்டிகளும் ஆலயத்தின் முன்பக்கத்திலே வெகு அலங்காரமும் அமைதியுமாய் உட்கார்ந்திருக்க, பற்பலவகையான ஜனங்களால் ஆலயம் நிரம்பிப் பிரகாசிக்க, ஆனந்தமான கீதவாத்தியங்கள் அதிமாதுரியமாய் முழங்க, காந்தர்புரி சிரேஷ்ட அத்தியட்சர் ஸ்தோத்திர ஆராதனை செய்து முடித்தார். பிற்பாடு சக்கரவர்த்தினி அவர்கள் ராஜ பரிவாரத்துடன் அரமனை சென்றார்கள். அன்று லண்டன்மா நகரை அலங்கரித்திருந்த அலங்காரத்தை ஒருவராலும் விபரித்து முடியாது. ராஜபக்தியுள்ள அந்நகரத்தார் பற்பலவிதமான விதானங்களினாலும் கொடிகளினாலும் தீபாலங்காரங்களினாலும் இது மண்ணுலகமோ விண்ணுலகமோ என்று சமுசயிக்கத்தக்கவிதமாய்த் தங்கள் நகரத்தைச் சிறப்பித்திருந்தார்கள்.

அந்தத் தினத்தில் நமது இந்து தேசத்திலும் நமது சக்கரவர்த்தினி அவர்களின் ஐம்பதாம் வருஷ மகோற்சவம் அதிக ராஜபக்தியோ

டும் கண்ணியத்தோடும் நடந்தேறினது. அந்த மகா தினத்தை நினைவுகூரும்பொருட்டு அன்று அஸ்திபாரம் போட்ட விக்டோரியா ஜூபிலி ஆஸ்பத்திரிகளும், அன்னசாலைகளும், வாசிப்பு மண்டபங்களும், கல்விச்சாலைகளும், மற்றும் தர்ம மண்டபங்களும் இத்தனை அத்தனையென்று எண்ணமுடியாது. ஓ! நமது சக்கரவர்த்தினி நம்மைத் தங்கள் குடிகளைப்போலல்ல தங்கள் பிள்ளைகளைப்போல நேசித்தார்கள்; நாம் அவர்களை நம்முடைய சக்கரவர்த்தினியைப்போலல்ல மாதாவைப்போல நேசித்தோம்.

அவ்வுற்சவம் இந்தியாவிலும் நடந்தேறல்.

இந்த ஜூபிலி மகோற்சவத்திற்குப் பின் ராஜ குடும்பத்திலே முன்னே மொழிந்தபடி இரண்டு பெரிய ஆபத்துக்கள் உண்டாயின. அவைகள்: அவர்கள் பேரனும் ஏழாம் எட்வர்ட் மகாராஜாவின் பட்டத்துக் குமாரனுமாகிய கிளாரன்ஸ் பிரபுவின் அகால மரணமும், அவர்கள் இளைய குமாரத்தியாகிய பியற்றிஸ் பெருமாட்டியின் பர்த்தாவாகிய பாட்டன்பர்க் பிரபுவின் பெருந்துயர மரணமுமேயாம்.

அவ்வுற்சவத்திற்குப் பின் நேர்ந்த துன்பங்கள்.

சக்கரவர்த்தினி அவர்கள் தங்கள் ஆளுகையின் ஐம்பதாம் வருஷ ஜூபிலி மகோற்சவத்தை மட்டுமல்ல, அறுபதாம் வருஷ மகோற்சவத்தையும் கண்டு களிகூர்ந்தார்கள். அந்த மகோற்சவத்திற்கு டயமண்ட் ஜூபிலி அதாவது வைரமணி ஜூபிலி மகோற்சவம் என்று பெயர். இந்தப் பேரானந்த தினம் 1897-ம் ௵ ஜூன் ௴ 22௳ வந்தது. அதினால் அவர்கள் இங்கிலாந்திலுள்ள எல்லா ராஜாக்களையும் ராணிகளையும்விட அதிக காலம் அரசுபுரிந்த ராஜமகிஷியானார்கள். அவர்கள் பாட்டனாராகிய மூன்றாம் ஜியார்ஜ் அரசன் 59 வருஷ மாத்திரம் ஆளுகை செய்தார். அதிலும் பத்து வருஷ காலம் ராஜ்ய பார விஷயங்களைக் கவனிக்கக்கூடாதபடி பலவீனராயிருந்தார். சக்கரவர்த்தினி இந்த மகோற்சவ தினத்தன்று ஸ்தோத்திர ஆராதனை செய்யும்படி உவெஸ்ற் மினிஸ்தர் ஆலயத்திற்கல்ல, செயின்ட் பவுல் ஆலயத்திற்குப் போயிருந்தார்கள். அந்த நாள் மழை மந்தாரமில்லாத கோடைகால குதூகல தினமாயிருந்தபடியால் பவனிகள் வெகு அலங்காரமாய்ச் சென்றன. பவனிபோனவர்கள் பிரித்தானிய பிரபுக்களும் அயல்தேச ராஜாக்களும் குடிஸ்தாபன மந்திரிமாரும் பிரித்தானிய சேனைகளும் இந்திய சேனைகளுமாம். இதற்கு நிகரான பவனி இங்கிலாந்தில் ஒருபோதும் இருந்ததில்லையாம். அன்று செயின்ட் பவுல் ஆலயத்தில் பண்ணின ஸ்தோத்திர ஆராதனையை நினைவுகூரும்படி

அறுபதாம் வருஷ ஜூபிலி மகோற்சவம்.



அந்த ஆலயத்தின்மேல் கதவுக்குமுன் பின்வரும் வாசகம் தீட்டப்பட்டிருக்கிறது:

‘விக்டோரியா ராணியவர்கள் தங்கள் ஆளுகையின் அறுபதாம்
வருஷத்தைக் கண்டபடியால் அவர்கள் இங்கே சர்வ
வல்லமையுள்ள கடவுளானவருக்கு நன்றியறிதல்
ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்.’
கி. பி. 1897-ம் ௵ ஜூன் ௴ 22௳.

## SOME SAYINGS OF MUHAMMAD

## முஹம்மது தீர்க்கதரிசியின் ஞானோபதேசங்களிற் சில

வேதனையைப்போல வெகுமதி; அதாவது ஒருவன் எத்தனைக்கெத்தனை துர் அதிர்ஷ்டனாயும் தௌர்பாக்கியனாயும் இருக்கிறானோ அத்தனைக்கத்தனை அவனுக்கு அதிகமாயும் சம்பூரணமாயும் வெகுமதி யளிக்கப்படும். தேவன் நம்மை நேசித்தால் அவர் நம்மைத் தண்டிக்கிறார்.

நம்முடைய நம்பிக்கையைக் கெடுப்பது எது என்பது உங்களுக்குத் தெரியாதா? பிரசங்கிகளின் பிழைகள், வஞ்சகர்களின் வழக்குகள், அதிகாரிகளின் வியாக்கியானங்கள் ஆகிய இவைகள் நம்மைச் சரியான வழியிலிருந்து இழுத்துக்கொண்டுபோய் விடுகின்றன.

ஆஸ்திகன் ஒவ்வொருவனும் ஞானத்தை அடைய முயலுதல் தேவனுடைய சித்தம்.

கூடுமானவரையில் மௌனமாயிருத்தல், அதோடு மனமகிழ்ச்சியாயிருத்தல் ஆகிய இவற்றைவிட நல்லது உண்டா?

விரதமிருத்தல், பிச்சையிடல், பிரார்த்தித்தல் ஆகிய இவற்றிலும் மேலான ஒன்றை உங்களுக்குச் சொல்லட்டுமா? தன் தோழனோடு சிநேகம் பண்ணும் சமாதானம் அது. பகையும் வெறுப்பும் தேவன் தரும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் திருடிக்கொள்ளும் திருடர்கள்.

‘இந்த உலகத்தில் எனக்கு ஆகவேண்டியதென்ன? இங்கே ஒரு பிரயாணியைப்போல் இருக்கிறேன்; மரத்தடியில் தங்கியிருக்கிறேன், உடனே புறப்பட்டுப் போய்விடுவேன்’ என்று ஒருநாள் முஹம்மது சொன்னார்.

உன்னிலும் அழகானவன் அல்லது பணக்காரன் எவனாவது எதிர்ப்பட்டால், அப்போது உன்னிலும் மிகக் குறைந்த பாக்கியமுள்ளவர்களை நினைத்துக்கொள்.

சிற்றாறு கடல் சேர்வது வேண்டுமொனால் நிச்சயமில்லாததாகலாம். ஆனால் என்னை நேசிக்கிறவனையோ தரித்திரம் நிச்சயமாய்ச் சென்றடைகிறது.

'நான் எவனை நேசிக்கிறேனோ அவனுக்கு நானே கண், காது, கை, கால் ஆகிய இவை ஆகிறேன்' என்று கடவுள் சொன்னார்.

## A PLEA FOR TEMPERANCE TO EDUCATED WOMEN

## கல்வியறிவாற் சிறந்த மாதருக்கு மதுவிலக்கைப்பற்றியதொரு மனு

மதுபானத்தால் வருந் தீங்குகளை அறியீர்களா? மதுபானஞ் செய்பவர்கள் தமக்கும் பிறருக்குந் துன்பம் விளைவிக்கிறதில்லையா? மதுபானத்தால் வரும் பலன் எண்ணுதற்கரிய துன்பமும் நஷ்டமுமே யொழிய வேறன்று. ஐயோ! இதனை யறியாது எத்தனையோ பேர் அப்படிப்பட்ட துர்வழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கின்றனர். அது அவர்கட்கு ஓர் உல்லாசமாயிருக்கிறது. சிறிதுநேரம் அது தேகத்தில் ஒருவித உற்சாகத்தை உண்டுபண்ணுவதால், அதனை விரும்பி தங்கள் ஆன்மா, சரீரமனைத்தையும் கேடாக்கிக்கொள்ளுகின்றனர். அந்தோ! எத்தனையோ உயர்குலத்தோரது இல்லத்தில் இச்சண்டாளன் புகுந்து, இன்பத்தைத் துன்பமாக மாற்றுகிறான். எத்தனையோ தெய்வலோகம்போன்ற மனைகளை ஒரு இமைப்பொழுதிலே நரகமாக்கிவிடுகின்றான்! இப்பிசாசை மேற்கொள்ளுதல் மானிடருக்கு அரியதா? அன்று! அன்று! ஸ்திரமான மனமுடையோர் யாவரும் போராடி ஜயமடையலாம். கல்வி புகட்டப்படாத அறிவிலிகள் மதுபான இருளைப் பற்றிக்கொண்டால், கலையுணர்ந்த சீமாட்டிகளே! நீவிரும் கண்களை மூடிக்கொள்ளுதல் தகுதியாமோ? உங்கள் சுய அநுபவத்தினாலேயே மதுபானத்தினால் வருந் தீமைகளைக் கண்டுணர்ந்ததில்லையோ?

திராட்சாசம், பிராந்தி முதலிய லாகிரிப் பதார்த்தங்களை மருந்தாகச் சிறிது உபயோகித்தால் பாதகமில்லையென்று அநேகர் சொல்வதுண்டு. ஆரம்பத்தில் ஏதோ ஒரு வியாதியைக் கண்டிக்கும்பொருட்டுச் சிறிது அருந்தி, பிறகு நாள் செல்லச் செல்ல அதில் ஆசை வைத்து நாள்தோறும் குடிக்கத் தலைப்படுவோரும் உண்டு. மதுபானம் பண்ணுவதற்கு இதுவும் ஒரு சிறந்த சாக்குத்தான்! காரியத்தைக் கண்ணோக்குங்கால் தேகத்திற்குக் கெடுதியை உண்டாக்குமேயன்றி யா



தொரு சுகத்தையும் விளைவிக்கத்தக்கதன்று. ஏதோ சமய சாந்திசெய்வதுபோல் தோன்றியபோதிலும், நாளாவட்டத்தில் தேகபலத்திற்கு முக்கிய ஆதாரமான நரம்புகளைத் தளர்ச்சியடையச் செய்கிறது. ஆகவே, பலவிதத்திலும் தேகம் பலவீனப்பட்டு அநேக கொடிய நோய்களுக்கு இலக்காகிறது. வைத்திய சாஸ்திரத்தில் நிபுணரான அநேகர் இதை வற்புறுத்திக் கூறுகின்றனர். 'அடிக்கடி பிராந்தி சாப்பிடுவதுதான் என் தேக சௌக்கியத்திற்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறது; அதின்றி நான் சுகத்தோடிருப்பது கூடாத காரியம்' என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இவர்கள் கொஞ்சக்காலம் இப்பழக்கத்தை நிறுத்திப் பார்த்தால் அதின் அரும்பிரயோஜனம் நன்கு விளங்கும். லாகிரி வஸ்துக்களைச் சாப்பிடாமல் நிறுத்திவிட்டது ஒரு பெரும் பாக்கியமென்று தாங்களே சாட்சி பகர்வார்கள்.

அன்றியும், மிதமிஞ்சி மதுபானம்பண்ணி அதினாலேயே இறந்தவர்களை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். பெரும்பான்மையாய்க் குடிகாரர் நற்குணசாலிகளாயிருப்பதில்லை. குடியினால் சன்மார்க்க நெறி தவறித் துன்மார்க்க ஜீவனம்பண்ணுவது சகஜம். அவர்கள் நடக்கையைக் கவனிக்கும் அயலகத்தார் அவர்களை அருவருக்க நேரிடுகிறது. எவ்வளவு பணக்காரனாயிருந்தபோதிலும், கல்வியில் எவ்வளவு நிபுணனாயிருந்தபோதிலும், ஒருவன் குடிகாரனாயிருந்தால் அவனை மதிப்பவர் யாவர்? பிறர் அவனை இழிவாகத்தான் நடத்துவர். அமைதலான ஜீவனம்பண்ணுவதற்கு மதுபானம் ஒரு கொடிய இடையூறாகும். ஒரு வீட்டில் எஜமான் குடிகாரனாயிருந்தால் ஒவ்வொருநாளும் எஜமாட்டி எவ்வளவாய் நடுங்கிக்கொண்டிருப்பாள்! குடிவெறியினால் அவன் பிதற்றிக் கூக்குரலிடுகையில் அவள் மனம் என்னமாய் எரியும்! அப்படிப்பட்ட புருஷனைத் திருத்த முடியாதோ? தக்க சிரமம் எடுத்துக்கொண்டால் நாளடைவில் அவள் காரியசித்தி பெறுவாள். தன்னாலியன்ற அளவு பொறுமையோடே அவனை அத்தீமையினின்று விடுதலையாக்கும்படி பிரயாசப்படவேண்டும். 'நான் என்ன செய்வேன்! அவர் அவ்வழக்கத்திற்குட்பட்டவர்' என்று வீண் சாக்குப்போக்குச் சொல்ல ஏதுவில்லை. அத்துர்ப்பழக்கத்தை அவன் விட்டுவிடச் செய்வதே அவள் பொறுப்பு. புருஷனும் பிள்ளைகளும் இத்துர்வழக்கத்தில் விழாதபடி எச்சரிக்கையாயிருப்பது மனைவியின் கடமை. தாய்மாருடைய நற்போதனையினாலும், நன்மாதிரியினாலும் பிள்ளைகள் எவ்வளவு குணசாலிகளாய் வளருகின்றனர்!

எத்தனையோ வீடுகளில் புருஷன்மார் பக்தியுள்ள மனைவியின் ஏவுதலால் புருஷோத்தமர்களாய் இலங்குகின்றனர்! கல்வியென்னும் மெய்ப்பூணைத் தரித்த மாது சிரோமணிகளே! இதனை ஒருபோதும்

உணர்ந்ததில்லையோ? உங்கள் வீடுகளில் இவ்விதக் கெடுதிக்கு அடிமைப்பட்டவர் யாராவது இருந்தால் நீங்கள் அவரோடு போராடி அவரைத் திருப்ப முயன்றிருக்கிறீர்களா? இது உங்கள்மேல் விழுந்த கடமை; அற்பமானதன்று. உங்கள் முயற்சியினாலேயே ஒரு ஜாதி முழுமையும் சீர்திருந்துவது சாத்தியம். உங்கள் வீடுகளிலே மாத்திரமல்ல; புறம்பேயும் பிறர் உங்கள் நன்மாதிரியினாலே குடி முதலிய கேடான வழியிற் செல்லாதபடி எச்சரிக்கையாயிருக்கப் பாருங்கள். கல்வியறிவுடைய நீங்களே இதற்கு மிகவும் அனுகூலமாயிருப்பீர்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஒவ்வொரு ஸ்திரீயும் இவ்விஷயத்தில் தன் தன் கடமையை நிறைவேற்றினால் அரும்பயன் விளையுமென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. ஆதலின், மாது சிரோமணிகளே! இதனை அலட்சியஞ் செய்யாது, நீங்கள் உலகத்திற்கு விளைவிக்கக்கூடிய பெரும்பாக்கியத்தைக் கண்ணுற்று, இதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பீர்களாக.

## A STRANGE WALL PAPER

## ஆச்சரியமான சுவர்க் காகிதம்

ஜப்பான் தேசத்திலே சுவருக்கு வெள்ளையடியாமல் அழகான வர்ணக்காகிதங்களை ஒட்டி அலங்காரம் செய்வார்கள். அந்தத் தேசத்திலே ஒரு பலகாரக்காரி இருந்தாள். அவள் ஒரு எளிய பெண். ஒரு நாள் வேலையாய் வெளியே போகுமுன் தன் கடையை அவள் பார்த்து 'என்னுடைய சுவர்க் காகிதம் அழுக்காய்ப்போய்விட்டது. சீக்கிரத்தில் வேறே காகிதம் போடவேண்டுமென்று யோசித்துக்கொண்டே போனாள். அப்போது ஒரு புஸ்தகக்கடைக்கு அருகே ஒரு குவியல் காகிதம் கொட்டியிருக்கிறதைக் கண்டு 'ஆகா, இதுதான் என் கடைக்கேற்ற காகிதம்; இவைகளை எடுத்துக்கொண்டுபோய் என் சுவரில் ஒட்டிவிடுவேன். வேறே பணச்செலவு செய்யவேண்டிய அவசரமுமில்லை' என்று சொல்லி, அவைகளை எடுத்துப் பத்திரமாய் ஒரு கூடையில் வைத்து வீட்டிற்குக் கொண்டுபோனாள். அவைகள் அச்சிட்ட ஒரு புஸ்தகத்தின் தாள்கள். அதிக சுத்தமாயுமிருந்தன. அவள் தன்னுடைய வீட்டிற்கு வந்தபிற்பாடு தன்னுடைய சுவரில் ஒட்டி அலங்காரம் செய்தாள். எல்லாம் முடிந்தபிற்பாடு அதைப் பார்த்து 'நம்முடைய வேலை வீணாய்ப் போகவில்லை, பார்க்கப் பார்க்க வெகு அழகாயிருக்கிறதே' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டாள். அது என்ன புஸ்தகத்தின் தாள்கள் என்று எண்ணுகிறீர்கள்? தேவனுடைய அதி



சயமான அன்பைப்பற்றிச் சொல்லும் விலைமதியாத வேதபுஸ்தகத்தின் தாள்கள்தான்.

ஒருநாள் அந்தப் பெண் வேலை ஒழிந்து உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, அவளுடைய பேரன் வந்து விளையாடிக்கொண்டிருந்தான். அவன் சுவரைப் பார்த்தவுடனே அந்த எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கினான். அவன் வாசிக்க வாசிக்க அந்தக் கடைக்காரி ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள். ஏனென்றால் அவன்



வாசித்தது அவள் ஒருநாளும் கேள்விப்படாத புது விசேஷமாயிருந்தது. இவள் அந்தக் காகிதங்களை வாசிக்கக் கேட்பதின்பேரில் அதிக பிரியம் உண்டானபடியால் தன் கடைக்கு வருவோர்களைக் கொஞ்சம் வாசிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பாள். ஒருநாள் ஒரு வாலிபன் அவளைப் பார்த்து 'அம்மா நீ கிறிஸ்தவளா என்று வினவினான். அவள் 'இல்லை ஐயா' என்று சொன்னாள். பிற்பாடு அவன் அவளை ஒரு கோவிலுக்குக் கூட்டிக்கொண்டுபோனான். அங்கே அவள் இந்த நல்ல விசேஷத்தை அதிகமாய்க் கற்றுக்கொண்டாள். கொஞ்சக்காலத்திற்குப்பின் அவள் குணப்பட்டு நல்ல கிறிஸ்தவளா

ளுள். இப்போது அவளுடைய சுவர்க் காகிதங்கள் ஆண்டவருடைய அன்பைப்பற்றிச் சொல்லுவதுமல்லாமல், அவளும் தன்னிடம் பலகாரம் வாங்க வருபவர்களுக்கு, பலகாரம் கொடுக்கிற காகிதப் பைக்குள் ஒரு சிறு சன்மார்க்கப் புஸ்தகமும் வைத்துக் கொடுக்கிறது வழக்கமாயிருக்கிறது.

## PROTECTIVE COLOURING

## தற்காப்பு நிறம்

இந்த லோகத்து ஜீவப்பிராணிகளில் ஊர்வன நகர்வன நீந்துவன முதலிய பலவகைகள் இருக்கின்றன. அவைகளில் ஒருவகையான அநேகம் மற்ற ஒரு வகையைத் தின்று ஜீவிக்கின்றன. ஆதலால் அவை தம்மைத்தாமே காத்துக்கொள்ளப் பல வழிகள் ஏற்பட்டிருந்தாலொழிய வெகுகாலம் இருக்கமுடியாது. அதற்காகச் சிலவற்றில் ஒருவிதமான துர்நாற்றம் வீசுகின்றன; இன்னும் சில விஷநீரை வெளியிடுகின்றன; மற்றும் அநேகம் நிறத்திலும் உருவத்திலும் பூக்களையும் இலைகளையும் மிகுதியாக ஒத்திருப்பதால் அப்பிராணிகளைத் தின்ன நாடிவரும் பறவை முதலியவற்றின் கண்ணுக்குப் புலப்படாமல் தப்பி ஜீவிக்கக்கூடியவையாயிருக்கின்றன.


அன்றைக்கு ஒருநாள் உலாவப்போனபோது வறண்ட இலைபோன்ற ஒன்றைக் கண்டேன். அதை நன்றாய் உற்றுப் பார்த்தபோது அதன் உண்மையான ரூபம் தெரியவந்தது. அதை 'தொட்டிச்சி' என்று சொல்லி நம் குழந்தைகள் 'கைவீசம்மா கைவீசு' என்று சொல்லிக்கொண்டு விளையாடுவார்கள். அது கல்மேல் ஒட்டிக்கொண்டு வெறும் வறண்ட இலையும் அதன் காம்புப்போல இருந்தது.

இரண்டு மூன்று நாளுக்கு அப்புறம் நாம் சிலந்திப்பூச்சிகளைப் பிடிக்கவேண்டிச் சில புதரின்கீழ் துணியை விரித்து ஒரு பெரிய கொம்பினால் அப்புதரை அடித்தோம். அப்போது காய்ந்த காம்புகளும், பச்சை இலையின் தண்டுகளும் ஏராளமாகத் துணியில் விழுந்தன. 'சீ! பிரயோஜனம் இல்லை' என்று நாம் சும்மாவிட்டபோது அந்தச் சிறு குச்சிகளும் பச்சைத் தண்டுகளும் உயிர்பெற்றாற்போலிருந்தது. கால் தலை கண் முதலியவெல்லாம் தோன்றின. காய்ந்துபோன காம்புகள் எல்லாம் பெண்பூச்சிகள்: பச்சை இலையின் தண்டுகள் ஆண்பூச்சிகள்.

ஒருநாள் நாம் ஒரு ஏரிக்கருகில் பசும்புல்லின்மேல் உலாவப்போனபோது ஒருவித வெட்டுக்கிளியைக் கண்டோம், அது சரியான புல்



போலவேயிருந்தது. அதன் உடம்பும் இறகும் இளம்புல்லைப்போல் சுற்றிலும் சிவப்பும், சுத்தமான பசுமையும் பொருந்தியிருந்தன. அதன் தலையோ புல்லின்பிஞ்சுபோலிருந்தது. அதன் கால்கள் புற்பூவின் மெல்லிய தண்டுகளைப்போலிருந்தன. அது புல்லின்மேல் அசையாமல் நிற்கும்போது பார்த்தால் அதற்கும் புல்லுக்கும் கொஞ்சமாகிலும் வித்தியாசம் இல்லை.




முன்னே சொன்ன தொட்டிச்சி காம்போடு கூடிய வறண்ட இலைபோல் இருந்து நம்மை மயக்கியது. இப்படி அங்கம் முழுவதுமே நம்மை ஏமாற்றக்கூடியதாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஏதோ ஒரு பாகம்மாத்திரம் அப்படி இருந்தாலும் இருக்கலாம். உதாரணமாக நான் கண்ட பச்சைநிறப் பல்லியைச் சொல்லலாம். அது நன்றாய் வளர்ந்த ஒரு செடியின் உச்சியில் இருந்த வறண்ட பழங்களில் தன் தலையைப் பத்திரமாய் வைத்துச் சொஸ்தமாய்ப் படுத்திருந்தது. அந்தப் பூவின் நிறத்திற்கும் அப்பல்லியின் பச்சை மஞ்சள் நிறங்கட்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் அது மேலே இருப்பது தோன்றாமல் இருந்தது. அறியாப் பூச்சிகள் பூவையும் பல்லியையும் பிரித்தறியாமல் பூவில் உள்ள தேனைக் குடிக்கலாம் என்று வெகு ஆவலுடன் போகும். அப்போது அந்த வஞ்சகப் பல்லியும் 'ஆ' என்று அதை வாயிற் போட்டுக்கொள்ளும். சரி, அந்தப் பல்லியின்மேல் ஒரு கல்லைப்போட அது முன் இருந்த பூவைவிட்டுப் பூவின் காம்புக்குப் போனது. அங்கே அதன் வாலுக்கும் அந்தக் காம்புக்கும் கொஞ்சமும் வித்தியாசம் இருக்கவில்லை. இப்பச்சைப் பல்லியின் உடல் இலையைப்போலவும், வால் புல்லைப்போலவும் இருக்கும். இந்தவித அமைப்பு அதற்கு வெகு சௌகரியமானது.

சிலோனில் ஒருவிதப் பூச்சி உண்டு. ஒரு சமயத்தில் அது பூவைப்போலவே இருக்கும். அது பூவின் காம்பில் தலைகீழாய்த் தொங்கிக்கொண்டே இருந்து பூவின் தேனைக் குடிக்க வரும் பூச்சிகளைத் தின்றுவிடும். இப்படி நிறவசதியுள்ள பிராணிகள் இந்தப் பிரபஞ்சத்தில் இத்

தனைதான் என்று சொல்லமுடியாது. உதாரணமாய், பச்சைப்பாம்பு, பச்சைநிறத் தவளை, பச்சைநிற இலைப்பூச்சி இவைகளைச் சொல்லலாம்.

இந்தத் தவளையைப் பார்த்தால் கற்பாறையைப் பார்த்தாற்போல் இல்லையா? இது பாறைமேல் இருந்தால் சாதாரணமாய்ப் பாறையையும் தவளையையும் பிரித்தறிய முடியாது. தவளைகள் தாம் இருக்கும் இடத்தின் நிறத்தையே தம் சொந்த நிறமாக்கிக்கொள்ளுகின்றன. கறுப்புமண் உள்ள இடத்தில் இருப்பன கறுப்புநிறம் அடையும், மணல் உள்ள இடத்தில் இருப்பன மணல்நிறம் அடையும்.



இந்தவிதமாகவே காடுகளில் வாசம்பண்ணும் பெரிய பிராணிகளும் மிருகங்களும் தம் உருவத்தினாலும் வர்ணத்தினாலும் நம்மை மயக்கலாம். முன் ஒருதரம் நம் மாதர்போதினியில் 'புலிக்கு வரியால் ஆவதென்ன,' 'பச்சைப்பாம்புக்கேன் அந்த நிறம்' என்று விஸ்தாரமாய் எழுதியிருக்கிறோம். இந்தவிதமான தற்காப்பு நிறம் ஒரு மிருகத்திற்குத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கும், தான் மறைந்திருந்து ஒரு பிராணியின்மேல் பாய்ந்து அதைக் கொன்று தின்பதற்கும் ஏதுவாகலாம். தென் அமெரிக்காவின் காடுகளிலே மரத்தில் வசிக்கும் மிருகம் ஒன்றுண்டு. (Sloth) அதன் ரோமத்தின்மேல் ஒருவிதமான பாசி படர்ந்து அதன் உடம்பு முழுவதையும் மூடுகிறது. இந்த மிருகம் ஒரு கொம்பின்மேல் உட்கார்ந்திருக்கும்போது மரத்தின் இலை பாசியைப்போலவே தோன்றுகிறது. இது வெகு மந்தமுள்ள சோம்பேறிப் பிராணி. ஆனபடியால் அது மற்றைப் பிராணிகளை இப்படி மயக்காவிட்டால் அதற்குப் பிழைக்கும் வழி ஏற்படாதுபோலும்.




# CLOCKS AND THE VALUE OF TIME

## கடிகாரமும் அதின் பிரயோஜனமும்

ஆதிகாலத்தில், கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னதாக, பற்பல தேசத்தார் வெவ்வேறுவிதமாய்க் காலங்களையும் நேரத்தையும் கணித்துவந்தார்கள்.

நமது இந்திய தேசத்தவர்கள் சூரியோதயம், சூரியாஸ்தமனம், சுக்கிலபட்சம், கிருஷ்ணபட்சம் என்பவைகளைக்கொண்டு காலத்தைக் கணக்கிட்டார்கள். நாளதுவரையில் நம்முடைய நாட்கள் நட்சத்திரங்களுடைய பேரால் அழைக்கப்படுவது நமக்குத் தெரியும்.



பிற்பாடு யூதா தேசத்து அரசனாகிய ஆகாஸ் என்பவன் சூரிய கடிகாரத்தைக் கண்டுபிடித்ததாகச் சரித்திரப்பாங்காய் அறிகிறோம். நம்மில் அநேகர் இச்சூரிய கடிகாரத்தைப் பார்த்திருக்கலாம். அதாவது வட்டமான ஒரு பலகையின்மீது நாழிகைகளைக்குறித்து, அந்தப் பலகையின் மத்தியில் ஒரு சிறு குச்சியை அடித்துவைத்தால், அதன் நிழல் பாய்கிற நிதானத்தைக்கொண்டு ஒருவாறு இவ்வளவு நேரம் என்றறிந்துகொள்ளலாம்.

இச்சூரிய கடிகாரத்தின் குறை என்னவென்றால் இது இரவிலும், மாரிகாலத்திலும் உபயோகப்படமாட்டாது. ஆனதுபற்றி, ஜலக்கடிகாரம், மணல் கடிகாரம் என்பவைகள் உபயோகப்பட்டதாகவும் தெரிகின்றது. இவ்வகைக் கடிகாரங்கள், நமது இந்திய நாட்டிலிருந்ததாகவும், அவைகள் நாழிகை வட்டில் என்று அழைக்கப்பட்டதாகவும் புத்தகங்களில் வாசிக்கிறோம். அதாவது ஒரு வட்டிலில் வைக்கப்பட்ட நீரானது சொட்டுச் சொட்டாய் வடிந்து, பாத்திரம் வெறுமையாக இவ்வளவு காலம் செல்லுகிறது என்று கணக்கு வைத்துக்கொள்ளுவதுதான்.

இதற்குப் பிற்பாடுதான், தற்சமயத்தில் நம்முடைய வீடுகளிலும் இன்னும் அநேக இடங்களிலும் பிரயோஜனப்படுகிற கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கைக்கடிகாரங்கள் முதலாவதாக 1480-ம்

விருக்ஷம் ஜர்மனி தேசத்தில் நியூரம்பர்க் பட்டணத்தில் செய்யப்பட்டனவாம்.

இவைகள் சிறிதாகக் காணப்பட்டாலும், அதில் 960 சிறு கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடிகாரங்கள் அதிக பிரயோஜனமுள்ளவைகள் என்பது யாவருக்கும் தெரியும். ஆனால் நாம் அவைகளை எப்படி உபயோகிக்கிறோம் என்பதைக்குறித்துக் கொஞ்சம் பார்ப்போம்.

'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வாராது'

என்கிற முதுமொழி யாவருக்கும் தெரியுமே, அதுபோலக் கடந்துபோன காலம் திரும்பவும் வரமாட்டாது. ஆனால் நாம் இதை அடிக்கடி மறந்துபோகிறோம். எத்தனை கடிகாரங்கள் நமக்கு இருந்தால்தான் என்ன? எந்தெந்த வேலையை எந்தெந்த நேரத்தில் செய்யவேண்டுமோ, அந்தந்த வேலையை அந்தந்த நேரத்தில் செய்தால்தான் நமக்குச் சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும் என்று நமது அனுபவத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒரு பெண் காலையில் நேரப்பட எழுந்து, கடவுளைப் பிரார்த்தித்துத் தன்னுடைய வேலையைக் கிரமமாய்ச் செய்வதெப்படி? அல்லது 8-மணிவரையில் படுத்திருந்து பிற்பாடு வேலைகளை முடிக்கவேண்டுமென்ற ஆத்திரத்தோடே படபடப்பாய்ச் செய்வதெப்படி? நம்முடைய வீடுகளில் சாதாரணமாய் 8-மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்திருக்கிற அநேக மாதர்கள் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுடைய வீடும் ஒழுங்கும் அதிக அருவருப்புள்ளதாகவேயிருக்கும். இன்னும் கற்றவர்களுக்குள்ளும், கல்லாதவர்களுக்குள்ளும், ஒரு பெரிய சோதனை என்னவென்றால், வேலை ஒழிந்த நேரங்களில் ஒன்றுகூடி உட்கார்ந்து, அயல்வீட்டுச் சங்கதிகளை எடுத்துப் பேசுவதும், தங்கள் இனத்தாருடைய குற்றங்குறைகளை எடுத்துரைப்பதும், அல்லது தங்களுடைய நகைநட்டுகளை விவரிப்பதும் வழக்கமாயிருக்கிறது. இது சிறியோருக்குக் கெட்ட மாதிரியும், பெரியோருக்குக் கெட்ட பழக்கமாயுமிருக்கிறது.

இன்னும் சில பெரிய வீடுகளில், சோவி, கல்லான், சீட்டு, பல்லாங்குழி முதலிய பிரயோஜனமற்ற விளையாட்டுக்களை இரவும் பகலும் விளையாடிக் காலம்போக்குகிறதுமுண்டு. புத்தியை விர்த்திசெய்கிற விளையாட்டுக்களைச் சிறிதுநேரம் விளையாடிக் காலம் கழிப்பது குற்றமன்று. அவைகள் நேரப்போக்குக்கேற்ற சாதனமாயிருந்தாலும், மனதிற்கு அதில் சந்தோஷமும் பிரயோஜனமும் உண்டாகும் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

நாம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். சாப்பிடவேண்டிய நேரத்தில் சாப்பிடவேண்டும்.



தூங்கவேண்டிய நேரத்தில் தூங்கவேண்டும். இன்னும் வேலை ஒழிந்த நேரங்களில் விலைமதிக்கக்கூடாத வேதத்தைப் படிப்பதிலும், அருமையான சரிதைகளை வாசிப்பதிலும், அவைகளை மற்றவர்களுக்குச் சொல்வதிலும், பிரயோஜனமான தையல்களைத் தைப்பதிலும் கழிக்கலாம்.

இன்னும் வியாதியஸ்தர்களைப் போய்ப் பார்ப்பதிலும், உதவியற்றவர்களுக்கு உதவி செய்வதிலும், நம்முடைய நேரத்தை உலகத்திற்குப் பிரயோஜனமாகவும், கடவுளின் நாமத்திற்கு மகிமையாகவும் பிரயோஜனப்படுத்தலாம்.

புஸ்தகங்களில், காலத்தைக் கூடியமட்டும் சரியான ஒழுங்காய்ச் செலவழிப்பதற்குக் கல்விமான்கள், சில ஏதுக்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஒரு புஸ்தகத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது. அதாவது நாம் அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்தவுடனே கடவுளைப் பிரார்த்தித்து, இன்றைக்கு என்னுடைய கடமைகள் என்ன, அதை எப்படிச் செய்யவேண்டும், என்ன பிரகாரமாய்ச் செய்யவேண்டுமென்று, நம்முடைய மனதில் நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். பிற்பாடு, ராத்திரி படுக்கைக்குப் போனவுடனே நான் தீர்மானம்பண்ணின பிரகாரம் செய்தேனா என்று தற்சோதனை செய்து பார்க்கவேண்டும்.

காலத்தைப்பற்றிக் கவலையீனமாயிருப்பது பெரியோருக்கும் சிறியோருக்கும் ஒன்றுபோலவே நஷ்டத்தை வருவிக்கிறது என்பதை ரூபிக்க இரண்டு திருஷ்டாந்தங்கள் எடுத்துச் சொல்லுகிறேன்.

காலஞ்சென்ற நமது அருமையான விக்டோரியா சக்கரவர்த்தினி அவர்கள் அரசாட்சி செய்யுங்காலத்தில் பேர்போன சித்திரம் வரைகிற ஒருவர் ராஜாத்தியை உட்காரவைத்துப் படம் எழுதவேண்டுமென்று அவர்களிடம் கோரிக்கை செய்தார்; அந்த மாட்சிமைதங்கிய மஹாராணியும் ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு, அதில் அவர் வந்து தம்முடைய படத்தை வரையும்படி உத்தரவு கொடுத்திருந்தார்கள். இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்யப்போகிறது அவருக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆனால் என்ன நடந்ததென்று கேளுங்கள். ஏதோ, கவலையீனத்தினாலே சித்திரம் வரைகிறவர் குறிக்கப்பட்ட நேரத்தில் போகத் தவறிவிட்டார். ராணியவர்கள் வந்து பார்த்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள். இது அவருக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுத்திருக்குமென்று பாருங்கள்!

இன்னொரு சிறு கதை என்னவென்றால், ஒரு தாயாருக்கு ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தது. அவள் பேர் பட்டு. அவளுடைய பெற்றோர் அவளை பொன்னொருதட்டும், பூவொருதட்டுமாய் வளர்த்து

வந்தார்கள். அவளுக்குவேண்டிய விளையாட்டுச் சாமான்களெல்லாம் வாங்கிக் கொடுத்திருந்தார்கள். பட்டு அதிக நல்ல பிள்ளைதான். ஆனால் அவளுடைய ஒரு குறை என்னவென்றால் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டிய நேரத்தில் செய்யவேமாட்டாள். அவளுடைய தாயார் ‘அம்மா, பட்டு, இங்கே வா’ என்று அழைத்தால் ‘இருங்களம்மா வருகிறேன்’ என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் பொறுத்துத் தான் போவாள். ஒருநாள் அவளுடைய அருமையான கிளியைப் பூனை ஒன்று பிடிக்கிற சத்தம் கேட்டது. அவளுடைய தாயார் அவளைக் கூப்பிட்டு ‘பட்டு, பட்டு, ஏதோ கிளி கத்துகிறது, உடனே போய்ப் பாரம்மா’ என்றார்கள். அவள் ‘பொறுங்களம்மா’ போகிறேன் என்று சொல்லிப் பேசாமலிருந்துவிட்டாள். பின்பு அவள் போய்ப் பார்த்தபோது, ஐயோ! அருமைக்கிளியைப் பூனை தூக்கிக்கொண்டே போய்விட்டது.

பாருங்கள், நாம் காலத்தைப்பற்றிக் கவலையின்மையிருப்பது நமக்கு நஷ்டத்தை வருவிக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஆனால் அது, இதைவிடப் பெரிய நஷ்டத்தை நமது ஆத்துமாவுக்கும் உண்டு பண்ணும்.

இதுவே இரக்கத்தின் காலம், இதுவே இரட்சண்ய நாள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அடிக்கடி இவைகளை மறந்து போகிறோம். நம்முடைய முடிவு நினையாத நேரத்தில் வரும் என்பதை நாம் நினைத்து நம்முடைய காலத்தை ஆத்துமப் பிரகாரமாயும், சரீரப் பிரகாரமாயும் சரியானபடி உபயோகிக்க அன்பு நிறைந்த கடவுள் நமக்கு அருள்புரிவாராக.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஞு அக்டோபர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | நட. | 9. | 36—43 | 11 | பு. | 1 இரா | 18. | 1—16 | 21 | ச. | 1 இரா. | 22. | 1—14 |
| 2 | தி. | 1 இரா. | 14. | 1—11 | 12 | வி. | ,, | 18. | 17—29 | 22 | ஞா. | ,, | 22. | 15—28 |
| 3 | செ. | ,, | 14. | 12—20 | 13 | வெ. | ,, | 18. | 30—46 | 23 | தி. | ,, | 22. | 29—40 |
| 4 | பு. | ,, | 14. | 21—31 | 14 | ச. | ,, | 19. | 1—8 | 24 | செ. | ,, | 22. | 41—53 |
| 5 | வி. | ,, | 15. | 1—8 | 15 | ஞா. | ,, | 19. | 9—21 | 25 | பு. | 2 இரா. | 1. | 1—18 |
| 6 | வெ. | ,, | 15. | 9—24 | 16 | தி. | ,, | 20. | 1—12 | 26 | வி. | ,, | 2. | 1—10 |
| 7 | ச. | ,, | 16. | 1—14 | 17 | செ. | ,, | 20. | 13—27 | 27 | வெ. | ,, | 2. | 11—22 |
| 8 | ஞா. | ,, | 16. | 15—34 | 18 | பு. | ,, | 20. | 28—43 | 28 | ச. | ,, | 4. | 1—7 |
| 9 | தி. | ,, | 17. | 1—16 | 19 | வி. | ,, | 21. | 1—16 | 29 | ஞா. | ,, | 4. | 8—17 |
| 10 | செ. | ,, | 17. | 17—24 | 20 | வெ. | ,, | 21. | 17—29 | 30 | தி. | ,, | 4. | 18—37 |
| | | | | | | | | | | 31 | செ. | ,, | 4. | 38—44 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

# மாதர் போதினி

No. 167 நவம்பர் 1911 No. 11

## VICTORIA THE QUEEN EMPRESS *(Concl.)*

## விக்டோரியா சக்கரவர்த்தினி சரித்திரம்

(முடிவு)

### பரலோக பிராப்தி காண்டம்

அறுபதாம் வருஷ ஜூபிலி மகோற்சவம் முடியவே அன்பான நமது சக்கரவர்த்தினிக்கு அதிக சங்கடங்கள் நேர்ந்தன. அவைகள்

**சக்கரவர்த்தினியின் வியாதிக்குக் காரணங்கள்.**

அவர்களுடைய வயோதிபத்திற்குரிய பெலவீனமும், ராஜகுடும்பத்தில் நேர்ந்த மரணங்களும், தென்னாபிரிக்காவிலே போவர் என்னும் ஜனங்களோடு பிறித்தானியர் போர்புரிய நேர்ந்த விஷயமுமேயாம். முக்கியமாய் போவரோடுண்டான யுத்தமே அவர்களுடைய உள்ளத்தை உடைத்து அவர்களுடைய வயோதிப பெலவீனத்தை அதிகப்படுத்தி அவர்கள் மரணத்தைச் சமீபத்தில் கொண்டுவந்தது.

போவர் ஜனங்களோடு நேர்ந்த தென்னாபிரிக்க யுத்தமானது 1899-ம் ஞு அக்டோபர்மீ ஆரம்பித்தது. அது சீக்கிரம் ஜயமாக முடியுமென்ற எண்ணம் துவக்கத்தில் இருந்தபோதிலும் அது இரண்டு வருஷமாய் நீடித்ததுந்தவிரப் பெரும் உயிர் நஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையும் மனவேதனையையும் பிறப்பித்தது. ஆதலால் சக்கரவர்த்தினி அந்த வருஷத்தில் கிறிஸ்மஸ் என்னும் கிறிஸ்துவின் ஜனன உற்சவத்தை வழக்கம்போல மற்ற இடங்களிலல்ல, லண்டன்

**போவர் யுத்தம் முக்கிய காரணம்.**

பட்டணத்திலேயே கழிக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். அவர்கள் அந்த யுத்தத்திற்குச் சம்மதித்தது மகா வருத்தத்தின்பேரிலும் ஆட்சேபனையின்பேரிலுந்தான். யுத்த பூமியிலிருந்து அந்தப் பிரபு இறந்துபோனார், இந்தப் பிரபு படுகாயப்பட்டார், அந்தச் சேனை

முறிந்துபோனது, இந்தச் சேனை சிறையானது, அந்தத் தளபதி
அடைபட்டுப்போனார், இந்தத் தளபதி மதியீனஞ்செய்தார் என்ற
இப்பேர்ப்பட்ட செய்திகள் அவர்களுக்கு எப்போதும் வந்துகொண்
டிருந்தபடியால் அவர்களுடைய மனதானது சண்டமாருதத்தினால்
அடியுண்ட சமுத்திரம்போலவும், அவர்கள் இருதயமானது உலையி
லிட்ட மெழுகுபோலவும், அவர்கள் விழிகளானது ஊற்றுக்கண்கள்
போலவும் ஆயின. 1900-ம் வருஷத்தின் முற்பாகத்தில் போரில்




காயப்பட்ட வீரர்களில் அநேகர் இங்கிலாந்துக்குத் திரும்பி வரவே
ராணியார் அவர்களை ஆஸ்பத்திரியிலே போய்ப் பார்த்து அன்பாய்ப்
பேசி அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்தார்கள். வயோதிப
தளகர்த்தனாகிய ராபட்ஸ் பிரபுவின் ஒரே குமாரன் யுத்தத்தில் பட்டு
விழுந்ததைக் கேள்விப்பட்டு வெகு மனவேதனையடைந்து ராபட்ஸ்
பெருமாட்டிக்கு அநுதாபக் கடிதம் எழுதினார்கள். ஆனால் அங்கிலேய
வீரர் யுத்தத்தில் சற்று ஜயமடைந்து வருவதையும், போவர் தளபதி



யாகிய குரான்ஜி பிடிபட்டதையும் அவர்களும் அவர்கள் குடிகளும்
அறிந்தபோது சற்று ஆறுதல் உண்டானது. என்றாலும் யுத்தம்
மும்முரமாகவே நடந்துகொண்டுவந்தபடியால் 1901-ம் வருஷத்தைச்
சக்கரவர்த்தினி அவர்கள் அதிகமான தேகச்சோர்போடும் பெலவீனத்
தோடும் காண நேரிட்டது. அந்த வருஷம் ஜனவரிமீ சிரேஷ்ட
தளபதியாகிய ராபட்ஸ் பிரபு மகாராணியவர்களைப் பார்க்கப் போயி
ருந்தபோது அவர்களுடைய சுகமானது மிகவும் குன்றியிருப்பதாகவும்
தோற்றமானது அதிகமாய்ப் பேதப்பட்டிருப்பதாகவும் கண்டு ஆச்
சரியமடைந்தார்.

சக்கரவர்த்தினி அநேக நாளாய் அதிக பெலவீனமடைந்திருந்த
போதிலும் 1901-ம் வரு ஜனவரிமீ 18உ தான் அவர்கள் ஐல் ஆப்
வயிற் என்ற தீவிலே ஆஸ்போர்ன் அரமனையிலே வருத்தமான நிலை
மையில் இருப்பதாக உலகத்திற்குத் தெரியலானது; ஆனால் 19உ சக்
கரவர்த்தினி அதிக சரீரவேதனை அடைவதாகவும் அதினால் தூக்க
மற்றிருப்பதாகவும் வயித்தியர்மாரிடத்திலிருந்து

வியாதி அதிகப்பட்டல்.

செய்தி பிறந்தது. இடையில் சற்றுச் சுகம்
போல் தோன்றினபடியால் அவர்களோடு எப்
போதும் சமீபத்திலிருந்த பியற்றிஸ் பெருமாட்டி என்னும் அவர்கள்
இளைய ராஜகுமாரத்தி ராணியாருக்குச் சற்று இலகுவுண்டென்று
செய்தி அனுப்பினார்கள். ஆனால் வியாதியானது நாளுக்குநாள் அதி
கப்பட்டுக்கொண்டே வந்தது. ஆதலால் சக்கரவர்த்தினியின் பேர
னாகிய ஜர்மனிய சக்கரவர்த்தியும், அவர்களுடைய பட்டத்துக் குமா
ரனாகிய உவேல்ஸ் நாட்டு இளவரசரும், மற்றும் பல பிரபுக்களும்,
பெருமாட்டிகளும் 21உ லண்டன் நகரிலிருந்து புறப்பட்டு ஆஸ்
போர்ன் அரமனைக்குப் போனார்கள். போனவுடன் ஜர்மனிய சக்
கரவர்த்தியும் உவேல்ஸ் நாட்டு இளவரசரும் சக்கரவர்த்தினியுடைய
வியாதி அறையிலே சிறிதுநேரம்மாத்திரம் போய் நிற்க இடம்
கிடைத்தது. சக்கரவர்த்தினியார் தங்கள் பேரனை இன்னாரென்று
அறிந்துகொண்டார்கள். அவர் அவர்களோடு பேச ஆரம்பித்தும்
வயித்தியர் அதற்குச் சம்மதிக்கவில்லை. பேரனும் குமாரனும் நோயா
ளியின் அறையைவிட்டுப் பெருந்துயராக்கினியில் மூழ்கினவர்களாய்
வெளிப்பட்டார்கள். சக்கரவர்த்தினியவர்கள் 21உ இரவை மிகுந்த
வருத்தத்தோடு கழித்து உலகத்திலுள்ள தங்கள் கடைசி நாளாகிய
22உயைக் கண்டார்கள். அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு
ராஜகுடும்பத்தைச் சேர்ந்த சகலரும் அவர்களுடைய படுக்கையைச்
சுற்றி நின்று அவர்களைப் பார்த்துப் பரிதபித் தழுதார்கள். அப்
போது பாக்கியமாய் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளை

யும் அறியக்கூடிய போதம் அவர்களுக்கிருந்தது. ஆனால் முன்னமே சிறுவனின் துப்பாக்கிக்கும் மறிந்த ரதத்திற்கும் தப்பின அவர்கள் ஜீவன், முறிந்த கப்பற்பாய் மரத்திற்கும் மோசகரமான பித்தர்களுடைய கைக்கும் தப்பின அவர்கள் ஜீவன், அநேக அக்கிரமிகளுடைய துப்பாக்கிக் குண்டுகளுக்கும் இன்னும் பல ஆபத்துக்களுக்கும் தப்பின அவர்கள் ஜீவன் 1901-ம் ஞு ஜனவரிமீ 22உ சாயங்காலம் ஆறரை மணிக்குத் தாய்வீட்டுக்கு மகள் போவதுபோலச் சந்தோஷமும் இயல்புமாய்த் தன்னைப் படைத்த தேவனண்டைக்குச் சென்றது. அப்போது அவர்களுக்கு 82 வயசு; 64 வருஷகாலம் ராஜ்யபாரம் பண்ணியிருந்தார்கள். அவர்கள் பரலோக பிராப்தி அடையும்போது அவர்களுடைய ராஜகுமாரரும், ராஜகுமாரத்திகளும், பேரப்பிள்ளைகளும், உவின்சேஸ்த்றர் கண்காணியாரும், மற்றும் பல பெரியோரும் அவர்களோடிருந்தார்கள். அவர்கள் யாவரும் சக்கரவர்த்தினியினிமித்தம் அதிக சங்கடமடைந்தார்களென்றாலும் அவர்கள் பட்டத்துக் குமாரனாகிய இளவரசர் அடைந்த சஞ்சலத்தை ஆராலும் அளவிட முடியாது. அவர் மனம் அக்கினிச் சூளைபோலானது; அவர் தேகம் அதிர்ந்து சோர்ந்தது; அவர் கண்களில் கண்ணீர் நிறைந்து வடிந்தது. இந்தத் துயராக்கினியோடே அவர் லண்டன் பட்டணத்து லாட் மேயர் பிரபுவுக்கு: 'என்னுடைய நேச மாதாவாகிய ராணியார் தங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் முதலியவர்களின் நடுவிலே இப்போதுதான் பரலோக பிராப்தியானார்கள்' என்று தந்தி அனுப்பினார். இந்தச் செய்தியானது இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் ஸ்கோத்துலாந்திலும் இந்தியாவிலும் மற்றும் சக்கரவர்த்தினியுடைய நாடுகளிலும் உண்டுபண்ணின துக்கமானது மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததாயிருந்தது. குடிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்த சக்கரவர்த்தினி மரித்தபோது குடிகள் தங்கள் சொந்த மாதாவை இழந்துபோனதுபோல மனமுருகுவார்கள் என்பதற்கு ஐயமுண்டோ? இல்லை.

**சக்கரவர்த்தினியின் பரலோக பிராப்தி.**

சக்கரவர்த்தினியின் ராஜ சரீரத்தை லண்டன் பட்டணத்துக்குக் கொண்டுபோய், அங்கே அவர்களுடைய அன்பான நாயகனாகிய ஆல்பட் பிரபுவின் கல்லறையின் பக்கத்தில் மகா பெரிய வைபவங்களோடு அடக்கம்பண்ணினார்கள். இதற்கு நாற்பது வருஷங்களுக்கு முன்னே சக்கரவர்த்தினி தங்கள் அன்பான நாயகனாகிய ஆல்பட் பிரபுவைச் சாகக் கொடுத்து அவரை அடக்கம்பண்ணின கல்லறை மண்டபத்துக் கதவிலே:

**அவர்களின் சரீர அடக்கம்.**



'என் நேசரே, நீர் இப்போது போகலாம்,
நானும் உம்மோடு இளைப்பாறவும்
கிறிஸ்துவுக்குள்ளே உம்மோடு உயிர்த்தெழுந்திருக்கவும்
இங்கே கடைசியில் வருவேன்'

என்ற வாசகத்தைத் தீட்டியிருந்தார்கள். அதின்படியே அவர்கள் தங்கள் நாயகன் பக்கத்தில் படுத்து இளைப்பாறி உயிர்த்தெழுதலின் மகா காலையிலே தாங்களும் தங்கள் நாயகனும் உயிரோடெழுந்திருக்கக் காத்திருக்கிறார்கள்.

அவர்கள் ஸ்தானத்திலே அவர்களுடைய பட்டத்துக் குமாரனும் உவேல்ஸ் நாட்டு இளவரசருமானவர் ராஜாபிஷேகம் பெற்று ஏழாம் எட்வர்ட் என்ற பெயரினால் இங்கிலாந்துக்கு ராஜாவாகவும் இந்தியாவுக்குச் சக்கரவர்த்தியாகவும் ராஜ்யபாரம்பண்ணி வந்தார். அவர் ராஜாவாகும்போது மொழிந்த வார்த்தைகள் தாயாரின் வார்த்தைகளைப்போலவே மிகவும் தயாளம் பொருந்தினவைகளாயிருந்தன. அவைகள்: 'என் நேசத் தாயாரின் முன்மாதிரியைப் பின்பற்றி நடப்பதே எனது சதாகால பிரயத்தனமாயிருக்கும். என் சரீரத்திலே சுவாசம் இருக்கும் காலபரியந்தம் நான் என் ஜனங்களுடைய விருத்தியையும் நன்மையையும் கருதியே வேலைசெய்வேன்' என்பனவாம். அவரும் ஒன்பது வருஷகாலம் அரசுபுரிந்து, சமாதான பூபதி என்ற சற்பேர் பூண்டு, 1910-ம் ஞு மேமீ 6உ சுகலோக பிராப்தியானார். 'வாழையடி வாழைபோல் வாழ்கின்றார்' என்ற சுலோகப்படி அவருடைய சிங்காசனத்தில் இப்போது அவருடைய புத்திரரத்தினமானவர் ஐந்தாம் ஜார்ஜ் என்ற பட்ட நாமம் பூண்டு செங்கோல் செலுத்திச் சிறந்து விளங்குகின்றார்.

**ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி பட்டத்துக்கு வருதல்.**

அன்புதானே ஒரு அவதாரமெடுத்து வந்தால் எப்படி இருக்குமோ அப்படியிருந்த விக்டோரியா சக்கரவர்த்தினி அவர்கள் அறுபத்துநாலு வருஷம் அரசுபுரிந்த பிறித்தானிய ராஜ்யமானது எவ்வளவோ வல்லமையும் மகத்துவமும் பொருந்தினதாயிருக்கிறது! அந்த ராஜ்யத்திலுள்ள அவர்களுடைய குடிகளின் தொகை 35 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்தக் குடிகளுக்குள்ளே வெள்ளை, கறுப்பு, மஞ்சள், சிவப்பு முதலான எல்லா வர்ணங்களுமுடையவர்களும்—கிறிஸ்தவர்கள், மகமதியர், புத்தமார்க்கத்தார், இந்துக்கள் முதலான எல்லா மார்க்கானுசாரிகளும், வடக்கற்றத்திலே கன்னடா வரையும், தெற்கற்றத்திலே காலனி முனைவரையும், கிழக்கற்றத்திலே பசிபிக் சமுத்திலே ஆஸ்திரேலியா வரையும், மேற்கற்றத்திலே

**விக்டோரியா சக்கரவர்த்தினியின் ராஜ்யத்தின் விசேஷமும் விஸ்தாரமும்.**

திரக்கரை வரையுமுள்ள உலகத்தின் நாலுதிசைகளிலும் வசித்து வருகிறார்கள்.



மேலும் நேராய் அவர்கள் பிரஜைகளாய் இருந்தவர்களைமாத்திரமல்ல உலகத்திலுள்ள அநேக ராஜ்யங்களையும் அவர்கள் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். புராதனமும் பராக்கிரமமும் பொருந்தின எகிப்து தேசமானது அவர்களுடைய ராஜாங்கத்தின் செட்டைகளின் கீழே க்ஷேமமடைந்தது. மத்தியதரைக் கடலுக்குள்ளிருக்கிற

அவர்கள் ராஜாங்கம் மற்ற ராஜ்யங்களை ஆதரித்தல்.



தனிமையான சீப்புருதீவை அவர்களுடைய போர்வீரர் காத்துவருகிறார்கள். இருண்ட ஆபிரிக்காவின் பல பாகங்களிலே யாரும் அறியாதிருந்த அநேக நாடுகள் அவர்களுடைய ஆதீனத்தில் அமர்ந்தன.

ஓ! அவர்களுடைய அரசாட்சியானது ஒடுக்கப்பட்ட குடிகளுக்கு உதவிசெய்கிறது; அறிவற்ற குடிகளுக்கு அறிவையும் நாகரீகத்தையும் அளிக்கிறது; உலகமானது இழிவாய் எண்ணிவந்த ஸ்திரீஜாதிகளின் ஸ்திதியை உயர்த்தி அவர்களை மேன்மைப்படுத்துகிறது. ஒரு அங்கிலேய துரைசானி இந்தியாவிலே புன்னைநகரிலிருந்த ஒரு மகாராணியின் கொடிய வியாதியைச் சிகிச்சைசெய்து சுகப்படுத்தினார்கள். அந்த அம்மாள் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போகும்போது அந்த மகாராணி அவர்களிடத்தில்: 'துரைசானியே! நீங்கள் சீர்மைதேசத்திற்குப் போனால் தயவுசெய்து சக்கரவர்த்தினி அவர்களிடம் சென்று இந்திய மாதராகிய நாங்கள் வியாதிக்காலத்தில் படும் அவஸ்தைகளைத் தெளிவாய் அறிவிக்கவேண்டும்' என்று அபேட்சிக்க, அந்த அம்மாளும் அப்படியே சக்கரவர்த்தினியிடம் போய் அதைத் தெரிவித்தார்கள். சக்கரவர்த்தினி இந்தக் காரியத்தை மறவாமல் டபரின் பிரபு இந்தியாவுக்குக் கவர்னர்ஜனரலாக வருகிற காலத்திலே அவருடைய நாயகியாகிய டபரின் பெருமாட்டியிடத்தில்: 'அம்மா, நீங்கள் இந்தியாவிலுள்ள ஸ்திரீகளுடைய க்ஷேமத்திற்கு அனுகூலமாக எவைகளைச் செய்யக்கூடுமோ அவைகளையெல்லாம் செய்யவேண்டும்' என்று கட்டளையிட, அந்தப் பெருமாட்டி இந்தியாவுக்கு வந்தவுடன் இந்திய மாதருக்கென்று பெண் வயித்தியசாலைகளையும் வயித்தியமாதரையும் மருத்துவிச்சிகளையும் பற்பல தாதிமார்களையும் ஏற்படுத்தினார்கள். அதினால் இந்திய ஸ்திரீகளுக்கு நடந்துவருகிற நன்மைகளை நாமே அறிவோம்.

அவர்கள் ராஜாங்கத்தினால் உண்டான நன்மை.

விக்டோரியா சக்கரவர்த்தினி இவ்வளவு விசேஷித்த குணமகிமை பொருந்தினவர்களாய் விளங்கினதற்குக் காரணமென்ன? 'ஈசன் எப்படியோ அப்படியே தாசனும்' என்கிற மூதுரைப்படி அவர்கள் விசுவாசித்த இயேசுகிறிஸ்து என்னும் ஈசனில் விளங்கின காருண்யம், தயாளம், பொறுமை, தாழ்மை, சுயவொறுப்பு, அன்பு முதலான லட்சணங்களை அவர்கள் பின்பற்றி அவைகளைத் தங்கள் மகிமையான ஆபரணமாக அணிந்திருந்தார்கள். அதினாலேதான் அவர்கள் அதிக மகத்துவமுள்ள குணசீலமுடையவர்களாகவும், தங்கள் பிரஜைகளுக்குப் பெரிய ஆசீர்வாதமாகவும் விளங்கினார்கள்.

அவர்களுடைய குண மகிமைக்குக் காரணம்.

அவர்கள் கிறிஸ்துமார்க்கத்திலே ஆழ்ந்த பக்தியுடையவர்களாயிருந்தபோதிலும் அம்மார்க்கத்தை அவர்கள் குடிகள் அனுசரிக்க வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. இது பாபிலோனிய அரசர், ரோமை ராயர்கள், மகமதிய மன்னர் முதலியவர்கள் செய்த மார்க்க கட்டாயங்களுக்கு முற்றிலும் வித்தியாசமாயிருக்கிறதென்று அதிக தெளிவாய் அறிந்துகொள்ளுகிறோம். அவர்கள் 1858-ம் ஆு செய்த ஒரு விளம்பரத்திலே: 'நம்முடைய பிரஜைகள் பற்றிக்கொண்டிருக்கிற மார்க்கங்களை விடும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துகிற நம்முடைய அதிகாரிகள் நம்முடைய கோபத்துக்குப் பாத்திரராவார்கள்' என்று கூறினார்கள். மதவிஷயத்திலே அவரவர் மனச்சாட்சியே அவரவருக்கும் பிரமாணமாயிருப்பதால் அவர்களைக் கட்டாயப்படுத்துதல் அநீதி என்ற தர்மத்தை அவர்கள் அதிக ஆழமாய் உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு இது ஏற்ற அத்தாட்சியாயிருக்கிறது.

அவர்கள் குடிகளுக்கு மார்க்கசுயாதீனம் அளித்தல்.

கருணைக்கடலாயிருக்கிற கடவுளே! எங்களுக்கு முன்னிருந்த எண்ணிறந்த ஜனங்கள் குரூர அரசருடைய கொடுங்கோன்மையினால் அநேகவிதமான உபத்திரவங்களை அடைந்தபோதிலும், நாங்கள் அன்பும் அருளுமமைந்த விக்றோரியா சக்கரவர்த்தினியின் ஆளுகை காலத்தில் பிறக்கவும் அவ்வாளுகையின் சமாதான சௌக்கியங்களை அனுபவிக்கவும் நீர் கிருபை செய்ததற்காக உம்மைப் போற்றுகிறோம். அந்த அரச மகிஷியால் நீர் உலகத்தின் மற்றப் பாகங்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். இப்போது எங்களை ஆளுகை செய்கிறவரும் காலஞ்சென்ற எங்கள் காருண்ய சக்கரவர்த்தினியின் பேரனுமாகிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியை ஆசீர்வதித்தருளும். அவருடைய அருமையான பாட்டியாரின் ராஜ்யபார காலத்திலே உலகத்திற்கு என்னென்ன குணாபிவிர்த்திகள் உண்டாயினவோ அவைகளைப்போலவும் அவைகளுக்குமேலாகவும் இவர் காலத்திலேயும் உண்டாகக் கிருபைபுரியும். எங்கள் தேசத்திலே தேவபக்தியும், திருப்தியும், சமாதானமும், சௌக்கியமும், ராஜபக்தியும், நீதியும் அதிகமதிகமாய் வளர்ந்தோங்க அருள்புரியும். விக்றோரியா சக்கரவர்த்தினியை விசேஷித்த பக்திபொருந்தின ராணியாகப் பக்குவப்படுத்தி அவர்கள்மூலமாய் உலகத்தை ஆசீர்வதித்த இயேசு கிறிஸ்துவை உலகம் முழுவதும் விசுவாசிக்கும்படி கிருபைசெய்யும். இயேசுகிறிஸ்துவின் நிமித்தமே எங்கள் ஸ்தோத்திரத்தையும் ஜெபத்தையும் கேட்டருளும் பரம பிதாவே, ஆமென்.

முடிவு.



## LACK OF FORETHOUGHT

## முன்யோசனை இல்லாதது மூடத்தனம்

ஒருநாள் மஹாராஜா தன் ஆஸ்தானத் தென்னால் ராமனை அழைத்து, 'ஏ! தென்னால்ராம! இதோ! உனக்கு ஒரு தடியை வெகுமதியாகக் கொடுக்கிறேன். ஆனால் உன்னைக்காட்டிலும் பெரிய தென்னால்ராமன் ஒருவனைக் கண்டால் இதை அவனுக்குக் கொடுத்துவிடு' என்றார். 'சரி, ஐயா!' என்று வாங்கிக்கொண்டான் தென்னால் ராமனும்.

இது நடந்து கொஞ்சக்காலத்துக்கெல்லாம் ராஜா வியாதிப்பட்டுச் சாகும் தறுவாயில் இருந்தார். அநேகர் அவரைப் பார்க்க வந்தார்கள். தென்னால்ராமனும் அவரைக் காணப்போனான். அப்போது மஹாராஜா 'சீக்கிரம் நான் உன்னைவிட்டுப் பிரியவேண்டும்' என்றார்.

'மஹாராஜ்! எங்கே போகிறீர்கள்?'

'மறு உலகத்திற்கு.'

'போய்விட்டு எப்போது திரும்பி வருவீர்கள்? ஒரு மாசத்திற்குள்?'

'ஊஹூ.'

'ஒரு வருஷத்திற்குள்?'

'ஏது!'

'பின் எப்போதுதான் வருவீர்கள் மஹாராஜ்?'

'அங்கே போனால் திரும்ப வருவதே இல்லை!'

'அப்படியானால் தங்கள் மகிழ்ச்சிக்கு வேண்டி அங்கே என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?'

'ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை.'

'ஒன்றுமில்லையா! சரி. அப்படியானால், தாங்கள் எனக்களித்த இந்தத் தடியைத் தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள். என்னதான் இருந்தாலும் நான் தங்களைப்போலொத்த புத்தியீனன் ஆவேனா?'

## HINTS TO TEACHERS

## SIMPLE EXPERIMENTS WITH PLANTS

## உபாத்தியாயர்களுக்கான குறிப்புகள்

## தாவரங்களைப்பற்றிய சில எளிதான பரிசோதனைகள்

இந்த உலகத்திலுள்ள இயற்கை அழகுகளை நாம் காணாமல் கண்மூடித்தனமாகவே உலாவுகிறோம். சாதாரணமாய் வழியோரங்களி

லும் வயற்பக்கங்களிலும் எத்தனையோ விசித்திரமான அலங்காரங்கள் படைப்பில் அமைந்திருந்தும் நம்மில் அநேகர் அவைகளைக் கண்டு களிக்கிறதில்லை. நாம் மாத்திரம் கண்ணுள்ளவர்களாய்க் கவனிப்போமானால் சென்ற மாதத்தில் நம் மாதர்போதினியில் கண்ட சிறிதும் பெரிதுமான ஜீவபிராணிகளின் சுபாவங்களையும் விசேஷங்களையும் அறிந்து சந்தோஷப்படலாம். நாம் அநுதினமும் மிதிக்கும் கற்களில் எவ்வளவோ விஷயங்கள் உண்டு. இப்படியாக இயற்கை தனக்குள்ளே பற்பல அழகுகளை அடக்கிக்கொண்டிருக்கிறது. பூ என்றால் நம்மெல்லாருக்கும் வெகு பிரியந்தான். ஆனால் அவற்றின் வளர்ச்சி முதலியவற்றைப்பற்றி நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஒரு செடியின் வளர்ச்சியை அதன் சிறு விதைமுதல் பழுக்கும் பழம்வரையில் பார்த்துப் படிப்போமானால் தேவன் சிருஷ்டித்துள்ள இந்த உலகத்தின் அற்புதங்கள் புதிது புதிதாகத் தெரியும். அப்போது 'அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?' என்று கிறிஸ்து சொல்லிய மொழிகளின் உண்மையைப் புத்திபூர்வமாய் உணர்வோம். இவ்விதமான இயற்கையின் காரியங்களை அறிய நாம் சாதாரணமாய்ச் செய்யக்கூடிய சில பரிசோதனைகள் இங்கே விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு விதையை நிலத்தில் விதைத்தால் அது சிறு இளந்தளிர் விட்டுப் பின்பு செடியோ மரமோ ஆகிறது என்று நாம் எல்லாரும் அறிவோம். ஆனால் பூமிக்குள் இன்ன காரியந்தான் நடக்கிறது என்று நிச்சயமாய்த் தெரிந்திருப்பவர் சிலரே.

முதலில் அவரைபோன்ற பெரிய விதைகள் சில எடுத்துக்கொள்வோம். பிறகு வாய் அகலமாயுள்ள கண்ணாடிப் புட்டி ஒன்றைப் பார்த்தெடுத்து அதன் உட்பக்கத்தோடு பிளாட்டிங் பேப்பர் (மை ஒத்துங் காகிதம்) தாள் ஒன்றைச் சுற்றி வைப்போம். இப்போது அந்த அவரை விதைகளை பிளாட்டிங் பேப்பருக்கும் கண்ணாடிக்கும் இடையில் இருக்கும்படி பொருத்துவோம். அப்போதுதான் விதைகளை வெளியிலிருந்து பார்க்கமுடியும். மேலும் அந்த பிளாட்டிங் பேப்பர் சதா ஈரமாயிருக்கும்படி புட்டிக்குள் கொஞ்சம் தண்ணீரை வார்த்துவைக்க வேண்டும். இனி இதைக் கவனித்துவந்தால் இரண்டொரு நாளில் விதையிலிருந்து சிறிய மூளை கிளம்பிவருவதைப் பார்ப்போம். வரவர இது நீளமாகிப் பின்பு பல சிறு சிறு வேர்களாகப் பிரியும். இவ்வளவு தானா! வேர் வந்ததும் இன்னும் ஒரு மூளை கிளம்பக் காண்போம். இதுவும் வெகு சீக்கிரம் வளர்கிறது. ஆனால் இது வேரைப்போல்



கீழே போகாமல் மேலே போகிறது. மேலும் இது கிட்டத்தட்ட ஒரு அங்குல நீளம் ஆனதும் இரண்டு சிறு இலைகள் விடுகிறது. அப்புறம் இன்னும் இலைகள் உண்டாக ஒரு சிறு செடியாய்விடுகிறது. இப்படி நாளுக்குநாள் வேர் நீண்டு இலைகளும் அதிகம் ஆகஆக நாம் முதலில் விதைத்த விதை குறுகிக்கொண்டே வருவதைக் காணலாம். இது ஏன் இப்படி? குழந்தைகள் உண்டால்தான் வளரும். அப்படியே இந்தச் சிறு செடியும். விதைத்த அவரை விதையில் கிளம்பிய செடி தானே உணவு தேடி அடையச் சக்தி பெறும்வரைக்கும் உண்ணப் போதுமான உணவு முன்னமேயே பொருந்தியிருந்தது. ஆகவே செடி அந்த உணவையே உண்டு வளரவளர அந்த விதையும் சிறிதாகி வருகிறது. இந்தப் பரிசோதனையால் நாம் நிலத்தில் நடும் ஒவ்வொரு விதையும் நிலத்தின் உள்ளேயும் வெளியேயும் அடைகிற மாறுதல்களை விபரமாய் அறிகிறோம். உலகத்தின் ரகசியங்கள் பலவற்றில் இது ஒன்று.

இரண்டாவதாக இன்னும் சில அவரை விதைகளை எடுத்து ஒரு நாள் தண்ணீரில் ஊறப் போடுவோம். அப்படி நன்றாய் ஊறிய விதை ஒன்றை வெளியே எடுத்து அதன் மேல்தோலை உரித்துவிட்டுப் பார்த்தால் உள்ளே இருக்கும் விதை இருபிரிவாகப் பொருந்தியிருக்கும் விசித்திரம் விளங்கும். இந்த இரண்டு பிரிவுகளும் ஒரு குறித்த புள்ளியில் சேர்ந்தும் மற்றப்படி பிரிந்தே இருப்பதையும் அதோடு சேர்ந்திருக்கும் இடத்தில் ஒரு சிறு கட்டியையும் காண்போம். இந்தக் கட்டியை ஜாக்கிரதையாய்ப் பார்த்தால் அதுவும் விதையுடன் சேர்ந்ததே என்பது தெரியும். இதுதான் வேராவது. நமது முதற் பரிசோதனையில் விதையிலிருந்து முதலில் கிளம்பியதும் இதுவே. இந்த இரண்டு விதைகளையும் கவலையுடன் திறந்து இந்த இரண்டும் பொருந்தியிருந்த இடத்தைப் பார்த்தால் அங்கே வெகு சிறு தளிர் ஒன்று காணும். இந்தச் சிறு தளிர்தான் இலைகளாயும் இலைக்காம்பாயும் ஆவது. நமது முதற் பரிசோதனையில் மேலே கிளம்பியதும் இதுதான். இன்னும், இந்தச் சிறு தளிர் எப்படி அபாயம் வராமல் பாதுகாப்புள்ளதாய் இருக்கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. விதையின் பாகம் இரண்டில் ஒரு பாகத்தில் சிறிது பள்ளம் ஏற்பட்டு அதில் அது பத்திரமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அங்கே யாதொரு தீங்கும் வராது.

இப்படி இவை இரண்டும் அதற்குப் பாதுகாவலாயிருப்பதுமாத்திரமா? அந்தச் சிசுச்செடிக்கு இரண்டும் இரண்டு பை உணவாகவும் இருக்கின்றன. இவைகளிலிருந்துதான் அச்சிசுத் தாவரம் உணவை அடைந்தது. பின்னும் அது வளரவளர அவை இரண்டும் சிறுத்

துச் சிறுத்துக் கண்டன. ஆகவே இப்படிப் பரீக்ஷித்ததால் ஒரு வளர்ந்த தாவரத்திற்கு அத்தியாவசியமான பொருள்கள் எல்லாம் அந்த விதையிலேயே மறையப் பொருந்தியிருந்தன என்பது தெளிவாகிறது.

இப்படி விதைகள் வளர்வதை இன்னும் செவ்வையாய் அறிய நாம் செய்யக்கூடிய பரிசோதனைகள் இன்னும் இருக்கின்றன. பிளாட்டிங் பேப்பர் அல்லது கம்பளம் ஒரு துண்டு எடுத்து அதை ஒரு தட்டத்தின்மேல் பரப்பி அதன்மேல் சில சணல் விதைகளையாவது வேறே விதைகளையாவது தூவி பிளாட்டிங் அல்லது கம்பளம் ஈரம்போகாமல் தண்ணீர் தெளித்து வைத்துவந்தால் அடுத்த நாள் காலையில் விதைகள் மாறுபட்டிருக்கக் காண்போம். முதலில் சிறு வேர்களும் பின்பு சிறு இலைகளும் காம்புகளும் விட்டிருக்கும். இவைகளும் நாம் முன் பார்த்த அவரையைப்போன்றவைதான். அதிலும் இவை கொஞ்சம் சிறியவை; அத்தனைதான்.

'சரி! எப்போதும் வேர் கீழும் தண்டு மேலும் ஆகவே வளர்கின்றனவா? விதையைத் தலைகீழாக நட்டால் என்ன ஆகும்' என்று சிலர் சந்தேகிக்கலாம். வேண்டுமானால் அப்படித்தான் செய்து பார்ப்போம். முதல் பரிசோதனையிற் செய்ததுபோல் அத்தனையும் செய்து புட்டியில் போடும் விதையைமட்டும் தலைகீழாய் வைப்போம். என்ன ஆகிறது பார்ப்போம். சரி. விதையிலிருந்து வேர் வெளிக்கிளம்பி, அது தானிருக்கும் இருப்பை அறிந்து கீழ்ப்பக்கமாகத் திரும்பிக் கீழாகவே வளர்கிறது. தண்டும் மேற்பக்கமாகவே வளரும். ஆரம்பத்தில் மாத்திரம் அதாவது வித்தைவிட்டுக் கிளம்பும்போது கீழ்ப்பக்கமாகத் திரும்பியிருந்தாலும் தன் இஷ்டப்படி போகக்கூடியதானவுடன் திரும்பி மேற்பக்கமாகவே வளரும். நாம் என்ன செய்தாலும் சரி, இயற்கையின் போக்கைச் சிறிதும் மாற்ற முடியாது. விதையை எந்த மாதிரி நட்டாலும் சரி, அது வேர் கீழும் தண்டு மேலும் ஆகத்தான் வளரும்.

தாவரங்கள் சூரிய உஷ்ணத்தின்பேரிலும் பிரகாசத்தின்பேரிலும் மிகுந்த பிரீதி வைக்கின்றன என்பதை எத்தனைபேர் கவனித்திருக்கிறீர்கள்! சிறு செடி ஒன்றை ஒரு இருட்டான அட்டைப்பெட்டிக்குள் வளர்த்தால் அது வளராது. தானாய் மீறி வளர்ந்தாலும் அநதங் கெட்டே வளரும். ஒரு செடிச்சட்டியில் விதைநட்டு ஒரு அறையின் இருண்ட மூலையில் வைத்துவிட்டால் இரண்டொருநாளில் அதிலிருந்து முளைக்கும் செடி அறையில் வெளிச்சம் வரும் ஜன்னல் அல்லது கதவுகளை நோக்கியே வளரும். அதை மறுபடியும் இருட்டான பாகத்துக்குத் திருப்பிவைத்தால் மறுபடியும் அது இரண்டொரு தினத்தில் சூரியப்பிரகாசம் வரும் பக்கமாக வளைந்து வளர்வது தெரியும். இப்படிப் பல செடிகளைக்கொண்டு பார்த்தாலும் தாவரங்கள் வெளிச்சத்தை விரும்புவனவாயிருப்பது விளக்கமாகத் தெரியும். மலர்கள் காலையில் சூரியோதயத்தோடு மலர்ந்து மாலையில் சூரியாஸ்தமனத்தோடு வாடி வதங்கித் தொங்கிப்போவதைக் கண்டதில்லையா?



இங்கிலாந்தில் ஒரு பெரிய மஞ்சட்பூ உண்டு. அது சூரியன்பக்கமே சதா திரும்பியிருக்கும். அதுவுமல்லாமல் பூவும் சாயவும் நிமிரவும் வளரவும் கூடியதாயிருக்கும். சூரியனைக் கண்டால் அதற்கு அத்தனை பிரியம். அதினால் அதை 'சூரியப்பூ' என்பார்கள். இந்தப் பாகத்திலும் 'சூரியகாந்திப்பூ' என்பது கிட்டத்தட்ட அப்படித்தான்.

இப்படிக் கடவுள் சிருஷ்டித்தவைகளில் அவருடைய ஆக்ஞைப்படியே ஆச்சரியமானவிதமாய் நடக்கும் தாவர விநோத விஷயங்களில் இவை சில. நாம்மாத்திரம் கண்ணைத் திறந்து கவனமாய்ப் பார்த்தால் முன் அறியாத அநேக அரிய பெரிய விசேஷங்களை அறியலாம். அதனை அறிய அறிய தேவ சிருஷ்டிகளின் அதிசயங்களைக் கண்டு ஆனந்தப் பரவசராவோம்.

# Review

## LIFE OF Dr. LIVINGSTONE

## டாக்டர் லிவிங்ஸ்டன் என்பவரின் ஜீவிய சரிதை

பேர்பெற்ற மிஷனெரியும் தேசாந்தரியுமாகிய லிவிங்ஸ்டன் பண்டிதரின் ஜீவிய சரிதையின் இரண்டாம் பதிப்பில் ஒரு பிரதி வரப்பெற்றோம். இந்நாட்டுக் கிறிஸ்தவ வாலிபர் இப்புஸ்தகத்தைக் கவனமாய் வாசிக்கவேண்டியது மிகவும் அவசியம். டாக்டர் லிவிங்ஸ்டன் தன் பாலியப் பிராயத்திலேயே பட்ட கஷ்டங்களுக்கு அளவில்லை. அப்படி இருந்தபோதிலும் அவருடைய விடாமுயற்சியும் படிப்பின்பேரிலுள்ள ஆவலும் கொஞ்சமல்ல. ஆறுமாசம் வேலை செய்து அந்தச் சம்பாத்தியத்தைக்கொண்டு தன்னுடைய கல்வியை நிறைவேற்றிவந்தது நமக்கு ஒரு அருமையான பொருட்பாடம். தம்மைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்த நாள்முதல் ஆத்துமாக்களைப் பற்றிய வாஞ்சை அதிகரித்துக்கொண்டே வந்தது. தன்னைக் கிறிஸ்துவின் ஊழியத்திற்கு உடனே ஒப்புக்கொடுத்தார். சுதேச கிறிஸ்தவர்களுள் தங்களை ஆண்டவரின் ஊழியத்திற்கு முழு மனதோடு ஒப்புக்கொடுப்பவர்கள் மிகவும் சொற்பம்! சீனாவுக்கு மிஷனெரியாகப்

போவது கூடாமையென்றறிந்து இருள் நிறைந்த ஆபிரிக்கா தேசத்திற்குப்போகச் சம்மதித்தார். அவர் அவ்விடத்தில் பட்ட அவஸ்தைகளும் கஷ்டங்களும் இவ்வளவவ்வளவல்ல. எலும்புகளை ஆபரணங்க



ளாக அணிந்துகொள்ளும் மிலேச்சர்களுக்குள் அவர் மூலமாய் உண்டான நாகரீகங்களும் மார்க்கத்திருத்தங்களும் மிகவும் ஆச்சரியமானவை. அநேக ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்ததுந்தவிர அநேக நூதன இடங்களையுங் கண்டுபிடித்தார். தம் வீட்டில் முழங்காற்படியிட்டு ஜெபம்



செய்துகொண்டிருக்கும்பொழுது அவர் தம் பரம தகப்பனண்டைச் சேர்ந்தார்.

கூலிக்காரப் பையனாக இருந்த இவர் இங்கிலாந்து தேசத்தின் ராஜாக்களும் கனவான்களும் புதைக்கப்படும் உவெஸ்ற் மினிஸ்தர் ஆபே என்னுமிடத்தில் அடக்கம்பண்ணப்படும் கனத்திற்குப் பாத்திரரானார்.

இந்த மகாத்துமாவின் ஜீவியத்தில் ஒவ்வொரு நிமிஷமும் பணமும் செல்வாக்கும் மற்றவர்களுடைய நன்மைக்காகவே உபயோகிக்கப்பட்டன. இவர் எத்தொழிலையும் அற்பமாக நினையார். இச்சிறந்த குணம் நம் தேசத்தவர்களுக்கு அத்தியந்த அவசியமானது.

இச்சிறு புஸ்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்து அதிலுள்ள அருமையான விஷயங்களைக் கிரகித்து நற்பலனடைவார்களென்று நம்புகிறோம்.

## THE SAPPHIRE RING

## நீலக்கல் மோதிரம்

சீமையிலே ஒரு அம்மாள் இருந்தார்கள். அவர்கள் கூடியமட்டும் நல்ல ஸ்திதியிலுள்ளவர்கள். அவர்கள் தம்முடைய பணத்தை நகை, நட்டு அல்லது விலையுயர்ந்த உடுப்புக்கள் வாங்குகிறதிற் செலவு செய்யாமல் சாதாரணமான ஜீவனம் பண்ணிக்கொண்டு மிச்சமான பணத்தை ஏழைகளுக்கு உதவிசெய்வதிலும் செலவிட்டு வந்தார்கள். இந்த அம்மாள் எந்தவிதத்திலும் தன்னை அலங்காரம் செய்துகொள்ளாவிட்டாலும் ஒரு நீலக்கல் மோதிரம் வாங்கித் தன் விரலில் அணிந்துகொள்ளவேண்டுமென்ற ஒரு ஆசை இவர்களுக்கு இருந்தது.

இதற்காக ஒரு ஷாப்புக்குப் போய்ப் பல மோதிரங்களையும் வாங்கிப் பார்த்தார்கள். அங்கே இவர்கள் விரும்பிய மாதிரி மோதிரம் ஒன்றிருந்தது. அதன் விலை 10 பவுன்.

சில தினங்களுக்குப் பிற்பாடு இவர்கள் 10 பவுன் சேர்த்துக் கையில் எடுத்துக்கொண்டு ஷாப்புக்குப் புறப்படும்போது யாரோ கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. அது அந்த அம்மாளுடைய அண்ணன் மகன். அவர் இருண்ட தேசமாகிய ஆபிரிக்காவில் ஆண்டவருக்காக ஊழியஞ்செய்கிற ஒரு மிஷனெரி. அவர் தம்முடைய அத்தையினிடம் அங்கே உள்ள பரிதாபமான காட்சிகளையும் வேலைக்கு வேண்டிய பணக்கஷ்டத்தையும சொன்னபோது அவர்களுடைய மனது இளகித் தன் கையிலிருந்த 10 பவுனையும் அவரிடம் கொடுத்து 'அப்பா இதையும் உம் வேலைக்காகச் செலவுசெய்யும். இன்னும் உமக்கு

உதவிவேண்டிய காலத்தில் எனக்குத் தெரியப்படுத்தும்; என்னால் கூடிய உதவி செய்கிறேன்' என்று சொன்னார்கள். அவர் அதை அதிக நன்றியறிதலோடு ஏற்றுக்கொண்டு அந்த அம்மாளிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

இந்தக் காரியம் நடந்து வெகுநாள் சென்றபின்பு ஒருநாள் அந்த மிஷனெரி தன் வேலையை முடித்துவிட்டு வருகிற வழியில் ஒரு காட்டைக் கடக்க நேரிட்டது. அப்போது இரண்டு மூன்று கறுப்பு மனிதரும் ஒரு அடிமைப் பெண்ணும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அந்தப் பெண்ணை விலை பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவன் 5 பவுனுக்குக் கொடுக்கும்படி கேட்டான். சொந்தக்காரன் கொடுக்க மனதில்லாதிருந்தான். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த மிஷனெரி 'நான் 10 பவுன் கொடுக்கிறேன். எனக்குத் தருகிறீர்களா' என்று கேட்டார். அவர்கள் அதிக சந்தோஷத்தோடே அவருக்கு விற்றுப்போட்டார்கள்.

அந்தத் துரை அவளை அழைத்துக்கொண்டுபோய் ஒரு பாடசாலையில் சேர்த்தார். அங்கே அவள் குணப்பட்டு நல்ல கிறிஸ்தவளாகி அநேகரை இரட்சகர் அண்டையில் கொண்டுவர ஏதுகரமாயிருந்தாள். பிற்பாடு அந்தத் துரை இந்த விசேஷத்தைத் தன் அத்தைக்குத் தெரியப்படுத்தினபோது அவர்கள் 'ஆகா நான் அநேகநாளாய் விரும்பின நீலக்கல் மோதிரம் இப்போதுதான் எனக்குக் கிடைத்தது' என்று சொல்லி, அதிக சந்தோஷப்பட்டு ஆண்டவரை ஸ்தோத்திரித்தார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ௵ நவம்பர்௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | நட. | 10. 1—16 | 11 | ச. | நட. | 13. 27—43 | 21 | செ. | நட. | 16. 25—34 |
| 2 | வி. | ,, | 10. 17—23 | 12 | ஞா. | ,, | 13. 44—52 | 22 | பு. | ,, | 16. 35—40 |
| 3 | வெ. | ,, | 10. 24—34 | 13 | தி. | ,, | 14 1—18 | 23 | வி. | ,, | 17. 1— 9 |
| 4 | ச. | ,, | 10. 35—48 | 14 | செ. | ,, | 14 19—28 | 24 | வெ. | ,, | 17. 10—22 |
| 5 | ஞா. | ,, | 11. 1—18 | 15 | பு. | ,, | 15. 1—11 | 25 | ச. | ,, | 17. 23—34 |
| 6 | தி. | ,, | 11. 19—30 | 16 | வி. | ,, | 15. 12—29 | 26 | ஞா. | ,, | 18. 1—11 |
| 7 | செ. | ,, | 12. 1—11 | 17 | வெ. | ,, | 15. 30—41 | 27 | தி. | ,, | 18. 12—28 |
| 8 | பு. | ,, | 12. 12—25 | 18 | ச. | ,, | 16. 1— 5 | 28 | செ. | ,, | 19. 1—12 |
| 9 | வி. | ,, | 13. 1—12 | 19 | ஞா. | ,, | 16. 6—15 | 29 | பு. | ,, | 19. 13—22 |
| 10 | வெ. | ,, | 13. 13—26 | 20 | தி. | ,, | 16. 16—24 | 30 | வி. | ,, | 19. 23—41 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS


# மாதர் போதினி

No. 168 டிசெம்பர் 1911 No. 12


## THE PLACE OF THE DURBAR — DELHI


## டில்லி மாநகரம்

மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ மஹாராஜா அவர்கள் நம் தேசத்தில் பட்டாபிஷேக உற்சவம் நடத்த உத்தேசித்திருக்கும் மிக்க கீர்த்திபொருந்திய நகரமாகிய டில்லியைப்பற்றி நமது சகோதரிகள் எல்லோரும் அறிய ஆசையுள்ளவர்களாயிருப்பார்கள் என்று நம்பி இதை இங்கே எழுதுகிறோம். சாதாரணமான ஒரு பட்டணத்தை நம் ராஜா தெரிந்துகொள்வாரா? ஆதிகாலம்தொடங்கி அந்நகரம் மிக்க சீரும் சிறப்பும்பொருந்தி விளங்கினமையால்தான், நமது அரசர் அதைத் தமது பட்டாபிஷேக ஸ்தலமாகத் தெரிந்துகொண்டாரென்பதை ஒருவாறு காட்ட விரும்புகிறோம்.

டில்லி நகரம், நமது தேசத்தில், யமுனா நதியின் வலக்கரையில் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள பழமையான பட்டணம். இது வெகு காலமாக இந்தியாவுக்கு முக்கிய பட்டணமாக இருந்தது.

அந்தப் பட்டணம் கிறிஸ்துவுக்கு 1400 வருஷங்களுக்குமுன் பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரர் முதலில் ஏற்படுத்தியது என்று பலர் நினைக்கிறார்கள். அந்தக் காலத்தில் அதற்கு இந்திரப்பிரஸ்தம் என்று பெயர். பழைய இந்து ராஜாக்களும் ஆப்கானிய ராஜாக்களும் மொகலாய சக்கரவர்த்திகளும் கட்டிய அதிசயமான கட்டடங்கள் அநேகம் அங்கே இருக்கின்றன. அவற்றுள் முதன்மைபெற்றது அங்கேயுள்ள ஸ்தம்பமே. அது இரும்பு, செம்பு, துத்தநாகம் ஆகிய மூன்று லோகங்களாலும் கலந்து செய்யப்பட்டது. இந்தியாவிலுள்ள மகவும் அற்புதமான வேலைகளில் அது ஒன்று.

அது கி. பி. 319-ம் வருஷத்தில் நாட்டியது. ஒரு பழைய இந்து ராஜன் இதைத் தன் ஜயஸ்தம்பமாக நாட்டியிருந்தாலும் இருக்கலாம். அது அடிமுதல் உச்சிவரையில் 23 அடி 8 அங்குலம் உயரமுள்ள கெட்டி ஸ்தம்பம்; கனம் சுமார் 17 டன்னும். இப்பொழுதுதான் நிறுத்தியதுபோல் மெருகு கொஞ்சமும் போகாமல் அது மிகவும் புதிதாகவே காணப்படுகிறது. இத்தன்மை அதற்கு ஏது என்பதை இன்னும் எவரும் தீர்மானமாகக் கண்டறியவில்லை. இப்படிப்பட்ட ஸ்தம்பத்தைப் பழைய இந்துக்கள் எப்படித்தான் செய்தார்களோ! பழைய இந்து நாகரீகத்துக்கு அது ஒரு சிறந்த சாக்ஷியாக இருக்கிறது. காலக்கிரமத்தில் இதற்கடுத்தது அங்கே இடிந்து பாழ்க் கிடக்கும் கோட்டை கொத்தளங்களின் சுவர்களே.




துக்லகபாத் இடிசுவர்கள்

தற்கால டில்லிக்குச் சமீபத்தில் நாலைந்து மைல் தூரத்தில் பிரிதிவிராஜ் என்னும் ரஜபுத்ர அரசன் சுமார் கி. பி. 1189-ம் வருஷத்தில் மஹம்மதிய விரோதிகளுக்குத் தடையாகக் கட்டிய கோட்டையின் சுவர்களில் இடிந்துபோனவைபோக மீதியாக இருப்பவைகளை இன்றைக்கும் நாம் பார்க்கலாம். இவற்றோடு டில்லி ராஜ்யம் இந்துக்களிடமிருந்து மஹம்மதியர்கைக்கு மாறிற்று.

டில்லியை ராஜதானியாகக்கொண்டு இந்தியாவில் அரசு செலுத்திய மஹம்மதியர்களில் முதல்வர் குட் புத்தீன். அவர் கி. பி. 1206 முதல் 1210 வரை அரசாண்டார். அவர் டில்லியில் ஒரு ஸ்தூபி கட்டியிருக்கிறார்.



அதற்கு குட்டுப் மினார் அதாவது குட் புத்தீன் ஸ்தூபி என்று பெயர். அதனால் அவருடைய பேர் அங்கே இன்னும் வழங்கிவருகிறது. அந்த ஸ்தூபி மிகவும் அலங்காரமானது. அதன் உயரம் 238 அடி. அது சந்தனக்கல்லாலும் சலவைக்கல்லாலும் கட்டப்பட்டு



குட்டுப் மினார்

ஐந்து நிலைகளாக வகுக்கப்பட்டிருக்கும் ஓர் ஸ்தூபி. அதற்குள் 379 படிகளுள்ள வளைவான கற்படிக்கட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏறிப்போனால் ஸ்தூபியின் சிகரத்தை அடையலாம். உலகத்திலுள்ள மிகவும் உயரமான ஸ்தூபிகளில் இரண்டாவதும் சிற்ப லக்ஷணங்கள் எல்லாம் செவ்வையாக அமையப்பெற்றதும் இதுவே.

இப்படிச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய டில்லிக்கு இப்பால் இரண்டு விபத்துக்கள் நேர்ந்தன. ருட் புந்தீனுக்குப் பின்வந்த மஹம்மதியர்களில் ஒருவரான முஹம்மத் பின் டோக்ளாக் என்னும் பித்தன் (1325–1351) தன் விஸ்தாரமான ராஜ்ஜியத்துக்கு டில்லி மத்திய ஸ்தானமல்லவென்று எண்ணி அதற்கு 800 மைலுக்கு அப்பால் இருக்கும் தேவகிரியில் தன் குடிகளெல்லாம் பூனை முதலாக எல்லாவற்றுடனும் போய்க் குடியேறும்படி பிரயத்தனம் செய்தார். அப்போதும், அவருக்குப்பின் 1398-ம் வருஷத்தில் இங்கே வந்த தயமூர்லங்க் அடித்த கொள்ளையாலும் செய்த கொலையாலும் டில்லி முழுவதும் பிணக்காடாயிற்று.

அப்புறம் 1526-ம் வருஷத்தில் இந்தியாவில் ஒருவாறு ஸ்திர அரசாட்சியை ஸ்தாபித்தவர் என்று சொல்லக்கூடிய முதல் மொகலாய சக்கரவர்த்தியாகிய பேபர் என்பவரே டில்லியின் பெயரை மறுபடியும் முன்னுக்குக் கொண்டுவந்தார். மேலும் இப்போது இருக்கும் டில்லியின் அமைப்பு அத்தனையும் இந்தப் பரம்பரை அரசர்க்கே உரியது. இக்காலம்தொடங்கி டில்லிக்கு வளர்ச்சியென்றே சொல்லவேண்டும். பேபர் மகன் ஹுமாயூன் 1556-ம் ஆு இறந்ததும் டில்லிக்குத் தெற்கில் இரண்டு மைல் தூரத்தில் ஓர் அழகிய கல்லறை கட்டினார்.


ஆடம்பரமான டில்லி ஷாஜிஹான் காலத்தில் (1627-1658) ஆனது. அவர் கட்டடம் கட்டிய ஷாஜிஹான் என்பதைச் சிறுபிள்ளைகளும் அறிவார்கள். அவர் கட்டிய கட்டடங்களில் அதிகமானவையை டில்லியிலேயே காணலாம். டில்லியில் கட்டிய அரமனையைப் போல் அருமைபெருமை வாய்ந்தது உலகத்தில் வேறெங்கும் இல்லை. அந்த அரமனையில் சலவைக்கல்லாலேயே இயற்றப்பட்ட தீவானி கான் என்ற மண்டபம் இருக்கிறது. அதில் செய்திருக்கிற சித்திரங்களும், அலங்காரங்களும் மிகவும் அற்புதமானவை. இந்த மண்டபத்தில் ரத்தினங்கள் இழைத்து உயிருள்ளவைபோல் காணப்படும் இரண்டு மயில்கள் தாங்கிய சிம்மாசனம் ஒன்று அமைத்திருந்தார். அந்த மண்டபமே அவர் தம்மைக் காணவருகிற அரசர் முதலானவர்களைக் கண்டு பேசுகிற இடம். அதன் சுவரில் பாரஸீகத்தில்,

‘இப்பூமியில் ஒரு சுவர்க்கம் இருப்பதானால் இதுவே அது’

என்று எழுதுவித்திருந்தார். அந்த ஆசனத்தைப் பாரஸீகர்கள் 1739-ம் வருஷத்தில் அங்கிருந்து தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். அதன் விலைமதிப்பு ரூ. 30,000,000 முதல் ரூ. 90, 000,000 வரை இருக்கும் என்கிறார்கள். இந்த மண்டபத்திற்குப் பக்கத்தில் முத்து மசூதி என்ற பிரசித்தமான மசூதி இருக்கிறது. இந்த மசூதியை



விட இன்னும் பெரிதும் விநோதமுமான ஜும்மா மசூதி என்ற வேறொரு கட்டடம் இருக்கிறது. அது 200 அடி நீளமும் 120 அடி அகலமும் உள்ளது. அதன் கோபுரங்கள் 130 அடி உயரமுள்ளவை. அந்த ஊரில் எந்தப் பாகத்தில் இருந்து பார்த்தாலும் அவை வெகு நன்றாய்த் தெரியும்.



திவானி கான் மண்டபம்

1857-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய்க்கலகம்வரையில் டில்லி ராஜ்யம் கை மாறிமாறி வந்து அப்போது அங்கிலேயர் கையில் அகப்பட்டது. அந்தத் தினமே அதற்கு சுபதினமாக ஆரம்பித்து இன்னும் அப்படியே நடந்துவருகிறது. வருகிற டிசெம்பர் மீ 12உயிலும் அங்கே முன் எப்பொழுதும் இந்தியாவில் நடக்காத பெரிய விசேஷம் நடக்கப்போகிறது. அன்று அங்கே போனால் மேலே காட்டிய கட்டடங்களை மாத்திரமல்ல 1752-ம் வருஷத்தில் ஏற்பட்டு 1829-ம் வருஷத்தில் விருத்தியான காலேஜையும் பெரிய யந்திரசாலைகளையும் நூல் நூற்கும் நீராவியந்திரங்கள் அமைந்த கைத்தொழிற்சாலைகளையும் பொருட்காட்சிச் சாலையையும் காணலாம். தற்கால டில்லி நகரம் பாதுஷா ஷாஜிஹான் கட்டிய கோட்டைகொத்தளங்கள் அமைந்ததே. அதன் சுற்றளவு 11 மைல். 11 தலைவாயில் உள்ளது. இது கிழக்கு மேற்கு தெற்குப் பாகங்களோடு

ரயில் சம்பந்தம் உள்ளது. அதன் தெருக்கள் குறுகலானவைகள்தான். அவற்றுள் சந்த்னி சௌக் பெரிய வீதி. அது 90 அடி அகலமும் 1,500 கஜம் நீளமும் ஆனது. இன்னொரு விசாலமான வீதி உண்டு. அதன் அகலம் 120 அடி; நீளம் 1 மைல். அங்கே அருமையான கைத்தொழில்கள் நடக்கின்றன. நாம் வெகு அதிக விலைகொடுத்து வாங்கும் காஷ்மீர ஸால்வைகளுக்கு டில்லியில்தான் ஜரிகை பட்டு முதலியவைகளால் விசித்திர விநோத வேலைப்பாடுகள் செய்கிறார்கள். அவ்விடத்துத் தட்டார்கள் அதிஅற்புதமான வேலைக்காரர்கள்; தந்தத்தில் வெகு நுட்பமான வேலை செய்வார்கள்.

இப்படிப்பட்ட பற்பல விசேஷங்களை உத்தேசித்துத்தான் பரலோகப் பிராப்தியான நமது சக்கரவர்த்தி ஏழாம் எட்வர்ட் அரசருடைய பட்டாபிஷேக சம்பந்தமாக 1903-ம் ௵ முதல்தேதியில் அநேக ராஜாக்களும் ஜனங்களுடைய பிரதிநிதிகளும் வீற்றிருக்க அதிக ஆடம்பரமான முடிசூட்டு வைபவம் அந்நகரத்திலே நடந்தது. அவ்வரசர் எவ்வளவு அருமைபெருமை பொருந்தினவராய் விளங்கினார்.


இப்போது டிசம்பர் ௴ 12௳ மாட்சிமைதங்கிய நமது சக்கரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் மஹாராஜா அவர்களுடைய மகுடாபிஷேக விஷயமாய் நடக்கும் அதியற்புத கோலாகல வைபவச் சிறப்பைக் கேட்டு நம் தேசத்தில் மகிழாதார் யார்? இவர் தமது பிரிய பிதாவைவிட அதிக நன்மைகள் செய்யப்போகிறார் என்பதை நமக்குக் குறிப்பாய்க் காட்டுவதற்காகவே இங்கே வந்து நமது முன்னிலையில் நம் ராஜ்யத்திற்கு ராஜாவாகப் போகிறார். இதற்குமுன் இருந்த ராஜாக்கள் இப்படிச் செய்யவில்லை. இதுவரையிலும் நாம் நமது அரசி அல்லது அரசன் படத்தைமாத்திரம் கண்டு திருப்தி அடையவேண்டியதாயிருந்தது. நம் அரசர் நேரில் வாராமலே முன் நடந்தேறிய பட்டாபிஷேக வைபவந்தானும் சிறப்புற்றதென்றால் இப்போது இவர்தாமே நேரில் வந்திருந்து நடத்தும் முடிசூட்டு வைபவம் நம் எல்லோருடைய மனதையும் கண்ணையும் கவர்வதாக இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்? அவர் இந்தியாவுக்கு டிசம்பர் ௴ 7௳யே விஜயம்செய்கிறார். 12௳தான் பட்டாபிஷேக மகோத்சவம். அன்று மத்தியானம் மகுடவர்த்தனரும் பட்டவர்த்தனரும் ஜனப்பிரதிநிதிகளும் நெருங்கியிருக்கும் அரசர் மகா சபையில் ஏக ஆடம்பரத்துடன் ராஜசாஸனம் வாசிக்கப்படும். அவருக்கு மரியாதையாக 101 வெடிகள் போடுவார்கள். அன்று சாயந்திரம் டில்லிநகர் முழுவதும் விளக்குகள் ஏற்றப்பெற்று எங்கும் ஜகஜோதியாயிருக்கும். கண்ணும் கனதனமும் படைத்தோர் இவ்வைபவங்களை நேரில் கண்டு களிப்பதே அவர்கள் அவைகளை அடைந்ததின் பயன்.



## KING GEORGE'S DAILY LIFE


## நம்முடைய ராஜா ஒவ்வொருநாளும் செய்கிற வேலை என்ன?

நம்முடைய ராஜா ஒவ்வொருநாளும் செய்யவேண்டிய கஷ்டமான வேலைகள் கொஞ்சம் பெயருக்குத்தான் தெரியும். அவர் கையொப்பம் வைப்பதிலேயே அநேக மணிநேரம் செல்லுகிறது. வியாபாரி தன் மண்டியின் கணக்குகளைக் கவனத்தோடு பார்க்கிறதுபோலவே நம்முடைய ராஜாவும் ராஜ்யத்துக்கடுத்தவைகளைப் பார்க்கவேண்டும். அவர் நாள்தோறும் வாசித்து ஆலோசனைசெய்து கையொப்பம் வைக்க



வேண்டிய கடுதாசிகளுக்கு அளவில்லை. அதுமாத்திரமல்ல, அவர் திருச்சபைக்கும் இராணுவங்களுக்கும் கப்பற்சேனைகளுக்கும் தலைவரான படியினாலே இவைகள் மூலமாகக் கிடைக்கிற வேலை கொஞ்சமல்ல. மற்ற ராஜ்யங்களில் நடக்கிற காரியங்களை அவர் அறிந்து அந்தந்த அரசர்களுக்குத் தகுந்தபடி கடிதங்கள் எழுதவேண்டும். நம் இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா முதலிய தேசங்களில் நடக்கும் காரியங்களை அவர் தாமே பத்திரிகைகளில் பார்த்து அறிந்துகொள்வார். அவர் அநேக சபைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் சங்கங்களுக்கும் தலைவரும் சகாயரும் ஆனபடியினாலே இவைகளினாலும்

அநேகம் வேலைகள் உண்டாகும். இன்னும் அரமனைக்குரியவைகளையும் அவர் தாமே செய்யவேண்டும். அவர் உவின்ஸர் (Windsor) சந்திரிங்காம் (Sandringham) என்னும் அரமனைகளில் வாசம்பண்ணும்போது தமது பண்ணையக்காரர்களுடைய காரியங்களைப் பார்த்து அவர்களோடு பேச நேரிடுகிறது. ஒரு பெயர்பெற்ற கனவான் மரித்தால் அல்லது சில ஏழைக் கூலியாட்களுக்குப் பெரிய ஆபத்து வந்தால், அவர் வாசித்துத் துக்கப்பட்டு அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் அநுதாபக் கடிதம் எழுதுவார்.



உவின்ஸர் மாளிகை

அவர் மாதந்தோறும் அநேக விடங்களில் பிரஜைகளுக்குப் பிரசங்கம் பண்ணவேண்டியதினாலே பேசவேண்டிய சங்கதிகள் இவை, அவற்றைப் பேசும் விதம் இப்படி என்று நிதானிப்பதில் இன்னும் அநேகம் வேலை உண்டு. அவர் எங்கேபோனாலும் துரைத்தனத்தார் அவரிடம் வந்து பேசக்கூடிய இடத்தில் இருக்கவேண்டும். விசேஷித்த காரியம் நடந்தால் மந்திரிகள் உடனே அவரிடத்தில் வந்து சங்கதிகளை எல்லாம் சொல்லி அவருடைய அபிப்பிராயம் அறிந்து, செய்யவேண்டியவைகளைப்பற்றிப் பேசுவது அவசியம்.

இப்படி எண்ணிமுடியாத வேலைகளிருக்கும்போது நமது ராஜாவுக்கு சாவகாசம் என்பது இருக்குமா? அவர் அதிகாலையில் எழுந்திருந்து வேலையை நேரத்தோடு தொடங்குவார். இது அவருக்கு வருத்தமல்ல. ஏனென்றால் அவர் சபாநந்தத்திலே சந்தோஷப்படாமல் வேலை செய்வதிலேயே சந்தோஷப்படுபவர். அதுமாத்திர



மல்ல, அவர் எதைச் செய்யத் தொடங்கினாலும், அதற்கு வேண்டியவைகளை எல்லாம் விசாரித்தறிந்து கடைசிவரைக்கும் சரியாய்ச் செய்துமுடிப்பார். இந்த விடாமுயற்சி ராஜாவுக்கும் கூலிக்காரனுக்கும் சிரேஷ்டமானது. சிறுவயதிலும் இந்தக் குணம் அவரிடம் அமைந்திருந்தது. 12-ம் பிராயத்தில் அண்ணனோடுகூட அவர் கப்பற்படை வேலையில் சேர்ந்தார். இவ்விரண்டு இளவரசருக்கும் கப்பல் வேலை கற்பித்த உபாத்தியாயர்கள் ஆரம்பத்தில் அண்ணன்செய்த வேலையை விசேஷமாய்க் கவனித்து அவருக்கே எல்லாம் விவரித்துச் சொன்னார்கள். இதைப் பார்த்து ஜார்ஜ் இளவரசர் ‘நீங்கள் அவரைக் கவனிக்கக்கூடாது. அவருக்கு இனி இந்த வேலை இருக்குமா? எனக்கே எல்லாம் நன்றாய்ச் சொல்லிக்கொடுங்கள்’ என்றார்.

இந்தவிதமாகக் கப்பல் வேலையை எல்லாம் முதலிலிருந்து கற்றுக்கொண்டு அதில் தேர்ந்தவரானார். அவருடைய அண்ணன் மரித்த காலத்தில், இந்தப் பிரியமான கப்பல் வேலையை அவர் கொஞ்சம் நிறுத்தி, ராஜ உத்தியோகத்துக்கடுத்த விஷயங்களை அறியவேண்டும் என்று அதற்குத் தம்மைப் பூரண மனதோடு ஒப்புக்கொடுத்தார். அதி சூல்தீன் தம்முடைய அருமையான தகப்பனாகிய நமது எட்வர்ட் ராஜாவுக்குச் சாவு திடீரென்று வந்துவிட அவர் விட்டுவிட்டுப்போன எல்லா வேலைகளையும் செய்ய நமது ஜார்ஜ் அரசர் ஆயத்தமாயிருந்தார்.

அந்தநாள் முதற்கொண்டு அவர் நாள்தோறும் செய்துவருகிற வேலையைச் சற்று பார்ப்போம்.

அவர் இராத்திரியில் அதிகமான வேலை செய்வதைவிடக் காலையில் நேரத்தோடு எழுந்திருந்து வேலைசெய்வது நலம் என்பதை அறிந்தவராய் தம் ராஜாத்தியோடு காலை 8-மணிக்குச் சாப்பிடுவார். அச்சமயத்தில் இரண்டு பெயரும் சேர்ந்து தாங்கள் அன்றைக்குச் செய்ய வேண்டிய வேலையைப்பற்றிப் பேசுவார்கள். அவர்கள் தனியாகவும், சேர்ந்தும், கூட்டங்களுக்கும், பண்டிகைகளுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் போகப் புறப்படவேண்டிய நேரத்தைக்குறித்து, அதற்கென்று வண்டி, குதிரை, மோட்டார் முதலிய வாகனக்காரர்களுக்கு உத்தரவுபண்ணுவார்கள். தங்களை அன்றைக்குப் பார்க்க வருகிறவர்கள் இன்னின்னார் என்று விசாரித்து அவரவர்களோடு சம்பாஷணை பண்ணவேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்வார்கள். சீனதேசத்து மந்திரியோ, இந்தியா தேசத்து ராஜாவோ பெயர்பெற்ற வித்துவானோ அவரவர்க்கு ஏற்ற சம்பாஷணை இன்னதென்று யோசித்து ராஜா தம்மைத் தயார்ப்படுத்துவார்.

காலையில் அவர் சாப்பிட்ட பிற்பாடு தம் சொந்தக் காயிதங்களை எழுதுவார். இது அவருக்குப் பிரியமான வேலையல்ல. கூடிய

வரையில் இதை ராஜாத்தியே செய்யும்படி விட்டுவிடுவார். ஆனு
லும் தங்கள் பிள்ளைகள் நாள்தோறும் எழுதும் சிறு கடிதங்களை
ராஜா அதிக சந்தோஷத்தோடு வாசித்துப் பதிலும் எழுதுவார்.
மேரி ராஜகுமாரத்தியும் அவளுடைய தம்பிமார்களும் தங்கள் வேலை
யைக்குறித்தும் வாசிக்கிற புஸ்தகங்கள் பாடங்கள் முதலியவைகளைப்
பற்றியும் அடிக்கடி கடிதங்கள் எழுதுவார்கள். இரண்டு பெரிய
மக்கள் கப்பற்படைக் காலேஜில் படித்தபோது, நாள்தோறும் பெற்
றோருக்குக் காயிதம் எழுதினார்கள். ஆல்பர்ட் ராஜகுமாரனுக்கு
நேர்த்தியான படங்கள் வரையத் தெரியும். அவர் தம்முடைய கடிதங்
களுக்குத் திருஷ்டாந்தமாக அவைகளின் ஓரத்தில் சிறு படங்களை
எழுதி அனுப்புவார்.



பிள்ளைகள் தங்களோடுகூட இருக்கிற நேரத்திலோ ராஜாத்தி
ஒவ்வொருநாளும் காலையில் அவர்களைப் பார்க்கப் போவார்கள்.
ராஜாவும் கூடுமானால் அவர்களோடு போவார். அவர்கள் நடக்கை,
படிப்பு, சுகம், விளையாட்டுப்பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும்
விசாரிப்பார். ஆனாலும் அவர் அதிக கண்டிப்பான தகப்பன் அல்ல.
ராஜாத்தி சில சமயங்களில் ஏதோ ஒரு தப்பிதத்துக்குத் தண்டனை
கொடுக்கப்போனால் ராஜா தடை சொல்லுவார். இதற்கு ஒரு கதை
உண்டு. 'இரண்டு சிறு பிள்ளைகள் ஒருநாள் மரத்தினால் செய்த
ஒரு குதிரையைப்பற்றிச் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.
ராஜாத்தி இதைப் பார்த்து அதிக வருத்தப்பட்டு அவர்களைப் பிரித்




துத் தண்டிக்க விரும்பினார்கள். ராஜாவோ 'அவர்களை ஒன்றும்
செய்யவேண்டாம். அவர்கள் சண்டைசெய்து முடித்தால் புத்திவரும்.
அப்பால் சிநேகமாயிருப்பார்கள்' என்று சொன்னார். உடம்பு எப்பொ
ழுதும் சுகமாயிருக்கவேண்டும் என்று ராஜா காலைதோறும் சவாரி
போவார்; அல்லது தோட்டத்திலே உலாவுவார்; அல்லது தம்முடைய
பிள்ளைகளோடு விளையாடுவார்.

இப்படிச் செய்தபிற்பாடு அவர் தாம் உத்தியோகம்செய்யும் அறைக்
குச் சென்று வேலை தொடங்குவார். லார்ட் நோலிஸ் (Lord Knollys)
என்னும் அவருடைய காரியதரிசி அங்கே வந்து, அவர் வாசிக்க
வேண்டிய கடுதாசிகளையும் சாஸனங்களையும் கொடுப்பார். ராஜா
இவைகளை வாசித்துக் கையொப்பம் வைப்பார். அடுத்த அறையில்
மற்ற காரியஸ்தர்கள் நோலிஸ் பிரபு மூலமாக ராஜாவின் உத்தா
வைக் கேட்டு அவைகளுக்கு வேண்டிய பதில் எழுதுவார்கள். இந்த
வேலையிலே ராஜா அதிக சுறுசுறுப்புள்ளவர். அவர் செய்யவேண்டி
யதைச் சீக்கிரத்தில் அறிந்து, உடனே தீர்மானித்துச் சுருக்கமாகச்
சொல்லி எல்லாவற்றையும் முடிப்பார். அவர் கூடியவரையில் அன்
றைக்குச் செய்யவேண்டிய வேலையை அன்றே செய்துமுடிப்பார்.

மத்தியானம் ராஜா சிற்றுண்டிகொள்வார். அப்போது வரும் அவ
ருடைய சிநேகிதரும், பந்து ஜனங்களும், சிலவேளைகளில் பெயர்
பெற்ற கனவான்களும் கூடச் சாப்பிடுவார்கள். வழக்கமாக அவ
ருடைய பெரிய பிள்ளைகளும் வந்து பெற்றோரோடுகூடச் சாப்பிடு
வார்கள். சாப்பிட்ட பிற்பாடு ராஜா மற்ற ராஜதூதர்களையும் சமாதி
களையும் கண்டுபேசுவார். சில சமயங்களில் அவர் உத்தியோகசாலைக்
கும் போய் இன்னும் சொற்பமான வேலைகளைச் செய்வார். அவர்
லண்டன் பட்டணத்தில் இருந்தால் வழக்கமாக ஏதோ ஒரு வேலைக்கு
வெளியே போகவேண்டியதாயிருக்கும்.

அவர் சந்திரிங்காம் அரமனையில் வாசம்பண்ணும் சமயத்தில்
5-மணிக்கு வந்து ராஜாத்தியோடும் பிள்ளைகளோடும் தேயிலைக் கஷா
யம் சாப்பிடுவார். இது எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷமான நேரம்.
பிள்ளைகள் அன்றைக்குச் செய்த வேலையையும் போன இடங்களையும்
சொல்லித் தாங்கள் தருமத்துக்காகச் செய்த கைத்தொழிலையும் தாங்
கள் பிடித்த படங்களையும் காண்பிப்பார்கள். ராஜா பிரதம போஜனம்
பண்ணுமுன் உள்அறையில் வாசித்துக் கடுதாசிகளை எழுதி இன்னும்
வேலைசெய்வார். அவர் பட்டணத்தில் இருக்கும்போது அநேக கூட்
டங்களுக்கும் விருந்துகளுக்கும் போகவேண்டும். அவர் உவின்ஸர்
மாளிகையில் இருந்தால் தாமே அநேக விருந்தாளிகளை அழைத்துக்
கொள்வார்.



பக்கிங்ஹாம் அரமனை



பூர்வகாலத்திலே நம்முடைய அங்கிலேய ராஜாக்கள் எல்லாரும் சாராயம் குடிப்பது வழக்கமாயிருந்தது. ஜார்ஜ் ராஜாவோ சாராயம், பிராண்டி முதலியவை குடிப்பது அரிது. ராஜாத்தி எந்தநேரமும் குடிக்கிறதேயில்லை. அதுமாத்திரமல்ல, இவை பிள்ளைகளுக்கு முழுவதும் விலக்கப்பட்டவை. அவர்கள் பெரிய வயதிலும் குடிக்கமாட்டார்கள் என்கிற ஆசையோடு இவர்களை இப்பொழுதும் அப்படி நடத்துகிறார்கள்.

ராஜா பிறந்த நாள், பண்டிகை முதலிய விசேஷித்த காலங்களில் ராஜாவுக்கு ஆசீர்வாதம் செய்வதில் திராக்ஷரசத்தை அவருடைய சுகத்துக்காக என்று சொல்லிக் குடிப்பது அங்கிலேயருக்குள் நெடுநாளைய வழக்கம். ஆனால் அக்காலங்களிலும் மதுவை உபயோகிக்கக் கூடாது என்ற அபிப்பிராயப்படுபவராய் நமது ராஜா சாராயத்திற்குப் பதிலாக அந்தக் காலங்களில் தண்ணீரையும் உபயோகித்துக்கொள்ளலாம் என்ற உத்தரவு கொடுத்திருக்கிறார்.

பாடுவதிலும், வீணை வாசிப்பதிலும் ராஜாவுக்கு மெத்தப் பிரியம். ராஜாத்தியும் பிள்ளைகளும் இன்பமாகப் பாடுவார்கள். எல்லாரும் இந்தவிதமாய்ச் சங்கீதத்திலே சந்தோஷப்படுவதினாலே சமயம் இருக்கும்போது இதிலேயே சாயந்திர நேரத்தைக் கழிப்பார்கள்.

ராஜாவும் ராஜாத்தியும் ஞாயிற்றுக்கிழமையை எப்பொழுதும் கவனமாய் ஆசரிப்பார்கள். அவர்கள் கப்பலில் பிரயாணம் பண்ணும்போதும், இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா முதலிய தேசங்களில் யாத்திரை போனபோதும் இந்த வழக்கத்தை விட்டுவிடவேயில்லை. அவர்கள் ஒழுங்காய்க் குடும்பத்தோடு கோயிலுக்குப் போவார்கள். ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் கூடியவரையில் ராஜா, ராஜாத்தி, பிள்ளைகள் எல்லாரும் குடும்பமாகச் சேர்ந்து ஞானப்பாட்டுக்களைப் பாடுவார்கள். இது ராஜாத்திக்குச் சிறு வயதிலிருந்து வழக்கமானபடியினாலே அது அவர்களுக்கு மெத்தப் பிரியம்.

சனிக்கிழமை சாயந்திரம் பிள்ளைகள் எல்லோரும் வழக்கமாகத் தருமத்துக்காக ஏதோ ஒரு வேலை செய்வார்கள். மேரி ராஜகுமாரத்தி சித்திரத்தையல் தைப்பார்கள். அண்ணன் தம்பிமார் தச்சுவேலையோ, படம் வரைதலோ செய்து விற்று அதினால் வரும் பணத்தையெல்லாம் ஏழைப் பிள்ளைகளுக்கும் வியாதியஸ்தருக்கும் கொடுப்பார்கள். இதிலும் மற்ற எல்லா விஷயங்களிலும் ராஜாவும் ராஜாத்தியும் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கிறார்கள்.

## THE THREE SIEVES

## மூன்று சல்லடைகள்

ஒரு பெண்பாடசாலையில் அநேகம் பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். அதில் கமலா என்ற ஒரு பெண் லீலா என்ற ஒரு பெண்ணைப் பார்த்து, 'லீலா, நான் கிருபாவைப்பற்றி ஒரு சங்கதி கேள்விப்பட்டேன். இங்கே வா, நான் உன் காதுக்குள்ளே அதைச் சொல்லுகிறேன்' என்றாள். அப்போது அதைக் கேட்டுக்கொண்டிருந்த உபாத்திச்சியம்மாள் கமலாவைப் பார்த்து, 'கமலா, நீ அந்தக் கதையைச் சொல்லுமுன் அது மூன்று சல்லடையில் சலிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும்' என்றார்கள்.

கமலா.—'என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் சொல்லுகிறது எனக்கு விளங்கவில்லையே.'

உபாத்திச்சியம்மாள்.—'கமலா, முதலாவது, உன் கதை உண்மையானதா என்று பார்.'

கமலா.—'உண்மை தான் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், கிருபாவினுடைய சிநேகிதியாகிய சகுணாதான் அதை எனக்குச் சொன்னாள்.'

உபாத்திச்சி.—அவள் நல்ல சிநேகிதிதான் போ, தன் சிநேகிதியைப்பற்றி உன்னிடம் சொன்னாளாக்கும். ஆனால் அது உண்மையான கதை என்றாலும் பட்சமுள்ள கதைதானா?'

கமலா, தலை கவிழ்ந்துகொண்டு, 'அது பட்சமான கதையல்லவென்று எண்ணுகிறேன். ஆனால் வேடிக்கையான சங்கதிதான்.'

உபாத்திச்சி.—'இன்னொரு கேள்வி. வேடிக்கையான அந்தப் பட்சமில்லாத கதையைச் சொல்லுவது அதிக அவசியமா?'

கமலா.—'இல்லை அம்மா, அதைச் சொல்லுவது அவசியமேயில்லை.' கமலா உண்மையை மறைக்கத்தக்க ஒரு பெண் அல்ல. அதினாலே அவள் அந்தச் சங்கதியை அம்மட்டோடே நிறுத்திவிட்டாள்.

பாருங்கள் நாமும் மற்றவர்களைப்பற்றிப் பேசத் துணியும்போது இம்மூன்று கேள்விகளையும் கேட்டுப் பேசுவோமானால் அதினால் அதிக பிரயோஜனம் உண்டாகும் என்பதற்கு எள்ளளவும் சந்தேகமில்லை.



## INVENTIONS PREDICTED BY EDISON

## யெடிஸன் சொல்லும் வருங்காலப் பலன்

1. துணி, பொத்தான், நூல், காகிதம், பசை ஆகிய இவைகளை யந்திரத்தின் ஒரு மூலையில் போட்டால் அவைகள் எல்லாம் வேண்டுமான உடுப்புகளாகி அட்டைப்பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டு மற்றொரு மூலையில் வரும்.

2. நாற்காலி மேஜை முதலியவைகளைச் செய்ய மரத்தை உபயோகிக்காமல் உருக்கை உபயோகிப்பார்கள். உருக்குச் சாமான் மரச்சாமானைவிட ஐந்து மடங்கு விலை குறைவு. மேலும் கொஞ்சம் உருக்கே போதுமாகையால் உருக்கால் செய்யப்பட்ட நாற்காலி மேஜைகள் வெகு லகுவாயிருக்கும். கனமே இருக்காது. எந்த மரத்தின் நிறத்தையும் உருக்குக்குப் பூசலாம்.

3. புஸ்தகங்கள் அச்சடிக்க இனி காகிதத்தை உபயோகிக்காமல் நிக்கல் லோகத்தைத் தகடுதகடாக அடித்து அதையே உபயோகிப்பார்கள். நிக்கல் என்பது, பொன், வெள்ளி, இரும்பு இவைகளைப் போன்ற ஒரு லோகம். நமது தேசத்தில் வழங்கும் ஒரு அணா நாணயம் நிக்கல் லோகத்தால் ஆனது. இருபதினாயிரத்தில் ஒரு பங்குள்ள இன்ச் மந்தமான நிக்கல் தகடு சாதாரணக் காகிதத்தைப்பார்க்கிலும் விலை சரசமானது; மடிக்க மடிக்கக் கிழியாமல் விறைத்து நிற்கக்கூடியது; நன்றாயும் வளையும். அது அச்சுமையை உறிஞ்சிக்கொள்ளும். நாற்பதினாயிரம் பக்கங்கள்கொண்ட நிக்கல் புஸ்தகம் இரண்டு இன்ச் மாத்திரமே இருக்கும். அதன் எடையும் ஒரு இராத்தல்தான். அந்தப் புஸ்தகத்தின் விலையும் மூன்றேமுக்கால் ரூபாய்தான்.

4. இப்போது இருக்கும் விவசாயச் சாமான்களுக்குப் பதிலாக இனிமேல் எல்லாம் மின்சாரத்தாலேயே நடக்கும். வருங்காலக் குடியானவர்கள் குடித்தனம் தெரிந்தவர்களாகமாத்திரம் இருக்காமல் தாவர சாஸ்திரிகளாகவும், பூமி ரஸவாத சாஸ்திரிகளாகவும் ராஜ்ய தர்ம நிபுணர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் வீட்டு மாடியில் உட்கார்ந்தபடியே மின்சாரத்தால் தோட்டவேலைகளையெல்லாம் செய்து முடித்துக்கொள்வார்கள். ஒரு பில்லையை அமுக்கினால் இப்போது ஆபீஸ் எல்லாம் விளக்குகள் பிரகாசிக்கவோ, ஆளைக் கூப்பிடவோ, விசிறி வீசவோ நடப்பதுபோல் மேலே சொன்னவைகளும் சர்வ சாதாரணமாய்விடும்.

5. இரும்பு செம்பு முதலிய சாதாரண தாழ்ந்த லோகங்களையும் மேலான விலையுயர்ந்த பொன் ஆக்கிவிடுவார்கள். இது நேற்றுவரைக்

கும் அறிவீனக் கனவு என்றெண்ணியிருந்தது. அப்படி மாற்றுவதானால் அது வெகு அதிசயமே. கனம் பேடிஸன் என்னவோ அது நடப்பது திண்ணம் என்கிறார். இப்படியே இருந்து தங்கம் செய்யவும் ஒரு வழி கண்டுபிடித்துவிடுவார்கள். அப்போது தங்கத்தை எத்தேசத்தாரும் நாணயமாகவோ அல்லது பண்டமாற்றாகவோ வழங்கார்களாம். ஏனெனில் தங்கத்தை எவனும் எளிதில் செய்யக்கூடியவனாய் விடுவான்.

மேலே சொன்னவைகள் எல்லாம் நடபடிக்கு வந்துசேர வெகு காலம் ஆகாது என்பதே கனம் பேடிஸன் கொள்கை.

## KINDERGARTEN SONG

### ஆவியின் கனி

பல்லவி

ஓ மகிழம்பூவே, மகிழம்பூவே
மகிழச் செய்குவாயே இன்பமடையச்
செய்குவாயே, செய்குவாயே, செய்குவாயே.

1. அன்பின்பூவே அன்பின்பூவே அருள்வாய்
இத்தருணம் ஆசீர்வாதம் தந்திடுமே— ஓ! மகி.

2. இன்பபூவை இன்பபூவை நீர் ஈந்திடும்
இத்தருணம் நாம் இரக்கம் பெறுவோமே— ஓ! மகி.

3. சமாதானம் என்னும் சற்குண பூவைநீர்
தயவாய் தந்திடுமே நாங்கள் வாழ்ந்திடுவோமே— ஓ! மகி.

4. பொறுமை என்னும் புண்ணிய பூவைநீர்
புகழ்ந்து தந்திடுவீர் உமைப் போற்றிப்பாடவே— ஓ! மகி.

5. சாந்தம் என்னும் சத்திய பூவைநீர்
தழைக்க தந்திடுவீர் நாங்கள் தாழ்ந்து வாழ்கவே— ஓ! மகி.

6. இச்சையடக்கம் என்னும் இன்ப பூவைநீர்
இன்பமாய்த் தந்திடுமே நாங்கள் உண்மையாய்ப்போற்றவே—ஓ!

7. இப்படியாக ஆவியின் கனிகள் ஒன்பதும்
தந்திடுமே நாங்கள் என்றும் போற்றவே— ஓ! மகி.



## TRAINING OUR CHILDREN

### பிள்ளைகளை வளர்க்கவேண்டிய விதம்

பிள்ளைகளை நல்ல மாதிரியிலே வளர்க்கவேண்டியது பெற்றோரைப் பொறுத்த கடமை.

‘சிறுமையில் கல்வி சிலையிலெழுத்து’ என்ற பழமொழிப்படி பிள்ளைகள் சிறு பிராயத்திலே கற்றுக்கொள்ளுகிற பாடம் அவர்கள் ஜீவகாலம் முழுவதிலும் அவர்களிலே கிரியைசெய்யும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு பிள்ளை படித்து, உயர்ந்த உத்தியோகம் பெற்று, உலகத்திலே பேரெடுத்துப் பெரியவனாகிறது முக்கியமான காரியந்தான். ஆனால் அவன் குணசாலியாயுமிருப்பது அதிலும் அதிக முக்கியம்.

ஒரு பிள்ளையின் பிராயத்தை இரண்டு பங்காகப் பிரிக்கலாம். முதல் ஏழு வயதுவரைக்கும் குழந்தைப் பருவம், ஏழுமுதல் பதினாலு வயதுவரைக்கும் பிள்ளைப் பருவம்.

*குழந்தைப் பருவம்.*

இதில் முதல் ஏழுபிராயத்திலும் பிள்ளைகளுக்கு ஏற்படும் குணத்திற்குப் பெற்றோரே பொறுப்பாக இருக்கிறார்கள். ஐந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள், பார்வையினாலே அதிகமாய்க் கற்றுக்கொள்வார்களேயன்றி கேள்வியினாலே அதிகமாய்க் கற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் இந்த நிலைமையில் எந்தக் காரியத்தையும் பெற்றோரைப்போலவே செய்கிறார்கள். எதையும் லேசில் நம்பிக்கொள்ளுகிறார்கள். எதைப்பற்றியும் அறிய ஆசைப்படுகிறார்கள். வெளியே போகவும், வேடிக்கை பார்க்கவும் பிரியப்படுகிறார்கள். இது எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டாது. ஆனாலும் பெற்றோர் பிள்ளைகளுடைய குணங்களை அறிந்து அவர்களை ஏற்றபடி நடத்த முயலவேண்டும்.

*பிள்ளைப் பருவம்.*

இதைப் பள்ளிக்கூடத்துப் பிராயம் என்று சொல்லலாம். இந்த வயதில் பிள்ளைகளுக்குத் தேக அப்பியாசத்தில் அதிக ஆவல் உண்டாகும். சுயாதீனம், சிநேகிதரைச் சம்பாதித்தல், தமக்குவேண்டிய பொருளைத் தெரிந்துகொள்ளுதல் முதலிய குணங்கள் ஏற்படும். இந்தப் பிராயத்தில் பிள்ளைகள் தேர்ச்சியடைவதும், கெட்டுப்போவதும், அவர்கள் முந்தின பிராயத்தில் எப்படி வளர்க்கப்பட்டார்களோ அதற்கு ஏற்றதாகவேயிருக்கும்.

*பிள்ளைகள் வளர்ப்பில் விலக்கவேண்டிய தீமைகள்.*

பிள்ளைகளை வளர்க்கிற விஷயத்தில் ஆங்கிலேயரிடத்திலிருந்தும் ஜப்பானியரிடத்திலிருந்தும் நாம் அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

ஜப்பான் தேசத்திலே ஒரு பிள்ளை ஆறுமாசத்துக் குழந்தையாயிருக்கும்போதே, அதற்கு அடக்கம், கீழ்ப்படிதல் ஆகிய இவ்விரண்டு விசேஷித்த குணங்களையும் கற்றுக்கொடுக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இது எப்படியென்று கேளுங்கள் :

ஜப்பான் தேசத்திற்குப் போயிருந்த ஒரு ஆங்கிலேய துரைசானி ஒருநாள் ஒரு கடைக்குப் போக நேரிட்டதாம். அங்கே ஓர் ஜப்பானிய குடும்பத்தாரும் வந்திருந்தார்களாம். அவர்கள் அந்த அம்மாளைக் கண்டவுடனே தங்கள் தேசவழக்கத்தின்படி அவர்களுக்கு வந்தனம் செய்தார்களாம். அப்போது இரண்டுவயதுள்ள ஒரு குழந்தை தன் தாயார் தோளின்மேல் தூங்கிக்கொண்டிருந்ததாம். அதை எழுப்பி அந்த அம்மாளுக்கு வந்தனம் செய்யச் சொன்னார்களாம். அது உடனே வந்தனம் செய்ததாம். பிற்பாடு தோளின்மேல் போட்டுக்கொண்டார்களாம். அது உடனே மறுபடியும் தூங்கிவிட்டதாம். இதைக் கேட்கும்போது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! நம்முடைய தேசத்தில் இரண்டுவயதல்ல பன்னிரண்டு வயதுள்ள பிள்ளையை தூக்கத்தில் எழுப்பி ஏதாவது வேலை ஏவினால் அதின் முடிவு என்னவாயிருக்கும் என்பது நமக்குத் தெரியுமே.

சில வீடுகளில், பிள்ளைகளுக்கு மட்டுக்குமிஞ்சிச் செல்லம் கொடுத்துக் கெடுத்துப்போடுகிறார்கள். பிள்ளைகளை அருமைபெருமையாய் வைத்திருப்பது பெற்றோரின் கடமைதான். ஆனால் அவர்கள் மனம் போன போக்கிலே அவர்களை வளரவிட்டு அவர்களுக்குச் செல்லம் கொடுப்பது சரியல்ல. மனுஷர் யாவருக்கும், பிறக்கும்போதே அநேக துர்க்குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கோபம், தன்னயம், பொறாமை, பெருமை ஆகிய இவைகளை எல்லாரிடத்திலும் காணலாம். ஆகையினாலே பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை மனம்போன போக்கிலே விட்டுவிடாமல் அவர்களைச் சீர்திருத்தப் பார்க்கவேண்டும். அநேக வீடுகளில் பிள்ளைகளுடைய கெட்ட குணத்தினாலே அதிக சமாதானக் குறைச்சல் உண்டாகிறது என்பதற்குச் சந்தேகமில்லை.

பிள்ளைகள் கேட்ட சாமான்களையெல்லாம் உடனே வாங்கிக் கொடுக்கக்கூடாது. அவர்கள் விரும்பின இடத்திற்கெல்லாம் போக விடக்கூடாது. அவர்கள் நல்ல குணங்களை அவர்களுக்கு எதிராக அதிகமாய்ப் புகழக்கூடாது. அவர்கள் தப்பிதம் செய்யும்போது அன்பினால் அவர்களைத் திருத்தப் பார்க்கவேண்டும். அதற்கும் அவர்கள் அடங்காவிட்டால் குற்றத்திற்கேற்ற தண்டனை அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் பிள்ளைகள் வீணாய்க் கெட்டுப்போவார்கள்.

பிள்ளைகள் நல்ல பெயரெடுக்கவேண்டுமானால் இப்போதே அவர்கள் பெற்றோர் சொல்லுக்குக் கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படிதல்



தான் அவர்கள் முதலாவது படிக்கவேண்டிய முக்கியமான பாடம்.

இதை நிவிர்த்தி செய்யும் வகை.

தாய் வார்த்தை மீறக்கூடாது. தடுத்து மறு வார்த்தை பேசக்கூடாது. தாய் ஒரு வார்த்தை சொன்னால் பிள்ளை பத்து வார்த்தை பேசக்கூடாது. அப்படிப் பேச இடங்கொடுத்தால் அது பிற்காலத்தில் தீமையாய் முடியும்.

பிள்ளைகளை நல்ல மார்க்கத்தில் வளர்க்கவேண்டுமென்றால் நாம் கவனிக்கவேண்டிய சில காரியங்களுண்டு. அவை என்னவென்றால், பிள்ளைகளுக்குக் கட்டளை கொடுக்கவேண்டிய விஷயத்தில் தாயும் தகப்பனும் ஒருமித்துப் போகவேண்டும். தாய் கண்டிக்கும்போது தகப்பன் பிள்ளைக்குச் சகாயமாய்ப் பேசக்கூடாது. அப்படிச் செய்தால் தாய் அநியாயம் செய்கிறதுபோல் பிள்ளையின் மனதில் பட்டுவிடும். தாயின் மேல் உள்ள பாசமும் குறையும், அவளுக்கு உள்ள பயமும் நீங்கிப்போகும். பொய் சொல்லக்கூடாது என்று பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்துப் பெற்றோரே விளையாட்டுக்காகவாவது பொய் சொன்னால் பிள்ளையும் அந்த மாதிரியைத்தான் பின்பற்றும். எல்லாவகையிலும் போதனையைவிடச் சாதனையே நன்று. இன்னும் பிள்ளைகளை வைத்துக்கொண்டு பல காரியங்களையும் அவர்கள் காதுகேட்கப் பேசக்கூடாது. அநேக வீடுகளில் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றுகூடி உட்கார்ந்து அயல் வீட்டுக் குற்றங்குறைகளை எடுத்துரைப்பது வழக்கம். இது முழுத் தப்பிதம். சுத்தம், கீழ்ப்படிதல், பொறுமை, பட்சம் முதலிய பாடங்களைத் தாய்தகப்பன்மார் தங்கள் பேச்சினால் மாத்திரமல்ல தங்கள் செய்கையினாலேயும் காட்டுவார்களானால் அதில் பிரயோஜனம் உண்டாகும்.

பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான் என்றும், தகப்பன் தன்னை நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறான் என்றும் நம்முடைய சத்தியவேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது. இதற்கு அநேகர் செவிகொடுக்கிறதில்லை. இப்படிச் செய்யாமல், சிறு பிராயத்திலேயே மிஞ்சவிட்டுப் பின்பு கஷ்டப்படுவதில் லாபமென்ன? சிறு பிள்ளைதானே இப்போது செல்லம்தான் கொடுக்கவேண்டும். இருக்க இருக்கப் பிள்ளைக்கு தன்னாலே புத்திவருமென்று இருந்தால் மோசம்.

ஒரு பிள்ளையைக் கீழ்ப்படியச் செய்யவேண்டுமானால் நான் அதற்கு ஒரு யோசனை சொல்லுகிறேன் கேளுங்கள். நாம் ஒரு பிள்ளைக்கு ஒரு கட்டளை கொடுக்கும்போது தீர யோசிக்கவேண்டும். அந்தக் கட்டளை பிள்ளை செய்யக்கூடியதா? அதின் சக்திக்கேற்றதா? என்று பார்க்கவேண்டும். கொடுத்த கட்டளையை லேசில் மாற்றக்கூடாது.

ஒவ்வொரு பிள்ளையினுடைய குணத்தையும் பெற்றோர் அறிந்து அதற்கேற்றபடி அவர்களை நடத்தவேண்டும். சில பிள்ளைகளுக்கு

அன்பு போதும், சிலருக்கு அடிதான் உதவும். அவர்களை அதிக கண்டிப்புச் செய்யாமல் நயமும் பயமுமாய் நடத்தவேண்டும். அவர்கள் குற்றம் செய்யும்போது எப்போதும் சினந்தமுகம் காட்டாமல் சில சமயங்களில் சிரித்தமுகம் காட்டவேண்டும். அப்போது அது அவர்கள் மனதில் தைக்கும். பிள்ளைகள் தெரியாத்தனமாய்க் குற்றம் செய்யும்போது அவர்களைத் தண்டிக்கக்கூடாது. முதலாவது அவர்கள் குற்றத்தை எடுத்துக் காட்டவேண்டும். திரும்பவும் அவர்கள் செய்யத் துணிந்தால் குற்றத்திற்கேற்ற தண்டனை கொடுக்கலாம். நாகரீகம் விர்த்தியாகிற இந்தக் காலத்தில் பிள்ளைகளை அடிக்காமல் அன்பினாலே சீர்ப்படுத்துவதுதான் கண்ணியமாய் எண்ணப்படுகிறது.

**பிள்ளைகளைக் கண்டிக்கவேண்டிய விதம்.**

**பெற்றோருடைய கடமை.**

தங்கள் பிள்ளைகள் நல்லவர்களாக வேண்டுமென்று விரும்புகிற பெற்றோர் தாங்களே நல்லவர்களாயிருக்கவேண்டும்.

இன்னும் வேலை ஒழிந்த நேரங்களில் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லி, நல்ல கதைகளை அவர்களுக்குச் சொல்லுவதினாலும் நல்ல பூக்களையும், படங்களையும் காட்டுவதினாலும் அவர்கள் புத்தியை அபிவிர்த்தி செய்யவேண்டும். இன்னும் தங்களுடைய நிலைமைக்கேற்றபடி பிள்ளைகளை அதிக சந்தோஷமாய் வைத்திருக்கப் பிரயாசப்படவேண்டும். 'பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்' என்று நமது சத்தியவேதம் சொல்லுகிறது. நாம் இதை மறந்துபோகாமல் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவை அவருக்கேற்ற பாதையில் நடத்த அருள்நிறைந்த கடவுள் அருள்புரிவாராக.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1911 ஆம் டிசெம்பர்மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | நட. | 20. | 1—16 | 11 | தி. | நட. | 23. | 26—35 | 21 | வி. | நட. | 27. | 30—44 |
| 2 | ச. | ,, | 20. | 17—27 | 12 | செ. | ,, | 24. | 1—9 | 22 | வெ. | ,, | 28. | 1—10 |
| 3 | ஞா. | ,, | 20. | 28—38 | 13 | பு. | ,, | 24. | 10—27 | 23 | ச. | ,, | 28. | 11—22 |
| 4 | தி. | ,, | 21. | 1—14 | 14 | வி. | ,, | 25. | 1—12 | 24 | ஞா. | ,, | 28. | 23—31 |
| 5 | செ. | ,, | 21. | 15—26 | 15 | வெ. | ,, | 25. | 13—27 | 25 | தி. | 2 தீமோ. | 1. | 1—14 |
| 6 | பு. | ,, | 21. | 27—40 | 16 | ச. | ,, | 26. | 1—11 | 26 | செ. | ,, | 1. | 15—18 |
| 7 | வி. | ,, | 22. | 1—21 | 17 | ஞா. | ,, | 26. | 12—23 | 27 | பு. | ,, | 2. | 1—13 |
| 8 | வெ. | ,, | 22. | 22—30 | 18 | தி. | ,, | 26. | 24—32 | 28 | வி. | ,, | 2. | 14—26 |
| 9 | ச. | ,, | 23. | 1—10 | 19 | செ. | ,, | 27. | 1—13 | 29 | வெ. | ,, | 3. | 1—9 |
| 10 | ஞா. | ,, | 23. | 11—25 | 20 | பு. | ,, | 27. | 14—29 | 31 | ஞா. | ,, | 4. | 16—22 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS




# மாதர் போதினி

No. 169 ஜனவரி 1912 No. 1


## FROM 'THE CHRISTMAS CAROL'

By Dickens

## இராத்திரியில் குணம் மாறின லோபி

முன்னொரு காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தின நாள் சாயந்தரம் ஒருவன் தன்னுடைய ஆபீஸ் அறையில் இருந்தான். அத்தேசத்தில் கிறிஸ்மஸ் காலத்தில் சொல்லிமுடியாத குளிர்; சாயந்தரம் நாலு மணிக்குள்ளே இருட்டாய்விடும். அவன் பணக்காரனாயிருந்தாலும் லோபியானபடியால் குளிரும் இருளும் அதிகமாயிருந்தும் அவ்வறையில் நெருப்பும் விளக்கும் வெகு சொற்பமாகவே வைத்திருப்பது வழக்கம்.

வெகுகாலமாய்ச் சொற்ப சம்பளத்துக்கு உண்மையாய் வேலைசெய்துகொண்டிருந்த **அவனுடைய** குமாஸ்தா அவனிடம் வந்து 'ஐயா! நாளைக்கு கிறிஸ்மஸ் பண்டிகையானபடியால் எனக்கு ரஜா கொடுக்க வேண்டும்' என்று கேட்டதற்கு, அவன் 'ஏனடா! இதென்ன அநியாயம்? நீ ஒரு நாள் முழுவதும் வேலை செய்யாமல் இருப்பதற்கு நான் சம்பளம் கொடுப்பானேன்! கிறிஸ்மஸ் பெரிய காரியமா! அதெல்லாம் புத்தியீனம்' என்று கோபமாய்ச் சொன்னான். அதற்குக் குமாஸ்தா 'ஐயா! இது வருஷத்துக்கு ஒரு நாள்' என்று தாழ்மையாய்ச் சொன்னான். 'நான் உத்தரவு கொடுக்கிறேன், ஆனால் நீ நாளையன்று சரியான வேளைக்கு வா, பிந்தி வாராதே' என்று எஜமான் சொன்னான்.

அத்தருணத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். குமாஸ்தா அதைத் திறக்க ஒரு பெரிய மனுஷன் உள்ளே வந்து கிறிஸ்மஸ் வந்தனம் சொல்லி, 'ஐயா! இந்தச் சந்தோஷமான காலத்தில் கஷ்டப்படுகிற ஏழைகளுக்குச் சகாயத்தையும் சந்தோஷத்தையும் கொடுப்பது தகும். இவ்வுத்தம வேலையில் பங்குபெற உங்களுக்கும் பிரியமாயிருக்குமென்று நம்புகிறேன். நீங்கள் எவ்வளவு கொடுப்பீர்கள்' என்று கேட்

டான். 'ஒரு காசுகூடக் கொடுக்கமாட்டேன். ஏழைகளா! அவர்கள் சோம்பேறிகள், துஷ்டர்கள். அவர்களுக்குச் சிறைச்சாலைகள் இல்லையா? நான் வரி கொடுக்கிறேன். ஏழைகளுக்கு வேறென்ன உதவி வேண்டியது? அது போதும்' என்று அந்த லோபி சொன்னான். 'இல்லை ஐயா! அப்படியல்ல' என்று அப்பெரியவர் ஏதோ சொல்லத் தொடங்கினவுடனே அந்த லோபி 'ஐயா நீங்கள் எத்தனை காரணங்களை எடுத்துச் சொன்னாலும் நான் கவனிக்கமாட்டேன். ஏழைகளைப் பற்றி எனக்கு அக்கரையில்லை' என்றான். அப்பெரியவர் அதிக விசனத்தோடு போய்விட்டார்.

அதற்குப் பிறகு சில பிள்ளைகள் வெளியே நின்று ஒரு கிறிஸ்மஸ் பாட்டைப் பாடத் தொடங்கினார்கள். உடனே அந்த லோபி ஒரு தடியை எடுத்து அவர்களைக் கோபித்துத் துரத்திவிட்டான். அப்புறம் குமாஸ்தாவை அனுப்பிவிட்டு அவன் தன் ஆபீஸ் கதவைப் பூட்டிக் கொண்டு தன் சந்தோஷமற்ற வீட்டுக்குப் போய்விட்டான். குமாஸ்தா ஏழையாயினும் சந்தோஷத்தோடு தன் வீட்டுக்குப் போனான். அங்கே எல்லாம் சுத்தமாயும் சந்தோஷமாயும் இருந்தது. அவன் மனைவியும் பிள்ளைகளும் அவனை அதிக அன்புடன் எதிர்கொண்டு அழைத்துக் கொண்டுபோனார்கள். அந்த லோபிக்கோ மனைவி மக்களுமில்லை, சினேகிதருமில்லை. பண ஆசையினாலே மற்றவர்களிடத்தில் கடினமாயிருந்த அவனை மற்றவர்கள் எப்படி நேசிப்பார்கள்! அவனுடன் எப்படிக் கொண்டாடுவார்கள்? அவன் தன்னந்தனியாகத்தானிருக்கவேண்டும். அவனுடைய அறையில் ஒரே ஒரு சிறிய விளக்கு உண்டு. அவன் கொஞ்சம் சாப்பிட்ட பிறகு தன் கணக்குப் புஸ்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பத்துமணி ஆயிற்று. படுக்கைக்குப் போக எழுந்தான். திடீரென்று கலகலவென்று சங்கிலிச் சத்தம்போல ஒரு சத்தம் கேட்டது. அவன் அதைக் கவனமாய்க் கேட்டு அதென்னவோ என்று யோசிக்கையில் ஒரு ரூபம் அவனிடம் வந்ததாகக் கண்டான். அந்தத் தோற்றம் அக்கிறிஸ்மஸ் காலத்துக்கு ஏழு வருஷங்களுக்குமுன் இறந்துபோன அவன் கூட்டு வியாபாரியின் ரூபத்தைப்போல இருந்தது. அது ஒரு பெரிய சங்கிலியால் கட்டப்பட்டிருந்தது. அச்சங்கிலி பணப்பெட்டிகளாலும் சாவிகளாலும் கணக்குப் புஸ்தகங்களாலும் பணப்பைகளாலும் செய்யப்பட்டிருந்தது. அந்த லோபி பயந்து 'பங்காளியே! எங்கே வந்தாய்?' என்று கேட்டான். அதற்கு அந்த ரூபம், உன்னை எச்சரிக்கைசெய்ய வந்தேன். நான் இங்கே இருந்தபோது யாருக்கும் நன்மை செய்ததேயில்லை. எப்பொழுதும் பணமே கதியாயிருந்தேன். ஆதலால் இப்போது நான் இடைவிடாமல் ஏழை



களின் வேதனையையும் கஷ்டத்தையும் துக்கத்தையும் பார்க்கவேண்டியதுதானே. இச்சங்கிலியினிமித்தம் நான் அவர்களுக்கு உதவிசெய்ய முடியாது. என்னுடைய துக்கத்தையும் மனவேதனையையும் என்னவென்று சொல்லுவேன். விசேஷமாய் கிறிஸ்மஸ் காலத்தில் விசனப்படுகிறேன். ஐயோ! என் கண் என் எப்போதும் பணத்தின் மேலேயே நாட்டமாயிருந்தது! அந்த லாயத்துக்கு ஞானிகளை நடத்தின நட்சத்திரத்தைக் கவனியாமல் போனேனே! அதைக் கவனித்திருந்தால் அந்த ஒளி என்னையும் ஏழைகளின் வீடுகளுக்கு நடத்தியிருக்கும். பங்காளியே! உன் முடிவு என் முடிவைப்போல இராதபடிக்கு எச்சரிக்கையாயிரு. இக்காரியத்தைத் தெளிவாய் உனக்குக் காண்பிக்க மூன்று தூதர்கள் வருவார்கள். அவர்கள் சொல்லும் காரியங்களைக் கவனி' என்று புலம்பிப் புலம்பிச் சொல்லி அந்த ரூபம் மறைந்துவிட்டது.

அந்த லோபி விசனத்தோடு படுக்கைக்குப் போனான். நடுராத்திரியில் அவன் இன்னொரு தோற்றம் தன் படுக்கையின் பக்கத்தில் நிற்கிறதைக் கண்டான். அது வெண்வஸ்திரம் தரித்த ஒரு சிறு பிள்ளையைப்போலிருந்தது. அதின் கையில் சில கிறிஸ்மஸ் புஷ்பங்களிருந்தன. அதின் முகத்திலிருந்து ஒளி வீசினது. அந்த லோபி அதைப் பார்த்து 'நீ யார்?' என்றான். அது 'நான் கடந்துபோன உன் கிறிஸ்மஸ் நாட்கள்' என்று சொல்லி அவன் கையைப் பிடித்து அவனுடைய சிறு பிள்ளைப் பிராயத்தையும் அதின் சந்தோஷங்களையும் அன்புநிறைந்த ஜீவனையும் காட்டினது.

அவனுடைய வாலிபப் பிராயத்தையும் அவனுக்கு வந்த பண ஆசையின் ஆரம்பத்தையும் அவன் கலியாணம் செய்யவேண்டியிருந்த பெண்மணியைப் பண ஆசையினிமித்தம் விட்டுவிட்டதையும் அந்தக் குழந்தை காண்பித்தது.

அதையெல்லாம் கண்டு 'குழந்தையே, இன்னும் காட்டாதே; அதைச் சகிக்க இனி முடியாது' என்று கெஞ்சிக் கேட்டான். அப்பொழுது அந்த ரூபம் போய்விட்டது.

அப்பால் மற்றொரு தோற்றம் வந்து அந்தக் கிறிஸ்மஸ் நாளில் நடந்துகொண்டிருந்த சம்பவங்களைக் காட்டினது. அவனை அவனுடைய குமாஸ்தாவின் வீட்டுக்குக் கொண்டுபோய் அவ்வன்பான குடும்பத்தார் ஒருவரோடொருவர் சந்தோஷப்படுகிறதைக் காட்டினது. அவ்வீட்டிலே ஒரு பிள்ளை பலவீனமாயிருந்தது. பெற்றோருக்கும் சகோதரர் சகோதரிகளுக்கும் அப்பிள்ளையின்மேல் அதிக பட்சம். அந்த ரூபம் லோபியைப் பார்த்து 'அந்தக் குழந்தை அடுத்த கிறிஸ்மஸ் நாளுக்குள்ளே இறந்துவிடும்' என்றது. அப்போது அந்த

லோபி பெற்றோருக்கு வரப்போகிற துக்கத்தை நினைத்து மனதுருகி 'அப்படிச் சொல்லாதே; அப்படிச் சொல்லாதே' என்று கண்ணீர் விட்டான்.

அந்த ரூபம் இன்னும் பல வீடுகளுக்கு அந்த லோபியைக் கூட்டிக்கொண்டு போய் ஜனங்கள் எல்லாரும் ஒருவரோடொருவர் அன்பாயிருக்கிறதையும் ஒருவரையொருவர் சந்தோஷப்படுத்தும்படி பிரயாசப்படுகிறதையும் காண்பித்தது. லோபிக்கோ அன்பும் சந்தோஷமும் எது? 'நான் என்ன செய்யவேண்டும்' என்று துக்கத்தோடு கேட்டான். உடனே அந்த ரூபம் மறைந்துபோய்விட்டது.

கடியாரம் மறுபடியும் மணி அடித்தது. மூன்றாம் தோற்றம் வந்தது. அது பயங்கரமான ரூபமும் கறுப்பு வஸ்திரம் மூடின முகமும் உடையது. அது அந்த லோபிக்குக் கிட்டவந்து 'என்னோடே வா! வருகிற கிறிஸ்மஸ் காலத்தில் நடக்கும் காரியங்களைக் காண்பிப்பேன்' என்று சொல்லி தெருவுக்கு அவனை அழைத்துக்கொண்டுபோனது. அத்தெருவில் நாலைந்து வியாபாரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த ரூபம் லோபியை அவர்களுக்குக் கிட்டப்போகச் சொல்லிற்று. அந்த வியாபாரிகள் யாரோ ஒருவன் செத்துப்போனதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் 'அவன் போன ராத்திரியில் செத்துப்போனான்' என்று சற்றும் பரிதாபமில்லாமல் சொல்ல, மற்றவர்கள் சிரித்துக்கொண்டு 'அவன் பணம் யாருக்குப் போகும்?' என்று கேட்க முதலில் பேசின வியாபாரி 'யாருக்குக் கொடுத்தானோ சுவாமிக்குத் தெரியும். எனக்குக் கொடுக்கவில்லை' என்று சொன்னான். எல்லாரும் மறுபடியும் சிரித்து வேறே காரியங்களைப்பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

அப்போது அந்த ரூபம் 'செத்துப்போனவனுடைய வீட்டுக்குப் போவோம். வா' என்று சொல்லி இருவரும் அவ்வீட்டுக்குப் போய் ஒரு அறைக்குள்ளே பிரவேசித்தார்கள். அங்கே ஒரு பிரேதம் இருந்தது. இரண்டு பெண் வேலையாட்கள் அவசரத்தோடு கம்பளிகளையும் உடுப்புக்களையும் அறையிலிருந்த மற்றச் சாமான்களையும் திருடிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி இன்னொருத்தியைப் பார்த்து 'இவன் போனது நல்லதுதான்; இவன் உயிரோடிருக்கையில் கல்நெஞ்சன்; இவன் நமக்கு ஒரு சிறு உதவிகூடச் செய்யவில்லை; நாம் இந்தச் சாமான்களைக் கொண்டுபோகிறது நியாயம்தான்' என்று சொன்னாள். மற்றவள் அதற்குச் சம்மதித்து 'சாமான்களைச் சீக்கிரமாய் விற்கவேண்டும், வா,' என்று சொல்ல, இரண்டுபேரும் போய்விட்டார்கள். பிணம்மாத்திரம் அங்கே கிடந்தது. அதற்குத் திக்கில்லை, கழுவுவாரில்லை, அழுவார் யாருமே இல்லை.



அப்பொழுது அந்தத் தோற்றம் லோபியைப் பார்த்து 'அதோ செத்தவனுடைய பேர் உனக்குத் தெரியுமா?' என்று கேட்க லோபி நடுக்கத்தோடு 'தெரியாது' என்றான். உடனே அந்த ரூபம் அவனை ஒரு கல்லறைக்குக் கொண்டுபோய்க் கல்லின்மேல் எழுதியிருந்த பேரைக் காட்டினது. அப்பேர் லோபியின் சொந்தப் பேரே.

அப்போது லோபி தோற்றத்துக்கு முன்பாக விழுந்து கூக்குரலிட்டு 'அப்படியல்ல! அப்படியல்ல! நல்ல ரூபமே! நான் இனி லோபித்தனம் செய்யமாட்டேன்; என்னுடைய முடிவு அவ்வளவு பயங்கரமாயிருக்கக்கூடாது' என்று அதிக பணிவுடன் கேட்டான். திடீரென்று அந்த ரூபம் மறைந்துபோயிற்று.

உடனே ஒரு வெளிச்சம் தோன்றிற்று. பின் லோபி தன் கண்ணைத் திறந்து பார்க்கத் தான் தன் சொந்த அறையிலே இருப்பதாகக் கண்டான். அவனுடைய புத்தி கொஞ்சம் தெளிந்தபிற்பாடு இராத்திரியில் நிகழ்ந்ததெல்லாம் கனவென்று கண்டு அதிக சந்தோஷப்பட்டான். 'நான் செத்துப்போகவில்லை; உயிரோடிருக்கிறேன்; இது கிறிஸ்மஸ் நாள்; சமயம் இன்னுமிருக்கிறது. சந்தோஷம்! நான் மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தலாம், உதவி செய்யலாம்' என்று சொல்லி, வெளியே போய் முந்தின நாள் அவனிடம் ஏழைகளுக்காக உதவிகேட்ட அந்தப் பெரியவரைச் சந்தித்து அதிக பண உதவி செய்தான். அப்பெரியவர் ஆச்சரியப்பட்டு 'ஐயா! மட்டுக்கு மிஞ்சிக் கொடுத்திருக்கிறீர்களே' என்றான். அதற்கு லோபி 'இல்லை! இல்லை! பிரமாதம் ஒன்றுமில்லை அப்பா! சென்ற கிறிஸ்மஸ் நாட்களை எல்லாம் சேர்த்தால் எவ்வளவு தரவேண்டியிருக்கும்!' என்றான்.

அப்புறம் கடைக்குப் போய்ப் பலகாரங்களையும் நல்ல உடுப்புகளையும் விளையாட்டுச் சாமான்களையும் வாங்கிக்கொண்டுவந்து அவைகளையெல்லாம் அவன் தன் குமாஸ்தாவுக்கு அனுப்பினான். மறுநாள் அந்தக் குமாஸ்தா ஆபீசுக்கு வந்தபோது குணம் மாறின அந்த லோபி அவனிடம் பட்சமாய்ப் பேசி அவனுடைய யோகக்ஷேமங்களைப் பற்றி விசாரித்தான். 'இனி நான் உனக்கு உதவிசெய்வேன். வியாதியாயிருக்கும் உன்னுடைய பிள்ளைக்கு நல்ல சுகம் வரும் வரைக்கும் நான் செலவுக்குத் தருவேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்' என்றான்.

அந்நாள் முதற்கொண்டு அந்த லோபி தாராளமாய் மற்றவர்களுக்கு நன்மையைச் செய்துகொண்டு சந்தோஷம் நிறைந்தவனாய் இருந்தான். ஜனங்களும் அவனை நேசித்தார்கள். அவனும் மற்றவர்களையெல்லாம் நேசித்தான். கிறிஸ்மஸ் நாள் வரும்போதெல்லாம் அவன் அன்று ராத்திரி கண்ட கனவை நினைத்து மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவானாயினான்.



## A CHRISTMAS SONG

## கிறிஸ்மஸ் பாட்டு

ஆதி மனுடனானார் மாதேவன் ஜோதி மணிச்சுடராய்
ஆதி மனுடனானார்.

1. ஆதி மனுடனானார் அன்னைமரி வயிற்றில்
மேவியே நமக்காக மாதேவன்
ஜோதி மணிச்சுடராய்— ஆதி மனுட.

2. தேவர்கள் பாட கோனர்கள் தேட
ஞானவனார் பிறந்தார்—மாதேவன்
ஜோதி மணிச்சுடராய்— ஆதி மனுட.

3. சம்மனசோர்கள் சங்கீதம் பாட
தானவனார் பிறந்தார்—மாதேவன்
ஜோதி மணிச்சுடராய்— ஆதி மனுட.

4. மூன்று ராஜாக்கள் தாபங்கொண்டேற்ற
முன்னவனார் பிறந்தார்—மாதேவன்
ஜோதி மணிச்சுடராய்— ஆதி மனுட.

## GOOD KING WENCELAS

## என் அடிச்சுவடு

காலமோ பயங்கரமான கோடைகாலம், பனிச்சட்டி விழுந்து கொண்டிருக்கிறது. குளிரோ இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. குளிர் நடுக்கத்தினாலே உரோமம் சிலிர்த்துநிற்குமாம். இப்படிப்பட்ட காலத்தில், கிறிஸ்து ஜயந்திக்கு முந்தின சாயங்காலத்



தில், வென்சிலாஸ் என்னும் பேர்பெற்ற அரசனொருவன் தன் அரமனை வாயிற்படியில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது வெளியே சற்றுத் தூரத்தில் கூலிவேலை செய்யும் ஏழைக் கிழவனொருவன் தன் சோற்றைச் சமைக்கவும், குளிரினால் சுரணையற்ற தன் உடம்பைக் குளிர்காயவும் உதவும்படி விறகுசுப்பங்களைக் கஷ்டத்துடன் பொறுக்குகிறதை அரசன் கண்டான். இதைப் பார்த்த அரசன் தன் சேவகனைக் கூப்பிட்டு, 'அதோ அந்தக் கிழவனுடைய வீடு எங்கே தெரியுமா' என்றான்.

'மகாராஜாவே! மூன்று நாலு மைலுக்கு அப்பாலுள்ள அந்தக் காட்டிலே ஒரு சிறு குடிசையில் அவன் இருக்கிறான்' என்றான்.



அதற்கு அரசன், 'அப்படியா, சரி, நீ போய்க் கொஞ்சம் நல்ல போஜனம், உலர்ந்த விறகுக்கட்டை கொஞ்சம், குளிரைத் தாங்கும்படியான நல்ல கம்பளி உடுப்பு சில ஆகிய இவைகளையெல்லாம் கொண்டுவா. நாமிருவரும் போய் அந்தத் தள்ளாத கிழவனைப் பார்த்து, இவைகளை அவனுக்குக் கொடுத்து, இந்தக் கிறிஸ்து ஜயந்தி காலத்தில் அவனை உண்பித்துச் சந்தோஷிப்போம்' என்றான்.

இதைக் கேட்ட சேவகன், கசப்புடன் அரசனுடைய விருப்பத்திற்கு வணங்கி, அவன் சொன்ன பொருள்களைக் கொண்டுவந்தான். இருவரும் அந்தக் கிழவனுடைய குடிசைக்குப் புறப்பட்டார்கள். குளிரோ சகிக்கமுடியாது. புறப்பட்ட நேரமோ அந்திவேளை. அதோடு பனிமழை பெய்வதால் எங்கும் இருள் மூடிக்கொண்டிருந்தது. காட்டினிடையே போகும் பாதையில் கால் வைப்பது கஷ்டம். கால்வைத்தால் பனிக்கட்டி காலை விறைக்கச்செய்யும்.

சிறிது தூரம் அந்தச் சேவகன் அரசன்பின் சென்றான். பின்பு அவன் தன் எஜமானனைப் பார்த்து, 'ஐயா! இனி என்னால் அடியெடுத்து வைக்கமுடியாது; நான் என்ன செய்வேன்; கால் விறைத்துப்போயிற்று' என்றான். அதற்கு அரசன், 'இங்கே பார் அப்பா, நான் கால்வைத்து நடக்கும் இடத்தைப் பார்; நான் அடிவைத்த இடத்திலேயே நீயும் மிதித்துவா' என்று சொல்ல, சேவகன் அப்படியே செய்தான். அப்போது இவனுக்குக் குளிர் அவ்வளவு தோன்றவில்லையாம். ஏனென்றால் பக்தியும் தர்மசிந்தையுமுள்ள அந்த அரசன் அடிவைத்த இடமெங்கும் வெப்பமும் சூடுமுள்ளதாயிருந்ததாம்.

இந்தக் கதையைப் பாட்டாக இயற்றி இங்கிலாந்து தேசத்தில் கிறிஸ்து ஜயந்தி நாட்களில் பாடுகிறார்கள். 'தரித்திரர்களையும், திக்கற்ற ஏழைகளையும் ஆசீர்வதிக்க விரும்புவோனே, ஆசீர்வாதம் தானே தேடி வந்தடையும்' என்பது அந்தப் பாட்டின் கடைசி அடியின் கருத்து.

தரித்திரர்கள், துக்கப்படுகிறவர்கள், பலவித பாரம் சுமக்கிறவர்கள், பாவத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்குக் கருணையுடன் சகாயஞ்செய்து, கைகொடுத்து, இவர்களை ஈடேற்றும்படி ராஜாதி ராஜா இந்தக் கிறிஸ்து ஜயந்தி காலத்தில் இவ்வுலகத்துக்கு வந்தார் அல்லவா? அவருடைய அடிச்சுவடுகளில் அடிவைத்து நடப்போனுக்கு வரும் பாக்கியமே பாக்கியம்.

## WHERE LOVE IS THERE GOD IS ALSO

**By Count Tolstoi**

## எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே தேவனும் இருக்கிறார்

மாரிமுத்து என்னும் ஒரு கிழவன் இருந்தான். அவன் ஏழைத் தையற்காரன். ஒருநாள் இராத்திரியில் கிறிஸ்மஸ் காலத்திலே அவன் வேதத்தை வாசித்துக்கொண்டிருந்தான்.



பத்து மணி அடித்தது. அவனுக்கு அது கேட்கவில்லை. சீமோன் என்கிற ஐசுவரியமுள்ள பரிசேயன் இயேசுகிறிஸ்துநாதரை விருந்துக்கு அழைத்திருக்கும்போது பாவியான ஒரு ஸ்திரீ வந்து இரட்சகருடைய திருப்பாதங்களைத் தன் கண்ணீரினாலே கழுவித் தைலம் பூசினதையும், இயேசுகிறிஸ்து அவள் பாவங்களை மன்னித்து அவளைச் சமாதானத்தோடு அனுப்பினதையும் அதிக கருத்தோடு வாசித்துச் சற்று யோசித்தான். அதென்னவென்றால் 'நம்முடைய இரட்சகர் சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள். 'இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை; இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை; இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை; இவளோ, என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.' ஐயோ! அந்தப் பரிசேயன் என்னைப்போன்றவன் தானே. நானும் என் சுகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய சாப்பாடு, என்னுடைய உடுப்பு, என்னுடைய சந்தோஷம் இவைகளே என் கவலை. சீமோன் தன்னுடைய சுகத்தைப் பார்த்து விருந்தாளியாகிய கிறிஸ்துவின் சுகத்தைப் பார்க்கவில்லையே. இயேசுகிறிஸ்து என்னுடைய வீட்டுக்கும் விருந்தாளியாக வந்தால் நான் அப்படியே செய்திருப்பேனா?' இப்படி யோசித்துக்கொண்டு சற்று நேரமானபின்பு தூங்கிவிட்டான்.

அப்பொழுது 'ஓ! மாரிமுத்து!' என்று ஒரு சத்தம் கேட்டது. அவன் விழித்துக்கொண்டு 'யார் அங்கே' என்று கேட்டான். எழுந்திருந்து பார்த்தான், ஒருவருமில்லை. மறுபடியும் தூங்கினான். மறுபடியும், 'மாரிமுத்து! ஓ மாரிமுத்து! நாளைக்கு வீதியில் பார்; நான் உன் வீட்டுக்கு வருகிறேன்' என்ற சத்தம் கேட்டது. மாரிமுத்து திடுக்கிட்டு அங்குமிங்கும் பார்த்தான். ஒருவருமில்லை. 'நான் சொப்பனம் கண்டேனோ' என்று கதவைப் பூட்டி விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான்.

அடுத்த நாள் மாரிமுத்து எழுந்திருந்து ஜெபம்பண்ணி வீட்டு வேலையைச் செய்துமுடித்து, அடுப்புமேலே காப்பி காய்ச்சத் தண்ணீரை வைத்துவிட்டுத் தையல்வேலையைத் தொடங்கினான். தைக்கும்போது ராத்திரி நடந்ததை நினைத்துக்கொண்டான். 'நான் சத்தத்தைக் கேட்டேனோ, அல்லது சொப்பனம் கண்டேனோ' என்று அவன் தனக்குள்ளே யோசித்துக்கொண்டு ஜன்னலின் பக்கமாக உட்கார்ந்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தமையால் வேலையை அதிகமாய்க் கவனிக்கவில்லை.

தனக்குத் தெரியாதவன் ஒருவன் வழியில் வந்தால் அவன் முகத்தைப் பார்க்கவேண்டும் என்று எட்டிப் பார்ப்பான்.

தண்ணீர்க்காரன் வந்து கடந்துபோய்விட்டான். தபாற்காரன் வந்து போய்விட்டான். இன்னொருவன் வந்து மாரிமுத்துவின் கடைக்கு முன்பாக ஒரு நிமிஷம் நின்றான். தையற்காரன் திடுக்கிட்டுப் பார்த்தான். அங்கே நின்றவன் ஓர் ஏழைக் கிழவன். கையிலே மண்வெட்டி இருந்தது. அதினாலே கும்பல் கும்பலாயிருந்த பனிக்கட்டியை வழியிலிருந்து எடுத்து ஒரு பக்கமாகப் போடத் தொடங்கினான்.

இதைப் பார்த்து மாரிமுத்து 'சீ! சீ! நான் பைத்தியம் பிடித்தவன்தானே! இந்த ஏழை ஸ்தேவான் பனிக்கட்டியைப் பெருக்க வந்திருக்கும்போது கிறிஸ்துநாதர் என்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்று நினைத்தேனே, என்ன மூடத்தனம்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு சற்றுநேரம் தையல்வேலை செய்து மறுபடியும் வெளியே பார்த்தான். அந்தக் கிழவன் சும்மா உட்கார்ந்துகொண்டிருந்தான். வேலைசெய்கிறதற்குச் சக்தியில்லைப்போலிருந்தது. மாரிமுத்து அவனைப் பார்த்து இரக்கங்கொண்டு 'நான் இவனுக்குக் கொஞ்சம் காப்பியாகிலும் கொடுக்கலாமே. அது இதற்குள் ஆயத்தமாயிருக்கும்' என்று தையலைவிட்டுக் காப்பியை ஆயத்தப்படுத்தி ஸ்தேவானைக் கூப்பிட்டான். 'கொஞ்சம் உள்ளே வாருங்கள் அண்ணா, குளிர் அதிகமாயிருக்கிறது.' இதைக் கேட்டு ஸ்தேவான் சந்தோஷப்பட்டு 'இதற்காகச் சுவாமி உங்களை ஆசீர்வதிப்பார். குளிரினாலே என் எலும்புகளும் நோகிறது' என்று உள்ளே வந்தான்.

இருவரும் அடுப்பண்டை உட்கார்ந்து காப்பி குடித்தார்கள். மாரிமுத்து குடித்துக்கொண்டு திரும்பத் திரும்ப வெளியே பார்த்தான். 'யாரோ உங்கள் வீட்டுக்கு வருகிறார் என்று எதிர்பார்க்கிறீர்களா?' என்று ஸ்தேவான் கேட்டான்.

அதற்கு மாரிமுத்து 'அண்ணா, உங்களுக்குச் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஒரு எண்ணம் என் மனதில் இருக்கிறது. அது சொப்பனமோ அல்லவோ என்பது எனக்குத் தெரியவில்லை. இராத்திரி நான் கிறிஸ்துவின் சரித்திரத்தை வாசித்துக்கொண்டிருந்தேன். அது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டான். ஸ்தேவான் 'தெரியும். ஆனாலும் நாங்கள் இருட்டிலிருக்கிறவர்கள், எங்களுக்கு வாசிக்கத் தெரியாது.'

'அப்படியா? நான் அவருடைய ஜீவியத்தை வாசித்தேன். அவர் ஒருநாள் பரிசேயன் ஒருவனுடைய வீட்டுக்குப் போனபோது அந்தப் பரிசேயன் அவரை நன்றாய் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது



நமது இரட்சகர் நம் வீட்டுக்கு வந்தால் நான் அவரை அப்படி ஏற்றுக்கொள்வேனா? தெரியவில்லையே' என்று யோசித்தேன். அப்படியிருக்கும்போது, அண்ணா, எனக்குத் தூக்கம் வந்தது. தூங்கும்போது யாரோ என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார் என்று விழித்துக்கொண்டேன். அப்பொழுது 'நாளைக்கு வீதியைப் பார்; நான் வருவேன்' என்கிற சத்தம் கேட்டது. இது இரண்டுதரம் நடந்தது. நான் அதை மறக்க முடியவில்லை. நான் புத்தியீனன் அல்லவா? இருந்தபோதிலும் நான் நம் இரட்சகராகிய அவரை எதிர்பார்க்கிறேன்' என்று சொன்னான்.

ஸ்தேவான் தலையை அசைத்து விட்டுப் பேசாமல் இருந்தான். அவன் காப்பியைக் குடித்துவிட்டு லோட்டாவை வைத்துவிட்டான். மாரிமுத்து அதை எடுத்துக் காப்பி கொடுத்து 'இன்னும் கொஞ்சம் குடி அப்பா. இயேசுநாதர் இந்த உலகத்தில் இருக்கும்போது அவர் ஒருவரையும் அசட்டைபண்ணவில்லை. விசேஷமாக ஏழைகளிடம் சிநேகமாயிருந்தார். நம்மைப்போன்ற ஏழைகள் அவருடைய சீஷர்களானார்கள். நம்மைப்போன்ற பாவிகளுக்குத்தான் "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று சொன்னார். "நீங்கள் என்னை ஆண்டவர் என்று சொல்லுகிறீர்கள்; நான் உங்கள் பாதங்களைக் கழுவுகிறேன். உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். ஏனென்றால் ஏழைகளும், தாழ்மையுள்ளவர்களும், பட்சமுள்ளவர்களும் பாக்கியவான்கள்" என்று சொன்னார்' என்றான்.

ஸ்தேவான் காப்பியைக் குடியாமல் கண்ணீர்விட்டுக்கொண்டு இந்த வார்த்தைகளைக் கேட்டான். 'இன்னும் கொஞ்சம் காப்பி குடி' என்று மாரிமுத்து கேட்டான். அதற்கு ஸ்தேவான் 'இல்லை, அண்ணா, பெரிய உபகாரம் செய்தாய், என் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் உதவிசெய்தாய்' என்று சொன்னான். 'அதைப்பற்றி ஒன்றும் சொல்லாதே, இனிமேல் நீ அடிக்கடி வரவேண்டும்' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

மாரிமுத்து மறுபடியும் தையல்வேலையை எடுத்தான். தைக்கும்போதே இயேசுகிறிஸ்து செய்த நன்மைகளை யோசித்துக்கொண்டிருந்தான். அநேகம் பெயர் வேலைக்குப் போவதற்காக அவன் கடையைக் கடந்துபோனார்கள். அடுத்த வீட்டுக்காரர், இரண்டு கூலிக்காரர்கள், எண்ணெய் விற்கிறவர்கள், இரண்டு மூன்று பிள்ளைகள் ஆகிய இவர்கள் எல்லாரும் கடந்துபோனார்கள். கடைசியாக ஒருவர் வந்து ஜன்னலின் பக்கமாக நின்றார். மாரிமுத்து உடனே வெளியே வந்து பார்த்தான். ஒரு ஏழைப் பெண் அங்கே ஆதரவுதேடித் தன் குழந்தை

மேலே மழையும் காற்றும் அடிக்காதபடி அதைத் தன் துணியால் மூடிக்கொண்டு நின்றாள். துணியோ அதிக மெல்லியது. குழந்தை அழுதது. அதின் தாய் அதைத் தேற்றப்பார்த்தும் முடியாமற் போயிற்று.

இதைப் பார்த்து மாரிமுத்து வெளியே போய் 'அம்மா கொஞ்சம் உள்ளே வா! நீ என் குழந்தையோடு இத்தனை குளிரிலே நிற்கிறாய்; இங்கே உஷ்ணமாயிருக்கிறது, வா!' என்று சொன்னான். அந்தப் பெண் ஆச்சரியப்பட்டுப் பார்த்தாள். யாரோ ஒரு கிழவன், மூக்கிலே கண்ணாடியை வைத்துக்கொண்டு, வாயிலில் நின்று கூப்பிடுகிறான். உள்ளே போகத் துணிந்தாள். அக்கிழவன் அவளை அடுப்பண்டை உட்காரச்செய்து 'அதோ, பார் அம்மா, நல்ல நெருப்பு. நீ சுகமாயிருந்து குழந்தைக்குப் பால் கொடுக்கலாம்' என்று சொன்னான்.

'குழந்தைக்கு என்னிடம் பால் இல்லையே. நான் இன்றைக்கு ஒன்றும் சாப்பிடவில்லை' என்று சொல்லிக்கொண்டு அவள் உட்கார்ந்தாள். இதைக் கேட்ட மாரிமுத்து, அடுப்பிலிருந்து சோறும் குழம்பும் எடுத்து, பீங்கானில் போட்டுவைத்து 'அம்மா, வந்து சாப்பிடு. நான் குழந்தையைப் பார்த்துக்கொள்ளுவேன். முன்னே எனக்கும் பிள்ளைகள் இருந்தார்கள்; அவர்களைப் பார்க்க எனக்குத் தெரியும்' என்று சொல்லிக் குழந்தையைக் கையில் எடுத்தான். அந்தப் பெண் மனமகிழ்ந்து உட்கார்ந்து சாப்பிட்டாள்.

சாப்பிட்டபிற்பாடு தன் கதையை எல்லாம் விரித்துச் சொன்னாள். 'என் எஜமான் போர்ச்சேவகன், எழு மாசத்துக்கு முந்தி அவரை ஏதோ ஒரு தூர தேசத்துக்கு அனுப்பிவிட்டார்கள். அவர் செய்தி ஒன்றும் வரவில்லை. நான் கொஞ்சகாலமாகச் சமையல் வேலைசெய்து பிழைத்தேன். இந்தக் குழந்தை பிறந்தபிற்பாடு ஒருவரும் எனக்கு வேலை கொடுக்கச் சம்மதிக்கவில்லை. நான் சும்மா இருந்து மூன்றுமாசம் ஆய்விட்டது. எனக்கு இருந்ததையெல்லாம் விற்றுப் பிழைத்தேன். ஒரு செட்டிச்சி அம்மாள் எனக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். அது இன்னும் ஒரு மாசம் ஆகும். அவர்கள் வீடு வெகுதூரம். நான் இளைப்படைந்தேன். என் மகனே! என் கண்மணியே! நீயும் இளைப்படைந்தாய். எனக்கு ஒரு சிறு அறை இருக்கிறது. இல்லாவிட்டால் குளிரினால் செத்துப்போயிருப்பேன். அந்த அறையின் சொந்தக்காரி கிறிஸ்துவின் நிமித்தமாக எனக்கு வாடகையில்லாமல் கொடுத்திருக்கிறாள்' என்று சொன்னாள்.

மாரிமுத்து கேட்டு மனதுருகி 'உனக்குக் கம்பளியில்லையா?' என்று கேட்டான். 'இல்லை, ஐயா, என் கம்பளிச் சால்வையை நேற்று ஒரு ரூபாய்க்கு ஈடுவைத்தேன்' என்று சொன்னாள். மாரி



முத்து குழந்தையைத் தாயிடம் கொடுத்துத் தன் பெட்டியில் தேடிப் பார்த்து ஒரு பழைய கம்பளிக் கோட்டு எடுத்து அந்த ஏழைப் பெண்ணுக்குக் கொடுத்து 'நீ வாங்கிக்கொள். அது அதிக பழையதானாலும் உனக்குக் கொஞ்சம் சூடு கொடுக்கும்' என்றான்.

அந்த ஸ்திரீ அந்தப் பட்சமுள்ள கிழவனைப் பார்த்துக் கண்ணீர் விட்டு 'ஐயா, இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பார். அவர்தாமே உங்களை ஜன்னலுக்குப் போய்ப் பார்க்கச் சொன்னார். நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் என் குழந்தை குளிரினால் செத்துப்போயிருக்கும். இப்பொழுது அகோரமான குளிர்; அவரே தங்களை ஏழையாகிய எங்களுக்கு இரங்கச்செய்தார்' என்றாள்.

மாரிமுத்து புன்சிரிப்புடன் 'ஆம், அம்மா, அவர் அப்படிச் செய்தார். நான் காரணமில்லாமல் ஜன்னலுக்குப் போய்ப் பார்க்கவில்லை' என்று சொல்லித் தான் சொப்பனம் கண்டதையும், இரட்சகர் தன்னைப் பார்க்க வருகிறார் என்று தான் எதிர்பார்த்ததையும் தெரிவித்தான்.

அதைக் கேட்டுப் போர்ச்சேவகனுடைய பெண்சாதி 'அவராலே எல்லாம் செய்யக்கூடும்' என்று சொல்லித் தன் குழந்தையைக் கம்பளிக் கோட்டில் மூடி, மாரிமுத்து தனக்குச் செய்த உபகாரங்களுக்காக ஆயிரம் வந்தனம் சொன்னாள். மாரிமுத்துவோ ஒரு ரூபாய் கொடுத்து 'அம்மா, இதைக் கிறிஸ்துவின் நிமித்தம் வாங்கி, உன் சால்வைக்கு விலைகொடுத்து மறுபடியும் வாங்கிக்கொண்டு சுகமாயிரு' என்று அனுப்பிவிட்டான்.

அவள் போனபிறகு அவன் சாப்பிட்டுவிட்டு வீட்டைச் சுத்தம் பண்ணி மறுபடியும் தையல்வேலைக்குப் போனான். சாயந்தர நேரம் வந்தது. வழியில் அநேகம்பேர் போனார்கள், ஆனாலும் எவரும் நிற்கவில்லை.

கடைசியாக ஒரு சத்தம் கேட்டது. 'யாரோ கதவண்டை நிற்கிறார்போலிருக்கிறது!' என்று ஆவலோடு பார்த்தான். ஒரு ஏழைப் பழக்காரி, தலையில் கூடையும் கையில் விறகுமாக நின்றாள். அதை வழியில் பொறுக்கி எடுத்தாள்போலிருந்தது. அவள் முதிர்ந்த வயசுள்ளவள், கஷ்டப்பட்டு நடந்தாள். அவள் கூடையைத் தரையில் வைத்துவிட்டுக் கயிறு வாங்கி அதினால் விறகை எல்லாம் ஒன்றாகக் கட்டப் பார்த்தாள். இப்படிக் கட்டும்போது ஒரு சிறு பையன் திருட்டுத்தனமாய் வந்து ஒரு குலை வாழைப்பழத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போகப் பார்த்தான். கிழவியோ இதை அறிந்து திரும்பி அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு கூக்குரலிட்டாள். அச்சிறு

வன் அவளை எதிர்த்துநின்று சண்டைபோட்டுக் கத்தினான். கிழவி அவன் குடுமியைப் பிடித்துக்கொண்டு கூவினாள்.

இதைப் பார்த்த மாரிமுத்து துணி, ஊசி, கத்தரிக்கோல், கண்ணாடி ஆகிய இவைகளையெல்லாம் கவனியாமல் ஒரே ஓட்டமாக வெளியே ஓடிப்போய்ப் பார்த்தான். பழக்காரி மிகவும் கோபித்து 'இவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகிறேன்' என்று சொன்னாள். பையனோ 'நான் ஒன்றும் எடுக்கவில்லையே, ஏன் என்னை அடிக்கிறீர்கள், என்னை விடுங்கள்' என்று சத்தமிட்டு அழுதான். மாரிமுத்து பையனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, கிழவியைப் பார்த்து 'அம்மா, அவனை விடுங்கள், கிறிஸ்துவின் நிமித்தம் அவனை மன்னிக்கவேண்டும்' என்று சொன்னான்.

அதற்குக் கிழவி 'சரி, நல்லது மன்னிப்புக் கொடுக்கிறேன். பாருங்கள். நான் இந்தத் துஷ்டனைப் போலீஸ்காரரிடம் ஒப்புக்கொடுக்கிறேன்' என்று சொன்னாள். அதற்கு மாரிமுத்து 'அப்படிச் செய்யக்கூடாது, மன்னிக்கவேண்டும்' என்று சொல்லக் கிழவி பையனை விட்டுவிட்டாள். அவன் ஓடிப்போகப் பார்க்கும்போது மாரிமுத்து அவனைப் பிடித்து 'நீ இந்த அம்மாளை மன்னிப்புக் கேள். நீ பழம் திருடினது மெய்தான். நான் கண்ணாரக் கண்டேன்' என்றான். அச்சிறுவனும் வெட்கப்பட்டு அப்படியே மன்னிப்புக் கேட்டான். 'சரி, இனி அப்படிச் செய்யாதே. இந்தப் பழத்தை வாங்கிச் சாப்பிடு. நான் இந்த அம்மாளுக்குக் காசு கொடுப்பேன், போ' என்று சொன்னான்.

அதற்குப் பழக்காரி 'ஐயா, அப்படிச் செய்வது நல்லதல்ல. அவனுக்கு நல்ல அடி கொடுத்தால் ஒரு வாரத்துக்காவது மறக்கமாட்டான்' என்றாள். மாரிமுத்தோ 'ஐயோ, அம்மா, சுவாமி நம்மை அப்படிச் செய்கிறாரா? இந்தச் சிறுவனைப் பழம் திருடினதற்காக அப்படி அடிக்கவேண்டுமானால் நாம் செய்கிற பெரிய பாவங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டும்?' என்றான். அந்தக் கிழவி பேசாமல் நின்றாள்.

அப்பொழுது மாரிமுத்து, தன் எஜமானனிடத்திலிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டிருந்தும் தன் உடன் வேலைக்காரனுக்கு மன்னிப்புக் கொடுக்க விரும்பாத கடனாளியின் கதையை அவளுக்குச் சொன்னான். கிழவியும் பையனும் பேசாமல் கேட்டுக்கொண்டார்கள்.

கடைசியாக மாரிமுத்து 'நாம் மன்னிக்காவிட்டால் நமக்கும் மன்னிப்புக் கிடையாது. விசேஷமாகச் சிறுவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்கவேண்டும்' என்றான். இதைக் கேட்டு, கிழவி பெருமூச்சு விட்டு 'அது மெய்தான், ஆனாலும் அவர்களுக்குக் கெட்ட புத்தியிருக்



கிறது' என்று சொன்னாள். 'அப்படியானால் பெரியவர்களாகிய நாம் அவர்களுக்கு நல்ல புத்தி சொல்லவேண்டும்' என்றான்.

அதற்குக் கிழவி 'எனக்குத் தெரியவில்லையா? எனக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். இப்பொழுதோ எனக்கு ஒரே ஒரு மகள் இருக்கிறாள்' என்று சொல்லித் தான் மகள் வீட்டிலே வாசம்பண்ணினதையும், தன் பேரன் பேர்த்திகளின் தொகை, குணம், பெயர் ஆகிய எல்லாவற்றையும் சொன்னாள். 'இந்தப் பையன் அவர்களைப்போன்றவன், அவனுக்கு என்ன தெரியும்! சுவாமி அவனை ஆசீர்வதிக்கக்கடவர்' என்று சொல்லி விறகைத் தூக்கினாள். பையனோ 'அம்மா, நான் உங்களுக்கு உதவிசெய்வேன். என் வீடும் அந்தப் பக்கந்தான்' என்று சொல்லித் தன் தலையின்மேல் அந்த விறகை வைத்துக்கொண்டு போனான். பழக்காரியும் பழத்தின் விலையை மாரிமுத்துவினிடம் கேட்க மறந்துவிட்டு அவனோடுகூட வீட்டுக்குப் போனாள்.

மாரிமுத்து வீட்டுக்குள் போய், துணி, கத்தரிக்கோல், கண்ணாடி ஆகிய எல்லாவற்றையும் பொறுக்கி வேலையை மறுபடியும் தொடங்கினான்.

கொஞ்சநேரத்திற்குள் இருட்டாய்விட்டது. அவன் விளக்கைக் கொளுத்தித் தையலைப் பெட்டியில் வைத்துப் பூட்டி, வீட்டைப் பெருக்கினபின் கடைசியாக வேத புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்து வாசிக்க நினைத்தான். நேற்று வாசித்த அதிகாரத்தை மறுபடியும் படிக்கலாம் என்று திறந்தான், ஆனால் அது வேறே தாளாகத் திறந்ததுபோலிருந்தது.

திறந்தவுடனே தான் முந்தின இராத்திரி கண்ட சொப்பனம் அவன் ஞாபகத்திற்கு வந்தது. தனக்குப் பின்னாக ஒரு சத்தம்போலக் கேட்டது. திரும்பிப் பார்த்தான். இருட்டிலே சிலர் அங்கே நின்றார்கள்போலிருந்தது. யார் என்று தெரியவில்லை.

'ஓ மாரிமுத்து! நீ என்னைக் காலையில் பார்த்தும் யார் என்பது தெரியவில்லையா?' என்ற சத்தத்தைக் கேட்டான். அதற்கு மாரிமுத்து 'நீங்கள் யார்?' 'நான்தான்' என்று சொல்லி முதலில் அவன் கண்ட ஏழை ஸ்தேவான் இருட்டான அந்த மூலையிலிருந்து வந்து, சிரித்து, மேகம்போல மறைந்துபோனான்.

'நான்தான்' என்று போர்ச்சேவகனுடைய பெண்சாதி, சிரித்துக்கொண்டிருந்த குழந்தையோடு வந்து, நின்று, மறைந்துபோனாள்.

'நான்தான் நான்தான்' என்று இன்னொரு சத்தம் கேட்டது. பழக்காரியும் பையனும் வந்து, சிரித்துக்கொண்டு மறைந்துவிட்டார்கள்.

மாரிமுத்து அடைந்த மனமகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவன் வேதத்தை எடுத்து அது தானாகவே திறந்திருந்த இடத்தைப் பார்க்க;

'நான் பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாய் இருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்......மிகவும் சிறியவர்களாகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.'

அப்போது மாரிமுத்து தான் கண்ட கனவு பொய் அல்ல என்பதையும், அருமை இரட்சகரே அன்றைக்குத் தன் வீட்டுக்கு வந்திருந்தார், தானும் அவரை மெய்யாகவே விருந்தாளியாக ஏற்றுக்கொண்டான் என்பதையும் அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டான்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ஹு ஜனவரிமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | சங். | 54. | | 11 | வி. | சங். | 72. | | 21 | ஞா. | சங். | 85. | |
| 2 | செ. | ,, | 55. | 1—11 | 12 | வெ. | ,, | 73. | 1—15 | 22 | தி. | ,, | 86. | |
| 3 | பு. | ,, | 55. | 12—23 | 13 | ச. | ,, | 73. | 16—28 | 23 | செ. | ,, | 90. | |
| 4 | வி. | ,, | 56. | | 14 | ஞா. | ,, | 77. | 1—14 | 24 | பு. | ,, | 91. | |
| 5 | வெ. | ,, | 57. | | 15 | தி. | ,, | 78. | 1—14 | 25 | வி. | ,, | 92. | |
| 6 | ச. | ,, | 61. | | 16 | செ. | ,, | 78. | 15—33 | 26 | வெ. | ,, | 95. | |
| 7 | ஞா. | ,, | 63. | | 17 | பு. | ,, | 78. | 34—48 | 27 | ச. | ,, | 96. | |
| 8 | தி. | ,, | 65. | | 18 | வி. | ,, | 78. | 49—61 | 28 | ஞா. | ,, | 97. | |
| 9 | செ. | ,, | 66. | | 19 | வெ. | ,, | 78. | 62—72 | 29 | தி. | ,, | 98. | |
| 10 | பு. | ,, | 67. | | 20 | ச. | ,, | 84. | | 30 | செ. | ,, | 101. | |
| | | | | | | | | | | 31 | பு. | ,, | 102. | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

# மாதர் போதினி

No. 169 பெப்ருவரி 1912 No. 2

## OUR KING EMPEROR IN DELHI

## மாட்சிமைதங்கிய மண்டலாதிபதி ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்கள் மகுடாபிஷேக மகோற்சவம்

நாம் குறித்தபடியே சென்ற டிசம்பர்மீ 12உ டில்லியில் வெடிகள் தீர, வாத்தியங்கள் முழங்க, குடிகளும் சிற்றரசர்களும் ஆசிகூற, ஆயிரக்கணக்கான ஜனங்கள் 'ராஜா எங்கே! ராஜா எங்கே!' என்று திறந்த கண்ணும் வாயுமாய்ச் சூழ்ந்துநின்று ஆரவாரம்பண்ண, நம் சக்கரவர்த்தி ஜார்ஜ் மஹாராஜா மலர்ந்த முகத்தையுடைய நமது மஹாராணி சமேதராய்ப் பற்பல ஆடம்பர கோலாகல வைபவங்களுடன் மகுடஞ்சூடினார் என்ற நற்செய்தியை நம் சகோதரிகள் இதுவரையில் தங்கள் தங்கள் ஊர்களில் மகுடாபிஷேக வைபவத்தைக் கொண்டாடிய விதங்களாலும் பத்திரிகைகள் மூலமாகவும் அறிந்து ஆனந்தக் கடலில் மூழ்கி இருப்பார்கள் என்பது நிச்சயம்.

இப்படி மனமகிழ்ச்சியுடனும் மகா கௌரவத்துடனும் கொண்டாடிய நாம் இன்னும் அதிகமாக ஆனந்தமும் சுகமும் அடையவேண்டும் என்னும் ஆசையால், நமது சக்கரவர்த்தி அவர்கள் 'இப்போதைக்காட்டிலும் அதிக நன்றாய் இந்தியா நிர்வகிக்கப்பட்டு நம்மேல் அதிக அன்புவைத்துள்ள குடிகள் இன்னும் அதிகமான வளப்பத்தையும் சந்தோஷத்தையும் அடைய ஏதுவாகும் என்று நாம் மனப்பூர்வமாய்க் கோருகிறோம்' என்று சொல்லி நமக்குக் கிருபையுடன் கொடுத்த நல்ல கொடைகள் பல. அவற்றில் சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

1. இந்த வருஷம் சிறுவர்களுக்குப் புகட்டும் பிரதம கல்வியை அதிகமாக்க ஒரே தடவையாய் ஐம்பது லட்சம் ரூபா கொடுத்திருக்கிறார். இனிமேலும் வருஷா வருஷம் தாராளமான பணம் தருவதாகவும் வாக்குத் தந்திருக்கிறார்.

2. ஐம்பது ரூபாவுக்குக் குறைவான சம்பளம் வாங்கும் ராணுவ அல்லது சிவில் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் அரை அரை மாசச் சம்பளம் இனுமாய்க் கொடுக்கப்படும்.

3. நாளதுவரையில் யுத்தத்தில் கீர்த்திபெறும் ஆங்கிலேய உத்தியோகஸ்தருக்கே கொடுத்துவந்த 'விக்டோரியா கிராஸ்' என்ற உயர்ந்த கௌரவ பட்டம் இனிமேல் அப்படிக் கீர்த்திபெறும் இந்தியர்களுக்கும் அளிக்கப்படும்.

4. இந்திய சேனையிலுள்ள சில உத்தியோகஸ்தர்களுக்கு இனுமாக நிலங்கள் கொடுத்தல் முதலானதும், அவர்கள் இறந்துபோனல் அவர்கள் குடும்பங்களுக்கு உதவும் பென்ஷன்களும், முன்போல் மூன்றே வருஷத்துக்கில்லாமல் ஆயுசு முழுவதும் அல்லது வேறே கலியாணம் செய்துகொள்ளும் வரையிலும் கொடுக்கப்படும்.

5. **திவான் பகதூர்** முதலிய பல பட்டங்களையும் பெறுபவர்களுக்கு இனி விருதுகளும் சேர்ந்து கிடைக்கும். கல்வித் திறமைக்காக அளிக்கப்படும் '**மஹா மஹோ உபாத்தியாயர்**' முதலிய பட்டங்களைப் பெற்றவர்களும் இனிமேல் பெறப்போகிறவர்களும் உபகாரச் சம்பளம் பெறுவார்கள்.

6. வடமேற்கு மாகாணம், பெலுசிஸ்தானம் இவைகளில் உள்ள சில உத்தியோகஸ்தர்களுக்கு நிலம் இனுமாகக் கிடைக்கும், அல்லது உள்ள நிலத்துக்குத் தீர்வை வசூல் செய்யப்படமாட்டாது.

7. இந்தியாவில் உள்ள சிற்றரசர்கள் பட்டத்துக்கு வரும்போது கொடுத்துவந்த '**நஸிரானு**' என்னும் பகுதியை இனிமேல் அரசினர் வாங்கமாட்டார்கள்.

8. கைதிகள் சிலருக்கு விடுதலை கிடைக்கும் அல்லது தண்டனை குறையும். கடன்கொடுத்தவன் அதைத் திரும்ப வாங்காவிட்டால் கடன் வாங்கினவனைச் சிறைச்சாலையில் வைப்பது வழக்கம். அப்படிச் சிறையிலிருப்பவர்கள் கொடுக்கவேண்டிய தொகை சொற்பமாயும் அவர்கள் மோசக்கருத்து இல்லாதவர்களாயும் இருந்தால் அக்கடனை ராஜாங்கத்தார் தாமே கொடுத்து அவர்களை விடுவிப்பார்கள்.


9. கொஞ்சகாலமாய் இருந்துவந்த '**பங்காளப் பிரிவினை**' ரத்தாய்விட்டது. இனி **பங்காளம்** ஒரு ராஜதானி ஆகி, அதற்கு ஒரு தேசாதிபதியும் நியமனமாவார். **பீஹார், ஒரிஸா, சோடா நாகப்பூர்** முதலிய மாகாணங்களை ஒன்றாய்ச் சேர்த்து ஒரு உப தேசாதிபதியும் நிர்வாக சபையாரும் ஆட்சிபுரிவார்கள்.

10. இனி இந்தியாவுக்குத் தலைநகர் டில்லி; முன்போல் **கல்கத்தா** அல்ல.

இப்படிக்கெல்லாம் நம் நன்மையைக் கோரும் நமது மாட்சிமை தங்கிய மஹாராஜா **ஐந்தாம் ஜார்ஜ்** சக்கரவர்த்தி அவர்கள் 'சர்வலோ



காதிபதியாகிய தேவனுடைய கிருபையால் சகல ஐசுவரியத்தையும் பெறுவாராக' என்று நாம் நமது பரமபிதாவைப் பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்கள் ஆகிறோம் அல்லவா?



**SONG—THEIR IMPERIAL MAJESTIES**

## கோலாட்டப் பாட்டு

இராகம், சங்கராபரணம். ஏகதாளம்.

பல்லவி.

கோலடிப்போமே—நல்ல—கோகிலங்களே!

அநுபல்லவி.

கோமான் ஜார்ஜ் ஐந்தாவதாய் இன்று கூடிய ராஜ கோனுவில் நின்று
கோனு, கோனு கோமகன் செங்கோலுயர— கோல.

## சரணங்கள்.

1. மாதசிரோமணி—விக்டோரியாராணி—மகன்
சாது மன்னனும் ஏழாம் எட்வர்டின்—கோதில்லா ராஜபாலராகவே
யேத—நீத நாதராய் முடிசூடி நிற்பதால்— கோல.

2. ஆங்கிலமன்னர்—நேர் ஆளுகை தன்னில்
ஓங்கும் நீதி, தோன்றும் தூய்மை, தாங்கும் தயவு, சாந்தமனந்தம்
பாங்கும்—பொங்கும் சாங்கோ பாங்கமாக நிற்பதால்— கோல.

3. ராஜரீகமும்—பல—நாகரீகமும்
மாசெடில்குத்து, பாழ் உடன்கட்டை, போர், நரபலி, போக்கி நாட்டை
காக்க—ஆக்க ஊக்கமாய் எமை ஏற்றுவிப்பதால்— கோல.

4. ஜாதி அமூல்கள்—எங்கள்—ஸ்வாமி மாமூல்கள்
ஏதும் விக்கினம் நேரிடாமலும் தீதுகளொன்றும் மீறிடாமலும்
காத்து—பார்த்து சேர்த்தன் போடு ஆள்வதினால்— கோல.

5. தந்தித் தபால்கள்—தந்தியில்லாத் தபால்கள்
சிந்தை மகிழும் விந்தை ரதங்கள் எந்தெந்தவித யந்திரங்களும்
தந்து—வந்து சந்ததம்வாழ செய்ததினால்— கோல.

6 கல்லூரிகளும்—நல்ல—கைத்தொழில்களும்
எல்லைகள் எங்கும் நல்ல சாலைகள், சொல்ல அரிய தர்மசாலைகள்
நல்லார்—வல்லார் எல்லார் நன்மையும் நாடிநிற்பதால் கோல.


7. தேவதாபக்தி—நல்ல—ராஜமா பக்தி
தேசமீதினில் வாசமே பெற்று—ராஜமெய் விசுவாசமேயுற்று
பாசம—வாசம் நேசப்பெற யாம் வேண்டி நிற்பதால்— கோல.

8. அன்பின் ரூபராய்—நம்—இன்ப நாடேகி
மன்பதைபொருட்டுன்னதமிகும் இன்பவேலைகள் யாவையும் விட்டு
அன்பால்—நம்பால் மன்னராய் முடிசூட வந்ததால்— கோல.

9. சக்ரவர்த்தியும்—மேரி—சக்ரவர்த்தினியும்
தக்கதம் பரிவாரத்தோடு—மக்கள் மனுக்கள் அனைவரோடும்
மிக்க—ஐக்ய அர்க்க சந்த்ர காலம் வாழ— கோல.

G. S. D.





THE KING'S FERRY-BOAT

ராஜாவின் துறைத்தோணி

‘அவர்கள் ராஜாவின் வீட்டாரை இக்கரைப்படுத்தவும் அவன் விரும்பும் காரியத்துக்கு உதவவும், ஒரு படகு இக்கரையிலே வந்தது.’ இந்த வார்த்தைகளை 2 சாமு. 19. 18-ல் காணலாம்.

‘காலதேசம்’ என்று ஒரு தேசமிருக்கிறது. அது யாதொரு தேச படத்திலும் குறிப்பிடப்படாவிட்டாலும், நம்மெல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். அது பெரிய பட்டணங்களாலும் சிங்காரத் தோட்டங்களாலும் மற்றும் சிறந்த காரியங்களாலும் நிறைந்த ஒரு அழகான தேசம்.

ஆனாலும் அந்த அழகும் சந்தோஷமுமான இடத்திலுள்ள குடிகளை அடிக்கடி துக்கப்படுத்தக்கூடிய ஒரு காரியம் அங்கே இருந்தது.

அதாவது அத்தேசத்தின் ஒரு ஓரத்தில், யாரும் ஊடறுத்துப் பார்க்கக்கூடாத அவ்வளவு கறுப்பும் அளவிடக்கூடாத அவ்வளவு ஆழமுமுள்ள ஒரு ஆறு ஓடிற்று.

அதன் விசேஷம் என்னவென்றால் இக்கரையில் நிற்கும் ஒருவனும் அக்கரையைக் காணமுடியாது. சிலவேளைகளில் அக்கரையில் அலை மோதுகிற ஓசையும் பாடுகிற அல்லது ஆர்ப்பரிக்கிற சத்தமும்

கேட்டபோதிலும் கார்மேகம்போன்ற பனி ஆற்றை மூடிக்கொள்ளுகிறதினால் அக்கரை ஒருவருக்கும் தென்படுகிறதில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலியவைகளால் அநேகர் பார்த்தாலும் அதைத் தரிசிக்கமுடியாது. இவர்கள் ஏன் இந்த வீண் பிரயாசம் எடுக்கவேணுமென்று கேட்டால், வேளாவேளைகளில் மூடுபனிகளிலிருந்து ஒரு கரும்படகு புறப்பட்டு ஜனங்கள் வசித்த தேசத்தின் கரையையடுத்து வந்துகொண்டிருக்கும். அது சமீபத்தில் வரும்போது அதன் முன்புறத்தில் பொன்னால் எழுதப்பட்டிருந்த ஒரு விலாசத்தை வாசிப்பது வழக்கம். அதாவது 'இராஜாவின் துறைத்தோணி' என்பதுதான்.

மேலும் தோணி கரை சேர்ந்தபோது அதில் தண்டுவலித்தவர்களில் சிலர் கரையில் ஏறி, பட்டணத்தின் தெருக்களில் சென்று ஒரு வீட்டின் கதவைத் தட்டி 'போக நேரமாயிற்று! போக நேரமாயிற்று!' என்று சொல்லுவார்கள். கொஞ்சநேரத்திற்குள் ஒரு குழந்தையையாவது ஒரு வயோதிபனையாவது ஒரு பலசாலியையாவது அல்லது வியாதியினால் பலக்ஷயப்பட்ட ஒருவனையாவது அவர்கள் கொண்டு போய்விடுவது வழக்கம்.

ஆகையால் இராஜாவின் தோணி வரும்போதெல்லாம் யாராவது ஒருவன் போகவேண்டியதாயிருக்குமென்று எல்லாருக்கும் தெரியும்.

அவர்கள் நதி ஓரமட்டும் தங்கள் சிநேகிதனுக்குப் பின்சென்று துக்கித்து அழுதாலும் இராஜாவின் தோணியை நிறுத்த அவர்களால் முடியாது.

தங்கள் சிநேகிதனுக்கு அக்கரையில் என்ன சம்பவிக்குமோ என்று தெரியாதிருத்தலே அவர்கள் துக்கம் அதிகரிப்பதற்குக் காரணம்.

இராஜாவுக்கு ஜனங்களின் துக்கமும் பயமும் தெரியவந்தபோது அவரும் பரிதபித்துத் தம்முடைய குமாரனைப் பார்த்து 'நீர் போய் ஏழை ஜனங்களைத் தேற்றி, அவர்கள் மேகத்திற்கூடாக அக்கரையைப் பார்க்க முடியாவிட்டாலும் இராஜாவின் தோணியில் வருகிறவர்கள் எல்லாரும் அவருடைய பாதுகாப்பிலிருப்பதால் பத்திரமாயிருக்கிறார்கள் என்று சொல்லும்' என்றார்.

அப்படியே ஒருநாள் இராஜகுமாரன் வந்தார். ஜனங்கள் 'ஐயோ, இராஜாவின் தோணி வந்துவிட்டது; யாராவது ஒருவன் போகவேண்டியிருக்கும்' என்று சொன்னபோது, குமாரன் 'பயப்படாதிருங்கள். இங்கிருந்து போகிறவர்கள் இராஜாவிடம்தான் போகிறார்கள்; என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு, அங்கே சுகபத்திரமாயிருப்பார்கள்' என்றார்.

அப்பொழுது ஜனங்கள் மிகவும் சந்தோஷித்து 'ஓ இராஜகுமாரனே! அது மெய்யா?' என்றார்கள்.



அவர், 'மெய்தான், அப்படியில்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக' என்றார்.

அப்பொழுது ஜனங்கள், 'அப்படியானால் இனிமேல் தோணி கறுப்பாயிருக்கவேண்டியதில்லை. அதற்குப் பிரகாசமான வெள்ளைச் சாயம் பூசி அது வரும்போது பூமாலைகளால் அதை அலங்கரித்து, துக்கத்தை ஒருபோதும் காண்பியோம் என்றும், பிரியும்போது 'நாங்கள் அழுதாலும் அவர்கள் இராஜாவினிடத்தில் போகிறார்கள்' என்று அறிவதால் முன்போல துக்கப்படமாட்டோம்' என்றும் சொன்னார்கள்.

மேலும் அவர்கள் இந்த நற்செய்தி கொண்டுவந்த இராஜகுமாரனை ஸ்தோத்திரித்து, 'அவர் ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்' என்றார்கள்.

அப்படியே இன்னும் இராஜாவின் துறைத்தோணி ஆற்றைக் கடந்து வந்து போய்க்கொண்டிருந்தபோதிலும் முன்போல் கறுப்பு வர்ணம் அதற்கு இல்லவே இல்லை. ஆனால் அது வெண்மையும் பொன்னிறமுமாய் இருக்கிறது. அதில் போகிற பிரயாணிகள் தாங்கள் பின்னே விட்டுப்போகிறவர்களைப் பார்த்து, 'இராஜாவின் அரமனையில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம். உங்களுக்கு வந்தனம் வந்தனம்' என்று சொல்லிப் போகிறார்கள்.

## BENEFITS OF BRITISH RULE

## ஆங்கில அரசாட்சியின் நன்மைகள்

பல்லவி

கூடிவாரும் தோழிகாள் நாம்
கும்மி யடிப்போம்
ஓடி யாடிப் பாடிடுவோம்
ஒரே நோக்கமாய்.

சரணங்கள்

1. ஆங்கிலர்செய் நன்மைகளை அன்பாய்ப் புகழுவோம்
ஓங்குமவர் ராஜ்ஜியத்தின் உயர்வைப் போற்றுவோம்— கூடி.

2. கட்டைவண்டி மாட்டுவண்டி கஷ்டம் நீங்கியே
சட்டமாகப் பயணஞ்செய்ய தந்தார் புகைரதம்— கூடி.

3. கல்விநாக ரீகம்பெறக் கருணை புரிந்ததால்
கைத்தொழிலை விருத்திசெய்யக் கருத்துக் கொண்டதால்-கூடி.

4. தாரச்செய்தி பாரச்செய்தி சுருவா யறியவும்
போறிவால் தபால்கள்தந்தி பெருகிப் போகவும்— கூடி.
5. அந்நியாய அக்ரமங்கள் அடக்கும் வகைசெய்தார்
யன்னியபோ லீஸ்படைகள் மகிழ்ந்து நியமித்தார்— கூடி.
6. தேசங்களைப் பாதுகாக்க திகழும் படையுண்டு
பாசமுள்ள ஆங்கிலேயர் பாதுகாப் புண்டு— கூடி.
7. வாதுகளைத் தீர்க்கநீதி வல்லதுரை என்ன
சாதுக்களை இம்சிப்போர்க்கு தக்கஜெயி லென்ன— கூடி.
8. சுகத்துக்கான காற்றுமழைக்காய்ச் சூழும் வனங்களைப்
பகுத்துப்பாது காத்துவரும் பண்போ உன்னதம்— கூடி.
9. குடிகளிடம் வரிகள்சேர்க்கும் கொள்கை நியாயமாம்
குடிநிறுத்த வகைகள்செய்தல் குன்று நன்மையாம்— கூடி.
10. நாடுகளில் நகரசங்க நலம் புரிகின்றார்
பாடுபடும் ஏழைகளைப் பண்பாய்க் காக்கின்றார்— கூடி.
11. நகரசங்க வீதிகளை எங்கும் காணலாம்
பகரிது அவைகள்செய்யும் பலத்த நன்மையாம்— கூடி.
12. இரக்கமுள்ள சக்கரவர்த்தி என்றும் வாழ்கவே
பெட்பமைந்த மேரிராணி பெருகி வாழ்கவே— கூடி.

## DIRT AND DISEASE

## அசுத்தத்தின் ஆபத்து

நம்மில் அநேகர் 'சுத்தம்' என்றும் 'மடி' என்றும் சும்மா வாயினால் சொல்லிக்கொள்ளுகிறார்களே தவிர வாஸ்தவத்தில் சுத்தமாய் இருப்பதில்லை. நம்மில் எத்தனையோ பேர் தம்தம் வீடுகளில் எவ்வளவோ அசுத்தத்திற்கும் அதன் ஆபத்திற்கும் நன்றாய் இடம் கொடுக்கிறார்கள். அவைகள் இன்னின்னவைகள் என்று எழுதினால் பெரிய புஸ்தகமாகும். வீட்டின் புறக்கடைகளில் வயலுக்கு எருச்சேர்க்கிறதாகவும், முட்டைதட்டச் சாணம் கூட்டுவதாகவும் என்னென்னவோ சாக்குப்போக்குகளை முன்னிட்டு அசுத்தங்களை வெகு ஜாக்கிரதையாய்ச் சேகரித்துப் பத்திரப்படுத்திவைக்கிறார்கள். இவைகள் எல்லாம் வெகு அபாயகரமான துர்வழக்கங்கள். இவைகள் அநேக ஜனங்களின் ஜீவனுக்குக் கெடுதியாகின்றன. இதைப் பலரும் அறியாதவர்களாய்த் தாங்களும் தங்கள் குழந்தை குஞ்சுகளும் அநியாயச் சாவுக்கு உட்படுகிறார்கள். அஸ்திஜுரம் என்னும் கொடிய வியாதியின் மூலகாரணம் அசுத்தமே.



வீட்டு அசுத்தங்களைப்பற்றி யோசிக்கும்போது இந்துக்களின்
இன்னொரு துர்வழக்கம் ஞாபகத்திற்கு வருகிறது. இரவில் அறை,
கூடம் முதலியவற்றைப் பெருக்கினால் சேரும் குப்பையை அவர்கள்
அப்போதே வெளியே கொண்டுபோய்க் கொட்டிவிடுகிறதில்லை;
அங்கேயே ஒரு மூலையில் குவித்து வைத்திருப்பார்கள். விடிந்த
பின்தான் வெளியே கொட்டவேண்டுமென்பது அவர்கள் சாஸ்திரம்.
இந்தப் பாழும் சாஸ்திரத்திற்கு யாரைக் குறைகூறுவதோ தெரிய
வில்லை. பொதுவில் ஸ்திரீகளின் அறியாமையைத்தான் நோக
வேண்டிவருகிறது.

இப்படி அசுத்தத்திற்கு இடந்தந்து ஆபத்திற்கு ஆளாவது வீடு
ஒன்றுல்தானோ? ஊரடுத்த இடங்களே கிராமப் பொதுக் கக்கூசுகள்.
ஓர் ஊரை நாம் சமீபித்துவிட்டோம் என்பதை நமது நல்ல மூக்கே
முதலில் அறிகிறது அல்லவா? இந்தக் கேட்டை யாரோடு சொல்லி
அழுவது! ஊர்களின் உள்ளே வீதிகளில் செய்யும் அக்கிரமங்களுக்கு
அளவே இல்லை. எந்தத் தாயும் தன் குழந்தையை 'வெளிக்கு'
வீதிக்கே கொண்டுவந்துவிடுகிறாள். ஒருவேளை தானும் பொழுது
விடிந்தால் புறக்கடைக்குப் போகப் பயந்தோ சோம்பியோ அப்படியே
செய்கிறாள். இந்தவிதமான அசுத்தங்கள் எல்லாம் ஆபத்தைத் தரு
வன என்பதை விளக்கி விலக்கவே இங்கே இவைகளைக் குறிப்பிட
லானோம்.

எரு, சாணம், அடுப்புச்சாம்பல், லாயக்குப்பை, இவை சேரும்
இடங்களிலும் ஆடடைக்கும் அறை, மாட்டை அடைக்கும் இடம்
இவைகளில் குவியும் அசுத்தக் குப்பைகளிலும் பெண்பூச்சிகள் முட்
டையிடுகின்றன. இப்படிப்பட்ட அசுத்த இடங்களில்தான் முட்டை
களிலிருந்து வந்த குறும்பூச்சிகளுக்கு ஏராளமான உணவு கிடைக்கும்.
நல்ல வெயிற்காலத்தில் அப்பூச்சிகள் ஒன்று கோடியாகப் பெருகும்.
இப்படிப் பெருகிய பூச்சிகள் உணவுப்பொருள்களில் சேர்ந்துகொள்ள
அந்தப் பதார்த்தத்தைச் சாப்பிட அஸ்திஜுரமும் வந்து சேர்ந்துவிடும்.
ஆகவே வீதிகளிலும் பொது இடங்களிலும் அசுத்தங்கள் அதிகமாய்ச்
சேருவதில் அங்கே இந்தப் பூச்சிகளும் அதிகமாகி, பிள்ளைகள் பெரி
யோர்கள் தின்பண்டங்களைக் கொண்டுபோகும்போது அப்பூச்சிகள்
அவற்றின்மேல் ஒட்டிக்கொள்ளும். பின் அப்பண்டங்களைத் தின்றால்
அஸ்திஜுரம் வந்து ஜீவனுக்கு மோசம் நேரும். ஆகவே இந்த ஆபத்
தைத் தவிர்க்க நாம் வெகு பிரயாசப்படவேண்டியதில்லை. அசுத்
தங்களை அகற்றினாலே போதும். அப்படி ரஸ்தாக்களையும் வீடு
களையும் பொது இடங்களையும் சுத்தமாய் வைத்திருக்க நேரும் செலவு,
அப்படிச் சுத்தமாய் வைத்திராததால் ஜுரம் வந்து செத்த மக்களின்

நஷ்டத்தால் ஆன செலவைவிட எத்தனையோ மடங்கு குறைவு பாருங்கள்! எது சுகம். நம் சகோதரிகள் தங்கள் வீடுகளையும் வீட்டின் பக்கங்களையும் சுத்தமாய் வைத்திருந்தால் வெயிற்காலத்தில் குழந்தைகளையே அதிகமாகப் பீடித்துச் சாவுக்குள்ளாக்கும் கொடிய வியாதியாகிய அஸ்திஜுரமும் வாராது ஒழியும். நாம் அருமையாய்ப் பெற்றெடுத்த குழந்தைகளும் நன்றாய் வளர்ந்து நாட்டுக்கு நல்ல மக்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட நன்மையை நாம் அடையவேண்டுமானால் சுத்தமாய் இருக்கவேண்டும். அதோடு கெரொஸீன் எண்ணெயை உபயோகிக்கும் வண்டி முதலியவற்றை அதிகமாக்கப் பார்க்கலாம். குதிரைகள் அத்தனை சுகமில்லை. தெருக்களில் போகும்போது குதிரைகளில் அப்பூச்சிகள் ஒட்டிக்கொள்ளப் பின் அவை உணவோடு சேர்ந்து நம்மை அழிக்கும். பூச்சிகளுக்கு உணவு நிறைந்த இடங்களில் ஒன்றாகிய லாயமும் இல்லையாகும். இதை உத்தேசித்துத்தான் லண்டன் முதலிய பெரிய பெரிய நகரங்களில் மோட்டார்வண்டி முதலியவற்றை மிகுதியாக உபயோகிக்க அந்த அஸ்திஜுரமும் மிகக் குறைந்து வருகின்றது.

## SONG—OUR KING EMPEROR

### ராஜாங்க சிறப்பு

பல்லவி

ஆங்கிலாட்சி மாட்சிமையை—ஆஹா
பாங்கிகளே கூர்ந்து பார்ப்போம் பாங்குடனே வாரும்.

1. பாராளும் ஐந்தாம் ஜியார்ஜ்—ஆஹா
தாரணியில் ஐந்திலொரு பாகமாண்டிடும்— ஆங்கி.

2. கண்டமைந்தில் சிறியதான—ஆஹா
பண்டுபுகழ் ஐரோப்பாவில் விண்டு தோன்றுமாம்— ஆங்கி.

3. பிரித்தானியா ஜனத்தொகையே—ஆஹா
பிரித்துப் பார்த்தால் அக்கண்டத்தில் பத்திலொன்றாமே—ஆங்.

4. ராஜ்யத்தின் விஸ்தீரணம்—ஆஹா
மாட்சியாயோர் கோடி இருபது லக்ஷம் சதுரமைலாம்-ஆங்கி.

5. குடிகள் இங்கிலீஷ் ராஜ்யத்தில்—ஆஹா
கோடிநாற்ப தேறத்தாழ கூடிவாழ்வதில்— ஆங்கி.



6. இந்தியாமட்டுமல்ல—ஆஹா
விந்தையாக ஐந்துகண்டமதனிலும் பலவாம்— ஆங்கி.

7. பாரிலுள்ள நாவாய்களில்—ஆஹா
பாதிக்குமேல் ஆங்கிலருக்கானதுகளாம்— ஆங்கி.

8. சர்வமத சர்வஜன—ஆஹா
கர்வம் பெற பாத்திரராம் ஐந்தாம் ஜியார்ஜ்— ஆங்கி.

9. அன்பு நீதி அணிந்தவராம்—ஆஹா
வன்பு, பகை, அநீதி துறந்தவராம்— ஆங்கி.

10. ராஜபக்தி தேசபக்தி—ஆஹா
ராஜ்யத்தின் குடிகளுக்கு அவசியமே— ஆங்கி.

11. கீழ்ப்படிதல் விசுவாசம்—ஆஹா
கீழானோர் மேலானோர்கட்கு காட்டவேண்டுமே— ஆங்கி.

12. ஏக ராஜ ஏக கொடி—ஆஹா
ஏகபடை ஏகராஜ்யம் என்றும் செழிக்க— ஆங்கி.

13. ஐக்கிய கொடி தழைத்தோங்க—ஆஹா
மேரி மஹாராணியம்மாள் என்றும் வாழ்கவே— ஆங்கி.

14. இந்தியா தேசத்தாரே—ஆஹா
ஜார்ஜ்ஆம் அரசரைப் போற்றிப் பாடவே— ஆங்கி.

## TALENT AND TACT

### சாமர்த்தியமும் சாதுரியமும்

இந்த இரண்டில் சாதுரியமே விசேஷித்தது. சாமர்த்தியத்தால் ஆவது ஒன்றென்றால், சாதுரியத்தால் எல்லாம் ஆகும். சாமர்த்தியம் முக்கியமானது, பொருத்தமுள்ளது, கனப்படுத்துவது. சாதுரியம் இவற்றோடு நில்லாமல் இன்னும் விசேஷித்தது. அதை ஆறாவது அறிவு என்பதும் போதாது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து இந்திரியங்களின் உயிர்நிலை என்றே சொல்லவேண்டும். திறந்த கண், கவனமுள்ள காது, நிதானமுள்ள விருப்பம், சூக்ஷ்மமான மூக்கு, மிருதுவான ஸ்பரிசம் முதலிய எல்லாம் சாதுரியமே. இன்னும் சாதுரியத்தால் விடுவிக்க முடியாத சிக்குமுக்கு இல்லை. எந்தவிதக் கஷ்டத்தையும் மேற்கொள்ளலாம். தடைகள் எத்தனை இருந்தாலும் தாண்டிவிடலாம். சாதுரியமுள்ள ஒருவர் எந்த ஏகாந்தத்திலும் ஏங்கி நிற்கமாட்டார்; இவ்வுலக மார்க்கத்திற்குத் தக்க வழியை அறிவார். அவர் இந்த உலகத்திலும் உழலமாட்டார்.

லௌகிக காரியங்களைத் திறக்கும் திறவுகோல் அவரிடம் எப்போதும் தயாராயிருக்கிறது. சாமர்த்தியம் சக்தி, சாதுரியம் யுக்தி. சாமர்த்தியம் கனம், சாதுரியம் எடைபோடும் கல். சாமர்த்தியசாலிக்குச் செய்யத்தகுந்தது இது என்பது தெரியும், சாதுரியவானுக்கு அதை இப்படிச் செய்யவேண்டும் என்பது தெரியும். சாமர்த்தியத்தால் ஒருவன் மரியாதைக்கு உரியவனாகிறான், சாதுரியமிருந்தால்தான் அவன் மரியாதை அடைகிறான். சாமர்த்தியத்தைச் சொத்து என்றால் சாதுரியத்தை ரொக்கப்பணம் என்று சொல்லவேண்டும். சாமர்த்தியத்தால் ஆவது ஒன்று என்றால் சாதுரியத்தால் ஆவது பத்து. தொழிலுக்குத் தகுந்தது சாமர்த்தியம் என்றால் தொழிலுக்கு அடுத்தது சாதுரியம் என்போம். சாதுரியவானுக்குச் சமயத்துக்குவேண்டிய ஏற்பாடு சுயேச்சையாய் வரும்; யாதொரு அப்பியாசமும் வேண்டாம். சாதுரியமுள்ளவன் எதையும் கேட்டு வருவான், எதையும் கண்டுகொள்வான். சாதுரியம் எதையும் ஆலோசிக்காமலேயே பழகிக் கைதேர்ந்தாற்போல் எடுத்தாளவல்ல அபூர்வ சக்தியாம்.

## SLAVERY AND FREEDOM

## அடிமைத்தனமும் விடுதலையும்

அநேக வருஷங்களுக்குமுன் அமெரிக்காக் கண்டத்தின் ஒரு பாகத்தில் அமெரிக்க இந்தியர் என்று ஒரு ஜாதியார் வசித்துவந்தார்கள். அவர்கள் அதிக மூர்க்கத்தனமுள்ளவர்கள்; எப்போதும் சத்தியும் கையுமாகவே திரிவார்கள். வெள்ளை மனிதரைக் கண்டால் அவர்களுக்கு வெறுப்பு அதிகம். அவர்களைக் கொன்று அவர்கள் பொருள்களை நாசமாக்கி அவர்கள் பிள்ளைகளையும் அடிமைகளாகப் பிடித்துக்கொண்டு போவார்கள்.

இப்படியிருக்கும் காலத்தில், ஒரு சமுசாரி தன் புது வீட்டிலே வசித்துவந்தான். அவனுக்கு அநேக தோட்டங்களும் வயல்களும் இருந்தன. அவற்றோடுகூடக் குதிரைகளும், எருதுகளும், அநேக பசுக்களும் இருந்தன. அவனுடைய வயலின் தானியம் நன்றாய் விளைந்திருந்தது. அதனால் அவனும், அவன் மனைவியும், அவன் பிள்ளைகளும் சமாதானமாய்க் குறைவற்ற ஜீவனம் செய்துகொண்டுவந்தார்கள். அச்சமுசாரியின் மூத்த மகளுக்குக் 'கதரீனாள்' என்று பெயர். அவளுடைய சரித்திரம்தான் இது:—

அவள் இளம்பிராயம் முதல் தேவனைப்பற்றிப் பேசவும், நல்ல பாட்டுக்களைப் பாடவும் பழகியிருந்தாள். அவள் ஏறக்குறைய எட்டு வய



துள்ளவளாயிருக்கும்போது, ஒருநாள் அதிகாலையில் அவள் தகப்பனும் சகோதரரும் வயலில் வேலைசெய்யப் போய்விட்டார்கள். கதரீனாளின் தாயும், அவளை நோக்கி: 'நீ உன் தங்கை லூயிஸாளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள். அவளுக்கு வேண்டிய சாப்பாடு முதலியவற்றைக் கொடுத்து அமைதியாய் வைத்திரு. ஒருவேளை நான் திரும்பிவரச்



சாயுங்காலமாகிவிடும். நான் போய் மாவு அரைத்துக்கொண்டு இருட்டாகுமுன்னே திரும்ப வந்துவிடுவேன்' என்று சொல்லித் தன் பிள்ளைகளை முத்தமிட்டு ஒரு சாக்கு கோதுமையும் எடுத்துக்கொண்டு போனாள். அவள் தலை மறையும்வரையில் கதரீனாள் அவளைப் பார்த்துக்கொண்டே நின்றாள். பிறகு அவள் தங்கச்சி லூயிஸாள் தன் அக்

காலைப் பிடித்துக்கொண்டு 'ஐயோ! ஒண்டியாயிருக்கப் பயமாயிருக்கிற
தே' என்று சொல்லி அழுதாள். அவள் அக்காலோ கடவுளை நினைத்து,
அவளை இடுப்பிலே வைத்துக்கொண்டு ஒரு பாட்டுப் பாடினாள். அந்தப்
பிள்ளை தூங்கிவிட்டது. உடனே கதரீனாள் தோட்டத்திற்குப் போய்க்
களை பிடுங்கிக்கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் திடீரென்று தோட்டம் எங்கும் புகை நிரம்பினது.
அப்போது, அமெரிக்க இந்தியரான துஷ்ட மனிதர் வந்து வீட்டிற்கு
நெருப்பு வைத்துவிட்டார்களென அவள் அறிந்து திகைத்து நிற்கும்
போது அவர்கள் அவளையும் அவள் தங்கையையும் தூக்கிக்கொண்டு
ஓடிப்போய்விட்டார்கள். வயல்களின் வழியாய் அவர்களைக் கொண்டு
போகும்போது, காட்டிற்கு வேலை செய்யும்படி போன தங்கள் தகப்ப
னும் சகோதரரும் வெட்டுண்டு கிடந்ததைக் கண்டார்கள். இந்தக்
குரூரமான முரட்டு ஜாதியார் கதரீனாளையும் அவள் தங்கையையும்
இன்னும் அநேக இங்கிலீஷ்காரப் பிள்ளைகளையும் சிறைபிடித்துத்
தங்கள் கிராமங்களுக்குக் கொண்டுபோனார்கள். கொண்டுபோய்க்
கதரீனாளையும் லூயிஸாளையும் வயதுசென்ற ஒரு கிழவியினிடம் அடி
மைகளாக ஒப்புவித்தார்கள்.

அந்தக் கிழவியோ அவர்களை மிகவும் கொடூரமாய் நடத்திவந்தாள்.
எவ்விதமெனில், அவர்களுக்குச் சரியான போஜனமும் வஸ்திரமும்
கொடுக்காததினாலும், அடிக்கடி அவர்களைத் திட்டி அடிப்பதினா
லுமே. அக்கிழவிக்கு, காட்டிலிருந்து காய், கனி, கிழங்கு முதலிய
வைகள் கொண்டுவராவிட்டால் அவர்களைப் படாத பாடு படுத்திவிடு
வாள். 'குரங்கின் கையில் பூமாலை கிடைத்ததுபோல' என்பது
அக்கிழவிக்குத்தான் தகும். அந்தத் தனிமையான இடத்தில் தாய்
தகப்பனற்ற அச்சிறு குழந்தைகளின் ஜீவனம் என்ன பரிதாபமா
யிருந்திருக்கும்? ஆனால் 'தேவன் என்னோடிருக்கிறார்' என்ற வசனம்
கதரீனாளையும் அவள் தங்கையையும் தேற்றி அவர்களுக்குச் சந்தோ
ஷத்தைக் கொடுத்தது. ஒவ்வொருநாளும் சாயந்திர நேரத்தில் கதரீ
னாள் தன் தங்கையைக் கூட்டிக்கொண்டுபோய் ஒரு தனிமையான
இடத்தில் உட்கார்ந்து தன் தாயார் சொல்லிக்கொடுத்த பாட்டுக்
களையும், வேத வசனங்களையும் சொல்லிக் கொடுப்பாள். அடிக்கடி
தன் தாயாருக்காகவும் ஜெபித்து வருவாள்.

அச்சிறு பிள்ளைகள் பத்து வருஷம் அந்த ஜனங்களுக்குள்ளே
வசித்து அவர்கள் நடை உடை பாவனைகளைப் பின்பற்றினார்கள்.
என்றாலும், அவள் தான் படித்திருந்த பாட்டுக்களையும், வேத வாக்
கியங்களையும் மறக்கவில்லை. இதற்குள்ளே கதரீனாளின் தாய் அதிக
வயதுசென்றவளாய்ப் போயிருப்பாளல்லவா? அவள் அப்பிள்ளை



களைத் தேடாத இடமெல்லாம் தேடியும் காணாதபடியால் அவளைப்
பற்றி நம்பிக்கையற்றிருந்தாள்.

இப்படியிருக்கும் காலத்தில், இங்கிலீஷ் யுத்தவீரர்கள் அச்சாதியா
ரோடு யுத்தம்செய்து, அவர்கள் சிறைபிடித்துப்போன இங்கிலீஷ்கா
ரப் பிள்ளைகள் எல்லாரையும் மீட்டுக்கொண்டு ஊருக்கு வந்திருக்கிற
தாக ஒரு செய்தி அவள் காதிற்கு எட்டினது. அவள் தன் பிள்ளைகள்
அங்கே இருப்பார்களோவென்று பார்க்கப் புறப்பட்டுப்போனாள்.
அங்கே ஏறக்குறைய நானூறு பேருக்குமேல் இருந்தார்கள். அநேக
மாய்ப் பிள்ளைகள்தான் இருந்திருக்கவேண்டும். அத்தனை வருஷம்
சென்றபின் தன் பிள்ளைகளை அவ்ள் எப்படிக் கண்டறிவாள்? அவர்
கள் பாஷை, நடை, உடை, பாவனை முதலியன மாறிவிட்டன. இவள்
ஒவ்வொரு பிள்ளையின் முகத்தையும் கையையும் பிடித்துப் பார்த்த
போது எல்லாம் வித்தியாசமாகவேயிருந்தது.

லூயிஸாள் என்னும் சிறு பிள்ளை கிழவியினிடம் இருந்தபோதே
இறந்துபோனது. கதரீனாள் அவள் தாயின் பக்கத்தில் நின்றபோதி
லும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளக்கூடாதபடி அவ்வளவு
அதிக மாறுதல் இரண்டுபேரிலும் உண்டாயிருந்தது. கடைசியாய்
அவள் கண்ணீர்விட்டுச் சத்தமாய் அழுதாள். அங்கேயிருந்த இங்கி
லீஷ் தளகர்த்தர் ஒருவர் அவள்பேரில் மிகவும் மனதுருகி, 'உன்
மகள் உன்னை அறிந்துகொள்ளத்தக்கதாக நீ காட்டக்கூடிய அடை
யாளம் ஏதாகிலும் உண்டா' என்றான். அப்போது அவள், 'ஒரு
வேளை தான் தொட்டிலை ஆட்டும்போதெல்லாம் பாடின ஒரு பாட்டை
அறியலாம்' என்று சொல்லி அப்பாட்டைப் பாடத் தொடங்கினாள்.
அதில் ஒரு வரி பாடித் தீருமுன்னே கதரீனாள் வந்து தாயின் கழுத்
தைக் கட்டிக்கொண்டு 'அம்மா! அம்மா!' என்று கத்தினாள். அப்
போது தாய்க்கும் அந்தப் பிள்ளைக்கும் எவ்விதமான எண்ணம் இருந்
திருக்கும் என்று நீங்களே கிரகித்துக்கொள்ளலாம். பிற்பாடு அந்தத்
தாயும் பிள்ளையும் நெடுங்காலம் சந்தோஷமாகக் கூடி வாழ்ந்தார்கள்.
அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கச்செய்த தேவனுக்கும், இரண்
டாவது அந்தத் தளகர்த்தனுக்கும் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்
இருந்திருப்பார்கள்!

பிரியமான சகோதரிகளே! மானிடராய்ப் பிறந்த நாம் ஒரு பெரிய
அடிமைத்தனத்தில் அகப்பட்டிருக்கிறோம். அந்த அடிமைத்தனம்
பாவமே. அதற்குத் தலைவன் யாரென்று கேட்டால் 'பயங்கரமான
பிசாசு.' நாம் அதினின்று விடுதலையாகும்படி என்ன உபாயங்கள்
செய்யக்கூடும்? அதற்காகத் தேவன் தமது நேசகுமாரனை இவ்வுலகத்
துக்கு அனுப்பின அன்பு எவ்வளவு பெரிது! அவர் 'இயேசுகிறிஸ்து.'

அவர் மனுஷ அவதாரமெடுத்து, கன்னிமரியம்மாளின் வயிற்றில் பிறந்தார். அப்பிறந்த நாளை நினைவுகூரும்படியாக டிசம்பர்௴ 25௳யைச் சந்தோஷநாளாய்க் கொண்டாடுகிறோம். அதைக் கிறிஸ்மஸ் என்கிறோம். அந்த நாளை உலக சந்தோஷத்தில் செலவழிக்காதபடி எச்சரிக்கையாயிருந்து, அவர்தாம் நமது இருதயத்தில் பிறந்தார் என்று சந்தோஷங்கொண்டாடவேண்டும். அவருடைய நடக்கையை அல்லது முன்மாதிரியை நாமும் பின்பற்றுவதே நல்லதாம். ஆகையால் சகோதரிகளே! இயேசுவானவருடைய தாயாகிய கன்னிமரியம்மாள் தேவதூதனுக்கு மறுமொழியாக:—

'இதோ! நான் ஆண்டவருக்கு அடிமை' என்று சொன்னதில், அவளுடைய தாழ்மையும், விசுவாசமும் நன்றாய் விளங்குகிறதல்லவா! நான் பிசாசுக்கு அடிமை என்று சொல்லக்கூடியவர்களாயிருப்பது எவ்வளவு பயங்கரமான காரியம்!

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ பெப்ருவரி௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | மாற். | 1. | 1—13 | 11 | ஞா. | மாற். | 4. | 21—29 | 21 | பு. | மாற். | 7. | 1—13 |
| 2 | வெ. | ,, | 1. | 14—22 | 12 | தி. | ,, | 4. | 30—41 | 22 | வி. | ,, | 7. | 14—23 |
| 3 | ச. | ,, | 1. | 23—34 | 13 | செ. | ,, | 5. | 1—13 | 23 | வெ. | ,, | 7. | 24—37 |
| 4 | ஞா. | ,, | 1. | 35—45 | 14 | பு. | ,, | 5. | 14—21 | 24 | ச. | ,, | 8. | 1—13 |
| 5 | தி. | ,, | 2. | 1—14 | 15 | வி. | ,, | 5. | 22—34 | 25 | ஞா. | ,, | 8. | 14—26 |
| 6 | செ. | ,, | 2. | 15—28 | 16 | வெ. | ,, | 5. | 35—43 | 26 | தி. | ,, | 8. | 27—38 |
| 7 | பு. | ,, | 3. | 1—12 | 17 | ச. | ,, | 6. | 1—13 | 27 | செ. | ,, | 9. | 1—13 |
| 8 | வி. | ,, | 3. | 13—35 | 18 | ஞா. | ,, | 6. | 14—29 | 28 | பு. | ,, | 9. | 14—29 |
| 9 | வெ. | ,, | 4. | 1— 9 | 19 | தி. | ,, | 6. | 30—44 | 29 | வி. | ,, | 9. | 30—37 |
| 10 | ச. | ,, | 4. | 10—20 | 20 | செ. | ,, | 6. | 45—56 | | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS


# மாதர் போதினி

No. 171 மார்ச்சு 1912 No. 3




## THE QUEEN AND INDIAN WOMEN

## நம் சக்கரவர்த்தினியும் இந்திய மாதர்களும்

சென்ற டிசெம்பர்௴ 13௳ புதன்கிழமை இந்திய ராஜகுல ஸ்திரீகள் 120 பேர் நம் சக்கரவர்த்தினி மேரி மஹாராணியார் அவர்களைத் தரிசித்தார்கள். அந்த ராஜகுல ஸ்திரீகளில் விசேஷித்தவர் விஜயநகர ராணியார். அவர்கள் தங்களுடைய குழந்தைகள் இருவ

VOL. XXVII.

ளைக் கூடக் கூட்டிக்கொண்டு போயிருந்தார்கள். அப்போது சக்கரவர்த்தினியார் அந்த இரண்டு குழந்தைகளையும் தம்முடைய சிம்மாசனத்துக்குக் கீழேயே உட்காரவேண்டும் என்றார்கள். கொஞ்சநேரம் ராணியாரும் சக்கரவர்த்தினியாரும் தங்கள் தங்கள் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக்கொண்டார்கள். அப்புறம் விஜயநகர ராணியார் வெகு நன்றாய் ஒரு சிறு பிரசங்கம் செய்தார்கள். அதாவது ;—

> ‘ இந்திய மாதர்களாகிய நாங்கள் எங்கள் சக்கரவர்த்தினியாரை இப்போது நேரிற்கண்ட மகா பாக்கியத்தை வெகு பெரிய மங்களமாகப் பாவிக்கிறோம். நமது சக்கரவர்த்தினி இரண்டாந்தரம் இங்கு விஜயஞ்செய்யக் கிருபைகூர்ந்ததற்குச் சரியானபடி நாங்கள் என்னவிதமாய் நன்றி பாராட்டப் போகிறோம்?. இப்போது தங்கள் விஜயத்தால் தாங்கள் இந்தியா தேசத்தை மகிழச் செய்ததோடு இந்திய மாதரையும் கண்ணியப்படுத்தியிருப்பது அதிலும் விசேஷமானது. நேற்று சக்கரவர்த்தினி அவர்களும் சக்கரவர்த்தி அவர்களும் தம்பதி சமேதராய் இருந்து நடத்திய பட்டாபிஷேக வைபவத்தைவிட முன் வேறெதுவும் அவ்வளவு ராஜதோரணையோடு கூடியதாய் நடந்தேறவில்லை. இப்போது இந்தியாவுக்கு ஒரு அரசியும் ஒரு அரசனும் இருக்கிறார்கள் என்பது வெகு நன்றாய் இந்தியா முழுமைக்கும் விளங்குகிறது. இந்த டில்லி தர்பார் இந்தியர்கள் ஞாபகத்திலிருந்து இனிவரும் அநேக தலைமுறைக்கு நீங்காது. இன்னும் இதனால் முன்னமே பிரிட்டிஷ் ராஜாவிடம் இந்தியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மதிப்பால் உண்டாகும் விசுவாசமும் மேலும்மேலும் வளரும். போன வருஷம் நானும் இன்னும் சில உயர்தர இந்திய மாதர்களும் இந்தப் பட்டாபிஷேகமஹோத்சவங்களில் சக்கரவர்த்தினியார் அவர்களுக்குப் பணிமாதர்கள் (Ladies in Waiting) ஆகவிருக்க ஆசைப்படுகிறோம் என்று ஹார்டிஞ்ஜ் பெருமாட்டியாரிடம் விண்ணப்பம் செய்துகொண்டோம். ஆனால் அது யாது காரணத்தாலோ அங்கீகாரம் பெறவில்லை. இந்திய மாதர்கள் தங்களுக்குச் சக்கரவர்த்தினியாரிடம் உள்ள பக்தி விசுவாசத்தைக் காட்டிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று வாய்த்தால் அவர்கள் மிகுதியும் அதைவிரும்புவார்கள் என்பது உறுதியே.’

இந்தப் பிரசங்கத்தைப் பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்த சக்கரவர்த்தினியார் அவர்கள் ‘ எங்கள் டில்லி தர்பாரால் அநேக நன்மைகள் உண்டாகும் என்று உங்கள் வாயாரக் கேட்க வெகு சந்தோஷப்படுகிறேன் ’ என்று சொல்லி நன்றி செலுத்தினார்கள்.



பிறகு சக்கரவர்த்தினியார் ராணியின் மூத்த மகனைப்பற்றி விசாரித்தார்கள். அதற்கு விஜயநகர ராணியார் ‘ அவன் அஜ்மீர் மேயோ காலேஜில் படித்துக்கொண்டிருக்கிறான். சக்கரவர்த்தினி அவர்கள் அந்தக் காலேஜுக்குப் போகும்போது ஸலாம்செய்து தரிசித்துக் கொள்வான் ’ என்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் விஜயநகர ராணியார் ரூபா 2000 காணிக்கை வைத்துக் கண்டார்கள். சக்கரவர்த்தினியார் அந்த 2000 ரூபாவையும் அங்கீகரித்து எடுத்துக்கொண்ட பாவனையாக அதைத் தொட்டு மறுபடியும் திருப்பினார்கள். அதுகண்டு ராணியார் ‘ சக்கரவர்த்தினியார் அவர்களை நேரில் தரிசித்துப் பேசியதனால் எனக்குக் கிடைத்த பெரிய பதவியின் பெருமையை ஞாபகப் படுத்தும்பொருட்டு இந்த ரூபாவைத் தர்மத்துக்குக் கொடுத்துவிட விரும்புகிறேன் ’ என்றார்கள்.



## THE BAG OF ROSE LEAVES

## ரோஜாப்பூ இதழ் நிறைந்த பை

இத்தாலியா தேசத்தின் சில பாகங்களில் ஒரு வழக்கமிருக்கிறது. அங்கே உள்ள சமுசாரிப்பெண்கள் தாங்கள் கலியாணம் ஆனவுடனே மஸ்லின் துணியில் ஒரு பை தைக்கிறார்கள். அதில் கொஞ்சம் கொஞ்சமாய் ரோஜாப்பூ இதழ்களைச் சேர்க்கிறார்கள். பிற்பாடு அவர்கள் மரிக்கும்போது, தங்கள் பெட்டியிலே அதைத் தங்கள் தலைக்குத் தலையணையாக வைத்துக்கொள்ளுகிறார்கள்.

இதிலிருந்து நாம் நல்ல படிப்பினை கற்றுக்கொள்ளலாம் அல்லவா? இரட்சகருக்காக அன்பான வார்த்தைகள் பேசுகிறது, தன்னை வெறுத்து ஜீவிக்கிறது, தைரியமாய் நடக்கிறது, இன்னும் சிறு சிறு

மிஷனெரி வேலை செய்வது ஒவ்வொரு ரோஜா இதழுக்கு ஒப்பாயிருக்கிறது. நாம் காலத்தை வீண்போக்கி, நமக்கு இஷ்டமான பாதையிலே நடப்போமானால் நம்முடைய பைகள் வாசனையாயிருக்கமாட்டா. நாம் நல்லவர்களாய், உலகத்திற்குப் பிரயோஜனமாகவும், இரட்சகரின் நாமத்திற்கு மகிமையாகவும் ஜீவித்துப் பின்பு மரித்துப்போவோமானால், நம்மைப்பற்றின எண்ணம், தேவனுக்கும், மனிதருக்கும் முன்பாக அதிக இன்பமானதாயிருக்கும்.

## COSTLY DRESS

## சாதாரண வஸ்திரமே போதும்

நம்மில் அநேகர் டம்பமான உடையில் ஆசைப்பட்டு அதிக செலவுசெய்து கடனுக்கு ஆளாகி வீண் அவதிப்படுகின்றனர். அப்படி ஆடையில் ஆடம்பரம் அநாவசியமானதே. சீமாட்டி ஒருத்தி சாதாரணமான புடைவை கட்டியிருந்ததைக் கண்ட அயலகத்தாள் ஒருத்தி 'என்ன! நல்ல சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டு வரலாகாதா?' என்று எங்க அந்தச் சாதாரணமான புடைவையை உடுத்தியிருந்த சீமாட்டி 'உடையில் என்ன ஆடம்பரம் வேண்டியிருக்கிறது? இதுவே போதுமானது' என்றாள். அவளுக்கு அதில் சமாதானம் ஏற்படாமல் 'அப்படியா! நம் ஊரில் இருந்தால்தான் கிடக்கிறது, வந்த இடத்திலும் அப்படியே இருப்பது என்றால் அது என்ன போங்கள்' என்று வருத்தமாய்ப் பேசினாள். இதைக் கேட்ட சீமாட்டி 'அம்மா' அப்படியல்ல: நம் ஊரில் நம்மை எல்லாரும் நன்றாய் அறிவார்கள்; ஆதலால் அங்கே ஆடம்பரமான ஆடை வேண்டியதில்லை. இங்கே நம்மை யாரும் அறியார்; ஆனதால் இங்கும் நல்ல சேலையே கட்ட வேண்டும் என்ற அவசியம் இல்லை' என்று சாதுரியமாய்ச் சொல்லி அவள் வாயை அடக்கி 'இன்னும் இதற்குப் பெரியோர்கள் உதாரணமும் எத்தனையோ இருக்கின்றன' என்று பின்வரும் சந்தர்ப்பத்தை எடுத்துக் காட்டினாள்.

இப்போது நமக்குச் சக்கரவர்த்தியாய் விளங்கும் ஐந்தாம் ஜார்ஜ் மஹாராஜா அவர்களுடைய பாட்டியாராகிய காலஞ்சென்ற சக்கரவர்த்தினியார் விக்டோரியா மஹாராணியாரைப்பற்றி நம்மெல்லோருக்கும் வெகு நன்றாய்த் தெரியும். அவர்களுடைய ஜீவியத்திலிருந்து நாம் அறியவேண்டிய அருமையான படிப்பினைகள் அநேகம். அவர்களுடைய அன்புள்ள தாயாருக்கு அவர் ஒருத்தியே குழந்தையாதலால் அவர்களை அதிக பரிவு பாராட்டிக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து



வந்தாலும் நம் தேசத்துத் தாய்மார்களைப்போல் அறிவில்லாமல் 'செல்லமாய்' வளர்க்காமல் சாதாரண வஸ்திரம் உடுத்து உபாயமான போஜனம் உண்டுவரப் பழக்கினார்கள். அப்படியே அவர்களும் தம் அந்தியகாலம்வரையில் நடந்துவந்து கண்ணியமும் புண்ணியமும் அடைந்தார்கள். அவர்கள் சித்திரம் வரைவதில் வெகு சமர்த்தர். அவர்கள் மாத்திரம் மஹாராணியாக ஏற்படாமல் இருந்தால் உலகில் அவர்கள் காலத்தில் இருந்த சித்திரக்காரர்களை எல்லாம் ஒரே தூக்காய்த் தூக்கி எறிந்திருப்பார்கள். மஹாராணியாயும் அந்தப் பிரிய வேலையை விட்டுப் பிரிந்தார்களா? மஹாராணியார் ஒரு சமயம் பால்மோரல்



மாளிகைக்குப் போயிருந்தபோது அதையடுத்த பாதையில் உட்கார்ந்துகொண்டு அந்த மாளிகையைச் சித்திரமாக வரைந்துகொண்டிருந்தார்கள். அப்போது அவர்களை அணுகி ஆட்டுமந்தை ஒன்று வந்தது. ஆனால் மஹாராணியார் தம் காரியத்திலே கண்ணாயிருந்துவிட்டார்கள். மந்தை செல்லும் வழியில் இருப்பதை அவர்கள் அறியவில்லை.

'மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்'

என்றபடி ராணியார் இப்படி வழியில் குறுக்கிட்டிருப்பதைப் பார்த்தான் அந்த ஆட்டை மேய்த்த இடைப்பையன். உடனே 'யார் அம்மா அது! விலகு! விலகு!!' என்று கத்தினான். என்ன கத்து கத்தியும் அவர்கள் விலகக்

காணோம். அதுகண்டு இடையன் 'ஏ அம்மா! அங்கே என்ன பண்ணுகிறாய்? வழியைவிட்டு விலகி நில் என்றால்' என்று அதட்டினான். இதைக் கொஞ்சதூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அரமனை வேலைக்காரி ஒருத்தி ஓடி வந்து 'அடா பையா! வெகு அதட்டு அதட்டுகிறாயே? அது யார் தெரியுமா?' என்று சிறிது மருட்டினாள். உடனே பையன் 'ஆ! இந்தச் சலசலப்புக்கு யார் பயப்படுவார்? யாராய் இருந்தாலும் இங்கே யாருக்கென்ன? விலகு என்றால் விலகுகிறதுதானே' என்று சொல்லிப் பின்னும் அலக்ஷியமாய் நின்றான். உடனே வேலைக்காரி சிறிது பொறுமையுடையவளாய் 'நம் மஹாராணி அப்பா அவர்கள்!' என்று எச்சரிக்கை செய்தாள். இதைக் கேட்டபின்தான் பையன் சிறிது திடுக்கிட்டான். சற்று பொறுத்ததும் 'ராணியா இவர்கள்! அப்படியானால் அவர்களிடத்தில் நல்ல நகை நட்டு ஒன்றையுங் காணோமே!' என்று சந்தேகப்பட்டு வருந்தினான்.

பாருங்கள்! இந்தப் பூமண்டலத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை ஆண்டிருந்த மஹாராணியார் உடுத்தியிருந்த சாதாரண வஸ்திரத்தை. அது சாதாரண ஸ்திரீகளுடைய உடைபோலவே இருந்தது. என்றால் நமக்குச் சாதாரண வஸ்திரம் போதும் என்று சொல்லவும் வேண்டுமா?

'ஆடம்பர ஆடை அநாவசியம்.'

## DEEP BREATHING
## A PREVENTIVE OF CONSUMPTION
## பெருமூச்சு

சாதாரணமாய் நாம் சுகமாக இருப்பதற்குப் போஜனம்மட்டும் போதுமானதல்ல. 'உண்டு உலாவ' என்பதே சகஜப் பேச்சு. உலாவவும் செய்தால்தான் தேகம் உறுதியாகும். இதனால்தான் சாயங்கால நேரங்களில் திறந்த வெளிகளில் சுத்தமான ஆகாயம் உள்ள இடத்தில் ஒருமணி அல்லது இரண்டுமணி நேரம் உலாவிவரப்போகிறோம். சிறுவர்களை ஓடியாடி விளையாடித் திரியவிடுகிறோம். இப்படிச் செய்யும் குழந்தைகளே பருத்துப் பலசாலிகள் ஆகிறார்கள். உண்டுவிட்டு அதிலும் நன்றாய் உண்டுவிட்டு, 'சொகுசென்றும், பெருமையென்றும், சுகமென்றும்' தப்பெண்ணங்கொண்டு வீட்டே கதியாக இருக்கும் 'பெரிய வீட்டுக் குழந்தைகள்' வெளுத்தும் மெலிந்தும் இருப்பதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம். இவை ஏன் இப்படி?



உலாவுகையிலும் கடின உழைப்பு எடுக்கையிலும் நல்ல ஆகாயத்தை நன்றாய் உட்கொள்கிறோம். அதில் உள்ள பிராணவாயு (ஆக்ஸிஜன்) நுரையீரலுக்குப் போகிறது. அங்கே அசுத்த ரத்தம் சுத்தமாகிறது. பிறகு இப்படிச் சுத்தமாகிய ரத்தம் பல நாடிகளில் ஓடி உடம்பில் எங்கும் பரவுகிறது. நம் உயிருக்கு ஆதாரமானதும் இதுவே. பொதுவாக சௌக்கியமாயிருக்க இப்படிச் செய்வது போதும். இன்னும் கொஞ்சம் அதிகமான உர உறுதியும் விசாலமும் வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அதிகமாக மூச்சு இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது அல்லவா? அதற்குப் பெருமூச்சு என்று பேர். சாதாரணமாய்க் கெட்ட ரத்தம் நல்ல ரத்தம் ஆவதற்கு உபயோகப்படுவது நுரையீரலின் மேற்பாகத்திலுள்ள வாயுவே. அதன் கீழ்ப்பாகத்திலிருக்கும் வாயு சுத்தமாயிருந்தாலும் உபயோகப்படுவதில்லை. அடிப்பாகத்திலேயே தங்கிவிடுகிறது. இப்படித் தங்கிவிடும் வாயுவையும் நாம் பெருமூச்சால் உபயோகப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

இந்தப் பெருமூச்சு இரண்டு காரியத்தால் ஆகவேண்டும். மூக்குத் துவாரங்களின் வழியாய் அடிவயிறுவரையில் பெருமூச்சு வாங்குவது ஒன்று. இதனால் மேற்பாகத்து மார்புக்கூடு விரிகிறது. அடுத்தது வாயுவை வாங்கிக்கொண்டு வயிற்றைப் பெரிதாக்குவது. அப்போது மார்புக்கும் வயிற்றுக்கும் இடையிலுள்ள ஈரல் தாங்கி ஏறவும் தாழவும் ஆகிறது. வயிற்றின் உள் அங்கங்கள் பெருத்துப் பலப்படுகின்றன.

இந்தப் பெருமூச்சு மார்பின் ஊனங்களையும் வியாதிகளையும் கண்டிக்கும் கைகண்ட மருந்து. காப்லர் என்று ஒரு துரை இருந்தார். அவர் உடன்பிறந்தார் ஐந்துபேர். எல்லாருக்கும் நுரையீரல் சம்பந்தமான க்ஷயரோகம் இருந்தது. யாராரோ என்னென்னவோ செய்தும் தீரவில்லை. உடன்பிறந்தார் நாலுபேரும் அதனாலே மாண்டனர். ஆனால் காப்லர்மாத்திரம் 'பெருமூச்சால்' பிழைத்து வெகு சுகமாக இருந்தார். அவரைப்போல் சுகமடைய விரும்பினால் நீயும் பின்வரும் அவருடைய அப்பியாசத்தை அநுசரிக்கவேண்டும்:—

“மூக்கால் பெருமூச்சு வாங்கி அதை அடிவயிற்றில் சேர். பிறகு மூச்சு வாங்காமலும் விடாமலும் இருந்து அடிவயிற்றிலுள்ள காற்றை மார்புக்குக் கொண்டுவா. கை இரண்டையும் பின்னுக்கு இழுத்து, மார்பைத் திறமாக வைத்துக்கொண்டு, மார்பெலும்புகளை வெளிப்பக்கத்திலிருந்து மெதுவாக அழுத்து. கொஞ்சம் பொறுத்து அந்தந்த அவயவம் அந்தந்த இடம் போகும்படி பெருமூச்சைவிடு. இதேமாதிரி தினம் ஐந்தாறுதரம் செய்யவேண்டும். 35½ அங்குலம் சுற்றளவு

இருந்த ஒருவர் இப்படியே செய்துவந்ததில் அது 42½ அங்குலமாக விரிந்தது.

இப்படிக்கெல்லாம் நன்மை பயக்கக்கூடிய பெருமூச்சு அப்பியாசத்தை எல்லோரும் செய்து சுகம் பெறுவார்களாக. பெண்களில் இதை அநுசரித்து அரிய நலம்பெற்றவர் அநேகர்.

## EVIL SPEAKING

## கெட்ட பேச்சு

ஒருநாள் ஒருவன் ஒருவனுக்கும் தெரியாமல் ராத்திரிவேளையில் ஒரு விதையை ஊன்றினான். அந்த விதை பூமிக்குள்ளேயே வெகு நாள் மறைந்துகிடந்தது; முளைக்கவில்லை. அது கண்ட அவன் அருகில் ஒருவனும் இல்லாத சமயம் பார்த்து விதை ஊன்றிய இடத்தில் நின்றுகொண்டு 'அது இங்கே இருக்கிறது' என்று சொல்லிக்கொள்வான். இப்படிப் பலநாள் செய்ய மணமும் சலித்தது.

பிறகு கொஞ்சகாலத்தில் முளைகிளம்பி மேலெழுந்து கிளைகள் தோட்டத்தில் பாவ ஆரம்பித்தன. நல்ல புஷ்பங்கள் தந்தன. அப்பூக்கள் அந்த வழியில் நடப்பவர்களைப் பார்த்து இனிமையாய்ப் பாடுவதுபோலவும் பழிப்பதுபோலவும் காணப்பட்டன. பலர் நின்று கேட்டு மனம் மிக வருந்தி வழியே போயினர்.

அடுத்தாற்போல் அப்புஷ்பங்கள் காயாய்ப் பின் பழமாய்ப் பருத்துப் பார்த்தவர் மனதைக் கவர்வனவாக இருந்தன. அதை நட்டவனும் அந்த நல்ல பழங்களை நன்றாய்த் தின்றான். மற்றவர்களுக்கும் தாராளமாய்க் கொடுத்தான். பொதுவாகப் பழங்கள் முதலில் வெகு நன்றாகவே இருந்தன. ஆனால் வர வர அதன் பழம் கசந்துபோய் விட்டது. அதனால் மகா கொடிய வியாதியும் ஒன்று உண்டாவதாயிற்று. அதனால் பயந்தார்கள். கடவுளாலும் அதை நிறுத்த முடியுமோ என்று சொல்லக்கூடியதாகிவிட்டது.

சரி, இவைகள் எல்லாம் என்னென்ன? மனிதனுடைய இருதயமே அந்தத் தோட்டம், பொறாமையே அதில் ஊன்றிய வித்து, தடைதான் அதன் அழகிய மலர், கெட்ட பேச்சும் பொய்யும் புனைசுருட்டும் அதன் பாழும் பழங்கள்.

'ஔவியம் பேசேல்.'
'சுளிக்கச் சொல்லேல்.'
'வெட்டெனப் பேசேல்'
'ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.'



## HUDSON TAYLOR AND THE CHINESE SOLDIERS

## தன்னை அறியாத அமைதி அல்லது பரம சமாதானம்

ஹட்சன் டெய்லர் என்பவர் சீனதேசத்தில் ஊழியஞ்செய்த ஓர்
மிஷனெரி. அவரைப்பற்றி ஒரு நல்ல கதை சொல்லப்படுகிறது.

அநேக வருஷங்களுக்குமுன்னே சீன தேசத்திலிருக்கிற நீங்பு
போ என்ற இடத்தில் அதிக குழப்பமும் கலகமும் உண்டாயிருந்தது.
அப்போது முப்பது, நாற்பது பேர்போல் ஹட்சன் டெய்லர் என்பவர்
வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள்.


ஒருநாள் அவர் வாசலண்டையிலே நின்றுகொண்டு, அந்தக்
கல்வியற்ற ஜனங்களுக்கு விளங்கத்தக்கதாய், அருமை ரட்சகரின்
அன்பைப்பற்றி அவர்களிடம் உருக்கமாய்ப் பிரசங்கம் செய்துகொண்
டிருந்தார்.

கதவைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அந்த ஜனங்களெல்
லாரும் திடீரென்று பார்த்தார்கள். அவருக்குச் சற்றுநேரம் என்ன சங்
கதி என்று விளங்கவில்லை. அவரும் கதவுப் பக்கம் திரும்பிப் பார்க்
கும்போது, அங்கே அநேக போர்ச்சேவகர்கள் தங்கள் யுத்த ஆயுதங்க
ளோடு உள்ளே வந்து நுழைகிறதைக் கண்டார்.

அவர் அந்தப்பக்கம் இந்தப்பக்கம் ஓடவில்லை. தான் நின்ற
நிலையிலே நின்று உள்ளான பரம சமாதானத்தோடே தன் வேலையை
நடத்திக்கொண்டிருந்தார். அவர்களும் உள்ளே வந்து உட்காரமாட்
டார்களா என்ற எண்ணம் வந்தது. அவர் அவர்களைப் பார்த்து,
'சற்று பொறுங்கள், நாங்கள் எங்கள் கடவுளை நோக்கிக் கூப்பிட்டுக்
கொண்டிருக்கிறோம்' என்றார். துரையுடைய மரியாதையான வார்த்
தையையும், அவருடைய ஒழுக்கத்தையும் கவனித்த போர்ச்சேவ
கர்கள், தங்கள் ஆயுதங்களை உடனே கீழே வைத்துவிட்டார்கள்.

அன்றைக்குக் கூட்டம் முடிய அதிக நேரம் ஆகிவிட்டது. பிற்பாடு
போர்ச்சேவகர்கள் அவருக்காவது, அவரிடம் அடைக்கலம் புகுந்
திருந்த ஜனங்களுக்காவது ஒரு மோசமும் செய்யாமல் அவர்களை
விட்டுப் போய்விட்டார்கள். தேசமெல்லாம் அதிக குழப்பமாயிருந்
தாலும் இவர்களுக்கு ஒரு மோசமும் வரவில்லை.

ஒரு நல்ல மனிதன் தேவனுடைய பிள்ளைகளுடைய மெய்ச்
சமாதானத்தைப்பற்றி அதிக விசேஷமாய் எழுதியிருக்கிறார். நாம்
தேவனுடைய கரத்திலிருக்கிறோம். அவருடைய பராமரிப்புக்குள்
இருக்கிறவர்களுக்கு எவ்விதமான தீமையும் நேரிடாது என்ற நம்




A Chinese Street



பிக்கைதான் ஹட்சன் டெய்லர் என்பவருக்கு அந்தப் போர்ச்சேவகர்
களுக்கு முன்னாலே அவ்வளவு வல்லமையையும் தைரியத்தையும்
கொடுத்தது.

உலகம் தாக்கூடாத மெய்ச்சமாதானத்தைத் தேவன் நமக்குக் கட்
டளையிட அவரை நோக்கி நாம் கெஞ்சுவோமாக.

## A MESSAGE FROM A DYING WOMAN

## நல்ல செய்தி ஒன்று சாகும் தருணதில் ஒரு ஸ்திரீ சொல்லியது

இந்த லோகத்தை விட்டுப் போகவேண்டிய காலம் சமீபித்து
விட்டதால் என் அநுபவம் என் பின் இருப்பவர்களுக்கு உபயோக
மாகும் என்றெண்ணி இதை எழுதலானேன். இப்படிச் செய்வதில்
முதலாவதாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இது:—என்
ஜீவிய நாள் எல்லாம் எனக்குக் காட்டிய கிருபையையும் நன்மையையும்
மனப்பூர்வமாகவும் மனமகிழ்ச்சியாகவும் அங்கீகரிப்பதற்கு அடை
யாளமாய்த் தேவன் மனிதனுக்குச் செய்யத் தயாராக இருக்கும் தயவுக்
கெல்லாம் அவன் மனம் இடந்தருவதில்லை. ஆனால் எனக்கு அவர்
யாதொரு குறைவும் வைக்கவில்லை என்றே சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

மாணத்தைப்பற்றிய பயம் எனக்கு இல்லவே இல்லை. சிறு
பிராயம் முதற்கொண்டே அப்படி வந்திருக்கிறேன். பின் வயது
ஆக ஆக எனக்கு நோய் நொடிகள் கஷ்டங்கள் வரவே மாணம் ஒளி
தங்கிய ஒரு தேவதூதன் என்று தீர்மானிக்கலானேன். அப்போது
முகம் வேண்டுமானால் இருளடைந்து இருந்திருக்கலாம்; மற்றப்படி
தேவப்பிரகாசத்திற்குக் கொஞ்சமும் குறைவு இருந்திராது.

மனிதனது வெளிப்பாகமான சரீரம் இறந்தவுடன் உட்பாகமான
ஆத்துமா தினந்தோறும் புதியதாகின்றது என்னும் உண்மையும்,
கஷ்ட நஷ்டங்கள் பலஹீனம் ஆகிய இவைகள் எல்லாம் ஆத்துமா
ஏறி உயர்வதற்கு ஏற்ற நல்ல படிகள் என்பதும் எனக்கு நிச்சயமாகத்
தோன்றியது. அதனால் என் தேகம் இளைத்தாலும் சரி களைத்தாலும்
சரி இவைகளாலும் ஆத்துமா முன்னுக்கே வருகிறது என்பது எனக்கு
மிக்க மனமகிழ்ச்சியையே தருகிறது.

ஆகையால் பிரியமானவர்களே! நோய், துன்பம், மாணம் முதலிய
வைகளுக்கு அஞ்சவேண்டாம். சரியானபடி யோசித்தால் அவைகள்

நமக்கு நல்ல சிநேகிதர்கள். இவைகளைப்போல் ஆத்துமாவைச் சுத்தி செய்யக்கூடியது வேறே கிடையாது. என் தேகத்தில் சக்தி வெகு குறைவாக இருந்ததால் நான் என் இஷ்டப்படி இடைவிடாமல் ஜெபிக்கவும் தியானிக்கவும் முடியவில்லை. இன்னும் அது கிறிஸ்துவின் வேலையைச் செய்வதற்கு ஒரு நிச்சயமான தடை என்பதும் தோன்றியது. ஆனால் இந்த விதத்தில் கெட்டதான தேக பலக் குறைவு நம்மை எப்பொழுதும் கடவுளின் கட்டளைக்கு உள்ளடங்கியே நடக்கும்படி கண்டிப்புச் செய்வதில் பெரிய உபகாரியாய் ஏற்படுகிறது என்று நான் தேர்ந்ததும் அந்த விசனமும் ஆறிவிட்டது. ஒவ்வொருநாளும் நம்முயிரை அவருடைய பாதங்களில் சமர்ப்பித்து அதை அவர் சித்தப்படி உபயோகிப்பதும், அவருக்குக் காத்திருப்பதும், அல்லது கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவதும் அவர் ஆக்கினை என்று தோன்றியது. இந்தப் படிப்பினை என் மனதில் பதியவே அவர் முன் ஓய்ந்திருப்பதின் நன்மை எனக்கு விளங்கியது. அவருடைய பிரதாபத்தை நின்று நினைப்பதில் நிறைந்த திருப்தி ஒவ்வொருவனுக்கும் உண்டாகிறது. உயிரைப்பற்றி எனக்கு இருந்த எண்ணம் இது; ஆகாயத்தைப் பிரதிவிம்பித்துக்கொண்டும் கீழே பூமிக்கு ஆசீர்வாதமாகிய நீரை வழியவிட்டுக்கொண்டும் இருக்கும் மலையின் உச்சியில் உள்ள சுத்தமான ஓர் ஏரியைப்போல் நம்முயிரை நாம் பாவிக்கவேண்டும். என்னைச் சுற்றியிருப்பவர்களுக்கு என்னால் யாதொரு பிரயோஜனமும் இல்லை என்பது எனக்குத் திண்ணமாய்த் தெரியும். தெரிந்தாலும் இப்படிப்பட்ட ஆத்தும நிலையையும் ஒருவிதத்தில் இல்லாவிட்டால் இன்னொரு விதத்தில் தேவன் தமது மகிமைக்கு உபயோகமாயிருக்கும்படி செய்வார் என்பதே என் நம்பிக்கை.

முன்னே நான் ஜெபமாகிய விதைகளைப் பலமுறை விதைத்து அவற்றிற்குத் தகுந்தபடி பலனை இப்போது அடைந்திருக்கிறேன் என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். அது வரவர இன்னும் அதிகம் ஆகும் என்று எதிர்பார்க்கிறேன். அவைகளில் ஒன்றும் வீண் ஆகவில்லை. கிடைக்கவேண்டிய பலன் அவ்வளவையும் நான் அநுபவிக்காவிட்டாலும் என் பின் வருபவர்களாவது அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இறப்பேன்.

நான் நித்திய ஜீவிய வாழ்க்கையை அணுக அணுக என் முன் காணும் ஆனந்தத்தின் மகிமை என்னே என்னே! பரத்தில் அடையக்கூடிய இவ்வளவு மகிமையுள்ள கிரீடத்தைப் பாராமல் ஜனங்கள் குப்பையையும் கூளங்களையும் சேர்ப்பது ஏன் என்று யோசிக்க யோசிக்க ஆச்சரியம் அதிகரிக்கிறது. யேசுவின் திருவடிகளின்கீழ் உட்கார்ந்து



அநேக காரியங்களைச் சுலபமாய் முடிக்கக்கூடியதாய் இருக்கும்போது ஏன் வீண் கஷ்டப்படுகின்றனர்! நான் அதிகமாய் யோசிக்கவேண்டியதில்லை. மோக்ஷம் அவ்வளவு இன்பம் உள்ளதாகக் காண்கிறது.

இளமைப் பருவத்தில் எனக்கு இருந்த வல்லமை என்ன! அது மறைந்த விதம் எப்படி? இவற்றை நினைக்க நினைக்கத் துக்கம் மேலிடுகிறது. ஆனால் அந்த வல்லமையில் ஒரு சிறிதும் அழிந்துவிடவில்லை; அவை மறைந்திருக்கின்றன; எனக்காகத் தேவன் அவற்றைப் பத்திரப்படுத்தியிருக்கிறார். நான் திரும்ப உயிர்த்தெழுந்து அவர் சன்னிதியில் போகும்போது என் பலத்தையும் சக்தியையும் பூரணமாக்கி அவருடைய நாமத்தின் மகிமையின்பொருட்டு உபயோகிக்கும்படி திரும்பவும் அளிப்பார்.

இதுவே மோக்ஷத்தைப்பற்றிய என் எக்கம். என் ஆத்துமாவைத் தேற்றுவதும் இதுவே. இவ்வுலகத்திலும் பூரணமகிழ்ச்சி. அதனால் நன்றிபாராட்டக் காரணமும் அதிக பலம். சமாதானமாகிய நித்திய ஜீவியத்தை அடையும்போது உண்டாகும் மகிழ்ச்சி ஆஹா! இவ்வளவா! அவ்வளவா!

## CIVICS

## துரைத்தன விளக்கம்

கும்மிராகம்.

1. வானமளவும் இமவரை யோர்புறம்
வாரிதி முப்புறம் சூழ்நாடாம்
ஞானமிகுந்தநம் இந்திய நங்கைக்கு
நானுபாஷை மதச் சுதராம்.

2. இந்திய மன்னர்கள் பல்லூழி—இவள்
இன்பமடைந்திளைத் தார் வாழி
அந்தரமாக மகம தாசர்கள்
ஆண்டனர் சின்னு ளடிதோழி.

3. ஆங்கிலர் பின்னைகைக் கொண்டார்கள்—நம
தன்னை நலமதை யுண்டார்கள்
பாங்குடன் பிள்ளைக ளாகும்நமக்குயர்
பாக்கியம் பற்பல கண்டார்கள்.

4. போக்கு வரத்துக் குறுசாலை—கப்பல்
புகைரதத் தந்தித் தபாறசாலை
காக்கும் வயித்திய கலாசாலை—மற்றும்
கண்டனர் ஏரி குளஞ்சோலை.

5. இன்னன நன்மை தருஞ்சீமான்—நம
தைந்தாம் ஜார்ஜெனு மாகோமான்
மன்னர் பிரானையும் ராணி யவரையும்
வணங்கிக் கும்மி யடியுங்கடி.

6. இந்திய தாயின் சுகந்தூண்டி—சீமை
ஈண்டிடும் நண்பர் தலைமேவேண்டி
மந்திரி எங்கள் குரூ துரை தம்மையும்
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி.

7. மன்னர் பதிலெனும் உத்யோகன்—இந்து
மாதனை ஹார்டிஞ்ஜ் எனும்போகன்
தன்னையும் சென்னைக்கா மைக்கேல் பிரானையும்
தாழ்ந்து கும்மி யடியுங்கடி.

## HYGIENE

## சரீராரோக்கியப் பாட்டு

1. காலை எழுந்து நீ பற்றேய்த்து—மூழ்கி
கரையற ஆடை புனல்தோய்த்து
சாலத் தகுதி மனைத்தொழிற் கொண்டு
தகும்விளை யாடல் இணைந்திடுவாய்.

2. அன்னம் அதிகமா யுண்ணாதே—செறி
வாகாத வுண்டியை யெண்ணாதே
நன்னீர் தோய்ந்தபின் மாசு படிந்திடும்
நாற்ற உடைகளை நண்ணாதே

3. இரவி லதிகம் விழிக்காதே—காலை
இம்மியும் தூங்கிக் கழிக்காதே
பாவும் நல்லோரைப் பழிக்காதே—ஆதி
பரமன்தன் சேவை ஒழிக்காதே.

4. நன்னீர்ப் பான மிகச் சுகமே—அது
நண்ணிடா தாயின்வெந் நீர்தருமே
துன்னீரால் விஷ பேதி முதலிய
தொத்து வியாதிகள் தோன்றிடுமே.

5. மனையி லெலிகள் அறநீக்கு—மக
மாரி வியாதி தனைப்போக்கு
இனைய விதிகளை நீநோக்கு—தேக
இன்பத்தை யென்றைக்கு மேயாக்கு.



## THE BLIND PATIENT

## ஒரு பார்வையற்ற பிணியாளி

இங்கிலாந்து தேசத்திலே ஒரு டாக்டர் இருந்தார். அவர் தன்
னுடைய அறையிலே உட்கார்ந்து வியாதிக்காரர் தன்னை வந்து பார்க்
கும்படி காத்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு பார்வையற்ற
மனிதனை அவனுடைய சிநேகிதன் அவரிடம் அழைத்துக்கொண்டு
வந்தான்.

டாக்டர் உடனே அந்தக் குருடனுடைய கண்களை உற்றுப்பார்த்
தார். அவன் தன் கண்களைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், அவரைப்
பார்த்து, 'ஐயா, என் ரத்தாசயம் அதிக பெலவீனமாயிருக்கிறது.
எனக்கு அடிக்கடி நெஞ்சு படபடப்பு உண்டாகிறது, தாங்கள் ஏதா
வது மருந்து பார்த்துக் கொடுக்கவேண்டும்' என்றான். இது டாக்ட
ருக்கு ஆச்சரியமாயிருந்தது.

அவர் அவனுடைய நெஞ்சைச் சற்றுநேரம் பரீட்சை செய்து
பார்த்து, 'சிநேகிதனே, உன் ரத்தாசயத்தில் அவ்வளவு தப்பிதமில்லை.
ஏன் அதைப்பற்றிக் கவலைப்படுகிறாய். நான் உனக்கு இன்னொரு
சந்தோஷமான காரியம் சொல்லுகிறேன் கேள். நீ பார்வையற்ற
வனாயிருக்கிறாய். பக்கத்திலிருக்கிற மிஷன் ஆஸ்பத்திரியில் கொஞ்ச
காலம் வந்திருப்பாயாகில் நான் உன் கண்களுக்கு வேண்டிய மருந்து
கள் உபயோகித்து, உனக்குப் பார்வையளிக்கப் பிரயாசப்படுவேன்.
அதற்கு வேண்டிய கருவிகள் என்னிடம் தயாராயிருக்கின்றன' என்று
சொன்னார்.

அவனுடைய கண் திறக்கப்படப்போகிறது. எவ்வளவு நம்பிக்
கையும் சந்தோஷமும் அவனுக்கு உண்டாகவேண்டும்! ஐயோ, அந்த
மனிதன் அதைக்குறித்துச் சந்தோஷப்படாமல், மறுபடியும், மறுபடி
யும், டாக்டரைப் பார்த்து 'இல்லை, ஐயா, என் கண்களைப்பற்றி
எனக்குக் கவையில்லை, என் இரத்தாசயத்திற்கு வேண்டிய மருந்து
கள் கொடுக்கவேண்டும்' என்றார். அந்தக் குருடனுக்கு, தான் பார்
வையில்லாமல் வழக்கப்பட்டுப்போனபடியால் அதின் தீமையும் வருத்
தமும் பெரிதாகத் தோன்றவில்லை. அழகான ஆகாயத்தையும், நேர்த்தி
யான புஷ்பங்களையும், அருமையான சிநேகிதரின் முகத்தையும், கண்டு
களிக்கும் சந்தோஷம் இன்னது என்பதையும் முழுவதும் மறந்து
போனான். அந்த டாக்டர் என்ன செய்வதென்று தெரியாமல் அவன்
வந்த பிரகாரமாகவே அவனை அனுப்பிவிட்டார்.

'நீ குருடனாயிருக்கிறதை அறியாதிருக்கிறாய்' என்ற வேத வச
னத்தை, இந்தச் சரித்திரம் நமக்கு நினைப்பூட்டுகிறதல்லவா?

நம்மில் எத்தனைபேர் இந்தக் குருடனைப்போல், ஆத்துமக் குருடராயிருக்கிறதை அறியாமல் ஜீவிக்கிறோம். நாம் குருடராயிருந்து வழக்கப்பட்டுப்போகிறதினாலே, இரட்சகரின் அருமை முகமும், இரட்சிப்பின் வெளிச்சமும் எப்படியிருக்கும் என்பது நமக்கு மறந்துபோகிறது. ஒரு காரியம்தான் தேவை. பிணியாளி சுகமாக்கப்பட ஆவலாயிருக்கவேண்டும். நானும் நீயும் இரட்சகரைத் தொட்டுச் சொஸ்தமாக்கப்பட விருப்பமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

'ஆண்டவரே, உம்முடைய அருமை முகத்தைப் பார்க்கும்படி எங்கள் ஆத்துமக் கண்களைத் திறந்தருளும்' என்று தினந்தோறும் அவரைப் பிரார்த்திப்போமாக.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1912 ௵ மார்ச்சு ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | சங். | 103. | 1—12 | 11 | தி. | சங். | 106. | 13—23 | 21 | வி. | மாற். | 11. | 12—23 |
| 2 | ச. | ,, | 103. | 13—22 | 12 | செ. | ,, | 106. | 24—33 | 22 | வெ. | ,, | 11. | 24—33 |
| 3 | ஞா. | ,, | 104. | 1—13 | 13 | பு. | ,, | 106. | 34—48 | 23 | ச. | ,, | 12. | 1—12 |
| 4 | தி. | ,, | 104. | 14—23 | 14 | வி. | மாற். | 9. | 38—50 | 24 | ஞா. | ,, | 12. | 13—27 |
| 5 | செ. | ,, | 104. | 24—35 | 15 | வெ. | ,, | 10. | 1—12 | 25 | தி. | ,, | 12. | 28—44 |
| 6 | பு. | ,, | 105 | 1—15 | 16 | ச. | ,, | 10. | 13—22 | 26 | செ. | ,, | 13. | 1—13 |
| 7 | வி. | ,, | 105. | 16—28 | 17 | ஞா. | ,, | 10. | 23—34 | 27 | பு. | ,, | 13. | 14—23 |
| 8 | வெ. | ,, | 105. | 29—38 | 18 | தி. | ,, | 10. | 35—45 | 28 | வி. | ,, | 13. | 24—37 |
| 9 | ச. | ,, | 105. | 39—45 | 19 | செ. | ,, | 10. | 46—52 | 29 | வெ. | ,, | 14. | 1—11 |
| 10 | ஞா. | ,, | 106. | 1—12 | 20 | பு. | ,, | 11. | 1—11 | 31 | ஞா. | ,, | 14. | 27—42 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS

மாதர் போதினி

No. 172 ஏப்ரல் 1912 No. 4

## COMPASSION

## அருளுடைமை

### ரந்திதேவன் என்னும் நல்லரசன் சரிதை.

தன்னுயிர்போல் மன்னுயிரிடத்து இரக்கங்காட்டியருளிய ஒரு மகாராஜனின் அழகிய சரித்திரம் பழைய கிரந்தமொன்றில் சொல்லப்பட்டிருப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒரு காலத்தில் ரந்திதேவனென்னும் மன்னனொருவனிருந்தான். அவன் ஸங்கிருதி என்பவனுடைய குமாரன். எப்பொழுதும் வேண்டிய திரவியமும் ஆகாரமும் ஏழைகளுக்குக் கொடுத்துவந்ததினால் அவன் நல்ல அரசன் எனப் பேர்பெற்றனன். பசியுள்ளவர்களுக்கு ஆகாரம்போட்டுக் காப்பாற்றவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு தன்னிடத்திலுள்ள எல்லாவற்றையும் பிறருக்கு அளிப்பதுடன் சில வேளைகளில் அப்படிச் செய்வதில் தானுந் தன்னில்லாளுங்கூட உபவாசமாயிருப்பதுண்டு.

ஒரு காலத்தில் அம்மன்னன் தானும் தன்னுடனிருப்பவர்களும் அநேக நாட்களாய் ஆகாரமின்றி மிகவும் பசியுற்றிருந்தார்கள். யாரோ ஒருவர் கொஞ்சம் ஆகாரமும், கொஞ்சம் இனிய பாலும் நெய்யும், கோதுமையும், தண்ணீரும் அவர்களுக்குக் கொணர்ந்தார்கள். அவ்வாகாரத்தை உட்கொள்ள அவர்கள் உட்காரப்போகையில், பசியுற்றிருக்கும் பிராமணனொருவன் அவர்களிடையில் திடீரெனத் தோன்றித் தனக்கு ஆகாரங் கொடுக்கும்படி வேண்டினான். ரந்திதேவன் அந்தப் பிராமணனுக்கு ஆகாரமளிக்கப் பிரியமுற்றவனாய் அவனுக்கே முதலில் உணவளித்தனன். உணவுண்ட பிராமணன் சென்றபிறகு பாக்கியிருந்த உணவைத் தங்களுள் சரிபாகமாகப் பகிர்ந்தான். அவன் தன்

னுடைய பாகத்தை அருந்த உட்கார்ந்ததுதான் தாமஸம். பசியுள்ள ஆத்திரனொருவன் ' தனக்காகாரம் கேட்டான். ரந்திதேவனோ அப்பொழுது தான் ஆகாரங் கொள்ளாவிட்டாலும் அவனுக்குக் கொஞ்சம் ஆகாரங் கொடுத்தான். ஆத்திரனும் சிறிதுணவருந்தித் தன் வழிச் சென்றான்.

மிஞ்சியிருந்த சொற்ப ஆகாரத்தை ரந்திதேவன் உண்ண வாரம்பியாததற்கு முன்னமேயே நாய்க்கூட்டமொன்றுடன் ஒரு மனிதன் வந்து தனக்கும் ஏதாவது ஆகாரம் வேண்டுமென்று வேண்டினான். வேண்டலும் இந்நல்லரசன் எஞ்சியிருந்த ஆகாரம் முழுவதையும் அம்மனிதனுக்கும் அவன் நாய்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தபின்னர் ஒரு கிண்ணம் தண்ணீர்தான் கடைசியில் பாக்கியிருந்தது. பசியாறின நாயும் மனிதனும் தம் வழிச்சென்றபிறகு தாகத்தால் மிகுதியும் தளர்வுற்றிருக்கிற அரசன் கடைசியில் பாக்கியிருக்கிற தண்ணீரை யருந்தலாமென்றெண்ணினான். அதே நிமிஷத்தில் ஒரு எளிய பிச்சைக்காரன் எனக்கு நாவறண்டுபோகிறது, மிக்க தாகமாயிருக்கிறது, தண்ணீர் வேண்டுமென்று மன்றாடினான். அப்பிச்சைக்காரன் ஜாதிப்பிரஷ்டனாகிய நீசனாயும் களைத்துப்போன தௌர்ப்பாக்கியனாயுமிருந்தான்.

உதாரகுணமுள்ள இவ்வரசன் தான் சாப்பிட எண்ணியிருந்த நீரை அவ்வெளிய பிச்சைக்காரனுக்கு ஈந்தான். அவ்வெளியவன் மிகவும் சுலபமாய் நீரை அருந்துவதற்குதவியாய் அப்பாத்திரத்தைத் தன் கையினால் பிடித்துக்கொண்டிருந்த அரசன் 'பசிதாகமொன்றும் எனக்குக் கிடையவே கிடையாது. மற்றவர்களுடைய துன்பத்தையும் துக்கத்தையும் நான் பொறுமையாய்ப் பொறுக்க கிருபாநிதியாகிய ஹரி கடாக்ஷிக்கவேண்டுமென்றும் மற்றவர்களுடைய கஷ்டங்களில் ஒத்தாசைசெய்து சந்தோஷிக்க எனக்கு மனவலி கடவுள் கொடுக்க வேண்டுமென்றும் மனங்கசிந்து கூறினார்.

பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களிடத்தும் ஈனஜாதிகளிடத்தும் நாம் எவ்வளவு தயையோடிருக்கவேண்டுமென்றும் எல்லாருக்கும் எங்ஙனம் நாம் உதவிபுரியவேண்டுமென்றும் ரந்திதேவனால் நாம் நன்கறிகிறோம். இந்த நல்ல ரந்திதேவன் செய்த விதமாய் நம்முடைய எல்லா ஆகாரத்தையும் அந்நியருக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் பசியுற்றவர்க்குச் சிறிதேனும் அடிக்கடி உதவலாம். கஷ்டப்படுவாரிடத்தும் நோயுற்றவரிடத்தும் சிறு குழந்தைகள்கூடத் தங்களுடைய அன்புள்ள செய்கைகளை அடிக்கடி செய்யக்கூடியவர்கள். நம் சொந்த மனிதராயினும் அந்நியராயினும் பணக்காரராயினும் ஏழையாயினும் பிராமணராயினும் ஜாதிப்பிரஷ்டராகிய புலையராயினும்



பலரிடத்தும் நாம் அன்பும் விசுவாசமும் உடையவராயிருத்தல்வேண்டும். எம்மனிதன் நம் உதவியை வேண்டினானாயினும் அத்தகையோனை நம் சகோதரனாகப் பாவித்து அவனுக்கு உதவிபுரியவேண்டும்.

## உபகாரம்

கரிய சிற்றெறும்பொன்று தன்னால் தூக்கவாவது அசைத்துருட்டவாவது முடியாத பெரியதொரு கோதுமைத் தானியத்தைக் கண்டது. ஆதலின் தன்னெதிர்ப்பட்ட மற்றொன்றினை அத்தானியத்தைத் தன் வளைவரையிற் கொண்டு சேர்க்க உதவிபுரியுமாறு மன்றாடிக் கேட்டுக்கொண்டது.

அதற்கு அது, எனக்கு என் வேலை தலைக்குமேலிருக்கின்றது; உனக்கு அத்தானியம் தேவையானால் நீயேதான் அதை உருட்டி உன் வளைக்குக் கொண்டுய்க்க வேண்டுமென்றது. இப்படிக் கோபத்தோடு சுயநலங் கருதியே பதில் சொல்லிக்கொண்டுபோய் ஓரிடத்தில் சாவகாசமாய்ப் படுத்துறங்கலாயிற்று.

அப்பொழுதுதான் அவ்வழியே போய்க்கொண்டிருந்த மற்றொரு சிற்றெறும்பு தன்னுடைய சகோதரன் உதவி வேண்டுவதை யறிந்து இரக்கப்பட்டு அது வைத்துக்கொண்டிருந்த சுமையை வளைகொண்டு சேர்ப்பதில் வேண்டிய ஒத்தாசையைப் புரிந்தது. இதைக் கேட்க நேரிடும் இளஞ்சிறுவர்கள் யாவரும் இக்கதையினால் நற்பயன்களை யடைய முயற்சி செய்யக்கடவர்கள். நற்புத்தியடைய மனமுள்ள சிறுவர்கள் நல்ல சுபாவமுள்ள மற்றைய சகோதர எறும்புக்கு உதவிய நல்லெறும்பினால் நற்புத்தி யடையக்கடவர். மேலும் சிறு பிராணிகளே ஒன்றுக்கொன்று பக்ஷமுள்ளவைகளாய் நடந்துகொள்ளுமானால் குழந்தைகள் உண்மையாய் அவ்வாறே நடந்துகொள்ளவேண்டுமென்பது சொல்லாமலே அமையுமன்றோ?

செந்தமிழ் Magazine.

## LOOK UP!

## மேலே பாருங்கள்!

ஒரு பட்டணத்திலே விசேஷித்த விநோதசாலை ஒன்று இருந்தது. அதில் நேர்த்தியான படங்களும், அழகான சித்திரங்களும், பேர்பெற்ற சித்திர வித்தைகளும் அநேகமாய் இருந்தன. இவைகளைப் பார்க்க நாள்தோறும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வருவார்கள்.

ஒருநாள் ஒரு துரைசானி படங்களைப் பார்க்கும்போது அந்தச் சாலையைக் காப்போனுடைய பெண்ஜாதி முழங்காற்படியிட்டு,

குனிந்து தண்ணீர் ஊற்றித் தரையைச் சுத்தம்பண்ணினதைப் பார்த்தார்கள். 'ஏனம்மா! எத்தனையோ அழகான பொருட்கள் இவ்விடத்தில் உண்டு' என்று பட்சத்தோடு சொன்னார்கள். அதற்கு வேலைக்காரி, 'ஆமாம், மேலே பார்ப்பதற்கு நேரம் இருந்தால்தானே அப்படியிருக்கும் அம்மா' என்று சொன்னாள்.

அது வருத்தமான வார்த்தை அல்லவா? இந்த ஏழைப் பெண்ணைப்போல இந்தத் தேசத்திலும் அநேகம் பெயருக்கு மேலே பார்க்கிறதற்கு நேரமில்லைபோலிருக்கிறது. அவர்கள் கீழே குனிந்து இரவும் பகலும் கவனமாய் வேலைசெய்வதில் தேவன் சிருஷ்டித்த விநோதங்களைப் பார்க்க அவர்களுக்கு நேரமில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கிற எஜமான்கள் கொடூரமான எஜமான்கள் அல்ல, யோசனையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நம்முடைய ஏழைச் சகோதரி சகோதரர்களும் நிமிர்ந்து அங்குமிங்கும் உலாவிக்கொண்டு இந்த உலகத்திலிருக்கிற சிங்காரங்களை ஏறெடுத்துப் பார்க்க இடம் கொடுக்கவேண்டும். 'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்' என்று இயேசுநாதர் சொன்னதைப்போல நாமும் இவர்களுக்கு இப்படிப்பட்ட உபகாரங்களைச் செய்தால் நமக்கும் ஆசீர்வாதம் வரும். இரங்குவோனுக்கும் இரங்கப் பெறுவோனுக்கும் இருவருக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும்.

ஆனாலும் இன்னொரு வகையார் உண்டு. அவ்வகையாரை ஏழைகளிலும் ஆஸ்திக்காரர்களிலும் காணலாம். அவர்களுக்கு நேரம் இருந்தாலும், நாள்தோறும் செய்கின்ற வேலை மேலே குனிந்து அவர்கள் கண்களை ஏறெடுக்கிறதில்லை. 'மோட்ச பிரயாணி' என்கிற புஸ்தகத்தில் ஒரு படம் இருக்கிறது. ஒருவன் அழுக்கிலே முழங்காற்படியிட்டு, ரத்தினக்கல்லோ, வேறொரு திரவியமோ கண்டுபிடிக்கவேண்டும் என்று குப்பைவாரியினால் குப்பையைத் தேடிக்கொண்டே இருக்கிறான். அவனுக்குச் சமீபமாக ஒரு தேவதூதன் நின்று அவன் தலைமேலே மகிமையுள்ள கிரீடம் ஒன்றைப் பிடித்துக்கொண்டிருந்தபோதிலும் அவன் தலை நிமிர்ந்து அதைக் கவனிக்கிறதேயில்லை. அவன் அசுத்தத்தில் புரட்டித் தேடித் தேடி மண்ணுக்குள்ள அற்ப பொருள்களை மாத்திரம் கண்டுபிடிக்கிறான். அவை கொஞ்சகாலம் நன்றாயிருந்தபோதிலும் சீக்கிரத்தில் வாடிப்போய் அல்லது துருப்பிடித்துக் கெட்டுப்போம்.

'நீங்களோ மேலானவைகளையே நாடுங்கள்.'

மேலே பாருங்கள்!






## THE WANDERING SHEEP

(Songs and Solos No. 484.)

## வழிதப்பின ஆடு

(1) அலைந்த ஆடு நான், வழி தப்பிப்போனேன்,
மேய்ப்பன் சத்தம் கேளாமலே அடங்கா ஆடு நான்.
துஷ்டப்பிள்ளை நானே, வீடு விட்டுப்போனேன்
எந்தை புத்தி நீத்துவிட்டு எங்குமலைந்தேன் நான்.

(2) மேயபபன் ஆட்டைக் கண்டார், தந்தை என்னைப் பார்த்தார்;
மேடு பள்ளம் எல்லாம் தேடி, மேவிக் கண்டுகொண்டார்.
பசி பயம் களை படும் என்னைக் கண்டு
கசிவுற்று அன்பினாலே கட்டி மீட்டார் என்னை.

(3) யேசு என்னும் மேய்ப்பர் என்னை மிக மீட்டார்,
அவர் உதிரத்தினாலே அன்பாயென்னை மீட்டார்.
மாண்ட என்னைத் தேடி, மறைந்த ஆட்டைக் கண்டார்;
கண்டு மந்தை கொண்டு சேர்த்தார், கருத்தாயென்னைக் காத்தார்.

(4) அலைந்த ஆடு நான், அடங்காமல் போனேன்,
ஆனால் மீட்பர் சத்தமிப்போ அன்பாய்க்கேட்டுக்கொண்டேன்.
முன்னே நானடங்கா முரட்டுப் பிள்ளையாமே,
இந்நேரம் தந்தை யன்பினால் இன்ப பாசங்கொண்டேன்.

J. I. C.

## THE BEST RELIGION

## உத்தம மதம் எது?

எகிப்து தேசத்து ராஜன் ஒருவனுக்கு ஒரு பொக்கிஷக்காரன் இருந்தான். அவன் அன்னிய தேசத்தானும் அன்னிய மதஸ்தனுமானபடியினாலே அத்தேசத்தின் உத்தியோகஸ்தர் எல்லாரும் அவனை அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஒருநாள் அவன்மேல் மதவிஷயமாக ராஜாவினிடத்தில் குற்றஞ் சாட்டினார்கள். ராஜா பொக்கிஷக்காரனை வரவழைத்து அவனைப் பார்த்து 'உத்தம மதம் எது? எனக்குச் சொல்லும்' என்று கேட்டார். அதற்குப் பொக்கிஷக்காரன் 'மஹாராஜாவே! நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன்; அதைக் கேட்டு உத்தம மதம் எது என்று நீங்களே சொல்லுங்கள்' என்று சொன்னான். ராஜா சம்மதிக்கப் பொக்கிஷக்காரன் பின்வருமாறு பேசத் தொடங்கினான்.

'காய்ரோ என்கிற பட்டணத்திலே மூன்று குமாருடைய பணித்தட்டான் ஒருவன் இருந்தான். அவன் வியாபாரம் செய்யும்படியாக ஒருநாள் தமஸ்குவுக்குப் போகும்போது வயதுசென்ற ஒரு வியாபாரி அவனைப் பார்த்து, 'ஓ, அபூ ஹஸன்! மந்திர மோதிரம் ஒன்று எனக்கு உண்டு. நான் அதை உனக்குத் தருவேன். அதை வாங்குகிறவன் ஞானத்திலும், உண்மையிலும், தருமகுணத்திலும், பரிசுத்தத்திலும் வளர்ந்து நல்லவனாவான். அதை வாங்கிக்கொண்டு என் நிமித்தமாக



வைத்துக்கொண்டு, நீ சாகும்போது உன் பிள்ளைகளில் ஒருவனுக்குக்
கொடுத்துவிடு' என்று சொல்லிக் கொடுத்தான்.
அபூ ஹஸன் அதை வாங்கி மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டு
ஊருக்குப் போனான். அந்த நாள் முதற்கொண்டு அவன் வீதிகளில்
நடக்கும்போது அவனைப் பார்த்தவர்கள், 'அதோ போகிறாரே,
உண்மையுள்ள அபூ ஹஸன்' என்றும் 'அதோ போகிறாரே, ஞான
முள்ள அபூ ஹஸன்' என்றும் சொல்லுவார்கள்.
அவனுக்குச் சாவு வந்த சமயத்தில் தனக்குள்ளே யோசித்து, 'நான்
இந்த மோதிரத்தை என்னுடைய குமாரரில் ஒருவனுக்குக் கொடுத்
தால் மற்றவர்கள் பொறாமைகொள்ளுவார்கள். அதனால் நான்
இதைப்போல இன்னும் இரண்டு மோதிரம் செய்வித்து ஆளுக்கு
ஒவ்வொன்று கொடுப்பேன். அவர்கள் வித்தியாசம் அறியாமல் சமா
தானமாயிருப்பார்கள்' என்று சொன்னான். அப்படியே அவன்
செய்து, சாவு சமீபித்தபோது மூத்த மகனைக் கூப்பிட்டு அவனுக்குக்
கிடைக்கவேண்டிய ஆஸ்தியைப் பங்கிட்டு ஒரு மோதிரத்தையும்
கொடுத்து 'இந்த மோதிரத்தை வாங்கி உன் தகப்பன் நிமித்தமாக
வைத்துக்கொள். நீ ஞானத்திலும், உண்மையிலும், தருமத்திலும், பரி
சுத்தத்திலும் வளருவாயாக' என்று சொன்னான்.
அப்படியே மற்ற இரண்டு மக்களுக்கும் ஆஸ்தியில் பங்கும் ஒரு
மோதிரமும் கொடுத்து 'இந்த மோதிரத்தை வீண்பெருமைக்காக
விரலில் அணியாமல், அதைக் கச்சையில் மறைவாக எப்பொழுதும்
வை' என்று சொல்லிச் செத்துப்போனான்.
அம்மூன்று குமாரர்களும் தகப்பனுக்குச் செய்யவேண்டிய சவக்
கிரியைகளைச் செய்து முடித்தபின்பு அண்ணனுடைய வீட்டுக்குப்
பண்டிகைக்காகப் போனார்கள். அவர்கள் சாப்பிட்டபிற்பாடு அண்
ணன் சகோதரரைப் பார்த்து 'ஐயோ, நமது தகப்பனார் அதிக நல்ல
வர். ஆனாலும் உங்களைவிட என்னை அதிகமாய் நேசித்து வந்த
தினாலே எனக்கே தமது மந்திர மோதிரத்தைக் கொடுத்தார் பாருங்
கள்' என்று சொல்லி மோதிரத்தைக் காட்டினார். அதைக்கேட்ட
மாத்திரத்தில் 'அல்லவே அல்ல, எனக்கே கொடுத்தார் தமது மோதி
ரத்தை!' என்று தம்பிமார்கள் ஒரே சத்தமாய்ச் சொன்னார்கள்.
எல்லாரும் அம்மூன்று மோதிரங்களையும் அதிக நுட்பமாய்ப் பார்த்
தாலும் அவைகளில் யாதொரு வித்தியாசமும் காணவில்லை. கடைசி
யாக அவர்கள் ஒரு வித்துவானிடத்தில்போய் மோதிரங்களைக் காண்
பித்து அவருடைய நியாயத்தீர்ப்பு என்னவென்று கேட்டார்கள். வித்
துவானோ 'நீங்கள் சாகுமட்டும் மெய்யான மோதிரம் இன்னதென்று
அறியமுடியாது. பரிசுத்தமும், உண்மையும், புத்தியும், தருமமுமுள்ள

வனாய் இருந்தவனே மந்திர மோதிரம் உடையவனாயிருப்பான்' என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டான்.

அப்படியே, மஹாராஜாவே! நாம் எல்லாரும் நியாயத்தீர்ப்பு நாளிலே கடவுளுக்கு முன்பாக நிற்கும்போது, 'எந்த மார்க்கத்தின் உதவியினாலே நாம் பரிசுத்தராய் நடந்திருக்கிறோமோ அந்த மார்க்கமே உத்தம மார்க்கம் என்று சொல்லலாம்' என்று பொக்கிஷக்காரன் சொல்லி முடித்துவிட்டான்.


## THE AQUARIUM. MADRAS

## சென்னையிலுள்ள விநோத நீர் நிலை

சென்னபட்டணத்திலிருக்கும் இக்கட்டடத்தைப்பற்றி உங்களிலநேகர் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது கடற்கரைக்குச் சமீபமாய் அதிக நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அதிலுள்ள அதிசயமான நீர்வாழும் ஜந்துக்களைப் பார்க்கத் தினந்தோறும் அநேக ஆண்களும் பெண்களும் போகிறார்கள். உள்ளே போவதற்குப் புதன்கிழமை தவிர, மற்ற நாட்களில் அரை அணாவும் அந்நாட்களில் நாலு அணாவும் கொடுக்கவேண்டும். அந்தக் காட்சியைப் பார்க்கப் போகிறவர்கள் எத்தனைபேர் என்று அறியும்படியாக ஒரு யந்திரம் அதிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

சுவரில் சில பெரிய மாடங்கள் செய்து அவைகளுக்குள்ளே தண்ணீரால் நிறைந்த கண்ணாடியினால் செய்த பெட்டிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. கடலில் இருக்கும் மீன்களையெல்லாம் வகை வகையாகப் பிரித்து, அவற்றின் படமும் பெயரும் அதற்கு நேரே ஒட்டியிருக்கிறது. அவ்வறைகளில் இருக்கும் பழைய தண்ணீர் ஒரு வழியாகப் போகவும், புதுத்தண்ணீர் இன்னொரு வழியாக வரவும் ஒழுங்கு ஏற்பட்டிருப்பதுடன், யந்திரத்தின் மூலமாய் ஒரு குழாய் வழியாக இரவும் பகலும் ஆகாயம் உட்செல்லும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் உப்புத் தண்ணீர் மீன் வேறாகவும், நல்ல தண்ணீர் மீன் வேறாகவும் வைத்திருக்கிறார்கள். அந்த மீன்கள் தண்ணீரில் இங்குமங்கும் நீந்திப்போகின்றன. இச்சீவ ஜந்துக்களின் பற்பல நிறங்கள் எவையெனில், வெண்மை, சிவப்பு, மஞ்சள், ஊதா, நீலம், இரத்தாம்பரம் முதலியன. இவைகள் பார்ப்பவர்களுக்குப் பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் கொடுத்துத் தேவனுடைய சிருஷ்டியின் மகத்துவத்தையும் தெளிவாய்க் காட்டுகின்றன.





## A WISE CAT

## புத்திகூர்மையுள்ள பூனை

சாதாரணமாகப் பூனையைவிட நாயே நமக்கு அதிக நல்லது என்று சொல்லுகிறார்கள். நாயே நன்றியுள்ளது. புத்திகூர்மையுள்ளதும் அதுவே. இப்படியில்லாமல் பூனையும் புத்தியும் உபயோகமுமுள்ளது என்று நாம் தெரிந்துகொள்ளக்கூடியதாக லண்டனில் சில வாரங்களுக்குமுன் ஒரு சங்கதி நடந்தது. அதில் பூனை ஒன்று தன் புத்திகூர்மையினால் தன்னையும் தன் வீட்டு ஜனங்கள் ஒன்பது பேரையும் ஒரு பெரிய ஆபத்திலிருந்து காத்தது.

லண்டன் நகரத்தில் வியாபாரிகள், பெரிய தொழில் நடத்தும் முதலாளிகள் எல்லாரும் தங்கள் தங்கள் கடைகளுக்கு அடுத்தாற்போல் குடியிருப்பது வழக்கம். ஒரே பெரிய வீட்டில் குடித்தனமும் வியாபாரம் அல்லது தொழில் ஆகிய இரண்டும் நடக்கும். கட்டடத்தின் ஓர் அறை சமையல் அறை, மற்றது படுக்கையறை, இன்னொன்று கடை ஆக இருக்கும். அல்லது கீழே வீடும் மேல்மெத்தையில் தொழிலும் ஆகலாம்.

இப்படிப்பட்ட வீடு ஒன்றில் ஒரு அச்சுக்கூடத்தின் முதலாளியும் அவன் குடும்ப வேலையாள் எல்லோருமாக ஒன்பதுபேர் ஒருநாள் இராத்திரி அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். அந்த வீட்டுப் பூனையும் அதற்கேற்பட்ட இடத்தில் படுத்திருந்தது. இரவு

இருட்டாக ஆக பூனைக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. எப்படியோ இருந்தது. மூக்கை உரிஞ்சி உரிஞ்சிப் பார்க்க அங்கே ஏதோ மெத்தைப் படிக்கட்டுப் பக்கத்தில் என்னவோ வேகும் வாசனை வந்தது. உடனே ஏதோ பெரிய அபாயம் வரப்போகிறது என்பது அதன் புத்திக்குப் பட்டது. பட்டதும் அந்தப் பூனை தன்னை எல்லாரிலும் அதிக பிரியமாய் வளர்த்துவந்த வேலைக்காரியின் படுக்கைக்குப் பாய்ந்து குதித்துச் சென்று அவளை எழுப்ப அவளது முகத்தில் தன் பாதத்தால் மெல்ல வரண்டிற்று. அவள் சுலபத்தில் எழுந்திருப்பவளாகக் காணவில்லை. பிறகு கொஞ்சம் முணுமுணுத்து எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்க்கையில் புகையில் மூச்சும் திணருவதாக இருந்தது. வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டது. பூனை தன்னை எழுப்பியதன் நோக்கமும் அவளுக்கு இப்போதுதான் தெரியலானது. உடனே அவள் அறையில் தூங்கிய மற்றவர்களையும் கூவி எழுப்பினாள். எல்லாரும் சேர்ந்து கத்திக் கத்தி அக்கம்பக்கத்தில் இருந்தவர்களை அழைத்து நெருப்பை அணைத்துவிட்டார்கள். எல்லாரும் உயிர்தப்பிப் பிழைத்தார்கள். இத்தனைக்கும் உபகாரியாயிருந்தது யார்? அந்தப் பூனையேதான் அல்லவா! ஆதலால் பூனையும் நன்றியறிதல், புத்திகூர்மை ஆகிய பல நல்ல குணங்கள் உள்ளது.


## SCHOOLS IN JAPAN

## ஜப்பான் தேசத்துப் பாடசாலைகள்

இதை வாசிக்கும் நண்பர்கள் யாவரும் இத்தேசத்தின்கண் உள்ள அநேக பள்ளிக்கூடங்களைப் பார்த்தும் அறிந்துமிருக்கிறார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அப்பள்ளிக்கூடங்களில் கல்வி பயின்றுவரும் அருமை புதல்வர் புதல்விகளுக்கோ, அல்லது பந்துமித்திராதிகளின் குழந்தைகளுக்கோ எத்தகைய கல்விப்பயிற்சி புகட்டப்படுகிறதென்பதும் அவர்கள் நன்குணர்ந்த விஷயமே. என்றபோதிலும் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடைய கணக்கு, வாசிப்பு, எழுத்து முதலிய விஷயங்களில்மாத்திரம் அதிக கவனம் செலுத்துவார்களேயன்றி இவைகளிலும் பதின்மடங்கு அதிக விசேஷமாய்க் கவனிக்கவேண்டிய சில விஷயங்களைச் சிறிதும் கவனியாதுவிடுகின்றனர். பெற்றோர்மாத்திரமல்ல, பள்ளிக்கூடங்களில் மாணவருக்குக் கல்விப்பயிற்சி செய்துவரும் போதனாசிரியர்களும்கூட மேற்காட்டிய மூன்று காரியங்களில்மட்டுமே இதுகாறும் கவனம் செலுத்தி வந்தது பற்றியே காருண்ய கவர்ன்மென்றார் தற்போது அவைமாத்திரம்



போதாவென்று சொல்லி அநேக பாடங்களை ஏற்படுத்தியும் அவைகளைத் தகுந்தபடி கற்பிக்கவேண்டிய முறைகள் கண்டுபிடித்துத் தெரிவித்தும் வருகிறார்கள். அம்முறைகளைத் தக்கபிரகாரமாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து பாடசாலைகளில் கல்விகற்பித்து வருகிறார்களாவென்பதைக் கண்காணிக்க பல உத்தியோகஸ்தரை நியமித்துத் தனிக்கைசெய்தும் வருகிறார்கள். இப்போது நான் சொல்லப்போகும் விஷயம் நம் தேசத்துப் பள்ளிக்கூடங்களைப்பற்றியதாயிராமல், இவ்விந்தியா தேசத்திற்குச் சுமார் 3000-மைலுக்குக் கிழக்கே ஒரு மகாசமுத்திரத்தின் மத்தியிலுள்ள ஒரு தீவிலுள்ள பள்ளிக்கூடங்



களைப்பற்றியே. அதைத் தீவென்றும், தேசமென்றும் சொல்வார்கள். தீவென்றால் இலங்கைத் தீவைப்போல் அது ஒரு தனித்தீவாயிராமல் அநேக தீவுகள் ஒன்று சேர்ந்த ஒரு பெரிய தீவு அல்லது தேசம். தற்காலத்தில் நாகரீக தசையில் இருக்கும் பெரிய தேசங்களில் எங்கே பார்த்தாலும் பேசிக்கொள்ளும் பெரிய காரியங்களில் ஒன்று இந்த ஜப்பான் தேசமே. ஏனென்றால் கடந்த ஐம்பது வருஷங்களில் இந்த ஜப்பான் தேசம் கல்வியிலும், நாகரீகத்திலும் ஆச்சரியமானவிதமாய் விருத்தியடைந்து இருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்குமுன் ஜப்பான் தேசத்தைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரி

யாது. ஆனால் இப்போ, இந்தியாவில் மாத்திரமல்ல, மேற்குத்தேசங்களிலும், ஒரு தேசத்தார் எப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டுமென்பதற்கு இந்த ஜப்பான் தேசத்தையும், அத்தேசத்தவரையும் மாதிரியாகக் கொண்டிருக்கின்றனர். உலகசரித்திரமெதிலும் காணப்படாத அவ்வளவு துரிதமாய் இத்தேசம் மேம்பாடடைந்திருப்பதுமன்றி உலகின்கண்ணுள்ள பலத்த ராஜ்ஜியங்களுள் இதுவுமொன்றாக எண்ணப்பட்டு வருகிறது. இப்பெரிய மாறுதலுக்குக் காரணம் ஏதுவென்று விசாரிக்க, அத்தேசத்தவரே சொல்லும் ஒரு காரணத்தை இங்கெடுத்துரைப்போம். அந்த ஒரே ஒரு காரணமாத்திரமல்ல, அத்தேசத்தின் உயர்வு யாவுக்கும் அந்த ஒரு காரணமும் தகுந்த விடையளிக்க இயலவுமாட்டாது. ஆனால் அக்காரணம் எல்லாவற்றிலும் மகா முக்கியமானதாயும், பையன்களுக்கும் வாலிபருக்கும் ஏற்றதாயுமிருப்பதால் அதை இங்கெடுத்துரைப்பது உசிதமெனத் தோன்றுகிறது. 'கல்வியினால் ஒரு ராஜ்ஜியம் ரக்ஷிக்கப்படக்கூடும்' என்று ஒரு பெரிய ஜப்பானிய வித்துவான் எழுதிவைத்திருக்கிறார். அநேக நூற்றாண்டுகளாக, ஏனைய தேசங்களிலுள்ள மகான்களும் இவ்வண்ணமே புகன்றிருக்கின்றனர்; அங்ஙனமே எழுதியும் வைத்திருக்கின்றனர். ஆனால் ஜப்பான் தேசத்தில்மாத்திரம் தாம் பள்ளியிற் கற்றதை அனுஷ்டான யோக்கியதைக்குக் கொண்டுவந்து அநுகூலமடைந்திருக்கின்றனரென்பதை நினைக்கும்போது, அத்தேசம் மேம்பாடடையக் காரணம், கல்வியே முதன்மையானதென்பதை யாமும் ஒத்துக்கொள்வோம்.

'அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.'

1868–ம் வருஷத்துக்கு முன்னதாக, ஜப்பான் தேசத்து ராஜகுடும்பத்தாரின் அதிகாரம் சரியானபடி அத்தேசத்தில் உறுதியடையவில்லை. அந்த வருஷத்தில்தான் அவர்கள் பதவி திரும்ப அவர்களுக்களிக்கப்பட்டது. அதற்குமுன் அத்தேசத்தில் கற்றுக்கொடுத்துவந்த வித்தியாமுறைக்கும் அதன்பின் கையாடிவரும் வித்தியாப்பியாசத்திற்கும் அதிகமான வித்தியாசம் உண்டு. உயர்தரக் கல்வி கற்றுவரும் மாணவர் சீன பாஷை படிக்கவேண்டியதாயிருந்தது. அப்பாஷை முழுவதும் சன்மார்க்க நெறிகளால் நிறைந்திருந்ததேயன்றித் தற்கால அறிவுக்கடுத்தது யாதொன்றும் அதில் கிடையாது. பிள்ளைகள் நாலு அல்லது ஐந்து பிராயமுள்ளவர்களாயிருக்கும்போதே, சீன தத்துவசாஸ்திரியாகிய கன்பியூஷியஸ் என்பவர் எழுதிய



சில புஸ்தகங்களை வாசிக்க கற்றிருந்தார்கள். தாங்கள் வாசித்தவைகளின் கருத்து இன்னதென்பது அவர்களுக்குக் கிஞ்சித்தேனும் தெரியாது. தாங்கள் வாசித்தவைகளையெல்லாம் மனப்பாடம் பண்ணியிருந்தார்களே யொழிய வேறல்ல. அவர்கள் பெரியவர்களானபோது தாங்கள் சிறு பிராயத்தில் வாசித்தவைகள் அவர்களுக்குப் படிப்படியாய்த் தெளிவாயின. அவர்கள் அந்தப்படி கடந்து அடுத்த படிக்குப் போனபோதிலும்கூட, அப்போ கற்றதும் கன்பியூஷியஸ் முறை போன்றதாகவேயிருந்தது. தேகாப்பியாசம் செய்ய அவர்களுக்குப் போதுமான காலம் குறிக்கப்பட்டிருந்தது. அக்காலங்களிலெல்லாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்துக்கொண்டுவந்த ஒரு முக்கிய விஷயம் என்னவெனில், அவர்கள் கஷ்டத்தை தைரியமாய்ச் சகிக்க வேண்டுமென்பதே.

(இன்னும் வரும்.)

## THE CREATION—KUMMI SONG

## சிருஷ்டிப்பைப்பற்றிய கும்மி

1. கன்னியரே, தோழிமாரே, கடவுளுடைய சிருஷ்டிப்புக்கு
வகைவிபரஞ் சொல்லிடுவேன் வரிசையுடன் நாள்குறித்து
நாள்குறித்தால் ஆறுநாளாம் நலமுள்ளதோர் ஓய்வுநாளாம்
ஆகஒரு ஏழுநாளை ஆதிமுதல் வாரமென்போம்.

2. ஆதிமுத லொருநாளில் ஆண்டவனார் ஒளிபடைத்தார்,
பூமிஇரு ளானதன்றி பூரணதண் ணீர்நிரம்பி
வெறுமையுட னிருந்ததல்லால் வேறேஒரு ரூபமில்லை,
ரூபமில்லா பூமியிலே ரூபம்வர ஒளிபடைத்தார்.

3. இரண்டாம்நா ளானதிலே ஏகன்நடுத் தண்ணீரை
மேலும்கீழு மாய்ப்பிரித்து, மெல்லிய ஆகாயமதை
மேகமதி லுலாவிவர மேலேஎங்கும் விரித்துவைத்து
மிகுந்ததிரள் தண்ணீரை மேலும்பூவில் தானேவைத்தார்.

4. மூன்றாம்நா ளானதிலே முடித்தபெரும் வேலையென்ன
தரையிலுள்ள தண்ணீரை தரைதெரிய வேபிரித்து,
விஸ்தார சமுத்திரமும் வெட்டாந்த ரையுமாக்கி
வேண்டியபுல் பூண்டுவகை விருக்ஷங்களை அதில்படைத்தார்.

5. நாலாம்நாள் ஆனதிலே நாதன்முன் படைத்தளித்த
சூரியனும் சந்திரனும் ஜோதி நட்சத்திரங்களுமாய்
ஒளியைக் கொடுப்பதுடன் உலகமெங்கும் காந்திதந்து,
காலக்கு றிப்பறிய காரணமாய் தான்படைத்தார்.

6. ஐந்தாம்நா ளானதிலே ஆகாய மதில்நீந்தும்
ஆழ்ந்தகடலுள் நீந்தும்ஆன மச்சம் பறவைகளும்,
அவற்றவற்றின் வகைப்படியே ஆண்டவனார் தாம்படைத்து
அன்புள்ளதம் சிருஷ்டிகளை அதிநலமென் றேமகிழ்ந்தார்

7. ஆறும்நா ளானதிலே ஆகும்பல மிருகங்களும்
ஊறும்பல பிராணிகளும் உண்டுசெய்து, கடைசியிலே
தம்முடைய சாயலாகத் தம்முடை ரூபமதில்
மனுஷனையும் மனுஷியையும் மாவிவேக மாய்ப்படைத்தார்.

8. ஏழாம்நா ளானதிலே எல்லாம் முடிந்ததென்று
ஓய்வுநாளை ஏற்படுத்தி, ஒன்றான தெய்வமதை
ஒன்றுகூடி யேதொழுது ஓய்ந்திருக்கும் மோக்ஷமதை
உள்ளமதில் தானினைக்க ஓய்வுநாளைத் தான்படைத்தார்.

## ADVICE FOR DAILY LIFE

## குடும்ப ஜீவியத்திற்கடுத்த புத்திமதிகள்

சிநேகிதர் சங்கத்தில் (Friends' Society) ஆண்டாண்டுதோறும் நடத்தப்படும் ஆராதனையிலும் கூட்டங்கள் சிலவற்றிலும் சபையார் எல்லாருக்கும் அங்கத்தாருக்கும் கிறிஸ்தவ ஜீவியத்தைப்பற்றியும், நடக்கையைப்பற்றியும் பல புத்திமதிகள் வாசிக்கப்பட்டன. அவையாவன :—

எல்லாரும் மெய்ப்பாக்கியமுள்ளவர்களாயிருக்க விரும்பி யாவரோடும் சமாதானமாயிருங்கள்.

ஏழைகளிடத்தில் தயவுள்ளவர்களாயும் உதாரகுணமுள்ளவர்களாயும் இருங்கள்.

எல்லா மனிதர்களின் இம்மைக்குரியதும் நல்லொழுக்கத்திற்குரியதும் பக்திக்குரியதுமான வாழ்வை உயர்த்தும்படி முயற்சியெடுங்கள்.

இவ்வுலகத்துக்குரிய காரியங்களை நடப்பிப்பதில், சத்திய ஆவியின் கட்டளைக்கு மிஞ்சி செய்யாமல், சுவிசேஷ படிப்பினைகளின் பிரகாரமாக, உருகிய மனச்சாட்சியோடு கவனித்து நடவுங்கள்.



வியாபார வர்த்தமானங்களிலும், இம்மைக்குரிய காரியங்களிலும்
உறுதியான நேர்மையோடு நடவுங்கள்.
பெருவர்த்தகம் செய்யவேண்டுமென்ற ஆவிக்கும், மிக்க திரவியத்
தைச் சேர்க்கவேண்டும் என்ற கண்ணிக்கும் விலகியிருங்கள்.
நமது திரவியத்தைச் சேர்க்கும் விதத்தைப்பற்றியும், அதை உப
யோகிக்கும் விதத்தைப்பற்றியும், அதைக் கடைசியாகப் பங்கிடுவதில்
ஒழுங்குசெய்யும் விதத்தைப்பற்றியும், நாங்கள் தேவனுக்குக் கணக்குக்
கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டிருங்கள்.
உங்கள் நடைஉடை பாவனைகளிலும், வீட்டை அலங்கரிக்கிற
திலும் ஜீவனம்செய்யும் விதத்திலும், நேர்மை, சீர்மை இவ்விரண்டை
யும் கைக்கொள்ளுங்கள்.
உங்கள் நடக்கையிலே உண்மையோடும் சத்தியத்தோடும் அதிக
ஜாக்கிரதையாய் நடந்து அப்படியே உங்கள் குடும்பத்தைத் தேற்று
விக்க முயற்சியெடுங்கள்.
எல்லாவித லௌகீக இச்சைகளுக்கும் விலகி நடந்துகொள்ளுங்
கள். தகாத காரியங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களையும்,
மற்றச் சமாசாரப் பத்திரிகைகளையும் உங்கள் வீட்டாரில் யாரும் வாசிக்
காதபடி ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ளுங்கள்.
அப்படியே கிருபையிலே வளருகிறதற்கு எவ்விதத்திலும் தடை
செய்கிற எந்தத்தோழமை, சுய இச்சை, விளையாட்டுக்களில் பொழுது
போக்குவது ஆகிய இவைகளை நீங்களாவது, உங்கள் பிள்ளைகளாவது
செய்யாதபடிக்கு ஜாக்கிரதையாயிருங்கள்,
அவருடைய பிள்ளைகள் எல்லாரும் விசுவாசத்தில் ஐசுவரியவான்
களாயிருப்பது நமது பரம பிதாவின் சித்தமாயிருக்கிறது என்பதை
இவ்வுலகத்திலுள்ள தரித்திரர்கள் சிந்தித்துக்கொண்டிருப்பார்களாக.
வாய்மையுற்ற சிரத்தையும், பொறுமையுற்ற அன்பையும் கைப்பற்றி
நடந்து, உலகத்துக்கு ஒளியாக உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்
கடவது.
நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் மரியாதையான ஜீவியம் செய்ய
வும், வியாதியிலும், விருத்தாப்பியத்திலும் தளரவிடாமல் சுக காலத்
திலேயே ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், முன்யோசனையுள்ளவர்களாக
வும் இருக்கும்படிக்கும், அப்படிச் செய்வதினால் 'நான் உன்னை
விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' என்ற தேவ
வாக்குத்தத்தத்தை உணர்ந்து, அதில் வேரூன்றி நிற்க, அதிகமாய்க்
காத்துக்கொள்ளும்படி உங்களால் கூடியமட்டும் பிரயாசப்படுங்கள்.
உங்கள் நிலைமை எவ்விதமாயிருந்தபோதிலும் நன்னெறி அழிக்
கிறதும் சிறுமையானதுமான விளையாட்டுக்களையும், உல்லாசமான

இடங்களுக்குப் போவதையும், எவ்விதமான சூதாட்டத்தையும், அவபக்தியையும், இதரமார்க்கத்தின் சடங்குகளில் பலவற்றை அனுசரிக்கிறதையும், அபினியும் மதுவஸ்துவுமான மற்ற எல்லாவித லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதையும் விலக்கிவிடுங்கள்.

கலியாண ஒழுங்குகளைத் தீர்மானிப்பதில் விசேஷமாய், நீ மோட்சப்பிரயாணம் செய்கிறதில் உனக்கு உதவியாக இருப்பதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

கலியாணம் செய்கிறவர்களும், அவர்கள் பெற்றோர்களும் வீணான ஆடம்பரத்துக்கும், கலியாணச் சடங்குகளிலும், கொண்டாட்டங்களிலும் தங்கள் பொருள் வரவுக்கு மேலாகப் பணம் செலவழிக்கிறதற்கும், திரும்பச் சீக்கிரமாய்க் கொடுக்க ஏலாத பணத்தைக் கடன் வாங்குகிற கெட்ட வழக்கத்திற்கும் இடங்கொடாதிருங்கள். உங்கள் பிள்ளைகளின் மனதைக் கவர்ந்துகொள்ளுகிறதில் கிறிஸ்துவுக்குரிய இளகின நெஞ்சோடு விழித்திருங்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ ஏப்பிரல் ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | யாத். | 14. | 43—59 | 11 | வி. | சங். | 107. | 32—43 | 21 | ஞா. | சங். | 119. | 1—16 |
| 2 | செ. | „ | 14. | 60—72 | 12 | வெ. | „ | 108. | | 22 | தி. | „ | 119. | 17—32 |
| 3 | பு. | „ | 15. | 1—10 | 13 | ச. | „ | 111. | | 23 | செ. | „ | 119. | 33—48 |
| 4 | வி. | „ | 15. | 11—21 | 14 | ஞா. | „ | 112. | | 24 | பு. | „ | 119. | 49—64 |
| 5 | வெ. | „ | 15. | 22—38 | 15 | தி. | „ | 113. | | 25 | வி. | „ | 119. | 65—80 |
| 6 | ச. | „ | 15. | 39—47 | 16 | செ. | „ | 115. | | 26 | வெ. | „ | 119. | 81—96 |
| 7 | ஞா. | „ | 16. | 1—11 | 17 | பு. | „ | 116. | 1— 9 | 27 | ச. | „ | 119. | 97-112 |
| 8 | தி. | „ | 16. | 12—20 | 18 | வி. | „ | 116. | 10—19 | 28 | ஞா. | „ | 119. | 113-128 |
| 9 | செ. | சங். | 107. | 1—15 | 19 | வெ. | „ | 118. | 1—14 | 29 | தி. | „ | 119. | 129-144 |
| 10 | பு. | „ | 107. | 16—31 | 20 | ச. | „ | 118. | 15—29 | 30 | செ. | „ | 119. | 145-152 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS


# மாதர் போதினி

No. 173 மே 191[illegible] No. 5


## HER EXCELLENCY [L]ADY CARMICHAEL

## லேடி கார்மைக்கேல் பெருமாட்டியார்

இந்தப் பெருமாட்டியார்தா நமது கவர்னர் அவர்களுடைய அருமை மனைவியார். இவர் தம்முடைய பிரிய நாயகருடன் சென்ற வருஷம் நவம்பர் ௴ ௨ ௳ நம் சென்னைமா நகருக்கு வந்து சேர்ந்தார். வந்ததும் இவர் நவர்களோடு வெகு நன்றாய்ப் பழக ஆரம்பித்துவிட்டார். முன்னேவெகுநாள் கூடியிருந்து பிரிந்துபோய் மறுபடியும் வந்து கலந்து சந்தோஷப்பட்டவராக இருந்தார் என்றே சொல்லலாம்போல் தோன்றுது. இவர் நம்முடைய மத்தியில் இருக்க ஆரம்பித்து இப்போ ஐந்தேமாசம் ஆகிறது. இத்தனை கொஞ்சநாளில் கவர்னரின் பண்சாதி என்னும் உயர்வான அந்தஸ்தை உடைய இவர் இவ்வளவுதூரம் நெருங்கிப் பழகிவிட்டது சாதாரணமான காரியம் அல்ல; வெகு அபூர்வம் என்றே சொல்ல வேண்டும்.

முன்னெல்லாம் இங்கே வந்து ஐந்து வருஷகாலம் தங்கியிருந்து வேலை பார்த்துப்போன கவர்னர்களின் மனைவிமார்கள் அத்தனை நீடித்த காலம் நம் மத்தியிலிருந்தும் நம் கார்மைக்கேல் பெருமாட்டியாரைப்போல நம்மோடெல்லாம் சிறிதும் நன்றாய்க் கலந்து ஊடாடிப் பழகவே இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அவர்கள் எல்லாரும் அநேகமாகத் தங்கள் மேலான அந்தஸ்தையும் நம்மவர்களுடைய தாழ்வான நிலைமையையும் உத்தேசித்துக் கூடுமானவரைக்கும் தூர விலகி இருந்து மரியாதை பெற்றுவந்தார்கள். இந்தச் சீமாட்டியார் ஒருவர்தான் தம்முடைய அந்தஸ்து உயர்ந்தது நம்முடைய நிலைமை மிகத் தாழ்ந்தது என்ற அபிப்பிராயத்தை முற்றிலும் நீக்கிவிட்டுத் தமக்கும் நம்மோடு பழகிய எல்லாருக்கும் [illegible]ன்மை உண்

டாகும்வண்ணம் பரிதாபத்தோடும் பிரியத்தோடும் பரஸ்பர விசுவாசம் பாராட்டி வந்திருப்பவர்.

தம்முடைய பிரிய நேசனைப்போலவே இந்தப் பெருமாட்டியாரும் நம் சென்னையில் இருக்கிற பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், ஆஸ்பத்திரிகள் முதலியவைகளையும் அநேகமாய் உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஸ்திரீகள் எல்லோரையும் போய் பார்த்துக் களிப்படைந்திருக்கிறார். இவர் அறியாத விசேஷித்த இடம் சென்னைமா நகரம் முழுவதிலும் கிடையாது. ஸ்திரீகள் நடத்தும் சாதாரணமான அலுவல்களிலும் இவர் பங்கு எடுத்துக்கொண்டார். தம்முடைய இந்திய சகோதரிகளுக்குத் தாம் ஒரு நல்ல முன்பதிரியாக நடந்துகாட்டி, அவர்களுடைய தாழ்ந்த நிலைமையை மேலு மேலும் உயர்த்தவேண்டும் என்ற நல்ல எண்ணம் பூர்த்தியாகக் கொண்டிருந்தார். இந்த எண்ணத்தை இவர் சென்றிருந்த விசேஷ சந்தர்பங்கள் பலவற்றிலும் பலமாய்ச் சொல்லிவந்ததுண்டு. இதற்குத் திருஷ்டாந்தமாக இப்போது நடந்த சம்பவம் ஒன்றைக் கொஞ்சம் எடுத்துச் சொல்லுகிறோம்:—

நம் தேசத்தின் பல பாகங்களில் இருக்கிற சகோதரிகளுக்கு இந்தக் காலத்துப் புதுமாதிரியானதும் சாஸ்திரமுறையானதுமான நல்ல வைத்திய சிகிச்சை முதலானவை சுலபமாய்க் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு செய்திருக்கும் டப்ரின் சீமாட்டி பண்டின் மதராஸ் கிளைக் கமிட்டியார் சென்ற மார்ச்சுமீ 23உ கூட்டிய சபையில் அந்தப் பண்டின் பிரஸிடெண்டான லேடி கார்மைக்கேல் பெருமாட்டியார் பேசியது இது:

இதுபோன்ற நல்ல காரியங்கல் யாரும் தலையிடாமலும் மனப்பூர்வமாய் உழைக்காமலும் இருக்கக்கூடாது. இது மேலும் மேலும் விருத்தியாவதில் எனக்குள்ள மனமகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவு அல்ல. தேஷா ஸ்திரீகளுக்குள் ஜனாபிமானம் அதிகமாக அமைந்திருப்பது வெகு நல்லது. அது அந்த ஆஸ்பத்திரியில் உள்ள படுக்கைகள் எப்பதும் நிறைந்திருப்பதால் தெளிவாகிறது. இந்த ஆஸ்பத்திரியில் இன்னும் இருக்கவேண்டிய சௌகரியங்கள் அநேகம். பெண்களுக்கு வைத்தியம்செய்யக் கவர்ன்மெண்டார் இப்போது 12,000 ரூபா தந்திருப்பது இவற்றை விர்த்திசெய்துகொள்வதற்கு அநுகூலமாயிருக்கும். எங்கே இருந்தாலும் சரி ஸ்திரீகளுக்கு வைத்தியம்பண்ணுவதில் நல்ல ஏற்பாடுகள் பல இருக்கின்றனவா என்று விசாரித்துக்கொண்டிருப்பதில் எனக்கு வெகு ஆசை.

இப்படியெல்லாம் நம்மிடமும் நமக்கு வேண்டிய சௌகரியங்களுக்குரிய காரியங்களிலும் அன்பு காட்டிவரும் பெருமாட்டியவர்



கள் தமது ஆப்தநாதர் ஏப்பிரல்மாதம் முதற்கொண்டு வங்காளம் கவர்னர் வேலை பார்க்கவேண்டும் என்று தீர்மானமாகிவிட்டதால் சென்ற மார்ச்சுமீ 29உ சாயந்திரம் புறப்பட்டுப் போய்விட்டார்.

இதை முன்னிட்டுச் சென்னை ஹிந்து ஸ்திரீ சங்கத்தார்கள் கனம் லேடி கார்மைக்கேல் பெருமாட்டியாருக்குச் சென்ற மாதம் 25உ யன்று பிரிவு வந்தனோபசாரம் செய்தார்கள். அன்று கூடிய சபைக்கு என்றும் இல்லாத ஒரு பெருமை வாய்ந்திருந்தது. ஹிந்து பெரிய மனுஷிகள் பலரும் வந்து கூடியிருந்தார்கள். சபைக்குப் பெருமாட்டியார் வந்ததும் ஹார்மோனியம் வாசித்துப் பாடினார்கள். அப்புறம் வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தார்கள். அதன்பின் பெருமாட்டியாருக்கு வேலைப்பாடமைந்த ஞாபகார்த்தச் சிறு பெட்டி ஒன்று கொடுத்தார்கள். அதில் நல்ல சித்திரம் வரைந்திருந்தது. அதன் மத்தியில் ஹிந்து தேவன் கிருஷ்ணபகவான் பிரதிமை இருந்தது. அங்கே வாசித்த பத்திரிகையின் சாரம் இது;—

இதுவரையில் இங்கிலீஷ் ஸ்திரீகள் வேறாகவும் ஹிந்து ஸ்திரீகள் வேறாகவுமே பிரிந்து இருந்துவந்ததால் ஏற்பட்டிருந்த வெறுப்பைத் தாங்கள் வேர் அறுத்து ஹிந்து இங்கிலீஷ் என்ற வித்தியாசம் பாராட்டாமல் ஊடாடிக் கலந்து இரண்டுபேருக்கும் நெருங்கிய சம்பந்தா சம்பந்தமும் பரஸ்பர அன்பும் ஆதரவும் இனி எக்காலத்தும் பெருகும்படியாகச் செய்திருக்கிறீர்கள்.

மதம், நிறம், அந்தஸ்து இவைகளில் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்வளவோ தூரம் வித்தியாசம் இருந்தும் தாங்கள் எங்களோடுகூடி நம்மெல்லோருள்ளும் சகோதரத்துவம் வர்த்திக்கும்படி செய்ய முன்வந்தவர்களில் தங்களை முதலானவர் என்று சொல்ல நாங்கள் கொஞ்சமும் பின்வாங்கமாட்டோம்.

தாங்கள் அந்தஸ்தைக் கவனித்து விலகியிராமல் குடும்ப க்ஷேமார்த்தமாக எங்களுடன் கலந்து பழகி இங்கிலீஷ் ஸ்திரீகளைப்போல எங்களையும் வீண்காலம் போக்காமல் ஏதோ ஒரு தொழிலைச் செய்துவரும்படியும் தூண்டி எங்களுக்குப் பல இதோபதேசங்கள் செய்து விளங்கியிருக்கிறீர்கள். இவற்றால் எங்களில் பலரை வீட்டுக்கு உகந்த மனைவியார் தாயார் சகோதரிகள் ஆக இருக்கும் வழியைக் காட்டிக்கொடுத்திருக்கிறீர்கள்.

மதராஸிலுள்ள இங்கிலீஷ் ஸ்திரீகளுடனேயே அதிகமாய்ப் பழகுவது தங்களுக்கு மிகவும் சுலபமாயிருந்தும் எங்கள் நன்மையைக் கோரி எங்களோடு பழகினது விசேஷத்திலும் விசேஷமானது. இதனால் நமக்குள் சிநேகபந்தம் பலப்பட்டது. தங்களை முதலில் கவர்னர் மனைவியாக வரவேற்ற நாங்கள்

இப்போது தங்களை எங்கள் உற்ற சிநேகிதராக மதிக்கத் தங்களால் அருகரானோம். இதுபோன்ற மிகுந்த நன்மையை இன்னும் பலகாலம் தாங்கள் புரியுமாறு தேவன் ஆசீர்வதிப்பாராக என்ற அரிய வசனங்கள் பலவற்றிற்கும் பெருமாட்டியார் ஏற்றபடி உத்தரம் சொன்னார். அவர் தமக்கு மனம் புழுங்குவதற்குத் தகுந்த வார்த்தை சொல்ல வல்லமையில்லையேயென்று வருந்தித் தமது மனப்பூர்வமான நன்றி செலுத்தினார்.

இங்கிலீஷ்காரருக்கும் இந்தியருக்கும் வித்தியாசம் இருப்பது உண்மையென்றாலும் நன்றாய்ப் பார்ப்பார்க்கு இருகட்சியார்க்கும் பொதுவானவைகள் பல இருப்பதால் பொதுவில் இந்தியாதேசம் நாளுக்குநாள் அதிகமாய்ச் சுகப்படவேண்டும் என்பதே எங்கள் நோக்கம். பிரிட்டிஷ் ராஜ்ஜியத்துக்குச் சேர்ந்தவர்களான நாம் எல்லோரும் இப்படிப்பட்டதற்குச் சேர்ந்தோம் என்பதில் பெருமைகொண்டவர்களாய் அதன் க்ஷேமார்த்தமாக ஒத்துழைத்து நன்மை பெறுவோமாக. இதோடு எனக்குப் பின்வரும் பெண்ட்லண்ட் சீமாட்டியாருக்கும் தங்கள் அநுபவம், அநுதாபம், அன்பு முதலியவற்றைத் தெரிவிப்பதாகச் சொல்லி முடித்தார்.

அதன்மேல் வீணை வாசிப்பு முதலியன பல நடந்தன. உடனே நம் பெருமாட்டியாருக்கு மாலை சூட்டினார்கள். அந்தச் சமயமே அவர்களைக் கடைசிமுறை பார்ப்பதாக இருக்கலாம் என்றெண்ணி லேடி கார்மைக்கேல் பெருமாட்டியார் அங்கு வந்திருந்த எல்லா ஸ்திரீகளுடனும் கைகுலுக்கி உத்தரவு பெற்றுக்கொண்டார்.

இறைவனை ஈசன் காக்க!

## THE BLIND SCHOOL IN PALAMCOTTAH


## கண் தெரியாத பிள்ளைகளின் பள்ளிக்கூடம்

கண்ணற்றவர்களின் நிலைமையை எப்போதாவது சற்று யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? ஐயோ, பரிதாபம்! பூமியிலுள்ள அழகான காட்சிகளையாவது, வாசனையுள்ள புஷ்பங்களின் நிறத்தையாவது, நேர்த்தியான ஆகாயத்தையாவது கண்ணாரக் காண்பது அவர்களுக்கு முடியாது.

தங்கள் அருமைப் பெற்றோரின் முகமும், சிநேகிதரின் முகமும் எப்படியிருக்கும் என்று தெரியாது. எப்போதும் இருள்தான், எங்கும் இருள்தான். சாகுநாள்பரியந்தம் கஷ்டஜீவியம்தான்.



ஆனால் குருடரின் கண்களைத் திறந்த தெய்வம், இப்போதும் அவர்களுக்கு இரங்கித் தம்முடைய பிள்ளைகள்மூலமாய் அவர்களுடைய ஆத்துமக் கண்களைத் திறக்கச் சித்தங்கொண்டிருக்கிறார்.




சுமார் இருபது வருஷங்களாக, திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் பாளயங்கோட்டை என்னும் பட்டணத்தில் குருடர்களுக்குள்ளே ஆண்டவரின் திருநாமத்தின் மகிமைக்காகச் சிறந்த ஊழியம் நடந்து வருகிறது.

தென்னிந்தியாவில் பெண்களுக்கு என்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் பெரிய கலாசாலையாகிய சாரா டக்கர் பள்ளிக்கூடத்திற்குத் தலைவியாயிருந்த கனம். ஆஸ்துவித் அம்மாளவர்களால் இந்தப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது.

1890-ம் ௵ (Blind School) இந்தப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் ஒரு ஆண்பிள்ளையும், ஒரு பெண்பிள்ளையும் தான் இருந்தார்கள். இப்போது ஆணும் பெண்ணுமாகச் சுமார் 120 பேர் பார்வையற்ற பிள்ளைகளாயிருக்கிறார்கள். இவர்களுக்கு 4 வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சாதாரணமான பிள்ளைகளைப்போலவே, கணக்கு, பூமிசாஸ்திரம் முதலிய பாடங்களும் கற்றுவருகிறார்கள். இப்போ இங்கிலீஷ் பாஷையும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இவர்களுடைய புஸ்தகங்கள் முரட்டுத்தாள்களிலே தடிப்பான முத்துக்கள் உள்ளதாயிருக்கும். பிள்ளைகள் தங்கள் கையினாலே அதைத் தடவி வாசிப்பார்கள். இந்தப் பிள்ளைகளுடைய விசேஷித்த குணம் என்னவென்றால், இவர்களுக்குப் பாட்டு மெத்தப் பிரியம்.

'கண்ணைக் கெடுத்த தெய்வம், மதியைக் கொடுக்கும்' என்ற பழமொழிப்படி, இவர்களில் அநேகர் புத்திகூர்மையும் ஞாபகசக்தியும் உள்ளவர்கள்.

ஆண்பிள்ளைகள் நாலு வகுப்பு கற்றபிற்பாடு ஜீவியத்திற்குப் பிரயோஜனமான தொழில்கள் பழகிவருகிறார்கள். தோட்டம்போடவும், நாற்காலிபின்னவும், கயிறு, பெட்டி, பிரம்பு முதலானவைகள் முடையவும், துணிநெசவு செய்யவும், பங்கா இழுக்கவும் பழகுகிறார்கள். பங்கா இழுக்கிற தொழில் அநேகருக்கு நல்ல பணம் கிடைக்கிறது. பகலிலே 6-மணிநேரம் தூங்கிவிட்டு, இரவிலே உத்தியோகஸ்தர் வீடுகளிலே பங்கா இழுத்தால் இவர்களுக்குத் தகுந்த கூலி கிடைக்கும். இன்னும் சில பையன்கள் பிட்டில் வாசிக்கப் பழகுகிறார்கள். இது இவர்களுக்குத் தெருப்பிரசங்கத்திற்கும், ஊர்களிலே ஆண்டவரைப்பற்றிப் போதிப்பதற்கும் நல்ல உதவியாயிருக்கிறது.

பெண்களும் நாலு வகுப்பும் படித்தபிற்பாடு உபாத்தியாயனிகளாகப் பயிலுகிறார்கள். தேவநேசம் (மாடத்தி Heathen Name) என்ற பெண் உபாத்தியாயனியாயிருக்கிறாள். இன்னும் சிலர், தையல், கூடை பின்னுதல், கயிறு திரித்தல் முதலிய வேலைகளைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது, இவர்களில் அநேகம் பேர், அஞ்ஞானத்திலிருந்துகொண்டு வரப்பட்ட பிள்ளைகள். இந்தப் பிள்ளைகள் பத்துப் பேர் அல்லது பதினைந்து பேர் சேர்ந்தவுடனே



ஞானஸ்நானம் கொடுப்பார்கள். அநேகம் பிள்ளைகளுக்கு அவர்களுக்குரிய ஆதரிப்போரிருக்கிறார்கள். சங்கத்திலிருந்தும் கொஞ்சம் உதவி உண்டு. இந்தப் பள்ளிக்கூடத்தின் மாதாந்தரச் செலவு 1200 ரூபா என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பள்ளிக்கூடம் வெகுகாலமாய் சாரா டக்கர் காலேஜுடன் சேர்ந்திருந்தது. கனம். ஆஸ்துவித் அம்மாளவர்கள் முப்பது வருஷகாலம் அந்தப் பள்ளிக்கூடத்தில் கண்ணியமான வேலைசெய்தபிற்பாடு, தன் நேரம் முழுமையும் தனக்கு அருமையான பார்வையற்ற பிள்ளைகளுக்காகச் செலவிட உத்தேசித்து, தனிமையாகக் கட்டடங்கள் கட்டி, 'தரிசன மனை' என்று பேரிட்டு அங்கே வேலை நடத்திவருகிறார்கள். இவர்களுக்கு இன்னும் ஒரு கோவில் கட்டவேண்டியிருக்கிறதாம். அதற்குச் சுமார் 6000 ரூபா செல்லும். இன்னும் இவர்களுக்குப் பணவுதவி அதிகம் வேண்டியிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் எல்லாரும் இந்தச் சிறந்த வேலை இன்னும் வளர்ந்தோங்கவும், இரட்சகருடைய திருநாமம் மகிமைப்படவும் நம்மால் இயன்றதைச் செய்வோமாக. நம்மில் யாராவது கண் தெரியாதவர்களைக் கண்டால் அவர்களை அந்தப் பள்ளிக்கூடத்திற்கு உடனே அனுப்பலாம். அதுவே பெரிய உதவியாயிருக்கும்.

## THE FACE ON THE WALL

## பாறையின்மீது வரையப்பட்ட முகம்

ஸ்காட்லாந்து தேசத்தைச்சேர்ந்த ஒரு சிறு கிராம வாசிகளான ஜனங்களுக்குத் தாங்கள் எவ்விஷயத்திலும் மேன்மையடையவில்லையே என்னும் விசனம் ஒரு காலத்தில் அதிகரித்துக்கொண்டு வந்தது. அவர்களுக்கு ஒரு விசேஷித்த நம்பிக்கையிருந்தது. அவ்வூருக்கு அருகிலிருந்த அகலமும் உயரமுமான ஒரு பாறையின்மீது அழகான மனுஷமுகம் ஒன்று வரையப்பட்டிருந்தது. அது ஓர் அதிசயமான முகம்; நற்குணங்களில் சிறந்த ஒரு மகாத்துமாவின் முகம்போல் தோன்றிற்று. இதை எழுதினது ஒரு தேவதூதனோ அல்லது பேர்பெற்ற சிற்பசாஸ்திரிகளில் ஒருவனோ என்று யாரும் அறிந்திலர்: இது எழுதப்பட்ட காலமும் ஒருவருக்கும் தெரியாது. இவ்வசீகர முகத்தினடியில் 'இப்படம்போன்ற முகரூபத்தையுடைய ஒரு புருஷோத்தமன் இவ்வூரில் தோன்றுவார்: அவரால் இவ்வூர் ஈடேறும்' என்றெழுதியிருந்தது.

இதுவே அவர்கள் நம்பிக்கை. மேற்படி ஊரிலிருந்து புறத்தேசங்களுக்குப் பிழைப்புக்காகச் சென்றிருப்பவர்களில் ஒருவனால் ஒரு காலத்தில் தங்களுக்கு க்ஷேமமுண்டாகும் என்பது அவர்களின் பொதுவான எண்ணம். அவ்வூர் ஜனங்களும் மாணாக்கரும் வேளாவேளைகளில் அருமையான இந்த முகத்தைக் கண்ணுற்று இதனடியில் எழுதி



யிருக்கும் தீர்க்கதரிசனம் எப்போது நிறைவேறுமோவென்று ஆசையுடன் பேசிக்கொள்வதுண்டு. பாடசாலை மாணாக்கரில் ஒருவனான சாமுவேல், காலையிலும் மாலையிலும் தவறாது பாறையண்டை சென்று, வெகுநேரம் படத்தைக் கண்ணுற்று மனமகிழ்ச்சியுடன் திரும்பிப் போவான். மற்றவர்கள் இவ்விஷயத்தில் சிரத்தையற்றிருந்தாலும் தனக்கு நேரமிருக்கும்போதெல்லாம் பாறையண்டை உட்கார்ந்து படத்தைக் கண்குளிரப் பார்த்து மனதில் களிகூர்வான். இவன் அவலட்சணரூபமுள்ள ஏழைப் பையன். ஆயினும் இவ்வதிசய முகத்தைப் பார்ப்பது அவன் மனதுக்கு இன்பமாகவும், அம்முகரூபத்தையுடைய புருஷோத்தமனைக் காணவேண்டுமென்பது அவன் இருதயத்தின் வாஞ்சையாகவுமிருந்தன. சாமுவேல் ஏழையாயிருந்தாலும் தயாள சிந்தையுள்ளவனும், பரோபகாரியும், பொறுமை தாழ்மை முதலிய நற்குணங்களிற் சிறந்தவனுமானான். ஊரிலுள்ள வியாதியஸ்தருக்கும், ஏழைகளுக்கும், வயோதிகரான பெரியோருக்கும், பிள்ளைகளுக்கும் வேண்டிய அவசியமான உதவியைத் தன்னால் இயன்றவரையிலும் எப்போதும் செய்துவந்தான். இப்படிச் செய்வது அவன் மனதுக்கு இன்பமாயிருந்தது. இவனை யாவரும் சிநேகித்தார்கள்.

ஒருநாள் அயல்தேசத்திற்குச் சென்றிருந்தவர்களி லொருவன் ஆஸ்திமானாகத் திரும்பிவந்தான். அவ்வூரார் அவனை மிக்க மரியா



தையுடன் ஏற்றுக்கொண்டு அவனால் ஊருக்குப் பெரிய நன்மையுண்டாகுமென்று நினைத்தார்கள். சாமுவேலோ அப்படி நினைக்கவில்லை. ஏனெனில் அத்தனவானுடைய முகம் பரோபகாரச் சிந்தையற்ற கடின இருதயமுள்ளவனது முகம்போல் தோன்றிற்று. சாமுவேலின் அபிப்பிராயத்தை யறிந்து அவ்வூராரும் அத்தனவந்தனை அதிகமாய் மதிக்கவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு தூரதேசத்திற்குச் சென்று யுத்தத்தில் வல்லவன் என்று கீர்த்திபெற்ற போர்வீரன் ஒருவன் இவ்வூருக்கு வந்தான். அவனைப் பார்த்தவுடன் சிலர் 'இவன்தான் நமது ஊரை இரட்சிப்பான்' என்றார்கள். ஆனால் சாமுவேல் இவனைப் பார்த்து, 'இவனது முகம் அழகாயிருந்தாலும், பாறையின்மீதுள்ள முகரூபத்திற்குச் சமானமானதல்ல' என்று சொன்னான். ஆதலால் அந்தப் போர்வீரனால் நன்மை உண்டாகுமென்பதாக அவ்வூராருக்கிருந்த நம்பிக்கை குறைந்துபோயிற்று.

சில வருஷங்களுக்குப் பிற்பாடு வேறொருவர் இவ்வூருக்குத் திரும்பிவந்தார். இவர் இந்த ஊரில் பிறந்தவராயினும் பல தேசங்களுக்குச் சென்று பல நூல்களைக் கற்றுப் பாண்டித்தியமடைந்த ஒரு வித்துவான். இவரது முகம் மகா அழகாயிருந்தது. 'இவரால்தான் காரியமாகப் போகிறது' என்று எல்லாரும் நினைத்தார்கள்.

சாமுவேலின் எண்ணமும் அதுவே. இப்போது சாமுவேலுக்கு வயது இருபத்து நாலு. அவன் நற்குணனும் புத்திசாலியுமாயிருந்தமையால் அவனை யாவரும் நன்கு மதித்துவந்தார்கள். தூரதேசத்திலிருந்து திரும்பிவந்த வித்துவானால் தாங்கள் எதிர்பார்க்கும் சிலாக்கிய பாக்கியங்கள் யாவும் தங்களுக்குக் கிடைக்கப்போகிறதென்று சாமுவேல் சொன்னபோது வித்வசிரோமணியாகிய அவருக்கு வந்தனோபசாரஞ் செய்து விருந்தளிக்கவேண்டுமென்று ஒருநாள் சாயங்காலம் படம் வரையப்பெற்ற பாறையண்டையில் கிராமவாசிகள் யாவரும் கூடிவந்தார்கள். வித்துவானும் ஜனங்களின் மத்தியில் உட்கார்ந்திருந்தார். இவருக்கு வந்தனோபசார வார்த்தைகளைச் சாதுரியமாய்ப் பேசுவதற்குச் சாமுவேலைத்தவிர வேறெவருமில்லாததால் அவனை யாவரும் வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். ஆதலால் பாறைக்குச் சமீபமான மேடையின் மீது ஏறினான். சூரிய வெளிச்சம் பாறையின்மீதுள்ள படத்தின் மேலும் சாமுவேலின் முகத்தின்மீதும் பிரகாசித்தது.

அவன் பேச ஆரம்பித்தபோது, கீழே உட்கார்ந்திருந்த வித்துவான் படத்தின் சாயலையும், சாமுவேலின் முகரூபத்தையும் கவனித்து, 'இதோ, பாருங்கள், பாருங்கள், சாமுவேலின் முகமும் படத்தின்

முகரூபமும் ஒன்றுபோலிருக்கிறது. சாமுவேல் நமக்குத் தலைவன் ஆகவேண்டும்; நானல்ல, நானல்ல' வென்று கூவினார்.

யாவரும் இதைக் கேட்டுப் பிரமிப்படைந்து படத்தையும் சாமுவேலையும் உற்றுப் பார்த்து வித்துவான் சொல்வது சரிதான் என்று கண்டு சாமுவேலையே தங்கள் தலைவனாக்கினார்கள். அவனால் அவ் ஊருக்கு மிகுந்த நன்மையுண்டாயிற்று. சிறு வயதில் அவலட்சணரூபியாயிருந்த ஏழைப் பையன் இம்மகா உயர்ந்த பதவிக்கு வருவதற்குக் காரணம் யாது? சிறுவயதுமுதல் படத்தை ஆசையுடன் பார்த்து அதில் விளங்கிய சகல நற்குணங்களையும் வாஞ்சித்துவந்ததே இதின் இரகசியம். அகத்தினழகு முகத்தில்தோன்றுமென்பது மெய்.

சத்தியவேதம் என்னும் ஜீவவார்த்தையாகிய பாறையின்மீது கிறிஸ்துவின் திருமுகச்சாயல் வரையப்பட்டிருக்கிறது. அடிக்கடி அவரது திருமுகத்தை நோக்கிப் பார்த்து அவரது திவ்விய லட்சணங்களை வாஞ்சித்து வருவோமானால் நமது மனம் மாறும். கிறிஸ்துவின் சிந்தையுண்டாகும். நம்மைப் பார்ப்பவர்கள் கிறிஸ்துவைப் பார்ப்பார்கள். நாமும் கிறிஸ்துவும் ஒன்றாயிருப்போம். நம்மால் நமது ஊருக்கும் திருச்சபைக்கும் குடும்பத்துக்கும் இரட்சிப்பு உண்டாகும். நாம் சாமுவேலைப்போல் கிறிஸ்துவை நோக்கி வருகிறோமா?

## SONG — HYGIENE

## சுகத்தைக் காப்பாற்றும் விதம்

பல்லவி

அன்னமே அரிய கண்மணியேநீ
அருமை போதனை கேட்டிடுவாய்
சொர்ணம்போன்ற சுகம் பேணுமுறையைநீ
சுருக்கமாய்க் கேட்டு நடப்பாயே.

1. பூவுலகில்நாம் வசிக்கின்ற வீடு
புனிதமாயிருக்கப் பார்த்துக் கொள்வாய்
மேவியேயாரையும் சோதரர் போலுன்
மனதினிலுன்னி நடந்து கொள்வாய்— அன்.

2. வீட்டினிலாகாயம் தாராளமாய் வர
வேண்டிய யத்தனம் செய்திடுவாய்
ஈட்டும்பொருளைச் சுகத்துக் கேற்றவழி
ஈண்டு பிரயோகி வாழ்வடைவாய்— அன்.



3. பிராணிகட்கின்றி யமையாதது ஒளி
தாபர வர்க்கங்கட்கும் அதுவே
திராணியுண்டாக அவ்வொளியைப் பெறநீ
தாபந்தத்துடன் வகை தேடு— அன்.

4. உட்கொள்ளுமாகாரம் உடலுக் கேற்றதாய்
சுகம்பெலன் அனல் தானடைய
சுத்தமும் புத்தியும் பக்குவமுமாக
பாகம்பண் ணருந்துவோர் களிக்க— அன்.

5. சுத்தஉடையை யெப்போது முடுத்தியே
பார்க்கும்கண்ணின் புறத் தோன்றிடுவாய்
மெத்தப்பத்திரமாய் உடலைப் பேணவே
எற்கும் உபாயங்கள் செய்திடுவாய்— அன்.

6. நிதந்தவறாமல் நீராடிச் சடலம்
சுகமாயிருக்கப் பார்த்துக் கொள்வாய்
கவலையீனமும் சோம்பேறித் தனமும்
மிகக் கொடியநோய் கண்மணியே— அன்.

7. பருகும்நீர்தனைக் காய்ச்சி வடிகட்டிப்
பாத்திர மொன்றினில் மூடிவைத்து
அருந்தும்பாண்டம் அரியக் கவனமாய்
அந்தந்த நாளினில் சுத்தம்பண்ணு— அன்.

8. நோய்க்கிட மின்றி சுறுசுறுப்பாகவே
வீட்டு வேலைகளைச் செய்திடுவாய்
பாயும் படுக்கையும் போம்பேறிகளது
தேட்டிருந்தாலது தானே வரும்— அன்.

9. அற்பநோய்களுக்குப் பாரி வயித்தியன்
அழைத்துப் பணம் இறைக்காதே
சொற்பவியாதிக்கு ஏற்ற பரிகாரம்
தேடிநீயே கற்றுப யோகிப்பாய்— அன்.

10. அப்பியாசமதை அசட்டை செய்யாதே
ஆனசுகம் பெலன் உண்டுபண்ணும்
இப்போ தவறிநீ பின்னுக்குணராதே
போனகால மெப்படித் திரும்பும்— அன்.

11. நித்திரை மிஞ்சினால் தரித்திரமாகும்
அஃதின்றியே சுகவீனமாகும்
இளைப்பாறும்படி கர்த்த னருளிய
இரவில் நன்றாய்நீ தூங்கிவிழி— அன்.

12. மக்கள்வளர்க்கும் பொறுப்பை யுணர்ந்துநீ
ஏற்ற வழிவகை கற்பிக்கப்பார்
பக்கமனிதர் பின்பற்றும்படி நல்
மாற்ற முறைக்கப் பழக்கிடுவாய்— அன்.

13. கடவுளுன்னை யுலகில் வைத்திருக்கும்
கருணையை யுணர்ந்து பயனாய்
நடத்துன்ஜீவியம் பிறர்க்கு நலமும்
கடவுளுக்கு மகிமையுமாம்— அன்.

14. அழிந்துபோகும் சரீரத்திற் கென்றல்ல
ஆன்மா நற்கதி யடையத்தேடு
எளிதில் போகலாம் சுவர்க்கமென்றெண்ணி
எண்ணமற் றிருப்பது கேடு— அன்.

## GURU NANAK'S ADVICE

## குருநானக் சொன்ன புத்திமதி

குருநானக் சீக்கியமதத்தை ஸ்தாபித்தவர். இவர் காஷ்மீரத்துக்குப் போகும்பொழுது வழியில் அநேக இடங்களைப் பார்த்துவிட்ட பிறகு, கம்ப்மீலா என்னும் நோன்பு நடந்துகொண்டிருக்கும்பொழுது 'ஹரித்வார்' என்னும் ஊரைச் சேர்ந்தார். இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமிருந்து ஜனங்கள் பரிசுத்த நதியில் ஸ்நானஞ்செய்யும் பொருட்டு, கூட்டங் கூட்டமாக வந்திருந்தனர்.

நானக், கிழவனாகவும் சிறிது உடம்பு இளைத்தவனாகவும் இருந்தாலும், தன்னுடைய சுவிசேஷத்தை அங்கே கூடியிருந்த ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படி கிடைத்த நல்ல சமயத்தை அவனால் விட்டுவிட முடியவில்லை. தங்களுடைய பாவங்களைக் கங்கையில் போக்கடித்துவிட்டபிறகு அவர்கள் கிழக்குமுகமாகத் திரும்பி கைநிறையப் பரிசுத்த ஜலத்தை யெடுத்துச் சூரியனுக்கும் தங்களுடைய முன்னோர்களுக்கும் இறைத்தனர்.

அப்பொழுது குருநானக் இதுதான் தகுந்த சமயமென்று நினைத்து நதியில் இறங்கி மேற்குமுகமாகத் திரும்பி ஆற்றினின்றும் தண்ணீரை



இறைக்க ஆரம்பித்தனன். 'அநேக ஜனங்கள் ஆச்சரியத்துடன் அவனைச் சுற்றிலும் நின்றுகொண்டு' என்ன செய்கிறாயென்று கேட்டனர்.

அதற்கு அவன் 'நான் கத்தார்ப்பூரிலுள்ள எனது தோட்டங்களுக்குத் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கிறேன்; ஏனெனில் மழையில்லாமையால் அவைகள் சூரிய வெப்பத்தினால் வறண்டுபோயிருக்கின்றது' என்றனன்.

'உன்னுடைய கத்தார்ப்பூரும், தோட்டங்களும் எங்கே?' என்று ஒருவன் கேட்டான்.

அதற்கு, 'அவைகள் பஞ்சாபிலுள்ள நாபி என்னும் நதிதீரத்திலிருக்கின்றன' என்று குருநானக் உத்தரம் சொன்னான்.

அவர்கள் எல்லாரும் சிரித்து 'இவ்வளவு தூரத்திலிருந்து எப்படி உன்னுடைய தோட்டங்களுக்கு நீர் இறைப்பாய்? அப்படிச் செய்தால் உன்னை ஒரு மடையன்' என்று சொல்லுவார்கள் என்றனர்.

அதற்கு நானக் 'நீங்கள் என்னைவிட முழு மடையர்களாயிருக்கிறீர்கள். எப்படியெனில், இவ்வளவு தண்ணீர் இப்பூமண்டலத்திலேயே நானூறுமைல் தூரத்திலுள்ள என்னுடைய தோட்டங்களுக்குப் போய்ச் சேராவிடில் நீங்கள் இறைத்த ஒரு கைஜலம் எப்படிச் சூரியனையும் உங்கள் முன்னோர்களையும் போய்ச் சேரும்? இவைகளையெல்லாம் விட்டுவிட்டு நம்மைச் சிருஷ்டித்துக் காப்பாற்றும் கடவுளைத் தியானியுங்கள். இந்த அனுஷ்டானங்களெல்லாம் பிரயோஜனமற்றவையே. கங்கை ஜலம் உங்கள் பாவங்களைப் போக்கடிப்பதில்லை ஆனால் பக்தியினால் பாவங்கள் நீங்கும். உங்கள் மனங்களைத் திருப்பி நல்ல காரியங்களைச் செய்து ரக்ஷிக்கப்படுங்கள்' என்றனன்.


## SCHOOLS IN JAPAN

## ஜப்பான்தேசத்துப் பாடசாலைகள்

(தொடர்ச்சி.)

பழைய ராஜகுடும்பம் 1868-ம் ௵ ராஜ்யாதீனத்துக்கு வந்ததின் பின் ஜப்பானியர் தங்கள் பாடசாலைகளிலும், காலேஜ்களிலும் அநேக நவீன காரியங்களைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார்கள். மேற்குத் தேசத்தவர் கற்றுக்கொடுக்கக்கூடிய எதையும் பேராவலாய்க் கற்றுக்கொள்வதுமல்லாமல் அதிசீக்கிரத்திலும் கற்றுக்கொள்ளுவர். இந்தியா தேசத்தவரைப்போல் வெறும் கல்வியைமட்டும் கற்றுக்கொண்டாற் போதுமென்றிராமல் மேற்குத் தேசத்தவரிடமிருந்து தங்கள் நாட்டோ

டிய ஜீவியத்திற்கும், தேசத்திற்கும் அநுகூலமெனக் காண்பதெதுவோ அதையெல்லாம் கற்றுக்கொள்ள முயல்வர். அவ்வண்ணம் ஆசையோடும், புத்தி சாமர்த்தியத்தோடும் கற்றுக்கொள்வதற்கு முக்கிய உத்தேசமும் ஒன்றிருந்தது. உலகின்கண் உயர்பதவி அடைந்திருக்கும் மற்றைய தேசங்களுக்கு ஒத்த சமபதவிக்குத் தங்கள் தேசத்தையும் கொண்டுவரவேண்டுமென்ற அபிலாசையும் அபிமானமும் அவர்கள் மனதில் எப்போதும் குடிகொண்டிருந்தது. ஆனால் ஜப்பான் தேசத்து மகாத்துமாக்களில் சிலர் தங்கள் தேசத்தோர் அப்பேர்ப்பட்ட ஆசையோடும் அபிமானத்தோடும் கல்வி கற்பது, விசேஷித்த ஒரு காரியமாயிருந்தபோதிலும் தம்மவர்கள் கல்வி கற்றுக்




கொள்வதின் மகா முக்கிய உத்தேசம் அதல்லவென அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இப்போ நாம் ஆலோசிக்கப்போகும் விஷயம் ஜப்பானிய பள்ளிக்கூட ஜீவியத்திலுள்ள அந்நோக்கத்திற்குச் சம்பந்தப்பட்டதல்ல. அப்பள்ளிக்கூடங்களில் பழையகால சன்மார்க்கப் பயிற்சியை எவ்வளவுதூரம் கையாடி வந்திருக்கிறார்களென்றும், அப்பழக்கம் எவ்வளவாய் விருத்தியடைந்திருக்கிறதென்றும் பார்ப்போம்.

1868-ம் வருஷத்தில் ஆரம்பித்த புது சகாப்தத்தின் துவக்ககாலத்தில் அநேக வருஷங்களாய்க் கல்வி பயின்றுவரும் பாலருக்கும் பெண்களுக்கும், சன்மார்க்கப் பயிற்சி எவ்வளவு அவசியம் என்பதை ஜப்பா



னியர் அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. அவசியமெனக் கண்ட பெரியோர்களும்கூட அப்பழக்கம் பிள்ளைகளுக்குள் எப்படி உண்டாக்கலாம் என்று தெளிவான வகை ஒன்றும் கண்டறியவில்லை. இன்னதைச் செய்யவேண்டும், இன்னதைச் செய்யக்கூடாதென்று, நாம் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது இதை ஏன் செய்யலாம் அதை ஏன் செய்யக்கூடாதென்று அவர்கள் சில சமயங்களில் கேள்வி கேட்கத் தலைப்படுகிறார்கள் அல்லவா? அக்கேள்விக்கு என்ன மறுமொழி கொடுப்பதென்று ஜப்பானியர் திட்டமாய்த் தெரிந்துகொள்ளவில்லை. 1890-ம் வருஷத்தில் இதெல்லாம் முற்றிலும் மாறிப்போய்விட்டது. அந்நாள்முதல் தற்காலமிருக்கும் ஏற்பாடு உண்டானதாகச் சொல்லலாம்.

1890-ம் ௵ கல்வி இலாக்காவைப்பற்றி ராஜ பிரகடனம் ஒன்று வெளியேறினது. ஜப்பானியருடைய கல்விப் பயிற்சியைப்பற்றிய சகலமும் அப்பிரகடனத்தை அனுசரித்தே இருக்கிறபடியால் அதில் என்ன அடங்கியிருக்கிறதென்று நாம் கவனித்துப் பார்த்தல் நலம்.

'நம்முடைய பிரஜைகளாகிய நீங்கள் அறிவது யாதெனில், ராஜகுடும்பத்தைச்சேர்ந்த நம்முன்னோர் நம்முடைய ராஜ்ஜியத்தை விசாலமானதும், நிலையானதுமான அஸ்திபாரத்தின்மேல் கட்டி நீதியாசார நல்லொழுக்கத்தைப் பலமாகவும், உறுதியாகவும் நாட்டியிருக்கிறார்கள். நம்முடைய பிரஜைகள் வம்ச பாரம்பரையாய் புத்திரீய பக்தியுடன் கூடிய ராஜபக்தியோடு, அவ்வொழுக்க ஆசாரத்தின் மகிமையைத் தத்தம் நடபடிக்கைகளால் உலகறிய நடந்து காண்பித்திருக்கிறார்கள். இதுதான் நம் ராஜ்ஜியத்தின் மூலாதாரக் குணமும் அதின் மகிமையுமாம். நம் கல்விக்கு ஆதாரமும் இதில்தானடங்கியிருக்கிறது.

'நம் பிரஜைகளாகிய நீங்கள் உங்கள் பெற்றோரிடத்துப் புத்திரீய பக்தியுடையவராயும், உங்கள் சகோதர சகோதரிகளிடத்து அன்பு மிகுந்தவராயும், பாரியரிடத்து ஒற்றுமையோடு கூடி வாழும் கணவராயும், உண்மையுள்ள சிநேகிதராயுமிருங்கள். கற்புள்ளோராயும், மிதானுபவராயும் நடந்துகொள்ளுங்கள். எல்லாரிடத்தும் தயவுள்ளவர்களாயிருங்கள்; கல்விகற்றுத் தொழில் அபிவிர்த்திசெய்யுங்கள்.

'அங்ஙனமே மனோசக்தியும் சன்மார்க்கப் பலமும் சம்பூரணமாய்ப் பெருகி வளரப் பாருங்கள். பொதுஜனநலப் பிரியராய் நன்மைசெய்ய முன்னேறிச் செல்லுங்கள். சக்கராதிபத்தியத்துக்கு அடங்கி, ராஜ்ய சட்டங்களைக் கைக்கொள்ளுங்கள். அவசரம் நேருங்கால் உங்களையே உங்கள் தேசத்துக்குத் தைரியமாய் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருங்கள். இவ்விதமாய் வைதீக சம்பந்தமாயும், லௌகீக சம்பந்தமாயும், நம்முடைய ராஜரீக சிங்காசனத்தின் மகிமையைக் காப்பாற்றிக்கொள்

ளுங்கள். நீங்கள் நம்முடைய உண்மையும் உத்தமமுமான பிரஜைகளாய் இருப்பதோடுகூட நமது முன்னோர்களின், மேன்மைதங்கிய பாரம்பரிய ஆசார ஒழுக்கங்களை மகிமையுள்ளதாக்குங்கள்.'

இதிற்காட்டிய விஷயங்கள் எக்காலத்திலும் நிற்கக்கூடியதும் எத்தேசத்திற்கும் எத்திறத்தாருக்கும் ஏற்றதுமாய் நம் முன்னோர்கள் தங்கள் பின்சந்ததியாருக்கும் பிரஜைகளுக்கும் பிதுரார்ச்சிதமாய் அளித்துப்போனதுமான போதனையேயன்றி வேறல்ல. ஆகையால் நாமும் பிரஜைகளாகிய உங்களோடு சேர்ந்து அந்நீதியாசார நல்லொழுக்கங்களை அடைந்துகொள்ள நம் மனதிலவற்றைத் தகுந்த மரியாதையோடு பத்திரப்படுத்தவேண்டுமென்பதே நமது அபேக்ஷை.'

(இன்னும் வரும்.)

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ மே௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | சங். | 119. | 161-176 | 11 | ச. | சங். | 136. | 1—15 | 22 | பு. | சங். | 145. | 11—21 |
| 2 | வி. | ,, | 120, 121. | | 12 | ஞா. | ,, | 136 | 16—26 | 23 | வி. | ,, | 146. | |
| 3 | வெ | ,, | 122, 123. | | 13 | தி. | ,, | 137. | | 24 | வெ. | ,, | 147. | 1—11 |
| 4 | ச. | ,, | 124, 125. | | 14 | செ. | ,, | 138. | | 25 | ச. | ,, | 147. | 12—20 |
| 5 | ஞா. | ,, | 126, 127. | | 15 | பு. | ,, | 139. | 1—12 | 26 | ஞா. | ,, | 148. | |
| 6 | தி. | ,, | 128, 129. | | 16 | வி. | ,, | 139. | 13—24 | 27 | தி. | ,, | 149. | |
| 7 | செ. | ,, | 130, 131. | | 17 | வெ. | ,, | 141. | | 28 | செ. | ,, | 150. | |
| 8 | பு. | ,, | 132. | | 18 | ச. | ,, | 142. | | 29 | பு. | வெளி. | 1. | 1—9 |
| 9 | வி. | ,, | 133, 134, | | 19 | ஞா. | ,, | 143. | | 30 | வி. | ,, | 1. | 10—20 |
| | | | 135. | 1—7 | 20 | தி. | ,, | 144. | | 31 | வெ. | ,, | 2. | 1—11 |
| 10 | வெ. | ,, | 135. | 8—21 | 21 | செ. | ,, | 145. | 1—10 | | | | | |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

மாதர் போதினி

No. 174 ஜூன் 1912 No. 6

## TORU DUTT—AN INDIAN POETESS

## டோரு டட் அம்மாள்

நம்மில் அநேகர் பங்காளத்தை நேரில் கண்டதில்லையானாலும் அதன் வளப்பத்தையும் நாகரீகத்தையும்பற்றிக் கேள்விப்படாமல் இருக்கமாட்டோம். அந்த ராஜதானியே இந்தியாவின் மற்றைப் பாகங்களைவிடக் கல்வியில் மேலானது என்கிறார்கள். அதிலும் இங்கிலீஷ் மிக விருத்தியாகியிருக்கிறது. அவ்விருத்தி புருஷர்களில் மாத்திரம் என்று நினைக்கவேண்டியதில்லை; சென்னை ராஜதானியில்தான் அப்படி. அங்கே ஸ்திரீகளில் படித்துத் தேர்ந்தவர்கள் பலர். பண்டிதர்கள், கவிராயர்கள், வைத்தியர்கள் முதலான பல நிபுணர்கள் உள்ள ராஜதானி பங்காள ராஜதானி என்னலாம். இப்படிப்பட்டவர்களில் சிறந்து விளங்கியிருந்த இங்கிலீஷ் ஸ்திரீகவி ஒருவரைப் பற்றிச் சிறிது சொல்லுவோம்.

இந்த அம்மாளை 'டோரு டட்' என்று வழங்குகிறார்கள். அவருடைய சரியான பெயர் தொருலதா தத்தை. இந்தக் குடும்பம் மிகவும் பேர்பெற்ற நல்ல குடும்பம். குடும்பத்தார் எல்லோரும் படித்துப் பேரும் பெருமையும் பெற்றவர்கள். இந்தப் பெரிய குடும்பத்தின் தலைவர் பங்காளத்து ராம்பாகன் என்னும் ஊரில் கவிராயராக விளங்கிவந்த பாபு கோவிந்த சந்த்ர டட் என்பவர். இவர் மகா விவேகி; பற்பல தேசங்களுக்குப் பிரயாணஞ்செய்து தம் மனதை மிகவும் விசாலமாக்கிக்கொண்டவர். இவருடைய சகோதரர் சாஷி சந்த்ர டட். இவர் ராய் பகதூர் பட்டம்பெற்றவர். ஒரு பெரிய ஜட்ஜும் ஆனவர். பாபு கோவிந்த சந்த்ர டட் நல்ல பக்தியுள்ள கிறிஸ்தவர். அன்பும் அனுசரணையும் அதிகமாக உள்ளவர். மிகுந்த புத்திகூர்மையுள்ளவர். இந்தக் குடும்பத்தைச்சேர்ந்த மகான் இன்னொருவரை நமக்குத் தெரியும். அவர் ரோமேஷ் சந்த்ர டட். அவர் பெரிய ராஜ்ஜிய தந்திர நிபுணரும் சரித்திர ஆசிரியருமாய் விளங்கியவர்.

இத்தனை உயர்ச்சிபெற்ற தத்தர் குடும்பத்துள் பாபு கோவிந்த சந்திர டட்டருக்கு மூன்றாம் குழந்தை நம் ‘டோரு டட்’ அம்மாள். அவருடைய அருமைக் குழந்தைகள் எல்லாமே இளமையிலேயே காலமாய்விட்டன. எல்லாரிலும் மூத்தவர் இவருக்கு அண்ணன் அப்ஜு. அவர் பதின்மூன்றாம் பிராயத்தில் மரித்தனர். அடுத்த அக்காள் அரு என்பவள்தான் தன் தங்கை டோரு டட்டுக்கு உற்ற துணை. அவரும் இருபத்துமூன்றாம் வயதில் தேகவியோகமாய் விட்டார். இப்படி மூவரும் பேரும் கீர்த்தியும் பெற்றிருந்தவர்களில் யார்தான் பூரண ஆயுசுபெற்று வாழ்ந்தவர்! ‘தேவன் யாரை மிகுதியாக நேசிக்கிறாரோ அவரை அவர் அதிசீக்கிரத்தில் தம்மிடத்தில் அழைத்துக்கொள்ளுகிறார்’ என்றது உண்மையேபோலும்.

மேலே காட்டியபடி புத்திகூர்மையுள்ள குடும்பத்தில் உதித்த மாதுசிரோமணிக்கு விவேகம் மிகுந்து விளங்கத் தடையேது! சகோதரர்கள் சாதாரணமானவர்களா? தந்தைதான் சாதாரணமானவரோ! மூத்தகுமாரன்தான் பதின்மூன்றாம் வயதிலேயே பரலோகம் போய்விட்டார். மற்ற இரண்டு பெண்களையும் தந்தையார் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கற்பித்துவந்தார். இந்த இரண்டு பெண்களுக்கும் இங்கிலீஷிலும் பிரியம் ஏற்பட்டதற்குக் காரணம் தங்கள் சகோதரரைப் பார்த்தும் அவர்களது உபாத்தியாயருடைய போதனையின்பேரிலும் ஆக இருக்கலாம். அதிலும் அந்த இரண்டு பெண்களுக்கும் பத்துப் பன்னிரண்டு வயதிலேயே இங்கிலீஷ் கவிராயர் மில்டன் எழுதிய ‘சுவர்க்க நீக்கம்’ (Paradise Lost) என்னும் காவியத்தில் இருந்த ஆசையும் பிரியமும் இவ்வளவு அவ்வளவு அல்ல. அதைக் கண்டு ஆசிரியர் முதலாயினோர் மிகவும் அதிசயப்பட்டார்கள். வயது பதின்மூன்று நடக்கையில் தகப்பனார் தம்முடைய இரண்டு பெண்களையும் அழைத்துக்கொண்டு அவர்கள் ஐரோப்பாக் கண்டத்துப் பல தேசங்களிலும் பிரென்ச், இங்கிலீஷ் முதலிய பாஷைகளை நேரில் படிக்கட்டும் என்று பிரயாணம்போனார். தகப்பனாரும் தம்முடைய மூத்தமகன் மரணமடையத் தம்முடைய முழு மனதையும் பெண்களின் படிப்புக்கென்றே செலவிட்டார். இப்படி ஒரே மகனைப் பறிகொடுத்த தந்தைமாரில் எத்தனைபேர் தத்தம் பெண்களை இவ்வளவு விமரிசையாய் வித்தியாப்பியாசம் செய்யத் துணிந்தவர்! இந்தப் பெண்கள் இப்படியாக நான்கு வருஷகாலம் படித்தார்கள். பிரான்ஸ், இட்டாலி, இங்கிலாந்து முதலிய தேசங்களில் அந்தந்தத் தேசபாஷையை நேரில் படித்தார்கள். அவைகள் எல்லாவற்றிலும் இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் கலாசாலையில் கேட்ட பிரசங்கங்கள்தான் நம் டோரு டட்டுக்கு மிகுந்த பிரியமானவையும் பின்காலத்தில் மிகவும் கௌரவ



மாய்ப் பாராட்டவும் கூடியவையுமாய் இருந்தன. இப்படிக்கெல்லாம் அந்நியதேசங்களில் கலைஞானங்களைக் கற்க ஆரம்பித்துவிட்டதில் அவர் தம்முடைய சொந்த தேசமான இந்தியா தேசத்தின் ஜீவியம், நாகரீகம் முதலியவைகளை மறந்துவிடவில்லை. அவைகளைப் பெருமையாகப் பாராட்டிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். பாடல் என்பானேன் சிறிய புஸ்தகம் ஒன்று எழுதியிருக்கிறார் என்றே சொல்லவேண்டும். அதன் பேர் ‘ஹிந்துஸ்தானத்தின் பாமரப் பாடல்களும் பழங்கதைகளும்’ (Ballads and Legends of Hindustan). இவைகளால் இந்த அம்மாளுடைய கவிசாதுரியம் யாவருக்கும் விளக்கமானது. இதில் ஒரு விசேஷம், டட்டர் குடும்பத்தார் சாதாரணமாகத் தனிமையாகவே வாழ்ந்துவந்தார்கள். எங்கும் வலிய நுழைந்து சென்று ஆடம்பரம் செய்யமாட்டார்கள். கல்கத்தாவில் படிப்பின் அருமையை அறியக்கூடியவர்களோடு நெருங்கிய பழக்கம் கிடையாது. ஆதலால் டோரு டட் அம்மாளுடைய கவிகளைக் கண்ட பலர் ‘இக்கவிகள் யாரோ ஒரு இங்கிலீஷ்காரரால் எழுதப்பட்டிருக்கவேண்டும். ‘டோரு டட்’ என்பது ஒரு புனைபெயராக இருக்கலாம்’ என்றே எண்ணினார்கள். பிறகு வரவர இவரும் பல நல்ல கவிகள் பாடப் பாட இவருடைய பேர் உலகத்தின் பல பாகங்களிலும் பரவினது. ஆனால் நாம்தான் அவருடைய அருமையான பாடல்களை அதிகமாய்க் காணமுடியாமற்போய்விட்டது. இவர் 1877-ம் வருஷத்தில் வியாதியஸ்தராய் எட்டு மாசம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து ஆகஸ்டுமீ 30உயில் தம்முடைய இருபத்தொன்றாம் பிராயத்தில் பரலோகப் பிராப்தியானார். அதுகேட்ட ஜனங்கள் எல்லாரும் ஆறாத்துயரில் அமிழ்ந்தார்கள்.

‘டோரு டட்’ அம்மாளுடைய கவிகள் அதிகமாய்ப் படித்தவர்களுக்குமாத்திரம் பிரயோஜனமும் ருசியும் கொடுக்கக்கூடியனவாக இல்லாமல் கொஞ்சம் படித்தவர்களுக்கும் பயன்படும்படியாகச் சாதாரண நடையாக இருக்கும். பொருள்நயம், சொல்நயம் இரண்டும் இவருடைய பாடல்களில் விசேஷமாய் அமைந்திருந்தன. இயற்கை அழகின் வர்ணனை வெகு மனோகரமாயிருக்கும்.

இவ்வளவு சிறுவயசில் இவ்வளவு பெருமையும் கீர்த்தியும் அடையும்படியான சாமர்த்தியம் இவரைப்போல் வேறே எவருக்கும் இருந்ததாகக் காணோம். ஓர் அந்நிய பாஷையைப் படித்துத் தேர்ந்து அதில் இங்கிலீஷ் மகா கவிகளைப்போல் அவ்வளவு ரசமாகக் கவிபாடுவது என்றால் சாமானியமா! இது ‘தேவன் அருள்’ என்றே சொல்லவேண்டும். ஆனால் நாமும் அவரைப்போல் பிரயாசப்பட்டு வருவோமேயானால் தேவன் நமக்கும் அருள்புரிவார். நம்மை உதைத்துத் தள்ளி

விடமாட்டார். நம் சகோதரிகளில் படிப்பவர்கள் வெகு சொற்பம். அவர்களும் கொஞ்சம் வயதான அளவில் முன் படித்த இரண்டொரு வார்த்தையையும் வேணுமென்று மறந்துவிடுகிருர்கள். தம் ‘சொந்த ஊரைவிட்டு நகரப்படாது’ என்கிருர்கள். இப்படிக்கெல்லாம் இருப்பதைவிட்டு நன்ருய்ப் படித்து பல நாடுகளுக்குச் சென்று நம் புத்தியையும் மனதையும் மிகவும் விசாலமாக்கிக்கொண்டு பெரும் புகழும் அடைய முயல்வது வெகு நல்லது. இந்த ‘டோரு டட்’ அம்மாளைப்போல் பல ஸ்திரீகள் நம் சகோதரிகளிலிருந்து கிளம்புவார்களாக என்று நம் பரமபிதாவைப் பிரார்த்திக்கிறோம்.



## MOTHER'S LOVE

## அ ன் னை த யை

(பிருதிவிராஜிலிருந்து)

அன்னைதன் அன்பை அறைகுவேன் கேளாய்
ஈயே மொய்க்கினும் எறும்பே சுற்றினும்
நோயே காணினும் நொடியே நேரினும்
அழுகை யொன்றே யதன்மொழி யாகத்
தழுவிய சேயாச் சாரும் நாளில்



அவ்வக் காலத் ததனதன் குறிப்பைச்
செவ்வி தாகத் தெரிந்தே யாற்றியும்
அந்தக் குழந்தை அடைந்திடும் நோய்க்காத்
தந்திடு மருந்தைச் சார்வுடன் கொண்டும்
உப்பே யில்லா வுணவினை யுண்டும்
கப்பிய இரவெலாம் கண்விழித் திருந்தும்
உடல்நோ தன்னுடன் உள்ளநோய் கொண்டும்
விடலில் அன்பு மேலும் மேலும்
குலவும் அன்னைதன் குணங்கள் முற்றும்
நிலவும் வகையால் நிகழ்த்தவும் படுமோ.

160930
ஆவணக்காப்பக
சென்னை-600 008.

## THE SAVINGS BANK

## ராஜாவின் கடிதம்

### தபால் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கிகள்

ஐம்பது வருஷங்களுக்குமுன்னே கிளாட்ஸ்டன் என்னும் மகான், பிரித்தானியா தேசத்தில் சேவிங்ஸ் பாங்கிகளை ஸ்தாபித்தருளினர். அவை ஸ்தாபிக்கப்பட்ட இரண்டாவது வருஷக் கடைசியில், இப்பாங்கிகளில் முப்பத்தைந்து லட்சம் பவுண் போடப்பட்டிருந்தது. இந்த வருஷத்தின் முடிவுக்குள், அந்தப் பாங்கிகளில் போடப்படும் பணம், பதினேழு கோடி பவுண் அல்லது இருநூற்றைம்பத்தைந்து கோடி ரூபாவுக்கு மேலான தொகையாகும். இன்னும் விரித்துச் சொன்னால் பிரிட்டிஷ் தீவின் ஜனத்தொகையில் தலைக்கு நாலு பவுண் போட்டதுபோலாகும்.

இதைப்பற்றி லாயிட் ஜார்ஜ் என்னும் ஒரு கனவான் சொல்லுகிறதென்னவென்ருல்:—வேறுவகையாய்ப் பணம் மிச்சம்பண்ண இயலாதவர்களுக்கு சேவிங்ஸ் பாங்கிகள்மூலமாய்ச் சிக்கனம்பண்ணிப் பொருள் சேர்க்க வசதி உண்டாகியிருக்கிறது. இவ்வித அனுகூலமான ஏற்பாட்டின்மீது ஜனங்களுக்குப் பிரீதி அதிகரித்துக்கொண்டே வருகிறது. அப்பேர்ப்பட்ட பிரீதி ஒரு தேசத்தாருடைய அல்லது ஒரு தனி மனிதனுடைய ஆஸ்தி என்று சொல்லலாம் அல்லவா? அவ்வித ஆஸ்தி ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைப்பற்றி நம்மால் விரித்துரைத்தல் சாத்தியம் அன்று.

பிரித்தானியாவில் சேவிங்ஸ் பாங்கிகளின் ஐம்பதாவது வருஷோத்சவதினத்தைக் கொண்டாடும்படியாக 1911-ம் ஹு நவம்பர்மீ

11டை லண்டன்மா நகரத்து நகர அதிகாரியாலும் நகராதிகார சங்கத்தாராலும், பிரபல கனவான்களான அநேக ஆண்களும் பெண்களும், நகர சபாமண்டபத்தில் கூடும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் நகர பரிபாலன கர்த்தாவான, ஸர். வீஸி ஸ்டிறங் என்பவர், நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியிடமிருந்து வரப்பெற்ற ஒரு கடிதத்தை வாசித்துக் காண்பித்தார். பொது ஜனங்களின் சிக்கன லாபத்தை விருத்திசெய்யும் இத்தகைய விஷயங்களில் நமது காருண்ய சக்கரவர்த்தியார் எவ்வளவு அனுதாபசித்தராய் இருக்கிறார் என்பதை அக்கடிதம் நன்கு விளக்கினது.

அக்கடிதத்தில் பின்வருமாறு கண்டிருந்தது :—போஸ்ற் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கிகளின் ஐம்பதாவது வருஷோற்சவம் தங்களுடைய ஆதீனத்தின்கீழும் நகராதிகார சங்கத்தாரின் ஆதீனத்தின்கீழும், இந்த லண்டன்மா நகரில் நடைபெறப்போகிறதெனக் கேள்விப்படுவது நமக்கு மெத்தவும் சந்தோஷம்.

'எண்பது லட்சத்துக்கு அதிகமான ஜனங்கள் தங்கள் பணத்தைப் பத்திரமாய்ப் போட்டுவைக்க ஏற்றதான இவ்வித தேச ஏற்பாடு விருத்தியடைந்துவருவதை உணர்ந்து மிகவும் களிப்படைகிறோம்.

இவ்வேற்பாடு தேசத்தார்க்குச் சொல்லிமுடியாத நன்மையைத் தருகின்றதல்லவா? ஜனங்கள் தங்களைத் தாங்களே பேணிக்கொள்ள தைரியத்தை உண்டாக்குகிறது. சிக்கனத்தையும் சுவாதந்திரியத்தையும் ஆதாரமாகக்கொண்டு ஒரு தேசத்தாருடைய விருத்திக்கும் நிலையான மேன்மைக்கும் இன்றியமையாததான குணசுவாதந்திரியத்தையும் நிலைநிறுத்த உதவுகிறது.

'உலகத்தில் முதல் முதல் பிரித்தானியாவில் ஸ்தாபிக்கப்பட்ட சேவிங்ஸ் பாங்கி ஏற்பாடு அப்பாங்கிகள் இல்லாத அநேக அயல் தேசங்களில் இப்போர்க்கொத்த ஏற்பாடுசெய்ய முன்மாதிரியாக இருந்து வந்திருக்கிறது.

'சேவிங்ஸ் பாங்கிகளின் மேல்அதிகாரியான கன்ட்ரோலரையும் அவருடைய உடன் ஊழியக்காரரையும் அவர்களுடைய வேலைத்திறமைக்காக ஆசிகூறி மெச்சிக்கொண்டோம். இன்னமும் வருங்காலங்களிலும், இதை ஸ்தாபித்தருளியவரின் ஊக்கத்தினாலும் ஞானத்தினாலும் நற்பிரயோஜனம் உண்டாகிக்கொண்டே போகவும், தேச சிக்கனத்தை விருத்திசெய்யும்பொருட்டு அந்நற்பிரயோஜனத்தைக் காணும் மற்றோர்களும் பிரயோஜனம் அடையவேண்டுமென நாம் உண்மையாய் அபேட்சிக்கிறோம்.'

மாட்சிமைதங்கிய நம் சக்கரவர்த்தியார் பிரித்தானியா தேசத்து சேவிங்ஸ் பாங்கிகளைப்பற்றிச் சொன்ன விஷயங்கள் நம் இந்தியா



வின்கண்ணுள்ள போஸ்ற் ஆபீஸ், சேவிங்ஸ் பாங்கிகளைப்பற்றியும் சொன்னவை அல்லவா! சிறு தொகைகளைப் பத்திரமாய்ப் போட்டு வைக்கக்கூடிய இடம் இதைவிட வேறே கிடையாது. நாலு அணா முதற்கொண்டு எந்தத் தொகையும் போடலாம் என்ற நல்ல ஏற்பாடு இருக்கிறபடியால் இதை வாசிப்போர் யாவரும் தங்கள் பிற்கால ஜீவியத்துக்கென்று, இப்பாங்கிகள்மூலமாய் ஏதாவது சேர்த்துவைத்தால் அதிக பிரயோஜனமாயிருக்கும். இதுவரையும் அப்படிச் செய்யாதவர்கள் இனிமேலாவது செய்ய ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறோம்.



SATHIAVATHI. ADVICE TO A DAUGHTER-IN-LAW

சத்தியவதி

இம்மாதரசி தன் கணவனோடு வாழுங்காலம் கழிய மணிமுத்து என்ற புத்திரனுடைய சம்ரட்சணையின்கீழ் வாழ்கிறாள். அவனுக்குப் பெண்சாதியாக மாணிக்கவல்லியை மணஞ்செய்வித்தாள். மணம் முடிந்து கணவன் வீடு போகுங்காலையில் மாணிக்கவல்லியைப் பார்த்து தோழிகள் : 'மாணிக்கவல்லீ! நீ உன்னைப் பெற்றெடுத்த தாய்தந்தையரையும், பாலியம்முதல் கூடவே பழகிக்கொண்டுவந்த சகோதரிகளையும் விட்டுப் பிரியப்போகிறாயே, எங்களை மறந்துவிடுவாயோ?' என்றார்கள்.

மாணிக்கவல்லி: 'தோழிகளே! உங்களுக்கு வந்தனம்: வீட்டில் பிறந்த பெண் அயலாருக்கு உபயோகப்படுவது சகஜமாக ஏற்பட்டிருக்கிறது. இளமைமுதல் உங்களோடு வாழ்ந்த இஷ்டம் எனக்கு மறந்துவிடுமோ? எனக்குப் போய்வரச் செலவுகொடுங்கள்' என்றாள்.

தோழிகள்: 'மாணிக்கவல்லி! நீ மாமியார் மெச்சும் மருமகளாய் வாழவேணுமென்று கடவுளை வேண்டுகிறோம்' என்றார்கள்.

மாணிக்கவல்லி: 'மாமியார் மெச்சின மருமகளென்பதோடு மருமகளும் மெச்சின மாமியாராகும்படி நடந்துகொள்வேன்' என்றாள்.

'எங்கள் விருப்பம் அதுதான்' என்றார்கள். அவர்களிடமும் விடைபெற்று மாமி வீடு அடைந்தாள்.

மாணிக்கவல்லி சத்தியவதிக்கு உறவின்முறையால் நெருங்கிய பந்து. மருமகள் தன் பெற்றோர்களைப் பிரிந்துவந்தமையால் அவளைத் தன் மகளைப்போல் பட்சமாய், சந்தையில் விலைக்குவாங்கின மாட்டைப்போலவேனும் தனக்கு வலியக் கிடைத்த ஓர் அடிமைபோலவேனும் நினையாமல் தனக்குப் பின் தன் குடும்பத்தை விளங்கவைப்பதற்கு வந்து தோன்றிய மங்கை என்று எண்ணினாள்.

இதைக் கண்ட அயல்வீட்டுக்காரி சிலநாள் கழிந்தபிறகு 'அடீ! எதிர்வீட்டு மரகதம்! எங்கள் பக்கத்துவீட்டுப் பாக்கியத்தைப் பார்த்தாயா?'

'என்னடீ! அவள் எப்படியிருந்தாலும் உனக்கென்ன? அதற்காக நீ ஏன் வீணில் பொறாமைப்பட்டுச் சாகிறாய்?' என்று தூஷித்துவிட்டுப் போய்விட்டாள்.

மரகதம் உள்ளே போனவுடனே வேறொரு மாது திண்ணையில் வீற்றிருப்பதைப் பார்த்து 'என்னடீ! அம்மா! அவளைப் பார்த்தாயோ?'

'யாரை?'

'அயல்வீட்டு மாணிக்கவல்லியை.'

'என்ன?'

'அவள் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரையில் பொன் காய்த்த மரம்போல, உடம்பே தெரியாமல் நகைகளைப் பூட்டிக்கொண்டிருக்கிறாளே?' என்றாள்.

'அம்மணீ! பணம் இன்று ஒருவர் கையில் நாளை மற்றொருவர் கையில். பாக்கியசாலி எல்லாவற்றையும் பெட்டிக்குள்ளே போட்டுப் பூட்டிவைக்காமல் அணிந்துகொண்டாவது வெளியில் வருகிறாளே; அதுவே நமக்குப் பாக்கியம்' என்று சொல்லி அவளும் போனாள்.

இதற்கிடையில் விருந்தினர்களை உபசரித்துக் காலலம்பத் தண்ணீர்கொடுத்து உள்ளே அழைத்துப்போய் ஆசனமிட்டு உண்பித்து



பாக்கிலை கொடுத்து ஆதரிப்பதைக் கண்டு 'அடீ! அவளுடைய வீட்டைப் பார்த்தாயா?' என்று தெருவில் கூடிப் போகப்பட்டவளைக் கேட்டாள்.

அதற்கு அவள் 'நாலைந்து வருஷங்களுக்குமுன் சாதாரணமான வீடாயிருந்தது. இப்போது மேடைவைத்துக் கட்டியிருக்கிறது' என்றாள்.

'இதோ பார்!' என்று பிள்ளைகள் விளையாடுவதைக் காண்பித்தாள்.

'என்னம்மா! பாக்கியசாலி அவளைப்போலப் பாக்கியம் செய்தவர்கள் யார்?' என்றாள்.

அச்சமயத்தில் மாணிக்கவல்லி குழந்தையைத் தொட்டிலிலிட்டு,

'தேனே, ரசமே, தெவிட்டாத செங்கரும்பே,
மானே, என் கண்ணே, வயிரமணிப் பெட்டகமே,
பெட்டகமே, பொற்பணியே, பேழையே, என்னாசைக்
கட்டழகே, மாற்றுயர்ந்த கட்டித் திரவியமே'

என்று தாலாட்டுகிறதைக் கேட்டு மனஞ்சகியாதவளாய் 'அடீ! அவளுக்கு வீடு நிறையப் பிள்ளைகளிருப்பதைப் பார்; இப்படியும் உலகத்திலுண்டா? அடீ! அவர்கள் வீட்டுக்கு எத்தனைபேர் வருவதும் போவதுமாயிருக்கிறார்கள் பார்த்தாயா? எந்தப் பாவிகளாவது நம்முடைய வீட்டைத் தேடி வருகிறார்களா? அவளுடைய வீட்டில் ஒரு வேளைக்கு எத்தனைபேர் வந்தாலும் எத்தனையோ விதம் காய்கறிகள் சமைக்கிறார்கள் என்று எல்லாரும் சொல்லுகிறார்களே? பத்து விதக் காய்கறிகள் இல்லாமல் அவளுக்குச் சோறு இறங்காதோ?' என்று தெருத்திண்ணையில் உட்கார்ந்து தொண்டைகிழியக் கத்துவாள். இவளைக் கண்ட மருமகள் மனம் பூனை எலியைப் பார்ப்பதுபோல, குரூர மனதோடு பார்த்தாளானால், எவ்வளவு வருத்தமடையுமென்று யோசித்துப் பாருங்கள். அப்பெண் சாமர்த்தியசாலியாகையால் புருஷனைக் கைவசப்படுத்திக்கொண்டு மாமியாரை வீட்டைவிட்டுத் தூரத்திவிடுகிறதற்கு ஆலோசித்தாள். ''தந்தை தாய்ப் பேண்' என்ற நீதிவசனத்தை மறந்து,

'ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி'

என்பதை யறியாது அவன் மிக வீணாகத் தாயாரை நடத்தினபோதிலும்,

'உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறு பேய்ச்சுரையின் காய்'

என்றபடி அவளுக்கு இயல்பாய் உண்டான குணம் நீங்கவேயில்லை. ஆகையால் அம்மருமகள் உறவின்முறையால் வாழ்க்கைப்பட்ட இக்கொடும்பாவியின் மகனை வருத்தத்திற்கு ஆளாக்கினேனானால் இவளுக்கு இவ்வருத்தம் தெரியுமென்று தனக்குச் சுற்றமான அவள் மகளின் மாமியை வேண்டினாள். அவளவ்வாறு செய்ய மனமற்றவளானபோதிலும் சிறிது மனம் நோக வெடுவெடுத்துப் பேசுவதும் 'உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்' என்று அவள் தாயின் செய்கைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி மருமகளைப் புண்ணாக்கத் தலைப்பட்டாள். இதைக் கண்டு மனம் சகியாதவளாய்ச் சம்பந்திகள் இருவருக்கும் கலகம் பிறந்தது. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்' என்று அக்கொடும்பாவியின் மருமகள் சொல்லலானாள். மருமகள் முற்காலத்துப் பெண்களைப்போல் கல்லாதவளல்ல. ஆகையால் நற்போதனைகள் செய்து நல்வழியில் யாவரையும் திருப்ப ஆலோசித்துக் கணவனை ஒரு பிரசங்கம் தான் செய்துவரவேண்டுமென்று வேண்டினாள். அதற்கு அவன் இணங்கினான். கொஞ்சநாளுக்குள் ஒரு கூட்டம் கூடினார்கள். அதில் அம்மாது கீழ்வருமாறு பிரசங்கித்தாள்.

ஓ சகோதரிகளே! ஸ்திரீகளுடைய வாழ்நாட்களில் பாலிய முதல் மாயும்வரையில் சுதந்தரமில்லையென்று நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

'மங்கையை வாழுநாளில் வளமொடு பிதாவேகாப்பான்
பொங்கிய யௌவனத்திற் பொருந்துபத் தாவேகாப்பான்
தங்கிய மூப்பிலேதன் தநயனே காப்பானன்றிச்
சங்கையா மெக்காலத்தும் சுதந்தர மில்லைதானே.'— (நீதிசாரம்)

இதனுடைய அர்த்தம் என்னவென்றால், ஒரு ஸ்திரீயானவள் தன்னுடைய பாலியத்தில் தன் பிதாவின் சம்ரட்சணையிலும், யௌவனத்தில் தன் கணவனுடைய ஆக்கினையிலும், முதுமையில் தன் புத்திரனுடைய ஆதரவிலும் இருக்கவேண்டியவளாய் இருக்கிறாள். கணவனுடன் வாழ்ந்துவருகையில் பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்தெடுத்த ஒரு ஆண்பிள்ளைக்கு வயதான காலத்தில் ஒரு பெண்ணைத் தேடி ஏன் விவாகம் செய்துவைக்கிறார்கள்? 'ஊருடன் கூடி வாழ்' என்று அவனும் எல்லாரையும்போல் உலக இன்பங்களை அனுபவித்துப் புத்திரர்கள் பல்கிப் பல்கி வாழவல்லவா? இது இல்லற வாழ்க்கைக்குத் துணைவியான இல்லாள் இல்லாமல் நடக்குமா?



இல்லாளோ அயல்வீட்டில் பிறந்து வளர்ந்தவள். உண்ண உணவும் உடுக்க உடையும்தான் நமக்கு எக்காலத்திலும் வேண்டியது; இவற்றில் குறை உண்டானால் அண்டை அயலில் சொல்லித் தூஷித்து விவேகம் வரும்படி செய்வது கூடாத காரியம். தான் மகன் மருமகளோடு விவேகமாய் நடந்து, தன் குறைவை நீக்குவது நியாயந்தான். வீணில் பிறரைக் கண்டு பொறாமைப்பட்டுப் புறங்கூறுவது தகாது. மருமக்கள் அன்புவைத்து நடக்கும்போது வீணாய் அவர்களைத் தூற்றக் கூடாது. அவர்களல்லவா 'தாய்க்குப்பின் தாரம்' என்று போஷித்து வளர்ப்பது. 'அம்மா! என் மகனும் மருமகளும் அந்நியோந்நியமாய் இருக்கிறார்கள்' என்று சிலாக்கியமாய்ப் பேசினால் அவர்கள் மனம் எவ்வளவு உற்சாகத்தையடையும். குடும்பத்துக்கு க்ஷேமம், கீர்த்தி இவைகள் உண்டாகும். அதில்லாமல் சதா தூஷித்தால் என்ன உண்டாகும். மருமக்களுக்கு வயிற்றெரிச்சல் உண்டாகும். 'மாதர் செய்தது மக்களைக் காக்கும்.'

மேலும் 'மருமகள் மெச்சின மாமியாரில்லை, மாமியார் மெச்சின மருமகளில்லை' என்ற பழமொழி ஒழிந்து 'மாமியாரை மெச்சாத மருமகளில்லை, மருமகளை மெச்சாத மாமியாரில்லை' என்ற பழமொழி தொனிக்கச் செய்வது எக்காலமோ?

தையல் தெரியாதவள் ஊசியைக் கையில் குத்திக்கொண்டு வருந்தும்போது அவளைத் தைக்கக்கூடத் தெரியவில்லையென்று சொன்னால் வேதனை தீருமா? இதோடு ஊரெங்கும் தூஷித்தால், 'ஊரில் வரப்பட்ட சாவும் இவளுக்கு வரவில்லையே; எனக்கு என்று இந்த ராட்சசி மாமியாராய் எங்கிருந்து வாய்த்தாள்' என்று சொல்லாதிருப்பாளா? தாயின்கீழ்ச் சுகமாக வாழ்ந்துவந்தவள் குற்றம்செய்தபோதிலும்,

'சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே'

என்ற நறுந்தொகையின் கருத்தை உணரலாகாதா? என்றைக்காவது படித்திருந்தால்தானே தெரியும். ஆகையால் படித்தறிந்து அதின்படி செய்வதே பெரியோர் கடமை.

'என் பேச்சு விருப்பைத் தருமோ வெறுப்பைத் தருமோ என்று பயந்து இத்துடன் முடிக்கிறேன்' என்று முடித்தாள்.

மற்றைநாள் மாணிக்கவல்லியைப் பிரசங்கிக்க வேண்டினார்கள். அம்மாது பிரசங்கத்திற்கு உடன்பட அன்று மாலையில் எல்லாரும் கூடினார்கள். அப்பொழுது சத்தியவதியும் அங்கே வரவேணுமென்று எல்லாரும் வேண்டினார்கள். அவ்வாறே அவரும் வந்திருந்தார்.

மாணிக்கவல்லி:

ஓ பிரிய சகோதரிகளே! நேற்றையதினம் என் சகோதரியின் வார்த்தைகள் வெறுப்பைத் தந்ததோ விருப்பைத் தந்ததோ என்று முடித்தாள். இன்று நானும் அதன் உண்மையை அறியாதவளாய்ச் சொல்லத் தொடங்குகிறேன்.

'கல்லா லொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்'

என்பது நான்மணிக்கடிகையின் சாரம். பெண் ஜன்மம் கொடிதென்று அநேக நூல்களில் சொல்லியிருக்கிறது. ஆராய்ந்து பார்த்தால் நாம் எவ்வாறாக நடக்கிறோமோ அவ்வாறே நமக்கும் செய்யப்படும் என்பது தெரியவரும். முன் செய்த தீவினையின் பயன் பின்தொடரும். வித்தைப்போல விளைவு. சிறுமிகளுக்கு ஒன்றுந் தெரியாது என்பது மெய்தான். பெரியவர்கள் அதைச் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியம். பெரியவர்களுக்கு அதைச் சொல்லிக் கொடுக்கத் தெரியாவிட்டால் அறிவும் நாகரீகமுமுடைய அயல்வீட்டுக்காரர்களோடு கூடிப் பழகிச் சகவாசஞ்செய்யவும், கல்வியைக் கற்றுக்கொள்ளவும், நற்சம்பாஷணை செய்யவும் இடங்கொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் வீட்டைவிட்டு வெளியிலே போகக்கூடாதென்று தடுத்து வைத்திருந்தால் 'ப்ரம்மாப்ரஸ்'போல் ஒரு பக்கத்தைப் பிடித்து அமுக்கினால் மற்றொரு பக்கமாக உயரவரும். வெளியிலே போகக் கூடாது என்று நிர்ப்பந்தித்தால் விளையாட்டே வினையாக முடியும்.

'Absence of occupation is not rest;
A mind quite vacant is a mind distressed.'

வேலையில்லாமல் உட்கார ஒருவருக்குமே மனம் இராது. துரும்பையாவது கிள்ளி எறியத் தோன்றும். வேலையில்லாதவர்கள் நகத்தைக் கிள்ளுவதைப் பார்த்ததில்லையா! அப்படி யிருக்கும்போது சிறுவயதிலேயே கெட்ட வார்த்தைகளையும் கெட்ட பழக்கங்களையும் அப்பியசிக்க வழிகொடுத்தால் முதுமையில் அது எப்படி முடியும்? பெரியவர்கள் நற்போதனைகள் செய்வதில் தலைப்பட்டார்களேயானால் நிமிஷத்தில் நமது சகோதரி எடுத்துரைத்தபடி எல்லாத் தீங்குகளும் விலக மகுடம்பெற்று இனிது வாழ்வோம். எல்லாவற்றிற்கும் நாமே முதல்வர்களாக வழிகாட்டவேண்டியது பெரியோர்கள் கடமை. சிறியோர்கள் 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று சிரசில் மேற்கொண்டு அவர்கள் மனங் கோணாது நடந்து, 'இவளைப் பெற்றோர் என்ன தவம் புரிந்தாரோ' என்று சொல்லும்வண்ணமாய் வாழக்கடவோம் என்று முடித்தாள்.



இவைபோன்ற விஷயங்கள் அடிக்கடி எடுத்துரைத்துவர 'கேட்
டவை கேட்டவை விடா துளத்தமைத்து.' அவ்வூர் வாசிகள் முன்னி
லும் பன்மடங்கு அதிக பாக்கியசாலிகளாய்ச் சத்தியவதி யென்
பவளைப் பின்பற்றி இன்புற்று வாழ்ந்தார்கள்.

## A THIEF'S CONVERSION

## ஒரு கள்ளன் குணப்பட்ட விதம்

இங்கிலாந்து தேசத்திலே ஒரு துரைசானி அம்மாள் இருந்தார்
கள். அவர்களும், அவர்கள் சகோதாருமாய், ஒரு ஓய்வுநாள் சாய
ரட்சையிலே மெத்தையிலே உலாவிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச
நேரத்திற்குப் பிற்பாடு துரை ஏதோ ஜோலியாய் வெளியே போய்
விட்டார். இந்த அம்மாளும் ஒரு புஸ்தகம் எடுக்கும்படி வேறே
அறைக்குள் நுழைந்துவிட்டார்கள். அவர்கள் மறுபடியும் மெத்தைப்
படியில் ஏறும்போது ஒரு கள்ளன் எதிர்ப்பட்டான். அவன் இந்த
அம்மாளைப் பிடித்துக்கொண்டு, 'நான் பணம் எடுக்கும்படியாக வந்
திருக்கிறேன். உன்னிடத்தில் உண்டானதையெல்லாம் கொடுத்து
விடு' என்று பயமுறுத்தினான்.

இந்த அம்மாள் கோபம்காட்டாமல், 'பணமா வேண்டும், என்னி
டம் 4 பவுனும் 10 ஷிலிங்குமிருக்கிறது. என் பின்னே வா தருகி
றேன்' என்று சொல்லி அவனைத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு
போய் ஒரு பெட்டியைத் திறந்து பணப்பையை அவன் கையில்
கொடுத்து 'பணத்தை எடுத்துக்கொண்டு பையைத் திரும்பக் கொடுத்து
விடு' என்று மிகுந்த அமரிக்கையோடு சொன்னார்கள். மறுபடியும்
அம்மாள் கள்ளனைப் பார்த்து, 'உனக்குத் தாயார் இருக்கிறார்களா?
நீ இப்படிச் செய்கிறது அவர்களுக்குப் பிரியமாயிருக்குமா?' என்றார்
கள். இந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தில் ஈட்டிபோல் பாய்ந்தன.
அவன் கண்ணீரோடு, 'அம்மா, எனக்கு ஒரு நல்ல தாயார் இருந்தார்
கள். இப்போ அவர்கள் இறந்துபோனார்கள். அதற்குப் பிற்பாடு
நான் எத்தனையோ பாவத்திற்கு ஆளாகி வருகிறேன்' என்றான். பிற்
பாடு அவன், 'அம்மா என்னைச் சீக்கிரம் போகவிடுங்கள் இல்லையானால்
நான் போலீசார் கையில் விழுந்துவிடுவேன்' என்று கெஞ்சினான்.
அவர்கள் நல்லது என்று அவனை அனுப்பிவிட்டு அறைக்குள் போய்
ஊக்கமாய் அவனுக்காக ஆண்டவரிடத்தில் கெஞ்சினார்கள்.

இதற்கு இரண்டு வாரங்களுக்குப் பிற்பாடு ஒருநாள் சாயங்காலம்
அந்த அம்மாள் உலாவப்போனபோது, 'நீங்கள் என்னைப்பற்றி நல்ல

செய்தி கேள்விப்பட்டால் அது உங்களாலுண்டானது என்று எண்ணிக்கொள்ளுங்கள்' என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஒருவரையும் காணோம். அது அந்தக் கள்ளனுடைய வார்த்தையென்று அந்த அம்மாள் கண்டுபிடித்துக்கொண்டு அந்த இடத்திலேயே மறுபடியும் அவனுக்காகப் பரம ராஜாவிடம் கெஞ்சினார்கள்.

இதற்குச் சுமார் இரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு, தூரதேசத்திலேயிருந்து இந்த அம்மாளுக்கு 4 பவுண் 10 ஷிலிங் அடங்கிய கடிதம் ஒன்று கிடைத்தது. கையொப்பமும் இல்லை; தேதியுமில்லை. 'இது யோக்கியமானவிதமாய்ச் சம்பாதிக்கப்பட்ட பணம் இதை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் இதைத் திரும்பக் கொடுக்க ஏற்றவனாயிருக்கிறேன் என்பதைப்பற்றி நன்றியுள்ளவனாயிருக்கிறேன்' என்று மாத்திரம் எழுதியிருந்தது.

இது கள்ளனுடைய காகிதம் என்று அந்த அம்மாள் அறிந்து தன் அறைக்குள்ளே போய்க் குணப்பட்ட கள்ளனுக்காக ஆண்டவரை ஸ்தோத்திரித்தார்கள்.

## SCHOOLS IN JAPAN

## ஜப்பான்தேசத்துப் பாடசாலைகள்

(தொடர்ச்சி.)

ஜப்பான்தேசத்துப் பள்ளிக்கூடங்களில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் அந்த ராஜ பிரகடனத்தின் நோக்கத்தை நிறைவேற்றக் கருதியதாயிருக்கும். அக்கட்டளையில் புதிய சமாச்சாரம் ஒன்றும் இல்லை. ஜப்பானியர் அதை அவ்வளவாய்ச் சுவீகரித்துக்கொள்வதற்குக் காரணம் அக்கட்டளையின் பழமையைப்பற்றித்தான். சக்கரவர்த்தியார் ஜன்மித்த ராஜகுடும்பம் அநேக சகாப்தங்களாக ஜப்பான்தேசத்தை ஆண்டுவந்திருக்கிறது. எத்தனை வருஷம் ஆண்டு இருக்கிறார்கள் என்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் முதல் முதல் அரசு செலுத்திய சக்கரவர்த்தி, கி. மு. 660-ம் ௵ ஆளத் துவக்கினார். இவ்வளவு நீண்டகாலமாகியும் ஜப்பானியர் தங்கள் சக்கரவர்த்திக்குத் தகுந்தபிரகாரம் முழுமனதோடு ராஜமரியாதை செலுத்திவந்திருக்கிறார்கள். அத்தேசத்தாரின் ஜீவியத்தில் மாறுதல்களை உண்டாக்கியிருக்கிற அநேக சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. ஆனாலும் இவ்விஷயத்தில்மட்டும், கடந்துபோன அநேக நூற்றாண்டுகளிலும் கடந்த ஐம்பது வருஷங்களில் தோன்றிய அபூர்வ சம்பவங்களாலும்



பிரஜைகளுக்குத் தங்கள் சக்கரவர்த்தியின்மேல் கொண்ட ராஜபக்தியில் கிஞ்சித்தேனும் மாறுதல் காணப்படவில்லை.

அத்தேச சரித்திரத்தில் இந்த அம்சத்தைக்குறித்து அவ்விராஜ கட்டளைமூலமாய் அதிக பலமாய் எடுத்துக் காட்டிச் சன்மார்க்க விஷயத்தின் மகிமைக்கும் அதே ஆதாரமாக எழுதி விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. குடும்ப ஜீவிய விஷயமாயும், ராஜ்ய நடபடி விஷயமாயும், அநேக புத்திமதிகள் அதில் கண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் சொல்லி, இவைகளின் மொத்தப் பொருளாக 'நீங்கள் நம்முடைய உண்மையும், உத்தமமுமான பிரஜைகளாய் இருப்பதுமல்லாமல் உங்கள் முன்னோர்களின் மேன்மைதங்கிய பாரம்பரிய ஆசார ஒழுக்கங்களை மகிமையுள்ளதாக்குங்கள்.' உங்கள் சக்கரவர்த்தியின் மதிப்புக்குத் தகுந்த பிரஜைகளாயும், பழைய வம்சத்தின் மேன்மைக்கு ஏற்றவர்களாயும் செம்மையாய் நடந்துகொள்ளுங்கள். கல்வி கற்பிப்பதின் உத்தேசம் அந்தப் பெரிதும் மேன்மையுமான ஊழியத்தில் உங்களுக்கு உதவிசெய்யத்தான்' என்றுரைக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பான் தேசத்திலுள்ள எந்தப் பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்த்தாலும் சன்மார்க்க விஷயங்களைப் போதிக்கவும் காலம் குறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றுக்கொள்ளும் காலத்திலேயே பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும், சக்கரவர்த்தி முதலானவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் ஒழுங்காய்ப் போதிக்கப்படுவார்கள். அப்பாடங்கள் வகுப்புவாரி வெகு கவனமாய்க் கணிக்கப்பட்டிருக்கும். நல்லொழுக்கங்கள் அதி விசேஷமானவைகளாயும், சன்மார்க்கப் பாடங்களின் முக்கிய பாகமாகவும் எண்ணப்படுகின்றன. இவைகளை எங்ஙனம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று கவனமாய் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகளைக் கற்றுக்கொடுக்க உபயோகப்படுத்தக்கூடிய பாடப் புஸ்தகங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாடப் புஸ்தகங்களில் பிள்ளைகளுக்குத் தங்கள் பயிற்சி காலம் முடிவடைகிறதற்குள், சன்மார்க்க விஷயத்தில் அனுபோக சித்தாந்தமாய் எதெது படித்துக்கொடுக்கக் கூடுமோ அதெல்லாம் கண்டிருக்கும். உலகில் பிரசித்தி அடைந்திருக்கும் சூரர்களைப்பற்றிய சரித்திரங்களைத் தெரிந்தேற்படுத்திக்கொள்வார்கள். அவர்களுடைய சரித்திரங்களிலிருந்து கற்றுக்கொடுக்கக்கூடிய விஷயங்களை வெகு திட்டவட்டமாய்க் கற்றுக்கொடுப்பார்கள்.

மாணாக்கர் படிப்பில் தேறி மேல்வகுப்புகளுக்குப் போகப்போக வெவ்வேறான மகாத்துமாக்கள் செய்திருக்கும் நற்காரியங்களைப்பற்றிப்

போதித்துவருவார்கள். ஆனால் அந்நற்காரியங்களைச் செய்தவர் இன்னார் என்று ஒருபோதும் தெரிவிக்கமாட்டார்கள். உபாத்தியாயர்கள் எந்த நற்குணத்தைப்பற்றிப் போதிக்கிறார்களோ அந்நற்குணத்தை விளக்கிக் காட்டும்படி நல்ல நல்ல சரித்திரங்கள் சொல்லிக்கொடுப்பார்கள். எந்த விஷயத்தைப்பற்றிப் போதித்தாலும் தாங்கள் போதிக்கும் விஷயம் மாணாக்கருடைய அநுபவசித்திக்கு அடுத்துவரும்படி மிக்க சிரத்தை எடுத்துக்கொள்ளுவார்கள்.

ஒவ்வொரு ஜப்பானியப் பையனும் தான் படித்த பல சூரரின் சரித்திரத்திலிருந்து எந்நற்காரியத்தைக் கவனித்தானோ, அந்நற்காரியத்தைத் தன்னுடைய ஜீவியத்திலும் காட்டும்படி உபாத்தியாயர்கள் தூண்டிவிடுவார்கள். தாங்கள் படித்த நற்காரியங்களைத் தங்கள் ஜீவியத்தில் காண்பிக்கவேண்டுமென்று ஜப்பானியர் படித்திருக்கும், இந்தப் பாடத்தின் மூலமாய்த்தான் ஜப்பான்தேசம் தன்னுடைய தற்கால பதவியை அடைந்திருக்கிறது. இன்னும் அத்தேசம் விர்த்தியடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. அந்தத் தேசம்மாத்திரமல்ல, எந்தத் தேசத்தார் சுயநலப் பிரியராய் இராமல் தங்கள் தேசத்துக்கு உண்மையும், சாஸ்வதமுமான நன்மை பயக்கும் விஷயங்களில் மனதைச் செலுத்தி அதற்காகப் பிரயாசப்பட்டு வருகிறார்களோ அத்தேசமும் இத்தேசத்தைப்போல் முன்னுக்கு வருமென்பது திண்ணமே.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ஆம் ஜூன்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | வெளி. | 2. 12—29 | 11 | செ. | வெளி. | 9. 1—12 | 21 | வெ. | வெளி. | 14. 13—20 |
| 2 | ஞா. | ,, | 3. 1—13 | 12 | பு. | ,, | 9. 13—21 | 22 | ச. | ,, | 15. |
| 3 | தி. | ,, | 3. 14—22 | 13 | வி. | ,, | 10. | 23 | ஞா. | ,, | 16. 1—11 |
| 4 | செ. | ,, | 4. | 14 | வெ. | ,, | 11. 1—10 | 24 | தி. | ,, | 16. 12—21 |
| 5 | பு. | ,, | 5. | 15 | ச. | ,, | 11. 11—19 | 25 | செ | ,, | 17. 1—7 |
| 6 | வி. | ,, | 6. 1—8 | 16 | ஞா. | ,, | 12. 1—9 | 26 | பு. | ,, | 17. 8—18 |
| 7 | வெ. | ,, | 6. 9—17 | 17 | தி. | ,, | 12. 10—17 | 27 | வி. | ,, | 18. 1—10 |
| 8 | ச. | ,, | 7. 1—12 | 18 | செ. | ,, | 13. 1—9 | 28 | வெ. | ,, | 18. 11—24 |
| 9 | ஞா. | ,, | 7. 13—17 | 19 | பு. | ,, | 13. 10—18 | 29 | ச. | ,, | 19. 1—10 |
| 10 | தி. | ,, | 8. | 20 | வி. | ,, | 14. 1—12 | 30 | ஞா. | ,, | 19. 11—21 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912




# மாதர் போதினி

No. 175 | ஜூலை 1912 | No. 7

## A HINDU MOTHER'S SACRIFICE

## ஓர் இந்துமாதாவின் காணிக்கை

ஒருநாள் ஒரு துரைசானி கங்காநதியின் ஓரத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு இந்து பெண், சிறு பையனும் சிறு பிள்ளையும் ஆகிய தன்னுடைய இரண்டு பிள்ளைகளோடு பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். பூசை செய்கிறாளோ தியானம் பண்ணுகிறாளோ என்று நினைத்து அவளுக்கு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்கள்.

சற்றுநேரமானபின்பு அந்தம்மாள் மறுபடியும் அவ்வழியாக வந்தார்கள். அந்தப் பெண் அப்படியே பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தாலும் ஒரு பிள்ளை மாத்திரம் அவளோடுகூட இருந்தது. அந்தத் தாயைப் பார்த்து 'உன் மகன் எங்கே?' என்று கேட்டார்கள்.

அதற்கு அவள் 'நான் அவனைக் கங்காநதியிலே எறிந்துவிட்டேன். நான் காளியம்மாளுக்குப் பலிசெலுத்தவேண்டியதாய் இருந்தது' என்று சொன்னாள்.

துரைசானி இதைக்கேட்டுப் பிரமித்து அதிக ஆச்சரியப்பட்டார்கள். பலிசெலுத்தவேண்டுமானால் 'சிறு பெண்ணைக் கொடுக்காமல் அருமையான ஒரே மகனை ஏன் கொடுத்துவிட்டாள்? 'அப்படியிருந்தாலும் உன் மகனை ஏன் கொடுத்தாய்? அவ்வளவு பெரிய பலி அவசியமா?' என்று துக்கத்துடன் கேட்டார்கள்.

அந்த ஏழைப் பெண் தலைநிமிர்ந்து அந்த அம்மாளைப் பார்த்து 'எனக்கு எல்லாவற்றையும்விட அருமையானதை என் தேவனுக்குக் கொடுக்காமல் இருக்கலாமா?' என்று கண்ணீரோடு சொன்னாள்.

அந்தம்மாள் வீட்டுக்குப் போய்க் கங்காநதியின் ஓரத்தில் நடந்த சங்கதியை அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு அறிவித்தார்கள். அந்த

இந்து பெண்ணுடைய பக்தி எல்லாருக்கும் ஆச்சரியத்தை உண்டு பண்ணினது.

அந்தக்காலம் அறுப்புக்காலம். கிறிஸ்தவர்கள் அறுப்பின் பண்டிகை ஆசரித்தார்கள். அந்த வருஷம் மழை சரியாய்ப் பெய்யாததினால் குடியானவர்களுடைய நிலம் நன்றாய் விளையவில்லை. அப்



படியிருக்க வேதமுத்து என்கிறவன் ஸ்தோத்திரக் காணிக்கை கொண்டுவரவேண்டிய நாளிலே 30 படி அரிசி மாத்திரம் தன் காணிக்கையாகக் கொடுக்கப்போனான். ஆனாலும் அவன் இந்தச் சங்கதியைக் கேட்டு 'எனக்கு எல்லாவற்றையும்விட அருமையானதை என் தேவனுக்குக் கொடுக்காமல் இருக்கலாமா?' என்று தனக்குள்ளே சற்று யோசித்து, 30 படிக்குப் பதிலாக 100 படி அரிசியைக் கொடுக்கத் தீர்மானம்பண்ணினான்.

இன்னொரு வீட்டுக்காரன் வருஷந்தோறும் ஒரு கன்றுக்குட்டியைத் தேவனுடைய வேலைக்கென்று கொடுக்கிறது வழக்கமாயிருந்தது. அவனும் இந்த ஏழைப் பெண்போலவே செய்ய நினைத்துக் கன்றுக்



குட்டிக்குப் பதிலாக ஒரு புஷ்டியான பசுவை ஸ்தோத்திரக் காணிக்கையாகக் கொடுத்தான்.

அந்த இந்து பெண்ணின் பக்தியை இங்கிலாந்து தேசத்திலும் சிலர் கேட்டார்கள். இவர்களில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் சிறு வயசிலிருந்து தேவனைத் தேடி அவருடைய பிரமாணத்தின்படி செய்தவன்தான். இனி ஏதோ ஒரு சமயத்தில் 'நானும் தேவனுடைய திராட்சத்தோட்டத்துக்குப்போய் அவருடைய திவ்விய வேலை செய்வேன்' என்று தீர்மானம்பண்ணினாலும் முன் இங்கே தான் நல்ல பெயர் பெற்று, பெரிய சம்பளம் வாங்கி முன்னுக்கு வரவேண்டும் என்று இருந்தான்.

இப்பொழுதோ அந்த ஏழைத் தாயின் வார்த்தைகள் அவனுடைய
மனசுக்குத் திரும்பத் திரும்ப வந்தன. 'எனக்கு எல்லாவற்றையும்
விட அருமையானதை என் தேவனுக்குக் கொடுக்காமல் இருக்க
லாமா?' உலக ஆசைகளோடு அவன் சிலநாளாக யுத்தம்செய்தபின்பு
அவன் மிஷன் வேலைக்கென்று தன்னை ஒப்புக்கொடுத்தான். அவன்
தென் ஆப்பிரிக்காவுக்குப் போய், பி. ஏ. பரீட்சை கொடுத்திருந்தபோ
திலும் அங்கே சொற்ப சம்பளம் வாங்கித் தேவனுடைய அன்பையும்
இரட்சிப்பின் வழியையும் அங்கிருக்கிற அஞ்ஞானிகளுக்குச் சொல்லி
இப்பொழுது ஜீவனம்பண்ணுகிறான்.

கிறிஸ்தவ சகோதரிகளே! அந்த அஞ்ஞானப் பெண்ணின் கேள்வி உங்கள் மனசிலே பதியவேண்டும். நீங்கள் உங்கள் ஆண்டவராகிய தேவனுக்கு அருமையான காணிக்கை செலுத்துகிறீர்களா?

வேலைசெய்யவேண்டிய சமயமும், காணிக்கை கொடுக்கவேண்டிய சமயமும் வரும்போது நீங்கள் ஜெபம்பண்ணி அந்தக் கேள்விக்குச் சரியான உத்தரம் கொடுங்கள்.


## STORY OF GUNAMANI

### குணமணி கதை

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறி
வித்து, ரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம்பண்ணு
கிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்
கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. ஏசா. 52. 7.

ஆசியாவின் நந்தவனமாகிய இந்தியாவின் தென்கோடியில் மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் குற்றலம் என்ற ஒரு சிற்றூர் இருக்கிறது. அவ்விடத்திற்கு ஐரோப்பியர் குளிர்ச்சிக்காக

வும், வியாதியஸ்தர் சௌக்கியத்திற்காகவும், ஐசுவரியவான்களும் உத்தியோகஸ்தர்களும் சந்தோஷம் கொண்டாடும்படியாகவும் போவார்கள். ஆனால் இந்துக்கள் அதைப் புண்ணியஸ்தலமாக மதித்துத் தீர்த்தமாட, இந்தியாவின் நாலுதிசைகளிலுமுள்ள ஏனையோர் அங்குச் சென்று பெருங்கூட்டமாகக் கூடி ஜாதிபேதமின்றிச் சகலரும் ஏகோபித்துத் திருவிழாக்கொண்டாடித் தீர்த்தமாடிக் காணிக்கை செலுத்திக் களிப்புற்றுத் தத்தம் இல்லிடம் ஏகுவார். இத்திருவிழாக்க



ளொன்றிலே போய் மலைக்காட்சி ஜனக்காட்சி பார்ப்பதுமன்றிப் பூர்வீக மதானுசாரங்களைக் கவனித்து எல்லவர்க்கும் யேசு ரட்சகரின் மாட்சிமையைச் சாட்சியாகக் கூறி அறிவித்துவரும்படி விரும்பிய வேதாபிமானி தன்னுடைய சீஷனாகிய கீதமணி என்பவரை அழைத்துக்கொண்டு அங்கே போயிருந்தனர். அங்கே மலையிலிருந்து பளிங்குபோல் மின்னிக்கொண்டும், பாம்புபோல் வளைந்து வளைந்து பேரிரைச்சலிட்டும் விழும் நீர்வீழ்ச்சியைக் கண்டு களிப்புற்றுச் சிருஷ்டி



கர்த்தாவின் மாட்சிமையைச் சிந்தித்து, கன்மலையிலிருந்து இவ்வளவு பெருக்கான நீர் ஓடச் செய்கிறவரே என் கல்லான உள்ளம் கரைந்து உம் கல்வாரிப்பெருக்கின் அன்பால் வழிந்தோடச் செய்யுமென ஜெபித்து, அவ்விடம்விட்டுப் பெரும் ஜனக்கூட்டத்தைக் கடந்து அதற்கு அடுத்தாற்போலிருக்கும் இந்துக்களின் குற்றாலநாதர் கோயிலும் அதற்கடுத்த மடங்களும் இருக்கக் கண்டார். அவற்றின் மேல்பக்கத்திலே ஒரு அறையிலே முப்பது குடம் தண்ணீர் பிடிக்கும் ஒரு கொப்பறையிலே மூன்று முழநீள அகப்பையிட்டு, தீ எரித்துக்கொண்டிருக்கிற அந்தணரைக் கண்டு அவ்விடம்போய் அதென்னவென்று வினாவ, அவர் சுவாமிக்குக் குடிநீர் (கஷாயம்) போடுகிறேன் என்றார். அதாவது சந்தனக்கட்டை, லவங்கம், கருவாப்பட்டை, கஸ்தூரி, தேவதாரம், கொட்டம், பூலாங்கிழங்கு முதலிய வாசனைச் சரக்குகளும், சுக்கு, திப்பிலி, மிளகு முதலிய திரிகடுக சரக்குகளும் போட்டுச் சுவாமிக்குக் கஷாயமாக வடித்து, அம்மனுக்கும் சுவாமிக்கும் அபிஷேகம் செய்விக்கிறது என்று சொல்லி, 'குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மனுக்கும் வற்றாக் குடிநீரும் மாறாத் தலையிடியும்' என்ற பாட்டைக் கேட்டிலீரோ என்றார்.

அதுகேட்டு வேதாபிமானி சுவாமிக்கே இந்தப் பாடானால் மற்றவர்க்கு என்ன கதி என்றுரைக்க அம்மடைப்பள்ளிப் பிராமணன் முகத்தைச் சுளித்து உமக்கு என்னகாணும் தெரியும். உலகின் நாலுதிசையிலுள்ள நாலு வருணத்து ஊனரும், பயித்தியக்காரரும், நோயாளிகளும் இந்த ஸ்தலத்தில் வந்து தங்கள் நோய் தீர்ந்துபோகிறார்களே? நீர் என்னத்தைக் கண்டீர். நம் முற்பிறப்பிலும் இனிப் பிறக்கும் அவதாரங்களிலுமுள்ள எல்லாப் பாவங்களும் தீர இங்கே வந்து ஸ்நானம்செய்து போவார்கள். தங்கள் பாவத்தைப் போக்கடிக்க இதைப்போன்ற ஸ்தலம் வேறே கிடையாது என்றார்.

அதற்கு வேதாபிமானி, இந்துக்களாகிய நீங்கள் காசிக்கும் ராமேசுவரத்திற்கும் போவோமென்று சொல்வது தான் எனக்குத் தெரியும். இந்தக் கஷாயம் எவ்வளவு காலமாய்ப் போடுகிறீர் என்று கேட்க, அந்தணர் கோவிலுண்டான நாள்முதல், தினசரி இரவும் பகலும் சுவாமிக்குப் போடுகிறதைவிட வேறு என்ன வேலை என்று சொன்னார்.

அதற்கு வேதாபிமானி குற்றாலநாதர் தலையிடிக்கு வற்றாக் குடிநீர் போட்டும் தலையிடி மாறவில்லையே என்பதுதான் எனக்கு விசாரம். இருக்கட்டும். என்னுடைய வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும். என்னுடைய பாட்டன் உம்மைப்போன்ற ஒரு இந்து. அதிலும் ராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களை வாசித்துக் கற்றறிந்தவர்.

கர்த்தாவின் மாட்சிமையைச் சிந்தித்து, கன்மலையிலிருந்து இவ்வளவு பெருக்கான நீர் ஓடச் செய்கிறவரே என் கல்லான உள்ளம் கரைந்து உம் கல்வாரிப்பெருக்கின் அன்பால் வழிந்தோடச் செய்யுமென ஜெபித்து, அவ்விடம்விட்டுப் பெரும் ஜனக்கூட்டத்தைக் கடந்து அதற்கு அடுத்தாற்போலிருக்கும் இந்துக்களின் குற்றாலநாதர் கோயிலும் அதற்கடுத்த மடங்களும் இருக்கக் கண்டார். அவற்றின் மேல்பக்கத்திலே ஒரு அறையிலே முப்பது குடம் தண்ணீர் பிடிக்கும் ஒரு கொப்பறையிலே மூன்று முழநீள அகப்பையிட்டு, தீ எரித்துக்கொண்டிருக்கிற அந்தணரைக் கண்டு அவ்விடம்போய் அதென்னவென்று வினவ, அவர் சுவாமிக்குக் குடிநீர் (கஷாயம்) போடுகிறேன் என்றார். அதாவது சந்தனக்கட்டை, லவங்கம், கருவாப்பட்டை, கஸ்தூரி, தேவதாரம், கொட்டம், பூலாங்கிழங்கு முதலிய வாசனைச் சரக்குகளும், சுக்கு, திப்பிலி, மிளகு முதலிய திரிகடுக சரக்குகளும் போட்டுச் சுவாமிக்குக் கஷாயமாக வடித்து, அம்மனுக்கும் சுவாமிக்கும் அபிஷேகம் செய்விக்கிறது என்று சொல்லி, 'குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மனுக்கும் வற்றாக் குடிநீரும் மாறாத் தலையிடியும்' என்ற பீட்டைக் கேட்டிலீரோ என்றார்.

அதுகேட்டு வேதாபிமானி சுவாமிக்கே இந்தப் பாடானால் மற்றவர்க்கு என்ன கதி என்றுரைக்க அம்மடைப்பள்ளிப் பிராமணன் முகத்தைச் சுளித்து உமக்கு என்னகாணும் தெரியும். உலகின் நானாதிசையிலுள்ள நாலு வருணத்து ஊனரும், பயித்தியக்காரரும், நோயாளிகளும் இந்த ஸ்தலத்தில் வந்து தங்கள் நோய் தீர்ந்துபோகிறார்களே? நீர் என்னத்தைக் கண்டீர். நம் முற்பிறப்பிலும் இனிப் பிறக்கும் அவதாரங்களிலுமுள்ள எல்லாப் பாவங்களும் தீர இங்கே வந்து ஸ்நானம்செய்து போவார்கள். தங்கள் பாவத்தைப் போக்கடிக்க இதைப்போன்ற ஸ்தலம் வேறே கிடையாது என்றார்.

அதற்கு வேதாபிமானி, இந்துக்களாகிய நீங்கள் காசிக்கும் ராமேசுவரத்திற்கும் போவோமென்று சொல்வது தான் எனக்குத் தெரியும். இந்தக் கஷாயம் எவ்வளவு காலமாய்ப் போடுகிறீர் என்று கேட்க, அந்தணர் கோவிலுண்டான நாள்முதல், தினசரி இரவும் பகலும் சுவாமிக்குப் போடுகிறதைவிட வேறு என்ன வேலை என்று சொன்னார்.

அதற்கு வேதாபிமானி குற்றாலநாதர் தலையிடிக்கு வற்றாக் குடிநீர் போட்டும் தலையிடி மாறவில்லையே என்பதுதான் எனக்கு விசாரம். இருக்கட்டும். என்னுடைய வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும். என்னுடைய பாட்டன் உம்மைப்போன்ற ஒரு இந்து. அதிலும் ராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களை வாசித்துக் கற்றறிந்தவர்.



கர்த்தாவின் மாட்சிமையைச் சிந்தித்து, கன்மலையிலிருந்து இவ்வளவு பெருக்கான நீர் ஓடச் செய்கிறவரே என் கல்லான உள்ளம் கரைந்து உம் கல்வாரிப்பெருக்கின் அன்பால் வழிந்தோடச் செய்யுமென ஜெபித்து, அவ்விடம்விட்டுப் பெரும் ஜனக்கூட்டத்தைக் கடந்து அதற்கு அடுத்தாற்போலிருக்கும் இந்துக்களின் குற்றாலநாதர் கோயிலும் அதற்கடுத்த மடங்களும் இருக்கக் கண்டார். அவற்றின் மேல்பக்கத்திலே ஒரு அறையிலே முப்பது குடம் தண்ணீர் பிடிக்கும் ஒரு கொப்பறையிலே மூன்று முழநீள அகப்பையிட்டு, தீ எரித்துக்கொண்டிருக்கிற அந்தணரைக் கண்டு அவ்விடம்போய் அதென்னவென்று வினவ, அவர் சுவாமிக்குக் குடிநீர் (கஷாயம்) போடுகிறேன் என்றார். அதாவது சந்தனக்கட்டை, லவங்கம், கருவாப்பட்டை, கஸ்தூரி, தேவதாரம், கொட்டம், பூலாங்கிழங்கு முதலிய வாசனைச் சரக்குகளும், சுக்கு, திப்பிலி, மிளகு முதலிய திரிகடுக சரக்குகளும் போட்டுச் சுவாமிக்குக் கஷாயமாக வடித்து, அம்மனுக்கும் சுவாமிக்கும் அபிஷேகம் செய்விக்கிறது என்று சொல்லி, 'குற்றாலநாதருக்கும் குழல்வாய்மொழி அம்மனுக்கும் வற்றாக் குடிநீரும் மாறாத் தலையிடியும்' என்ற பீட்டைக் கேட்டிலீரோ என்றார்.

அதுகேட்டு வேதாபிமானி சுவாமிக்கே இந்தப் பாடானால் மற்றவர்க்கு என்ன கதி என்றுரைக்க அம்மடைப்பள்ளிப் பிராமணன் முகத்தைச் சுளித்து உமக்கு என்னகாணும் தெரியும். உலகின் நானாதிசையிலுள்ள நாலு வருணத்து ஊனரும், பயித்தியக்காரரும், நோயாளிகளும் இந்த ஸ்தலத்தில் வந்து தங்கள் நோய் தீர்ந்துபோகிறார்களே? நீர் என்னத்தைக் கண்டீர். நம் முற்பிறப்பிலும் இனிப் பிறக்கும் அவதாரங்களிலுமுள்ள எல்லாப் பாவங்களும் தீர இங்கே வந்து ஸ்நானம்செய்து போவார்கள். தங்கள் பாவத்தைப் போக்கடிக்க இதைப்போன்ற ஸ்தலம் வேறே கிடையாது என்றார்.

அதற்கு வேதாபிமானி, இந்துக்களாகிய நீங்கள் காசிக்கும் ராமேசுவரத்திற்கும் போவோமென்று சொல்வது தான் எனக்குத் தெரியும். இந்தக் கஷாயம் எவ்வளவு காலமாய்ப் போடுகிறீர் என்று கேட்க, அந்தணர் கோவிலுண்டான நாள்முதல், தினசரி இரவும் பகலும் சுவாமிக்குப் போடுகிறதைவிட வேறு என்ன வேலை என்று சொன்னார்.

அதற்கு வேதாபிமானி குற்றாலநாதர் தலையிடிக்கு வற்றாக் குடிநீர் போட்டும் தலையிடி மாறவில்லையே என்பதுதான் எனக்கு விசாரம். இருக்கட்டும். என்னுடைய வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும். என்னுடைய பாட்டன் உம்மைப்போன்ற ஒரு இந்து. அதிலும் ராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களை வாசித்துக் கற்றறிந்தவர்.

வன் வரவையும் அதன் கதிர்களின் சோபிதாலங்கிர்தத்தையும் கவ
னித்தாயா என்றார். மேலும் அதின் ஜோதி தண்ணீரில் பிரதிவிம்
பிக்கிறபோது அதின் காட்சி எத்தனை மாட்சிமையானது என்றும்,
இதைச் சிருஷ்டித்த கடவுளும் இதிலும் கோடி சூரியப்பிரகாசமா
யிருப்பார்; அவரைப் பாவிகள் எப்படித் தரிசிக்கக்கூடும் என்கி
றதுதான் அதிசயம். அதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால், இச்
சூரியனானது உலகமுண்டான காலந்தொடங்கி, தான் உண்டாக்கப்
பட்ட நிமிஷம்முதல் தன் வேலையை ஒழுங்காய்ச் செய்கிறது. ஒரு
நாளாவது அதின் உதயமும் அஸ்தமிப்பும் நின்றுபோனதுமில்லை,
மாறிப்போனதுமில்லை. ஆனால் சிருஷ்டிகளுக்கெல்லாம் மேலான
மனுஷனோ தன் அற்பஜீவியத்தில் எவ்வளவு ஒழுங்கற்றவனும் நிலை
யில்லாதவனுமாயிருந்து, தன் சிருஷ்டி கர்த்தாவின் சித்தத்தின்படி
நடக்காமல் போகிறான் என்று கீதமணிக்கு மனதில் பதியும்படி
சொன்னார். அதற்கு அவன் ஆம் அது மெய்தான், பவுல் அப்போஸ்
தலனும் நன்மைசெய்ய வேணுமென்கிற விருப்பம் எனக்கு இருக்
கிறது; ஆனால் நடப்பிக்குதலைக் காணேன் என்கிறார். ஆவி மன
துள்ளது, மாமிசமோ பலனற்றிருக்கிறது என்று இயேசு சுவாமியும்
சீஷரைப் பார்த்துச் சொன்னாரே என்றான். அதற்கு வேதாபிமானி
நம்மில் நல்விருப்பத்தையும் செய்கையையும் உண்டுபண்ணுகிறவர்
தாமே கிறிஸ்தேசுவின் நாள்மட்டாய் நம்மைச் செம்மையான பாதை
யில் நடத்தியருள்வாராக என மொழிந்தார்.

அதற்குள்ளாக அங்குள்ளவர்கள் தேரோட்டம் பார்க்கப் புறப்பட்
டார்கள். சீஷனும் வேதாபிமானியும் அவர்களுடனே வழிநடந்து
தென்காசி சேர்ந்தார்கள். வடகாசி பார்த்த ஒருவர் இந்நகரைக் கவ
னித்து இது காசிக்கு ஒப்பாயிருப்பதால் தென்காசி என்று அழைத்
தாராம். அந்த ஊரைப் பார்த்தால் பெரிது என்றாலும் தீயால் வெந்த
மொட்டைக்கோபுரமுள்ள சிவாலயம் ஒன்று உண்டு. கண் குருடு என்
றாலும் நித்திரைக்குக் குறைச்சலா என்றபடி கோபுரம் மொட்டை
யென்றாலும் திருவிழாக்களுக்குக் குறைவில்லை. தீபாவளி, திருக்கலி
யாணம், தேரோட்டம், தெப்பத்திருவிழா முதலியவற்றிற்குக் குறை
வில்லை. தாசிகள் பாடும், பிராமணாள் பங்கும் தகுந்தபடி திருப்தியா
யிருக்கும். இப்படியாகத் தேரோட்டத்தன்று ஏறக்குறைய 30 அடி
உயரமுள்ளதாய் மரத்தில் சித்திரவேலை செய்துள்ள பெரிய தேரில்
சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய நிறமுள்ள துவஜங்கள் கட்டி, வஸ்திரங்
களால் அலங்கரிக்கப்பட்ட பாவைகள், பொம்மைகள் நிறுத்தி, யாழிகுதி
ரைகள் பாய்ச்சலில் நிற்க குஞ்சங்கள் கட்டி, வெண்கவரிகள் பிடித்துத்
தாசிகள் நிற்க, அவற்றினுள்ளே பருத்த கண்ணும், பெருத்த தலையும்,



நீண்டபல்லும், நெடியமூக்கும், குறுகியகழுத்தும், கையில் சூலாயுதமும்
பிடித்த பாவனையாய்ச் செய்யப்பட்டுள்ள விக்கிரகத்துக்குப் பட்டா
டைகள் உடுத்தி, உட்காரவைத்துப் புஷ்பமாலைகள் சாற்றிப் பொட்
டிட்டு வெகு காம்பீரமாய் வைத்திருந்தது. அதற்குமுன்னே மேளதாள
வாத்தியங்கள், நாகசுரமெட்டுகள், பூசாரிமார் ஆட்டங்கள், எள்ளைப்
போட்டாலும் கீழே விழாமல் தங்கும்படி தெருநிறைந்த ஜனங்களும்,
ஏனையோரின் கரகோஷங்களும் பார்க்க வெகுவிமரிசையாயிருந்தாலும்,
தேரோடாது நிலையில் நிற்பதுபற்றிக் காலதாமதத்தால் ஜனங்கள்
விசாரமுற்று ஒருவரையொருவர் வினவத்தொடங்கினர். அப்பொழுது
அங்கே ஒருவர் இதுகாலபரியந்தம் இங்கே வேதக்காரர் கிடையாது.
இப்போ வேதக்காரன் ஒருவன் இங்கிலீஷ் பள்ளிக்கூடம்வைத்து
நடத்துகின்றான். அதிலே இந்த ஊரின் அதிகமான பிள்ளைகள் சேர்ந்
துகொண்டது. வருஷாந்தம் வெகு சந்துஷ்டியோடு தேரிழுக்கும்
அப்பிள்ளைகள் இப்போ வேதபோதனை கேட்டுக்கொண்டு இழுக்க
மாட்டோமென்கிறார்கள். கட்டாயப்படுத்தினால் தெய்வத்திற்குத்
தேவடியாள் துணையேன். உலகத்தை நடத்தக்கூடிய சத்துவம் நம்
தெய்வத்துக்குண்டே? தேரை நடத்துவது கூடாதா? எல்லாவற்
றிற்கும் பெரிய தெய்வத்தைச் சுமந்திழுக்க எங்களால் கூடாது என
மறுத்துவிட்டனர். ஆதலால் கோவில் தருமகர்த்தா அந்த வேதக்கார
உபாத்தியாயரிடம் பிள்ளைகளுக்கு உத்தரவு கொடுக்கும்படி கேட்கப்
போயிருக்கிறார். அவர் வந்தால்தான் தேரிழுப்பார்கள் என்றார்.

அதற்கு வேதாபிமானி அப்பிள்ளைகள் மனப்படி உபாத்தியாயரும்
விட்டுவிட்டால் என்ன செய்வார்கள் என்க கோடி செலவழித்தா
வது சுவாமியைக் கோயில் புக்கச்செய்துதான் தீரும் என்றார்.

அதற்கு வேதாபிமானி தான் தன் கோவிற்குள் புக மற்றவர்
களுக்குக் கோடி செலவென்றால் நம்மெல்லாரையும் சுவர்க்கம் சேர்க்க
எத்தனை செல்லும். தன்னைக்கொண்டு செல்ல ஏலாத தெய்வம் நம்
மைத் தாங்க ஏலுமா?

'கண்டறிந்துணர்ந்து பாருங்கள். நமைப் படைத்த கடவுளண்டை
யில் சேருங்கள்' என்று நளினமா யுரைத்துவிட்டுக் கீதமணியைக் கூட்
டிக்கொண்டு வேதக்கார உபாத்தியாயர் வீட்டைத் தேடிப்போனார்.
அவர் கிறிஸ்தவனாதலால் ஊருக்கு வடக்கே ஒதுங்கி அவர் வீடு
இருந்தது. அவர் பார்வைக்குச் சாந்தமும், அன்பும், அறிவும், அருளு
முள்ளவராகக் காணப்பட்டார்.

தூரத்திலே வேதாபிமானியையும் கீதமணியையும் கண்டதும்,
ஆபிரகாமைப்போல் எதிர்கொண்டுவந்து உபசரித்து, இந்த இருள்
நிறைந்த ஊரில் நீங்களிருவரும் எங்கிருந்து வந்தீர்கள்? உங்களைப்

பார்த்தால் எங்களுடனே சேர்ந்தவர்கள் (கிறிஸ்தவர்கள்) போலிருக்கிறது. நிரம்பச் சந்தோஷம் என்று மனைவியைக் கூப்பிட்டு, கால்கை சுத்தம்பண்ண ஜலம் கொடுத்துப் பசியாற்றி, உட்காரவைத்து வந்த காரியம் விளம்பும் என்றனர்.

அதற்கு வேதாபிமானி அகமகிழ்ந்து பரதேசிகளாய் வந்த இடத்தில் உங்களைக் கண்டது மெத்தவும் சந்தோஷம். உம்மைக் காணுமுன், உமது கிரியையைக் கண்டு உம்மைப் பார்க்க வந்து, உண்மை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உமது ஊழியத்தையும், அதின் பலாபலனையும் எனக்கு விரித்துரைத்தால் நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன் என்றார். அதற்கு உபாத்தியாயர், கேளும், பெரியவரே, உமக்கு வயதிற்குச் சிறியவனான நான் என்ன சொல்லமாட்டுவேன். ஆயினும் அவற்றை விரித்துரைக்கச் சமயமில்லாது, பள்ளிக்கூட நேரமாகிவிட்டதால் 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்ற முதுமொழிக்கேற்ப நான் சுருக்கிச் சொல்லுகிறேன். அபாத்திர ஊழியனாகிய எனக்குச் சிறு பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டும் உத்தியோகம். அதிலும் அஞ்ஞானம் நிறைந்த இவ்வூரில் மெய்ஞ்ஞான ஒளி வீசச் செய்யவேணுமென்பதே நாங்கள் பள்ளிக்கூடம் வைப்பதின் கருத்து.

(இன்னும் வரும்.)

## THE GOOD OLD TIMES

## பாட்டன் காலம்

தற்கால வாலிபர்கள் எதாவது பேசினால் வயது சென்றவர்கள் தங்கள் பழையகாலத்தைச் சிலாகித்தும் இக்காலத்தைத் தாழ்மைப்படுத்தியும் பேசிவருவதை நாம் கேட்டுவருகிறோம். அந்தச் சமயத்தில் வாலிபர்கள் சிறிது கோபித்தவர்களாய் 'அதெல்லாம் பாட்டன் காலம்' என்று பெரிதும் இகழ்வதுமுண்டு. ஆனால் இந்த இரண்டில் எது வாஸ்தவம் என்பதை அறிந்துகொள்வது சுலபம். இப்போது நாம் அநுபவித்துவரும் நன்மைகள் சுகங்கள் அந்தக் காலத்தில் உண்டா என்பதைச் சிறிது எண்ணினால் போதும். அந்தப் 'பாட்டன் காலத்தைவிட இப்போது சுகம் அதிகம் என்பது திண்ணமாய்த் தெரியவரும்.

முதலாவது இக்காலத்தைப்போலச் சுலபமாய்ப் போகவா நல்ல பாதை உண்டா? ஏதோ காட்டுத்தடமானாலும் சரி, முள்ளுக்கு நல்ல பாதரக்ஷை போட்டு நடக்கலாம் என்றால் வழியில் திருடர் பயம் சொல்லிமுடியுமா?



இப்போது எந்தவிதத்தில் கஷ்டம்? எதிலும் சுகம். காருண்ய பிரிட்டிஷ் துரைத்தனம் தேவ ஆசீர்வாதத்தால் நமக்குக் கிடைத்தது சகல சுகம் கூடவே கிடைத்தது. வயதுசென்றவர்கள் நன்றாய் யோசித்தால் தங்கள் முன்காலம் உபயோகமில்லை; இப்போது நல்ல நல்ல அநுகூல சாதனங்கள் நம்முடைய சுகத்துக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து துரைத்தனத்துக்கும் பரமபிதாவுக்கும் நன்றி செலுத்தி நன்மை பெறுவார்களாக.

## ADVICE FOR DAILY LIFE

## குடும்ப ஜீவியத்திற்கடுத்த புத்திமதிகள்

(தொடர்ச்சி)

நம் செய்கைகள் எல்லாவற்றிலேயும் நேர்மையும் உண்மையு
முள்ளவர்களாயிருப்பதும், ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிறது
மாகிய கடனேயல்லாமல் மற்றொன்றிலும் கடன்படாதிருப்பதும்
நமது கடமை என்று உணருகிறோம்.

'மனுஷனே! நன்மை இன்னதென்று தேவன் உனக்கு அறிவித்
திருக்கிறார்.'

'நியாயத்தைச் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, தேவனுக்கு
முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதேயல்லாமல் வேறே என்னத்தை
உன்னிடத்தில் கேட்கிறார்?

பொய் நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்
கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்.

'திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து
கொள்ளப்படத்தக்கது.'
பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்.'

'தேவனை அவமானப்படுத்துகிறதையும், நமது சொந்த ஆத்துமாக்
களுக்கும், மற்ற மனுஷருடைய ஆத்துமாக்களுக்கும் தீங்குசெய்கிற
எவ்வித மனோரதத்தையும், வேடிக்கையையும் அல்லது இன்பத்தை
யும் விலக்கிவிடுவது நமது கடமை என்று உணருகிறோம்.

ஆதலால், அந்நிய பண்டிகைகளில் அல்லது தமாஷ்களில் பங்கு
பெறுவதும், நம்முடைய சகோதரர்களில் அநேகரை இடறப்பண்ணின
மது வஸ்துவாகிய பானத்தையும், அபினி, கஞ்சா முதலியவற்றையும்
உபயோகிப்பதுங்கூடா.

எவ்விதமான சூதாட்டமும் நீதி கேடுள்ளது என்று எண்ணுகி
றோம்: ஏனெனில், நம்மைச் செல்வவான்களாக்கத் தேடிக்கொண்டி

ருக்கையில் இன்னொருவரை வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். கடைசியாக, ‘வார்த்தையினாலாவது, செய்கையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.’

## TEMPERANCE SONG

## மதுபானப் பாடல்

### பல்லவி

குடிவேண்டாம் கிறிஸ்தவரே மதுபானம் கொடிது
கொடிது விட்டு விடுமதால் கெடுதியே

1. கெடுமதியாலே நீங்கள் கேட்டுக்குள்ளாகவேண்டாம்
படுவிஷமுள்ள மதுபானத்தில் ஆசைவைத்துக் குடியாதேயும்
அதால் மடியாதேயும் ஐயா துடியாதேயும் அது
கொடிய சர்ப்பமல்லவா— குடி.

2. யாருக்கு வேதனை யாருக்குத் தரித்திரம்
யாருக்குப் புலம்பல்கள் யாருக்குக் காயங்கள் யாருக்குத் துக்கம்
யாருக்கு வெட்கம் யாருக்கு ரத்தக்கண்
யாருக்கு வழக்குகள் குடிகாரருக்கல்லவோ!— குடி.

3. பிராந்திதனைக் குடித்து வாந்திமிக எடுத்துச் சோர்ந்து
உடல்துடித்துத் தேம்பிக் கிடக்கவேண்டாம்
தொல்லையே சுகம் இல்லையே எந்தன் சொல்லையே நம்பி
பொல்லா மதுவைத் தள்ளும்— குடி.

4. விருந்துக் குடியர்களே மருந்துக் குடியர்களே
வேடிக்கைக் குடியரே வாடிக்கைக் குடியரே விட்டுவிடும்
அது கெட்ட விஷம் பல நஷ்ட நிசம் அதால்
பட்ட பாடு போதாதோ— குடி.


5. போக்குச் சாக்குகள் சொல்லும் யோக்கியக் குடியரே
பாக்கியந்தரும் வேத பாக்கியத்தையுணர்ந்து நீக்கும் ஐயா
குடிபோக்கும் ஐயா அதால் ஆக்கம் ஐயா தேவ
ஆக்கினைக்குத் தப்புவீர்— குடி.

6. யேசு சபையிலுள்ள நேச சகோதரரே
நேச மதுவினாலே மோசம் போகாதிருங்கள்
தோஷம் ஐயா பரிகாசம் ஐயா அதால் கிலேசம் ஐயா
மெய்யாய் இதை யோசியும் யோசியுமே— குடி.



7. இம்மை மறுமை வாழ்வின் இன்பங்களைத் தடுக்கும்
ஈன மதுவினாலே உமக்கு நலம் ஏதையா சுகம்வேதையா
உதவாதையா சொன்னேன்
சாதனை செய்யாதேயும்— குடி.

8. கஞ்சா லேகியம் அபின் அஞ்சாமல் தின்னுவோரே
நெஞ்சார நஞ்சு தின்னும் சஞ்சலப்படாதேயும்
நண்பரே எந்தன் அன்பரே என் சொல் நம்புமே
ஐயோ வம்பாய் அழியாதேயும்— குடி.



## THE USE OF WORMS

## புழுக்கள்

இப்பூமியில் விளையும்படியான புல் பூண்டு முதலியவைகளுக்கு வாயு ஜலம் இரண்டும் இல்லாமல் முடியாது என்பது யாருக்கும் தெரியும். ஆனால் இவ்வளவு உறுதியாயுள்ள பூமிக்குள் செடிகள் தங்கள் வேர்களைச் செலுத்துவது எப்படிச் சாத்தியமாகின்றது? இதற்கு உதவுவன புழுக்கள் என்பது எத்தனைபேருக்குத் தெரியும். புழுக்களே பூமியின் கடினமான பாகத்தைச் சிறு சிறு துண்டுகளாக உடைக்கின்றன. இவை அப்படிச் செய்யாவிட்டால் புல்லும் முளையாது, பூண்டும் முளையாது.

இப்படி நமக்கு உதவும் புழுக்களைப்பற்றி நாம் சிறிதாவது தெரிந்திருக்கவேண்டாமா? புழுக்களில் அநேகவிதம் உண்டு. சில புழுக்கள் தண்ணீரில் வசிக்கின்றன; இன்னும் சில புழுக்கள் இதர பிராணிகளைத் தின்று ஜீவிக்கின்றன; மற்றும் சில புழுக்கள் பூமியில் குடியிருக்கின்றன. இவைகளில் மூன்றாவதான பூமியிலேயே இருக்கும் புழுக்களைப்பற்றி இங்கே சிறிது சொல்வோம். இந்தப் புழுக்களின் தேகம் பிரகாசமானதும் குழல்போன்றதுமாய் இருக்கும். இவை

களின் கால்கள் எள் அளவே இருக்கும். நம் வெறும் கண்ணுக்கு அக்கால்கள் தெரியமாட்டா; ஒரு பூதக்கண்ணாடியின் வழியாய்ப் பார்த்தால் அவை நன்றாய்த் தெரியும். அவை பக்கத்துக்கு எட்டு இருக்கின்றன. அவைகள் ரோமங்களைப்போல் மெல்லியவை. ஆதலால் சுவர்களில் ஏறும்போது பின்னால் வழுக்கி விழாமல் இருக்க உதவுகின்றன. இப்புழுக்களுக்குக் கண் இல்லை. ஆனால் இங்கே இருட்டு என்றும், அங்கே வெளிச்சம் என்றும் புழுக்கள் அறிய அவற்றின் மேல்தோல் உதவும். அது அத்தனை கூர்மையான உணர்ச்சியுள்ளது. நம்மேல் மற்றவருடைய கைகால் பட்டால் நாம் உடனே உணர்வதுபோல் புழுக்களும் தம்முடைய உடம்பில் படுவது வெளிச்சமா இருட்டா என்பதை உடனே அறிந்துகொள்ளும். குருடனுக்கு ஸ்பரிச உணர்ச்சியும் கையும்போல் உள்ளது புழுவின் தேகம். அது தன் உணர்ச்சியைக்கொண்டு தான் போகும்வழியில் ஏதாவது அபாயம் இருந்தால் அதை அறிந்துகொள்ளும். பின் தப்பித்துக்கொள்ளும். இந்தத் தோலின் உணர்ச்சியே அதற்குக் காது; வேறே காது கிடையாது. புழுவண்டை நாம் போனால் அதைத் தன் தேகத்தின் உணர்ச்சியாலேயே அறிந்து அப்பால் விலகிப்போய்விடும். நம்மைக் கண்டதும் புழுக்கள் நகர்ந்து வளைக்குள் நுழைந்துவிட்டதை நாம் பார்த்திருக்கலாம். நாம் நடப்பதால் உண்டாகும் பூமியின் சலனத்தையும் அறியக்கூடியபடி அத்தனை கூர்மையாய் உள்ளது அதன் ஸ்பரிச உணர்ச்சி. புழுக்களுக்கு மழையில் பிரியம் அதிகம். இதை அறிந்து கருங்குருவிகள் புழுக்களைப் பிடிக்க அவை இருக்கும் இடத்தில் நீர்த்துளிகளைச் சொரியும்; உடனே புழுக்களும் சந்தோஷமாய் மழை என்று வளையைவிட்டு வெளியே வரும்; குருவிகளும் உடனே அவற்றை விழுங்கிவிடும்.

புழுக்களுக்குக் காதும் இல்லை கண்ணும் இல்லை என்றதனால் அதற்கு முகரும் மூக்கும் இல்லை என்று எண்ணிவிடாதீர்கள். வாசனை அறியும் ஒருவித அவயவம் உண்டு. அதனால்தான் அது தன் உணவைத் தேடி அடைகின்றது. அதன் ஆகாரம் அநேகமாய் அழுகிப்போன தழை, புல், செத்துப்போன மற்றப் பூச்சி புழுக்கள் என்பவைகளாய் இருக்கின்றன. அழுகிய இலைகள் பூமியிலுள்ள சிறு துவாரங்களில் பாதியும் மேலே பாதியும் இருப்பதைப் பார்த்திருக்கலாம். அங்கே அந்த இலைகள் எப்படிப் போயின. புழுக்களே அவற்றை இழுத்துச் சென்றவை. அந்த இலைகளை வெளியே இழுத்தால் உள்ளே புழுக்கூடுகள் காணலாம். இந்தக் கூடுகளைப் புழுக்கள் கட்டும்விதம் வெகு விசித்திரம். துவாரத்தின் மண்ணில் புழுக்கள் தங்களுக்கு ஆகாரமாகக் கூடியவைகளைத் தின்றுவிட்டும் மற்றப்



பாகத்தை இப்புறமும் அப்புறமும் ஒதுக்கியும் ஆகின்றன. அந்தக் கூடுகளின் சுவர்கள் பூச்சுவேலை பெற்றிருக்கும். புழுக்களின்மேலிருந்து ஒருவிதப் பசைத்தண்ணீர் வடிவதுண்டு. இந்தப் பசைநீரால் கரைத்த சேறு பூசியதால் கூட்டின் சுவர் விழாமல் ஸ்திரமாய் நிற்கும். இப்படி உடம்பில் ஒருவகை நீர் ஊறுவதால் இப்புழுக்கள் சதா ஈரமாகவே இருக்கவேண்டும் என்பதாயிற்று. சுத்த வறட்சியாயிருந்தால் அவை மாண்டேபோகும். அவை குடியிருக்கும் வளைகள் நாலடி ஆழம். அகலமும் அதிகம். அடிப்பாகத்தில் பல மூலைகள் இருக்கும்.

இனி இந்தப் புழுக்களால் பூமிக்கு உண்டாகும் பிரயோஜனத்தைச் சற்றுக் கவனிப்போம். பொதுவில் இந்தப் புழுக்கள் இல்லாவிட்டால் ஒருவிதச் செடியும் முளைக்கமாட்டாது. எந்தவிதச் செடிக்கும் வேர் உண்டு. வேரும் பூமிக்கு உள்ளேயே செல்லவேண்டியது. அப்போது பூமி இரும்புபோல் கடினமாயிருந்தால் வேர் செல்லமுடியாது. இதில் புழுக்களின் உபயோகம் வருகிறது. அவை பூமிக்குள் சிறு துவாரங்களைச் செய்கின்றன. வேர்களுக்கு இருந்த தடையும் நீங்கிவிடுகின்றது. இனிச் செடிக்கு வேண்டியது ஆகாரம். அதையும் புழுக்கள் அழுகிய இலைகள் (தங்கள் உணவுக்கென்று எடுத்துக்கொண்டுபோனவை) சிறு சிறு குச்சிகள் மூலமாய் உதவுகின்றன. இவை எல்லாம் போகும்போது ஜலம் கிடைப்பதற்குத்தானா கஷ்டம்?

இப்படிக்கெல்லாம் தாவரவர்க்கத்திற்கே உதவும் சிறு புழுக்கள் பலகோடி உண்டு. இப்படிப் பூச்சி புழு முதலானவைகளையெல்லாம் கவனித்து அவற்றின் குணாகுணங்களை நன்றாய்த் தீரக் கண்டறிந்தவர் ஒருவர் இருந்தார். அவர் பேர் டார்வின். அந்த மஹாபண்டிதர் ஒரு எக்ரா நிலத்தில் இப்புழுக்கள் ஐம்பதினாயிரத்துக்குமேலேயே இருக்கும் என்றும், அவை ஒரு வருஷகாலத்தில் பத்து டன் எடையுள்ள அடிமண்ணை மேலே கொண்டுவந்து சேர்க்கும் (உழுதாற்போலாயிற்று) என்றும் கணக்கிட்டிருக்கிறார். ஆகவே இந்தப் புழுக்கள் இல்லாவிட்டால் நிலம் இரும்பேபோல் கடினமாய் இருக்கும்; துளிநீரும் உள்ளே செல்லாது. புல் பூண்டு செடி கொடி எதுவும் வேர்விட்டுத் தழைக்காது. மனிதன் உண்ண உணவின்றி அநியாயமாய் மாளவேண்டியதுதான். இப்படி நம் ஜீவனத்திற்கு ஆதாரமாயுள்ள புழுக்களுக்கு நாம் நன்றிபாராட்டுவதுடன் நமக்கு இத்தனை சௌகரியங்களைச் செய்துகொடுக்கும் அன்பான ஆண்டவனை ஸ்தோத்திரிப்போமாக.

‘அவனின்றி அணுவும் அசையாது
புழுவின்றிப் பூமியும் பிழையாது.’

## A STRANGE RACE

## விநோத ஜாதியார்

போர்னியோ தீவில் உள்ள புன்குலத்தாரைக் காட்டிலும் உலகத்தில் ஆச்சரியமான ஜனங்கள் வேறே இல்லை. அவர்களைப் பற்றிச் சொல்லும் புஸ்தகம் ஒன்றும் கிடையாது. எல்லாம் கேள்வி தான்.

அவர்களுடைய உடை மரப்பட்டையே. காட்டிலேயே திரிந்து கொண்டிருப்பார்கள். அதிலுள்ள மரங்களிலேயே படுத்துத் தூங்குவார்கள். வீடு என்பது அவர்களுக்குக் கிடையாது. சொத்தும் இல்லை. அவர்கள் அதிக வேகமாய் ஓடுவார்கள். ஒரு தாண்டில் மூன்று அல்லது நான்கு கஜம் போவார்கள். இப்படி அவர்களுடைய வேகம் அசாத்தியமானது.

அவர்கள் பிராணிகளைக் கொல்வது இன்னும் விநோதமானது. ஓர் ஊதுகுழாயின் நுனியில் அம்பைவைத்து அந்தக் குழாயைக் கையில் தட்டுவார்கள். அப்போது அந்த அம்பு குறிதப்பாமல் பாயும். நம்மைப்போல் குழாயில் அம்புவைத்து அதை வாயால் ஊதிக் குறி எய்வதில்லை.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ஆம் ஜூலை மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | வெளி. | 20. | 1—15 | 11 | வி. | ,, | 3. | 14—22 | 21 | ஞா. | ,, | 9. | 11—18 |
| 2 | செ. | ,, | 21. | 1—14 | 12 | வெ. | ,, | 4. | | 22 | தி. | ,, | 10. | 1—11 |
| 3 | பு. | ,, | 21. | 15—27 | 13 | ச. | ,, | 5. | 1—10 | 23 | செ. | ,, | 10. | 12—20 |
| 4 | வி. | ,, | 22. | 1— 9 | 14 | ஞா. | ,, | 5. | 11—20 | 24 | பு. | ,, | 11. | |
| 5 | வெ. | ,, | 22. | 10—21 | 15 | தி. | ,, | 6. | | 25 | வி. | ,, | 12. | |
| 6 | ச. | பிரசங். | 1. | 1—11 | 16 | செ. | ,, | 7. | 1—14 | 26 | வெ. | யாக். | 1. | 1—12 |
| 7 | ஞா. | ,, | 1. | 12—18 | 17 | பு. | ,, | 7. | 15—29 | 27 | ச | ,, | 1. | 13—27 |
| 8 | தி. | ,, | 2. | 1—13 | 18 | வி. | ,, | 8. | 1—11 | 28 | ஞா. | ,, | 2. | 1—13 |
| 9 | செ. | ,, | 2. | 14—26 | 19 | வெ. | ,, | 8. | 12—17 | 29 | தி. | ,, | 2. | 14—26 |
| 10 | பு. | ,, | 3. | 1—13 | 20 | ச. | ,, | 9. | 1—10 | 31 | பு. | ,, | 3. | 11—18 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# மாதர் போதினி

No. 176 ஆகஸ்டு 1912 No. 8

## ST. AIDAN AND KING OSWALD

## எய்டன் ஞானியார்

இங்கிலாந்தின் ஒரு பாகம் நார்தம்ப்ரியா எனப்படும். முன் காலத்தில் அதை ஆண்டுவந்த அரசனுக்கு ஆஸ்வால்ட் என்றொரு மகனிருந்தான். ஆஸ்வால்ட் இளமைப் பருவத்திலே அயோன என் னும் தீவில் அடைக்கலம் புகவேண்டியதாயிற்று. அயோன முன்னமேயே கிறிஸ்துவை அங்கீகரித்துப் பக்திமான்கள் நிறைந்த தீவு. ஆதலால் ஆஸ்வால்ட் அங்கிருந்த பக்தர்களிடமிருந்து பல அரிய நீதி சாரங்களைக் கற்றுத் தெளிந்தார். அப்பால் அவர் அரசனாகி மறுபடியும் நார்தம்ப்ரியா வந்து சேர்ந்தார்.

ஆஸ்வால்ட் திரும்ப வந்தபோது தாம் முன்னமே பாதிரிமார்களைக்கொண்டு போதித்திருந்த சன்மார்க்க போதனைகளையெல்லாம் குடிகள் மறந்திருக்கக் கண்டார். அவ்வளவோடு நில்லாமல் பழையபடி சந்திரசூரியர்களையும் இடிமின்னல்களையும் தேவதைகளாகக் கருதலானார்கள். இந்தப் பரிதாப நிலைமையைக் கண்ட ஆஸ்வால்ட் அதிக மன வருத்தமடைந்து, தமது உயிரைக் கொடுத்தாவது தம்முடைய குடிகளுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கவேண்டும் எனத் தீர்மானித்தார்.

அந்தப்பிரகாரமே அயோனத் தீவுக்கு ஆள் அனுப்பி ஒரு பாதிரியை வரவழைத்தார். ஆனால் அவர் ஒரு கடுமையான பிரசங்கியாக ஏற்பட்டார். ஆதலால் அவர் 'ஜனங்கள் மிகுந்த முரட்டுத்தனமுள்ள காட்டாண்டிகளாய் இருக்கிறார்கள்; அவர்களுக்கு எதையும் உபதேசிக்க என்னால் ஆகாது' என்று சொல்லித் திரும்பிப் போய்விட்டார்.

அதன்மேல் அயோனத் தீவின் பக்தர்களில் ஒருவரான எய்டன் என்பவர் 'நீங்கள் அந்த ஏழை ஜனங்களுக்குப் பக்ஷமாயும் அன்பாயும் பேசவில்லைபோல் தோன்றுகிறது. அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைப் போதிக்காமல் அவர்கள் சன்மார்க்கத்தைக் கைவிட்டுத்

துன்மார்க்கத்தைத் தழுவியிருப்பதால் தேவனுக்கு ஏற்பட்டிருக்கும் கோபாவேசத்தைச் சொன்னீர்களோ!' என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்ற பக்தர்கள் 'அப்படியானால் நம் எய்டன் ஒருவரே அவர்களைச் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு ஏற்றவர்' என்று தீர்மானித்தார்கள். 'அப்படியே ஆகட்டும்' என்று எய்டனும் மனமகிழ்ந்து அங்கேபோய் லின்டிஸ்பான் என்னும் சிறு தீவிலே தங்கியிருந்தார். இந்தத் தீவே பிற்காலத்தில் பரிசுத்தமான தீவு (Holy Island) என வழங்கலானது.

அந்தத் தீவிலேயே தனிமையாய் இருந்துகொண்டு எய்டன் தம்மிடம் வரும் சிஷர்களுக்குப் பல சன்மார்க்க போதனைகளை உபதேசித்து வந்தார். ஆஸ்வால்ட் அரசரும் அவருக்கு வேண்டிய சகாயத்தைச் செய்துவந்தார். இப்படிக் கொஞ்சகாலம் நடந்தது. பின் அவ்விடமிருந்து படித்துப்போனவர்கள் பலரும் பல பாகங்களுக்குச் சென்று கிறிஸ்தவர்களாயிருக்கக் கண்ட அவ்வவ்விடத்து ஜனங்கள் அச்சிறு தீவின் மகிமையையும் அதிலுள்ள ஆசாரியருடைய ஞானத்தையும் தெரிந்தவர்களானார்கள். எங்கே பார்த்தாலும் அந்தத் தீவின் மகிமையும் கீர்த்தியும் விளங்கிப் பிரகாசிக்கலாயின.

இப்படிக்கெல்லாம் நடக்கக் காரண புருஷராயிருந்த ஆஸ்வால்ட் ராஜாவைப்பற்றி அழகிய கதை ஒன்றுண்டு. ஒருநாள் அரசரும் எய்டனும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் 'அரமனையின் முன்வாயிலில் பிச்சைக்காரர்கள் அநேகர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்ற சங்கதி தெரியவந்தது. உடனே அரசர் அங்கிருந்த உணவையெல்லாம் எடுத்து அந்த ஏழைகள் எல்லாருக்கும் பங்கிடும்படிக்கும், இன்னும் காய்கறிகள் வைத்திருந்த வெள்ளிப் பாத்திரத்தையும் சிறு சிறு துண்டுகளாக்கி அவற்றையும் அந்தப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்துவிடும்படிக்கும் உத்தரவளித்தார். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த எய்டன் மன மிக மகிழ்ந்து அரசருடைய அழகிய கையைப் பிடித்து: 'இத்தனை நல்ல காரியத்தைச் செய்த இந்த அருமையான கை என்றென்றைக்கும் கிழப்பருவம் அடையாதிருப்பதாக' என்று வாழ்த்தினார்.

இந்தப்பிரகாரம் செல்வாக்காய் இருந்த ஆஸ்வால்ட் ராஜாவுக்குக் கொஞ்சம் கஷ்டம் சம்பவித்தது. 'நன்மை செய்வாருக்கு நாலாயிரம் தடை' என்பது சகஜந்தானே! அயலில் பென்டா என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் இன்னும் அந்தப் பழைய பொய்த் தேவதைகளையே உபவாசித்தும் கிறிஸ்தவர்களை வெறுத்தும் வந்தவன். ஆதலால் அவன் ஆஸ்வால்ட் அரசர்மேல் படையெடுத்துவந்தான். சண்டையும் மூண்டது. யுத்தகளத்திலே ஆஸ்வால்ட் ராஜா கொலை



யுண்டு மோக்ஷமடைந்தார். அவர் சாகக்கிடக்கையில் அவரைச் சூழ்ந்து நின்றவர்கள் 'கர்த்தாவே! என் குடிகளின் ஆத்துமாக்களுக்கு இரங்கும்' என்ற சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால் அந்தக் கொடிய பென்டாவானவன் அவரைக் கழுமரங்களிலே ஏற்றுவிக்கும்படி ஏவினான். அதிலேயே ஆஸ்வால்ட் அரசருடைய அங்கங்கள் அழுகலாயின. ஆனால் எய்டன் ஆசீர்வதித்த கைமாத்திரம் உயிருள்ள கையைப்போலவே அழகாக இருந்தது என்று கதை சொல்லுகிறது.

இப்படியே பாழும் பென்டா பல அக்கிரமங்கள் செய்தான். அவனால் அழிந்த ராஜ்ஜியங்கள் பல, கொலையுண்டவர்கள் அநேகர். வெகு கடைசியில் பலத்த கோட்டையொன்றை முற்றுகையிட்டான். இருக் பாடுபட்டும் சுவரையுடைத்து உள்ளே போவது அசாத்தியமாக இருந்தது. அதனால் அதைச் சுற்றிலும் விறகையடுக்கித் தீவைத்து விட்டான். காற்று மும்முரமாயடிக்க ஜுவாலை ஊருக்குள் எட்டவும் ஆரம்பித்தது. அந்த ஊரும் பாழாகும்போலிருந்தது. இவற்றையெல்லாம் தமது அறையிலிருந்துகொண்டு ஜன்னலில் கவனித்துக் கொண்டிருந்தார் எய்டன் கண்காணியார். அதையெல்லாம் சகியாதவராய் 'கர்த்தாவே! பென்டா செய்யும் கொடுமையைக் கண்ணால் பாரும்மே!' என்று கதறினார். உடனே காற்றடித்த திசையும் மாறி ஊரும் தப்பியது என்றது கதை.

இப்படிப்பட்ட கதைகள் எய்டன்பேரில் அநேகம் வழங்குகின்றன. இவற்றால் அவருக்குத் தேவன் விசேஷித்த வல்லமையைத் தந்திருந்தார் என்று நினைக்கவேண்டிவருகிறது. அவருடைய காரியம் கைகூடியது என்று சொல்லவும்வேண்டுமோ? சிறிது காலத்துக்கெல்லாம் நாடும் பழையபடி கிறிஸ்துவை நாடும் நாடாயிற்று. அப்படியே அது இன்றுவரை இருக்கிறது. அவர் பரகதியடைந்த பிறகு அவரை ஒரு ஞானி என்றே ஜனங்கள் கொண்டாடி அவர் பேரால் தேவாலயங்களும் பல கட்டுவித்தார்கள்.

## WHAT A WOMAN SHOULD KNOW

### பெண்களுக்கு ஏற்ற படிப்பு

நமது சுகத்திற்கும், அறிவிற்கும் பொருத்தமானவைகளை நம்மைப்பார்க்கிலும் நாகரீகமுடையவர்களிடமிருந்து நாம் பெறவேண்டியது அவசியமே. உலகத்தில் பற்பலர் பற்பல வழக்கங்களைப் பின்பற்றினாலும், அவைகளை நாம் பகுத்தறியாது கைக்கொள்வது நியாயமல்ல. ஒரு நாடு நல்ல சீர்திருத்தமடைந்திருந்தால், அந்த நாடு நாகரீகமுள்ள

நாடு என்று சொல்லப்படும். சீர்திருத்தம் முதல் முதல் நமது வீட்டிலும், பிறகு நமது குடும்பத்தாருள்ளும், அப்பால் நாட்டாருள்ளும் ஏற்படவேண்டும். நமது நாடு பல விஷயங்களிலும் முன்னுக்கு வரவேண்டுமானால், அப்பொறுப்பு நமது சிறுவர் சிறுமிகளைச் சேர்ந்ததேயாகும்.

நமது பெண்களுக்குக் கிடைத்தற்கரிய பெரிய உத்தியோகம் குடும்பத்தின் மாதாவாயிருத்தலேயாம். இதைவிட மேலான உத்தியோகம் வேறில்லை. நன் மக்கட் பேறே நாட்டிற்கு அணி. வைதீக ஆசாரமுள்ள தாயார் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் உலகினருக்கும் தந்தை தாயார்களுக்கும் தமக்கும் துன்பம் செய்யார்கள். முற்காலத்துப் பெண்கள், விவேகம், சாந்தம், சமயோசிதம் பார்த்துக் கருமங்களைச் செய்தல், தெய்வபக்தி, கற்பு, டம்பத்தில் ஆசைவையாமை முதலிய குணங்களையே ஆபரணங்களாகப் பூண்டிருந்தார்கள்.

இக்காலத்திலோ வரவர நகைகளே விதம்விதமாக வருகின்றன. நானா விஷயங்களையும் அறியக்கூடிய ஞானத்தைத் தேடி அடைவதில்லை. இதையறிந்தே மாணிக்கவல்லி தன் மகள் பாக்கியவதி நகைகளைமாத்திரம் ஆபரணமாக அணியாமல்,

'குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே அழகு.'

என்றபடி கல்வியழகையே மிகுதியாய் அடையவேண்டும் என்று, கலாசாலையில் மரகதம் என்பவள் வெகு சாமர்த்தியமுள்ள உபாத்தியாயனி ஆகையால் மகளை அங்கே அனுப்பினாள்.

அந்தக் கலாசாலை அநுதினமும் ஆரம்பிப்பதும் முடிப்பதும் ஆண்பிள்ளைகள் படிக்கும் கலாசாலையைப்போல் அல்ல; பெண்கள் தங்கள் தங்கள் வீட்டில் வேலைகளையெல்லாம் செய்யச் சாவகாசம் உண்டு. சாதாரணமாய்ப் படிப்பிக்கும் பாடங்களோடு நல்ல தாயாரும் அவர்களது உத்தியோகத்திற்கு வேண்டுவனவும் உடன் கற்பிக்கப்படும். உணவுப்பொருள்களின் குணங்கள் தெளிவாகச் சொல்லப்படும். 'பதார்த்தகுண சிந்தாமணி' என்னும் தமிழ் நூல் பாடமாக நியமிக்கப்பட்டது. அற்பநோய்களுக்குச் சிகிச்சை செய்யும் முறைகளும், வீடுகளைச் சுசீகரமாய் வைத்துக்கொள்வதற்கு வேண்டிய முறைகளும் கற்பிக்கப்படும். இரணவைத்திய முறைகளும் சிறிது கற்பிப்பார்கள். 'சுகாதார விளக்கமே' முதல் பாடபுஸ்தகம். சித்திரம், தையல், கும்மி, கோலாட்டம் முதலியவைகளும் முக்கிய பாடங்களாகும்.



கணக்குக்கோ கேட்கவேண்டியதில்லை. நிபுணர்கள்தான். சங்கீதமும் விசேஷமாகச் சொல்லிக் கொடுப்பார்கள்.

ஒருநாள் மரகதம் வழக்கம்போல,

'காட்டுக் களைந்து கலங்கழீஇ யில்லத்தை
யாப்பிநீ ரெங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரக நிறைய மலரணிந்
தில்லம் பொலிய வடுப்பினுட் டீப்பெய்க
நல்லது நல்வேண்டு வார்'

என்ற ஆசாரக்கோவையின் உட்கருத்தைக் கற்றுணர்ந்தவளாய்த் தன் வேலையின்மேல் கண்ணாய் நின்றாள்.

L. N. V.


## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி.)

பள்ளிபிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் படிப்பிக்கவேண்டும்; இங்கிலீஷ் கற்றுக்கொள்ளவேணும்; வேதமே காதில் படலாகாதென்ற எண்ணம். வேதம் படித்துக்கொடுத்தால் வேறு பள்ளிக்கூடம் போய்விடுவார்கள். இதினாலே எனக்கு முன்னிருந்த உபாத்தியாயர் 13 நாளிருந்துவிட்டு ஓட்டம்பிடித்தார். நானும் வாலிபனாயிருந்து இங்கு வந்ததினாலே மலைவு தோன்றினாலும், அமலனடி பணிந்து கவலையைக் கர்த்தரிடம் எறிந்து, அநுதினமும், அவருடைய ஆலோசனைபெற்று, வேலைசெய்ய ஆரம்பித்து, பிள்ளைகளுக் கிதமான பார் (Bar) விளையாட்டுகள், ஊஞ்சல் முதலியன போட்டு என் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களுக்குமாத்திரம் அந்தச் சிலாக்கியமுண்டென்றும், மற்றப் பள்ளிபிள்ளைகள் இதில் விளையாடலாகாதென, விளையாட்டில் விருப்புற்று வலியத் தினந்தோறும் அப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்துகொண்டார்கள். உபாத்திமாரை ஒழுங்கும் பட்சமுமாய் நடத்திச் சம்பளமும் முதல்தேதியிலே போட்டுவிடுவதனால் லோக்கல் பண்டு ஸ்கூல் உபாத்திமாரும் இங்கு வந்துசேர்ந்துகொண்டார்கள். ஆகவே பிள்ளைகளும் உபாத்திமாரும் சரியானபடி வரவே வேதபாடமும் இங்கிலீஷ் பாடமும் கவனிக்கப்பட்டு இனாம் கொடுக்கப்பட்டது. சரியான இங்கிலீஷ் பதம் தெளிவுறப் படிக்க இங்கிலீஷ் வேதபுத்தகமே தகுதியெனச் சொன்னதால் இங்கிலீஷ் பாஷைக்கு ஆசைப்பட்டு வேதபுத்தகம் படித்தவர்க்கு, வேதத்தின் மாட்சிமையைக் கண்டுகொண்டதால், அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்

ஞான ஜோதி வீசத் தொடங்கிற்று. அதுமுதல் பிள்ளைகள் எங்கள் வீட்டுக்கு வருகிறது, எங்கள் வீட்டு ஜெபங்களைக் கவனிக்கிறது. தங்களுடைய மார்க்கங்களிலே வெறுப்புற்று திருநீறு பூசுகிறதை நிறுத்தி, பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காய் வரவும், வேதாகம பரீட்சையில் பரிசு பெறவும் தொடங்கினார்கள்' என்றார். அதுகேட்டு வேதாபிமானி நீர் இங்கே வந்து எவ்வளவு காலம் ஆகிறது என்றார். ஏறக்குறைய 4 வருஷம் ஆகிறது என்றார். இவ்வளவு காலமும் ஏதாவது பலனுண்டா? யாராவது மார்க்கத்திற்கு வந்திருக்கிறார்களா? என்றார்.



அதற்கு உபாத்தியாயர் 'ஒரே ஒரு ஆடுமாத்திரம், அதாவது எனக்கு இரண்டாவதான உபாத்தியாயர் கிறிஸ்தவரானார். அவருக்குப் பலத்த சோதனையும், மரணத்துக்கேதுவான வியாதியும் வந்தது. அவ்வூர் அப்பாத்தகிரியும் நம்பிக்கையில்லை என்றார். இந்துக்



களோ மார்க்கத்திற்குப் போனதினால் 'தெய்வகுறையினால் சாவு வந்திருக்கிறதென்றார்கள். அவரும் எனக்கு எழுதி 'நான் சாகப்போகிறேன், செத்தாலும் என்னைக் கிறிஸ்தவ முறைமையின்படி அடக்கம் செய்துவிடக் கேட்டுக்கொள்ளுகிறேனென்று எழுதி அனுப்பினார். நானோ கண்ணீர்விட்டு என் மனைவியோடு முழங்காலிலிருந்து ஜெபம் செய்து இந்துக்கள் இடறலடையாதபடி இந்தத் தடவை எப்படியும் உம்முடைய நாமத்தை மேன்மைப்படுத்துமென்று நம்பிக்கையோடு ஜெபித்தேன். கர்த்தர் எங்கள் ஜெபத்திற்கு ஆச்சரியமாயிரங்கி, அஞ்ஞானிகள் வெட்கி இயேசுவுக்கு மகிமையுண்டாகச் சுகமருளினார். அவரை முற்றுமுடிய ஆசீர்வதிப்பாராக' என்றார்.

வேதாபிமானி அதுகேட்டுக் கடவுளை ஸ்தோத்திரித்து 'உங்களை இந்த ஊரில் வெளிச்சமாக வைத்து அஞ்ஞானிகள் மனந்திரும்ப உங்களைக் கருவியாகக் காத்தருள்வாராக' என்று ஆசீர்வாத மொழி கூறினர். பின்னும் வேதாபிமானி 'ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஞானஸ்நானம் பெற்றதுமுதல் திருச்சபையின் ஒரு அங்கமாகவும் கிறிஸ்துவின் போர்ச்சேவகனாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். ஆகையினால் தனக்கென்று மாத்திரமல்ல, கிறிஸ்துவின் ராச்சியம் பரவுதற்கென்று ஒவ்வொருவனும் தன்னால் கூடிய வேலையைச் செய்வது நமது முக்கிய கடமையாக எண்ணவேண்டும். அதற்கு முக்கிய நாலு சாதனங்களைக் கையாடவேண்டும்.

(1) ஜெபம். தனக்காக மாத்திரமல்ல இன்னும் அவரை அறியாத புறமதஸ்தருக்காகவும் அனுதினம் ஜெபம் செய்வது அவசியம்.

(2) நல்ல நடக்கையினால் மற்றவர்களை ஆதாயப்படுத்தலாம். அதாவது மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று மத் 5. 16-ல் சொல்லியிருக்கிறபடி நம்முடைய அன்பான சொல்லினாலே பிறருடைய வருத்தத்திலே உதவுகிறதினாலே அவர்களுக்குச் சமயத்திற்கேற்ற சகாயம் செய்வதினாலே, நம்முடைய சமாதானமான ஜீவியத்தினாலே அவர்களைக் கிறிஸ்துவண்டைக்கு வழிநடத்தலாம்.

(3) பிரசங்கம். நாம் தனித்தாகிலும், கூட்டமாகவாகிலும், சுயாதீனமாகவாவது இந்துக்களைக் கண்டு புத்திசொல்லிவரும் வழக்கத்தினால் கிறிஸ்துவண்டைக்கு வழிநடத்தலாம். அதிலும் தேவவசனமாகிய விதை ஏற்ற சமயத்தில் தகுந்த பலனைக் கொடுக்கும்.

(4) பணஉதவி செய்வதினால். அது எப்படி என்று கேட்பீரோ? நமக்குப் பிரசங்கிக்கத் தெரியாது. அல்லது தூர இடங்களுக்குப் போய்க் கிறிஸ்துவை அறிவிக்க ஆசையிருந்தும் இயலாது. புஸ்தகங்

கள் அச்சிட அல்லது தருமமாய் வாங்கிக்கொடுக்கத் தெரியாது. நாம் பணத்தைக் கொடுத்தால் ஐரோப்பிய குருமார் மூலமாய் அந்த வேலையைச் செய்யலாம். இப்படியாக நம்மால் கூடியளவு மற்றவர்களுக்குக் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்ல ஆத்திரப்பட்டு அது நமது கடமை என்று எண்ணிச் செய்வோமாகில், அநேக இந்துக்கள் புறமதஸ்தர்கள் நமது அருமை ரட்சகரை விசுவாசிப்பதற்குக் கிருபை கிடைக்கும். ஆகையால் உம்மைப்போலச் சுவிசேஷ ஊழியத்தின்மேல் ஆசையுள்ள அநேகரைக் கர்த்தர் நம்முடைய சபையிலும் எழுப்புவாராக' என மொழிந்தார்.

இவ்வளவையும் கவனமாய்க் கேட்ட உபாத்தியாயர் இந்த நேரத்திலே இவ்வளவு புத்தியைத் தெளியக் காட்டினதற்காக நன்றி செலுத்தி வேதாபிமானியையும் கீதமணியையும் பின்னும் இரண்டு நாள் தம்மோடு இருக்கும்படி உபசாரம்செய்து அனுப்பினார்.

வேதாபிமானியும் கீதமணியும் அருணோதயத்தில் அமலனடி பணிந்து வெயிலேறும் முன்னதாக கோவைகுளம் என்ற ஊருக்குப் போக யோசித்து வழிநடந்து சோலைகளினூடே பிரயாணஞ்செய்து விரைந்து நடந்து பேசிக்கொண்டே போனார்கள். அப்பொழுது சீஷன் மரத்திலே பழங்கள் செவேரென்று பழுத்திருப்பதையும், அதிலே குரங்குகளின் கூட்டம் கொம்புக்குக் கொம்பு தாவி விளையாடுவதையும், அந்த ஆலவிருட்சங்களின் பரிமாணத்தையும், அதிலிருந்து விழுதுகள்விட்டுப் பூமியில் ஊன்றி வெவ்வேறு மரங்கள் போல் தோன்றுவதையும் ஒரு பக்கத்தில் குஞ்சங்கள்போல விழுதுகள் கூடித் தொங்குவதையும் கண்டு களிப்புற்று வேதாபிமானியாகிய தன் குருவைப் பார்த்து, 'இந்தக் குரங்குகள் கூட்டத்திலே சில குரங்குகள் வயிற்றிலே குட்டியை வைத்திருந்தும், அது தன் குட்டியைப் பிடிக்காமல், உயர்ந்த கொம்பிலிருந்து தாழ்ந்த கொம்புக்குத் தாவி விழுந்தாலும், குட்டிகள் விழாமல் பத்திரமாய்ப் பிடித்துக்கொள்ளுகிறதே? ஒன்றாகிலும் விழுந்தால் நான் பிடித்து விளையாடலாமென்று பார்க்கிறேன். ஒன்றும் விழக்காணோமே' என்றான். அதற்குக் குரு 'இதற்குத்தான் குரங்குப்பிடி என்று சுலோகம் சொல்லுவார்கள். அதாவது குரங்குக்குட்டிகள் தம் தாயைக் கட்டிப் பிடித்துக்கொள்வதனால் சேதமின்றிப் பயமின்றி எவ்வண்ணம் காக்கப்படுகிறதோ அதுபோல் நாம் சிருஷ்டிகர்த்தாவை முழுவதுமாய் நம்பிப் பிடித்துக்கொள்வோமாகில் நாம் ஒரு ஆபத்திற்கும் பயப்படாமல் அவருடைய அடைக்கலத்தில் சுகமாயிருப்போம். நீ குரங்குக்குட்டி கிடைத்தால் விளையாட நினைத்ததுபோல் சாத்தான் நம்மைக் கெடுக்க நினைத்து எப்போ வழி விலகுவான் என்று காத்திருக்கிறான்.



தேவன் தம்மை விடாப்பிடியாய் நம்பினோரைக் கைவிடார். பூனைப்பிடி என்று ஒன்று உண்டு. அது கர்த்தர் நம்மைத் தாங்கும் விதம். அவர் நம்மைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்தேன் என்கிறார். அதுபோல் அவர் நம்மைத் தாங்கும் வகையுண்டு. நாம் அவரை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொள்ளுதலும் உண்டு. இன்றொரு பிடி, அதாவது உடும்புப்பிடி. இதை யுத்தம்செய்கிறவர்கள் உபயோகிப்பார்களாம். எப்படியென்றால், உடும்பின் வாலில் கயிற்றைக் கட்டி மதில்மேல் விட்டால் உடும்பு மதிலைப் பிடித்துக்கொள்ளும். ஜனங்கள் அந்தக் கயிற்றுவழியாய் ஏறி மதிலைத் தாண்டக்கூடுமாம். இதுதான் விசுவாசப் பிடி என்பது. தாவீது நான் தேவனால் ஒரு மதிலைத் தாண்டுவேனென்கிறார். இதுதான் லூத்தரின் புஜபலமாயிருந்து சீர்திருத்த வேலைக்குக் கைகொடுத்தது' என்றார்.

சீஷன் அதுகேட்டு 'மூன்று பிடியும் மனுஷனில் காணப்படுவது அவசியமாய்த்தானிருக்கிறது' என்றான். அதற்குப்பின் சற்று நேரம் யோசித்து ஆலமரத்தின் விழுதுகள் சுற்றியிருப்பதின் காரணத்தைத் தெரிவிக்கக் கோரினான்.

அதற்கு வேதாபிமானி 'ஆலமரத்தின் விசேஷங்களில் சிலதைப் பள்ளிக்கூடத்தில் படித்திருப்பாய். ஆதலால் விழுதின் விசேஷத்தில் நீ அறியவேண்டியது ஆலமரம் தாய்போலவும் அது அதிக வயதாகி விழுதுகள்விட்டுக் கொம்பும் கிளையுமாகிப் பெரிய மரமாய் அகன்று பருத்து விரிந்துவரும்போது பொந்து விழுந்து பலவீனப்படுகிறபோது, விழுதுகள் பூமியில் நின்று முட்டுக்கொடுத்தாற்போலப் பூமியின் சாரத்தை உறிஞ்சிப் பலன்கொடுத்துத் தாங்கி நிற்கிறது. அதுபோல் நமது தாய்தந்தையருடைய பலம் குறையாதபடி பிள்ளைகளாகிய நாம் தாங்கிக்கொள்ளவேண்டியது நமது கடமை. அதுபோல் சபை விஷயத்திலும் க்ஷீணதசையடையாமல் நாம் விழுதுகளைப்போல நம்மால் கூடிய உதவியை மிஷன்வேலைகளில் சேர்ந்து கைகொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் என்பதை இந்த ஆலமரம் நமக்கு உணர்த்துகிறது' என்றார்.

இப்படிப் பேசிவருகையில் அங்கு ஒரு கிணற்றையும் மடத்தையும் கண்டு 'தாகசாந்திக்காகத் தண்ணீர் மொண்டுவரட்டுமா' என்று குருவினிடம் விடை பெற்றுக்கொண்டு கிணற்றுக்குப் போனான். அங்கே மீன்கள் துள்ளி விளையாடுவதும், அவைகளுக்கு இரைபோடுகிறவர்கள் மணியடித்ததும் மீன்களெல்லாம் தலையை நீட்டிக்கொண்டிருப்பதும், தண்ணீர் இறைக்கும்படி விடும் செம்பு கடையால்களிலே ஏறிக்கொள்வதும் வெகு விநோதமாயிருந்ததைக் கீதமணி கண்டு சந்தோஷப்பட்டுச் சற்று தாமதித்துச் சிரித்த முகத்தோடு குருவினிடம் வந்தான்.

குரு சீதமணியைப் பார்த்து, உனக்கு இவ்வளவு நேரம் தாமதமென்ன? ஏதோ ஒரு காட்சி கண்டவன்போல் சிரித்துக்கொண்டு வருகிறாயே, அவற்றின் விபரமென்ன' என்றார். சீஷன் மீன்களின் வரலாற்றைச் சொல்லி, 'நமது செம்பிலும் இரண்டொரு மீன் வந்தது. ஆனால் அந்த மீன்களை எடுக்கக்கூடாதாம். அது கோவில் மீன்களாம். விஷ்ணு அவதாரமாம். அதைப் புசித்தால் கண் கெட்டுப்போகுமாம். அந்த மீன்கள் தேவர்களேயன்றி மனுஷர் புசிக்கத் தகாதென்று வெகு விமரிசையாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். நானும் செம்பில் வந்த மீனையும் கிணற்றில் போட்டுவிட்டேன்' என்றான்.

(இன்னும் வரும்)

Esther Devadas



## MARTHA AND MARY

## மார்த்தாளும் மரியாளும்

### கும்மி

1. சீரார்வளமிகு பெத்தானியாவெனும்
சிறந்தவொரு கிராமந்தனில்
நேரார்மார்த்தாள் மரியாளெனும்பத்தி
நிறைந்தசகோதரி களிருந்தார்.



2. நன்னயமாகஅவர் வசித்திருந்த
நலம்பெருகிய வீட்டினுக்கு
இந்நிலத்தைமீட்க வந்தயேசுஸ்வாமி
யெழுந்தருளின ரோர்சமயம்.

3. மார்த்தாள்ரக்ஷகரை அன்பாயேற்றவர்தப்
மருமலரடி யையவணங்கித்
தீர்த்தவர்களையை யுபசரித்திட
சிந்தைகனிந் தூழியம்புரிந்தாள்.

4. ஞானசற்குருவின் சரீரகளேப்பை
நற்குணமுள்ள அம்மாதுணர்ந்து
வேணருசியுள்ள அமுதுபடைக்க
மேவிப்பலவேலை தான்புரிந்தாள்.

5. ஆத்துமகவலை கொண்டமரியாளோ
ஐயன் திருவடி யில்தரித்து
சாத்திரன்மொழிந்த ஞானவமிழ்தத்தைச்
சந்தோஷமாயுட் கொண்டுமகிழ்ந்தாள்.

6. வானிழிந்திந்தப் பூதலத்திலேவந்த
மகிமையுறும் ஞானகுருவின்
தேனமிழ்தொத்த அருள்திருமொழியைச்
சிந்தையிற்கொண்டு தன்னைமறந்தாள்.

7. இந்தவிதமவ ளிருக்கையில்மார்த்தாள்
இசைந்தவேலைக ளாலலுத்து
வந்தசற்குருவின் திருவடிசேர்ந்து
வாயைத்திறந்து வழுத்தலுற்றாள்.

8. ஐயரேஐயரே எனதுசோதரி
அலுவலொன்றும் புரியாமல்
பையவேயெந்தனைத் தனியாகவிட்டுப்
பார்த்திருப்பது நீதியோவென்றாள்.

9. அந்தமெல்லணங்கைப் பார்த்துநவிலுவார்
அருமைபெரு குருநாதன்
இந்தவுலகில் மார்த்தாளேமார்த்தாளேநீ
யெண்ணிப்பல சோலியிலேசிக்கி,

10. மெத்தகவலைப்பட் டுக்கலங்குகின்றாய்
வேண்டியதெல்லா மொன்றேயாகும்
இத்தரையிலிவள் அந்தநல்லபங்கை
இசைந்தின்றைத்தினம் தேடிக்கொண்டாள்.

11. இந்தவிரு சகோதரிகளும்நம
தெழிலாண்டவர் தமக்கூழியம்
அந்தமாய்ப்புரிந்து நன்மைபெற்றவண்ணம்
அரிவையர்கள் செய்வதுசிதம்.

12. ஆத்துமநன்மையுந் தேடவேண்டும்உடற்
கானநன்மையும் புரியவேண்டும்
நேர்த்தியாகவிந்த ரண்டுகுணங்களும்
நேரிழைகளுக் கழகாமே!

## THE DAUGHTER-IN-LAW

## மாமியார் மருமகள் வைபவம்

ஒரு வீட்டில் ஒரு ஜோசியர் இருந்தார். அவர் நாள்தோறும் கொண்டுவரும் பொருள் செலவுக்குக் காணாது. இவருக்குப் பாகீரதி என்றொரு பெண்சாதியிருந்தாள். ஒருநாள் இவர் வெளியிலே போய்ப் பலபக்கம் சுற்றிவந்தும் ஒன்றும் கிடையாமல் மனவருத்தத்தோடு 'ஓ! ஓ!! இன்றைக்கு வெகு நேரமாய்விட்டதே, மனைவியும் குழந்தைகளும் என்ன செய்தார்களோ? கரும்பு தின்னக் கூலிவேண்டுமோ? என்று அவள் நம்மை என்ன திட்டப்போகிறாளோ' என்று சற்று கூசிக்கொண்டே அதிக விசையாக நடந்து, வீட்டின் வீதி வாசற்படிக்குள் நுழைந்தார்.

அப்பொழுது அவருடைய தாயார், 'இதென்ன! இவள் மூதேவியாயிருக்கிறாளே; மத்தியான வேளையில் படுக்கையில் தூங்கிக்கொண்டிருக்கிறாளே; இந்த அநியாயம் உலகத்திலுண்டா? இப்படிப்பட்டவள் நம்முடைய வீட்டுக்கு எங்கிருந்து வாய்த்தாள்?' என்றாள்.

ஜோசியர்: 'அம்மா! கால் அலம்ப ஜலம் கொண்டுவா.'

தாயார்: 'அப்பா! நல்ல வெயில் ஆய்விட்டதே. வந்துவிட்டேன்' என்று ஜலம் கொண்டுவரச் சென்றாள்.

இச்சமயத்தில் யாரோ இருவர் ஜோசியரைத் தேடிக்கொண்டு தெருவழியாக வரும்போது வெகு சுத்தமாயிருந்த ஒரு வீட்டைப் பார்த்து அவர்களில் ஒருவர் 'ஆ! இந்த வீடு எவ்வளவு சுத்தமாயிருக்



கிறது பார்; இதைப் பார்த்தால் இலட்சுமி வாசஞ்செய்கிற வீட்டைப் போலிருக்கிறது' என்று திண்ணையில் வீற்றிருக்கப் போனார்.

மற்றவர், 'தாகமாயிருக்கிறது, கொஞ்சம் ஜலம் குடித்துவிட்டு வருகிறேன்' என்றார்.

முதல்வர், 'எங்கே போகப்போறீர்?'

மற்றவர், 'இதோ, அந்தப் பாட்டி ஜலம் கொண்டுவருகிறாள்; போய் ஜலம் குடித்துவிட்டு வருகிறேன்' என்றார்.

முதல்வர், 'சரி, சீக்கிரம் வாரும், நேரமாகிறது. நான் இங்கே கொஞ்சம் படுத்துக்கொண்டிருக்கிறேன்' என்றார்.



இதற்குள்ளாக ஜோசியர் கால்கழுவி வீட்டினுள் சென்றார். இவரும் தாகத்திற்குக் கொஞ்சம் ஜலம் வேண்டும் என்றார். உடனே அக்கிழவி ஜலம் கொண்டுவந்து கொடுக்க அதைக் குடித்துவிட்டுத் திரும்பிவந்து அவரும் முன்சொன்ன திண்ணையிலே உறங்கலானார்.

உள்ளே சென்ற கிழவி, 'கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்' என்றாள்.

ஜோசியர், 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்றார்.

இதைக்கேட்ட பாகீரதி 'ஆசையும் வேண்டாம் மீசையும் வேண்டாம். எனக்கு வேண்டியபடி சாப்பிட எங்கப்பா வச்சிருக்கிறார்.

உன் வீட்டிலே வந்து மட்டிவேலைசெய்து ஒரு சாண்வயிற்றை வளர்க்க வேண்டியதில்லை. போ, போ' என்று கையை நெரித்தாள்.

உடனே அவள் மாமியார், 'மலையின்மேல் விளைந்தாலும், உரலில் தான் மசியவேண்டும்.' உங்கப்பா வீட்டிலே இருந்தால் உனக்கென்னச்சு: மூளிவந்தாள் 'அமாவாசைச் சந்திரனைக் கிரகணம் பிடித்ததுபோலாச்சு' என்றாள்.

மனைவி, 'நின்று தின்றால் குன்றும் மாளும்' சம்பாதிக்கிறதற்குத் தெரியவில்லை நானென்ன செய்யட்டும், எங்கப்பா வீட்டுக்குப் போய்ச் சுகமாகச் சாப்பிட்டுக்கொண்டிருப்பேன். இங்கே என்ன வேலை 'கிளியை வளர்த்து பூனையின் கையிலே ஒப்புவித்தான் பாவி' என்று அழுதாள்.

மாமியார், அம்மா, நீ படிச்சவள்தான். எனக்கு நன்றாத் தெரியும். காய்கறி நறுக்கத் தெரியாது. வெடிஞ்சு பத்து நாழிகைவரையில் தூங்கிவிட்டு இப்போ என்ன நாக்கை நீட்டுறாய்' என்று மகனைப் பார்த்து 'அப்பா! வெயிலில் அலைந்துவந்தாயே, ஆகாரம் ஏதாவது செய்தாயோ?' என்றாள்.

ஜோசியர், 'அம்மா! நாம் யாரை அன்ன ஆகாரமில்லாமல் பட்டினிபோட்டு அலையப்பண்ணினோமோ தெரியாது. அதையே இப்போது அனுபவிக்கவந்தது. இல்லாவிட்டால் இத்தனை பெரிய பட்டணத்திலே ஒரு பிராணிக்கு 'அன்னங் கிடையாமல்போகுமா?' என்றார்.

உடனே தாய் அடுப்பை மூட்டி உள்ள அரிசியைவைத்துச் சமைத்து யாவரும் உண்டார்கள்.

ஜோசியரைத் தேடிவந்தவர்கள் உறக்கத்திலிருந்து எழுந்து 'ஜோசியர் வீடு எது? ஜோசியர் வீடு எது?' என்று கேட்டுக்கொண்டே வந்து ஜோசியர் வீடடைந்தார்கள்.

ஜோசியர் அவர்களைப் பார்த்து 'வாருங்கள், வாருங்கள். உட்காருங்கள்' என்று இருக்கச்செய்து, 'என்ன வெயிலோடே எங்கே புறப்பட்டீர்கள்?' என்று கேட்க, அவர்கள் 'தம்பி நாராயணனுக்குக் கலியாணமாக வேண்டியிருக்கிறது. அந்த ஊர் ஜோசியர் முகூர்த்தம் பார்த்து எழுதியனுப்பியிருக்கிறார். அதை உங்களிடத்திலேயும் காண்பித்துப் பார்த்துப் போவோம் என்று வந்தோம்' என்றார்கள்.

ஜோசியர், 'எந்த ஊர் ஜோசியர்.'

'கிழக்கே மதுரையிலே, அவர் பேர் ஞாபகத்துக்கு வரவில்லை.'

ஜோசியர்: 'மதுரையிலே யார் குறிப்பைப் பார்த்தால் தெரிந்துவிடும்.'



'ஐயா! குறிப்பெங்கே எடும். அவர் கையிலே கொடும். அவர் பார்த்துச் சொல்லட்டும்' என்று ஒருவர் சொன்னார். உடனே மற்றவர் பொதிந்திருந்த துணியைக் கீழே வைத்துவிட்டுக் குறிப்பை எடுத்து ஜோசியர் கையில் கொடுத்தார். ஜோசியரும் அதைக் கையில் வாங்கி அநேக முறை திருப்பித் திருப்பிப் பார்த்து ராசிகளை நிர்ணயஞ் செய்து 'முகூர்த்தம் சரியான முகூர்த்தம்; பேஷ் தேவலாம்' என்றார்.

## EVIL DOING

## இன்னா செய்யாமை

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் பிறவுயிர்களுக்கு இம்சை செய்யாதிருத்தலே உத்தமோத்தமமான பரம தர்மமென்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். இன்னா செய்யாமை என்பதினாலுண்டாகும் அர்த்தமென்ன? நம்மாற் கூடுமானவரையில் பிறவுயிர்களை இம்சிக்காதிருக்க முயலுதலென்பதேயாம். இளஞ்சிறுவர்கள் பிராணிகளையும் தம்மோடொத்த சிறுவர்களையும் அடிக்கடி துன்புறுத்துகின்றார்கள். இஃதேனெனில் தாம் செய்வது இன்னதென்பதைச் சற்று நின்று அவர்கள் யோசிக்கிறதில்லை. இப்படியே தாம் செய்வது இன்னதென்பது கருதாமல் அவர்கள் பிறவுயிர்க்குத் தீங்கு புரிகிறார்கள். வலிமையுடைய சிறுவனொருவன் அங்ஙனம் வலியில்லாத இளையோனைத் தன் புயவன்மைகொண்டு துன்புறுத்தல் அடாததேயாம். ஜீவப் பிராணிகள் தமக்கு நாம் செய்கிற இன்பதுன்பங்களை யுணர்ந்து நமக்குச் சொல்லும் சக்தி படைத்திருக்கவில்லையாதலின், நாம் எல்லாப் பிராணிகளிடத்தும் தயை காட்டவேண்டியதும் அவசியமாகும். எளிய நாய், பூனைபோன்ற பிராணிகள் நம்மருகேயிருந்தால் அவை நம்மை விட்டு விலகுமாறு அவற்றை யுதைத்துத் தொந்தரைசெய்தல் கூடாது. குதிரை தன்னாற் கூடியவளவு பாரமான சுமையைத் தாங்கிப் போகும்போது நாம் அதனை அடித்துத் தொந்தரைசெய்தலும் செய்யத்தகாத காரியமாகும்.

கடவுளின் படைப்புப் பொருள்களாகிய எல்லாப் பிராணிகளிடத்தும் பக்ஷமாய் நடந்து, அவை நம்மைப்போலவே துன்பங்களை உணருகின்றனவென்பதையும் நம் மனத்திற் பதிக்கவேண்டும். சிலவேளைகளில் எங்கும் தப்பியோடிவிடாதபடி கழுதையையோ ஒரு குதிரையையோ அவற்றின் இரண்டு அல்லது மூன்று கால்களையும் கயிறுகொண்டு இறுக்கிக் கட்டிவிடுகின்றார்கள். முன்னங்கால்களில் இரண்டினைத் தளர்த்திக் கட்டினால் அதனால் அந்தப் பிராணிகள் வருந்தா.

ஆனால் இக்கால்கள் இறுகப் பிணிக்கப்பட்டபொழுதும் அல்லது முன்னங்கால்களோடு பின்னங்காலொன்றும் சேர்த்திறுக்கப்பட்ட பொழுதும் அவ்வேழைப் பிராணி மிக்க தொந்தரைக்குள்ளாகி அமைதியின்றிக் கஷ்டப்படப் பார்ப்பதற்குக் கொடுமையாகவே தோன்றும். எவராவதொருவர் உங்களை அடித்தாலல்லது கிள்ளினால் நீங்கள் வருத்தமுறுகிறீர்கள். ஏன் அங்ஙனம் நீங்கள் வருத்தமுறுதல்வேண்டும்? ஏனெனில் உங்களுடைய தேகத்தில் மெல்லிய நரம்புகளிருக்கின்றன. இம்மெல்லிய நரம்புகள் அடிபட்டபொழுது அல்லது வருத்தப்பட்டபொழுது, அவைகள் உணர்ச்சி மிகுந்த பாகமாகிய மூளைக்குச் செய்தியை யறிவிக்கின்றன. நம் மூளை இத்தொந்தரையைச் சகியாது, எனக்கு வருத்தமாயிருக்கிறதென்று நாமே கூறுகிறோம். எல்லாப் பிராணிகளுக்கும் இத்தகைய மெல்லிய நரம்புகளிருக்கின்றமையால் அவை பேசக்கூடுமானால் தாமும் வருத்தமுறுகின்றனவெனலாம். ஆதலின், நாம் பிராணிகளை அடித்தலாவது அவற்றின்மேற் கல்லெறிதலாவது, அவற்றை உதைத்தலாவது அல்லது எவ்விதமாயினும் அவற்றைத் துன்புறுத்தலாவது செய்யக்கூடாது. நமக்கு வேண்டியபடி அவற்றை உபயோகித்தலுடன் அவற்றைப் பக்ஷமாய் நடத்தலும் இன்றியமையாதது.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ ஆகஸ்டு௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | யாக். | 4. | 1—7 | 11 | ஞா. | தானி. | 3. | 1—7 | 21 | பு. | தானி. | 6. | 11—17 |
| 2 | வெ. | ,, | 4. | 8—17 | 12 | தி. | ,, | 3. | 8—20 | 22 | வி. | ,, | 6. | 18—28 |
| 3 | ச. | ,, | 5. | 1—9 | 13 | செ. | ,, | 3. | 21—30 | 23 | வெ. | ,, | 7. | 1—8 |
| 4 | ஞா. | ,, | 5. | 10—20 | 14 | பு. | ,, | 4. | 1—12 | 24 | ச. | ,, | 7. | 9—18 |
| 5 | தி. | தானி. | 1. | 1—10 | 15 | வி. | ,, | 4. | 13—27 | 25 | ஞா. | ,, | 7. | 19—28 |
| 6 | செ. | ,, | 1. | 11—2 | 16 | வெ. | ,, | 4. | 28—37 | 26 | தி. | ,, | 8. | 1—12 |
| 7 | பு. | ,, | 2. | 1—9 | 17 | ச. | ,, | 5. | 1—9 | 27 | செ. | ,, | 8. | 13—27 |
| 8 | வி. | ,, | 2. | 10—23 | 18 | ஞா. | ,, | 5. | 10—17 | 28 | பு. | ,, | 9. | 1—10 |
| 9 | வெ. | ,, | 2. | 24—35 | 19 | தி. | ,, | 5. | 18—31 | 29 | வி. | ,, | 9. | 11—19 |
| 10 | ச. | ,, | 2. | 36—49 | 20 | செ. | ,, | 6. | 1—10 | 30 | வெ. | ,, | 9. | 20—27 |
| | | | | | | | | | | 31 | ச. | ,, | 10. | 1—9 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# மாதர் போதினி

No. 177 செப்டெம்பர் 1912 No. 9

## 'HOW MUCH DID HE LEAVE?'

## 'தனக்கிருந்தவற்றையெல்லாம் வைத்து விட்டுப் போனான்'

ஒரு ஆஸ்பத்திரியிலே ஒரு க்ஷயரோகக்காரனிருந்தான். அவன் பேர் ஜேம்ஸ். அவன் ஒருநாள் வெளிப்பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு பல காரியங்களைக்குறித்து யோசித்துக்கொண்டிருக்கும் போது, யாரோ ஒரு அறிமுகமானவருடைய சத்தம் தன் பேரைச் சொல்லி அழைக்கக் கேட்டது. அவன் எறிட்டுப் பார்க்கும்போது கனம் கிரே (Mr. Gray) என்று சொல்லப்பட்ட துரை தன் முன்பாக நிற்கக் கண்டான். ஜேம்ஸ், அவரைப் பார்த்து, 'ஐயா நீங்கள் அமெரிக்காவி லிருக்கிறீர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் எப்போ வந்தீர்கள்' என்று கேட்டான். அதற்கு அவர், 'ஓ, நான் சனிக்கிழமை வந்து இறங்கினேன். என் பிள்ளைகளைப் பார்க்கும்படி போயிருந்தேன். அவர்கள் நல்ல சுகமாயிருக்கிறார்கள். உன்னைப்பற்றி நிரம்ப விசாரித்தார்கள்' என்றார். கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்த பிற்பாடு, ஜேம்ஸ் அவரைப் பார்த்து 'ஐயா, ஆலிவர் எப்படியிருக்கிறான்? அவன் என்னோடு படித்தவன், நானும் அவனும் ஒரேநாளில் பள்ளிக்கூடத்தை விட்டோம், இப்போது அவன் பெரிய லட்சாதிபதியாயிருக்கிறான் என்று கேள்விப்படுகிறேன்' என்றான்.

அதற்கு அந்தத் துரை, 'நிஜம்தான், நான் பத்துநிமிஷம் மாத்திரம் அவனோடு பேசிக்கொண்டிருந்தேன். அவன் வீடும் வாயிலும் சத்திரம்போலிருக்கிறது, பேர்போனவனாய் இருக்கிறான். ஆனால் பாவம், இரண்டு வாரத்துக்குமுன்னே அவன் இறந்துபோனதாகக் கேள்விப்பட்டேன்' என்றார்.

ஜேம்ஸ், 'ஐயோ, 50 வயதுகூட இல்லை! எவ்வளவு துக்கமான செய்தி' என்று வருத்தப்பட்டுக்கொண்டு 'ஐயா, அவன் எவ்வளவு பணம் வைத்துவிட்டுப் போனான்' என்று மறுபடியும் ஆவலோடு கேட்டான்.

அதற்கு அவர் 'அவனா! தனக்கிருந்தவற்றையெல்லாம் வைத்துவிட்டுப் போனான். அவனுடைய நேர்த்தியான வீடு, அழகான மனைவி, விலையுயர்ந்த குதிரைவண்டி முதலானவைகளை விட்டுப் போனான்' என்று சொல்லி 'ஜேம்ஸ்! என் இவ்வுலகத்திற்குரிய காரியங்களைச் சிந்திக்கிறாய், இனிமேல் வரப்போகிறதைப்பற்றி யோசி' என்றார். இந்த வார்த்தைகள் ஜேம்ஸுடைய இருதயத்தில் தைத்தன. 'லட்சாதிபதியாகிய ஆலிவர் வெறுங்கையனாய் மரித்தான். நானும் ஒருநாள் மரிக்கவேண்டும். நானும் மரணத்திற்கு ஆயத்தப்படவேண்டும்' என்று யோசிக்கத் தொடங்கினான். தேவனுக்கு மகிமையுண்டாவதாக! பாருங்கள். வெறுங்கையனாய்ப் போனான் என்ற சிறு வாக்கியம் ஒரு மனிதனுடைய இருதயத்தைத் திருப்பிவிட்டது.

சீனா தேசத்திலே ஒரு பழமொழி சொல்வார்களாம்; 'மனுஷன் உலகத்தில் பிறக்கும்போது சிறு காங்களோடு பிறக்கிறான்.' அது வெறுமையாய்த்தான் இருக்கிறது. மரிக்கும்போது பெரிய கையோடு மரிக்கிறான். அது வெறுமையாய்த்தான் இருக்கிறது' என்றார்.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலனும் அப்படித்தான் சொல்லுகிறார். நாம் இந்த உலகத்தில் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்று திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார். நாம் இவ்வுலகத்திற் குரியவைகள்மேல் மனதை வைக்காமல் நமக்கு எல்லா ஐசுவரியத்தையும் கொடுக்க வல்லவராகிய தேவன்மேலேயே நம்பிக்கையுள்ளவர்களாய் இருப்போமாக.

## A HELPMEET

## தேவ ஊழியனின் சிறந்த மனைவி

ஆதியில் தேவன் ஏவாளை ஆதாமுக்கு ஏற்ற துணையாயிருக்கும்படிக்கே உண்டாக்கினார். தேவ ஊழியனுடைய மனைவி தன் கணவனுக்கு ஏற்ற துணையாயிருப்பதே தேவனுடைய சித்தமும் அவளுக்கிருக்கவேண்டிய இலட்சணங்களின் சாரமுமாயிருக்கிறது. ஆகையால் மனைவியானவள் தன் புருஷனுக்கு எவ்விதமாய் ஏற்ற துணையாயிருக்கலாம் என்று யோசித்து ஜீவிக்கவேண்டும்.

I. ஜீவியம். தேவ ஊழியனுடைய வேலைக்கும் அவனுடைய மனைவியின் ஜீவியத்துக்கும் விசேஷித்த நெருங்கிய சம்பந்தமுண்டு.



அவன் எவ்வளவு பிரயாசப்பட்டு உழைத்தாலும் அவனுடைய மனைவியின் ஜீவியம் சீர்கெட்டதாயிருந்தால் அவனுடைய முயற்சி யாவும் வீணாய்ப்போகிறது. அவனுடைய போதனைக்கேற்றபடி அவள் சிறந்த ஜீவியம் செய்வாளானால் அவனுடைய ஊழியம் பலமடங்கு சித்தியுடையதாய் விளங்குகிறது.



அந்தரங்க ஜீவியம். தேவ ஊழியனுடைய மனைவி குணப்பட்டவளாயிருப்பது அத்தியந்த அவசியம். குணப்படாத மனைவியினால் தேவ ஊழியனுக்கு நிந்தையும் அவமானமும் உண்டாகிறதுமல்லாமல் இயேசுவின் நாமம் தூஷிக்கப்படவும் நேரிடுகிறது. ஆகையால் அவள் குணப்பட்டுத் தேவனுக்குத் தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தவளும், வேதத்தை நேசிக்கிறவளும், ஜெபத்தியானமுள்ளவளும், பரிசுத்த ஜீவியத்தில் வளருகிறவளுமாயிருக்கவேண்டும்.

குடும்ப ஜீவியம். அவளுடைய குடும்ப ஜீவியம் சிறந்ததாயிருக்கவேண்டும். அவள் தன் புருஷனுக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து அவனை நேசிக்கிறவளாயும், தன் பிள்ளைகளை லோவிசாளைப்போல் வேத அறிவிலும், அன்னாளைப்போலத் தெய்வபக்தியிலும் வளர்க்கிறவளாயும், சாராளைப்போலத் தன் வீட்டுக்கு வருகிறவர்களை உபசரிக்கிறவளாயும் இருக்கவேண்டும். அவளுடைய வீடும் அதிலுள்ள பொருள்களும் சுத்தமாயும் ஒழுங்காயும் மனோகரமாயுமிருத்தல் அவசியம். குடும்பத்தில் உண்டாகும் துன்பங்களையும், வேத விரோதிகளால் உண்டா

க்கூடிய பல கஷ்டங்களையும் சகிக்கக்கூடிய பொறுமையுள்ளவளாயும், வீட்டுக்கவலைகளில் புருஷன் தலையிட நேரிடாதபடி தானே சகல காரியங்களையும் நடத்துகிறவளாயு மிருத்தல் நலம். அவள் வீட்டு வேலைகளைச் செய்வதில் சுறுசுறுப்பும், வீட்டு வருமானத்தைச் செலவிடுவதில் சிக்கனமுள்ளவளாயு மிருத்தல் அவசியம். மனைவி சோம்பேறியும் ஊதாரியுமா யிருந்தால் குடும்பம் கடனுக்குட்படுகிறது. கடன்பட்ட ஊழியக்காரன் கவலைக்குட்பட்டுச் சோர்வடைந்து ஊழியத்தில் அனலும் பலனுமற்றவனாய்ப் போகிறான். மனைவி சுறுசுறுப்பாயிருந்தால் நீதி. 31. 23-ல் சொல்லியிருக்கிறபடி புருஷன் கனவான்களோடேகூட உட்கார்ந்து பேர்பெற்றவனாகிறான்.

**புறம்பான ஜீவியம்.** அவளுடைய அந்தரங்க ஜீவியமும் குடும்ப ஜீவியமும் சிறந்ததாயிருப்பதுடன் அவளுடைய புறம்பான ஜீவியமும் இடறலற்றதும் பின்பற்றத்தக்கதுமா யிருப்பது அவசியம். அவள் தன் சபையாரோடும் கிராமத்தாரோடும் நடமாடவேண்டியவள். அவர்கள் அவளுடைய ஜீவியம் எப்படியிருக்கிறதென்று எப்போதும் கவனித்துக்கொண்டே யிருக்கிறார்கள். ஆகையால் அவள் அவர்கள் நடுவே ரோஜாவைப்போல் வாசனையும் அழகுமுள்ளவளாயும், தண்டின்மேலுள்ள விளக்கைப்போல் பிரகாசமுள்ளவளாயு மிருக்கவேண்டும். தேவாலயத்துக்கு ஒழுங்காய்க் குறித்த நேரத்தில் போய், ஓய்வுநாளில் வேலை, வியாபாரம் செய்யாமலும் வீண்பேச்சுப் பேசாமலும் அதைப் பயபக்தியாய் ஆசரிக்கவேண்டும். ஜாதி வித்தியாசம் என்னும் பேய் தன்னில் கிரியைசெய்யாதபடி வெகு ஜாக்கிரதையாயிருந்து தன் அறிவு நாகரீகத்தால் கர்வமடைந்து மற்றவர்களைத் தாழ்வாய் நினையாதபடி கவலையெடுத்து மனிதரை இரட்சிக்க மனுக்கோலமெடுத்த இயேசு இரட்சகரைப்போலத் தாழ்மையை அணிந்துகொள்ளவேண்டும். 'ஊரோடு ஒக்க ஓடு' என்னும் தகாத பழமொழியைத் தனக்குப் பிரமாணமாய் வைத்துச் சுற்றிலுமுள்ளவர்களுடைய அஞ்ஞானம், அவபக்தி, உலக ஆசை முதலியவற்றிற்குப் பங்காளியாகாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுவது அவசியம். இவ்விதமாய் மனைவியானவள் மற்றவர்கள்முன் கிறிஸ்துவைப் பிரதிபிம்பித்துக் காட்டி ஜீவிப்பாளானால் அவள் புருஷன் செய்யும் தேவ ஊழியம் ஆச்சரியமான பலனுடையதாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

II. **ஊழியம்.** தேவ ஊழியனுடைய வேலைக்கு அவன் மனைவி செய்யும் அற்பசொற்ப உதவி மகா பிரயோஜனமுள்ளது. 'சிற்றாள் வேலை எட்டாள் வேலை' என்பது நமது நாட்டுப் பழமொழி. அதுவுமல்லாமல் புருஷன் செய்யக்கூடாத பல வேலைகளைச் செய்யத்தக்க சக்தியுடையவளாக அவள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள். தேவ ஊழி



யனுடைய திறமை, அடக்கம், முயற்சி, வீரதீரம் முதலிய புருஷலட்சணங்களோடு அவனுடைய மனைவியின் குளிர்ந்த முகம், சாந்தமான பார்வை, இனிய குரல், அன்பான செய்கை முதலியவை சேரும்போது தேவ ஊழியம் ஆச்சரியமான வல்லமையும் சித்தியுமுடையதாய் விளங்குகிறது.

சபையை நடத்தும் போதகருடைய அல்லது உபதேசியாருடைய மனைவி சபையின் பக்திவிருத்திக்கேற்ற பற்பல காரியங்களைப் புருஷனுக்கு உதவியாகச் செய்யக்கூடும். சபையாரின் வீடுகளுக்கு அடிக்கடி போய் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் பார்த்துச் சுகக்ஷேமங்களை விசாரித்து ஜெபம்செய்து வருவது மிகப் பிரயோஜனமான ஒரு வேலை. ஜெபக்கூட்டம், ஓய்வுநாள் ஆசரிப்பு, காணிக்கை முதலியவற்றை அசட்டைபண்ணுகிற ஸ்திரீகளைக் கண்டு பேசி அன்பாய்ப் புத்திசொல்லிச் சீர்ப்படுத்துவதும் சமாதானக்குறைவுள்ள பெண்களைச் சாந்திபண்ணுவதும் மிக அருமையான ஊழியமே. சபைப் பெண்களுக்கென்று வாரந்தோறும் விசேஷித்த ஜெபக்கூட்டம் வைத்து அதில் பாட்டு, வேதவசனம், கதை முதலியவற்றைக் கற்றுக்கொடுத்துவரவேண்டும்.

தொற்காலைப்போல் தையல்சங்கம் ஏற்படுத்தி தைக்கத் தெரியாதவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, தையலால் வரும் வரும்படியை ஏழைகளுக்கு உதவிசெய்யவும் சுவிசேஷத்தைப் பரப்பவும் உபயோகிக்கவேண்டும். வாசிக்கத் தெரியாத பெண்களுக்கு இடைப்பட்ட நேரங்களில் வாசிக்கக் கற்றுக்கொடுப்பது நலம். பக்திமுயற்சி சங்கக்கூட்டம், ஓய்வுநாள் பள்ளிக்கூட வேலை முதலியவற்றில் தன் புருஷனுக்கு உதவிசெய்யவேண்டும். சபையில் சேரத்தக்க பெண்களை அதற்குப் பக்குவப்படுத்தவேண்டும்.

குடும்பங்களில் சந்தோஷ துக்க காரியங்களாகிய, பிறப்பு, விவாகம், வியாதி, மரணம் முதலியவை நடக்கும்போது அங்குபோய் அனுதாபப்பட்டுத் தன்னால் கூடிய உதவி செய்யவேண்டும். கண்வலி, வயிற்றுநோவு முதலிய அற்ப சொற்ப வியாதிகளால் கஷ்டப்படும் பெண்கள் பிள்ளைகளுக்குச் சாதாரணமான மருந்துகளைக் கொடுத்து உதவிசெய்யலாம். பெண்கள் தங்கள் தெருவையும் வீடுகளையும் சுத்தமாய் வைத்திருக்கவும், பிள்ளைகளுக்குச் சிறு வயதிலே அம்மைப்பால் வைக்கவும் அநாகரீகமான துர்ப்பழக்க வழக்கங்களை நீக்கிவிடவும் ஆலோசனை சொல்லி ஏவி நடத்தலாம். சபையின் குடும்ப காரிய விஷயங்கள் யாவிலும் தன் புருஷனுக்கு ஏற்ற ஆலோசனைக்காரியாயிருக்கவேண்டும். இன்னும் இவ்விதமாகவே தேவைக்குத் தக்கதாக மனைவி தன் புருஷனுக்கு உதவிசெய்யவேண்டும்.

உபாத்தியாயரின் மனைவி பிள்ளைகளுக்குப் பாடங்களைக் கற்றுக்கொடுப்பதுடன் இனிய பாட்டுகளையும் வேதவசனங்கள் சரிதைகளையும் கற்றுக்கொடுத்து இரட்சிப்பின் நற்செய்தியைத் தெரிவிக்கவேண்டும். பள்ளிக்கூடமும் பள்ளிப்பிள்ளைகளும் எப்போதும் சுத்தமாயும் ஒழுங்காயுமிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகளின் தாய்மாரைக் கண்டு பேசி அவர்களுக்கு அறிவின் நன்மையையும் இரட்சிப்பின் அவசியத்தையும் காட்டவேண்டும். சுவிசேஷகரின் மனைவி புறமதஸ்தரான பெண்களைக் கண்டு பேசி அவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறி வாசிக்கப் பிரியமானவர்களுக்குக் கற்றுக்கொடுத்து விசேஷமாய் வேதவசனம் சரித்திரங்களை அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

தேவ ஊழியனாகிய ஒரு குமஸ்தா அல்லது வைத்தியனின் மனைவியும் தன்னால் கூடிய உதவியைச் செய்யவேண்டும். நமது ஜில்லாவில் ஒரு பேர்பெற்ற மிஷனெரியானவர் ஒரு சிறந்த புஸ்தகத்தை இயற்றி அதைத் தன் மனைவியின்பேரால் பிரதிஷ்டைசெய்து 'என் மனைவியின் உதவியில்லாவிட்டால் இந்நூல் எழுதப்பட்டிருக்கமாட்டாது' என்று எழுதியிருக்கிறார். இவ்வித உதவிசெய்வது யாவராலும் கூடியதல்லவென்றாலும் ஒவ்வொரு மனைவியும் செய்யக்கூடிய விசேஷித்த உதவி ஒன்று உண்டு. அதாவது தன் புருஷனுடைய ஊழியத்தைத் தேவன் ஆசீர்வதிக்கும்படி நாடோறும் ஊக்கமாய் ஜெபம்பண்ணுவதுதான்.

இவ்விதமாய்த் தன் உத்தம ஜீவியத்தாலும் உற்சாகமான ஊழியத்தாலும் தன் கணவனுக்கு அவன் செய்யும் தேவ ஊழியத்தில் ஏற்ற துணையாயிருக்கும் மனைவியானவள் தேவ ஊழியனின் சிறந்த மனைவியென்று பேர்பெற்றுத் தன் கணவனோடு இம்மையில் மனப்பாக்கியத்தையும் மறுமையில் நித்தியஜீவனையுமடைந்து நட்சத்திரங்களைப்போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பாள்.

Jane William, Pasumalai.

## QUARRELLING

## ஸ்திரீகளின் வீண் சண்டை

பெண்களிற் சிலர் அயலாரோடு அடிக்கடி சண்டை பிடிப்பதில் அதிக விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒருவேளை அப்படிச் சண்டை பிடிப்பதற்குத் தகுந்த முகாந்தரம் நேரிடாவிட்டாலும் ஆடும் நரியும் நீருந்தப்போன இடத்தில் நடந்த சம்பாஷணைபோல், இதற்குமுன் ஒருவருக்கொருவர் பட்ட மனஸ்தாபங்களை மறுபடியும் பேசியாவது வீணில் சண்டை யெழுப்புவதும் உண்டு. இவர்கள் சண்டைபோடுங் காரணத்தை யோசித்துப் பார்த்தாலோ, அது மகா அற்பமாகும்; ஆனால் இவர்கள் போடும் கூச்சலாலும், பிரயோகிக்கும் துர்ப்பாஷைகளாலும் அதை மலையாய் வளர்த்தித் தெருவிலுள்ளவர்களெல்லாம் 'இதென்ன, இதென்ன' வென்று கவனித்துக் கேட்கும்படி யாக்கிவிடுகிறார்கள். குழந்தைகள் ஒன்றை மற்றொன்று 'அடபோடா கழுதை' என்றாவது மற்றெவ்வித மொழியாலாவது திட்டிக்கொண்டால் இதைப் பெரியோர்கள் கவனிக்கலாகாது. நல்ல வார்த்தை சொல்லி, அவர்களுக்குள் அன்பை விருத்திபண்ணவேண்டும்.



ஒருநாள் ஒரு ஜோசியர் மகள் தன் வகுப்புப் பெண்களோடு விளையாடிக்கொண்டிருக்கையில் பாக்கியம் என்ற பெண் தன்னுடைய புஸ்தகம் ஒன்று காணாமற்போக அவள் தன் வகுப்பிலிருந்த ஒவ்வொருத்தியையுங் கேட்டாள். அவளைக் கேட்டபொழுது 'நான் ஒன்றும் காணேன். அது யார் செய்த மாயமோ' என்று சொல்லி அழுது பாசாங்குபண்ணினாள்.

உடனே பக்கத்திலிருந்த பெண் 'அடி பெண்ணே! அவள் மடியைச் சோதித்துப்பார். ஒரு வேடிக்கையிருக்கிறது' என்றாள்.

பாக்கியம் திடுக்கிட்டு, அவள் மடியைச் சோதிக்க 'பலநாளைய திருடி ஒருநாளைக் ககப்படுவாள்' என்றபடி, அவள் அகப்பட்டுக்கொண்டாள். இதைப் பார்த்த மற்றைப் பெண்களெல்லாரும் சிரித்துப் பரிகாசஞ்செய்து 'அம்மா! பெண்ணே! என்ன காரியம் செய்தாய்? நல்லவளாய் நடித்துவந்தாயே' என்று அன்றுமுதல் 'திருடி' என்று பெயரிட்டுவிட்டார்கள்.

சாயங்காலம் மணி நாலு அடித்தஉடன் பெண்களெல்லாம் வீட்டுக்குத் திரும்பினார்கள். அப்பொழுது ஒருத்தி 'திருடி, திருடி' என்று கூப்பிட்டாள். இதைக்கேட்ட ஒரு ஸ்திரீ 'கள்ளி, கள்ளி' என்றாள். இதற்குள்ளாக ஜோசியர் வீடு கிட்ட வந்துவிட்டது. பெண்கள் ஒரே கூட்டமாக அவளைப் பரிகசித்துக்கொண்டு பின்னே வர முன்னே இவள்மாத்திரம் தலையைக் குனிந்துகொண்டு விரைவாக வீடுபோய்ச் சேர்ந்தாள். பெண்களில் ஒருத்தி சும்மா இராமல் 'அடுத்த வீட்டுத் திருடி விளையாட வரவேண்டாம். நேற்றுவரை விளையாடினது போதும்' என்று சொல்லி வீட்டிற்குள் போய் வெகு துருசாகத் திண்ணையில் ஒரு பொம்மையை வைத்துக்கொண்டு விளையாட இருந்தாள். அப்பொழுது அவள் தமையன் வழக்கம்போல 'என்னடீ! குட்டி! இன்றைக்குப் பாடங்களை ஒப்புவித்தாயா? என்ன' என்றான்.

சகோதரி 'அண்ணா! நான் இன்று பாடங்களையெல்லாம் சரியாய் ஒப்புவித்துவிட்டேன். ஒரு சங்கதி கேட்கவில்லையே' என்றாள்.

சகோதரன் 'என்னடி! குட்டி! என்ன சங்கதி, சொல்லு' என்றான்.

சகோதரி "அடுத்தகத்து ஜோசியர் பெண் ஒருத்தி பாக்கியத்தினுடைய புத்தகத்தை எடுத்து மடிக்குள்ளே ஒளித்து வைத்துக் கொண்டாள். அதை அவள் எப்படியோ கண்டுபிடித்துவிட்டாள். எல்லாரும் 'கள்ளி, கள்ளி' என்று கூப்பிடுகிறார்கள்" என்றாள்.

உடனே அவன் வெளியி லிறங்கிப் பார்க்கையில் ஜோசியர் மனைவி திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு பெண் 'இந்த வீட்டில்தான் அந்தத் திருடி வசிக்கிறாள்' என்றாள்.

இதைக் கேட்டவுடனே, 'எட்டினது சண்டை யிறக்கடி கூடையை' என்றபடி தான் தைத்துக்கொண்டிருந்த தையல்வேலையை விட்டுவிட்டு அக்குழந்தையிடத்தில் ஓடி வந்து 'அடி! என் குழந்தையை என்னவென்று திட்டினாய்? திருடியா? ஆம், ஆம். என் பெண் திருடி தான். எங்கே உன் தாயார்? யார் திருடி என்று அவளையே கேட்போம் வா' என்று அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு 'வல்லடி வழக்கு, சொல்லடி மாமி' என்று அவளிடம் போனாள்.

அவள் தாய் வேறொருத்தி தன் மகளை அநியாயமாய் இழுத்து வருவதைக் கண்டு பொறுக்காமல் 'ஆரடி நீலி? சிறு பெண் தெரியாமல் விளையாட்டாய் ஒரு வார்த்தை சொன்னால் இப்படியும் இழுத்துக்கொண்டு வரலாமா? உனக்கிவ்வளவு அதிகாரம் கொடுத்தவனாடி? உன்னைக் கொண்டவனென்ன ராஜாவோ' என்று வயிற்றெரிச்சலாகச் சொன்னாள்.

இதைக் கேட்டு 'அடி என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்? இன்னொருதரம் சொல்லு? இன்னொருதரம் சொல்லு?' என்று பேச்சுக்களை வளர்த்தி, துரும்பைத் தூணாக்கி, சண்டை பிடித்துத் திரும்பினாள்.


இதைக் கண்டுகொண்டிருந்த அயல்வீட்டுக்காரியின் மகன் விவேக சிந்தாமணியைத் திருப்பி;

'வண்டுக ளிருந்திடில் மதுவை யுண்டிடும்
தண்டமி ழிருந்திடிற் சங்கஞ் சேர்ந்திடும்
குண்டுணி யிருந்திடிற் கோள்கள் மிஞ்சிடும்
பெண்டுக ளிருந்திடிற் பெரிய சண்டையாம்'

என்று கூச்சலிட்டு வாசித்தான். உடனே வெளியிலிருந்தவர்கள் 'அடே! போதும் போதும்' என்று சொல்லி நிறுத்திவிட்டார்கள்.

L. N. Vishnu Somayaya, Trivandrum.





## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி.)

அதுகேட்டு வேதாபிமானி உடல் குலுங்க நகைத்து, 'ஈதா, என் பெற்றோர் சிறுவத்தில் சொன்ன ஒரு கதை ஞாபகத்தில் வருகிறது. அதைச் சொல்லுகிறேன் கேள்' என்று ஆக்ஞாபித்தார். அதற்குக் கீதனும் சொல்லுங்கள் ஐயா என்று அதிக அவாவுடன் கேட்டான். வேதாபிமானி கதையைச் சொல்லத் தொடங்கினார்.

"பாபவிநாசம் என்ற ஓர் ஊரிலுள்ள ஆற்றிலே இவ்விதமான மீன்கள் வளர்ப்பதாகவும், அங்குத் தீர்த்தமாடப்போவோர் வருவோர் எல்லாரும் பொங்கலிட்டுப் புசித்து இம்மீன்களுக்கும் இரைபோட்டுத் தெய்வமாகப் பூசித்துவருவார்களாம். அந்த மீன்கள் வேண்டியமட்டும் இரை தின்று கொழுத்து, பருத்து; உல்லாசமாய் வலையார் தூண்

டிற்காரர் முதலியவர் வருவாரென்ற அச்சமற்றுத் துள்ளிக் குதித்து விளையாடிப் பல்கிப் பெருகியிருந்தன. அந்த மீன்களைப் புசிப்போர் கண் கெட்டுப்போகுமென்றதால், ஒருவரும் அதைப் பிடிக்கவுமில்லை, புசிக்கவுமில்லை.

இப்படி இருக்குங்காலத்தில் அந்தக் கோவிற் காவற்காரன் தினசரி மீன்களைப் பார்த்துப் பார்த்து வாயூறி, ஆசைமீறி தின்று பார்த்தால் என்ன செய்யும் என்ற எண்ணம் மேலிட, 'கோவிற் பூனை தேவர்க்கு அஞ்சாது' என்றபடி ஒருநாள் நள்ளிரவில் சென்று மீன்களைப் பிடித்து மனைவியிடம் ரகசியமாய்க் கொடுத்து 'நன்றாய்ச் சமைத்துவை. கோவில் கிணற்றுமீன் அத்தனையும் கொழுப்புத்தான். ஒருவரிடமும் சொல்லாமல் இந்தக்ஷணமே சமையல்செய்' என்று சொல்லி, 'நான் வேலைக்குப் போய்விட்டு வருகிறேன். அதற்குள் தயாராயிருக்கட்டும்' என்று போயினன்.

அப்படியே புருஷனது சொல்லைச் சிரமேற்கொண்டு மீனைக் கழுவிச் சுத்திசெய்து, நெருப்புமூட்டி, புளிப்பு, உறைப்பு, கைப்பு முதலியன சேர்த்து நளபாகமாய்ச் சமையல்செய்து வைத்தனள். புருஷன் வருவதற்குச் சற்று தாமதமானதால், பசியுமேலிட, குழம்பை ருசிபார்ப்போமென அடுப்பண்டை அணுகி, கும்பாவில் குழம்பை விட்டு ருசித்தனள். அது மெத்தவும் ருசிகரமாயிருந்ததுபற்றிப் பேதைப்பெண், புருஷன் வருமுன்னால் பொறுத்து பொறுத்து ருசித்துத் துண்டங்களைத் தின்று, சமைத்த சட்டியைச் சரிவரக் காலிசெய்துபோட்டாள். அவள் அதைத் தின்று முடிந்ததும் ஆலோசிக்கலாயினள். "என் புருஷன் வந்தால் என்ன செய்கிறது, எப்படிப் பதிலுரைப்பேன், 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?' என் புருஷன் என்னைக் கோபங்கொண்டு அடிப்பாரே, மதிமறந்து புசித்தேனே. 'உரலுக்குள்ளிருந்து உலக்கைக்கு அஞ்சினால் தீருமா?'" என்று பயந்து, தனக்குள்ளே சிந்தித்து, புருஷன் வருமுன் இதற்கோர் உபாயம் செய்யவேண்டுமென, அடுப்பண்டை சென்று, சாம்பலைப் பெருக்க அள்ளி, சிரசாதி பாதம்வரை பூசி, தலையை விரித்து, விளக்குமாறும் கையிலெடுத்து, மூசு மூசு என்று நெடுமூச்செறிந்துகொண்டு, புருஷன் வரும் ஜாடை அறிந்துகொண்டு, தலைசுற்றி ஆட ஆரம்பித்தாள்.

அவள் புருஷன் தன்னிலேதானே, நாம் இன்று கோவில் மீனைச் சமைக்கச் சொல்லிவிட்டு வந்தோமே? அது யார் கண்ணைக் கெடுக்குமோ? தெரியவில்லையே? சாப்பிடுவோமா? கூடாதோ' என்று சிந்தித்துச் சற்று பயந்தவனாய் வீட்டுக்கு வந்தான். அவன் அப்படி எண்ணிக்கொண்டு வீட்டிற்கு வரவும், மனைவியின் கோலத்தைப் பார்த்தால் ஆட்டமும், வலிப்பும், கண் செருகுதலும் பயங்கர



மாயிருக்கிறது. அதோடு அவள் 'உன்னை விட்டேனா கண்ணைக் கெடுக்கிறேன் பார்; குடியைக் கெடுக்கிறேன்பார்' என்று ஆடினாள். உடனே அம்மன் வந்து இறங்கியிருக்கிறாள் என்று, இவன் ஓடிப் போய் அங்காடி சென்று குடம், சாம்பிராணி, பழம், தேங்காய் வாங்கி, பூமாலை படைத்து, கும்பிட்டு விழுந்து, பாதநமஸ்காரம் செய்து, 'தெய்வமே நான் ஒன்றும் அனுபவிக்கவில்லை, நீயே கொண்டுபோ, காப்பாற்று' என்று பிரார்த்தித்தான்.

அதுகண்டு அவள் 'அடுத்த வருஷம் நீ எனக்கு இந்த நாளிலே ஓர் பீடம்போட்டு, 7 ரூபாய்க்கு ஒரு கிடாயும் வாங்கி, பலி கொடுப்பாயானால் சரி, இல்லாவிடில் உன்னைக் கெடுத்துப்போடுவே'னென்றாள். பின்னும் 'அந்த மீன் சட்டியிலிருந்து குளத்துக்குப் போய்விட்டது, போய்ப் பார்த்துக்கொள்' என்று அலறினாள். சட்டியைப் போய்ப் பார்த்துச் சட்டியில் ஒன்றுமில்லாததுபற்றி 'சுவாமி கொண்டு போய்விட்டது' என்று பேதைமையாக நினைத்துக்கொண்டான் என்றார்.

அதற்குள்ளாக கீதமணி 'ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே கண்' என்றாற்போல இருவரும் பேச்சிலே மீனைச் சுட்டிக்காட்டிப் பேசவில்லையே அது என்' என்றான். அதற்கு உடனே வேதாபிமானி 'நீ சொன்னது சரி, புருஷன் காரியம் ஊருக்குத் தெரிந்தால் ஊர் கூட்டம்கூடிச் சாமிக்குக் கோபம்பிறவாமல் இவனை உபத்திரவித்து அபராதம் விதிப்பார்களே' என்று தான் இருபேரும் கூகமாய் வார்த்தை பிரஸ்தாபிக்காமல் பேசியிருக்கிறார்கள் என்றார். கீதமணி கதையின் முடிவையறிய ஆசித்துக் 'குறைக்கதையையும் சொல்லுங்கள் ஐயா' என்று கேட்டான்.

உடனே வேதாபிமானி சொன்னதாவது, "இச்சம்பவம் நடந்தபிறகு அடுத்த வருஷம் அந்த நாள் வரவைக் கவனித்துவந்த அவள் புருஷன் தெய்வத்துக்குக் கிடாய்வாங்க 7 ரூபாய் வேண்டுமே என்று கவலையினால் தூக்கம்பிடியாமல், ஏக்கம்பிடித்து, அக்கம்பக்கங்களில் சென்று கடன் கேட்க வீடுவீடாய் வந்து பணம் கிடையாமல் சோர்வுற்று, 'தெய்வக்குறைவு வந்து என்ன தீங்கு நேரிடுமோ, யார் யார் கண்ணையெல்லாம் கெடுத்துவிடுமோ, இதற்கு என்ன வழி செய்கிறது?' என்று தியங்கி, ஆழியிலகப்பட்ட துரும்புபோல் தள்ளம்பாறி என்ன செய்யலாமென்று மயங்கி நெடுமூச்செறிந்துகொண்டிருந்தான். இத்தனையையும் பார்த்த உள்வீட்டுக் கள்ளியாகிய அவன் மனைவி அவனண்டை வந்து, 'ஏது நிரம்ப சோர்வாயிருக்கிறீர்களே, சுகமில்லையோ, மனதினுள் கவலையோ' என்று வற்புறுத்தி நளினமாய்ப் பேசினாள். அதுகேட்டு அவன் 'ஏது நீ மறந்துபோனாயோ? போன வருஷம் 7 ரூபாய் கிடாய்வாங்கி, பீடம்போட்டுத் தெய்வத்திற்குப்

பலியிட்டாலாச்சுது; இல்லாவிடில் உன் கண்ணைக் கெடுக்கிறேன் பார்' என்று தேவதை உன்மேல் வந்து சொன்னதே, காலமானதே நாளை நாம் அப்படிச் செய்யாவிடில் யாது வந்து சம்பவிக்குமோ என்னும் பயத்தால் தயங்குகிறே"னென்றான். அதற்குள்ளாக அவள் சித்தமுருகிப் பெண்மதி பேதைமையானதால், எண்ணம் துறந்து தன் மன்னவனோடுரையாடி 'என்னை அடிப்பதில்லை என்று வாக்குறுதி கொடுத்தால் நான் உமது கவலை நீங்க காரியம் உரைப்பே'. னென்றாள்.

அவன் அப்படியே ஆகட்டுமென, நடந்த விசேஷத்தை ஒழியாதுரைத்து, 'அன்று எனக்குச் சாமியும் வரவில்லை, சாத்தாவும் வரவில்லை; நானே உமக்குப் பயந்து அவ்விதம் உரைபகர்ந்தேன். நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; கிடாயும் பலியிடவேண்டுவதில்லை' என்றாள். அதுகேட்டுப் புருஷன் கோபாவேசனாய் 'நீ மீனைப் புசித்ததுமன்றி என்னையும் உன் காலில் விழப்பண்ணினாயே' என்று ஏசிப் பேசி, 'யாரை நம்பினாலும் மாதரை நம்பலாகாதென்பது சரிதானே' என்றான் என்று கதையை முடித்து அவையெல்லாம் மனுஷர் கூடி ஏற்படுத்திய புராதனமான ஒரு குருட்டுப் பக்தியேயன்றி உண்மையன்றென விளங்குகின்றதல்லவா" என்றார்.

(இன்னும் வரும்)

Esther Devadas, Pannevelei.

## LYRIC

## இயேசுகிறிஸ்துவின்பேரில் பாடிய பாடல்

இராகம்—சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

வணங்குவோம் ஜெகஜோதி—யேசு
வல்ல பராபரனை—நாமநு
தினமுமே துதிசெய்து அவரின்
திருவடிகளைப் பணிந்து.
(யோவா. 8. 12.)

சரணங்கள்.

1. அண்டமும் பிண்டமுமே யாவும்
உண்டு செய்தபரனார்—அவரை
யன்றி மெய்யான தெய்வம் நமக்கு
ஒன்றுமே கிடையாது— வணங்கு.
(எபி. 1. 2, 3.)



2. வானமும் பூமியுமே—அவற்றுள்ள
வஸ்துக்கள் யாவையுமே—உண்மை
யான கடவுளென்ற தோரஞ்
ஞானத்தை விட்டகன்றே— வணங்கு.
(யாத். 20. 4.)

3. கையினால் செய் சொரூபம்—அதையே
கடவுளென்றடி தொழுகும்—வீண்
பொய்யதனை யேவிட்டு—ஒரே மெய்ப்
பரன் பதந்தனைத் தொட்டு— வணங்கு.
(லேவி. 26. 1.)

4. தன்னைத்தான் நேசிக்கும்—வண்ணம்
தன்னயலானை நேசி—என்ற
அண்ணல் நமக்குச் சொன்ன—முதுரை
தன்னை மறந்திடாமலே— வணங்கு.
(யாக். 2. 8.)

5. உச்சித ஊர் சேர—கர்த்தன்
ரட்சிப்பை நமக்கீந்தார் நாமவர்
பட்சம் மறவாமல் இனிமேல்
பாவம் புரியாமல்— வணங்கு.
(யோவா. 3. 16, 21.)

6. தேவன் தம்மையே தத்தம்—பண்ணி
சிந்தின திரு ரத்தம்—குணப்படும்
பாவிக்குப் பரிகாரம் நித்திய
பாக்கிய சிங்காரம்— வணங்கு.
(1 யோவா. 1. 7.)

7. ஜீவனின் அப்பமே—தாகம்
தீர்த்திடும் பானமே அவரை
ஆவலுடன் தேடி நாடிடும்
அன்பர்க் கடைக்கலமே— வணங்கு.
(யோவா. 6. 35, 53, 58.)

8. பாலனாய்ப் பிறந்துமே படாத
பாடுபட்டிறந்துமே மூன்றாம்
நாளுயிர்த்தெழுந்துமே—ரட்சிப்பை
நமக்கன்பாய்த் தந்தவரை— வணங்கு.
(ஏசா. 7. 14; 1 பேது. 2. 24; எபி. 9. 12.)

S. Arokiasawmi, Pondicheri.



## A SICK WOMAN'S FAITH

## வியாதிக்காரியின் விசுவாசம்

சில வருஷங்களுக்கு முன்னதாக லண்டன் பட்டணத்தில் ஓர் அம்மாள் இருந்தார்கள். அவர்கள் ஒருநாள், மழைகாலத்தில், மூன்று நாலு மைல் தூரத்தில் வியாதியாய்க் கிடந்த ஒரு பெண்ணைப் பார்க்கப்போனார்கள். அந்தப் பெண் மிகவும் எழை. அதனால் அந்தம்மாள் கூடையில் பால், காப்பி, ரொட்டி, முட்டை, பழம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு அவளுக்குக் கொடுக்கலாம் என்று புறப்பட்டார்கள்.

கொஞ்சதூரம் போனபின்பு புசல் உண்டாயிற்று. மழையும் காற்றும் அடித்தது. அதோடுகூட இருள் அதிகமானதினாலே வழி தெரியாமல் அதிக கஷ்டத்தோடு போனார்கள். இருந்தபோதிலும் வீட்டுக்குத் திரும்பிப்போகாமல், 'தேவன் என்னை அனுப்பின இடத்துக்குப் போகத்தான்வேண்டும்' என்று வழி கொஞ்சமாகிலும் தெரியாததினாலே ஒரு வண்டியைக் கூப்பிட்டு அதிலே எறிப்போனார்கள். வண்டிக்காரனும் இருட்டிலே வழிதெரியாமல் மெல்ல மெல்ல ஓட்டினான். அப்படியிருந்தும் வழிதப்பி போய்விட்டது. பிறகு அவர்கள் போகவேண்டிய வீட்டுக்குப் போய்ச் சேர வெகுநேரம் ஆய்விட்டது.



அந்தத் துரைசானி வீட்டுக்கதவைத் தட்ட ஒரு சிறு பிள்ளை கதவைத் திறந்து உள்அறைக்கு வழி காட்டினாள். வியாதிக்காரி அந்த அம்மாளைப் பார்த்து அதிக சந்தோஷப்பட்டு 'வாருங்கள், அம்மாள்! நீங்கள் இப்படிப்பட்ட புசலில் எப்படி வந்து சேர்ந்தீர்கள்? இங்கே மத்தியானங்கூட இராத்திரியைப்போல இருட்டாயிருந்தது' என்றாள்.

அந்த அறை மிகவும் சிறிதாயிருந்தபோதிலும் சுத்தமாயும் ஒழுங்காயும் இருந்தது. அடுப்பிலே தண்ணீர் கொதித்தது. மேசையில் பீங்கான் சாப்பாட்டுக்காக வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. வியாதிக்காரியின் கட்டிலின் பக்கமாக அவளுடைய மகள் உட்கார்ந்து தைத்துக்கொண்டிருந்தாள்.

இதெல்லாம் பார்த்துத் துரைசானி 'நீங்கள் சாப்பிடப் போகிறீர்கள்போலிருக்கிறது. இதையும் எடுத்துக்கொள்ளு அம்மா!' என்று சொல்லிக் கூடையைத் திறந்தார்கள்.

இதைக் கேட்டு வியாதிக்காரி அண்ணாந்து பார்த்து, கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினாள். பிறகு துரைசானியைப் பார்த்து, 'அம்மா! நீங்கள் தேவனுடைய தூதன்தான். அவரே உங்களை எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவரச் சொன்னார். நாங்கள் இன்றைக்குச் சாப்பிடவேயில்லை, ஆனாலும் தேவன் எங்களைப் பாதுகாப்பார் என்று அறிந்தேன்' என்று சொன்னாள்.

'ஆனாலும் பீங்கான் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றனவே! தண்ணீர் கொதிக்கிறதே!'

வியாதிக்காரியின் மகள் "ஆம் அம்மா! என் தாயாரே தண்ணீரைக் கொதிக்கவைத்துப் பீங்கான் போடச் சொன்னாள். நான் 'பீங்கான் என்னத்துக்கு? சமைக்க ஒன்றுமில்லையே' என்று சொன்னேன். என் தாயோ, 'என் மகளே! தேவனே சாப்பாடு கொடுப்பார். நான் வியாதிப்பட்டுப் பலவீனமாயிருந்த இந்த முப்பது வருஷகாலமாய் போஜனம் கொடுத்துவந்த அவர் கடைசியாக என்னைப் பசியினாலே சாகவிடுவாரா? அவர் உதவியை எப்படி அனுப்புவார் என்பது எனக்குத் தெரியாவிட்டாலும் அவரை நம்பியிருக்கிறேன்' என்றாள். அப்படியே, நமக்கு உதவிசெய்ய யாரோ வருவார் என்கிற நம்பிக்கையுடன் நாள் முழுவதும் காத்துக்கொண்டிருந்தாள். ஆனாலும் நீங்களே இப்பேர்ப்பட்ட மழையில் இத்தனை தூரம் வருவதாக நாங்கள் நினைக்கவே இல்லை. தேவன்தாமே உங்களை அனுப்பினார், அம்மா!" என்று சொல்லித் தேவனைத் துதித்தாள்.

## UNTRUTHFULNESS

## பொய் பேசல்

நம்மவரில் சிலர் 'எவளொருவள் ஒரு பொய் சொல்லுகிறாளோ அவளுக்கு ஒரு மாம்பழம்' என்று சொல்வதையும் அம்மாங்கனியை வேண்டிச் சிறுமிகள் பொய் கூறுவதையும் நாம் பலமுறையும் கண்டும் கேட்டும் இருக்கலாம். வேடிக்கைக்காகச் சிறுமிகளை இப்படிப் பழக்குவது, நாளடைவில் வேறு இடங்களில் கூடப் பொய்யே பேசுவதற்கு ஏதுவாகிறது. 'விளையாட்டு வினையாய் முடியும்.' ஒரு பொய் சொன்னால் அதை மறைக்க எத்தனையோ பொய் சொல்ல வேண்டும். இதன் பலன் யாவராலும் இகழப்பட்டு கடவுளுக்கும் விரோதமாவதே.

சிறுமிகளுக்கு அரிச்சந்திர ராஜன் கதையைப் பலமுறையும் எடுத்து உரைத்து, பொய் சொல்லாமல் இருக்கும்படி செய்யவேண்டும். குழந்தைகள் அடிபிடி வார்த்தைகளால் சண்டையிடுவதைக் கண்டு பெற்றோர்களாவது, உபாத்தியாயனியாவது அதட்டினால் அந்த நேரத்திலேயே அவர்கள், அவர்கள் குறைகளைச் சொல்லி அழுகிறார்கள். மெய்யவளை மேன்மைப்படுத்தினால் பொய் சொன்னவளை மெய் பேசுமாறு கண்டித்துப் புத்தி புகட்டல்வேண்டும். 'தொட்டிற் பழக்கஞ் சுடுகாடுமட்டும்.' சிறு பிராயத்திலேயே இவைகள் பிடிபடமுயலவேண்டும். மற்றும்,

'பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.'
'மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையாற்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.'

ஆதலால் குழந்தைகளை ஜாக்கிரதையோடும் கவலையோடும் சன்மார்க்கத்தில் பழக்கவேண்டியது பெற்றோர் கடன். L. N. V.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1912 ஷு செப்டம்பர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | தானி. | 10. | 10—21 | 11 | பு. | யோவா. | 2. | 1—12 | 21 | ச. | யோவா. | 5. | 12—23 |
| 2 | தி. | „ | 11. | 1—10 | 12 | வி. | „ | 2 | 13—25 | 22 | ஞா. | „ | 5. | 24—35 |
| 3 | செ. | „ | 11. | 11—20 | 13 | வெ. | „ | 3. | 1—13 | 23 | தி. | „ | 5. | 36—47 |
| 4 | பு. | „ | 11. | 21—33 | 14 | ச. | „ | 3 | 14—24 | 24 | செ. | „ | 6. | 1—13 |
| 5 | வி. | „ | 11. | 34—45 | 15 | ஞா. | „ | 3 | 25—36 | 25 | பு. | „ | 6 | 14—24 |
| 6 | வெ. | „ | 12. | | 16 | தி. | „ | 4 | 1—15 | 26 | வி. | „ | 6. | 25—40 |
| 7 | ச. | யோவா. | 1. | 1—14 | 17 | செ. | „ | 4 | 16—30 | 27 | வெ. | „ | 6 | 41—59 |
| 8 | ஞா. | „ | 1. | 15—28 | 18 | பு. | „ | 4 | 31—42 | 28 | ச. | „ | 6 | 60—71 |
| 9 | தி. | „ | 1. | 29—42 | 19 | வி. | „ | 4 | 43—54 | 29 | ஞா. | „ | 7 | 1—13 |
| 10 | செ. | „ | 1. | 43—51 | 20 | வெ. | „ | 5 | 1—11 | 30 | தி. | „ | 7. | 14—24 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# மாதர் போதினி

No. 178 அக்டோபர் 1912 No. 10

## THE LENT JEWELS—A JEWISH-TALE

## இரவல் நகைகள்

ஓர் ஊரில் குரு ஒருவர் இருந்தார். அவர் வேதத்தில் மிகுந்த தேர்ச்சிபெற்றவர். அதனால் அவர் பெரிய கோவிலில் வேதப் பிரசங்கங்கள் பல வெகு அருமையாய்ச் செய்து பெரிய பேர்பெற்றிருந்தார். அவருக்கு நல்ல பிள்ளைகள் இரண்டு. அவர்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாராட்டி வளர்த்துவந்தார்.

இப்படியிருக்க ஒருநாள் சாயந்தரம் அவர் வீட்டுக்குள் நுழைந்த
தும் நுழையாததுமாயிருக்க, அவருடைய அருமை மனைவி 'என்ன
போங்கள்! இன்றைக்கெல்லாம் என் மனம் கலங்கப்பட்டுக்கொண்டே
இருந்தது. இன்னது செய்வது என்பது தெரியாமல் மலைப்படைந்
தேன். நீங்கள் வந்தது வெகு நல்லதாயிற்று' என்றாள்.

வேதோத்தமரான அவளது பர்த்தாவும் வெகு பொறுமையாய்
நடந்த சங்கதியை விசாரித்தார். அவருடைய பத்தினி 'பாருங்கள்!
சில வருஷங்களுக்குமுந்தி சிநேகிதர் ஒருவர் விலையுயர்ந்த ஆபரணங்
கள் சிலவற்றை என் வசம் ஒப்புவித்தார். பிறகு வெகுநாள் அந்த
நகைகளைப்பற்றி அவர் விசாரிக்கவா, அல்லது அவற்றைத் திரும்பக்
கொடு என்று கேட்கவா, ஒன்றுமே இல்லை. இன்றைக்கு இருந்தாற்
போலிருந்து அவைகளைக் கொடு என்கிறார். அது நியாயமா? இத்
தனை நாளும் அவைகளை நான் எவ்வளவோ அருமையாய்ப் பாவித்து
வைத்திருந்தேனே! அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?
அவற்றை முறுமுறுக்காமல் கொடுத்துவிடவேண்டியதுதானா! இவை
நமக்குச் சொந்தம் என்று இத்தனை நாளும் இருந்தேனே என்பதாக
வருத்தப்படவேண்டாமா? நீங்களே சொல்லுங்கள்' என்றாள்.

அதற்குக் குரு 'சரிதான்! இதில் ஒருவரைக் கேட்பதற்கு என்ன இருக்கிறது? செய்யவேண்டியது இன்னதுதான் என்பது உனக்கே வெட்டவெளியாய்த் தோன்றுமே! இதற்கென்று இரவல் கொடுத்தவைகளை மறுபடி கேட்காமல் இருப்பார்களா? கேட்டால் இதோ என்று கொடுத்துவிடுவதற்கில்லாமல் மனவருத்தம் என்ன? இத்தனை வருஷகாலம் அவற்றை நம்மிடம் விட்டிருந்ததே பெரிய காரியம் என்று சந்தோஷப்படவேண்டியதே ஒழிய இதில் விசனப்படுவதற்கு என்ன இருக்கிறது?' என்றார்.

'சரி! ஆனால் அப்படியே செய்கிறேன். நீங்கள் சொல்லுகிறதே சரி. இப்போதாகட்டும் இனிமேலாகட்டும் அது நல்லது என்றே நினைப்போமாக' என்று சொல்லிக்கொண்டே அவரை உள்வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே கட்டிலில் பக்கம்பக்கமாய் ஜீவன்போய்ப் படுத்துக்கிடந்த தங்கள் அருமைக் குழந்தைகள் இரண்டையும் காண்பித்தாள்.

தம் மக்கள் இருவரையும் அந்தப் பரிதாப நிலைமையில் பார்த்த குருவும் தமக்குத் தேவன் இரவலாகக் கொடுத்து மறுபடியும் வாங்கிக் கொண்ட அருமையான ஆபரணங்கள் இவர்களே என்பதை அறிந்து தலைகுனிந்து கடவுளை ஸ்தோத்திரித்தார்.


'கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் வாங்கிக்கொண்டார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்.'

## EDUCATION THROUGH MANUAL TRAINING

## அஸ்தாப்பியாச வித்தை

அஸ்தம் என்றால் கை, அப்பியாசம் என்பது பழக்கம், வித்தை கல்வி. அஸ்தாப்பியாச வித்தை என்றால், கையை நன்றாய்ப் பழக்கி அதன்மூலமாய்க் கற்பது என்பது பொருள். இந்தவிதக் கல்வி ஞானத்திற்குத் தகுந்த மார்க்கமும் வெகு அருமையானதும் ஆகும். இப்படிப்பட்ட ஏற்பாட்டின் விபரத்தைச் சிறிது இங்கே சொல்லுவோம். இந்த முறையைக் கிண்டர்கார்ட்டன் முறையை முதலில் ஏற்படுத்திய பிரோபெல் (Frobel) முதலான அநேகர் வெகுகாலமாக அங்கிகரித்துப் போதித்துவந்தும் அது தற்காலத்திலேதான் சாதாரண பள்ளிக்கூடங்களிலும் அநுசரிக்கப்படலானது. அதிலும் நம் இந்தியாவில் அது வரத்தொடங்கியது நேற்று என்றும் சொல்லலாம் போல் தோன்றுகிறது. திருவனந்தபுரத்தில் இது சம்பந்தமாய்த் தக்க முயற்சி நடந்துவருகிறது.





திருவனந்தபுரம் டிரெய்னிங் காலேஜ்

சீராக நடந்துவரும் பள்ளிக்கூடங்கள் காலேஜுகள் முதலானவற்றின் தலைவர்கள் எல்லாருமே அஸ்தாப்பியாச வித்தையின் விசேஷத்தை வெகுதூரம் மெச்சிப் பேசுகிறார்கள். அதனால் காரண காரியங்களைச் செவ்வையாக அறிந்து அநுபவ பூர்வமாய் ஞானம் உண்டாகிறது. எத்தேசத்திலும் இனி இந்த முறையே வழங்க வந்துவிடும்; அது அத்தனை விரைவாகப் பரவிவருகிறது என்று பெரியவர்கள் எல்லோரும் வெகு நிச்சயமாய்ச் சொல்லுகிறார்கள்.

இனி இதற்கு அஸ்தாப்பியாசம் என்றே பேரிடாமல் அதனோடு மிகுதியும் பொருந்தியே தீரவேண்டிய கண்ணையும் சேர்த்து அந்த நேத்திராப்பியாசம் என்றும், வேலைசெய்து படிப்பதாகிறதினால் கிரியா படிப்பு என்றும், தொழிற்படிப்பு என்றும் பற்பலவிதமாகப் பேர் வைத்திருக்கிறார்கள். பேர் என்னவாக இருந்தாலும் என்ன! நமக்கு வேண்டியது அறிவு விருத்தியாக வேண்டும் என்பது ஒன்றே. இதை எப்படியும் ஒரு முறை மார்க்கம், வழி அல்லது சாதனம் என்று சொல்லவேண்டுமே தவிர இதை நாம் போதிக்கவேண்டிய ஒரு தனிப் பாடமாக நினைக்கலாகாது. இந்த முறையைப் பாலர் வகுப்பு முதற்கொண்டே ஆரம்பித்து ஒழுங்காய்க் கிரமப்படி வகுப்பு உயர உயர அதுவும் வளரும்படியாகச் செய்யவேண்டும்.

அறிவிலி வகுப்புக்கு பிரோபெல் போக்கை யொட்டிய முறையே ஏற்றது. அதில் அவர் சொல்லியுள்ள கட்டை முதலானவைகளைத் தகுந்தபடி வைக்கும் விளையாட்டில் வேடிக்கையோடு வேடிக்கையாக அந்த அறியாக்குழந்தைகள் அறிவை அடைகிறார்கள். அப்படிக்

கிரமப்படி கட்டைகளை அமைப்பதில் புடிப்புக்கு அவசியமான அவர்களுடைய ஸ்வபாவ ‘அங்கச் சேஷ்டை’ அல்லது சுறுசுறுப்பு உபயோகமாகிறது. அதே விளையாட்டுக்களாலும் அவற்றில் உபயோகிக்கும் பொம்மைகள் முதலியவற்றால் அவர்களுடைய தேகம் அறிவொடு ஒழுக்கம் ஆகிய எல்லாமே விருத்தியடைகின்றன. இன்னும் கீழ்வகுப்புகளுக்கு (1) களிமண், (2) காகிதம், (3) அட்டை இவைகளால் உருவங்கள் அமைத்தல் நல்ல வித்தியாமார்க்கம்.

களிமண் அல்லது அதுபோன்ற சுலபமாய் உருவாக்கத்தக்க மற்றெதையும் உருச்சமைப்பது உசிதமான வேலையாகும். அதனால் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியங்கள் அஞ்சில் மெய்யும் கண்ணும் கூர்மையடைந்து ஸ்பரிசமும் ரூபமும் எளிதில் விளங்கலாகி அறிவின் விருத்திக்கு எது உண்டாகிறது. இவை இரண்டும் மிகுத்த விருத்தியடைந்தால் கடைசியில் நல்ல சிற்பியாகலாம். இதற்குக் களிமண் ஒன்றே போதும். அது நம் தேசத்தில் ஏராளமாய்ச் செலவில்லாமல் கிடைக்கிறது. இயற்கைப் பொருட்பாடம், பூகோள பாடம் இவைகளில் இது அதிக உபயோகமானது.


இரண்டாவது காகிதத்தை ஒழுங்கான உருவங்களைக் காட்டும்படியாக மடித்தல். அதனால் அந்தந்த உருவங்கள் மனசில் படியும்; வரவா ரூப அமைப்புக்கு வேண்டிய விபரங்கள் இன்னின்ன என்பதும் தெரிந்து கடைசியில் தன் சுதாவில் தன் மனம்போல் உருவமைக்கும் விசித்திர வல்லமையும் வந்துவிடும்.

மூன்றாவதாகிய அட்டையால் உருவமைத்தால் முந்திய இரண்டைவிட மிக உறுதியானதும் அதிக பிரயோஜனமானதுமாய் இருக்கிறது. இதை அறியும் குழந்தைக்குத் தன் வேலையில் பின்னும் பின்னும் ஊக்கம் எழும். இப்படி வித்தியார்த்திகளுக்குச் சாமானியத்தில் ஊக்கம் ஊட்டுவது சாமானிய காரியமல்ல என்பது உபாத்திமைத் தொழிலில் உழைத்தவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இப்போது முன்னிலும் அளவுநுட்பம் அதிகமாகத் தெரிகிறது. ஒருவன் தன்னிஷ்டம்போல் அழகிய உருவொன்று செய்யலாம். இதன் வளர்ச்சி பின் மரம் உலோகம் முதலியவற்றால் உருச்சமைக்க உதவியாயிருக்கும்.

இனி மேல்வகுப்புகளுக்கு மேலான அஸ்தாப்பியாசம் மரவேலை உலோகவேலை அல்லது இரண்டும் கலந்துவரும் நல்ல வேலை ஆக இருப்பது நன்மைதரும்.

மரவேலை எத்தனையோ விதங்களில் பிரயோஜனகரமானது. அதிலும் எதையும் காரியார்த்தமாக்கிக்கொள்ள விரும்பும் இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட உபயோகமுள்ள தொழில் பிள்ளைகளுக்குத் தெரிந்திருப்பது எவ்வளவு நல்லது பாருங்கள்! பல காரணங்களால்





அட்டை மர் உலோக மாதிரிகள்

மரமே வேலைக்கு உகந்தது என்பது சாதாரண அநுபவத்திலும் கண்டறியக்கூடியதே. மரம் இயற்கையில் எதேஷ்டமாய்க் கிடைக்கிறது; விலையும் சரசமே. அது அதிக கனமில்லை, உறுதியானது, சுத்தமானது, உடம்புக்கும் யாதொரு கெடுதியையும் செய்யாதது. நமக்குத் தேவையான உருவத்தில் அதைச் செய்துவிடலாம். சித்திரம் கற்பிப்பதற்கும் கணிதம் போதிப்பதற்கும் மரவேலை வெகுதூரம் உதவிபுரியும்.

இந்தவிதமான மரவேலைசெய்து அதன்மூலமாய்க் கல்விகற்றுவரும் பிள்ளைகள் இங்கிலாந்தில்மாத்திரம் பதினொன்று பதினான்கு வயசுக்கு உட்பட்டவர்கள் இரண்டரை லக்ஷம். இதில் மற்றவித அஸ்தாப்பியாசம் செய்துவரும் பிள்ளைகள் இல்லாமலே அத்தனை பேர். இதற்கு ஏற்ற பள்ளிக்கூடம் ஒன்றை ஸ்தாபிப்பது வேண்டுமானால் அதிக பணம் பிடிக்கும்; அதைப் பின் நடத்துவதற்கு அதிகமான செலவு ஆகாது.

(இன்னும் வரும்.)

## SONG. ‘BRIEF LIFE IS HERE OUR PORTION’

## நம் வாழ்வு

1. சொற்பகாலம் பூமியில்
துக்கமும் தொல்லையே
நித்தியகால மோட்சத்தில்
கண்ணீரில்லா வாழ்வே.

2. கொஞ்சகாலம் பாடுபின்
நித்திய ஆறுதலே.
அழிவுள்ள பாவிகட்
கானந்த வாசமே.

3. இப்போ யுத்த காலம்தான்
இனிமேல் வெற்றியே
சுத்த நித்ய கிரீடம்
சுகம் பெறுவோமே.

4. இப்போ யுத்த காலம்தான்
இப்போ விசுவாசம்
பாபிலோனுடன் தானே
சீயோன் யுத்த காலம்.

5. நாம் நம்பும் நாதனார்
அப்போ தோன்றுவார்
அவரை நோக்கிப் பார்ப்பவர்
அவரைப் பற்றுவார்.

6. காலைவேளை தோன்றிடும்
இருளும் நீங்குமே
பகல்போல் பிரகாசிப்பார்
பக்தர்கள் அப்போதே.

7. அங்கே எங்கள் தேவனை
நித்தமும் நோக்குவோம்
கண்முன் கிருபைநாதனைக்
கண்டு வணங்குவோம்.

8. இன்பநேச தேசமே
மீட்கப்பட்டோர் மோட்சம்
இன்பநேச தேசமே
பக்தர் நோக்கும் மோட்சம்.

9. பிதா ஆவியுடனே
சேர்ந்த குமாரனே
இன்ப நாடு சேருமேன்
கிருபைவள்ளல் யேசே.

J. I. C.



## THE ORIGIN OF CHESS

## சதுரங்க விளையாட்டின் பூர்வ சரிதை

நம்மில் எல்லாருக்கும் சதுரங்கம் ஆடத் தெரியாவிட்டாலும் அது இப்படிப்பட்டது என்பது யாவருக்குமே தெரியலாம். ஆனால் அதன் பூர்வோத்தரம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம்.

சதுரங்க விளையாட்டைக் கண்டுபிடித்தவர் யார்? ஆதியில் இலங்கைத்தீவை ஆண்டவன் ராவணன். அவனை மகா கொடியன் என்கிறார்கள். அவனால் உயிரிழந்த புருஷர்களின் தொகையை எழுதித் தொலையாது, எட்டில் அடங்காது. அவன் அக்கினிக்கு இரையாக்கின ஊர்கள் எத்தனையோ! அக்காலத்தில் அவன் பேர் சொன்னால் அழுத பிள்ளையும் வாய் மூடுமாம். அப்படிப்பட்டவனுக்கு மனைவியாக இருந்தவள் மந்தோதரி என்பவள். அவள் மகா புத்திசாலி. சமயத்துக்கேற்ற மந்திரியும் தந்திரியும் ஆனவள். 'என்ன! நம் புருஷர் சதா சண்டைபிடித்துக் கொலைசெய்வதையே விளையாட்டாகக் கொண்டிருக்கிறார். இதை அடக்கி நல்வழிப்படுத்த என்ன செய்வது' என்று ஆழ்ந்து யோசித்தாள். 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி.' அவள் விளையாட்டு யுத்தம் ஒன்றைக் கண்டுபிடித்தாள். அதிலும் ரத கஜ துரக பதாதிகள் உண்டு; கொலையுண்டு; சிறைப்படுத்தல் உண்டு. ஆதலால் ராவணனும் தன் தோள்தினவு எடுத்தபோதெல்லாம் இதை ஆட உற்சாகத்துடன் உட்கார்ந்துவிடுவான். பிறஉயிர்கள் துன்பம் இல்லாமல் சுகமாய் இருக்கும்.

இந்த ஸங்கதி உண்மையானால் மந்தோதரி புருஷனுக்கேற்ற மனைவி என்பதில் ஆக்ஷேபம் இல்லை

## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி.)

அதுகேட்டுக் கீதமணி மெய்யெல்லாம் குலுங்க நகைத்து உள்ளதைச் சொல்லி 'உதைபட்ட பாவி இவள்தான்' என்றான். இப்படிப் பேசிக்கொண்டு வர நேரம் ஆகிச் சூரியன் பொழுதுசாய்ந்து போகும் மாலைமயங்கும் நேரத்திலே கோவைகுளம் வந்து சேர்ந்தார்கள். அதிலே பெரிய சிலுவை நடப்பட்டிருந்த கோயிலும், அதற்கடுத்தாற்போல் நெருங்கிய வீடுகளுள்ள 'பற்பல! தெருக்களும்,

சந்து முடுக்குகளும், மெத்தை வீடுகளும், மச்சு வீடுகளும், காரை வீடுகளும், கூரை வீடுகளும், பற்பலவிதமாய்ச் சமைக்கப்பட்டு எல்லாம் தீபங்களேற்றிக் கண்களுக்கு மிகவும் சோபிதமாய்த் தோன்றின. லோத்து என்பவருக்குச் சோதோம் கண்ணுக்குக் குளிர்ச்சியாய்த் தோன்றினதுபோல இவர்களிருவருக்கும் தங்க நல்ல வசதியான இடம் என்றறிந்து, அடுத்தாற்போல் ஒரு வீட்டின் திண்ணையிலே தங்கலாமா என்று உத்தேசித்து இருவரும் அதிலே சற்று உட்கார்ந்தார்கள். சற்றுநேரம் பொறுத்து அடுத்த வீட்டுக்காரன் ஒருவன் வந்து, 'நீங்கள் எவ்விடத்தார், என்ன விசேஷமெ'ன்று உரையாடினான். அந்நேரத்தில் வீட்டுக்குள்ளிருந்த பெரிய மனுஷி வெளியே வந்தாள். வந்ததும் 'இவர்கள் பதிதரைப்போ விருக்கிறார்களே'யென்றும், 'இவர்களுக்கு இடம் கொடுத்தால் சாமியார் சண்டைபிடித்து அபராதம் போடுவாரே' என்றும் சொன்னாள்.

அதுகேட்டு அங்கு வந்திருந்த பக்கத்து வீட்டுக்காரன், 'ஐயோ பாவம், இருட்டு வேளையிலே எங்கே போவார்கள். இராமட்டுக்கும் இருந்து விடியப் போய்விடுவார்கள்' என்றான். அதற்கு வீட்டுக்காரி, 'பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுதானும் பேசாதே' என்ற சுலோகப்படி 'இரவில் நடந்த காரியம் பரதேசி தபால்போலப் பணங்காசு செலவின்றிப் பறந்தோடி சுவாமி காதிற்கு எட்டிவிடும். திட்டமாய் எனக்கு ரூபா 10 அபராதமும் பழுத்துவிடும்; திண்ணமே' என்று அங்கலாய்த்தாள்.

அதுகேட்டு வேதாபிமானி, 'அம்மாள்! உங்களுக்கு ஒரு இடைஞ்சலும் உண்டாகாமல் நாங்கள் இதோ போய்விடுகிறோம். பரலோகத்திலே உங்களை ஏற்றுக்கொள்வாருண்டாக இப்பூவுலகிலே அநீத உலகப் பொருள்களால் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்ற வாக்கியத்தை உங்கள் சாமியார் சொல்லித் தரவில்லைபோலிருக்கிறது. இதுபோல் இயேசு சுவாமியின் தாயார் கன்னிமரியம்மாளும் பெத்லெகேமூரிலே இடம் கிடையாமல் மாட்டுக்கொட்டிலிலே இயேசு சுவாமியைப் பெற்றார்கள். அதுபோல் எங்களுக்கு ஒரு இடம் கிடையாதா?' என்று சொல்லி மூலைமுடுக்கெல்லாம் தேடி, ஒரு இருண்டதும் குடியில்லாததுமான வீட்டில் வந்து தங்கினார்கள். சீஷன் போஜனத்திற்கு என்ன செய்கிறது என்று சாப்பாட்டு விடுதிதேடி சாதம் வாங்கப்போனான். அங்கே சத்தியதாஸ் என்ற கிறிஸ்தவனான ஒரு வாலிபன் இவனைக் கண்டு பட்சமாய்ப் பேசி, சாதமும் வாங்கிக் கொடுத்து, 'எங்கே தங்கியிருக்கிறீர்களெ'ன்றான். அதற்குக் கீதமணி நடந்த வரலாற்றைச் சொன்னான். அதற்குச் சத்தியதாஸ் 'இங்கே எல்லாரும் உரோமான் மார்க்கத்தார்தான். ஆனாலும் இங்கேயும்



இரண்டு வீட்டுக்காரர் நமது சபைக்குச் சீக்கிரம் வருவார்கள்போலிருக்கிறது. அவர்கள் வீட்டில் போனால், உங்களுக்கு உண்ண ஆகாரமும், தங்க இடமும், படுக்கப் பாய் முதலியனவும் தாராளமாய்க் கொடுப்பார்களே. நானும் வரும்போது அங்கே தங்குவேன்' என்று




சொல்லிக்கொண்டு கீதமணியோடு வேதாபிமானி என்பவரைப் பார்க்கப் போனான். இங்கு வரவே இருண்ட இடத்தில் தன்னந்தனியாய் உட்கார்ந்திருக்கிற வேதாபிமானியைச் சத்தியதாஸ் கண்டு, 'வந்தனமையா பெரியவரே' என்றான். அப்போ பெரியவர் 'நீர் யார்

அப்பா?" என்றான். அதற்குச் சத்தியதாஸ், 'நான் இப்போ ஒரு கோல்போட்டர்' என்றான். 'இப்போது கோல்போட்டரென்றால் முந்தி எப்படியிருந்தாய், உன் வரலாறென்ன?' என்றார். அதற்குச் சத்தியதாஸ் 'நான் 18 வயதுவரை தேவனை அறியாத புறமதஸ்தனாய் இருந்தேன். அப்போ இதற்கடுத்த புதுக்கோட்டையில் ஒரு ஆபீஸில் இருந்தேன். அப்போ அந்த ஊர் சாப்பாட்டு விடுதியில் மாதம் 5 ரூபா கொடுத்துச் சாப்பிட்டுவந்தேன். அங்கே இன்னும் புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்தமைந்துள்ள என் வயதுள்ள வெள்ளையப்பனென்ற ஒருவர் இருந்தார். அவரும் அந்த விடுதிக்குச் சாப்பிட வரும்போது நானும் வந்து சேருவேன். அப்படிச் சந்திக்கும் சமையத்தில் நான் அவரைக் கேலிபண்ணி, கிறிஸ்துமார்க்கத்தில் என்னத்தைக் கண்டாய் என்று பலவாறாகக் கோபமூட்டிப் பேசிப் பார்ப்



பேன். ஆனால் அந்தப் பையன் சாந்தமாய்ப் புன்சிரிப்போடு வேதபுத்தகத்தைக் காண்பித்து இதை வாசிப்பீரானால் கோபப்படமாட்டீர். சத்துருக்களை நேசிக்கவும், பொல்லாப்பு செய்பவர்களுக்கு நன்மை செய்யவும், ஒரு கன்னத்தி லடித்தால் மறுகன்னத்தைக் காட்டவும் வேண்டும் என்று இப்புஸ்தகம் போதித்திருக்கிறதுமல்லாமல் இயேசு சுவாமி தம்மைக் கொல்லவந்த சத்துருக்களுக்காக ஜெபம்செய்து அவர்களுக்காக ஜீவனைக் கொடுத்து நடந்து மாதிரி காண்பித்திருக்



கிறார். இதைப்போல இந்து புராணங்களில் உண்டோ என்று பாரும்' என்றார். பின்னும் நான் அதைக் கவனியாமல் வழியருகே விழுந்த விதைபோலப் போகவிட்டுக்கொண்டிருந்தேன்.

இப்படிச் சிலநாள் கழிந்து திடீரென வெள்ளையப்பன் விஷபேதி கண்டு இறந்துபோனான். எனக்கு அது மனதுக்கு ஆறாத்துயரமாயிருந்ததோடு, அவன் முகம் மறைந்துபோனாலும், அவன் உரைத்த சொற்களெல்லாம் என்னுடைய காதிலே ஒலித்துக்கொண்டிருந்தன. பிறகு நான் அவன் இறந்த வீட்டில்போய் அவன் வரலாற்றைக் கேட்க ஆசித்து அந்த ஊர் ஐயரவர்களிடம் விசாரிக்க, அவர்கள் 'வெள்ளையப்பன் உரைத்த சத்தியங்களைக் கேட்டிருக்கிறீரே, அவன் வாசித்த வேதாகமத்தை நீரும் வாசியுமெ'ன்று புத்தகத்தைக் கொடுத்தார்கள். நான் அதை நன்றியோடு பெற்றுக் கருத்தோடு வாசிக்கத் தொடங்கினேன். அப்போது தேவாவியின் அருள் என்னிடத்தில் கிரியைசெய்ததுமன்றி, வெள்ளையப்பனுடைய சடுதி மரணம் என்னைச் சீக்கிரமாய்க் கிறிஸ்துவண்டைக்கு வழி நடத்த ஏதுவாயிருந்தது.

அப்படியே நான் கிறிஸ்தவனாக விரும்புவதை, எனக்கு வேதபுத்தகம் தந்த ஐயரவர்களிடம் சொல்ல, அவர்களும் ஆனந்தக் கடலில் மூழ்கி, 'இழந்துபோன வெள்ளையப்பனுக்குப் பதிலாக, அவனைக்கொண்டே இந்தப் பிள்ளையாண்டானைத் தந்தீரே' என்று கர்த்தரைப் புகழ்ந்து, 'இது எங்களுக்கும் பரலோகத்திலே தூதர்களுக்கும் சந்தோஷம். ஏனெனில் மனந்திரும்புகிற ஒரே பாவியைக்குறித்துப் பரலோகத்திலே சந்தோஷம் உண்டாயிருக்குமென்று இயேசு ரட்சகர் சொல்லியிருககிறார்' என்று சொல்லி, 'முடிவுபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவகிரீடம் பெறப் பாத்திரனாவீர்' என்று சொல்லி ஜெபித்துப் பள்ளிக்கூடத்தில் வேதம் கற்பித்து, 4 வருஷங்களுக்குப் பின்னர் இந்தக் கோல்போட்டர் வேலையைத் தந்திருக்கிறார்கள்.

இதுபரியந்தம் அவர் என்னை ஆச்சரியமாய் நடத்தியிருக்கிறார் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, சேஷன் 'நேரமாகிவிட்டது, சாப்பிடுங்கள்' என்றான். அதற்கு வேதாபிமானி 'இருட்டில் எப்படிச் சாப்பிடுகிறது. ஒரு விளக்கு கிடைத்தால் நல்லது' என்றார்.

அதற்குள்ளாக சத்தியதாஸ் தனக்குப் பழக்கமாயிருந்த வீட்டிற்குப் போய்விடலாம் என்றான். அப்படியே பெரியவரும் சம்மதிக்க, மூன்றுபேரும் சத்தியதாசனுக்குப் பழக்கமாயிருந்த மரியசூசை என்பவர் வீட்டுக்கு வந்தார்கள். அங்கே வரவும், அவர் மரியாதையாய் இவர்களை ஏற்றுக்கொண்டு வேண்டிய உபசாரம்செய்து இருத்திக்கொண்டார். அதுகண்டு பெரியவர் ஆச்சரியமடைந்து 'நீர் பாப்புமார்க்கத்தமைந்தவரல்லவா? அப்படியிருக்க சாமியாருடைய தண்

டனேக்குச் சற்றும் பயமின்றி எங்களை இருக்கச் சொல்லுகிறீரே; உமக்கு மிகவும் வந்தனமென்று கீதமணி கொண்டுவந்த சாப்பாட்டைப் புசித்து, தாகசாந்தி செய்துகொண்டு, மரியசூசை என்பவரிடம் சற்று பேசிக்கொண்டிருந்தார். கீதமணி சத்தியதாசனைக் கூட்டிக்கொண்டு கோவிலைப் பார்த்துவரும்படி உத்தரவு பெற்றுப்போனான்.

அதற்குப் பிறகு மரியசூசை என்பவர் வேதாபிமானியிடம் மார்க்க உபதேசங்களின் பேதாபேதங்களைக் கண்டுணருமாறு உரையாடத் தொடங்கி 'உம்முடைய மார்க்கம் எத்தன்மையுள்ளதென்று அறிய விரும்புகிறேன். இப்போ அங்கங்கே காணப்படுகிற எஸ், பி, ஜி., சி. எம். எஸ்., லண்டன் மிஷன், அமெரிக்கன் உவெஸ்லியன் மிஷன், மெதொடிஸ்ற் சபை, கிரேக்க சபை, பாப்டிஸ்ற் மிஷன், ஜர்மன் லுத்தரன் முதலிய மிஷன்களெல்லாம் பற்பல இடங்களில் ஸ்தாபகமாயிருக்கின்றனவே. ஆனால் இவற்றுக்கெல்லாம் முந்திய எங்கள் சபையாகிய ரோமான்சபை பிரபலமாயிருந்து, அதிலிருந்தும் அதற்குப் பிறகே மற்ற மிஷன்களெல்லாம் உற்பத்தியாயின என்கிறார்களே. அந்தத் தாய்ச்சபையைத் தள்ளி மறந்துவிடலாமா?' என்று கேட்டார்.

அதற்கு வேதாபிமானி 'எல்லாவற்றிற்குமுன்னதாக இயேசுவின் சபைதான் அஸ்திபாரம். அதற்குப் பிறகு பேதுரு என்பவருடைய பிரசங்கத்தினால் ஒரே நாளிலே 3000 பேர் குணப்பட்டுச் சபையைச் சேர்ந்தார்கள். அவர்கள் பேதுருவினுடைய அதிசய கிரியையைக் கண்டபோது வரவர அவனை மிகவும் மதித்துவந்தார்கள். அப்படியே பேதுருவையும், யேசுவின் தாயாகிய கன்னிமரியம்மாளையும் முக்கியப்படுத்திப் படங்களை வைத்ததுமல்லாமல், சுரூபங்களை வைக்கும் வழக்கத்தையும் ஆரம்பித்தார்கள். அதினாலே குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டு வந்ததுபோல், அதிக பக்தியாயிருக்கிறோமென்று தேவனுக்குச் செலுத்தவேண்டிய கனத்தை மனிதருக்குச் செலுத்தினதினால் தவறுதலுக்கு ஆளானார்கள். அதினாலும் இன்னும் தனிப்பாவசங்கீர்த்தனமும், பாவமன்னிப்புச் சீட்டுக்கொடுப்பதும் ஆன சில கொள்கைகள் கேட்டுக்கு ஆதாரமாயிருந்ததுபற்றி, ஜனங்களுக்கு வெறுப்பு உண்டாயிற்று. இதுவுமன்றி யேசு சுவாமியின் திருவசனமடங்கிய சத்தியவேதமாகிய விளக்கை ஜனங்களுக்குக் கொடாமல், இருட்டிலே தடவித் திரியும்படி, புத்தியின் கண்ணைக் குருடாக்கியிருந்தார்கள்.

இதிலிருந்து சத்தியவேத மாட்சிமையின் ஒளியண்டை வந்தவுடனே தங்களுடைய குறைவுகளைக் கண்டு வெட்கப்பட்டு, துக்கப்பட்டு விசுவாசபலத்தோடே லுத்தர் எதிர்த்துநின்று சபைகளைச் சீர்திருத்தி



னார். பாப்புமார்க்க சபையிலுள்ள தகப்பனாகிய சினிக்கி என்பவர் எழுதிய புஸ்தகத்தில் 50 வருஷமாகக் கண்கண்ட அனுபவ சாட்சியைக் கூறியிருக்கிறார். அதை வாசித்தால் உமக்குத் தெளிவாய் விளங்கும்' என்றார். அதற்குள்ளாக கீதமணியும் சத்தியதாசனும் வந்து சேர்ந்தார்கள்.

வந்ததும் வேதாபிமானி, 'என்ன கீதா கோவிலெல்லாம் உள்ளும் புறம்பும் சுற்றிப் பார்த்தாயா? என்னவாயிருந்தது' என்றார். அப்போது கீதமணி 'என்ன அழகாயிருக்கிறது, தீபாலங்காரமே அதிகம், அதிலும் பற்பலமாதிரி சுரூபங்கள் வைத்திருக்கின்றன. யேசுவானவர், கன்னிமரியம்மாள் மடியில் குழந்தையைப்போலேயும், பிதாவானவர் பழுத்தபழமாய், தாடிவைத்து, நரைத்தமுடியும், திரைத்த உடலுமாய்க் கிழவன்போலேயும், பரிசுத்தாவி புறா ரூபமாகவும் வரையப்பட்டிருக்கிறது. அன்றியும் இன்னும் அநேக படங்களும் வரைந்து போட்டிருக்கின்றன. அஞ்ஞானக் கோவிலிலே கறுப்பு கறுப்பான சொரூபங்களிருக்கின்றன. இங்கே வெள்ளைநிறமான சுரூபங்களிருக்கின்றன' என்றான்.

(இன்னும் வரும்.)

E. M. D.

## BIRDS AND TREES

## மரங்களுக்கும் குருவிகளுக்கும் உள்ள பரஸ்பர வுபகாரம்

மரங்களினால் குருவிகளடைகிற நன்மைகளிலொன்று. குருவி மரத்தின்மீது உட்கார்ந்து கூவுவதினால் அதன் துணை அங்குவரும். இன்னொன்று, இம்மரம் குருவிகளை வெயில், மழை, குளிர் முதலானவைகளினின்று காப்பதற்கு ஏதுவாயுமிருக்கிறது. எங்ஙனமெனில், இக்குருவிகள் தாங்கள் வசிக்கும் கூடுகளை அங்கே வெகு சுலபமாய்க் கட்டுகின்றன. மேலும், அம்மரத்திலைகளே வெப்பம் முதலானவைகளினின்றும் அவைகளைக் காக்கின்றன. அம்மரத்தின்மீது வசிப்பதால், தூரத்திலுள்ள பொருள்களை அவைகள் எளிதில் காணக்கூடும். விருட்சங்கள் இவைகளுக்குத் தேன், காய் முதலிய ஏனைய பொருட்களையும் உணவாகக் கொடுக்கின்றன. இந்த உபகாரங்களுக்கு மரங்கள் பட்சிகளினால் அடையும் பிரதி பயன்கள். மரம் நன்குவளரத் தடைப்படுத்துகிற கிருமிகளையும் பூச்சிகளையும் இப்பட்சிகள் கொன்றுவிடுகின்றன. சில ஜாதிக்குருவிகள் வேர்களை நாசமாக்கும், புழுக்களை அழித்து மரங்களை வளரச் செய்கின்றன. இன்னும் சில குருவி



கள் பட்டைகளையும், அடிமரத்தையும் அரிக்கின்ற புழுக்களைக் கொன்று தின்றுவிடுகின்றன. சில ஜாதிக்குருவிகள் மரத்தினிலையை உண்ணும் பூச்சிகளைச் சாகடிக்கின்றன. விருட்சத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அழியாமல் காக்கின்ற குருவிகளும் சில உண்டு.

சில பக்ஷிகள், (விசேஷமாகத் தேன் குருவிகள்) பூவிலிருக்கிற மகரந்தப் பொடிகளை வேறு செடிகளுக்குக் கொண்டுபோகின்றன. சில வாயினாலும் மூக்கினாலும் கால்களினாலும் விதைகளையும் கொட்டைகளையும் தூரமான இடங்களுக்குக் கொண்டுபோவதினால் மற்ற இடங்களிலும் அம்மரங்கள் உற்பத்தியாகின்றன.

## KILL THAT FLY!

## ஈயைத் தொலைத்துவிடுங்கள்

முன்னொருதரம் நம் மாதர் போதினியில் 'அசுத்தத்தின் ஆபத்து' என்றதின்கீழ் அசுத்தத்தினால் அநேகவகையான ஈக்கள் பல்கிப் பலவித விஷநோய்களுக்குக் காரணமாவதை விளக்கியிருந்தது சகோதரிகளுக்கு ஞாபகமிருக்கலாம். இதைப்பற்றி அமெரிக்கா முதலிய பல நாகரீகம் முற்றிய பாகங்களில் பலமான படையெடுப்புக்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. நாமும் நம் தேசத்தில் அத்தகைய நடவடிக்கைகளை நன்றாய்த் தெரிந்துகொண்டு அவைகளைக் கையாடு



வோமானால் பிளேக் காலரா முதலிய பல கொடிய தொத்துநோய்கள்
இவ்வளவு தூரம் பரவ இடம் உண்டாகாது. நம் நாட்டு மரணசங்கை
யும் மிகத் தாழும்.
அமெரிக்காவில் போஸ்டன் என்றொரு பெரிய பட்டணம் இருக்
கிறது: அதில் 'மாதர் முனிசிபல் ஸங்கம்' ஒன்று கூடி 'ஈயைத்
தொலைத்துவிடுங்கள்' என்றொரு விஞ்ஞாபனம் செய்துகொண்டிருக்
கிறார்கள். அதன் சாரம் இது:
1. ஈக்கள் எருக்குப்பையிலும் மற்ற அழுக்கிலும் வளர்கின்றன.
2. ஜன்னி, சுவாசசயரணம், அதிசாரத்தொத்துகள், இன்னும்
அநேக நோய்களால் வருந்தும் ஜனங்கள் கழிக்கும் மலத்தின்பேரிலும்,
துப்பலின்மேலும் ஈக்கள் நடமாடுகின்றன. அவைகளைத் தின்ன
வும் செய்கின்றன.
3. ஈ ஒன்று 6,000,000 அணுக்கிருமிகளைச் சுமக்கும் சக்தியு
டையது. அவற்றைக் கொண்டுவந்து நாம் உண்ணும் உணவின்மீது
சேர்த்துவிடலாம்.
4. கோடை ஒன்றில் ஒரே ஒரு ஈ 195,312,500,000,000,000
ஈயாகப் பெருகும்.
5. குழந்தைகள் முதலாகப் பெரியவர்கள்வரையில் உள்ள எல்லா
ருடைய ஸுகத்தையும் பாழாக்கும் பரம விரோதியாகும் ஈ.
ஒரு ஈ முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கக் குறைந்தது எட்டுநாள்
பிடிக்கும். ஆகையால் நாம் ஒவ்வொரு வஸ்துவையும் பிரதிவாரமும்
நன்றாய்ச் சுத்திசெய்து எருக்குப்பையையும் அப்புறப்படுத்துவோ
மானால் ஈ என்பதே தோன்றாது.
இப்படியெல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில் இப்படிப்பட்ட
நாசகால 'ஈயைத் தொலைக்க உங்களாலான உதவியைச் செய்வீர்
களா?' என்று கேட்டுக்கொண்டு முடிகிறது.
நல்ல நாகரீகம் மிகுந்து வீட்டைப் பெருக்கவும் யந்திரம் அமைத்
துக்கொண்டும், போக்குவரவுக்கு டிராம், மோட்டார், ரெயில் என்று
பலவித அநுகூல ஸாதனங்களை வைத்துக்கொண்டும் ஈக்கள் உண்
டாவதற்கு இடந்தாமல் இருந்துவரும் இங்கிலாந்து, அமெரிக்கா
முதலான தேசங்களிலே இப்படி ஈக்களைத் தொலைக்கப் படை
தொடுத்துவருகிறார்கள் என்றால் இரவில் பெருக்கிச் சேர்த்த குப்
பையை வெளியே கொண்டுபோய்க் கொட்டலாகாது என்று வழக்க
மேற்படுத்திக்கொண்டும் உணி என்னும் ஒருவகை ஈ நிறைய
மொய்த்துத் 'தொரத்தொர' என்று கழியும் கிழ எருதே பூட்டிய
வண்டியும் வைத்துக்கொண்டிருக்கும் நம் தேசத்தில் ஈயைத் தொ
லைத்துவிடக்கூடிய வழிகள் இன்னின்னவைதான் என்றாவது அந்த

நல்வழிகளை இன்னின்னார்தான் அநுசரிக்கவேண்டும் என்றாவது சொல்லமுடியுமா? இத்தேசத்தில் ஈயின் தொல்லையைச் சொல்ல எட்டில் அடங்காது, எழுதித் தொலையாது. அழுகிய கிழங்கையும் செல்லரித்த அவரையையும் ஆறிய அப்பத்தையும் விற்பவர்கள் கடைகள் எங்கே! அகத்தின் அழுக்கு அத்தனையும் அமைத்து நாறியும் அதன்மேல் ஈக்கள் படலம் படலமாய் இனிதிருக்கும் பாதையோரத்திலுள்ள ஜலதாரையோரத்திலேதான். அக்கடைவீதிகளில் போகும்போது ஈக்களின் தொல்லையைச் சொல்லிமுடியாது. அவற்றை அழிக்க வழிதேடாமல் இன்னும் இருப்போமானால் உள்ளதும் கெட்டு நாசமாகும் என்பதற்கு என்ன தடை?

ஆகையால் எவரும் இந்த ஈயைத் தொலைத்துவிடத் தம்மாலான சகாயத்தைச் செய்துவரவேண்டும். பள்ளிப்பிள்ளைகள்முதல் பாமரர்வரையில் யாவரும் இப்பாழும் ஈயைப் பாழாக்கப் பாடுபடலாம்.

ஈயெங்கே நோயங்கே
ஈயுமில்லை நோயுமில்லை.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ அக்டோபர்௴

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | செ. | எஸ். 1. | | 1—11 |
| 2 | பு. | ,, 2. | | 68-70; 3. 1-7 |
| 3 | வி. | ,, | 3. | 8—13 |
| 4 | வெ. | ,, | 4. | 1—10 |
| 5 | ச. | ,, | 4. | 11—24 |
| 6 | ஞா. | ,, | 5. | 1— 5 |
| 7 | தி. | ,, | 5. | 6—17 |
| 8 | செ. | ,, | 6. | 1—12 |
| 9 | பு. | ,, | 6. | 13—22 |
| 10 | வி. | ,, | 7. | 6—18 |
| 11 | வெ. | எஸ். | 7. | 19—28 |
| 12 | ச. | ,, | 8 | 15—23 |
| 13 | ஞா. | ,, | 8. | 24—36 |
| 14 | தி. | ,, | 9. | 1— 9 |
| 15 | செ. | ,, | 9. | 10—15 |
| 16 | பு. | ,, | 10 | 1— 8 |
| 17 | வி. | ,, | 10. | 9—17 |
| 18 | வெ. | யோவா. | 7. | 25-36 |
| 19 | ச. | ,, | 7. | 37—53 |
| 20 | ஞா. | ,, | 8. | 1—11 |
| 21 | தி | யோவா. | 8 | 12—24 |
| 22 | செ. | ,, | 8 | 25—38 |
| 23 | பு. | ,, | 8 | 39—49 |
| 24 | வி. | ,, | 8. | 50—59 |
| 25 | வெ. | ,, | 9. | 1—12 |
| 26 | ச | ,, | 9 | 13—25 |
| 27 | ஞா. | ,, | 9 | 26—41 |
| 28 | தி. | ,, | 10. | 1—10 |
| 29 | செ. | ,, | 10. | 11—21 |
| 30 | பு. | ,, | 10. | 22—33 |
| 31 | வி. | ,, | 10. | 34—42 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# மாதர் போதினி

No. 179 நவம்பர் 1912 No. 11

## THE HOUSE ON THE HILL

## மலையின்மேல் கட்டப்பட்ட வீடு

சுவிட்சர்லாந்து மலையடர்ந்த தேசம் என்பது நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அங்கே அழகான மலைகளும், கண்ணைக் கவரத்தக்க அநேக காட்சிகளும் உண்டு. இந்த மலைகளிலே அநேகர் வீடுகள் கட்டிக் குடியிருப்பார்கள்.

ஒரு தடவை அந்தத் தேசத்திலே வசித்துவந்த ஒரு துரையும் துரைசானியும் தங்களுக்கு அந்த மலையிலே ஒரு வீடு கட்ட இடம் குறிக்கும்படியாக மலைக்குப் போயிருந்தார்கள். 'இங்கே கட்டுவோமா, அங்கே கட்டுவோமா?' என்று பல இடங்களையும் பார்த்துக்கொண்டு நிற்கும்போது, துரை அம்மாளைப் பார்த்து, மலையின் உச்சியைச் சுட்டிக் காட்டி, 'அதுதான் நமக்கு எற்ற இடம், அங்கேதான் நாம் வீடு கட்டவேண்டும்' என்றார். துரைசானி ஆச்சரியத்தோடு துரையைப் பார்த்து, 'என்ன சொல்லுகிறீர்கள், மலைச்சார்பிலே எவ்வளவு அழகான இடங்களிருக்கின்றன; எவ்வளவு பேர் நேர்த்தியான வீடுகள் கட்டியிருக்கிறார்கள்; அதை விட்டுவிட்டு மலையுச்சியைக் காட்டுகிறீர்களே, கேலியாய்ப் பேசுகிறீர்களோ?' என்றார்கள்.

துரை மாறுத்தரமாக, 'நான் கேலி பேசவில்லை, நான் சொல்லுகிறதற்கு எற்ற முகாந்தரமிருக்கிறது. மலைச்சார்பிலே வசிக்கிறதில் இருக்கிற நாசமோசங்கள் உனக்குத் தெரியவில்லையோ! அதற்கு மேலேயிருக்கிற பெரிய பாறைகளைப் பார் ஏதாவது புசல் வந்தால் அவைகள் உருண்டுவந்து நம்முடைய வீட்டை நாசப்படுத்தும்' என்று வற்புறுத்திச் சொன்னார். துரைசானியும் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். மலையுச்சியிலே வீடும் கட்டப்பட்டது. துரையும் அவருடைய குடும்பத்தாரும் அதிலே சந்தோஷமாய் வாழ்ந்துவந்தார்கள்.

ஆனால் அந்த வீட்டைப் பார்க்கிற அநேகர் 'இதென்ன வேடிக்கை! கீழே அநேக நல்ல இடங்களிருக்க, மலையின் உச்சியிலே வீடு கட்டியிருக்கிறதே! இதின் காரணமென்ன? அடிவாரத்திற்கு இறங்கவும் ஏறவும் எவ்வளவு சங்கடம்' என்று அடிக்கடி பரிகாசம் செய்கிறதுண்டு. அப்போது துரை தன்னுடைய நோக்கத்தை அவர்களுக்குச் சொல்லுவார். சிலர் அதற்கு இணங்குகிறதில்லை.

இதற்குக் கொஞ்சகாலத்திற்குப் பிற்பாடு ஒருநாள் இரவு திடீரென்று பெரிய புசலும் மழையும் வந்துவிட்டது. இராத்திரியெல்லாம் காற்று அதிகமாக அடித்தது. ஒருவரும் வெளியே வரக்கூடவில்லை. காலையிலே வெளியே வந்து பார்க்கும்போது மலைச்சாரிலேயிருந்த வீடுகளையெல்லாம் காணோம், உச்சியிலே கட்டப்பட்ட வீடுமாத்திரம் இருந்தது.

பாருங்கள்; இது நமக்கு எவ்வளவு போதனைகளைப் போதிக்கிறது. நாமும் இப்படியே கிறிஸ்துவாகிய கன்மலையின்மேல் கட்டப்பட்டிருப்போமானால் எவ்வளவு சங்கடங்களும் துன்பங்களும் நேரிட்டாலும் நமக்கு மோசம் ஒன்றும் வராது. நம்மில் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டு அவரில் உறுதியாய் நிற்கும்படி தினந்தோறும் அவரை நோக்கி ஜெபிப்போமாக.

## HOW SEEDS ARE SCATTERED

## விதைகள் வெளிப்பட்டுப் பரவும் விதம்

பழங்கள் பழுத்தவுடன் விதைகளைப் பாதுகாத்துவந்த மூடிகள் திறந்து வித்துக்கள் உதிர்ந்து சிதறி வேறிடங்களுக்குப் போய் முளைக்கவேண்டும். ஏனென்றால் செடியருகில் முளைத்தால், அதற்கு வெளிச்சமும் வாயுவும் போதா. தாய் விருட்சம் பூமியிலுள்ள ஆகாரசத்தை அதிகமாய்க் கிரகித்துக்கொள்ளுதலால் சிறு செடிகளுக்கு ஆகாரம் குறைந்து நலிந்துபோகும்.


பழங்கள் வெவ்வேறு விதமாக வெடித்துத் திறந்து விதைகள் சிதறுகின்றன. பழங்களில் சில நீளத்தில் இருபிரிவாகவும், சில ஒருபக்கமாகவும், சில பலபிரிவாகவும், சில துவாரங்களாகவும் திறக்கின்றன. வித்துக்கள் தன் நிலையிலேயே உதிர்ந்துவிடாமல் தூரமான இடங்களில் பரவும்படி ஆச்சரியமான அநேக ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சில காய்கள் வெடிக்கும் வேகத்தினால் வித்துக்கள் தூரத்தில் சிதறுகின்றன. சில இறகுபோன்றும் சில மெல்லிய மயிர்போன்றும் இருக்கிற அவயவங்களில் தாக்கும் காற்றி



னால் தூரப் பிரதேசங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. சில தம்மேலுள்ள முள்போன்ற அங்கங்களால் மிருகங்களின் உரோமங்கள் முதலானவைகளில் மாட்டிக்கொண்டு தூரமான இடங்களிற் போய் விழுகின்றன. சில பழங்கள் பக்ஷிகளால் சாப்பிடப்பட்டு விதை ஜீரணமாகாமல் தூரப் பிரதேசங்களில் போகும் அவைகளின் மலங்கள்மூலமாக வெளியாகி பூமியில் விழுகின்றன.

சில பழங்கள் பார்வைக்கு அழகாயிருப்பதைப் பட்சிகள் பார்த்து மூக்கினால் கொத்தித் தூரமான இடங்களிற் கொண்டுபோய்ப் போடுகின்றன.

சில பலமான மழையினாலும் ஆற்று வெள்ளத்தினாலும் அடித்துக் கொண்டுபோகப்பட்டு அவற்றில் சில சமுத்திரம்மட்டும் கொண்டு போய்ச் சேர்க்கப்படுகின்றன. சமுத்திரம் சேர்ந்த அவை வேறு கண்டங்களுக்கும் அபூர்வமாய்க் கொண்டுபோகப்படலாம்.



அல்மாராக்களும் பெஞ்சுகளும்


## EDUCATION THROUGH MANUAL TRAINING

*(Continued)*

## அஸ்தாப்பியாச வித்தை (தொடர்ச்சி)

அஸ்தாப்பியாச வித்தைக்கு ஏற்பட்ட பாட அட்டவணைகள் ஒவ்வொன்றிலும் சித்திரம் வரைதலும் ஒரு முக்கிய பாடமாக இருக்க

வேண்டும். கீழ்வகுப்புகளில் கறுப்புப்பலகையில் கையைப் பூராவாக நீட்டி வரையவும், புருசு பிடித்து வரையவும், மேல்வகுப்புகளில் ப்ரீ ஹாண்ட், மாடல்,* ஜியாமிட்ரிகல், மெஷீன்கள் ஆகிய சித்திரங்கள் எழுத இடம் தாராளமாய் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய ரசஞ்ஞானம் திருப்தியும் விருத்தியும் அடைந்து மனோதத்துவத்துக்குத் தகுந்தபடி அமைக்கவும் புது மாதிரிகளைக் கண்டுபிடிக்கவும் அருகர்கள் ஆவார்கள். மற்ற வேலைகளில் கவனம் அல்லது அவதானம், உற்றுப்பார்த்தல், சுத்தம், கணக்கு, ஸ்வயசார்பு ஆகிய இவை எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு சித்திரம் வரைவதிலும் அவசியமே.



4-வது பாரம் பிள்ளைகள் தொழில்செய்வது

இப்படிக்கெல்லாம் தொழில்செய்து வித்தையைக் கற்பது எந்தப் பிள்ளைக்கும் ஆகலாம்: அவன் இனிமேல் ராஜப்பிரதிநிதி ஆகிறவனாக இருந்தாலும் சரி, அல்லது வெறும் 'பங்கா' இழுக்கும் ஏழைக் கூலி வேலைக்குப் போகிறவனாக இருந்தாலும் சரி. ஏன்! நம் இளவரசர்* எட்வர்டும் இப்படிக்கெல்லாம் அப்பியாச வித்தையை விரும்பிக் கற்றவரே. பிள்ளைகள் பள்ளிக்கூடம்விட்டுக் கடைசியில் எந்தத் தொழிலைச்செய்து ஜீவனம் நடத்துபவர்களாக இருந்தாலும் இப்படி அப்பியாசப்பட்டிருந்தால் தாங்கள் எதற்கும் சரிப்பட்டவர்களாய்ச் சமயத்துக்கேற்ற உபாயம் தேடி அடைந்து காரியங்களைத் தீரச் செய்து முடிக்க வல்லவர்கள் ஆவார்கள்.






பள்ளிப்பிள்ளைகள் செய்த சாமான்களின் மாதிரி

இன்னும் இந்த முறையின் நோக்கமெல்லாம் பிள்ளைகளில் சகஜ
மாய்க் காணும் முயற்சியை எழுப்பி அதை விருத்திபண்ணி அதனல்
அவர்களுடைய தேகம் புத்தி முதலானவைகளைச் சீர்ப்படுத்துவதே.
முன்காலத்தில் எல்லாம் எதையும் மனசின் அப்பியாசத்தாலேயே
கற்றுவந்தோம். 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்றார் ஒளவை
யாரும். உண்மையான வித்தை அது அல்ல. எதனல் புத்தி கூர்மை
யடைந்து, ஒழுக்கம் சீர்ப்பட்டுப் பிடிபட்டுவிட இடமுண்டாகுமோ
அதுவே வாஸ்தவத்தில் வித்தையாகும். நாம் சொல்லிவந்த அப்பி
யாச வித்தை ஒன்றினல்தான் 'இது சரியா? சரியல்லவா?' என்று சிந்
தித்து நிதானிக்கவும் ஒன்றை ஊன்றிப் பார்த்துத் தெரிந்துகொள்ள
வும் ஆகும். இந்தக் காலத்தில் அவரவர் தத்தம் வசத்தாராய்ச் சமயத்துக்
கேற்ற உபாயம் செய்து காரியாதிகளைச் செவ்வையாய்ச் சரிவர நிர்
வகித்துவந்தால்தான் இந்த லோகத்தில் சித்திபெறலாம்; இல்லாவிட்
டால் முடியாது. இந்தவிதமான சக்தியைத் தரத்தக்கது நாம் சொல்லி
வந்த அப்பியாச வித்தியாபிவிருத்தி முறையேதான்.

'அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.'

இது விஷயமாய் இங்கிலாந்தில் விசேஷ பண்டிதராயிருந்த ரஸ்
கின் ஆசிரியர் சொல்லியுள்ளது:—இந்தக் காலத்தில் நாம் வரவாக்
கைத்தொழிலையும் புத்தியையும் வேறு வேறாகப் பிரித்துவைக்கவே
பார்க்கிறோம். தொழிலைச் செய்யவேண்டியவர் ஒரு சாரார் ஆகவும்
அந்தத் தொழிலுக்கு வேண்டிய புத்திசாலித்தனம் யூகம் முதலிய
வற்றை வேறே ஒரு சாரார் ஆகவும் இருக்கவேண்டுமென்கிறோம்.



திருவனந்தபுரம் டிரெய்னிங் காலேஜ் மாணவர்கள் செய்தவற்றின் மாதிரி

இவ்வளவோடாவது நிற்கிறோமா! இல்லை. அந்த யூகியைப் பிரபு என்றும் கனவான் என்று புகழ்ந்தும் தொழிலாளியை வேலைக்காரன் என்றும் கூலிக்காரன் என்றும் இகழ்ந்து பேசுகிறோம். இப்படிச் செய்வது ஆகாது. தொழிலாளி யூகியாகவும், யூகி தொழிலாளியாகவும் இருக்கவேண்டியதே அவசியம். அந்த இரண்டு சாராரும் கனவான்களாகவும் பிரபுக்களாகவும் மதிக்கப்படவேண்டும். இப்போது இருக்கிற நிலைவரப்படி இருசாராருமே நன்குமதிக்கப்படுவதில்லை. ஒருவரை மற்றவர் அவமதிக்கவும் இகழவும் இடம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஜனசமூகத்தில் ரோக யூகிகளும் சீர்கெட்ட தொழிலாளிகளுமே இருக்கலாகிச் சுகம் இல்லாமற் போய்விடுகிறது.

## LITTLE THINGS

## சிறியவைகள்

இதோ! சிறு நெருப்புக்குச்சி பெரு நெருப்புண்டாக்கும், அன்பற்ற சிறு வார்த்தை பெரிய பகையுண்டாக்கும்.

என் கையில் இருப்பது சிறு ஊசி; ஆனால் பெரிய கிழிவுகளைத் தைத்திணைக்கும். சாந்தத்தோடு சொல்லிய சிறு வார்த்தை பெரிய பகையை நீக்கும்.



ஒரு சொட்டுத் தண்ணீர்தான்; ஆனால் பல துளி பெருவெள்ளம். கொஞ்சங் கொஞ்சங் காணிக்கை கொடுத்தால் பெரிய தொகையாகும்.

சிறிய சாவியைப் பார்த்தீர்களா? இது சின்னதாயிருந்தாலும் பணப்பெட்டியைத் திறக்கும். மழலைச்சொல் பெரிய பாவியைக் குணப்படுத்தும்.

சிறு துரும்பு காற்றடிக்கும் திசைகாட்டும். சிறிய வார்த்தை உள்ளான மனநிலைமையைக் காட்டும்.

சிறு உளி பெரிய பாறையை உடைக்கும். சிறியவர்களும் பெரிய தடைகளை நீக்கலாம்.

சிறிய விதை பெரிய மரமாகும். சிறிய நன்மை பெரியதாய் வளரும்.

'தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே.'

M. S. T.

## EMPEROR OF JAPAN

## காலஞ்சென்ற ஜப்பான் சக்கரவர்த்தி

சில வருஷகாலமாக நாம் ஜப்பான் தேசத்தைப்பற்றி அடிக்கடி அபூர்வ விருத்தியைக் காட்டும் விருத்தாந்தங்கள் பல கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படியிருக்கச் சென்ற ஜூலை௴ 29௳ யன்று ஜப்பான் சக்கரவர்த்தி காலமாகிவிட்டார்' என்ற சங்கதியைக் கேட்டுத் துக்கப்படாதார் இந்த லோகத்தில் உள்ள விவேகிகள் எவருமே இல்லை.

இவர் அரசாட்சியைக் கைக்கொண்டது ஜனவரி௴ 1867-ம் வருஷத்தில். அப்போது அவருக்கு வயசு பதினைந்தேதான். அந்தக் காலத்தில் எல்லாம் ஜப்பானியர் பட்டுப்பூச்சியை ஏராளமாய் வளர்த்துக்கொண்டும், பட்டங்களைக் கட்டிப் பறக்கவிட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டும், அதில் 'சண்டை' போட்டுக்கொண்டும், அந்நிய தேசத்தாரைத் தங்கள் தேசத்துக்குள்ளே நுழையவிடாமல் தடுத்துக்கொண்டும் தாங்களே பெரியவர்கள் என்றும் தாங்களே சுகஜீவிகள் என்றும் வீண்ஜம்பம் பாராட்டிக்கொண்டு இருந்தார்கள்.

இவர் பட்டத்துக்கு வந்ததும் இதையெல்லாம் மாற்றித் தமது ராஜ்ஜியத்தை மெய்யாகவே முன்னுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வதாகப் பிரதிக்ஞை செய்துகொண்டார். அப்படியே தமது அரு



மைத் தோழர்களில் சிலரை ஐரோப்பாவின் பற்பல நாகரீக தேசங் களுக்கு அனுப்பி அங்கே நடக்கும் ராஜாங்கமுறை முதலியவைகளை யெல்லாம் தெரிந்துவரச் சொல்லி, அவர்கள் தெரிந்துவந்ததைச் செய்ய இடந்தந்து நல்ல சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர். குடி-



களுக்கு யாதொரு விதத்திலும் முறையிட வழியிருக்காதபடி சீர்திருத் தங்களையும் சிறப்புக்களையும் செய்தார். அவர்களுடைய அபிப்பிராயத் தின்படியே ராஜ்ஜியத்தில் முக்கிய காரியங்கள் நடைபெறலாயின. இதையெல்லாம் கண்ட ஜப்பான் குடிகளும் ராஜவிசுவாஸம் மிகுதி யும் காட்டுபவர்களானார்கள்.

பின்னும் வருஷா வருஷம் புத்திசாலிகளை அமெரிக்கா, ஐரோப் பா முதலிய கண்டங்களின் பற்பல பாகங்களுக்கு அனுப்பி அங் கங்கே உள்ள உயர்ந்த கலைகளையும் அபூர்வ சாஸ்திரங்களையும் கற்றுவரச்செய்து அவைகளைத் தம் நாட்டில் பரவச்செய்து யுத்தம், வியாபாரம், கைத்தொழில், கல்வி, வைத்தியம் முதலிய சகலத்திலும் ஜப்பான் தேசத்தை முன்மாதிரியாகப் பல வேறு தேசத்தாரும் பார்த் துப் பழகும்படி செய்துவிட்டார்.

இந்த ஏற்பாடுகளின் முடிவாக நேர்ந்தது என்ன? ஜப்பான் வேடிக்கையும் விளையாட்டும் நிறைந்த அற்ப தேசம் என்பதை முற்றி லும் மாறி ஜப்பான் ஐரோப்பாக் கண்டத்தின் பிரபல தேசங்களில் ஒன்று என்று நாகரீக உலகம் அங்கீகரிக்கும்படி ஆனது. இப்படி எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் ஆனதே இல்லை. வெகு அபூர்வமானது! இந்தச் சக்கரவர்த்தி ஒருவரே மிகத் தாழ்ந்திருந்த தம் குடிகளை நேசித்து அவர்களைச் சீர்ப்படுத்தி மற்ற நாகரீக தேசத்தா ரோடு சரிசமனாக இருக்கும் நிலையில் கண்டு களித்து மனமகிழ்ச்சி யுடன் மரித்த மஹா சக்கரவர்த்தியாவார்.

## REVIEW. THE BLACKSMITH'S SON

**By. S. Simeon, Erode**

## கொல்லன் மகன் கதை

இது ஈரோடு லுத்தரன் மிஷன் ச. சிமியோன் உபாத்தியாயரியற் றிய ஒரு கதை. இக்கதை தமிழ் வாசிக்கத் தெரிந்த எல்லாருக்கும் பயன் படத்தக்கதாய் இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் பல திருஷ்டாந்தங்களால், துஷ்டர் சகவாசம், குடிவெறி, பொய்ச் சாட்சி சொல்லுதல், சுபாசுபகாலங்களில் நடக்கும் வீண் சடங்கா சாரங்கள், நகையாசை, மனமேட்டிமை முதலியவைகளைக் கண்டித் தும், சத்துரு நேசம், பிள்ளை வளர்ப்பு, கிறிஸ்துவின் புண்ணியம் முத லியவைகளைப் போதித்தும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக் கிக் காட்டியிருக்கிறார்.

தமிழ் கிறிஸ்தவர்கள் இதை அநேகமாய் வாங்கி வாசித்து நன்மையடையலாம். இது கதைப் பந்தயத்தில் முதற் பரிசுபெற்றது.

வேண்டியவர்கள் ஆக்கியோனுக்குத் தபாற்செலவுட்பட 3½ அணு அனுப்பி இதைப் பெற்றுக்கொள்ளலாம்.

## STORY OF GUNAMANI

## குணமணி கதை

(தொடர்ச்சி)


அதைக் கேட்டு மரியகுசை என்பவர் சிரித்துக்கொண்டு, 'இந்து கோவில் விக்கிரகங்களையும், எங்கள் சுருபங்களையும் ஒன்றுபோலவா நினைத்திட்டாய், நீங்களும் நாங்களும் யேசுசுவாமியைத் தானே வணங்குகிறோம். நீங்கள் புஸ்தகங்களை வைத்துப் படித்துக்கொள்ளுகிறீர்கள். நாங்கள் சொரூபங்கள் வைத்து, சித்திரம் வரைந்து, சரித்திரங்களைப் பொருள்படக் காண்பித்துவருகிறோம்' என்றார்.

அதற்குள்ளாக வேதாபிமானி 'பிதாவாகிய பராபரன் நரைத்து, முதிர்ந்து, பழுத்தபழமாய்த் தோன்றும்படி வரைந்திருக்கிறதாமே! அப்போ வயதுசென்ற பிதாவானவருக்கு மரணகாலம் கிட்டினது போல அல்லவா தோன்றுகிறது! ஆண்டவர் மாறாதவர் என்றும், ஒருகண்ட சீராயிருக்கும் ஏகாந்தன். பிணி, மூப்பு, சாக்காடு என்பதின்றி, ஆதியும் அந்தமுமில்லாத பராபரவஸ்துவை அப்படி வரைந்திருப்பது அவருக்குக் கனக்குறைவும், நம்முடைய விசுவாசத்துக்குப் பங்கமுமான காரியமல்லவா' என்று சொல்லி, 'கர்த்தர் தந்த 10 கற்பனைகளில் 1-ம் படியிலே தவறிவிட்டீர்களே. முதற்கோணல் முற்றும்கோணல்' என்றார்.

அதனைக் கருத்தில்கொண்ட மரியகுசை என்பவர், 'செத்தவருக்கு மோட்சவிளக்கு ஏற்றுதலில் உங்கள் அபிப்பிராயம் என்ன என்றறிய விரும்புகிறேன். அதற்கு முன்னால் இங்கு நடந்த சம்பவத்தைச் சொல்லுகிறேன் கேளும். என்னுடைய தகப்பனார் இறந்துபோய் 4 வருஷமாகிறது. இதில் மோட்சவிளக்கு ஏற்றிச் சடங்கு செய்யாமலிருக்கிறேனென்று; எங்களுடைய சுவாமியார் என்மேல் மனத்தாங்கலடைந்து, என்னிடத்தில் வற்புறுத்தி, உன் தகப்பனார் எத்தனைகாலமாய் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து வேதனைப்படுகிறாரோ, அதைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலையில்லையா, உன் தகப்பனார் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கச்சே, நீ நல்ல நிலைமையிலிருந்து சந்தோஷப்பட்டால் போதுமா?' என்று ஆத்திரமாய்ப் பேசினார்.



உடனே நான் 'எவ்வளவு செல்லும் மோட்சவிளக்கு எடுக்க' என்றேன். அவர் 'நாலு ரூபா செல்லும்' என்றார். அவர் சொன்னபடியே மெழுகுவர்த்தி, சாம்பிராணி முதலியன வாங்கிச் சாமியாரும் நானுமாய் ஜெபத்துக்கு முழங்காலூன்றி, ஒரு பூஜையானதும், 'இப்போ உன் தகப்பனார் கால்வாசிதான் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து ஏறியிருக்கிறார்' என்றார். இப்படிச் சொல்லி இன்னும் ஒரு ரூபா வாங்



கிக்கொண்டு திரும்பவும் பூஜைசெய்து 'இன்னும் அரைவாசி தூரம் தான் வந்திருக்கிறார்' என்றார். இப்படியாக ஒரு பூஜைக்கு ஒரு ரூபாயாக நாலு ரூபாயும் வாங்கிக்கொண்டு மெத்த மகிழ்ச்சியாக 'இப்போ உன் தகப்பனார் மோட்சத்திலே யேசுநாதருக்கு வலதுபக்கத்திலே போய்விட்டார்' என்றார்.

அதுகேட்டு உடனே நான், சாமியாரிடம் தந்த நாலு ரூபாயையும் மேசையிலிருந்து எடுத்துக்கொண்டு 'என் தகப்பன் மோட்சம் போன

பிறகு இந்த நாலு ரூபாயும் உமக்கு என்னத்துக்கு' என்று சொல்லிவிட்டேன். அதினால் சுவாமியார் என்மேல் மனவருத்தமாயிருக்கிறார்' என்றார்.

அதற்கு வேதாபிமானி 'உலகத்தில் தாய், தந்தை, குரு, வேந்தன், எஜமான் இவர்கள் சொற்கடவாது நடப்பது உத்தமம் என்றும், அதற்கு எதிர்த்துநிற்பது அதமம் என்றும் கூறியிருக்கிறது. என்றாலும் எல்லாம் ஜகத்ரட்சகனாகிய பரமசற்குருவின் சித்தத்துக்குக் கீழடங்கிய தாக்கிதைகளுக்கேயன்றி ஆகாத்தியமான நடப்புகளுக்குக் கீழமைவது தேவசித்தத்துக்கு விரோதமானது. அப்படி நடப்பவர் பாபிஷ்டர்களெனப்படுவர். இப்படியிருக்க, உங்கள் சுவாமிமார் திருவசன விளக்கை உங்கள் கையிலெடுக்கப்படாதென்று உங்கள் புத்தியின் கண்களைக் குருடாக்கித் தெய்வ சித்தத்திற்கு ஏலாதவகையாய், சில சடங்குப்பிரமாணங்களை ஏற்படுத்தி, அதனைக் கைக்கொண்டு நடக்க ஜனங்களைக் கட்டாயப்படுத்துவது, எவ்வளவு தூரம் சரியாகுமென்று நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். ஆனால் அவரிடம் கொடுத்ததை நீர் திரும்ப எடுத்துக்கொண்டீரே அதுதான் வேடிக்கையாயிருக்கிறது' என்றார்.

அதற்குள்ளாக சத்தியதாஸ் 'நான் போய் வருகிறேனையா. அதிகாலையிலெழுந்து போய்விடுவேன். அப்போ பெரியவர்களைத் தூக்கத்தில் எழுப்புவது சரியல்ல, வழியனுப்பிக்கொள்ளுகிறேன் என்று பராபரனுக்குத் தோத்திரம்' என்றார்.

அப்போ திடீரென சத்தியதாசனுக்குப் பழக்கமான செபஸ்தியான் என்பவர் வந்து கதவைத் தட்டினார். யார் என்று கேட்டுக் கதவைத் திறந்ததும், உள்ளே வந்து 'கோல்போட்டரே, சத்தியவேத பங்குகள், வேதபாலியர் என்ற புஸ்தகங்களிருக்கிறதா? அதோடு பெண்பிள்ளைகள் வாசிக்க வேதஸ்திரீகள் என்னும் புத்தகமும் அவசியமாக வேணும். ஏனெனில் நாம் படித்து படித்து என்ன, என்ன சொன்னாலும் பெண்பிள்ளைகளுக்குத் தாங்களே வாசித்து மனந்திரும்பாவிட்டால் வீடு சீர்அடைவது வருத்தம். நான் வேதம் வாசித்த பிறகு எங்கள் சபையிலுள்ள சில தவறுகளைக் கண்டுகொண்டேன். ஆனால் என் சமுசாரம் பிள்ளைகளுக்கோ சுவாமியார் சொல்வது தேவவாக்காயிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு வாசிக்க நல்ல புஸ்தகங்கள் கொண்டுவாரும்' என்றார்.

உடனே வேதாபிமானியிடம் சத்தியதாஸ் 'நான் இரண்டுபேர் இங்கே உண்டு என்றேனே. அவர்கள் இவர்கள்தான். இவர்களோடே நான் பழகி யோவான் சுவிசேஷம் ஒன்று இனாமாகக் கொடுத்தேன்,



அதுமுதல் அவர்களிடத்தில் மெய்யறிவாகிய மனமாறுதல் காணப்படுகிறது' என்றார்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த வேதாபிமானி செபஸ்தியானை நோக்கி: 'நீர் சத்தியவேதத்தை வாசித்தபிறகு சில தவறுதல்களைக் கண்டுகொண்டேன் என்கிறீரே, அவைகள் எவை?' என்றார்.

அதற்கு செபஸ்தியான் "யேசுநாதசுவாமி தமது தாயார் கன்னிமரியாளுடனே கானாவூர் கலியாணத்திற்குப் போனதும், அங்கே அம்மாள் போய் இவர்களுக்கு ரசமில்லை என்று வேண்டினதற்கு யேசுசுவாமி தாயாரைப் பார்த்து 'ஸ்திரீயே, உனக்கும் எனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லையே' என்று சொல்லிவிட்டாரே. அதினாலே தாயார் நமக்காக வேண்டுதல்செய்வதில் காரியமில்லை என்றும், கண்காணியோவென்றால் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே பெண்சாதியின் புருஷனுமாயிருக்கவேண்டுமென்று பிரத்தியட்சமாயிருக்க, நமது சுவாமிமார் விரக்தராயிருந்துகொண்டு, தகாத நடத்தையுள்ளவர்களாயிருப்பதும் என் மனதுக்கு வருத்தமாயிருக்கிறது" என்றார்.

அதற்கு வேதாபிமானி மரியகூசை என்பவரை நோக்கி 'நீரும் இவரைப்போல் சத்தியவேதத்தை வாங்கி உணர்வோடும் ஜெபத்தோடும் வாசிப்பீரானால் உண்மை விளங்க தெரிந்துகொள்வீர். கலாத்தியர் நிருபம் 3-ம் அதிகாரம்முதல் திட்டமாய் வாசித்துப் பார்ப்பீரானால் நீர் அறியவேண்டிய சத்தியங்களைக் கண்டுகொள்வீரென்றார். மிச்சப் புண்ணியகிரியைக் குறித்த உபதேசத்தை நிராகரிக்க எசேக்கியேல் 14. 14, 16, 18 வாசித்து அறிக' என்றார்.


'சத்தியதாசனுக்குச் சோறுதின்னப்போன விடுதியில் சத்தியவேத ஒளிதோன்றி ஆத்துமரட்சிப்பு கிடைத்ததுபோல, சத்தியவேதத்தைச் சொன்ன வெள்ளையப்பனும் விசுவாசித்துக்கொண்ட சத்தியதாஸனும் காலம் ஆதாயப்படுத்தினதால் கர்த்தருடைய ரட்சிப்பைக் கண்டுகொண்டார்கள். அப்படியே நாமும் அனுதினமும் அவருடைய வேதத்தை வாசிப்பதினாலும், மற்றவர்களோடே அவரைப்பற்றிச் சம்பாஷிப்பதினாலும், அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடுகூட மரியகூசை யென்பவரும், செபஸ்தியான் என்பவரும் காலம் கடத்திவையாமல் சீக்கிரமாய் உங்கள் விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிட்டுச் சத்தியமார்க்கத்தில் சேரக் கர்த்தரை நோக்கி நாங்களும் நீங்களும் செபம்செய்வது நமது கடமை என்று மறக்கலாகாது' என்று வழியனுப்பிக்கொண்டு, நித்திரை மயக்கத்தினால் சற்று படுத்து இளைப்பாறி, அதிகாலமே வேறே ஊருக்குப் போக உத்தேசித்துப் படுத்துக்கொண்டார்.

காலமே எழுந்த சீஷன் மலையாள தேசம் பக்கத்திலிருப்பதால் அங்கே சென்று பார்த்துவிட்டுப் போகவேணுமென சிந்தைகொண்டு, வேதாபிமானி எழுந்ததும் 'ஐயா இன்று எந்தப் பக்கம் போகலாம்?' என்றான். அதற்கு வேதாபிமானி 'நாம் இனிக் கிறிஸ்தவர் இருக்கும் பக்கமாய்ப் போகவேணும்' என்றார். அதற்குச் சீதன் 'இதற்குப் பக்கமாய்த்தான் மலையாளமிருக்கிறதாம். அங்கு சென்றால் அங்கே சீரியன் சபையிருக்கிறதாம். அதைப் பார்த்துவர விரும்புகிறேன்' என்றான். 'அப்படியா, அந்தச் சபையையும் கண்டுவருவோம்' எனச் சந்தோஷத்தோடே புறப்பட, அந்த வீட்டு மரியசூசை என்பவர் காப்பி பலகாரம் முதலியன தயார்பண்ணி வீட்டிலிருந்து அதிகாலமே வெறுமையாய் அனுப்பக்கூடாதென்று திருப்திகாமாய் உபசரித்து வழிவிட்டனுப்பினார்.

இவர்கள் இருவரும் சாலைவழியே சந்தோஷத்தோடும், புதுப் பெலத்தோடும் நடந்துவருகிற வழியில் சாயங்காலமாகி, வானமிருண்டு, மேகமந்தாரமாகி, மழைக்கு ஆரம்பமானது. அதுகண்டு சீதமணி குருவை நோக்கி 'அதோ ஆற்றுக்கருகில் தோன்றுகிற சத்திரத்திற்குப் போய்விடவேணும். இல்லாவிடில் பெருமழை பிடித்து நம்மை நனைத்துவிடும்' என்றான். 'ஆம் அப்பா சீதா, இல்லாவிடில் சங்கடப்படுவோம்' என்று வேதாபிமானியும் சீதமணியும் விரைவாய் நடந்து, ஆற்றின் வாராவதிக்கு அருகே வரவும், மழை பெருந்துளியாய் விழத் தொடங்கினது. இடியும், மின்னலும், காற்றும் அதிகப்பட்டது. உடனே இவர்கள் ஒரே ஓட்டமாய் ஓடி சத்திரம் வந்துசேர்ந்தார்கள். அதிலே வந்துசேர்ந்து துணிகளை முறுக்கிப் பிழிந்து, உலரப் போட்டுக்கொண்டு, 'இந்த இடம் கிடைத்தது கர்த்தருடைய பெரிய கிருபையே. இல்லாவிடின் நாம் அதிக சங்கடத்துக்குள்ளாவோம். சுவாமியுடைய நடத்துதல் எவ்வளவு அதிசயமானது' என்று அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அங்கே ஒரு இடத்திலே இருந்தார்கள்.

அங்கிருந்து பார்க்கும்போது, ஆற்றிலே ஜலம் பிரவாகித்து வருவதையும், மலையிலேயுள்ள மரங்கள், மட்டைகள் முதலியனவற்றைக் கொப்புக்கொப்பாக முறித்துப் பெருவெள்ளம் புரண்டு பாலம் இடியத் தக்கதாய்ப் பேரிரைச்சலோடு வருவதையும் கண்டார்கள். அதோடு அந்தப் பாலத்துக்குச் சமீபத்திலுள்ள மரங்களிலே குதித்து விளையாடிக்கொண்டு, அங்கு போவோர் வருவோரைப் பயமுறுத்தி அவர்கள் கொண்டுவரும், பண்டம் பலகாரங்களை வழிப்பறிசெய்து கட்டமுதுகளைக் களவுசெய்து, சாப்பிட்டு, காம்பீரத்தோடு வாசம்செய்துவந்த குரங்குகள் பல அங்கிருந்ததைக் கண்டு, சீதமணி சந்தோஷப்பட்டு, அவைகளின் ஆட்டஓட்டங்களைக் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.





இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கையிலே ஒரு குரங்கு தவறி, ஆற்றுப் பெருக்கிலே விழுந்து, வெள்ளப்பெருக்கினால் நுங்கும் நுரையுமாய் அலைதிரண்டுபோகிற வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. அதுகண்டு மற்ற குரங்குகளெல்லாம், துக்கசாகரத்தில் மூழ்கித் தங்கள் ஆட்ட ஓட்ட சேஷ்டைகளை நிறுத்தி தவறி விழுந்த குரங்கு கண்மறையும்வரையிலும், பார்த்துக்கொண்டு மவுனமாய் நின்றுகொண்டு, இனிமேல் நாமும் ஓடிச் சாடினால் விழுந்துவிடுமோமெனப் பயந்ததுபோலும், இனிமேலும் நாம் அக்கிருத்தியங்கள் செய்வதில்லை எனத் தேர்ந்ததுபோலவும், நடித்து மவுனமுற்றிருந்தன. அதனைக்கண்ட சீதமணி வேதாபிமானியைப் பார்த்து 'ஐயா இந்தக் குரங்குகளுடைய நடவடிக்கையைக் கவனித்தீர்களா?' என்றான். அதுகேட்டு வேதாபிமானி 'இன்னும் சற்றுப் பொறுத்துப் பாரப்பா' என்றார்.

உடனே குரங்குகள் பழையபடி குதிக்கவும், கொப்புக்குக் கொப்புத் தாவவும், ஊஞ்சலாடவும் தொடங்கிவிட்டன. அப்போ சீதமணி 'ஐயோ! பார்த்தீர்களா, இந்தக் குரங்குகள் நின்றநிலையைப் பார்த்து, இந்தக் குரங்குக் கூட்டங்கள் வெள்ளத்துக்குப் பயந்து, இந்த இடத்

தைவிட்டுப் பெயர்ந்து வலசை வாங்கிப்போம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வானரங்களின் ஞானமே ஞானம் இதென்ன விபரீத புத்தி' என்று ஆச்சரியத்தோடே சொன்னான்.

(இன்னும் வரும்.)

## MERCY

## இரக்கம்

இங்கிலீஷ் கவிராயரான ஷேக்ஸ்பியர் எழுதிய வெனீஸ் வர்த்தகன் என்னும் நாடகத்தில் ஒரு பாத்திரமாகிய போர்ஷியா மாதின் வாக்கினின்றும் பிறந்த நவமணியினும் அருமணியெனக் கொள்ளத் தகும் சொற்களிற் சில இவை:—

'இரக்கம் என்பது மேகத்தினின்றும் வருஷித்துக் கடுநிலத்தைக் கனிவிக்கும் வானமிர்தமாகிய இளமழைபோலத் துளிதுளியாய் வீழ்வது. அது இரங்குவோன், இரங்கப்பெறுவோன் இருதிறத்தாருக்கும் உயிர்த்துணையாக உதவும் அதிசய வரம். அது தேவலக்ஷணங்களில் ஒன்று. ஆனதுபற்றி, அரசருக்கு நவரத்ந கசிதமான கிரீடத்திலும் சிறந்த அணியாக விளங்குவது. மண்ணுலகாளும் மன்னருக்குள்ள இரக்கம் எவ்வளவோ, அவ்வளவிற்கு அவர்கள் நீதி உக்கிரந் தணிந்து பலப்படும். இவ்வாறு அவர்கள் அதிகாரத்திற்கு மாற்று ஏற ஏற, அது சர்வ லோகாதிபதியாகிய கடவுள் அதிகாரமயமாகும்.'

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1912 ஞ நவம்பர்மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | யோவா. 11. | 1—16 | 11 | தி. | யோவா. 13. | 31—38 | 21 | வி. | யோவா. 18. | 1—14 |
| 2 | ச. | ,, 11. | 17—30 | 12 | செ. | ,, 14 | 1—14 | 22 | வெ. | ,, 18. | 15—27 |
| 3 | ஞா. | ,, 11. | 31—46 | 13 | பு. | ,, 14 | 15—31 | 23 | ச. | ,, 18. | 28—40 |
| 4 | தி. | ,, 11. | 47—57 | 14 | வி. | ,, 15 | 1—14 | 24 | ஞா. | ,, 19. | 1—12 |
| 5 | செ. | ,, 12. | 1—11 | 15 | வெ. | ,, 15 | 15—27 | 25 | தி. | ,, 19. | 13—27 |
| 6 | பு. | ,, 12. | 12—22 | 16 | ச. | ,, 16. | 1—14 | 26 | செ. | ,, 19. | 28—42 |
| 7 | வி. | ,, 12. | 23—36 | 17 | ஞா | ,, 16. | 15—24 | 27 | பு. | ,, 20. | 1—18 |
| 8 | வெ. | ,, 12. | 37—50 | 18 | தி. | ,, 16 | 25—33 | 28 | வி. | ,, 20. | 19—31 |
| 9 | ச. | ,, 13. | 1—17 | 19 | செ. | ,, 17. | 1—12 | 29 | வெ. | ,, 21. | 1—14 |
| 10 | ஞா. | ,, 13. | 18—30 | 20 | பு. | ,, 17. | 13—26 | 30 | ச. | ,, 21. | 15—25 |

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

# மாதர் போதினி

No. 180 டிசெம்பர் 1912 No. 12

## A TRIP TO BETHLEHEM

By the Rev. E. Tonkin

## பெத்லகேம் யாத்திரை

போனவருஷம் நாங்கள் எருசலேமில் இருந்தபோது ஒருநாள் பெத்லகேமுக்குப் போயிருந்தோம். அந்த ஊரின் வர்ணனை முதலிய விபரம் நேசர்களுக்கு ருசிகரமாய் இருக்கும் என்று இங்கே சிறிது எழுதலானேன்.

எங்கள் வண்டிக்காரன் அரபிதேசத்தான், அவனுக்கு இங்கிலீஷ் தெரியாது. இருந்தாலும் நாங்கள் பார்க்க ஆசைப்பட்ட இடங்களையெல்லாம் எங்களுக்குக் காண்பித்து, சைகையினால் கூடியமட்டும் விசேஷங்களை விளக்கினான்.

பழைய ஏற்பாட்டின்படி, பெத்லகேம் 3360 வருஷங்களுக்குமுந்தி யோசுவாவின் காலத்தது. ஊர் சிறியது, பேர் பெரியது என்னலாம். இஸ்ரவேலுக்கு ராஜாவான இடைப்பையன் தாவீது பிறந்த இடம் இது. இன்னும் இந்த உலகத்துக்கே ராஜாவாகவும் இரட்சகராகவும் வந்த இயேசுகிறிஸ்துவும் இங்கேதான் பிறந்தார்.

தற்காலம் பெத்லகேம் 8000 ஜனங்கள் குடியுள்ள செவ்வையான ஊராயிருக்கிறது. அது ஒரு சிறு மலையில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே ஊரைச்சுற்றிலும் செழிப்பான தோட்டங்கள் அநேகம் உண்டு. வீதிகள் அதிக நெருக்கமாயிருக்கின்றன. வண்டியில் போனால் சில இடங்களில் இரண்டு பக்கங்களிலுமுள்ள வீட்டுச் சுவர்களைக் கையை நீட்டித் தொட்டுவிடலாம்போல் இருக்கும். இப்படிக் குறுகிய வீதியில் எதிர்வண்டி வந்துவிட்டால் என்ன செய்வதோ!


VOL. XXVII.

ஊருக்குக் கொஞ்சத்தூரத்துக்கு அப்பால் ஒரு சிறு மைதானம் போய்ச் சேர்ந்தோம். அங்கே ஜனங்கள் சுமார் 40 அல்லது 50 பேர் இரண்டு கட்சியாக நின்றுகொண்டு ஒருவரையொருவர் கோபித்து எதிர்த்துக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே ஏதோ உண்டாகிவிட அதனால் இனிப் பிரமாதமான யுத்தஞ்செய்வார்களோ என்றிருந்தது. இதைப் பார்த்ததும் தொளாயிரம் வருஷங்களுக்குமுன் இதே இடத்தில் தேவதூதன் சொல்லிய பாட்டு எங்கள் ஞாபகத்துக்கு வந்தது. 'பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக.' ஐயோ. பாவம்! அன்றைக்குச் சமாதானத்தின் பிரபு பிறந்த பெத்லகேமிலே இன்றைக்குப் பகை நிறைந்திருக்கிறதே! எப்பொழுதும் இப்படியே தானோ? இன்றைக்குமாத்திரம் தான் இப்படியோ?

பின் கொஞ்சநேரத்திற்கெல்லாம் எங்கள் வண்டி பரிசுத்தர் பிறந்த கோவிலுக்கு முன்பாக நின்றது. இங்கும் ஜனங்கள் பலர் எங்களை நெருங்கிவந்து ஒருவரையொருவர் தள்ளி அடித்துக்கொண்டு 'நான் வழிகாட்டுவேன். நான் வழிகாட்டுவேன்' என்று காது அடைக்கும்படியாகச் சத்தம் போட்டார்கள். 'இது என்ன சங்கடம்! போன பக்கமெல்லாம் இப்படியா?' என்று எங்களுக்கு வருத்தம் என்றால் இவ்வளவு அவ்வளவு அல்ல. இப்படி நாங்கள் படும் பாட்டைப் பார்த்துத் தூரத்தில் நின்ற துலுக்கப் போர்ச்சேவகன் ஒருவன் ஓடிவந்து கூட்டத்தை அமர்த்தினான். பிற்பாடு நல்ல வழிகாட்டியாக ஒருவனைத் தெரிந்து அழைத்துக்கொண்டு கோவிலுக்குள் போனோம்.

1600 வருஷங்களாகப் பரிசுத்தர் பிறந்த கோவிலில் கிறிஸ்தவ ஆராதனை நடந்துவந்திருக்கிறது. அதில் பிரவேசிக்கும்போது அநேக பெரிய கல்தூண் நிறுத்திய விஸ்தாரமான மண்டபம் ஒன்றைப் பார்த்தோம். அங்கே ஜனங்கள் ஆராதனைக்காகவும் விசேஷமாய்க் கிறிஸ்மஸ் காலத்திலும் கூட்டமாய்க் கூடுவார்கள். அதற்குக் கிழக்கிலே சில சிறு கோவில்களில் பீடங்கள் கட்டி ஒவ்வொன்றின் மேலும் மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி வைத்திருந்தார்கள். பக்தர்கள் சிலர் அங்கே முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இவற்றைவிட்டுக் கொஞ்சத்தூரம்போய்ப் படிகளில் இறங்கி எல்லாவற்றையும்விடப் பரிசுத்தமான இடத்தை அடைந்தோம். இது 'பரிசுத்தர் பிறப்புக் கெபி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே விளக்குகள் அநேகம் தொங்கின. கீழே முன்னோர் நம்பிக்கையின்பிரகாரம் முன்னணை வைக்கப்பட்ட இடத்தில் வெள்ளியினால் செய்த ஒரு பெரிய நட்சத்திரம் பிரகாசித்தது. இதைப் பார்த்து நாங்





கள் ' இவ்விடத்திலா ஸ்திரீகளுக்குள்ளே பாக்கியவதியாகிய மரியம்மாளின் வயிற்றிலிருந்து உலகரட்சகராக வந்தவர் பிறந்தார்?' என்று நினைத்து அவர் வந்ததற்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம்.

கிறிஸ்மஸ் காலத்தில் இங்கே வருகிற கிறிஸ்தவர்களுக்குள் சண்டை அடிக்கடி வந்துவிடும். இந்தப் பெரிய மண்டபத்தைச் சுற்றிலும் கிரேக்கர், ரோமர், காப்தர், சீரியர் ஆகிய எல்லாரும் தங்கள் தங்கள் சிறு கோவிலைக் கட்டினபோதிலும் ஒரு குடும்பத்தவரைப் போல இருக்கிறதில்லை. சிலவேளைகளில் பொது மண்டபத்திலும், பரிசுத்த கெபியிலும், எருசலேமில் இருக்கிற பரிசுத்த கல்லறைக் கோவிலிலும் பெரியவர் யார் என்று இரத்தம் சிந்திப் பயங்கரமான யுத்தம் நடந்ததுண்டு.

கோவிலைவிட்டு வெளியேபோய் ஒரு சிறு மேட்டின்மேல் நின்று கீழே இருந்த செழிப்பான தோட்டங்களைப் பார்த்தோம். அங்கங்கே இருந்த பயிர் காற்றினால் அசைபட்டுப் பிரகாசித்துக் கண்ணுக்கு இன்பமாயிருந்தது. அங்கே போவாசின் நிலம் இருந்திருக்கும். அங்கே ரூத் சாயந்தரநேரத்தில் விழுந்த கதிர்களைச் சேர்த்திருப்பாள்.

இன்னும் கொஞ்சம் கிழக்கிலே சில காடான மலைகளைப் பார்க்கலாம். அங்கே அநேக வருஷங்களுக்கு முன்பாக மேய்ப்பர்கள் இராக்காலத்தில் தங்கள் மந்தைகளை மேய்த்து, யோர்தான் பள்ளத்தாக்குக்குச் சமீபமாய் இருந்த காட்டில் திரிந்த துஷ்டமிருகங்கள் வாராதபடிக்கு அவைகளைக் காப்பாற்றினார்கள். அங்கே தேவனுடைய மகிமை அவர்களைச்சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் அங்கே நடுநடுங்கி நிற்கும்போது தூதன் 'மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை' அறிவித்தான். அங்கே பரம சேனையும் 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக' என்று பாடி வானத்தைப் பாட்டினால் நிரப்பினார்கள்.

பெத்லகேமில் யூதர்கள் இல்லை, துலுக்கரும் அதிகமில்லை. கொஞ்சங்குறைய எல்லாரும் கிரேக்குச் சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் தான். அவர்களுடைய முகங்களைப் பார்க்கும்போது அவர்கள் துலுக்கரைவிட விவேகமும் ஞானமும் சந்தோஷமும் உள்ளவர்களாகத் தோன்றுகிறார்கள்.

நாங்கள் பெத்லகேமை எப்பொழுதும் நினைவுகூரும்படியாக அங்கிருந்த ஒரு கடைக்குப்போய் முத்துக்களினால் அலங்கரிக்கப்பட்ட ஒரு நட்சத்திரத்தை வாங்கிக்கொண்டு பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்குத் திரும்பப் போனோம்.



## CHRISTMAS TIME

**By John Pillai, Chintadripettai**

## 'கிறிஸ்மஸ்' என்னும் கிறிஸ்துவின் ஜநந திருநாள் மஹோத்சவம்

அநுதினமும் பகவானது திருக்கரத்தினின்று அநந்தங்கோடி உபகாரங்களை இடையறாது பெற்றனுபவித்து வருகின்றோமே. அதைக் கணக்கேற்றிப் பார்க்க மனதுள்ளோர் கடற்கரை மணலை எண்ணிப் பார்க்க; வானத்து நட்சத்திரங்களைத் தொகையிட்டுப் பார்க்க. இது இப்படியிருக்க, கணக்கு வழக்கற்றதான இந்நன்மைகளுக்கெல்லாம் மேலாய், கடவுள் கையினின்றும் பெற்று இதுவரை அநுபவிக்கும் உன்னத நன்மை ஒன்றுள்ளதே என எப்போதேனும் நாம் நியானித்திருப்பதுண்டா? அதென்ன மேலான திவ்விய நன்மை எனச் சற்றே உத்தேசித்துப் பார்ப்பீர்களா? அதா, 'காலம் நிறைவேறிய போது,' ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு, தேவனானவர் தமது ஏக மைந்தனை இப்பூவுலகின்கண் வந்து அவதரிக்கவும் அவரால் மானிட ஈடேற்றம் உண்டாகவும் செய்தருளிய பெரும்பேறேயாம். இது எப்பேர்ப்பட்ட உபகாரம்! எப்படிக்கொத்த ஈவு! இதைத்தானன்றே பரி. பவுலப்போஸ்தலன் 'தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவு' என மொழிந்தது.

ஜகத்குருவாம் இரட்சா பெருமான் இப்பூவுலகில் திரு அவதாரஞ் செய்தருளி இப்போது சற்றேறக்குறைய 2000 வருஷக்காலமாகிறது என்பது நாமெல்லோரும் அறிந்த விஷயமே. ஆயினும் அவர் விந்தையாய் ஒரு சிறு பாலகனாகப் பிறந்தருளிய அந்நாளைப் பெருநாளாக்கி, அவரது பிறப்பினால் மானிடஜாதிக்கு விளைந்துள்ள பெருநன்மையையும் பெரும்பேற்றையும் ஆண்டாண்டுதோறும் நினைவுகூரவேண்டுமென்ற பயபக்தியான எண்ணம் அவரது திருத்தொண்டர் உள்ளத்தில் உதித்து, எவ்வருடம் முதற்கொண்டு அவரது திருப்பிறப்பை ஒரு மஹோத்சவதினமாக ஆசரித்து வருகின்றார்கள் எனக் கூறத் துணிவதோ எளிதன்று. நானாதேசத்துப் பூர்வ திருச்சபையானது வருடந்தோறும் வெவ்வேறு மாதங்களிலே பற்பல காரியாதிகளுக்கு ஏற்க, கொண்டாடிவந்ததான ஆசரிப்புத்தினமும் கடைசியாய், கி. பி. 4-ம் நூற்றாண்டின் முடிவிலே டிசெம்பர்மீ 25உ என மாறாவண்ணம் ஏற்பாடாகித் தீர்ந்து, அதுதொடங்கி இதுவரையும் எத்தனையோ நூற்றுக்கணக்கான 'கிறிஸ்மஸ்' சுபதினங்கள் வந்தும் போயுமிருக்கின்றன.

இப்பெருநாளைக் கிறிஸ்தவர்களான நாம் ஆண்டுதோறும் தவறாது கொண்டாடும் நோக்கமெல்லாங் கூடி, தேவனானவர் தமது ஏகசுதனாகிய இயேசுகிறிஸ்துவைப் பாபாத்துமாக்களை மோட்சகரை யேற்றும் லோக ரட்சகராய் மாந்தருக்குக் கடாட்சித்தருளிய சொல்லற்கரிய அப்பேரீவை ஞாபகப்படுத்தும் ஒரு ஞாபக சின்னம்போலிருக்கும் பொருட்டன்றோ? அன்றாடகம் நமக் கருளப்பட்டுவரும் எண்ணி முடியாத தேவ ஈவுகளனைத்திலும் இந்த ஈவுக்கு ஒப்பானதும் சமமானதும் மேலானதும் வேறெதுவுமுண்டோ? இது தன்னிகரில்லா ஒரு நன்கொடையாம். ஆகவே அப்போஸ்தலன் இதைச் 'சொல்லி முடியாத தேவ ஈவு' என விளம்பியது ஒரு வியப்பாமோ!

இது இப்படியிருக்க, இந்த உன்னத நன்மையை, இந்தப் பரம நன்கொடையை, இந்தப் பெருஞ் சிலாக்கியத்தை அநுபவித்து வரும் நாம் விலைமதியா இப்பேரீவுக்காகத் தேவனுக்கு நன்றியறிந்த உள்ளத்துடன் ஸ்தோத்திரம் செலுத்தக் கடன்பட்டவர்களாய் இருக்கிறோம் எனச் சொல்லவும் தேவையோ!

சத்குருவாம் இரட்சாபெருமான் நன்மை செய்கிறவராய்ப் பலஸ்தீனா தேசமெங்கும் சுற்றித் திரியும்நாளில், ஒருநாள் தமக்கெதிரே சற்றுத் தூரமாய் நின்ற பத்து மனுஷரைக் கண்டு அவர்களொவ்வொருவருக்கும் விசேஷித்த ஈவு ஒன்று உபகரிக்கலானார். அந்த ஈவானது அவர்கள் ஒவ்வொருவரது அவசரத்துக்கும் ஏற்றதாய், அவரவர் நெடுங்காலம் வாஞ்சையுடன் ஆசித்திருந்ததாய், வேறெவரும் உபகரிக்க இயலாததாய், அவ்வளவு சிறந்த ஈவாய் விளங்கிற்று. இதை அநுக்கிரகித்துவிட்டு அவர் சில நாழிகை வழிதூரம் செல்லாமுன்னே, இந்நன்கொடை யருளப்பெற்றோரொருவன் ஓரே ஓட்டமாய் ஓடிவந்து, 'தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்.' அவன் உள்ளத்தில் நன்றியறிதல் பொங்கி வழிந்தோடியது. மற்ற ஒன்பது மனிதரும் எப்படிப் போயினரோ அறியோம்.

மற்ற ஒன்பது பேரும் எங்கே? அவர்கள் செய்கிறதென்ன? தங்களுக்குக் கிடைத்த அந்தப் பேருபகாரத்தை அவர்கள் உணராது போயினரோ? அப்படியல்ல. தாங்கள் பெற்ற நன்மை கிடைத்தற்கரிது என்பதை அவர்கள் அறியாது போயினரோ? அப்படியுமல்ல. இந்த நல்ல ஈவைக் கைப்பற்றிக்கொண்டு போகும்வழியிலே அவர்கள் கண்களில் ஆனந்த பாஷ்பம் வடிய, வழிநெடுக அவர்கள் துள்ளி ஆடிப்பாடிச் சென்றார்களே. அவர்கள் மனமகிழ்ச்சியின் சொரூபமாகவே விளங்கினார்களன்றோ? ஆனால் ஒரு பெருங்குறை—நன்றியறிதலான குணம் அவர்களிடம் இல்லாமற்போனது. ஐயோ பரி



தாபம்! பரிதாபம்! மற்ற மனுஷனிடத்திலேயோ, அவன் களித்து ஆனந்தசந்தோஷம் கொண்டாடும் சமயத்திலும், கிடைப்பதற்கரிதாம் இப்பேருபகாரம் ஈந்தருளிய அந்த உன்னத நாதனுக்குத் தான் செய்ய வேண்டியதான கடமை இன்னதென்று உணரும் உணர்ச்சி இலங்கியது. மற்ற ஒன்பதுபேரிடத்திலும் வெறும் ஆனந்த மகிழ்ச்சிமட்டுமே இருந்ததன்றி, இப்பெருநன்மை ஈந்தருளிய அம்மகாத்மாவுக்குத் தாங்கள் செய்யக் கடமைப்பட்டிருந்ததைச் செய்யவேண்டுமே என்ற எண்ணம் சூனியமாயிருந்தது. தங்களால் இயன்றதான ஸ்துதி ஸ்தோத்திர மகிமையை அவருக்குச் செலுத்தித் தங்களுக்குண்டான கடனைத் தீர்க்காது ஏனோதானோ என்றிருந்துவிட்டனர்.

கிறிஸ்தவர்களான நம் மொவ்வொருவருக்கும் அருளப்பட்டுள்ள விலைமதிக்கப்படாத ஈவு இன்னதென முன் பார்த்தோம். அது கிறிஸ்மஸ் என்னும் ஈவு, கிறிஸ்மஸ் சிலாக்கியம், கிறிஸ்மஸ் பாக்கியம், கிறிஸ்மஸ் ஆசீர்வாதம், கிறிஸ்மஸ் சந்தோஷம். இவை சாதாரணமானவை அல்ல, மனோவாக்குக் கெட்டாதவை என அறியவும். இவற்றை நாம் மனமகிழ்ச்சியுடன் அநுபவித்து ஆனந்திக்கவேண்டியதுதான், அது குற்றமன்று, ஆனால் அதுமட்டும் போதாது. 'சொல்லி முடியாத' இந்தப் பரம ஈவை நமக்கனுக்கிரகித்த பரம நாதனுக்கு நன்றியறிந்தவர்களாய், நமது உடல் ஆவி ஆன்மா யாவையும் தத்தம்செய்துவிடுவதுமன்றி, நமது ஜீவகாலம் முழுவதும் அவருக்குத் தொண்டுசெய்து, அவருக்காக ஆன்மாக்களை ஆதாயஞ்செய்வதற்கே நம்மை அவருக்குப் பிரதிஷ்டையாக்கி, இப்படியாக அவர் நமக்கருளிய சொல்லி முடியாத ஈவுக்குக் கைம்மாறாக நாமும் நம்மாலியன்றதையெல்லாம் நடப்பித்து முடிக்கிறோம் என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டியதும் நமது கடமையேயாம். மேலும் கடவுள் நமக்கு ஒரு ஈவு அருளும்போது அந்த ஈவுடன் எப்போதும் ஒரு உத்தரவாதமும் சேர்ந்திருக்கும் என்றறியவும். 'எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்' என நம்பெருமான் மொழிந்தருளினாரே. இந்த ஈவை இன்னும் பெற்றுக்கொள்ளாதோர் விஷயத்தில், இக்கடனுமில்லை, இப்பொறுப்பும் உத்தரவாதமும் இல்லை. இந்த அருமையான தெய்வீக ஈவை அனுபவித்துக் களிகூரும் நாம், அதை எண்ணி எண்ணி இந்தக் கிறிஸ்மஸ் தினத்தில் மகிழ்ச்சி கொண்டாடுவதுடன், இந்த ஈவை அநுபவிக்கக் கொடுத்துவைக்காமற் போனவர்களையும் இனிமேலாவது இந்நல்லீவை அநுபவிக்கும் பேறுடையோராக்கி வைப்பதற்காக நான் நாடோறும் பிரயாசப்பட்டு உழைப்பேன் என்று உறுதியான பிரதிக்கினைசெய்து, அதை நிறைவேற்றி முடிப்பதற்கான பெலன், சக்தி, உற்சாகம், விடா

முயற்சி யாவையும் தேவாவியானவரே நமக்குத் தந்தருளும்படிக்கு இடைவிடாது விண்ணப்பம் பண்ணிவருவோமாக.

'தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.'



## THE GIFT. A STORY OF CHRISTMAS

## கிறிஸ்துவின் ஈவு

கிறிஸ்மஸுக்கு முந்தின நாள் சாயந்தரவேளையில் ஒரு ஏழைத் தாய் தூங்கிக்கொண்டிருந்த தன் அருமையான குழந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒரு வெளிச்சம் இருட்டான அந்த அறையில் காணப்பட்டது. அவள் பயந்து திடுக்கிட்டுப் பார்த்தாள். ஆ ஆச்சரியம்! அந்த ஏழையின் அறையில் ஒரு பரிசுத்த குழந்தையாக இயேசு நின்றார். தம்முடைய திருக்கையைக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த பிள்ளையின் தலைமேலே வைத்து 'அம்மா! உன் சிறு பிள்ளைக்கு நான் என்ன வெகுமதியைக் கொடுக்கவேண்டும், சொல்' என்று தயவாகக் கேட்டார்.

அதற்குத் தாய் 'பரிசுத்த குழந்தாய்! உம்முடைய சித்தத்தின்படியே கொடுத்தருளும்' என்று தாழ்மையாய்ச் சொன்னாள்.



அவரோ 'ஆனாலும் என்ன கொடுக்கவேண்டும்? உனக்கு இஷ்டமானதைக் கேள். நான் பிள்ளையின் நெற்றியைத் தொட்டு எல்லாரும் ஆச்சரியப்படத்தக்கதாகத் திவ்விய சௌந்தரியத்தைக் கொடுக்கவேண்டுமோ? அல்லது அவள் உதடுகளைத் தொட்டுக் காதுக்கு மிகவும் இன்பமான பாட்டுக்களைப் பாடக்கூடிய திறமை கொடுக்கவேண்டுமோ?' என்று கேட்டார்.

தாயோ 'அப்படியல்ல பரிசுத்தரே! பெரிய வயது வந்து சௌந்தரியம் போய்விடுமே! இன்பமான குரலும் கம்மலாய்ப் போய்விடுமே' என்று சொன்னாள்.

'அப்படியானால் நான் என்ன கொடுக்கவேண்டும்? கேட்டால் அதுவே உனக்குக் கொடுக்கப்படும்' என்றார்.

தாய் தன் கண்களை ஏறெடுத்து மேலே பார்த்து 'சுவாமி, பரிசுத்தம், உண்மை, அன்பு ஆகிய இவைகளைக் கொடுத்தால் போதும்' என்று சொன்னாள்.

இந்த விண்ணப்பத்தைக் கேட்டுப் பரிசுத்த குழந்தையின் முகம் மலர்ந்து சூரியனைப்போல் பிரகாசித்தது. 'அம்மா! நீ கேட்கிறது உத்தமமான ஈவுதான். பயப்படாதே! உன் பிள்ளைக்கு என்ன துன்பம் வந்தாலும் நான் மரண பரியந்தம் அவளோடுகூட இருப்பேன்' என்று தயவாகச் சொல்லி மறைந்துபோய்விட்டார்.

## THE MESSAGE OF PEACE

## சமாதானம்

நூறு வருஷங்களுக்கு முன்பாக இங்கிலாந்து தேசத்திற்கும் அமெரிக்கா தேசத்திற்கும் கொடிய யுத்தம் நடந்தது. அமெரிக்கா தேசத்தில் சொல்லிமுடியாத கஷ்டமும் வருத்தமும் உண்டாயிற்று. துறைமுகங்களில் கப்பல்கள் போவதும் வருவதும் இல்லை. தேசத்திலே வியாபாரம் ஒன்றுமில்லை. லட்சக்கணக்கான மூட்டை நெல்லும் கோதுமையும் களஞ்சியங்களில் சும்மா கிடந்து உளுத்துப்போயின. அந்தத் தேசம் முழுவதும் பஞ்சம்போலிருந்தது. எல்லா ஜனங்களும், சமாதான உடன்படிக்கை எப்பொழுது பண்ணுவார்களோ என்று காத்திருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் சாயந்தரம், மழைகாலத்தில், நியூ யார்க் (New York) என்கிற துறைமுகத்திற்கு ஒரு கப்பல் நேராக வருவதாகத் தோன்றிற்று. ஊரார் அதிக ஆச்சரியப்பட்டு, கடலோரத்துக்குப் போய் 'அந்தக் கப்பல் இங்கே வருமோ' என்று



அதிக ஆவலுடன் காத்திருந்தார்கள். பொழுதுபோயும் கப்பல் வரவில்லை. அதிக இருட்டான பிற்பாடு ஒரு சிறு படவு உள்ளே வருவதைப் பார்த்தார்கள். சிறு படவானாலும் அது கொண்டுவந்த செய்தி அற்பம் அல்ல. 'சமாதானம்.'



அது மெய்தான். கேண்ட் (Ghent) என்கிற ஊரிலே சமாதான உடன்படிக்கைசெய்து இந்த நல்ல விசேஷத்தை அறிவிக்கும்படியாக அந்தக் கப்பலை உடனே அனுப்பிவிட்டார்கள். இதைக் கேட்டவர்கள் 'சமாதானம், சமாதானம்' என்று மற்ற எல்லோருக்கும் சந்தோஷத்தோடு அறிவித்தார்கள். வீட்டுக்குள் இருந்த ஸ்திரீகளும் 'சமாதானம், சமாதானம்' என்று ஸ்தோத்திரப் பாட்டாகப் பாடினார்கள். பெரிய விருந்துகளைச் செய்து, ஒவ்வொரு மலையிலும் விளக்குகளை ஏற்றி, அந்த நல்ல செய்தியை எங்கும் அறிவித்தார்கள்.

இந்தவிதமாக ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னதாக, யூதேயா தேசத்தின் மலைகளில், சமாதானத்தின் செய்தி அறிவிக்கப்பட்டது. அந்த நாள்வரையில் உலகம் முழுவதும் காரிருளும் மாணுந்தகாரமுமாய் இருந்தது. அந்தக் காலத்தில் தேவதூதர்கள் வந்து 'பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக' என்கிற இன்பமான பாட்டைப் பாடி, வருத்தப்பட்ட உலகத்தாருக்கு அறிவித்தார்கள்.

நாம் இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில் அந்தச் சமாதானப் பிரபுவின் சரித்திரத்தை வாசித்துத் தியானிக்கிறோம். இருளில் நடக்கிற அநேக ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் என்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். எல்லா ஜனங்களும் இந்த வெளிச்சத்தைக் கண்டு, தங்களைச் சமாதான வழியில் நடத்தும்படியாக வந்த இரட்சகரைத் தேடும்படி கடவுள் சகாயஞ்செய்வாராக என்று ஜெபம்பண்ணக்கடவோம்.

## LYRIC. BIRTH OF CHRIST

By L. I. Stephen, Madras

### உலக ரக்ஷகர் திரு அவதாரம்

இராகம், சங்கராபரணம். ரூபகதாளம்.

பல்லவி.

உதித்த நாதனைப் பாடுவோம்
உள்ள மகிழ் கொண்டாடுவோம்!

அநுபல்லவி.

கதித்த பாவ சாபம் போக
காசினி மனுக் குழந்தை யாக— உதித்த.



ஞானிகள்.

1. [1]ஆரண மென்னும் அரிய நாலே
ஆய்ந்த முன்னோ ருரையைப் போலே
[2]தாரணி வைத்த பாசத் தாலே
சற்குண வதியோர் கன்னி யாலே— உதித்த.

[1] வேதம். [2] பூமி.



2. பரமண் டலத்தின் மகிமை விடுத்து
பரிவால் மனித வடிவ மெடுத்து
தரையிற் பசுமுன் னணையிற் படுத்து
தரித்திர னுகக் கந்தை யுடுத்து— உதித்த.

3. வானில் அமரர் மகிழ்ந்து பாட.
மகத்வ பரமன் தனைக் கொண்டாட
கான இடைய ருவந்து தேட
கமல பாதம் பணிந்து நீட— உதித்த.

4. மேலோ ரெனுங்கோ ழிகள் [1]விளிக்க
விண்ணி லேவிடி வெள்ளி முளைக்க
ஞால மடர்ந்த இருளை விலக்க
ஞான [2]பருதி யெனவே நிலைக்க— உதித்த.

5. தந்தை யுடனெப் புரவு செய்ய
சதிசெய் பேயின் தலையைக் கொய்ய
இந்தப் புவிக் கருண்மழை பெய்ய
[3]ஏதம் நீங்கி மாந்த ருய்ய— உதித்த.

6. மண்ணுலகம் விண் ணுலகாய் மாற
வான ராஜ்யம் நமக்குள் [4]கீற
எண்ணருஞ் சதி வினைகள் [5]நூற
இப்புவி சமாதா னம்நிகழ்ந் தேற— உதித்த.

7. பெண்ணுல் விளைந்த பாவம் போக்க
போழிவி னின்று நம்மை மீட்க
பெண்பா லர்க்கெலாங் கண்ய முண்டாக்க
பிழைசெய் மனுக்கு லத்தைக்கை தூக்க— உதித்த.

## THE CHRISTMAS FEAST

## ADAPTED FROM 'LITTLE WOMEN'

## மூன்று பிள்ளைகளுடைய கிறிஸ்மஸ் பண்டிகை

கிறிஸ்மஸ் காலத்தில் வடதேசங்களிலே காற்றும் குளிரும் மழையும் அதிகமாய் இருப்பதினுல் ஏழைகள் மிகவும் வருத்தப்படுகிறுர்கள். ஆகையால் அப்பொழுது அந்த ஜனங்களுக்கு நல்ல சாப்பாடு மாத்

[1] கூவ. [2] சூரியன். [3] குற்றம். [4] விளங்க. [5] நிர்மூலமாக.

திரமல்ல, மழை நுழையமுடியாத நல்ல வீடு, அநேக கம்பளித்துணிகள், பெரிய விறகுக்கட்டுவைத்து எப்பொழுதும் எரிகிற நெருப்பு ஆகிய இவைகளும் மிக அவசியம். தருமசாலிகள் அப்பேர்ப்பட்ட சமயங்களில் ஏழைகளுக்கு உதவிசெய்யாவிட்டால் அவர்கள் படுகிற கஷ்டம் அதிகமாயிருக்கும். இப்படியிருந்தாலும் கொடூரமான குளிரினாலே சிலவேளைகளில் செத்துப்போகிறவர்களும் உண்டு.

இப்படியிருக்க ஒருநாள் ஒரு மெத்தைவீட்டிலே மூன்று பிள்ளைகள் தாயார் எப்போ வருவார் என்று காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தகப்பன் பட்டாளத்தோடு தூரதேசத்துக்குப்போய் அங்கே பாதிரியாக வேலைசெய்தார். அவர் பணக்காரரல்ல, ஆனாலும் மாதந்தோறும் பெண்சாதிக்கு வேண்டிய செலவுக்குப் பணம் அனுப்பி வந்தார்.

அன்றைக்குக் கிறிஸ்மஸ் நாள். இம்மூன்று பிள்ளைகளும் தாயோடு கூடக் கோவிலுக்குப்போய் ஸ்தோத்திர ஆராதனைசெய்து வீட்டுக்குத் திரும்பிவந்தார்கள். வந்தவுடனே ஒரு வேலைக்காரி வந்து அந்த அம்மாளை ஏதோ ஒரு அவசரமான காரியத்துக்கு அழைத்தாள். நேரம் ஆய்விட்டது. சமையல் எல்லாம் செய்து அவற்றை மேசையின்மேல் வைத்துவிட்டார்கள். தாயோ வரவில்லை.

திடீரென்று கதவு திறந்து அந்த அம்மாள் உள்ளே வந்தாள். ஆவலோடு காத்திருந்த பிள்ளைகள் அவளைப் பார்த்து 'நீங்கள் நல்ல சமயத்தில் வந்தீர்கள். அதிக பசியாயிருக்கிறது அம்மா! எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வந்து சாப்பிடுங்கள்' என்று சொன்னார்கள்.

தாயோ அருமையான பிள்ளைகளைப் பார்த்துப் பேசாமல் நெருப்பண்டை உட்கார்ந்தாள். பிள்ளைகள் ஒருவரையொருவர் பார்த்து 'என்ன விசேஷம்?' என்று பிரமித்தார்கள். அப்பொழுது தாயார் 'என் பிள்ளைகளே! நான் ஒரு பரிதாபமான சங்கதியைப் பார்த்து வந்தேன். ஒரு ஏழையின் வீட்டுக்குப் போனேன். அங்கே ஆறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுக்குத் தகப்பன் இல்லை. நெருப்பில்லாமலும் சோறு இல்லாமலும் கம்பளித்துணி இல்லாமலும் அதிக வருத்தப்படுகிறார்கள். பிள்ளைகள் அழுதுகொண்டு 'அம்மா! கொஞ்சம் ரொட்டியாகிலும் கொடுங்கள்' என்று தொந்தரவு செய்கிறார்கள். அவர்கள் இரண்டு நாளாக ஒன்றும் சாப்பிடவில்லையாம்' என்று பரிதாபத்துடன் சொன்னாள்.

இதைக் கேட்டுச் சிறு பிள்ளையாகிய மேரி 'அம்மா! அவர்கள் தாய் ஏன் கடைக்குப்போய்ச் சாப்பாட்டிற்கு வாங்கவில்லை' என்று கேட்டாள்.



'குழந்தாய்! அவர்கள் தாயின் கையில் காசில்லையே. என்ன செய்கிறது. அடுப்பிலும் நெருப்பில்லை. இந்தக் கொடிய குளிரினால் அதிக வருத்தப்படுகிறார்கள்' என்று தாய் சொன்னாள்.

'ஏனம்மா! உங்களிடம் காசில்லையா? அவர்களுக்குக் கொடுங்கள்' என்று மேரி சொன்னாள்.

'பிள்ளாய்! இந்தக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கே என் கையில் இருந்த பணம் எல்லாம் செலவழித்தேன். உங்கள் தகப்பனார் அனுப்பும் பணம் இரண்டுநாளைக்குப் பிற்பாடுதானே வந்துசேரும். அதுவரைக்கும் இந்த ஏழைகள் என்ன செய்வார்கள்?' என்று தாய் சொல்லிப் பரிதபித்தாள்.

பிள்ளைகள் மேசையின்மேலிருந்த நேர்த்தியான பதார்த்தங்களைச் சந்தேகத்தோடு பார்த்தார்கள். அவர்களுக்கும் பசி, இந்தப் பண்டிகைக்காக எவ்வளவு ஆசையோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

ஒரு நிமிஷமான பிற்பாடு மூத்த பிள்ளையாகிய கிருபை ஒரு கூடையை எடுத்து மேசைமேலிருந்த சாமான்களை அதில் வைக்கத் தொடங்கினாள். 'அம்மா! எங்கள் உருசியுள்ள பதார்த்தங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்தக் கூடையில் எல்லாவற்றையும் வைத்துத் தயவுசெய்து அவர்களுக்குக் கொண்டுபோங்கள். நம்முடைய ரோஸ் உங்களுக்கு உதவிக்காக வருவாள். நானும் மேரியும் கொஞ்சம் பாலைக் காய்ச்சி அதிலே ரொட்டியைப்போட்டு உங்களுக்காகச் சாப்பாடு ஆயத்தமாக்குகிறோம்' என்று சொன்னாள்.

அப்படியே இரண்டு தங்கைமாரும் 'ஆம் ஆம், அப்படிச் செய்ய வேண்டும். எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். அந்த ஏழைப் பிள்ளைகளுக்கே கொடுங்கள்' என்று சொன்னார்கள்.

அதற்குத் தாய் சந்தோஷப்பட்டு, 'நீங்கள் அன்புள்ள பிள்ளைகள் தான். ஆனாலும் 'எங்களுக்குப் பண்டிகை இல்லை' என்று நீங்கள் இனிமேல் விசனப்படமாட்டீர்களா?' என்று கேட்டாள்.

அதற்குக் குழந்தைகள் 'இல்லவே இல்லை, சந்தோஷத்தோடே கொடுக்கிறோம். அந்தப் பிள்ளைகள் பசியினால் அழும்போது நாங்கள் எப்படிச் சாப்பிடுவோம் அம்மா? அவர்களுக்கே கொடுங்கள்' என்று ஆத்திரத்துடன் சொன்னார்கள்.

அப்படியே தாயும் பிள்ளையும் கூடையை எடுத்து அதன்மேல் ஒரு பெரிய விறகுக்கட்டும் வைத்துக்கொண்டுபோய் அந்த ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள்.

ஒரு அரைமணி நேரமானபின்பு திரும்பி வந்தார்கள். ரோஸ் தன் சகோதரிகளைப் பார்த்து 'ஐயோ பாவம்! நாங்கள் பிரவேசிக்கும்போது பிள்ளைகள் எல்லாரும் அழுதுகொண்டிருந்தார்கள். நாங்கள்

கொண்டுபோனதை எல்லாம் அவர்களுக்காகக் கொண்டுவந்தோம் என்று துவக்கத்தில் அவர்கள் நம்பவில்லை. ஆனாலும் நாங்கள் சாமான்களை எல்லாம் மேசையின்மேல் வைத்து நெருப்புக்கொளுத்தி அவர்களைவிட்டுப் பிரியும்போது எங்களைத் தேவதூதர் என் சொன்னார்கள். எங்களைச் சுற்றிநின்று எங்கள் கைகளையும் கால்களையும் முத்தமிட்டு அழுதார்கள்' என்று சொன்னாள்.

அப்படியே தாயும் பிள்ளைகளும் வெறும் பாலும் ரொட்டியும் சாப்பிட்டு இந்தக் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொடுத்த கடவுளை ஸ்தோத்திரித்தார்கள்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1912 ௵ டிசெம்பர் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | நெகே. | 1. | 12 | வி. | நெகே. | 8. 1— 8 | 22 | ஞா. | லூக். | 1. 26—38 |
| 2 | தி. | ,, | 2. 1—11 | 13 | வெ. | ,, | 8 9—18 | 23 | தி. | ,, | 1. 46—56 |
| 3 | செ. | ,, | 2. 12—20 | 14 | ச. | ,, | 9. 1— 8 | 24 | செ. | ,, | 1. 57—66 |
| 4 | பு. | ,, | 3. 1-3; 27-32 | 15 | ஞா. | , | 9. 9—15 | 25 | பு. | , | 2. 1—14 |
| 5 | வி. | ,, | 4. 1—12 | 16 | தி | ,, | 9 10- -25 | 26 | வி. | ,, | 2. 15—24 |
| 6 | வெ. | ,, | 4. 13—23 | 17 | செ. | ,, | 9. 26—31 | 27 | வெ. | ,, | 2. 25—35 |
| 7 | ச. | ,, | 5. 1— 8 | 18 | பு. | ,, | 9. 32—38 | 28 | ச. | நெகே. | 12. 38—47 |
| 8 | ஞா. | ,, | 5. 9—19 | 19 | வி. | ,, | 10. 28—34 | 29 | ஞா. | ,, | 13. 1— 9 |
| 9 | தி. | ,, | 6. 1— 9 | 20 | வெ. | ,, | 10. 35—39 | 30 | தி. | ,, | 13. 10—22 |
| 10 | செ. | ,, | 6. 10—19 | 21 | ச. | ,, | 12. 27-37; 13. 1, 2 | 31 | செ. | ,, | 13. 23—31 |
| 11 | பு. | ,, | 7. 1-7; 70-73 | | | | | | | | |

160930
சென்னை-600 008.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912